வரு.76 இல. 34 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2024 செப்டெம்பர் 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை | September 01 Sunday, 2024

36 பக்கங்கள் | 100/-




**நல்லூரக் கந்தனின் தேர்த்திருவிழா சிறப்பிதழ் இன்றைய வாரமஞ்சரியுடன்**

**03** பாரிய பொருளாதார மாற்றத்தை சட்டபூர்வமாக்கிய ஜனாதிபதி ரணில்!



**22** வாக்குறுதிகளை வழங்கும் வேட்பாளர்கள் பணத்தை எங்கிருந்து பெறப் போகிறார்கள்?



**24** உச்சத்தைத் தொட்டார் ஜெய் ஷா



கிழக்கின் மகள் சட்டத்தரணி மர்யம் மன்சூர் நளீமுதீன் — செந்தூரம்



# வரவு, செலவு திட்ட தயாரிப்புக்கு IMF இடமிருந்து ரூ. 57,000 கோடி

ஜனாதிபதியும் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல், தேசிய கொள்கை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவால் இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்த சர்வதேச நாணய நிதியத்துடன் கடந்த 2022ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி செய்து கொள்ளப்பட்ட பணியாளர் மட்டத்திலான விரிவான கடன் ஒப்பந்தத்துக்கமைய எதிர்வரும் 2025ஆம், 2026ஆம், 2027ஆம் ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு 1,900 மில்லியன் அமெரிக்க டொலர் அல்லது 57,000 கோடி ரூபாவை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இன்னும் 4 மாதங்களுக்கு பின்னர் 2025ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தின் வரவு, செலவுத் திட்ட ஆவணம் தயாரிக்கப்படும் போது 700 மில்லியன் அமெரிக்க டொலர் அதாவது 21,000 கோடி ரூபாவை (Budgetary Support) வரவு, செலவுத்திட்ட உதவியாகவும், 2026ஆம் ஆண்டிலும் 2027ஆம் ஆண்டிலும் தலா 600 மில்லியன் அமெரிக்க டொலர் வீதம் அதாவது தலா 18,000 கோடி ரூபா வீதம் வழங்கவும் இந்த உடன்படிக்கையின் ஊடாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கியுள்ள வேட்பாளர்களினுடைய தேர்தல் விஞ்ஞாபனங்களில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தாலும், சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தங்களை பின்பற்றா விட்டால், இலங்கை அரசாங்கம் பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடுமென்று அரசாங்க நிதித்துறை ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.




யாழ்ப்பாணம், நல்லூரில் எழுந்தருளி இருக்கும் நல்லூர்க் கந்தன் கோயில் வருடாந்த மஹோற்சவ தேர் திருவிழா இன்று மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. தேர் திருவிழாவில் ஆறுமுகப் பெருமான் கஜாவல்லி, மஹாவல்லி சமேதராய் ஸ்ரீசண்முக பெருமானாக எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலிப்பார். 08

## 'ஜனசவிய' திட்டத்தை உள்ளடக்கி புதிய வறுமை ஒழிப்பு திட்டம்

**ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கும்**



முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் வறுமையை ஒழிக்கும் ஜனசவிய திட்டம் உட்பட கெமிதிரிய, சமுர்த்தி போன்ற திட்டங்களின் சிறந்த விடயங்களை உள்ளடக்கிய புதிய வறுமை ஒழிப்புத் 08

### தலைவர்களை பயிற்றுவிக்கும் தருணம் இதுவல்ல

## நாட்டையும் மக்களையும் பேரிடரிலிருந்து காப்பாற்றவே நான் முயற்சிக்கிறேன்



"இன்று பல அரசியல்வாதிகள் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலின்படியே செயற்படுகின்றனர். சஜித்தின் அரசியல் நோக்கிலும் ஜனாதிபதி தேர்தல் உத்திகளிலுமுள்ள உண்மை 08

## கோணேசர் ஆலய இராஜகோபுரம் விரைவில் நிர்மாணம்

**அமரர் சம்பந்தனின் கனவு நனவாகும்; திருமலையில் ஜனாதிபதி**





**திருமலையிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் அமரர் ஆர்.சம்பந்தனுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் திருகோணமலை மாவட்டத்தை பாரிய அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தக்ஷிண கைலாயம் என இந்துக்களால் போற்றப்படும் திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் நீண்ட கால குறைபாடாக காணப்பட்ட தேவஸ்தானத்தின் இராஜகோபுத்தை நிர்மாணித்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் ஒத்துழைப்புடன் திருகோணமலை மாவட்டம் முழுமையாக 08

### யாழ். மாவட்ட பாடசாலைகள்;

## அனுமதி கோரினால் நாளை விடுமுறை



நல்லூர் கந்தசுவாமி கோயில் தீர்தோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் விடுமுறை கோரினால் அதற்கான அனுமதி வழங்கப்படும் என்று வடமாகாண 08

### உலக முத்தமிழ் முருகன் மாநாடு;

## தமிழக அமைச்சரினால் தினகரனுக்கு பாராட்டு



உலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் இலங்கையின் 'தினகரன்' நாளிதழ் மற்றும் 'தினகரன் வாரமஞ்சரி' வார இதழ் ஆகியவற்றுக்கு தமிழக இந்து அறநிலைத்துறை அமைச்சர் டி.கே. சேகர் பாபு பாராட்டு தெரிவித்துள்ளார்.

பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு நடைபெற்ற போதே அவர் தனது பாராட்டை தெரிவித்துள்ளார்.

பழனியில் நடைபெற்ற அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு தொடர்பான 08

## திலித் ஜயவீரவின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு

**'தேசிய மூலோபாய செயற்றிட்டம்'**



சர்வஜன பலய ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீரவின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று வெளியிடப் 08

## ஒற்றையாட்சிக்கு எதிரான கொள்கை கிடையாது

**வகுக்கமாட்டேன் என்கிறார் நாமல் எம்.பி.**



"வடக்கிலுள்ள பிரச்சினைகளே தெற்கிலும் உள்ளன. நாடு என்ற ரீதியில் 08









# ரணிலை சந்திக்கச்சென்ற அந்த ராஜபக்ஷ யார்?

ஜனாதிபதித் தேர்தல் மிகவும் சூடுபிடித்துள்ளது. அனைத்து முக்கிய ஜனாதிபதி வேட்பாளர்களும் தமது கொள்கை அறிக்கைகளை முன்வைத்துள்ள நிலையில், அவை தற்போது ஜனாதிபதி தேர்தல் களத்தில் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளன.

**ஜனாதிபதி ரணிலுக்கு மகத்தான வரவேற்பு**

ஜனாதிபதித் தேர்தல் சூடுபிடித்துள்ள நிலையில் ரணில் விக்கிரமசிங்க மும்முரமாகச்செயற்பட்டு வருகிறார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் முழுவதும் அக்குரணை, மாவனல்லை, எஹெலியகொட, மொனராகலை மற்றும் திஸ்ஸமஹாராம போன்ற பிரதேசங்களில் இருந்தார்.

அந்த பிரதேசங்களில் பொதுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோடு, ஜனாதிபதி ரணிலுக்கு அப்பிரதேச மக்களிடமிருந்தது உற்சாக வரவேற்பு கிடைத்தது. வெயிலையும் மழையையும் பொருட்படுத்தாமல் மக்கள் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிப்பதற்காக வந்திருந்தனர். ஜனாதிபதி ரணில் பல பிரசாரக் கூட்டங்களுக்கு ஹெலியிலேயே சென்றார். அதற்காக விமானப்படைக்கு தனிப்பட்ட முறையில் கட்டணத்தைச் செலுத்துவதற்கும் ஜனாதிபதி ரணில் மறக்கவில்லை.

திங்கட்கிழமை வழமை போன்று பிளவர் வீதியிலுள்ள தேர்தல் அலுவலகத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் அங்கு அரசியல் விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடினார். ஞாயிற்றுக்கிழமை சிறிகொத்தவில் பகிரங்கமாக கூறியதைப் போல் வீடு வீடாகச் சென்று பிரசாரத்தை அதிகரிக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

**தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்ட முறை**

அன்று மாலையில் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்றதோடு, ஜனாதிபதிக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் கொள்கைப் பிரகடனம் தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெற்றது. ஜனாதிபதி ரணில் தனது கொள்கை அறிக்கையை உருவாக்குவது தொடர்பான தகவல்களை சேகரிக்கும் குழுக்களை கண்டறியும் பொறுப்பை செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் ஒப்படைத்தார்.

அவர் இந்த விடயத்தை பல குழுக்களிடம் ஒப்படைத்ததோடு, அவர் ஜனாதிபதி மற்றும் அந்தக் குழுக்களுடனான ஒருங்கிணைப்பை மாத்திரமே மேற்கொண்டார் உரைகளுக்குப் பொருந்தும் வகையில் விஞ்ஞாபனத்தைத் தயாரிக்கும் பொறுப்பு கலாநிதி சமரதுங்க மற்றும் ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகர் சமன் அதாவுத ஹெட்டி ஆகியோருக்கு வழங்கப்பட்டது. அவர்கள் அந்தப் பணியை புதன்கிழமை மாலை வரை செய்தனர்.

செவ்வாய்க்கிழமை காலை பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் பங்கேற்ற ஜனாதிபதி ரணில், பிற்பகல் நிதியமைச்சின் அதிகாரிகளைச் சந்தித்து நாட்டின் பொருளாதார நிலைமைகள் குறித்தும் பேசினார். இந்த நாட்களில் கட்சித் தாவல்களும் அதிகமாக இடம்பெறுவதால், ரணிலைச் சந்திப்பதற்காக கோட்டே முன்னாள் நகராதிபதி ஜனக ரணவக்க உள்ளிட்ட மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் குழு வருகை தந்து தமது ஆதரவை வழங்குவதாக உறுதியளித்தனர்.

**ஐந்து வருட "இயலும் ஸ்ரீலங்கா" திட்டம்**

இதற்கிடையில், ஜனாதிபதி ரணில், ஆயர்கள் சம்மேளனத்தின் தலைவர் ஆயர் ஹெரல்ட் எண்டனி மற்றும் சிலாபம் ஆயர் ஆகியோரைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார். ஜனாதிபதி ரணில் கடந்த வியாழன் அன்று தனது கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டதோடு, அதில் "இயலும் ஸ்ரீலங்கா"வுக்கான ஐந்தாண்டு பொருளாதாரத் திட்டம் உள்ளடங்கி இருந்தது.

கொள்கை அறிக்கையை வெளியிட்டதன் பின்னர் ஜனாதிபதி ரணில் தனது அரசியல் அலுவலகத்திற்குச் சென்றார். அங்கு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடியிருந்ததோடு தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மற்றும் அரசியல் நிலவரங்கள் தொடர்பில் அங்கு கலந்துரையாடப்பட்டது.

**சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் பிரசன்ன கூறியது என்ன?**

"நாம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளோம். எனினும் சஜித் இன்று கண்டியில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவதாகக் கூறினாலும் மாலை வரையிலும் அதனை வெளியிட முடியாது போயுள்ளது" என்றவாறு இங்கு அமைச்சர் பிரசன்ன கதையை ஆரம்பித்தார்.

"கடைசியில் மாலையில் மல்வத்து அஸ்கிரிய பீடாதிபதிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டு செப்டெம்பர் 4ஆம் திகதி மக்களுக்கு வழங்கப்படும் என ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி விடயத்தை முடித்து விட்டார். கட்சிக்குள் நெருக்கடிகள் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது" என்றார் வஜிர அபேவர்தன.

**சமுர்த்தி சங்கம் இல்லாமல் சென்ற ஜகத்**

"பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சென்ற போதிலும் சமுர்த்தி சங்கம் இன்னமும் எம்முடனேயே இருக்கின்றது." என்றார் ஷெஹான் சேமசிங்க.

"ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணையப் போகிறார் எனப் பேசப்படுகிறது. அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் உள்ளதாகவும் கூறப்படுகின்றதே" ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் வினவினர்.



"அவரது பிரச்சினை தொடர்பில் என்னிடம் கூறினார். அரசியல் பழிவாங்கலின் கீழ் அதற்கு இழப்பீடு வழங்க அனுமதிக்கப்பட்டது. எனினும் சட்டரீதியாக அதனை வழங்குவதற்கு தடை உள்ளது" என தனக்குத் தெரிந்ததை ஜனாதிபதி அங்கு கூறினார்.

"ஆமாம். அதற்குரிய அமைச்சரவைப் பத்திரம் ஒன்று அடுத்த வாரம் அமைச்சரவைக்கு வரவுள்ளது" என அங்கிருந்த அதிகாரி ஒருவர் கூறினார்.

**ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பதவி தலதாவுக்கா?**

தலதா அத்துகோரளவுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை வழங்க இருப்பதாக ஊடகங்களில் தெரிவிக்கப்படுகின்றதே" என பாராளுமன்ற உறுப்பினர் தொலவத்தை வினா எழுப்பினார். "அவரைப் போன்று ஐக்கிய மக்கள் சக்தியில் இருக்கும் இன்னும் சிலருக்கு வழங்குமாறும் எம்மிடம் கேட்கிறார்கள்" என்றார் பிரதித் தலைவர் ருவன்.

இவற்றுக்கு ஜனாதிபதி ரணில் தலையை ஆட்டினாரே தவிர வேறு எதனையும் கூறவில்லை.

**கம்பஹா கிராமங்களில் இறங்கி செயற்படும் பிரசன்ன**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் கிராம மட்டத்திற்கு இன்னும் அதிகமாகக் கொண்டு செல்லப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியும் ஜனாதிபதிக்கு ஆதரவான ஏனைய கட்சிகளும் நீண்ட நேரம் கலந்துரையாடின.

"நாம் முடியுமானளவுக்கு பிரசாரப் பணிகளை கிராமங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும். நான் கம்பஹாவில் ஏற்கனவே வேலைகளை ஆரம்பித்து விட்டேன்" என்றார் அமைச்சர் பிரசன்ன.

"ஆமாம்.... நாம் இப்போது கிராம மக்களுடன் பேச வேண்டும். ஆளும் கட்சி, எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் அனைவருடனும் நாம் பேச வேண்டும்" என்றவாறு முன்னாள் அமைச்சர் மனுஷவும் அவர்களோடு இணைந்து கொண்டார்.

"புதிய முன்னுதாரணத்தை வழங்கும் வகையில் பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த நாமும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து கிராமத்திற்குச் செல்வோம். இந்த ஒற்றுமையை கிராமத்தில் கொண்டு சேர்ப்போம்" என்ற அமைச்சர் பிரசன்னாவின் பேச்சை அங்கிருந்த அனைவரும் அங்கீகரித்தனர்.

**இன்னும் இருவரின் வருகை உறுதியாம்**

எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அது தொடர்பான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதுடன், எதிர்வரும் நாட்களில் இந்தக் கட்சி மாற்றம் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**ரணிலைச் சந்திக்க வந்த அந்த ராஜபக்ஷ யார் ?**

இதேவேளை, ஹம்பாந்தோட்டை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 12 உள்ளூராட்சி மன்றங்களின் 9 மன்றங்களின் தலைவர்கள், பெஜெட் வீதியிலுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு வந்திருந்தனர்.

அவர்கள் ஒன்பது பேரும் மற்றொரு ராஜபக் ஷவுடன் அங்கு வந்திருந்ததே விசேட அம்சமாகும். அந்த ராஜபக் ஷ ஹம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு ராஜபக் ஷ என்பது மற்றொரு சிறப்பம்சமாகும். பாராளுமன்ற பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக் ஷவே இவ்வாறு அந்த 9 உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுடன் ஜனாதிபதியை சந்திக்க வந்திருந்தவராகும்.

ஹம்பாந்தோட்டை மாநகரசபை, ஹம்பாந்தோட்டை, அம்பலாந்தோட்டை, திஸ்ஸமஹாராம, சூரியவெவ, பெலியஅத்த, அங்குனுகொலபலஸ்ஸ, கட்டுவன, லுணுகம்வெஹர ஆகிய உள்ளூராட்சி சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்களே இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்க வந்திருந்தவர்களாவர்.

**"உங்களுடைய தீர்மானம் என்ன?" என பேச்சை ஆரம்பித்தார் ஜனாதிபதி**

"ஜனாதிபதி அவர்களே! இவர்கள் கீழ் மட்டத்தில் மக்களோடு இருக்கும் தலைவர்களாகும். இவர்கள் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டிருப்பது நாட்டைப் பற்றிச் சிந்தித்தாகும். இவர்கள் அனைவரும் மஹிந்த ராஜபக் ஷவுடன் மிக நெருங்கிச் செயற்பட்டவர்களாகும்.

எனினும் நாட்டைப் பற்றிச் சிந்தித்து இப்போது உங்களை வெற்றி பெறச் செய்வதற்கே தீர்மானித்திருக்கின்றார்கள்" என பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக் ஷ விடயத்தைத் தெளிவுபடுத்தினார். "இந்நேரத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்திருப்பது நாட்டுக்காகவாகும்.

எனவே உங்களுக்கு எந்தச் சந்தேகமும் வேண்டாம். எதற்கும் நான் உங்களோடு இருக்கிறேன்" என ஜனாதிபதி அங்கு கூறினார்.

*(I ஆம் பக்கம் பார்க்க...)*

*தமிழில் எம். எஸ். முஸப்பிர்*


நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

**நகர அபிவிருத்தி அதிகாரசபை**

கேள்விமனு அழைப்பு - கொலன்னாவையில் கலப்பு அபிவிருத்தித் திட்டம் கேள்விமனு அழைப்பு - கொலன்னாவையில் கலப்பு அபிவிருத்தித் திட்டம்

| | |
|---|---|
| காணி அளவு | : 00A 01R 10.04P |
| குத்தகைக் காலம் | : 30 ஆண்டுகள் |
| விலைமனு பிணைமுறி | : ரூபா 1,200,000.00 |
| விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு | : 2024.10.10 அன்று மு.ப. 10.00 |
| விலைமனு மூடல் | : 2024.11.14 அன்று பி.ப. 2.30 |
| ஆவணக் கட்டணம் | : ரூபா 25,000/- + அரச வரிகள் |

ஆர்வமுடைய தரப்புகள் (முதலீட்டாளர்கள்/ மேம்பாட்டாளர்கள்) 2024.09.06 ஆம் திகதி தொடக்கம் 2024.10.31 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை பத்தரமுல்ல, செத்சிறிபாய கட்டம் 1, 8ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, மெய் ஆதன முகாமைத்துவம் மற்றும் மேம்பாட்டுப் பிரிவில் இருந்து கேள்விமனு ஆவணத்தை வாங்கலாம்.

மேல் குறிப்பிடப்பட்ட கேள்விமனுக்களை மூடும் நேரம் முடிவுற்ற பின் பத்தரமுல்ல, 'செத்சிறிபாய கட்டம் 1', 6ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, நிதிப் பிரிவில் அவை உடன் திறக்கப்படும். விலைமனு திறக்கும் நேரத்தில் கேள்விமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்க முடியும.

**கொடுப்பனவு தேர்வு 01: 30 ஆண்டு குத்தகைக்கு அடிப்படை பெறுமதி குறைந்தபட்சம்: ரூபா 93,257,475.00**

முதலீட்டாளர் தீர்மானத்திற்கான கடிதத்தின் (LOI) திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கோரப்பட்ட தொகையில் 25% இனை செலுத்த வேண்டும் என்பதோடு எஞ்சிய 75% இனை ஆரம்ப கொடுப்பனவின் திகதியில் இருந்து 03 மாதங்களுக்குள் மேற்கொள்ளல் வேண்டும்.

**கொடுப்பனவு தேர்வு 02:**

1. ஆரம்ப கொடுப்பனவுக்கான அடிப்படை பெறுமதி: ரூபா 23,055,000.00
2. வருடாந்த தவணைக்கான அடிப்படை பெறுமதி

| வருடாந்த தவணைகளுக்கான அடிப்படை பெறுமதி மற்றும் தவணைகளின் எண்ணிக்கை | | வருடாந்த தவணைகளுக்கான அடிப்படை பெறுமதி மற்றும் தவணைகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| 10 | ரூப 9,397,418.00 | 5 | ரூபா 16,524,250.00 |
| 9 | ரூபா 10,181,270.00 | 4 | ரூபா 20,114,921.00 |
| 8 | ரூபா 11,165,573.00 | 3 | ரூபா 26,111,581.00 |
| 7 | ரூபா 12,436,262.00 | 2 | ரூபா 38,123,254.00 |
| 6 | ரூபா 14,136,557.00 | 1 | ரூபா 74,195,033.00 |

02 ஆவது தேர்வு கொடுப்பனவின் கீழ், விலைமனுதாரர்கள் (i) மற்றும் (ii) ஆகிய இரண்டுக்காகவும் கூறுவிலையிடல் வேண்டும். முதலீட்டாளர் தீர்மானத்திற்கான கடிதத்தின் (LOI) திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் ஆரம்ப கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட தொகையை செலுத்துவதற்கு கோரப்படுவதோடு விலைமனுதாரரால் தேர்வு செய்யப்பட்ட காலத்திற்குள் வருடாந்த தவணையின் பெறுமதியை வழங்கல் வேண்டும்.

தலைவர், வருவாய் கேள்வி சபை (சிறு அளவானது), நகர அபிவிருத்தி அதிகாரசபை, 6ஆவது மாடி, செத்சிறிபாய கட்டம் 1, பத்தரமுல்ல.

**முன்மொழிவுகளுக்கான கோரிக்கை அழைப்பு (RFP)**
**கதிர்காமத்தில் ஓய்வு இல்ல மேம்பாட்டுத் திட்டம்**

| | |
|---|---|
| காணி அளவு | : 01A 00R 24.00P |
| குத்தகைக் காலம் | : 30 ஆண்டுகள் |
| அடிப்படை பெறுமதி | : ரூபா 30,500,000.00 |
| விலைமனு பிணைமுறி | : ரூபா 350,000.00 |
| விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு | : 2024.10.10 அன்று பி.ப. 2.00 |
| விலைமனு மூடல் | : 2024.11.14 அன்று பி.ப. 2.30 |
| ஆவணக் கட்டணம | : ரூபா 25,000/- + அரச வரிகள |

சாத்தியமான விலைமனுதாரர்கள் (முதலீட்டாளர்கள்/ மேம்பாட்டாளர்கள்) 2024.09.06 ஆம் திகதி தொடக்கம் 2024.10.31 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை பத்தரமுல்ல, செத்சிறிபாய கட்டம் 1, 8ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, மெய் ஆதன முகாமைத்துவம் மற்றும் மேம்பாட்டுப் பிரிவில் இருந்து கேள்விமனு ஆவணத்தை வாங்கலாம்.

தொழில்நுட்ப முன்மொழிவு பத்தரமுல்ல, செத்சிறிபாய கட்டம் 11, 12ஆவது மாடி, நகர அபிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சில் மேல் குறிப்பிடப்பட்டவாறு RFP இன் விலைமனு மூடப்படும் நேரத்திற்கு பின்னர் உடன் திறக்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு:**

**பணிப்பாளர்,**
**மெய் ஆதன முகாமைத்துவம் மற்றும் மேம்பாட்டுப் பிரிவு,**
**ந.அ.அ., 8ஆவது மாடி,**
**செத்சிறிபாய கட்டம் 1**
**பத்தரமுல்ல.**

**தொ.:**
**011 2875921, 011-3611950**
**அல்லது 011-2875916-20**
**நீடிப்பு: 2960-2967.**
**தொலைநகல்: 011-2875900**

**மின்னஞ்சல்:**
directorred@uda.gov.lk
**இணையதளம்:**
**www.uda.gov.lk**

தலைவர், நிலையான அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழு (SCANC),
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, 12ஆவது மாடி, செத்சிறிபாய கட்டம் 11, பத்தரமுல்ல.


# தூதுவர் அமீர் அஜ்வத்துக்கு சவுதி அரேபிய கல்வி அமைச்சர் வரவேற்பு



சவுதி அரேபியாவின் கல்வி அமைச்சர் யூஸுப் பின் அப்துல்லா அல்பென்யான் சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் உமர் லெப்பை அமீர் அஜ்வத்துக்கு சவுதி அரேபியாவின் கல்வி அமைச்சில் வரவேற்பளித்தார்.

இதன்போது தூதுவர் அமீர் அஜ்வத்துக்கு மகத்தான வரவேற்பளித்த அமைச்சர் யூஸுப், சவுதி அரேபியாவின் தொலைநோக்கு 2030 திட்டத்தின் கீழ் கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளுக்கு சவுதி அரேபியா வழங்கியுள்ள முக்கியத்துவத்தை வலியுறுத்திக் கூறியதுடன் இத்துறைகளில் இலங்கை பரஸ்பர ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் கோடிட்டுக் காட்டினார்.

பதிலுக்கு உரையாற்றிய தூதுவர் அமீர் அஜ்வத், கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கான ஒரு மிகச் சிறந்த கருவியாக அமையும் விதத்தில் இலங்கைக்கும் சவுதி அரேபியாவுக்குமிடையில் விஞ்ஞான மற்றும் கல்விசார் ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஒன்றைக் கைச்சாத்திடுவது தொடர்பில் ஆர்வம் காட்டினார். மேலும் பேசிய தூதுவர், நீண்ட காலமாக சவுதி அரேபிய அரசாங்கம் இலங்கை மாணவர்களுக்கு வழங்கி வருகின்ற புலமைப் பரிசில்கள் தொடர்பில் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டதுடன், சவுதி அரேபிய பல்கலைக்கழகங்களில் இலங்கை மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய மேலும் வாய்ப்புகள் தொடர்பிலும் கேட்டறிந்தார்.

அமைச்சர் யூஸுப், பல்கலைக்கழக விவகாரங்களுக்கான பணிப்பாளர்கள் சபை, உயர்கல்வி நிதிக்கான பல்கலைக்கழக பணிப்பாளர்கள் சபை மற்றும் சவுதி அரேபிய பல்கலைக்கழக விளையாட்டுச் சம்மேளன பணிப்பாளர்கள் சபை உள்ளடங்கலான பல்வேறு சவுதி அரேபிய நிறுவனங்களின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். மேலும் அவர் பன்முகப்படுத்தப்பட்ட பெற்றோலிய உற்பத்தி நிறுவனங்களின் வரிசையில் உலகின் மிகப் பெரிய நிறுவனங்களில் ஒன்றான சவுதி அரேபிய மூலப்பொருட் கைத்தொழில் கூட்டுத்தாபனத்தின் (SABIC) துணைத் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி போன்ற பதவிகளையும் வகித்தவராவார்.

## நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக

# பாரிய பொருளாதார மாற்றத்தை சட்டபூர்வமாக்கிய ஜனாதிபதி ரணில்!

### போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன





சுதந்திரத்திற்குப் பின்னர் வெவ்வேறு ஜனாதிபதிகள் வெவ்வேறு அரசாங்கங்களின் கீழ் வெவ்வேறு கொள்கைகளை நடைமுறைப்படுத்தியதோடு, அரசாங்கங்களின் மாற்றத்துடன் அந்தக் கொள்கைகள் மாறி வெவ்வேறு கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் போது, இலங்கை தேசியக் கொள்கை இல்லாத நாடாக மாறியதன் இறுதி விளைவே நாடு வங்குரோத்து நிலையை அடைந்ததாகும்.


இதன் காரணமாகவே தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டு பிரச்சினைகளுக்கு ப்ளாஸ்டர் ஒட்டும் தீர்வுகளை முன்வைத்து யதார்த்தமற்ற, தூர நோக்கற்ற வேலைத் திட்டங்களுக்காக மக்கள் ஆணையினைப் பெற்றுக் கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவது அல்லது நடைமுறைப்படுத்தாதது தொடர்பிலான சித்தாந்தங்களின் ஊடாக இலங்கையில் அரசியல் கலாசாரமொன்று உருவாகி அரசாங்கங்கள் மாறின.

நாடு வங்குரோத்தடைந்ததன் பின்னர் வீழ்ச்சியடைந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் பாரிய சவாலை துணிச்சலுடன் ஏற்றுக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க, குறுகிய காலத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் விரிவான கடன் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்தார். சர்வதேச அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன், ஜப்பான், பிரான்ஸ் மற்றும் இந்தியா ஆகிய மூன்று நாடுகளைக் கொண்ட உத்தியோகபூர்வ கடன் குழு (OCC) வை அமைத்துக் கொண்டு சிறப்புத் திறமைகளைக் கொண்ட நிறுவனங்களுடன் இணைந்து வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில், பாரிஸ் ஒருங்கிணைந்த உதவிக் குழு, சீன மக்கள் குடியரசு மற்றும் ஏனைய வெளிநாடுகளுடன் கடன் மறுசீரமைப்பிற்குப் பிறகு கடனைத் திருப்பிச் செலுத்தும் திட்டம் கையெழுத்திடப்பட்டது.









நாட்டைக் காப்பாற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட இந்த தேசிய உடன்படிக்கைகளை நாட்டுச் சட்டத்தின் ஒரு அங்கமாக மாற்றுமாறு சர்வதேச சமூகம் அரச தலைமையிடம் கோரிக்கை விடுத்தது.

அதனடிப்படையில், 2024ஆம் ஆண்டு சர்வதேச உடன்படிக்கைகளின்படி, பாரிய பொருளாதார மாற்றம் ஏற்படுத்தப்பட்டு, கடன் நிலைத்தன்மையை ஏற்படுத்தி, வறுமையை ஒழித்து துரித அபிவிருத்தியின் ஊடாக 2048ஆம் ஆண்டுக்குள் அபிவிருத்தியடைந்த நாட்டிற்கான தேசிய நிகழ்ச்சி நிரலை உருவாக்கி பொருளாதார பரிமாற்றச் சட்டத்தின் மூலம் அது சட்டபூர்வமாக்கப்பட்டது.

அதன்பிரகாரம் நாட்டின் ஜனாதிபதிகள் மாறினாலும் சரி, அரசுகள் மாறினாலும் சரி, நீண்ட கால தேசியக் கொள்கை சட்டமன்றம் சட்டமாக்கப்பட்டுள்ளது.

**நாட்டைக் காக்கும் பஞ்சாயுதங்களாக இருக்கும் அந்த 5 சட்டங்களும் வருமாறு :**

**1. பணம் அச்சிடுவதைத் தடுக்கும் புதிய இலங்கை மத்திய வங்கிச் சட்டம் (2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டம்)**

**2. அதிக வட்டிக்கு கடன் பெறுவதைத் தடுக்கும் அரச கடன் முகாமைத்துவச் சட்டம். (2024ஆம் ஆண்டின் 33ஆம் இலக்கச் சட்டம்)**

**3. மக்களை ஏமாற்றும் பொய்யான வாக்குறுதிகளை வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்குவதைத் தடுக்கும் அரச நிதி முகாமைத்துவச் சட்டம். (2024ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டம்)**

**4. நாட்டின் விவசாயம், கைத்தொழில், சேவைகள், வெளிநாட்டு முதலீடு, சுதந்திர வர்த்தக பிரதேசம் போன்றன தொடர்பில் பாரிய பரிமாற்றத்தைச் செய்யும் பொருளாதாரப் பரிமாற்றச் சட்டம். (2024ஆம் ஆண்டின் 45ஆம் இலக்கச் சட்டம்)**

**5. திருட்டு, மோசடி, ஊழல், முறைகேடுகளைத் தடுக்கும் அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், தொழிற்சங்கங்கள், ஊடக நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள், பணிப்பாளர்கள் போன்ற அனைத்து தரப்பினர்களும் பொறுப்புக் கூறலுக்கும், பொறுப்புக்கும் கட்டுப்படும் ஊழலை முற்றாக தடுக்கும், கடுமையான சட்ட வரையறைகள் அடங்கிய ஊழல் எதிர்ப்புச் சட்டம். (2023ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கச் சட்டம்)**

இவ்வாறு 2048ஆம் ஆண்டளவில் வறுமையை ஒழித்து, இலங்கையின் தனிநபர் வருமானம் 20,000 அமெரிக்க டொலர்களைத் தாண்டும் அபிவிருத்தியடைந்த நாடாக இலங்கையை மாற்றியமைக்கும் தேசிய கொள்கையை சட்டமாக்கி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஒரே வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமேயாகும்.

ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களான சஜித், அனுர, திலித், விஜேதாச உள்ளிட்ட 38 வேட்பாளர்களும் இந்த தேசியக் கொள்கையை நடைமுறைப்படுத்துவார்களா இல்லையா? மேற்கண்ட 5 சட்டங்களுக்கு அமைவாக நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்காக ஒத்துழைப்பு வழங்குவீர்களா இல்லையா? என்பதை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். எமது எல்லா ஊடக நிறுவனங்களும் அத்தகைய வெளிப்பாட்டிற்கு சிறப்பு இடம் கொடுக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

**பொருளாதார பரிமாற்றச் சட்டத்தின் நோக்கமும், இலக்கும்**

இலங்கையினுள் பொருளாதார பரிமாற்றத்தை ஏற்படுத்துவதற்காக தேசிய கொள்கைகளை உருவாக்கும் நோக்கில் பொருளாதார பரிமாற்றச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் பிரதான விடயம் என்னவெனில், நாட்டினுள் ஒரு நிறுவன கட்டமைப்பை உருவாக்குவதாகும். அதனுள், இலங்கை பொருளாதார ஆணைக்குழுவை ஸ்தாபித்தல், இலங்கை முதலீட்டு வலயம் என்ற நிறுவன அமைப்பை உருவாக்குதல், சர்வதேச வர்த்தகத்திற்கான அலுவலகம் ஒன்றை அமைத்தல், தேசிய உற்பத்தி திறன் ஆணைக்குழுவை நிறுவுதல், இலங்கை பொருளாதார மற்றும் சர்வதேச வர்த்தக நிறுவனத்தை நிறுவுதல் போன்றவாறு ஐந்து நிறுவனங்களை உருவாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன.


இந்த நிறுவனங்களின் கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம், போதுமான உணவு பானங்கள், உடைகள் மற்றும் வீட்டு வாழ்க்கைத் தரத்தில் நிலையான வளர்ச்சியை உருவாக்குதல், ஓய்வு மற்றும் ஓய்வு நேரத்தை சரியான முறையில் பயன்படுத்துதல் உட்பட போதுமான வாழ்க்கைத் தரத்தை அனைத்து குடிமக்களுக்கும் ஏற்படுத்திக் கொடுப்பதே முதலாவது நோக்கமாகும்.

அரச மற்றும் தனியார் துறையின் பொருளாதாரச் செயற்பாடுகளினுள் அந்த பொருளாதாரச் செயற்பாடுகள் நாட்டின் சமூக நோக்கம் மற்றும் பொதுவான முன்னேற்றத்திற்காக வழிநடாத்துதல் மற்றும் ஒருங்கிணைப்பிற்குத் தகுந்த திட்டங்கள், கட்டுப்பாடுகளை சட்டத்தினால் விதிப்பதன் ஊடாக முழு நாட்டிலும் துரித அபிவிருத்தி வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காகவும், எதிர்காலத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதைத் தடுப்பதற்காகவும் இதன் மூலம் நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

(IV ஆம் பக்கம் பார்க்க)

எம். எஸ். முஸப்பிர்





# சகலருக்கும் வெற்றி ஐக்கியமான நாடு

www.sajith.lk

QR குறியீட்டினை ஸ்கேன் செய்து கொள்கை பிரகடனத்தைப் பதிவிறக்கம் செய்துகொள்ளுங்கள்

සජිත් ප්‍රේමදාස
சஜித் பிரேமதாச
**Sajith Premadasa**



## வலுவான ஒரு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல்

நாட்டின் அனைத்து பிரசைகளும் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொண்டு, திருப்திகரமான ஒரு வாழ்க்கையை கொண்டு நடாத்துவதற்கு தேவையான ஒரு பின்னணியை கட்டியெழுப்ப வேண்டுமாயின் நாம் மேற்கொள்ள வேண்டிய முதல் விடயம் யாதெனில் நாட்டின் பொருளாதாரத்தை வலுவான முறையில் கட்டியெழுப்புவதாகும். நாடு வீழ்ந்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வினை தேடுதல், நாட்டின் வருமானத்தை அதிகரித்தல், ஊழல் மோசடி ஆகியவற்றை நடுத்தல் ஆகியவற்றின் ஊடாகவே இந்த இலக்கினை எமக்கு அடைந்துகொள்ள முடியும். இதற்கு தேவையான விசேட நடைமுறை சாத்தியமான திட்டமும் திறைமையான நிபுணத்துவ குழுவும் இச்சந்தர்ப்பத்தில் எமது ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு மாத்திரமே உள்ளது.

### இந்த இலக்கை அடைந்து கொள்வதற்காக,

- அரச கொள்வனவு (பெறுகை) நடவடிக்கைகள் வெளிப்படைத் தன்மையுடனும் ஊழலின்றியும் வினைத்திறனுடனும் இடம்பெறுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு அரச கொள்வனவு (பெறுகை) சட்டம் ஒன்றை நாம் அறிமுகப்படுத்துவோம். மேலும், அனைத்து அரச பெறுகை நடவடிக்கைகளையும் டிஜிட்டல் தளம் ஒன்றின் கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம்.
- சர்வதேச நாணய நிதியத்தினால் முன்வைக்கப்பட்ட கடன் கொள்கையினை தொழில்முனைவோர் மற்றும் சாதாரண மக்களுக்கு வரிச்சுமை குறையுமாறு மீளாய்வுக்குட்படுத்தல்.
- இந்த வரி வீதத்தையும் வரி விதிக்கப்படும் வகைகளையும் குறைப்பதன் மூலம் மத்தியதர வகுப்பினரின் வருமானம் வலுவடைவதுடன் வரி செலுத்தும் தொழில்வாண்மையாளர்களுக்கு தங்களின் வரி பணத்தை மிகவும் பயனுறுதிமிக்க வகையில் நாட்டின் அபிவிருத்திக்காக ஈடுபடுத்துவதற்கும் வாய்ப்பு கிட்டுகிறது. மேலும் நாம் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளின் ஊடாக சேமித்துக் கொள்ளக்கூடிய பெருந்தொகையான பணத்தை எதிர்காலத்தில் வரி செலுத்தும் மத்திய தர வகுப்பினருக்கு நன்மைகளை வழங்கும் பொருட்டு ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம்.
- நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோர்களுக்கு குறைந்த வட்டியில் குறைந்தபட்ச நிபந்தனைகளின் கீழ் மூலதனத் தேவைகளை முறையான விதத்தில் பெற்றுக் கொள்வதற்கு வழிசமைக்கும் வகையில் அபிவிருத்தி வங்கி நடைமுறையொன்றை தற்போது உள்ள வங்கி முறைமைகள் ஊடாகவே அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம். சர்வதேச அபிவிருத்தி கொடைகள் மற்றும் தனியார் துறை கூட்டாண்மைகளை ஒருங்கிணைப்பதன் ஊடாக அரச முதலீடுகளுக்கு தேவையான நிதி வசதிகள் ஏற்பாடு செய்து கொள்ளப்படும்.

### திட்டமிடல் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

- கொள்கை திட்டமிடல் மற்றும் கொள்கை நடைமுறைப்படுத்தல் விடயங்களுக்கான அமைச்சரவை அந்தஸ்துடைய ஒரு அமைச்சினை மீண்டும் உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம்.
- இந்தக் கொள்கை பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக முழுமையான அதிகாரமுடைய கற்றறிந்த தொழில்வாண்மையாளர்களைக் கொண்ட ஒரு "கொள்கை நடைமுறைப்படுத்தல் ஆணைக்குழு" நிறுவப்படும்.

### வினைத்திறனை அடைந்து கொள்ளும் பொருட்டு டிஜிட்டல் மயமாக்கல்

அரச கொள்வனவு முதல் சேவை வழங்கல் வரை அனைத்து துறைகளிலும் காணப்படும் ஊழலை இல்லாதொழிப்பதற்கும் வகைபொறுப்பு கூறுதல் சார்ந்த பிரச்சனைகளுக்கும் தீர்வு காணும் பொருட்டும் தொடர்ச்சியாக பல தசாப்தங்களாக முன்னெடுக்கப்பட்ட மறுசீரமைப்புகள் தோல்வியிலேயே முடிவடைந்துள்ளன.

இது தொடர்பாக கவனம் செலுத்தி, ஒழுங்கு முறையான கொள்வனவு ஏற்பாடுகளை சட்டமாக்குவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம். மருந்து பொருட்கள், உர வகைகள், எரிபொருள், நிலக்கரி, சமையல் எரிவாயு மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதி அடிப்படையிலான கொள்வனவு நடவடிக்கைகளை டிஜிட்டல் தளம் ஒன்றின் கீழ் கொண்டுவருவதற்கும் திட்டவட்டமான விலையிடல் முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இற்றைவரை அரசாங்கங்களினால் முன்னுரிமை வழங்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளுக்கான முதலீடுகளை மேற்கொள்ளும் நடவடிக்கையை அவ்வாறாகவே பேணி வரும் அதேவேளை நாடளாவிய ரீதியில் வியாபித்து செல்லும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளை விரிவாக்கும் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

**தன் கீழ்,**

- டிஜிட்டல் உட்கட்டமைப்பு தளம் நடைமுறைப்படுத்தப்படும்.
- டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் (DPI) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் திட்டவட்டமாக அடையாளம் காண்பதற்கு வழிசமைக்கும் வகையில் அனைத்து இலங்கையர்களுக்கும் அடையாளம் காண்பதற்கான (உதா: தேசிய அடையாள அட்டை இலக்கம் போன்ற) இலக்கம் ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம்.
- அரச துறையின் அனைத்து சேவைகளும் இணைய வழி முறையில் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் ஈ - அடையாள அட்டை, ஈ - கடவுச்சீட்டு, ஈ - சாரதி அனுமதி பத்திரம் உள்ளிட்ட தனிநபர் அடையாளத்தை உறுதிப்படுத்தும் அனைத்து கோப்புகளும் ஸ்மார்ட் செல்லிட தொலைபேசியுடன் இணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- அனைத்து பிரசைகளுக்கும் டிஜிட்டல் பணப்பையை வழங்குவதற்கும் தனியார் மற்றும் அரச கொடுக்கல் வாங்கல் அனைத்தையும் ஒரு இலத்திரனியல் தளத்தின் கீழ் கொண்டு வருவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் அதனூடாக அரச கட்டணங்கள், தண்டப்பணம் உள்ளடங்கலாக அனைத்து தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல்களும் பாதுகாப்பாகவும் ஒழுங்கு முறையாகவும் வலையமைக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.
- உள்நாட்டு இறைவரி திணைக்களம், சுங்கத் திணைக்களம், மதுவரி திணைக்களம் உள்ளடங்கலாக வருமானத்தை சேகரிக்கும் நிறுவனங்கள் தனிநபர் அடையாளம் மற்றும் சொத்துரிமை ஆகியவற்றை உறுதிப்படுத்தும் அனைத்து நிறுவனங்களுடனும் ஒரே டிஜிட்டல் தளத்தின் கீழ் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**இதன் மூலம்,**

- அரச வருமானத்தை மூன்று ஆண்டுகளுக்குள் இரு மடங்காக உயர்த்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- மேலும், இலஞ்சம் கொடுத்தல் வரிசையில் காத்திருந்து கட்டப்படுதல் போன்ற சிரமங்கள் இல்லாமல் தங்களது செல்லிட தொலைபேசி ஊடாகவே எவ்வித மொழித் தடைகளும் இல்லாமல் அரச சேவைகளை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு உறுதிப்படுத்தப்படும்.



## அனைத்துப் பிரசைகளையும் வலுவூட்டுதல்

- "சக்வல" நிகழ்ச்சித் திட்டத்தை மேலும் விரிவாக்கி நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளையும் ஸ்மார்ட் (சூட்டிகையான) பாடசாலைகளாக மாற்றுவதற்கு நாங்கள் நடவடிக்கை மேற்கொள்வோம். இதன் மூலம் டிஜிட்டல் கற்றல் தளத்திற்கு பிரவேசிப்பதற்கான ஆற்றலை மாணவர்களும் பெற்றுக்கொள்வர்.
- டிஜிட்டல் பாடசாலைகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளை தாபித்து மேம்படுத்தும் பணிக்கு உதவி வழங்கும் பொருட்டு நன்கொடையாளர்களை சேர்த்துக் கொள்வதற்கு 10,096 'தாபரிப்பு பாடசாலைகள்' நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.
- உலகளாவிய கூட்டாண்மை, கலாசார பரிமாற்றம் மற்றும் பாடசாலைகளுக்கு இடையிலான இணைந்து கற்றல் வாய்ப்புகள் ஆகியவற்றை போசித்து வளர்ப்பதற்கு பாடசாலை இணைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் (Twinning Programme) ஆரம்பிக்கப்படும்.
- பாடசாலைகளில் வசதிகள் பராமரிக்கப்படுகின்றன என்பதையும் உரிய நேரத்தில் பராமரிப்பு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்பதையும் உறுதிப்படுத்துவதற்காக சமுதாயத்தின் உதவியுடன் பொறுப்பு நிதியமொன்று (Trust Fund) அனைத்து பாடசாலைகளிலும் நிறுவப்படுதல் கட்டாயப்படுத்தப்படும்

### கல்வி, தொழிற்பயிற்சி மற்றும் இளைஞர்கள்

- கல்வித்துறையில் நீண்ட காலமாக நிலவும் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் சேவை சார்ந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கு 2025 சனவரி மாதத்திற்கு முன்னர் கொள்கை ரீதியிலான தீர்மானங்களை மேற்கொண்டு செயல்திட்டமொன்று தயாரிக்கப்படும்.
- அனைத்து கல்வி நிறுவனங்களிலும் STEAM கல்வியினை அறிமுகப்படுத்தல்.
- நாட்டின் அனைத்து பாடசாலைகளிலும் தரம் ஒன்று முதல் 13 வரை ஆங்கில மொழியை கற்பிப்பதற்கு துரிதமான ஒரு வேலைத்திட்டம் 2025 ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்படும்.
- அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் நிறைவான காலை உணவை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம்.
- பாடசாலைகளில் துப்புரவேற்பாட்டு வசதிகள், நீர் மற்றும் கழிவறை வசதிகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக அமைக்கப்படும்.
- ஆசிரியர்களுக்கு போக்குவரத்துக்கான இலவச போக்குவரத்து முறையொன்றை ஏற்பாடு செய்யப்படும்.
- இதன் கீழ் தொழில்நுட்பம், ஆராய்ச்சி ஆகிய துறைகளுக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1% ஒதுக்கப்படும்.
- இதற்கமைவாக, இளம் தொழில் முயற்சியாளர்கள் ஊக்குவிக்கும் பொருட்டு "18+ Startup project" கருத்திட்டத்தின் வாயிலாக பட்டதாரிகளுக்கும் பாடசாலைக்கல்வியை நிறைவு செய்தவர்களுக்கும் சலுகை வட்டி வீதத்திலான கடன்கள், தொழில்முயற்சிக்கான ஆலோசனை சேவைகள் மற்றும் அத்தியாவசிய வளங்கள் வழங்கப்படும்.
- உள்நாட்டு வெளிநாட்டு இணையவழி கொடுக்கல் வாங்கல்களுக்காக Pay Pal மற்றும் ஏனைய சர்வதேச பணம் செலுத்தல் முறைகளை தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம்.
- அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 25 தகவல் தொழில்நுட்ப பூங்காக்களை (cutting edge IT parks) நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்டங்களையும் உள்வாங்கும் வகையில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- ஐரோப்பிய மற்றும் பசிபிக் பிராந்திய நாடுகளில் உயர்ந்த வருமானத்துடன் கூடிய வேலைவாய்ப்புகளை இலக்கு வைத்து தாதியர், வயோதிபர் பராமரிப்பு, சுகாதார பராமரிப்பு மற்றும் சமூக சேவை துறைகளில் உலகளாவிய அங்கீகாரமுடைய பட்டங்கள் எமது நாட்டுப் பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பட்டப்படிப்பு தகைமைகளை பெறாத மாணவர்கள் தொழில்சார் பயிற்சி நெறிகளுக்கு ஆற்றுப்படுத்தப்படுவார்கள்.
- தொழில் பயிற்சிகளை இயன்றளவிற்கு இலவசமாக அல்லது குறைந்த செலவில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதுடன் உயர் தரத்திலான பயிற்சி பாட நெறிகளுக்கு மாணவர்களுக்கு கடன் வசதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### விவசாய மறுசீரமைப்பு

- விவசாயிகளுக்கு தற்போது மீளச் செலுத்த முடியாமல் உள்ள நீண்டகால கடன்களை அவர்களின் ஒப்பந்த கடன்களிலிருந்து பதிவழிப்பு செய்யப்படும்.
- விளைச்சலில் 40% வரை காணப்படும் அறுவடைக்குப் பின்னரான சேதத்தை குறைப்பதற்கு காலநிலை தன்மை சார்ந்த கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நெல் மற்றும் ஏனைய தானிய வகைகளின் உற்பத்தி களஞ்சிய வலையமைப்பு நாடளாவிய ரீதியில் உடனடியாக நிறுவப்படும்.
- நெல், பிற பயிர்கள் மற்றும் ஏற்றுமதி பயிர்களுக்கு உயர் தரத்திலான உரம் ரூ.50,000 இற்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- மேலும், வலையமைக்கப்பட்ட அரிசி பதப்படுத்தல் நிலையங்களை நிறுவுவதன் (சக்தி அரிசி கருத்திட்டம்) ஊடாக அரிசியின் விலையை குறைப்பதற்கு தேவையான அரச தலையீடு உறுதிப்படுத்தப்படும். அதற்கு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்கப்படும்.
- விவசாயிகளின் விளைநிலங்களில் பயன்படுத்தப்படும் இயந்திரோபகரணங்கள், உழவு வண்டிகள், அறுவடை இயந்திரங்கள் போன்றவற்றிற்கு QR குறியீட்டு முறைமையின் கீழ் சலுகை விலையில் எரிபொருள் விநியோகிக்கப்படும்.
- பெருமளவு மரக்கறி மற்றும் பழவகைகளை உற்பத்தி செய்து விநியோகிக்கின்ற மாவட்டங்களில் அதிநவீன அதிகுளிரூட்டி வசதிகளும் உலர்த்தல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் ஊடாக மரக்கறி மற்றும் பழவகைகள் பழுதடைந்து விரயமாவதை தடுப்பதற்கும் நாம் நடவடிக்கை மேற்கொள்வோம். அதன் ஊடாக மிகச் சிறந்த விலையில் தரமான உற்பத்திகளை சந்தைக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- வனவிலங்குகளினால் சேதத்திற்குள்ளாகும் பயிர் செய்கைகள் மற்றும் உற்பத்தி பொருட்கள் காரணமாக இன்னலுக்கு உள்ளாகும் விவசாயிகளுக்கு காப்புறுதி முறையொன்று அறிமுகப்படுத்தப்படும்.
- தேயிலை, இறப்பர், தென்னை, கரும்பு, கருவா மற்றும் ஏனைய ஏற்றுமதி விவசாயப் பயிர்களை ஊக்குவிப்பதற்கு தேவையான அரச அனுசரணை தொடர்ச்சியாக வழங்கப்படும்.

### சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி

- பெண் தலைமைத்துவ குடும்பங்களை வலுவூட்டுவதற்கு முற்போக்கு சிந்தனையுடன் கூடிய நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். இதனூடாக பெண்களும் அவர்களது குழந்தைகளும் பாதுகாப்பும் ஊட்டச்சத்து குறைவின்றி கிடைக்கின்றதுமான ஒரு சூழலில் வளர்ச்சி அடைவதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான முழுமையான ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பு வழங்கப்படும்.
- பெண்களுக்கு கல்வி மற்றும் திறன் அபிவிருத்தி வாய்ப்புகளை விரிவாக்குவதற்கு நாம் முன்னுரிமை வழங்குவோம்.
- மகளிர் சமுதாயத்திற்கு சலுகை விலையில் மாதவிடாய் அணை ஆடைகளை நாடளாவிய ரீதியில் உள்ள பெண் தொழில் முயற்சியாளர்கள் ஊடாக உற்பத்தி செய்து விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், பாடசாலை மாணவிகளுக்கு மேற்படி அணை ஆடைகளை இலவசமாக வழங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.
- அனைத்து பொலீஸ் நிலையங்களிலும் உள்ள மகளிர் மற்றும் சிறுவர் பணியகம் 24 மணித்தியாலங்களும் திறந்திருக்கும் வகையில் செயற்படுத்தப்படும். மேலும், உடனடி உதவிகளை வழங்குவதற்கு பெருமளவு பகிரங்கப்படுத்தப்பட்ட உதவி தொலைபேசி இலக்கங்கள் இயங்கு நிலையில் வைக்கப்படும்.
- உளவள ஆலோசனை மற்றும் சட்ட உதவிகள் உள்ளிட்ட பாதிக்கப்பட்டவர்களுக்கான விரிவான உதவி சேவைகளை விருத்தி செய்வதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம்.
- அனைத்து தனியார் துறை பெண் ஊழியர்களுக்கும் மூன்று மாதகால பிரசவ லீவை பெற்றுக் கொள்வதற்கு ஏதுவான வகையில் சட்டங்களை இயற்றுவோம். மேற்படி பிரசவ லீவுகளின் கிரயத்தை நிறுவன வரியிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- கிராமிய பெண்கள் முகம் கொடுக்கின்ற நுண்நிதி கடன் சுமையிலிருந்து அவர்களை மீட்டு மிகவும் பொருத்தமான முதலீடுகளை மேற்கொள்வதற்கும் சுய தொழிலில் ஈடுபடுவதற்கும் தேவையான மூலதனத்தைப் ஏற்பாடு செய்து தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் துறை

- நவீன அகழ்வு தொழில்நுட்பங்களை பெறுவதற்கு சிறிய அளவிலான சுரங்க தொழிலாளர்களுக்கு நிதி வசதிகளை வழங்குதல்.
- தொழில்துறையின் வருமான வரி மதிப்பீடு விற்றுமுதல் அடிப்படையில் இருக்க வேண்டும். தற்போதைய நிகர இலாபத்தில் 30% க்கு பதிலாக இறுதி வரியாக விற்றுமுதலில் அதிகபட்சம் 2.5% அறவிடப்படும்.
- தன்னுடன் கொண்டு வரப்படும் இரத்தினக்கல் பொதிகளின்இறக்குமதிக்கு பொதியொன்றுக்கு 200 அமெரிக்க டாலர் என்ற கட்டண முறையை மீண்டும் அறிமுகப்படுத்துதல்.
- அந்நிய செலாவணிக்கான அனைத்து இரத்தினக்கல் மற்றும் ஆபரண விற்பனைகளும் பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.
- வெட்டப்பட்ட இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்களுக்கு பெறுமதி சேர்க்கும் விதமாகவும் ஏற்றுமதி வாய்ப்புகளை அதிகரித்துக் கொள்ளும் விதமாகவும் இந்த பண்டங்கள் மீதான வரி விலக்கப்படும்.



## கௌரவமான ஒரு அரச சேவையின் பொருட்டு

ஒட்டுமொத்த அரச சேவையையும் உள்ளடக்கும் வகையில் முழுமையான ஒரு மனித வள கணக்காய்வை மேற்கொண்டு ஒட்டுமொத்த அரச சேவையையும் மனித வள முகாமைத்துவ திட்டமொன்றின் பிரகாரம் மீள்கட்டமைப்பதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம்.

புதிய அரச ஊழியர்களின் ஓய்வூதிய உரிமைகள் தொடர்பாக 2016 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளால் உருவாக்கப்பட்ட தொடர்ச்சியான நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு, முந்தைய முடிவை இரத்து செய்து, 2016 முதல் பணியமர்த்தப்பட்ட அனைத்து அரச ஊழியர்களுக்கும் ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் பிரகாரம் ஓய்வூதியம் வழங்க முன்மொழிகின்றோம். அதற்கமைவாக அவர்களின் நியமனம் மாற்றியமைக்கப்படும்.

- ஜனவரி 2025 முதல் ஒட்டுமொத்த அரச சேவையின் அடிப்படைச் சம்பளத்தை ஆகக்குறைந்தது 24% அதிகரித்தல்
- அனைத்து அரச ஊழியர்களின் மாதாந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை ரூ. 25,000 ஆக அதிகரித்தல்
- அரச ஊழியர்களுக்கு கொடுப்பனவுகளுடன் ஆகக்குறைந்த சம்பளமாக ரூ.57,500 வழங்கப்படும் என்பதுடன் இது அடுத்த ஆண்டு சம்பளவேற்றத்துடன் சீராக்கம் செய்யப்படுதல்.
- சேவை வினைத்திறன் அடிப்படையில் ஒரு செயல்திறன் ஊக்குவிப்பு கொடுப்பனவு அறிமுகப்படுத்தப்படுதல்.
- ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு சார்ந்த விடயங்களில் தகைமைகள், திறன்கள் மற்றும் ஆற்றல்களைக் கருத்தில் கொண்ட வெளிப்படைத்தன்மையுடன் கூடிய ஒரு முறையை அறிமுகப்படுத்துதல்.
- அரச ஊழியர்களுக்கு ஏதேனும் அவசரநிலை ஏற்படுமிடத்து சம்பளத்தைப் போன்று 10 மடங்கு அளவிலான இடர் கடனை ஐந்து வேலை நாட்களுக்குள் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு வழங்கும் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்துதல்
- ஓய்வு பெற்ற நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் கட்டாயமாக ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை உறுதிப்படுத்துதல்.
- வாழ்க்கையை கொண்டு நடாத்துவதற்கு போதுமானளவு ஓய்வூதியத்தை வழங்குதல் மற்றும் அக்ரஹார காப்புறுதியின் நன்மைகளை தற்காலத்திற்கு பொருத்தமான வகையில் இற்றைப்படுத்துதல்.
- சேவையை வழங்குபவரும் சேவையை பெறுபவரும் ஒரே மாதிரியாக திருப்தியடையும் ஒரு அரச சேவையை கட்டியெழுப்புவதற்காக அரச சேவையை டிஜிட்டல்மயப்படுத்தி நவீனமயமாக்குவதன் மூலம் சூட்டிகையான ஒரு அரச சேவையை உருவாக்குதல்.

ஆகிய விடயங்களை நாங்கள் மேற்கொள்வோம். அரச சேவையில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு,

- அரச மற்றும் தனியார் துறையின் பங்களிப்போடு நாடு முழுவதும் ஆரம்ப பிள்ளைப் பருவ பராமரிப்பு மற்றும் கல்விக்காக தனித்துவமான நிலையங்கள் நிறுவப்படும்.



## சிறப்பான வாழ்க்கைத் தரம்

- பாரியளவிலான போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிரான வழக்குகளை 06 மாதங்களுக்குள் விசாரணை செய்து தண்டனை வழங்குவதற்காக போதைப்பொருள் தடுப்புக்கான விசேட மேல் நீதிமன்றம் (Anti-narcotic special high court) நிறுவப்படும்.
- மது பாவனை மற்றும் புகைத்தலை அதைரியப்படுத்துவதோடு சமீப காலமாக முறையற்ற முறையில் வழங்கப்பட்ட "மதுபான அனுமதிப்பத்திரங்களை" இரத்து செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### வலுசக்தி மற்றும் பொது பயன்பாடுகளின் மறுசீரமைப்பு

இலங்கையை பிராந்தியத்தின் புதுப்பிக்கத்தக்க சக்தி மைய நிலையமாக மாற்றுவதற்காக 2030 ஆம் ஆண்டளவில் 70% புதுப்பிக்கத்தக்க சக்தி இலக்கினை அடைந்து கொள்வது மாத்திரமன்றி இந்த இலக்கை விஞ்சி செல்வதும் எமது திட்டமாகும். வலுசக்திக்கான கேள்வியை முகாமை செய்யும் விடயத்தை (Demand Management) நடைமுறைப்படுத்தப்படுவதை கட்டாயப்படுத்துவோம்.

- இலங்கையில் தற்போது காணப்படும் மின்சக்தி துறையின் ஆற்றலுக்கு அமைவாக புதுப்பிக்கத்தக்க சக்தியிலிருந்து 2500 மெகாவாட் மின்சக்தியை இரண்டு வருடங்களுக்குள் தேசிய மின் தொகுதியில் இணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- இலங்கையின் பரிவர்த்தனை வலையமைப்பை ஒழுங்குமுறைப்படுத்தி அதனை சூட்டிகையான மின் தொகுதி வலையமைப்பாக மாற்றி மேலும் 2,500 மெகாவாட் மின்சாரத்தை 2030 ஆம் ஆண்டளவில் தேசிய மின் தொகுதிக்கு புதுப்பிக்கத்தக்க சக்தியிலிருந்து சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- 60 மின் அலகுகளை விட குறைவாக மின்சாரத்தை பயன்படுத்தும் மின் பாவனையாளர்களின் மின்கட்டணத்தை செலுத்துவதற்கு அரசாங்கத்தினால் சலுகை முறையொன்று நடைமுறைப்படுத்தப்படும்.
- மேலும், 180 அலகுகளை விட அதிகமாக மின்சாரத்தை பயன்படுத்தும் மின் பாவனையாளர்களுக்கு சூரிய படலங்களையும் மின்கலன் தொகுதிகளையும் தேசிய மின் தொகுதியில் உள்ளடக்குவதற்கு நிதி வசதிகளை வழங்குவதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.
- உலக சந்தையின் விலை மற்றும் டொலரின் பெறுமதி ஆகியவற்றை கருத்தில் கொண்டு பாவனையாளர்களுக்கு மிகக் குறைந்த விலையை உறுதிப்படுத்துவதற்கு வெளிப்படைத் தன்மையுடன் கூடிய விலை சூத்திரம் ஒன்றின் ஊடாக சமையல் எரிவாயுவின் விலையை குறைந்த மட்டத்தில் பேணி வருதல் என்னுடைய எதிர்பார்ப்பாகும். கைத்தொழில் துறைக்கும் அத்தகைய ஒரு விலை சூத்திரம் அறிமுகப்படுத்தப்படும்.
- வடமேல் கடற்கரையில் காற்றாலை வேலைத்திட்டங்களினூடாகவேனும் அல்லது ஐதரசன் உற்பத்தி தொழிநுட்பத்தினூடாக ஐதரசன் மின் மூலமொன்று உருவாக்கப்படும்.

### காணி மற்றும் நீர்ப்பாசன முகாமைத்துவம்

- நிலப் பயன்பாட்டை மேம்படுத்தி சந்தை நடவடிக்கைகளை ஒழுங்குமுறைப்படுத்தும் பொருட்டு தேசிய காணி வங்கியொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம்.
- அரச காணிகளில் குடியிருக்கும் காணி அனுமதி பத்திரதாரிகளுக்கு ஐந்து வருடங்களுக்குள் காணி உறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- நிலம் என்பது பொருளாதார மற்றும் சந்தை அபிவிருத்தியில் தீர்மானகரமான காரணியாக அமைகின்றதென நாம் நம்புவதுடன் இந்த முன்னெடுப்பு ஊடாக காணிகள் பற்றிய தரவுகளை மத்தியமயப்படுத்தி அனைத்து காணி ஆவணங்களையும் டிஜிட்டல் மயமாக்கி அனாவசியமாக ஏற்படும் தாமதங்களை நீக்கும் அதேவேளை வினைத்திறன்மிக்க வகையில் காணிகளை ஒதுக்குவதற்கு தேவையான வசதிகளை மேற்கொண்டு நிலைபேறான அபிவிருத்திக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.
- பயன்பாட்டிற்கு உகந்த அரச காணிகளை (சுற்றாடல் பாதுகாப்பு விதிகளுக்கு அமைவாக) காணி வசதி இல்லாத இளம் தொழில்முயற்சியாளர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையை நோக்காகக் கொண்டு பொருத்தமான பயிர்செய்கைகளை மேற்கொள்வதற்கு திட்டவட்டமான கால வரம்பு மற்றும் இலக்குகளுடன் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- மொனராகலை, கம்பஹா, குருநாகல், அம்பாறை, பொலன்னறுவை, எம்பிலிப்பிட்டிய, அனுராதபுரம், புத்தளம் மற்றும் களுத்துறை ஆகிய இடங்களில் பழங்களை உற்பத்தி செய்வதற்கான பாரிய அளவிலான நிறுவனங்கள் நிறுவப்படும். சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பழ உற்பத்தியாளர்களுக்கு 10 இலட்சம் வரை கடன் வசதிகளை வழங்குவோம். மேலும் அனுராதபுரம், அம்பாந்தோட்டை, மொனராகலை, பொலன்னறுவை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பழங்களை உலர்த்தி டின்களில் அடைத்து ஏற்றுமதி செய்வதற்கான ஏற்றுமதி அபிவிருத்தி வலயங்களை அமைப்போம்.

### வீட்டுவசதி மற்றும் பொது பயன்பாடுகள்

- முதன்முறையாக வீடு கட்டுபவர்கள் மற்றும் வாங்குபவர்களுக்கு நீண்ட கால வீட்டுக் கடன்கள், அடமானக் கடன்கள் மற்றும் குறைந்த வட்டியில் கடன் வசதிகளை வழங்குதல் ஆகியவற்றின் மூலம் நாட்டின் வீடமைப்புத் தேவையைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்வோம்.
- புறநகர்ப்புறங்களில் காணி வசதி குறைவாக இருப்பதால் காணியின் அதிகப்படியான விலைக்கு ஒரு தீர்வாக நடுத்தர வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு அரச-தனியார் கூட்டாண்மையுடன் அடுக்குமாடி குடியிருப்பு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரசுக்கு சொந்தமான காணிகள் வழங்கப்படும்.
- கட்டுமானச் செலவுகளைக் குறைப்பதற்கும் கைத்தொழில் வளர்ச்சியைத் தூண்டுவதற்கும் ஓடுகள், துப்பரவேற்பாட்டு பொருட்கள் மற்றும் குளியலறை பாகங்கள் ஆகியவற்றுக்கான போட்டி முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பொருட்களின் விலை குறைந்த மட்டத்தில் நிலவுவதற்கான சூழல் உருவாக்கப்படும்.

### போக்குவரத்து

- சுற்றாடல் நேயமிக்க நவீன பேருந்துகள், ரயில் மின்மயமாக்கல், இலகு ரயில் அமைப்பு மற்றும் ஸ்மார்ட் தொழில்நுட்பத்தின் மூலம் இயங்கும் நுண்ணறிவு போக்குவரத்து முறைமை (ITS) ஆகியவற்றுடன் பல்வகைப் பொதுப் போக்குவரத்து அமைப்பு உருவாக்கப்படும்.
- அனைத்து வாடகை வாகனங்கள், முச்சக்கரவண்டிகள் மற்றும் பாடசாலை பேருந்துகளுக்கு QR குறியீடு மூலம் எரிபொருள் மானியம் வழங்கப்படும்.
- தற்போதைய அரசாங்கத்தினால் இடைநிறுத்தப்பட்டுள்ள களனிவெளி புகையிரதப் பாதை உள்ளிட்ட புகையிரத நவீனமயமாக்கல் திட்டங்களை துரிதப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வோம்.
- மேல்மாகாண இலகு ரயில் திட்டத்திற்கு புத்துயிரூட்டுவதன் ஊடாக போக்குவரத்துத் துறையையும் புதிய பரிமாணத்திற்கு கொண்டு செல்வதற்கு எமக்கு ஆற்றல் கிட்டும்.
- பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் பெற்றோரின் வசதியைக் கருத்தில் கொண்டு, சலுகை கட்டண அடிப்படையில் பாடசாலை பேருந்து முறையொன்று அறிமுகப்படுத்தப்படும்.

### சுற்றுலாத்துறை

- இந்த நாட்டிற்கு வருகை தரும் ஒவ்வொரு சுற்றுலாப் பயணிக்கும் மறக்க முடியாத சிறந்த பயண அனுபவத்தை வழங்குவதே எமது நோக்கமாகும். அதற்கு தேவையான சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, அதன் மூலம், அந்த சுற்றுலாப் பயணிகளை தொடர்ச்சியாக இலங்கைக்கு அழைத்து வருவதே இதன் நோக்கமாக உள்ளது.
- தற்போதைய அரசாங்கத்தால் கையொப்பமிடப்பட்ட ஊழல் நிறைந்த " VFS விசா ஒப்பந்தத்தை" இரத்து செய்து, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தங்களது விசாக்களை எளிதாகவும் குறைந்த விலையிலும் பெறுவதற்கான ஒரு நவீன முறைமையை உருவாக்குதல்.
- வீதி வலையமைப்புகள், போக்குவரத்து இணைப்புகள், விமான சேவை வசதிகள் போன்ற முக்கிய சுற்றுலா உட்கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும்.



## வலுவான சமூக பாதுகாப்பு வலை

- புதிய சட்டமொன்றினூடாக தேசிய பாதுகாப்புக் கவுன்சிலைத் தாபித்து, அதற்கு அவசியமான அதிகாரங்களை பெற்றுக்கொடுப்போம்.
- முப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்பு பணியாட்டொகுதியினரின் தொழிற் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை, அவர்களுக்கான உயர்ந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் நலனோம்புகை நன்மைகளை பெற்றுக் கொடுப்பதும் உறுதிப்படுத்தப்படும்.
- ஓய்வுபெற்ற படைவீரர்களுக்குரியதாக 'ஒரு பதவிநிலை - ஒரு ஓய்வூதியம்' (One Rank – One Pension) என்ற கொள்கை நடைமுறைப்படுத்தப்படும்.

### நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாடு

- சமயத் தலைவர்கள், பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஆகிய தரப்பினர்களிடமிருந்து முறையாக கருத்துக்களை ஆராய்ந்து தற்போதைய அரசியலமைப்பை மாற்றியமைத்து புதிய அரசியலமைப்பொன்றினை உருவாக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி அர்ப்பணிப்புடன் செயலாற்றும். மேற்படி நடவடிக்கையின் போது, தற்பொழுது நடைமுறையிலுள்ள 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினை அடிப்படையாகக் கொண்டு அதிகபட்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய பாராளுமன்ற முறைமைக்கு மாற்றியமைத்தல் எமது கொள்கையாக காணப்படுகின்றது.
 06 மாத காலப்பகுதிக்குள் மாகாண சபைத் தேர்தல் நடாத்தப்படும் என்பதுடன் உச்சகட்ட நிதி செயற்திறன் மற்றும் வினைத்திறன் கொண்டதாக மாகாண சபைகள் செயற்படுத்தப்படும் என்பதனை உறுதிப்படுத்துவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- உட்கட்டமைப்பு வசதிகளை மீள நிறுவுதல், சமூக அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் நிலைபேறான பொருளாதார மேம்பாடு தொடர்பிலும் கவனம் செலுத்தி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புதல் மற்றும் அபிவிருத்தியின் பொருட்டு அவசியமான அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துவதற்காக சர்வதேச நிதியுதவி மாநாடு ஒன்றினை ஏற்பாடு செய்வோம்.

### சட்டம் மற்றும் ஒழுங்கு

- உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான நீதியை நிலைநாட்டுவதற்காக 1948ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் 2(1) இ பந்தியின் பிரகாரம் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவொன்று 3 மாத காலப்பகுதிக்குள் தாபிக்கப்படும். அந்த ஆணைக்குழுவின் விதப்புரைகளை அடிப்படையாகக் கொண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பொறுப்புக்கூற வேண்டிய குற்றவாளிகளுக்கு எதிராக மூவரடங்கிய நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தினூடாக (Trial at bar) தினமும் வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டு தண்டனை வழங்குவது அரசின் மிக முக்கிய பொறுப்பாக கருதப்படும்.
- தற்பொழுது அறிமுகம் செய்யப்பட்டுள்ள பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தினை அகற்றி நாட்டின் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கின்ற மிகச் சிறந்த பயங்கரவாதத் தடுப்பு பற்றிய புதிய சட்டமொன்று நிறைவேற்றப்படும்.

- தேரவாத வர்த்தக பொருளாதாரம்;
- நடவடிக்கை – 2025 இற்கு அப்பால்
- ஒளிரும் சமூகத்தை நோக்கி
- தாய்நாட்டை வெற்றிபெறச் செய்வோம்
- ஒன்றுபட்ட இலங்கை

**முடியாது முடியாது எனச் சொல்லமுடியாது ! – இயலும்..!! நான் அதைச் செய்தேன்!!**

நாட்டின் பொருளாதாரம் பாதாளத்தில் விழுந்த வேளை எந்தவொரு அரசியல் கட்சியோ, எந்தவொரு தலைவரோ நாட்டை மீளக் கட்டியெழுப்பும் சவாலை பொறுப்பேற்கவில்லை.

நான் அதைப் பொறுப்பேற்றேன்.

அந்தக் கதையை நீங்கள் யாவரும் அறிவீர்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் காணப்பட்ட அந்த அராஜக நிலைமை உங்களுக்கு நினைவில் இருக்கிறதா?

சமையல் எரிவாயு சிலிண்டர்களைத் தோள்களில் சுமந்து கொண்டு நாட்கணக்கில் வரிசைகளில் நின்றோம். தாய் காலையில் மகள் மாலையில். தகப்பன் நடுநிசியில் மகன் அதிகாலையில் முச்சக்கர வண்டிக்கு, வாகனத்துக்கு பெற்றோல் கொஞ்சம் நிரப்புவதற்கு இரவு முழுவதும் வாகனத்துக்குள் நித்திரை விழித்தோம். எரிபொருள் வரிசைகளில் உயிரிழப்புக்கள் கூட நிகழ்ந்தன.

சொல்வதற்கு யாரும் இருக்கவில்லை. செவிசாய்ப்பதற்கு ஒருவரும் இருக்கவில்லை. நெருக்குதலைத் தாங்க முடியாமல் மக்கள் வீதியில் இறங்கினர். ஆர்ப்பாட்டம் நடத்தினர். வீடுகளுக்கு தீ வைத்தார்கள், பாராளுமன்ற உறுப்பினர்களை நடு வீதியில் கொலை செய்தார்கள்.

பிரதமர் இராஜினாமாச் செய்தார். ஜனாதிபதி விலகிச் சென்றார். மார் தட்டிக் கொண்டிருந்த சகல அரசியல் தலைவர்களும் தன்னால் முடியாதெனக் கூறி மூலை முடுக்குகளில் ஓடி ஒளிந்து கொண்டனர்.

நான் ஐக்கிய தேசிய கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பாராளுமன்றம் சென்ற ஒரு தனி மனிதன். இறுதியாக எனது வீட்டுக்கும் தீ வைத்தார்கள். முழுநாடும் தீப்பற்றி எரிந்தது.

மீண்டும் ஒருபோதும் அமைதியான ஒரு நாட்டை, துன்பமின்றி வாழ முடியுமான ஒரு நாட்டை உருவாக்க முடியுமென ஒருவர் கூட நினைக்கவில்லை. அது ஒரு கனவாகத் தான் இருந்தது.

ஆனாலும் எப்பொழுதும் அளவு கடந்து நாட்டை நேசித்த நான், பற்றி எரியும் இந்த நாட்டைக் கண்டு ஓடி ஒளிந்துக் கொள்ள விரும்பவில்லை. உயிரைப் பணயம் வைத்து எரியும் நெருப்பில் குதித்து நெருப்பை அணைத்தேன்.

இன்று இந்த நாட்டில் மக்கள் புன்னகைப்பதைக் காணும் போது, கஷ்டத்துடன் எனினும் மூவேளையும் சாப்பிடுவதைக் காணும் போது, முச்சக்கர வண்டி – வாகனங்கள் பாதையில் செல்வதைக் காணும் போது, நீண்ட நாட்களுக்குப் பின்னர் புத்தாண்டு கொண்டாட்டங்கள், தைப்பொங்கல் கொண்டாட்டங்கள், ரமழான் கொண்டாட்டங்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படுவதைக் காணும் போது, வெசாக் தோரணங்கள், நத்தார் அலங்கரிப்புக்கள் பாதைகளின் இரு புறங்களிலும் நிர்மாணிக்கப்படும் போது, ஆயிரக் கணக்கில் அன்னதானம் வழங்குதல்கள் நாடு முழுவதும் ஏற்பாடு செய்யப்படுவதைக் காணும் போது, நான் எல்லையற்ற மகிழச்சியடைகின்றேன்.

அன்று ஓடி ஒளித்திருந்த அரசியல்வாதிகள் இன்று வெளியில் வந்து ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான 10 பில்லியனுக்கும் அதிகமான நிதியை தேசிய பொருளாதாரத்துக்கு தேடித் தந்த என்னைத் திட்டித் தீர்ப்பதை நான் பிரமித்துப் போய் பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

ஆம்..! நான் வங்குரோத்து நிலையில் இருந்த ஒரு நாட்டையே பொறுப்பேற்றேன்.

நாம் தற்போது வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு, கடன் மறுசீரமைப்பு பணிகளை நிறைவுசெய்து முன்னோக்கிச் செல்கிறோம்.

2019இல் நான் பிரதமர் பதவியிலிருந்து நீங்கிச் சென்ற போது எமது மொத்த தேசிய உற்பத்தி 89 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. ஆனால் 2022இல் நான் ஜனாதிபதிப் பதவியை ஏற்ற போது அது 76.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. அதாவது 12.1பில்லியன் அமெரிக்க டொலர்களால் சரிவடைந்திருந்தது..!

ஆயினும் 2023இன் இறுதியில் அதனை 84.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிக்க எம்மால் முடிந்தது. இவ்வாறு பயணிக்கும் இப்பயணம் தொடருமாயின் 2025இன் இறுதியில் அது 89 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிக்கும். அதனைத் தொடர்ந்து நாளுக்கு நாள் அது அதிகரிக்கும்.

மொத்த தேசிய உற்பத்தி அதிகரிக்கும் போது எமது வருமானம் அதிகரிக்கும். கொள்வனவு சக்தி அதிகரிக்கும். வாழ்க்கைத் தரம் உயர்வடையும்.நான் தற்போது கடினமான தொங்குபாலப் பயணத்தில் நீண்டதூரம் வந்துள்ளேன்.

கடந்த காலம் முழுவதும் கடனைத் திருப்பிச் செலுத்தாத காரணத்தால் தான் உங்களுக்கு தற்போது ஓரளவு நிவாரணம் கிடைத்துள்ளதாக சிலர் கூறுகின்றனர். அது உண்மையல்ல.

இக் கஷ்டமான நிலையில் நாங்கள் கடனை மீளச் செலுத்தினோம். 2022ஆம் ஆண்டு சுமார் 2.5 பில்லியன் டொலர்கள். 2023ஆம் ஆண்டு சுமார் 2.6 பில்லியன் டொலர்கள்.

இனி எமக்கு தொங்குபாலத்தை கடப்பதற்கு இன்னும் கொஞ்சம் தூரம் தான் எஞ்சியுள்ளது.

அதனையும் கவனமாக மற்றும் கஷ்டத்துடன் சென்று சிறந்ததொரு எதிர்காலத்தை உருவாக்குவதா?

இன்றேல் பொய் வாக்குறுதிகள் மற்றும் ஒவ்வொரு விதமான பரீட்சித்துப் பார்த்தல்களை நம்பி ஏமாற்றமடைந்து அதல பாதாளத்தில் வீழ்வதா?

சிந்தியுங்கள்..

மற்றுமொரு விடயம்.

நான் இவை எல்லாவற்றையும் பாராளுமன்றத்தில் தனி ஆசனம் ஒன்றின் மூலம் தான் செய்தேன்.

ஆனாலும் இப்பயணத்தை தொடர்வதற்குத் தேவையான சட்டங்கள் போன்றே திட்டங்களைத் தயாரிப்பதற்கு பல கட்சிகளின் ஒத்துழைப்பை என்னால் பெற முடிந்தது.

அதேபோல் நாட்டை நேசிக்கும், பல்வேறு அரசியல் கொள்கையுடைய நீங்கள் அனைவரும் எனக்கு ஒத்துழைப்பு வழங்கினீர்கள்.

ஆகவே தான் நான் ஒரு சுயேட்சை வேட்பாளராக தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

நான் ஒரு கட்சி சார்பில் அல்லது ஒரு குழு சார்பில் இத்தேர்தலில் போட்டியிடவில்லை. பல்வேறு அரசியல் கொள்கையுடைய உங்களது சார்பில் நான் போட்டியிடுகின்றேன். பழைய பரம்பரையினர் துவக்கம் நவீன பரம்பரை வரை மாத்திரம் அல்ல. பிறக்கவுள்ள எதிர்கால சந்ததியினருக்காக...உங்களுடைய எதிர்காலத்திற்காக... எமது தாய் நாட்டுக்காக.

ஆம்.. நான் உங்களுக்காக, நாட்டுக்காக எதிர்வரும் 05 ஆண்டுகளுள் எஞ்சியவற்றையும் செய்து காட்டுவேன்.

நாட்டை கட்டியெழுப்புவேன்..!

சுதந்திரத்துக்குப் பின்னர் நூறு ஆண்டுகள் பூர்த்தியடையும் 2048 இல் கடன் சுமையிலிருந்து விடுபட்ட எமது தாய் நாடு உலகில் அபிவிருத்தியடைந்த, வளர்ச்சியடைந்த ஒரு நாடாக மாற்றமடையும்.

அப்போது நான் உயிருடன் இருக்க மாட்டேன். ஆயினும் 2022 இல் வீழ்ந்த நாட்டை தொடர்ச்சியாக மீட்டெடுத்து, எதிர்காலத்துக்காக பலமான ஒரு அத்திவாரம் அமைப்பதையே நான் இப்போது செய்து வருகிறேன்.

இது
உங்கள் அன்பின்
ரணில்.




ஒருவரும் நினைத்துப் பார்க்காத விதத்தில் கட்டியெழுப்பினார்.

வெறும் வீண் பேச்சுக்கள் இன்றி வேலை செய்து காட்டியவர் அவர் மாத்திரம் தான்,

அவரது இப்பயணத்தைப் பற்றி பலர் பகிரங்கமாக அவரைத் திட்டுகிறார்கள். இரகசியமாக அவரது செய்த நலன்களைப் போற்றிப் புகழ்கின்றார்கள். ஜனாதிபதி ஒருவரைத் தெரிவுசெய்வது பற்றி நீங்கள் இதுவரை ஒரு முடிவினை எடுக்காதிருப்பீர்களாயின் பின்வரும் கருத்துக்களை அறிவு சார்ந்த ரீதியில் வாசித்துப் பார்க்கவும். அதனை வாசித்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள். ரணிலின் திறமையான செயலாற்றுகை பற்றிய இந்த விடயங்களை நாம் கூறவில்லை, சர்வதேச அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக விடயங்கள் பற்றிய பரந்துபட்ட அனுபவமுள்ள வெளிநாடுகளில் உள்ள மாபெரும் அறிஞர்கள் இவற்றைத் தெரிவிக்கின்றார்கள்.

- சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி கிரிஸ்டலீனா ஜோர்ஜியெவா(2023 செப்டம்பர்) "நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்கான இலங்கை அரசின் அர்ப்பணிப்பு பற்றி நாம் திருப்தியடைகின்றோம்"
- தென்கொரியா ஜனாதிபதி யூன் சுக் யோல் (2023 செப்டம்பர் 19) "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கை சார்பில் முன்னெடுக்கும் பொருளாதாரத்தை மிளிரச் செய்யும் திட்டத்திற்காக எனது பூரண ஒத்துழைப்பை வழங்குகின்றேன். நாட்டில் நிலவும் பாரிய பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் நோக்கம் கொண்ட அவரது இந்த வேலைத்திட்டத்தைப் பாராட்டி அவரது அர்ப்பணிப்பை நான் மெச்சுகின்றேன்"
- அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் ஸ்கொட் மொரிசன் (2024 ஜூலை 18); "இலங்கையின் மிகவும் சவால் மிகுந்த ஒரு காலகட்டத்தில் ஜனாதிபதி அடைந்த வெற்றிகளுக்கு எனது பாராட்டுக்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் நாட்டில் ஸ்திரத் தன்மையினை ஏற்படுத்துவதற்கு அவரால் முடிந்துள்ளது"
- ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகாவா (2024 மே 5)–"பொருளாதார மற்றும் செயற்பாட்டுத் திட்டம் தொடர்பில் இலங்கை அடைந்துள்ள நிலையான முன்னேற்றம் தொடர்பில் நான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இலங்கை அரசுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்"
- ஜப்பான் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் யோகோ கமிக்கவா (2024 மே 4)– "கடன் நெருக்கடியை தீர்ப்பதற்கும், பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்குமான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கான உங்களது தலைமைத்துவத்தை நான் பாராட்டுகின்றேன்"
- தெற்கு மற்றும் மத்திய ஆசிய அலுவல்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ (2024 பெப்ரவரி 19)– "நான் கடமை புரியும் பிராந்தியத்தில் இலங்கையின் கதை போன்று மிகப்பெரிய மீண்டும் மறுமலர்ச்சியடைந்த நாட்டின் கதை ஒன்று வேறு இல்லை"




## இயலும் ரணிலுடன்....

# நாட்டை வெற்றியடைய செய்யும் ஐந்தாண்டுகள்

### மிகவும் அனுபவமுள்ள அபேட்சகர்

ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு, ஒரு நாட்டை மாற்றமடையச் செய்வதற்கு வாய்ப்பேச்சால் முடியாது. செயற்பாட்டால் தான் முடியும். கடந்த இரண்டு ஆண்டுகளில் அவர் அதைச் செய்து காட்டினார்.

எரிபொருள் வரிசைகளில் சிக்குண்டு கஷ்டப்பட்ட மக்களை மிகவும் குறுகிய காலத்திற்குள் தானம் வழங்கும் அன்னதான வரிசைகளில் புன்னகையுடன் இருக்கும் நிலைமைக்கு மாற்றினார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையையும் இன்றுள்ள நிலையையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

கடினமான தொங்கு பாலத்திலிருந்து இலங்கைத் தாயை கரை சேர்க்கும் பாரிய சவாலை அவர் பொறுப்பேற்றார். அப்பொறுப்பைசரிவரஅவர்நிறைவேற்றினார்.

இவை அனைத்தையும் அவர் தொலைநோக்குடன் திட்டமிட்டு நிறைவேற்றினார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் அவர் இதுவரை எந்தவொரு ஜனாதிபதியும் மேற்கொள்ளாத விதமாக புதிய சட்டங்களைக் கொண்டு வந்தார். புதிய சட்ட விதிகளை அங்கீகரிக்கச் செய்தார். நாட்டை சரியான பாதையில் முன்னெடுத்துச் செல்வதற்காக அவர் இதுவரை பாராளுமன்றத்தில் சுமார் நூற்றுக்கு அண்மித்த சட்டங்களை அங்கீகரிக்கச் செய்தார். ஊழலுக்கு எதிரான சட்டம், மத்திய வங்கிச் சட்டம், தேர்தல்கள் செலவு ஒழுங்குவிதிகள், மறுசீரமைப்பு பணியகம், அரச கடன் முகாமைத்துவச் சட்டம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க சட்டம், நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம், அரச கடன்கள் சட்டம், மின்சக்தி சட்டம், பெண்களை வலுவூட்டும் சட்டம், அரச நிதி முகாமைத்துவச் சட்டம், பொருளாதார பரிமாற்றச் சட்டம் போன்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் அவற்றுள் பிரதானமானவை ஆகும்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான அபேட்சகர்கள் அனைவரும் ஒவ்வொரு அரசாங்கத்திலும் அமைச்சுப் பதவிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை வகித்த நபர்கள் ஆகும். எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் பதவிகளை வகித்தவர்கள் ஆவார்கள்.

அவர்களுள் அமைச்சர் ஒருவர் என்ற ரீதியில் நாட்டுக்கு பயனுள்ள வேலைத் திட்டங்களை அவர் மேற்கொண்டார். அவர் இளைஞர் விவகார அமைச்சராக இருந்தபோது இளைஞர் விவகார அமைச்சின் பொற்காலம் ஆகும். அவர் கல்வி அமைச்சராக இருந்த போது தான் இந்த நாட்டு கல்வித்துறையில்மறுமலர்ச்சி ஏற்பட்டது. அவர் கைத்தொழில் அமைச்சராக இருந்த காலம் தான் இந்த நாடு பூராக புதிய கைத்தொழிற்சாலைகள் உருவாக்கம் பெற்றன. அவர் பிரதமர் மற்றும் பொருளாதார கொள்கைகள் அமைச்சராக இருந்த காலத்தில் தான் நாட்டின் பொருளாதாரம் மிகவும் வளர்ச்சியடைந்த காலமாக இருந்தது. வேறு எந்த ஜனாதிபதி வேட்பாளருக்குத் தான் அது போன்ற ஒரு வெற்றிவாகை சூடிய வரலாறு உள்ளது?

அவர் பல தடவைகள் பிரதமராக பதவி வகித்தார் தான். அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவருக்கு மேல் ஜனாதிபதி ஒருவர் இருந்தார். இன்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அவர் முதன் முறையாக நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்றார். சுதந்திரமாக நாட்டுக்காக பணியாற்றுவதற்கு முதன் முறையாக அவருக்கு சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றது. மிகவும் துன்பமான நிலைக்கு ஆளாகி இருந்த நாட்டை அவர் இரண்டு ஆண்டுகளுக்குள் ஒருவரும் நினைத்துப் பார்க்காத விதத்தில் கட்டியெழுப்பினார்.

**பின்வரும் இலக்குகளைப் பூர்த்தி செய்தால் மாத்திரமே எமது அப்பயணம் வெற்றியடையும்.**

| குறிகாட்டி | தற்போதைய நிலைமை | இலக்கு | காலச் சட்டகம் |
|---|---|---|---|
| ஆரம்ப வரவு செலவு மிகை | மொ.தே.உ 0.6% (2023) | மொ.தே.உ 2.3% | 2025 – 2032 |
| அரச கடன் | மொ.தே.உ 111% (2023) | மொ.தே.உ 95% | 2032 |
| மொத்த நிதித் தேவைப்பாடு | மொ.தே.உ 27.8% (2023) | மொ.தே.உ 13% | 2027 – 2032 சுமார் |
| வெளிநாட்டுக் கடன் சேவை | மொ.தே.உ 9.2% (2022) | மொ.தே.உ 4.5% | 2027 – 2032 வருடாந்த எல்லை |
| மொத்த அந்நிய செலாவணி ஒதுக்கு | 5.6 பி.அ.டொ (2024 ஜூலை) | 15.1 பி.அ.டொ | 2028 |
| பணவீக்கம் | 2.4% (2024 ஜூலை) | 5% | தொடர்ச்சியாக |
| திறைசேரி பிணைமுறி | மொ.தே.உ 7% (2023) | மொ.தே.உ 7.5% இலும் குறைவு | தொடர்ச்சியாக |

இரண்டு ஆண்டுகளுக்குள் இவ்வாறான மாபெரும் அதிசயத்தை ரணில் செய்து காட்டினார்.

ஜனாதிபதி வேட்பாளர்களுள் அவ்வாறானவர்கள் இருக்கின்றார்களா? இல்லவே இல்லை. அவ்வாறாயின் உங்களது தெரிவாக இருக்க வேண்டியவர் அவர் தானே? ஆம்! ரணில்!

### தேரவாத வர்த்தக பொருளாதாரம்

தேரவாத வர்த்தக பொருளாதாரம் என்பது உங்களுக்கு பழக்கப்பட்ட ஒரு சொல்லாக இல்லாதிருக்கக் கூடும்.

நாம் செவியுற்றும் அறிந்தும் வைத்திருப்பது, உலகின் பல்வேறு நாடுகள் அன்று தொடக்கம் பின்பற்றிய பல்வேறு பொருளாதார முறைகள் பற்றி ஆகும். அவற்றுள் ஒருசில பொருளாதார முறைகள் தோல்வியடைந்த காரணத்தால் பயன்பாட்டிலிருந்து நீங்கியவை ஆகும்.

நாம் தேரவாத வர்த்தக பொருளாதார முறையின் கீழ் பல்வேறு துறைகளை மேம்படுத்தி வருமானம் ஈட்டுகிறோம். அவை தொடர்பான தகவல்களை நாம் இங்கு குறிப்பிடுகின்றோம்.

வரலாற்றில் இலங்கையின் இராசரட்டை இராசதானி காலத்தில் இந்த நாட்டில் தேரவாத சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறைமை ஒன்று காணப்பட்டது.

அப் பொருளாதார முறைமையின் கீழ் நாம் சீனா முதற்கொண்டு பாரசீக நாடுகளுடன் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டோம். இந்து சமுத்திரத்தின் பொருளாதார

07ஆம் பக்கம் பார்க்க...

கேந்திரநிலையமாக பெயர்பெற்று விளங்கினோம். சமுத்திரப் பட்டுப்பாதையின் கேந்திர நிலையமாக பிரசித்திபெற்று விளங்கினோம்.

விசேடமாக ஒட்டுமொத்த கீழைத்தேசத்துக்கும் தானியம் விநியோகிக்கும் பொறிமுறை, வசதிகள் மற்றும் ஆற்றல் எம்மிடம் காணப்பட்டது.

அதன் காரணமாக இலங்கை கீழைத்தேயத்தின் தானியக் களஞ்சியமென பிரசித்தி பெற்று விளங்கியது.

13ஆம் நூற்றாண்டின் போதும் இராசரட்டை இராசதானி வீழ்ந்த போது தற்போதைய தாய்லாந்தின் அயோத்தியா இராசாதானி அந்த வர்த்தக கேந்திர நிலையத்தின் ஆதிக்கத்தை தனதாக்கிக் கொண்டது. இந்த இரண்டு இராசதானிகளும் 18 நூற்றாண்டுகளாக பிராந்தியத்தின் சந்தையில் ஆதிக்கம் செலுத்தியது.

அண்மைய வரலாற்றில் மீண்டும் இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகியன பொருளாதார ரீதியான பலத்தை உருவாக்குவதற்கு பாடுபட்டன.

1980 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நவீன தாய்லாந்து ஏற்றுமதி மற்றும் சுற்றுலாக் கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி பரிமாற்ற மடைந்தது. இலங்கை உள்நாட்டு உற்பத்திக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டு இறக்குமதியினை மாற்றீடாக கொண்டு விளங்கியது.

## தனி நபர் மொத்த தேசிய உற்பத்தி

| ஆண்டு | இலங்கை | தாய்லாந்து |
|---|---|---|
| 1960 | 144 அ.டொ | 104 அ.டொ |
| 2023 | 3,828 அ.டொ | 7,172 அ.டொ |

கடந்த ஆண்டுகளாக எமது பொருளாதார கொள்கைகளுக்கு முக்கிய அடித்தளமாக உள்நாட்டு உற்பத்தி காணப்படுகிறது. அன்றாட தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்கு உள்நாட்டு உற்பத்திகள் பற்றாக்குறையாக உள்ள காரணத்தால் பற்றாக்குறையானவற்றை இறக்குமதி செய்து வரவு செலவு இடைவெளியானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களின் மூலம் ஈடு செய்யப்படுகிறது.

புத்தபெருமான் சாமஞ்ஞபல சூத்திரத்தில் சுட்டிக்காட்டியதன் பிரகாரம் நுகர்வுக்காக அன்றி முதலீட்டுக்காகவே கடன் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.நாம் அப் பொருளாதார சிந்தனையைப் புறக்கணித்தோம். சுமார் 2022 ஆம் ஆண்டளவில் சுமார் 84 பில்லியன் பெருமளவு தொகை அமெரிக்க டொலர் கடன் நம்மீது சுமத்தப்பட்டிருந்தது.

அதில் பெருமளவு தொகையை நுகர்வுக்காகவே நாம் பெற்றோம். இதன் காரணமாக நாம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் உலகத்தார் முன்னிலையில் இழிநிலைக்குத் தள்ளப்பட்டோம். நாடு முற்று முழுதாக வீழ்ச்சியடைந்தது.

2022 ஆம் ஆண்டில் பொருளாதாரம் பாரதூரமாக சுருங்கும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டது. மொத்த தேசிய உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. பொருளாதாரத்தின் வெளிநாட்டுத் துறையும் வீழ்ச்சியடைந்தது.இதன் காரணமாக ரூபாவின் பெறுமதி மதிப்பிழந்தது. 2019 ஆம் ஆண்டு 183.61 ரூபாவாக காணப்பட்ட அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி 2022 ஆம் ஆண்டு 363.11 ரூபாவாக மாற்றமடைந்தது. 2019 ஆம் ஆண்டு 3.53 வீதமாக காணப்பட்ட பணவீக்கம் 2022 ஆம் ஆண்டு 70 வீதமாக உயர்வடைந்தது.

நாடு வளர்ச்சியடையும் வேகம் குறைவடைந்த போது நாடு சரிவடையும் வேகம் அதிகரித்தது. வாழ்க்கைச் செலவு மற்றும் வாழ்க்கைச் சுமையைக் குறைக்க வேண்டுமாயின் நாம் செய்ய வேண்டியது நாடு வீழ்ச்சியடையும் வேகத்துக்கு வேகத் தடைபோட்டு நாடு வளர்ச்சியடையும் வேகத்தை அதிகரித்தல் ஆகும்.

## நாம் ஆரம்பித்து விட்டோம்..

மீளவும் மீண்டெழும் கடினமான முயற்சியை ஆரம்பித்து, நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தோம். அப்போது நாடு மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டது. பேச்சுவார்த்தைகளை நடத்தும் போது எமது பலவீனமான நிலைமை எமக்கு பாரிய பிரதிகூலமாக அமைந்தது. அனைத்து கஷ்டங்களையும் பொறுத்துக் கொண்டு நாட்டை மீண்டும் வழமைநிலைக்கு கொண்டு வருவதற்கு நாம் பாடுபட்டோம். மீண்டும் ஒருமுறை மக்கள் வரிசைகளில் கஷ்டப்படும் ஒரு யுகம் உருவாகாமல் இருப்பது எமது எதிர்பார்ப்பாக காணப்பட்டது.

அந்த நோக்கத்தின் அடிப்படையில் நாம் பின்பற்றிய தேரவாத சந்தைப் பொருளாதார வழிமுறை வெற்றியளித்துள்ளது என்பதனை இன்று முழு உலகமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

## எளிதாகும் வாழ்க்கைச் சுமை

நாம் வாழ்க்கைச்சுமையை எளிதாக்குவது பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வேலைத்திட்டங்கள் மூலமே. அவ்வாறின்றி பிரசித்தி பெறுவதை எதிர்பார்த்து வெளிநாட்டுக் கடன் பெற்று உங்களுக்கு நிவாரணம் வழங்குவதன் மூலமாக அல்ல. அவ்வாறான நிவாரணங்கள் தற்காலிகமானதே.

எமது வேலைத்திட்டம் காரணமாக 2022 இல் 70 வீதமாக இருந்த பணவிக்கம் 2024 ஜூலை மாதம் 2.81வீதம் வரை வீழ்ச்சியடைந்தது. நானூறு ரூபாவை அடைவதற்கு நெருங்கியிருந்த அமெரிக்க டொலரின் பெறுமதி 300 ரூபாவை விட குறைந்த மட்டத்துக்கு தற்போது வந்தள்ளது.

2022ஆம் ஆண்டு 92 ஒக்டேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 470 ரூபாவாகும். தற்போது அதன் விலை 344 ரூபாவாகும்.

அன்று ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 460 ரூபாவாகும். இன்று அதன் விலை 317 ரூபாவாகும். மின் கட்டணங்கள் குறைந்து செல்கிறது. நீர் கட்டணங்களும் வீழ்ச்சிடைந்து செல்கிறது.

இதன் காரணமாக வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. எமது நாடு மீண்டும் வழமை நிலைக்கு வந்துள்ளது.

பொருளாதாரம் வலுவடைந்து செல்லச் செல்ல உங்களது வாழ்க்கைச் செலவை மேலும் எளிதாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இன்னும் குறுகிய காலத்தில் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் தொடர்பில் சலுகை வழங்குவதற்கும் எம்மால் முடியும்.

## வரிச் சுமைக்கு நிவாரணம்

2015ஆம் ஆண்டு முதல் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்த அரச நிதி மறுசீரமைப்புக்கள் 2019ஆம் ஆண்டு அப்போதைய அரசினால் இடைநிறுத்தப்பட்டன. நினைத்த விதத்தில் வரிகள் விலக்கப்பட்டன. அரச வருமானம் உலகின் ஆகக் குறைந்த மட்டத்துக்கு வீழ்ச்சியடைந்தது. எமது நாடு பொருளாதார ரீதியில் வீழ்வதற்கு அதுவும் ஒரு பிரதான காரணமாக அமைந்தது.

இதிலிருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்றுவதற்காகவே நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டுக்கு வந்தோம்.

16 தடவைகள் அவர்களது இணக்கப்பாட்டை மீறிய வங்குரோத்து நிலையை அடைந்த ஒரு நாடு என்ற ரீதியிலேயே நாம் இம்முறை அவர்களிடம் சென்றோம். அந்த நேரத்தில் பேரம் பேசும் அதிகாரமோ பலமோ எம்மிடம் காணப்படவில்லை. நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும் என்பதால் அவர்கள் விதிக்கின்ற அரச வருமானம் தொடர்பான நிபந்தனைகளுக்கு இணங்குவதற்கு நேரிட்டது.

அதன் காரணமாகத் தான் வரி விதிக்க நேர்ந்தது. அது நாம் விரும்பி மேற்கொண்ட ஒரு விடயம் அல்ல. ஆயினும் அச்சந்தர்ப்பத்தில் வேறு மாற்றுவழிகள் காணப்படவில்லை.

இந்த வரி காரணமாக விசேடமாக வைத்தியர்கள், பொறியியலாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர் போன்ற தொழில்சார் நிபுணத்துவம் கொண்ட நபர்கள் அதிகம் பாதிக்கப்பட்டனர்.

ஆனாலும் எமது பொருளாதாரத்தை ஒழுக்க ரீதியில் வழிநடத்தி பலமான நிலைமைக்கு கொண்டு வருவதற்கு எம்மால் தற்போது முடிந்துள்ள காரணத்தால் வரி நிபந்தனைகள் தொடர்பில் மீண்டும் கருத்திற் கொள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டை நாம் பெற்றுக் கொண்டோம்.

அதன் பிரகாரம் தற்போது நடைமுறைப் படுத்தப்படும் வரி நிலைகளுக்கு இடையிலான இடைவெளியை விரிவாக்குவதற்கும் வரி வீதங்களை திருத்துவதற்கும் யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

இது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எம்மால் துரிதமாக எடுக்க கூடியதாயிருக்கும்.

இதற்கு மேலதிகமாக தொழில்சார் நிபுணத்துவம் கொண்ட நபர்களுக்கு வரி விடுதலை சேவை ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துவதற்கும் நாம் நடவடிக்கை எடுப்போம்.

அதேபோல் இடைக்கால வரிகள் காரணமாக பலர் கஷ்டங்களுக்கு ஆளாகியுள்ள காரணத்தால் நாம் படிப்படியாக இடைக்கால வரிகளை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம்.

எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்குள் இப்பணிகளைப் பூர்த்தி செய்து வரி செலுத்தும் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாடுகளின் பிரகாரம் எதிர்வரும் ஆண்டு முதல் எமது வரி வருமானத்தை மொத்த தேசிய உற்பத்தியின் 14 வீதம் வரை அதிகரித்தல் வேண்டும்.

வரி வலையமைப்பை விரிவாக்குவதன் மூலம் மற்றும் வருமானச் சேகரிப்பை மிகவும் செயற்திறனாக் குவதன் மூலம் நாம் வரி வருமானத்தை அதிகரிப்போம்.

பொருளாதாரத்துக்கு வலு சேர்ப்பதற்காக பங்காற்றும் தொழில் முயற்சியாளர்கள் வரிச்சுமை காரணமாக தேவையற்ற நெருக்குதலுக்கு ஆளாகியுள்ளனர்.

எமது பொருளாதாரம் மிகவும் வலுவடையும் போது அவர்களின் வரிச்சுமையை எளிதாக்குவதற்குரிய பின்னணி ஏற்படும். அவர்களுக்கு சலுகை வழங்கும் செயன்முறையை நாம் 2025 இல் ஆரம்பிப்போம்.

தாய்லாந்து மற்றும் வியட்நாமை நோக்குவோம்

ஒரு மஹாயான பௌத்த நாடாக உள்ள வியட்நாம் இங்கு எமக்கு சிறந்ததொரு உதாரணம் ஆகும்.1990 ஆம் ஆண்டளவில் எமது பொருளாதாரக் கொள்கையைத் தான் வியட்நாமும் பின்பற்றியது. ஆயினும் 1995 ஆம் ஆண்டு வியட்நாம் தாய்லாந்து முறையை முன்மாதிரியாக எடுத்துக் கொண்டது. அதன் பிரதிபலனை தற்போது காணக்கூடியதாக உள்ளது.

## மொத்த தேசிய உற்பத்தி

| ஆண்டு | இலங்கை | வியட்நாம் |
|---|---|---|
| 1990 | 08 பி.அ.டொ | 6.5 பி.அ.டொ |
| 2023 | 84.4 பி.அ.டொ | 429 பி.அ.டொ |

தாய்லாந்து மற்றும் வியட்நாம் தொங்குபாலப் பயணத்தை வெற்றியடையச் செய்து கொண்டன.

எமது பயணத்தை வெற்றியடையச் செய்ய நாம் ஆரம்பித்துள்ளோம்.

## அதே போல் இனிமேல்

- அரச கொடுப்பனவுகளின் நிலுவைத் தொகைகளை மூன்று மாதங்களுக்கு மேல் நிறுத்தி வைப்பதற்கு அனுமதி இல்லை.
- வரவு செலவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக மத்திய வங்கி மூலம் நாணயத்தாள்கள் அச்சிடுவது முழுமையாக தடை செய்யப்படும்.
- மின்சாரம் மற்றும் எரிபொருள் விலைகள் அதற்காக செலவழிக்கப்படும் தொகையினை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படல் வேண்டும். மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டமடையுமாயின் உடனடியாக மற்றும் நேரடியாக திறைசேரி மூலம் அதற்காக நிதி வழங்கப்படல் வேண்டும்.
- சமூக பாதுகாப்புக்காக செலவு செய்யப்படும் தொகையை குறித்த அளவினை விடக் குறைத்தல் கூடாது.

இந்த இலக்குகள் மற்றும் வரையறைகள் நிலையானது ஆகும். அவை பற்றி மீண்டும் கலந்துரையாடுவதற்கு அல்லது மாற்றுவதற்கு இயலாது.

மேற்குறிப்பிடப்பட்ட இலக்குகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டே எமது உத்தியோகபூர்வ கடன் கொடுநர்கள் மற்றும் சீனா நிவாரணங்களை எமக்கு வழங்கியது.

அந்த இலக்குகள் மற்றும் வரையறைகளைப் பூர்த்திசெய்ய இயலாது போனால் எமக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி மட்டுமின்றி கடன்சலுகைகள் அனைத்தும் இல்லாது போகும்.

அவ்வாறு இடம்பெறுமாயின் எமக்கு தொங்குபாலத்தில் இருந்து மீண்டும் பள்ளத்தில் வீழ்வதற்கு நேரிடும்.

தேர்தல் காலங்களில் பெரும்பாலான அரசியல் கட்சிகள் இந்த உண்மையை மறைத்து பல்வேறு தேர்தல் வாக்குறுதிகளை உங்களுக்கு வழங்குவார்கள். ஆனாலும் அவை நடைமுறை சாத்தியம் அற்றவை.

அவை தங்க முட்டையிடும் கோழியின் வயிற்றை கிழித்த கதை போலத் தான். இதனால் தான் அந்த எந்தெவோரு கட்சிக்கு அல்லது அபேட்சகருக்கு சர்வதேச நாணய நிதியத்துடன் பகிரங்க கலந்துரையாடலுக்கு வர முடியவில்லை.

## சுகபோகம் நிறைந்த ஒரு நாட்டை நோக்கி..

எமது திட்டம் ஏற்றுமதியை மையமாகக் கொண்ட உற்பத்தி மற்றும் சேவையை மையப்படுத்திய பொருளாதாரத்தை வலுப்படுத்துவது ஆகும்.

பொருளாதாரத்தைப் பலப்படுத்தாது போனால், நாட்டின் வேறு எந்தவொரு துறையையும் மேம்படுத்த முடியாது. பட்டினியால் வாடும் ஒரு நாட்டுக்கு ஆன்மீக விருத்தியை அடைந்து கொள்வதற்கான எந்தவொரு வாய்ப்பும் இல்லை. பட்டினியால் வாடும் நபர் ஒருவருக்கு போதனைகள் மூலம் எந்தவொரு பயனும் கிடைக்காதென புத்த பெருமான் சுட்டிக் காட்டியுள்ளார்.

இத்திட்டத்தினூடாக முன்னோக்கிச் செல்லாவிடின் இன்னும் சில ஆண்டுகளில் நாம் பாரியதொரு பொருளாதார நெருக்கடிக்கு மீண்டும் ஆளாவோம். இதே பாதையில் முன்னொக்கிச் செல்வதன் மூலம் மாத்திரம் தான் அதனைத் தடுப்பதற்கு முடியும். சதாவும் உலகத்திடம் கடன் பெற எம்மால் முடியாது. கடன் பொருளாதாரம் ஒன்றின் மூலம் நாட்டை உயர்வான இடத்துக்கு கொண்டு செல்ல முடியாது. இப் பயணம் முன்னோக்கி நகருமாயின் நாம் 2048 இல் கடனற்ற, அபிவிருத்தியடைந்த ஒரு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

## வறுமையற்ற ஒரு சந்ததியினர்

கொவிட்19 தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக எமது நாட்டு மக்களில் 25% சதவீதத்தினர் பல்வேறு வறுமை நிலைக்கு ஆளாகியுள்ளனர். வசதிவாய்ப்புக்கள் இல்லை.

சரிவர கல்வியை பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் இல்லை. சுத்தமான நீர் இல்லை. மின்சாரம் இல்லை. தொழில்கள் இல்லை. வீடுகள் சொத்துக்கள் இல்லை. திருமணம் முடித்து குடும்பம் மற்றும் பிள்ளைகளைக் கட்டிக்காப்பதற்கு வாய்ப்புக்கள் இல்லை.

நாம் இந்த நிலைமையை மாற்றுவதற்கு முன்னுரிமை வழங்குவோம். எதிர்வரும் 05 ஆண்டு காலத்துக்குள் இவ்வாறான துன்பங்கள் மூலம் கஷ்டப்படும் ஏழ்மை நிலையில் உள்ள மக்களை 10 வீதம் வரை குறைப்பதற்கு நாம் செயற்படுவோம். அதற்கான அடித்தளத்தை வழங்கி சமூகப் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையை நாம் தயாரித்துள்ளோம்.

வறுமை நிலையிலிருந்து மக்களைக் காப்பாற்றும் வேலைத் திட்டத்தை மிகவும் முறைசார்ந்த ரீதியில் முன்னோக்கிக் கொண்டு செல்வோம். அதற்காக ‘அஸ்வெசும’மற்றும் சமுர்த்தி வேலைத் திட்டம் ஆகியன ஒன்றிணைக்கப்படும்.

கடும் வறுமை நிலை மற்றும் சமூக ரீதியில் துன்பப்படும் பல சமூகக் குழுக்கள் இனம் காணப்பட்டள்ளன. பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் நிரந்தர பங்குதாரர்களாக இந்த வறுமையான குடும்பங்கள் ஈடுபடுத்தப்படும். பிரதேச உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் அரச பணிகளில் ஊழியர்களை ஈடுபடுத்தும் போது இவ்வாறான சமூகக் குழுக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அதன் மூலம் அவர்களின் பொருளாதாரத்தை வலுவடையச்செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அவ்வாறான சமூகக் குழுக்களுள்ள பிரதேசங்களை அடையாளம் கண்டு வறுமையை ஒழிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பொருந்தும் வகையில் அப்பிரதேசங்கள் மீது விசேட கவனம் செலுத்தப்படும்.

## அழகான 2048 இற்கு.

நாம் உருவாக்கும் தேரவாத வர்த்தக பொருளாதாரத்தின் மூலம் நாட்டின் அனைத்து மக்களுக்கும் போதுமான அளவு வாழ்க்கைத் தரத்தை உறுதிசெய்வோம்.

இப் பயணப்பாதையினூடாக உயர்வான போட்டித்தன்மை, ஏற்றுமதியைமையமாகக் கொண்ட டிஜிட்டல் பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு முடியும் என்பதுடன் 2048இல் எமது அனைத்து பொருளாதார இலக்குகளையும் அடைந்துகொள்ள முடியும். இந்த அபிவிருத்தியடைந்த யுகத்தை நோக்கிப் பயணிப்பதற்குத் தேவையான பரிமாற்றத்துக்கு அடிப்படையாக அமையும் பிரதான சட்டங்களை நாம் தற்போது அங்கீகரித்து நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

மத்திய வங்கி சட்டம், அரச நிதி முகாமைத்துவ சட்டம், அரச கடன் முகாமைத்துவ சட்டம் மற்றும் பொருளாதார பரிமாற்ற சட்டம் அவற்றுள் முக்கியமானவை ஆகும்.

## இதன் மூலம்,

I .புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படுவதுடன் அதன் மூலம் தொழிற் சந்தை விரிவுபடுத்தப்படும். வருமானம் உழைக்கும் புதிய சந்தர்ப்பங்கள் உருவாக்கம் பெறும்.

II. வருமான உழைப்பு உயர்வடையும்.

பொருளாதாரத்தின் கூடுதலான சுமையினை தனியார் துறை மீது சுமத்துவதன் மூலமாகவே உலகின் பல நாடுகள் வளர்ச்சியடைந்துள்ளன. நாம் உருவாக்கும் தேரவாத சந்தைப் பொருளாதாரத்தை அதனை விடவும் பரந்தளவில் தாபிப்பதற்கு நாம் திட்டமிடுவோம்.

பலம் பொருந்திய தனியார் துறையுடன் தோளோடு தோள் நின்று போட்டியிட முடியுமான இரண்டு துறைகளும் எமது பொருளாதாரத்துடன் ஒன்று சேர்க்கப்படும்.

I அரச துறை

ஒட்டுமொத்த பொருளாதார முறைமையினையும் முழுமையாக ஒழுங்குபடுத்தும் அதிகாரம் அரசுக்கு உரியதாகும். அரசுக்குச் சொந்தமான வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் தொழில்முயற்சிகள் மூலம் இந்த நிதி ரீதியான வழிநடாத்தல் போட்டித் தன்மையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

II. மக்கள் துறை

மக்கள் துறை எனும் புதிய எண்ணக்கருவுக்காக அரசியலமைப்பின் 27(2)(ஊ) ஆம் உறுப்புரை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

“உற்பத்தியின், விநியோகத்தரின் மற்றும் பரிமாற்றம் செய்யும் மார்க்கங்கள் அரச, அரச நிறுவனங்கள் அல்லது வரப்பிரசாதம் கிடைக்கப்பெற்ற ஒரு சிலரின் கையில் அல்லது குவிக்கப்படாது மற்றும் மையப்படுத்தப்படாது இலங்கையின் அனைத்து மக்கள் மத்தியில் விரிந்து செல்லும் ஒரு தார்மீக சமூக முறையைத் தாபித்தல்”

மக்கள் துறை பொருளாதாரத்தின் பலம் மிக்க ஒரு பங்கை வகிப்பதற்காக நாம்

- அனைத்து பிரஜைகளுக்கும் காணி அல்லது வீடு ஒன்றின் உரிமையை வழங்குவதற்குரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவோம்.
- தேசிய சொத்து (National Wealth Fund) வளத்தைத் தாபிப்போம்.
- கூட்டுறவுத் தொழில்முயற்சியை பூரண மறுசீரமைப்புக்கு உட்படுத்துவோம்.

## சொத்துக்களின் உரிமை

பிரசைகளுக்கு உரிமையை வழங்கும் வேலைத்திட்டத்தை முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்துவதற்காக புறம்பான அதிகார சபை ஒன்று உருவாக்கப்படும்.

இதனூடாக ‘உருமய’ நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 02 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு காணி உரித்துக்களை வழங்குதல் மற்றும் கொழும்பு நகரத்தின் அரசாங்கத்துக்குச் சொந்தமான குறைந்த வருமானம் பெறும் நபர்களின் வீட்டு உரிமையை அவ்வீட்டின் உரிமையாளர்களிடமே ஒப்படைத்தலை 04 ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்வோம்.

மத்திய தர வகுப்பினருக்கு வீடு கட்டுவதற்காக சலுகைக் கடன் வழங்கப்படும். வருமானம் குறைந்தவர்களுக்கு தொடர் மாடி வீடுகளை உரித்தாக்குவதற்கான வசதிகள் வழங்கப்படும்.

பெருந்தோட்டதொழிலாளர்களுக்காக புதிய கிராமங்கள் உருவாக்கப்படுவதுடன் லயன் விடுகளில் குடியிருக்கும் நபர்களுக்கு காணி ஒன்றுக்கான உரித்து வழங்கப்படும்.

எதிர்வரும் இரண்டு ஆண்டுகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டின் கீழ் பல புதிய வீட்டுத்திட்ட முன்மொழிவுகள் அரச துறையின் தலையீட்டுடன் நிர்மாணிக்கப்படுவதுடன் நாட்டின் அனைத்து நகரங்களும் உள்ளடங்கும் வகையில் பல மாடிகளைக் கொண்ட வீடுகளை நிர்மாணிப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள்.

இதன் காரணமாக தற்போது வீழ்ச்சியடைந்துள்ள நிர்மாணத்துறைக்கு கைத்தொழிலை சுமார் இரண்டு வருட காலத்திற்குள் மீண்டும் பலப்படுத்துவதற்கு வழி பிறக்கும்.

## நிதி உரிமை

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபை அங்கத்தவர்களுக்கு தற்போதுள்ளதை விடவும் பலமான தொழிற்சங்க பிரதிநிதித்துவம் வழங்கப்படும். வர்த்தக சம்மேளனத்தின் பிரதிநிதிகளும் அதில் இணைக்கப்படுவர். அதன் மூலம் மிகவும் சிறந்த நிதி நிர்வாகம் உறுதி செய்யப்படும்.

தற்போது அரச தேவைகளுக்காகவே இந்த நிதியம் ஈடுபடுத்தப்படுகிறது. அரசுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் திறைசேரி பிணை முறிகளுக்காக இந்த நிதியம் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

நாம் அந்த நிலைமையை மாற்றியமைப்போம். பொருளாதாரம் பலமடையும் போது, அரச பணிகளுக்காக இந்த நிதியம் பயன்படுத்தப்படுவது ஆகக் குறைந்த மட்டத்துக்கு கொண்டுவரப்படும்.

அதன் மூலம் இந்த நித்தியத்தை கூடுதலான வருமானம் பெற முடியுமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பாதுகாப்பான நிதி நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்படும். 2030 ஆம் ஆண்டளவில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியன எமது நாட்டின் மிகப்பெரிய முதலீட்டு நிதியமாக மாற்றமடையும். இதன் மூலம் நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு கூடுதலான பிரதிபலன்களை அடைந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும்.

- தேசிய சொத்து வளம் ((National Wealth Fund)

வரவு செலவு மிகை மற்றும் அரச நிறுவனங்களின் இலாபங்களை ஒன்று சேர்த்து தேசிய சொத்து வளம் தாபிக்கப்படும். உள்நாட்டு மற்றும் சர்வதேச பங்குச் சந்தைகளில் இந்த நிதி முதலீடு செய்யப்படும்.

- கூட்டுறவு

சர்வதேச தரங்களின் பிரகாரம் மற்றும் போட்டித் தன்மை வாய்ந்த சவால்களுக்கு முகம் கொடுக்க கூடியவாறு கூட்டுறவுத் தொழில்முயற்சி முழுமையான மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்படும். கூட்டுறவு முகாமைத்துவத்துக்கு அரசியல் மற்றும் அரச தலையீடுகள் மேற்கொள்ள முடியாதவாறு புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்.ஸ்கெண்டிநேவிய நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் கூட்டுறவு மாதிரியை ஒத்த புதிய கூட்டுறவு சட்டவிதிக் கோவை ஒன்றை அங்கீகரித்து கூட்டுறவு தொழில்முயற்சி தற்போதைய போட்டித் தன்மைக்கு முகம் கொடுக்க முடியுமான பலமான நிலைக்கு தரமுயர்த்தப்படும்.

# 130 அழகுக்கலை நிபுணர்கள் ஒன்றிணைந்து சோழன் உலக சாதனை

கொழும்பில் இயங்கி வரும் அஸ்மா பிரைடல் அகடமி பிரைவேட் லிமிடெட் சார்பாக இந்த சோழன் உலக சாதனை படைக்கும் நிகழ்வானது கொழும்பு கிங்ஸ் ஹாலில் நடைபெற்றது.

இதில் இலங்கையின் பல மாவட்டங்களைச் சேர்ந்த 60 அழகுக்கலை நிபுணர்கள் நேரடியாகப் பங்கு கொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்திய அதேவேளை, இந்தியா, மலேசியா போன்ற நாடுகளைச் சேர்ந்த மேலும் 70 அழகுக்கலை நிபுணர்கள் இயங்கலையூடாக பங்கு கொண்டார்கள்.

இந்த சோழன் உலக சாதனை படைக்கும் முயற்சியின் போது மணப் பெண் முக அலங்காரம், ஐ மேக் அப், ஆரி வேர்க், கேக் தயாரிப்பு, கோஸ் மெடிக் அப்ளிகேஷன்ஸ், மெகந்தி ஆர்ட், ஆர்ட் க்ராப்ட், எம்பிரைடிங், ஃபேஷன் டிசைனிங் மற்றும் கைவினைப் பொருட் தயாரிப்பு போன்றவற்றை 20 நிமிடங்களில் செய்து முடித்து சோழன் உலக சாதனை படைத்தனர்.

சோழன் உலக சாதனை படைத்த அழகுக்கலை நிபுணர்கள் அனைவருக்கும் சிறப்பு விருந்தினராக பங்கு கொண்டவர்கள் சட்டகம் செய்யப்பட்ட சான்றிதழ், பதக்கம், பேட்ச் மற்றும் நினைவுக் கேடயம் போன்றவற்றை வழங்கிப் பாராட்டினார்.





# பொரளை சீவலி பழைய மாணவர்களின் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

## செப்: 08 ரயில்வே மைதானத்தில் ஏற்பாடு




பொரளை சீவலி மத்திய மகா வித்தியாலயத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தப்படும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் செப்டெம்பர் (08) நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கொழும்பு, பேஸ்லைன் வீதியிலுள்ள ரயில்வே மைதானத்தில் பகல் முழுவதும் நடைபெறவுள்ளது.

இந்த கிரிக்கெட் போட்டி நான்காவது முறையாக நடத்தப்படுகிறது. கல்லூரியின் பழைய மாணவர்களை ஒருங்கிணைத்து பாடசாலையின் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு, நடத்தப்படும் இப்போட்டியில் சுமார் 20 அணிகள் விளையாடவுள்ளன.

# நல்லூரில் இராஜயோக தியான கண்காட்சி



யாழ்ப்பாணம், நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழாவையிட்டு ஆரோக்கிய வாழ்வுக்கான இராஜயோக தியான பட விளக்க கண்காட்சி நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறுகிறது.

பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையங்களின் ஏற்பாட்டில் நடைபெறும் இக்காண்காட்சியை பார்வையிடுவதற்கான அனுமதி இலவசமெனவும், ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இக்கண்காட்சி தொடர்ந்து இன்று ஞாயிற்றுக்கிழமை மற்றும் திங்கட்கிழமைகளில் காலை 6.30 மணியிலிருந்து இரவு 9.00 மணிவரை நடைபெறுவதுடன், நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணியிலிருந்து இரவு 9.00 மணிவரை இல. 258 கோயில் வீதி (HNB ATM அருகில்), நல்லூரில் நடைபெறவுள்ளது.

இதன் போது ஆரோக்கிய வாழ்வுக்கான இராஜயோக தியான பட விளக்க கண்காட்சி நடைபெறுகிறது. மதுபானம், புகைத்தல், போதைவஸ்து போன்ற அடிமைப்படுத்தும் தீய பழக்கங்களிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகள் மற்றும் தியான அனுபவம் பெறுதல் தொடர்பாக விளக்கமளிக்கப்படவுள்ளன. அத்துடன் மனக்குறை போக்கும் யாக குண்டம்: 'ஒன்றை கொடுத்து ஒன்றை பெறுதல்', அதிர்ஷ்ட சக்கரம், ஆன்மிக புத்தக விற்பனை ஆகியனவும் நடைபெறவுள்ளன.

# ரணில் தோற்றால் முழு நாடும் தோற்கும்

## பொருளாதாரம் படு வீழ்ச்சி காணும்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்தை மாற்றினால் முழு நாடும் மீண்டும் வீழ்ச்சி அடையுமென ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஆகையால் ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பில் 15 இலட்சத்துக்கும் அதிகளவான அரசாங்க ஊழியர்கள் சரியான தீர்மானத்தை எடுப்பார்களெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதி தேர்தல் முடிவுற்று

# 66 நாட்களின் பின்னர் பாராளுமன்ற தேர்தல்



ஜனாதிபதி தேர்தல் முடிந்து 66 நாட்களுக்கு பின்னர் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்புகள் அதிகமென தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டவர் தனக்கு பொருத்தமான எம்.பி.க்கள் இல்லையென நினைத்தால், பாராளுமன்றம் கலைக்கப்படுமென எதிர்பார்க்க முடியும். அவ்வாறானால் ஐந்து முதல் ஏழு வாரங்களுக்குள் வேட்புமனுக்கள் கோரப்பட வேண்டும்.

இதன்படி 66 நாட்களுக்குள் பொதுத் தேர்தலை நடத்த எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் டீ. ஆப்தீனின் நினைவுகள்







இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் தனித்துவமான இசைப் பாரம்பரிய வளர்ச்சிக்கு துணைச் சேர்த்த இசைத்துறை சார்ந்தோர் வரிசையில் காலஞ்சென்ற கவித்தென்றல் டீ. ஆப்தீனும் ஒருவர். எதிர்வரும் 03 ஆம் திகதி (03,09.2024) செவ்வாய் இரவு 08.15 மணியளவில் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாக இருக்கும் "பாரம்பரியம் நிகழ்ச்சித்" தொடரில் இவரது நினைவுகள், பேசப்பட இருக்கின்றன. பாடலாசிரியர் டீ. அப்தீன் அதிகமான இஸ்லாமிய கீதங்கள் எழுதியுள்ளார். பிரபல பாடகர்களான டொனி ஹசன், அக்குறணை அஸீஸ், இசைக்கோ நூர்தீன், சுஜாதா அத்தநாயக்க, ராஸிக் ஸனூன், நூர்ஜஹான் மர்சூக், மொஹிதீன் பெய்க், ஏ.எம். எம்.மொஹிதீன் போன்ற அதிகமானோர் இவர் எழுதிய இஸ்லாமிய கீதங்களை முஸ்லிம் சேவையில் பாடியுள்ளார்கள். அத்தோடு, இதே நிகழ்ச்சியில் முஸ்லிம் சேவைக்கு இசைத்துறைக்கு பங்களிப்புகள் வழங்கிய இன்னும் பல கலைஞர்களும் நினைவு கூரப்படுகிறார்கள். அதிதிகளாக பாடலாசிரியர் டீ.ஆப்தீனின் புதல்வர் முஹம்மத் இம்ரான் ஆப்தீன், பாடகர் கலாபூஷணம் எம். சீ. முஹம்மத் அலி ஆகியோர் பங்கேற்கிறார்கள். நிகழ்ச்சியினை எம். எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் பாத்திமா ரினூஷியா தயாரித்தளிக்கிறார்.

## திலித் ஜயவீரவின்...

பட்டுள்ளது. கொழும்பு ஸ்ரீஜயவர்தனபுர கோட்டை மொனாக் இம்பீரியல் வளாகத்தில் இதற்கான வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது.

'தேசிய மூலோபாய செயற்றிட்டம்' என்ற பெயரில் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த தேர்தல் விஞ்ஞாபனம் மக்களின் ஆலோசனைகளோடு மக்களின் திருத்தத்துக்கு ஏற்ப வெளியிடப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் சர்வஜன பலய மூலோபாய திட்டத்தின் இரண்டாவது வரைவு கடந்த 21ஆம் திகதி இலங்கை வர்த்தக சம்மேளன பிரதிநிதிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

## நல்லூர் கந்தன் தேர் இன்று...

கடந்த ஒகஸ்ட் 9ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய மஹோற்சவ திருவிழா, நாளை தீர்தோற்சவம் மற்றும் துவஜாவரோண உற்சவத்துடன் நிறைவு பெறும்.

நல்லூரில் கொடியேற்றம் முதல் தீர்த்த திருவிழாவரை நடைபெறும் விழாக்களுக்கான தத்துவங்கள் பண்டைய நூல்களில் இடம்பிடித்துள்ளன.

எல்லாவற்றுக்கும் மேலாக நல்லூரில் அமர்ந்து அருளாட்சி புரிகின்ற ஸ்ரீசண்முக பெருமான், பழனி சந்நிதானத்தில் இருக்கின்ற தண்டாயுதபாணி, வள்ளி, தேவசேனா சமேத முத்துக்குமாரசாமி, மூலவராக அமர்ந்து அருளுகின்ற வேலவர், காவல் கடவுளான வைரவப்பெருமான் மற்றும் நல்லூர் தேரடி என்பன மாண்பும் மகிமையும் மிக்கவையாகும்.

## தமிழக அமைச்சரினால்...

பல்வேறுபட்ட செய்திகளை 'தினகரன்' நாளிதழ் மற்றும் 'தினகரன் வாரமஞ்சரி' வார இதழில் வெளியிட்டு, உலக அரங்கில் அந்த மாநாட்டை சிறப்பாக நடத்துவதற்கு பணியாற்றியமைக்காகவே இப்பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் தினகரன் பத்திரிகையில் கடமை புரியும் திருமதி ஆர். வயலட் மற்றும் இலங்கை முன்னணி தமிழ் நூல்களின் பதிப்பாசிரியர் எச். எச்.விக்கிரமசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவர்கள் அமைச்சர் சேகர் பாபுவை சந்தித்த போது அவர் தினகரன் பத்திரிகையை வாசித்து தனது வாழ்த்து மற்றும் பாராட்டை நேரடியாக தெரிவித்துள்ளார்.

# சிவஸ்ரீ சாம்பசிவ மணிக் குருக்களின் தலைமையில் சென்னை, கே கே. நகர் ஆலய கும்பாபிஷேகம்

தமிழ்நாடு, சென்னை, விருகம்பாக்கம் கே கே. நகரில் அமைந்திருக்கும் புராதன ஸ்ரீ மாரியம்மன் திருக்கோயிலின் கும்பாபிஷேகம் எதிர்வரும் 2024.11.27ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தின் கும்பாஷேகத்தினை ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவ ஸ்ரீ சாம்பசிவ மணிக் குருக்கள் நடத்தி வைப்பார்.

இந்த கும்பாபிஷேக கிரியைகள் எதிர்வரும் 2024.09.05 ஆம் திகதி மாலை ஆரம்பமாகும்.

பொதுவாக இவ்வாறான கும்பாபிஷேக கிரியைகளை நடத்த இலங்கையிலுள்ள ஆலய தர்மகர்த்தாக்கள், இந்தியாவில் இருந்து தான் இலங்கைக்கு சிவாச்சாரியார்களை அழைத்து வருவார்கள்.

இந்த கும்பாபிஷேக கிரியைகளை நடத்த இவர் இலங்கையில் இருந்து சிவாச்சாரியர்களை அழைத்து வர திடடமிட்டுள்ளார். இவர் இலங்கையில் இருக்கும்போது கொழும்பு 13, விவேகானந்தா மேட்டில் உள்ள ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தை சிறப்பாக நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## 'ஜனசவிய' திட்டத்தை...

திட்டம் முன்னெடுக்கப்படும் என எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.பெண் தலைமைத்துவ குடும்பங்கள் முழுமையாக வறுமைக்குள் சிக்கி இருப்பதால் அவர்களை வறுமையிலிருந்து மீட்டெடுக்கும் திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. சகலரையும் உள்ளடக்கிய புதிய வறுமை ஒழிப்புத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 2024 ஜனாதிபதி தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் 20ஆவது மக்கள் வெற்றி பேரணி எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் (27) ஆலையடிவேம்பு பிரதேசத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக இரண்டு வருடங்களுக்கு மாதாந்தம் 20,000 ரூபாபடி நிதி உதவி வழங்கி, அதன் மூலம் முதலீடு, நுகர்வு, சேமிப்பு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஆகிய துறைகளுக்குள் பிரவேசிக்க செய்து 24 மாதங்களில் வறுமையை ஒழிப்பதற்கு ஆவண செய்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த அரசியல் தலைவர்கள், அப்பகுதியை சேர்ந்த ஏராளமான மக்கள் என பெரும் திரளானோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்

## எங்கள் கருத்து...

# மக்கள் மத்தியில் நிலவும் சந்தேகம்!

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் 20 தினங்களே உள்ளன. தேர்தல் களம் பரபரப்பாகியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொருளாதார வீழ்ச்சியில் இருந்து இலங்கைத் தேசம் மீண்டெழுந்ததையடுத்து நடைபெறவிருக்கின்ற தேர்தல் இதுவென்பதால், இத்தேர்தலானது சர்வதேசத்தின் கவனத்தை பெருமளவில் ஈர்த்திருக்கின்றது. ஏனெனில் பொருளாதார மீட்சியை கவனத்தில் கொண்டே வாக்காளர்கள் இத்தேர்தலில் வாக்களிக்கப் போகின்றனர்.

தற்போதைய தேர்தல் பிரசாரங்களில் இருவிதமான விடயங்களை கவனத்தில் கொள்ள முடிகின்றது. அதாவது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பிரசார உரைகளில், நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்காக கடந்த இரு வருடங்களில் தாம் மேற்கொண்ட நடவடிக்கைகளை விபரித்துக் கூறுகின்றார். தமது திட்டங்கள் சரியாக இருந்ததனாலேயே பொருளாதாரம் துரித கதியில் மீளக்கட்டியெழுப்பப்பட்டதாக ஜனாதிபதி கூறுகின்றார்.

தமது திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்படுமானால், இலங்கைத் தேசம் பொருளாதார வளர்ச்சியின் உச்சத்துக்குச் சென்றுவிடுமென்பதை புள்ளிவிபரங்களுடன் அவர் எடுத்துரைக்கின்றார். அத்திட்டங்களை பூரணமாக நிறைவேற்றுவதற்கு காலஅவகாசம் தேவை என்பதை ஜனாதிபதி சுட்டிக்காட்டுகின்றார்.

ஜனாதிபதியின் பிரசாரங்கள் இவ்வாறிருக்கையில், எதிரணியினரின் அறிவிப்புகள் வேறுவிதமான இருக்கின்றன. தற்போதைய அரசாங்கம் கடைப்பிடிக்கின்ற அத்தனை திட்டங்களையும் மாற்றியமைக்கப் போவதாக எதிரணி வேட்பாளர்கள் தமது பிரசாரங்களில் கூறிவருகின்றனர். அதாவது சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்படிக்கைகளையும் தாங்கள் மீளாய்வு செய்யப் போவதாக அவர்கள் கூறுகின்றனர்.

எதிரணி வேட்பாளர்களின் வாக்குறுதிகள் சாத்தியமாகுமா என்பதில் மக்கள் மத்தியில் தவிர்க்க முடியாதபடி பரவலான சந்தேகங்கள் நிலவுகின்றன. சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் மாற்றியமைக்கப்படக் கூடியதா என்பது முதலில் தோன்றும் வினா!

அதேவேளை பொருளாதார வீழ்ச்சியில் இருந்து இன்னுமே முழுமையாக மீண்டெழாத நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியின்றி இலங்கை முன்னோக்கிப் பயணம் செய்வது எவ்வாறு?

பொருளாதார வீழ்ச்சியுற்ற நாடொன்றில் தலைமைத்துவ முன்னனுபவம் இல்லாத கட்சித் தலைவர்களால் எவ்வாறு நாட்டை வழிநடத்த முடியும்?

ஆட்சி நடத்துவதை முதலில் கற்றுக் கொள்வதற்கும், அதன் பின்னர் ஆட்சி நடத்துவதற்குமான நிலைமையிலா எமது தேசம் இன்று உள்ளது?

இவையெல்லாம் மக்கள் மத்தியில் தற்போது தோன்றுகின்ற வினாக்கள் ஆகும்.

தேர்தல் பிரசாரங்களில் வாக்குறுதிகளை முன்வைப்பதில் தவறில்லை. ஆனால் அவ்வாக்குறுதிகளை நிறைவேற்றும் வழிமுறைகளையும் மக்களுக்கு விளக்குவதே உசிதமாகும். இல்லையேல் வாக்குறுதிகள் தொடர்பான சந்தேகம் மக்கள் மத்தியில் தோன்றுவது தவிர்க்க முடியாதது.

## அனுமதி கோரினால்...

கல்வி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளதாக சர்வதேச இந்துமத பீடத்தின் செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார். நல்லூர் தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு ஏற்கெனவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமும் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸிடமும் சர்வதேச இந்துமத பீடம் கோரிக்கை விடுத்திருந்தது. தேர் திருவிழா நடைபெறும் இன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினமாகும். 25 நாட்கள் விரதம் அனுஷ்டித்து விரதத்தை பூர்த்தி செய்பவர்களுக்காக நாளை திங்கட்கிழமை பாடசாலைகளுக்கும் இந்துமதத்தை சேர்ந்த அரசாங்க ஊழியர்களுக்கும் விடுமுறை வழங்க வேண்டும் என்று சர்வதேச இந்துமத பீடம் கோரியிருந்தது.

இந்த விடயம் தொடர்பாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சனுடனும் பாபு சர்மா தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு கலந்துரையாடினார்.

இதற்கு பதில் வழங்கிய வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், நல்லூர் தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு யாழ். பாடசாலைகள் விடுமுறைக்கான அனுமதி கோரினால் விடுமுறை வழங்குவதாக குறிப்பிட்டுள்ளார். இந்த விடுமுறை வழமையாக வழங்குவதாகவும் வழமை போன்று அனுமதி கோரினால் விடுமுறை வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளதாக பாபு சர்மா மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சருக்கும் ஆளுநருக்கும் பாபு சர்மா நன்றி தெரிவித்துள்ளார்.

## நாட்டையும் மக்களையும்...

மிகவும் ஆபத்தானது. எனவே நாட்டையும் மக்களையும் பேரிடரிலிருந்து காப்பாற்றவே நான் முயற்சிக்கிறேன்" என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

தலைவர்களை பயிற்றுவிப்பதற்கான தருணம் இது அல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள நேற்று விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

"ஜனாதிபதி தேர்தலில் நடக்கவிருக்கும் சில அசம்பாவிதங்கள் தொடர்பாக நான் அண்மையில் நாட்டுக்கு வெளிப்படுத்தினாலும் சில நாட்களாக ஊடகங்களில் வேறொரு விடயத்தை பிரசாரம் செய்து வருகின்றனர். நான் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்படப் போவதாக அந்த செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. எந்த வகையிலும் எவருக்கேனும் பதவிகள் கிடைக்குமென பேசக்கூடிய ஒரு காலகட்டமல்ல.

இன்னும் மூன்று வாரங்களில் நாட்டில் நடக்கவிருக்கும் தீர்மானமிக்க சம்பவத்துடன் தொடர்புடைய முழு நாடும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற சம்பவத்தையே அன்று நான் வெளிப்படுத்தினேன். அது வெறுமனே பதவியையோ அல்லது சிறப்புரிமைகளையோ கொண்ட ஒரு சாதாரண விடயமல்ல.

இதற்கு முன்னர் நான் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவிகள் உட்பட பல்வேறு பதவிகளை ஏற்று நடத்தியுள்ளேன். அவ்வாறான ஒரு நிலையில் எனக்கு இப்போது தேவைப்படுவது பதவியோ அல்லது சிறப்புரிமைகளோ அல்ல. நடக்கவிருக்கும் தேர்தலுடன் ஏற்படப்போகும் தீர்மானம்மிக்க எதிர்கால ஆபத்தை நாட்டுக்கும் மக்களுக்கும் தெளிவுபடுத்துவதே எனது நோக்கம்.

இது பெரும்பாலானோருக்கு தெரியும். ஆனாலும் தனிப்பட்ட சுய இலாபத்துக்காக தெரியாதது போன்று இருப்பதே மிகவும் ஆபத்தானது. நாட்டுக்கும் மக்களுக்கும் இது தொடர்பான கவனத்தை ஈர்க்கும் நோக்கத்துடனேயே நான் இந்த அறிக்கையை வெளியிடுகிறேன்.

கோட்டாபய ராஜபக்ஷவினால் ஒருமுறை அரங்கேற்றப்பட்ட அந்த ஆபத்தான அனுபவத்தை மீண்டும் ஒருமுறை வேறொரு ரூபத்தில் சந்திக்கப் போகிறோமா? என்பதையே நான் கூற முயற்சிக்கின்றேன்.

கோட்டாபய ராஜபக்ஷவின் இரண்டாவது கட்டம் மீண்டும் உருவாகிக் கொண்டிருக்கின்றதென்பதை உணர்ந்தே அன்று இந்த தகவலை வெளியிட்டேன். இந்த ஆபத்தின் பாரதூரத்தை உணர்ந்தே எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் இராஜினாமாச் செய்தேன். அவ்வாறான அவல நிலைக்கு நாட்டு மக்களால் மீண்டும் முகங்கொடுக்க முடியுமா?

சஜித் பிரேமதாசவுடன் எனக்கு தன்னிப்பட்ட எந்தவொரு பிரச்சினையும் இல்லை. ஆனால் அவரது அரசியல் நோக்கு மற்றும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அவரது உத்திகளை நான் மிகவும் ஆழமாக ஆராய்ந்ததில் உணர்ந்து கொண்டவை மிகவும் ஆபத்தானவை. அவற்றை நான் உடனடியாக மக்களுக்கு கூற வேண்டும். எவ்வாறாயினும் மீண்டும் ஒருமுறை எவரது ரூபத்திலேனும் அவ்வாறானதொரு ஆபத்தான நிலைமைக்கு நாட்டை இட்டு செல்வதை தடுப்பதே எனது நோக்கம். மக்களையும் நாட்டையும் அவ்வாறானதொரு ஆபத்திலிருந்து பாதுகாக்க வேண்டும்.

எனவே இந்த ஜனாதிபதி தேர்தலில் மக்களாகிய நீங்கள் வெறுமனே பிரசார பேரணிகளுக்குள் சிக்க தேவையில்லை. மக்களாகிய நீங்கள் தெரிவு செய்யும் வேட்பாளருக்கு நாட்டை நிர்வகிக்க முடியுமா? என்பதை ஒருமுறையல்ல, நூறாயிரம் முறை நன்றாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இது தலைவர்களை பயிற்றுவிப்பதற்கான நேரமல்ல. நாட்டின் தலைமை பதவிக்காக பரீட்சித்து பார்க்கும் நேரமும் அல்ல. இதனை நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். மக்கள் மற்றுமொரு கோட்டாவுக்கு மீண்டும் பலியாக வேண்டிய அவசியம் இல்லை. இன்று பெரும்பாலான அரசியல்வாதிகள் தத்தமது தனிப்பட்ட நிகழ்ச்சிநிரலில் செயற்படுவதால் அவர்களுக்கு இதுவொரு பொருட்டாக தென்படுவதுமில்லை. அவர்களுக்கு நாட்டை பற்றியோ மக்களை பற்றியோ எவ்வித கவலையும் இல்லை. அதற்கான சாட்சியங்கள் ஏராளம் இருக்கின்றன.

எனவே எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வெறுமனே கூட்டணிகளை அமைத்துக் கொண்டு பிரசாரம் செய்து, நாட்டையும் மக்களையும் ஏமாற்றும் எவரிடமும் சிக்காமல் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாக நிலையான ஒரு ஸ்திரமான நிலைக்கு நாட்டை மேம்படுத்தக்கூடிய ஒரு தலைவரை தெரிவு செய்யுமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன்" எனத் தெரிவித்துள்ளார்.

## ஒற்றையாட்சிக்கு எதிரான...

சிறந்த தீர்மானத்தை எடுத்தால் வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். நாட்டின் ஒற்றையாட்சிக்கு எதிரான கொள்கையை வகுக்க மாட்டோம்" என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பியகமவில் நேற்று முன்தினம் (30) நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"தேசிய தொழிற்றுறையை மேம்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்துவோம். தேசிய உற்பத்தியாளர்கள், முயற்சியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கி தேசிய உற்பத்திகளை மேம்படுத்துவோம். விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவோம்.

தொழில் இன்மை பிரச்சினை தற்போது தீவிரமடைந்துள்ளது. எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் 10 இலட்சம் தொழில் வாய்ப்புகளை அறிமுகப்படுத்துவோம். அதற்கான திட்டங்களை எதிர்வரும் 22ஆம் திகதி முதல் ஆரம்பிப்போம். தேசிய மட்டத்தில் கைத்தொழில் பேட்டைகளை ஸ்தாபிப்போம்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பாக பொய் உரைக்க வேண்டிய தேவை கிடையாது. முடிந்ததை முடியும் என்போம், முடியாததை முடியாது என்போம். வடக்கிலுள்ள பிரச்சினைகளே தெற்கிலும் உள்ளன. நாடு என்ற ரீதியில் சிந்தித்து சிறந்த தீர்மானத்தை எடுத்தால் வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம். அப்போது அரசியல்வாதிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காமல் போகும்.

பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் ஒருமித்த தன்மையில் உள்ளன. அதிகாரப்பகிர்வு, தேசிய வளங்களை தனியார் மயப்படுத்தல், இறக்குமதி பொருளாதாரம் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டுள்ளது. நாட்டின் ஒற்றையாட்சிக்கு எதிரான கொள்கையை நாங்கள் வகுக்க போவதில்லை" என்றார்.

## கோணேசர் ஆலய...

அபிவிருத்தி செய்யப்படுமென குறிப்பிட்ட அவர் திருக்கோணமலை துறைமுகத்தை பாரிய அபிவிருத்திக்குள்ளா க்குவதுடன் கைத்தொழில் துறை வலயம் சுற்றுலா வலயம் உட்பட பல்வேறு பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் இந்த மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் திருகோணமலை மாவட்டத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் தொடர்ந்தும் தம்முடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக குறிப்பிட்ட ஜனாதிபதி "அவருக்கு வழங்கிய வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றுவேன்" என்றும் தெரிவித்தார்.

'இயலும் ஸ்ரீலங்கா' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் நேற்று திருகோணமலை நகரில் நடைபெற்றது. இதன் போது பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி திருகோணமலை சிவில் பாதுகாப்பு படையினரின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும் என்றும் தெரிவித்தார்.

நாட்டின் மிக முக்கியமான துறைமுகமான திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு எந்த அரசாங்கமும் முன்வரவில்லை என்பதை சுட்டிக்காட்டிய அவர் திருகோணமலை துறைமுகம் இந்தியாவின் ஒத்துழைப்புடன் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

# நலம் தரும் நல்லையூரான்

தேர்த்திருவிழா சிறப்பிதழ் – 01.09.2024



## நல்லூர்பதி வாழும் அழகன் முருகன்

இலங்கையில் மிகவும் பிரசித்தி பெற்ற இந்துக் கோயில்களுள் நல்லூர் கந்தசுவாமி கோயில் முக்கியமானது. இது இலங்கையின் வட பகுதியிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில், யாழ்ப்பாண நகரத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவிலுள்ள, 12 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை இருந்த யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரமான, நல்லூர் என்னுமிடத்திலுள்ளது.

இதன் தோற்றம் பற்றிச் சரியான தெளிவு இல்லையெனினும், யாழ்ப்பாண அரசு காலத்தில் மிகவும் முக்கியமான ஒரு கோயிலாக இருந்தது என்பதில் ஐயமில்லை.

யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் வம்சத்தின் முதலாவது அரசனான கூழங்கைச் சக்கரவர்த்தியின் அமைச்சனொருவனான புவனேகபாகு என்பவனால் இக் கோயில் கட்டுவிக்கப்பட்டதென யாழ்ப்பாண வைபவ மாலை கூறுகிறது. இதற்கு ஆதாரமான பின்வரும் தனிப்பாடல், 16 அல்லது 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் கைலாய மாலை என்னும் நூலின் இறுதியில் காணப்படுகின்றது.

"இலக்கிய சகாத்தமெண்ணூற்றெழுபதாமாண்டதெல்லையலர்பொலி மாலை மார்பனாம் புவனேகபாகு நலமிகுந்திடு யாழ்ப்பாண நகரிகட்டுவித்து நல்லைக் குலவிய கந்தவேட்குக் கோயிலும் புரிவித்தானே" ஆனால் இது 15 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிப் 17 ஆண்டுகள் ஆண்ட கோட்டே சிங்கள அரசின் பிரதிநிதியான, பிற்காலத்தில் ஸ்ரீசங்கபோதி புவனேகவாகு எனப்பெயர் கொண்டு கோட்டே அரசனான, சண்பகப் பெருமாள் என்பவனால் கட்டப்பட்டதென வேறு சிலர் கூறுகிறார்கள்.





இதற்கு ஆதாரமாக நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் இன்றும் கூறப்பட்டுவரும் கட்டியத்தை இவர்கள் காட்டுகிறார்கள்.

சமஸ்கிருதத்தில் உள்ள இக் கட்டியத்தின் பகுதி பின்வருமாறு உள்ளது:

**"ஸ்ரீமான் மஹா ராஜாதி ராஜாய அகண்ட பூமண்டலப்ரதியதி கந்தர விஸ்வாந்த கீர்த்தி ஸ்ரீ கஜவல்லி மஹா வல்லி சமேத சுப்ரமண்ய பாதாரவிந்த ஜனாதிரூட சோடச மஹாதான சூர்யகுல வம்ஸோத்பவ ஸ்ரீசங்க போதி புவனேகபாகு ஸமுஹா"**

திருவருள் பொருந்திய தெய்வயானையுடனும், வள்ளியம்மனுடனும் சேர்ந்திருக்கின்ற சுப்பிரமணியரின் திருவடிகளை வணங்குபவனும், மன்னர்களுக்கு மன்னனும், மிகுந்த செல்வங்களுடையவனும், இப் பரந்த பூமண்டலத்தில் எல்லாத்திசைகளிலும் புகழப்படுபவனும், மக்கள் தலைவனும், பதினாறு பெருந்தானங்களைச் செய்பவனும், சூரிய குலத்தில் உதித்தவனுமாகிய ஸ்ரீசங்கபோதி புவனேகவாகு என்பது இதன் பொருள்.

முன்னரே சிறியதாக இருந்த கோயிலைத் தனது ஆட்சிக்காலத்தில் புவனேகவாகு பெருப்பித்துக் கட்டியிருக்கக் கூடும் என்பதே பொருத்தம் என்பது வேறுசிலர் கருத்து.

யாழ்ப்பாண அரசின் இறுதிக்காலத்தில் நல்லூரிலிருந்த மிகப்பெரிய கோவில் இதுவேயென்பது போர்த்துக்கேயருடைய குறிப்புக்களிலிருந்து தெரியவருகிறது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போத்துக்கேயத் தளபதியான பிலிப்பே டி ஒலிவேரா, 1620இல் அரசின் தலை நகரத்தை யாழ்ப்பாணத்துக்கு மாற்றியபோது நல்லூர்க் கோயிலை இடித்துத் தரைமட்டமாக்கும்படி உத்தரவிட்டான்.

இதிலிருந்து பெறப்பட்ட கற்கள் யாழ்ப்பாணத்தில் புதிய கோட்டை கட்டுவதில் பயன்பட்டதாகத் தெரிகின்றது. இது இருந்த இடத்தில் போத்துக்கீசர் சிறிய கத்தோலிக்க தேவாலயமொன்றை அமைத்ததாகத் தெரிகிறது. பின்னர் ஒல்லாந்தர் இதனைத் தாங்கள் சார்ந்த புரொட்டஸ்தாந்த கிறிஸ்தவ தேவாலயமாக மாற்றினார்கள்.

இன்றும் இவ்விடத்தில் பிற்காலத்தில் பெரிதாகத் திருத்தியமைக்கப்பட்ட கிறிஸ்தவ தேவாலயமே காணப்படுகின்றது.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் (1658 – 1798) இறுதி ஆண்டுகளில் இந்துக் கோயில்கள் அமைப்பது தொடர்பாக ஆட்சியாளர்களின் இறுக்கம் ஓரளவு தளர்ந்தபோது, நல்லூர் கந்தசுவாமி கோயில் மீள அமைக்கப்பட்டது.

முன்னைய இடத்தில் கிறிஸ்தவ தேவாலயம் இருந்தபடியால் இன்னொரு இடத்தில் கோயிலை அமைத்தார்கள்.

### நல்லூர் கந்தன் துணை........

எல்லாம் வல்ல இறைவா
காக்க வா விரைவா
பக்தர் துன்பம் தீர்க்க
மயிலேறி வா முருகா!


காவடி எடுத்து நாமும்
அலகு பூட்டி வருவோம்
திருப்புகழ் பாடி தினமும்
உன் தரிசனம்
பெற வருவோம்!

ஈசன் பெற்ற மகனே
வினை தீர்க்கவா குமரா
காத்து அருள் புரிவாய்

கருணை கொண்ட
அழகா!
தவறு எதும் இருந்தால்
தவறாது எமை மறவாய்
தறிகெட்டு நடந்தால்
வேல் கொண்டு
அழிப்பாய்!

தவம் கிடக்கோம் நாமும்
மனம் இரங்கு வேலா
வேண்டி நிற்கும் எமக்கு
தரிசனம் தா நிறைவா!

*பாலகிருஸ்ணன் சதீஸ்,*
**தலவாக்கலை.**






# நலம் தரும் நல்லையூரான்

தேர்த்திருவிழா சிறப்பிதழ் – 01.09.2024



## முருகன் ஏன் தமிழ் கடவுளானார்?



தமிழர் வாழ்வியலில் கொண்டாடப்படும் காதலுக்கு அகத்துறை இலக்கணம் தந்த கடவுள் சிவன். தமிழ் நாட்டில் பெண்கொண்ட கடவுள் சிவன். தமிழ்மரபுப்படி காதல் மங்கையோடு ஊடுவதும் கூடுவதும் செய்து களிப்பவன் சிவன். தெந்தமிழ் நாடாகிய தென்னாட்டையே தன்னாடாகக் கொண்ட கடவுள் சிவன். சங்கம் அமர்ந்து தமிழ் வளர்த்த கடவுள் சிவன். பார்வதிக்கும், அகத்தியனுக்கும், நக்கீரனுக்கும் தமிழ் கற்பித்த கடவுள் சிவன். பன்னிரு திருமுறைகளாகப் பதினெண்ணாயிரம் பாடல்களால் தமிழிலே பாடப்பட்ட கடவுள் சிவன். தமிழர் சமயமாம் சைவத்தின் முழுமுதற் கடவுள் சிவன். தமிழர் தத்துவநெறியாம் சைவசித்தாந்தத்தின் தோற்றுவாய் சிவன்.

இவ்வாறு இருக்க முருகன் மட்டும் எப்படித் தமிழ் கடவுள் ஆனார்?

முருகனும் தமிழ்ச்சங்கத்தில் அமர்ந்து தமிழ் வளர்த்தார். இதை இறையனார் அகப்பொருள் நக்கீரர் உரை "குன்றெறிந்த குமரவேளும்" என்று குறிப்பிடுகின்றது.

முருகன் அகத்தியருக்கு தமிழையும் அதன் நுணுக்கங்களையும் கற்பித்ததாக கந்தபுராணமும், சிவஞானசித்தியாரும் கூறுகின்றன.

பன்மொழி நிலவும் பாரத தேசத்தில் சிவன், திருமால், கொற்றவை என்னும் அம்பிகை முதலான பல கடவுளர்களின் வழிபாடு எங்கும் பரவலாக இருந்தாலும் முருக வழிபாடு சிறப்பாகக் காணப்படுவது தமிழ் நாட்டிலேயே. இந்தியாவின் மற்றைய மாநிலங்களிலும் கார்த்திகேயன் என்றும், சுப்பிரமணியன் என்றும் ஆங்காங்கே முருக வழிபாடு இருந்தாலும் கந்தன் என்றும், கடம்பன் என்றும், முருகன் என்றும் குன்றுகள் தோறும் மட்டுமல்லாது, தமிழ் வழங்கும் நிலம் எங்கும் தமிழர் வாழும் இடம் எங்கும் கோயில் கொண்டுள்ள பெருமையும் தனித்துவமும் முருகனுக்கே உரியது. இவ்வாறு தமிழர்களால் அவர்கள் வாழும் இடமெல்லாம் கோயில் கொண்டு கொண்டாடப்பட்டும், வணங்கப்பட்டும், வாழ்த்தப்பட்டும் வருவதனாலேயே முருகனை நாம் தமிழ்க் கடவுள் என்கின்றோம். இதுவே பல ஆய்வாளர்களினதும் முடிவும்கூட. இதை நாம் மறுப்பதற்கில்லை. ஆயினும் இதனால் மட்டுமா முருகன் தமிழ்க்கடவுள் என்னும் தகுதியைப் பெறுகின்றான் என்றால் இல்லை, இதற்கும் மேலான விடயம் ஒன்று உண்டு.

சைவமும் தமிழும் வேதங்களும் கூறும் நீலமணிமிடற்றுச் சிவன், கொற்றவை, கண்ணன் என்னும் திருமால், வேந்தன் என்னும் இந்திரன், வருணன் முதலாய பல தெய்வங்கள் தமிழர் மரபில் இருந்தாலும், சிவனாரும் முருகனும் தமிழை ஆய்ந்தும், கற்பித்தும், ஆதரித்தும், வளர்த்தும் இருந்தாலும், தமிழ் மரபின் அகத்துறையாகிய காதலைக் கொண்டாடினாலும் காதலின் களவியல், கற்பியல் என்ற இரு துறைகளில் களவு முறையில் வள்ளியிடம் சென்று, அவள் செல்லுமிடமெல்லாம் பின் தொடர்ந்து, பல்வேறு கோலம் காட்டியும், ஆசை காட்டியும், பயம் காட்டியும் பல வகைகளில் முயன்று வள்ளியின் காதலை வென்றவன் முருகன்.

இவ்வாறு வள்ளியின் மனதை வென்ற பின்னரும் அவளின் சுற்றத்தார் யாரும் அறியாவண்ணம் சந்தித்தும், கூடியும் மகிழ்ந்தவன் முருகன். வள்ளியின் பெற்றோரும், குடும்பத்தாரும் இதை அறிந்து எதிர்த்துப் போரிட்டபொழுது அவர்களுடன் போராடி வென்று வள்ளியைக் கை பிடித்தவன் முருகன். காதலுக்காக வள்ளியின் குடும்பத்தாருடன் மோதிப் போரிட்டு வென்றாலும் ஈற்றில் பெண்வீட்டாருடன் சமாதானமாகி ஒன்றுகூடியவன் முருகன்.

மொத்தத்தில் முருகனின் காதலானது தமிழ் மரபின் அகத்துறையின் காதல் மட்டுமல்ல, இன்றளவும் நம் தமிழர் வாழ்க்கையிலும், கலைகளிலும், இலக்கியங்களிலும், சினிமாவிலும் கூடத்தொடருகின்ற உயிர்ப்பான காதல்.

அந்த கற்பியல் மரபில் தெய்வானையைக் கரம்பிடித்தோடு மட்டுமல்லாமல் சங்கத்தமிழர் கொண்டாடும் களவு நெறிக்காதலில் திளைத்து வள்ளியைக் கரம் பற்றியவர்.

இவ்வாறு சங்கத்தமிழர் போற்றும் களவியற் காதலில் திளைத்த நமது கதாநாயகன் முருகன். ஆதலால் முருகன் தமிழ்க்கடவுள். இதனாலேயே முருகன் ஒருவனுக்கே தமிழ்க்கடவுள் என்னும் தகுதியும் சிறப்பும் பெருமையும் தனித்துவமும் பொருந்தி அமைகின்றது.






## நலமெல்லாம் தந்திடுவான் 'நல்லூர் கந்தன்'

உத்தமனாம் வேல் முருகன் ஓங்கும் நல்ல
உயர்பதியாம் நல்லூரில் மயில்மீதேறி
பத்தியுடன் அடியவர்கள் சூழ்ந்தே நிற்கப்
பார்முழுதும் தனதழகால் ஈர்த்து என்றும்
நித்தமொரு வடிவோடு நெஞ்சை அள்ளி
நேர்நின்று பொழிகின்ற அருளைக் கண்டார்
எத்திசையில் இருந்தாலும் ஓடிவந்து
ஏத்துவராம் அவன்தாளில் இதயம் வைத்தே.

ஓங்கார மணியோசை செவியிற் பாய
ஓடிவிடும் வினையதுவும் ஒன்றாய்ச் சேர்ந்தே
ஆங்காரம் அறுத்தந்த சூரன்தன்னை
அடியவனாய் ஏற்று அருள் செய்தற்காக
நீங்காது உடன் வைத்தான் நேயம் பொங்க
நிமிர் சேவல் மயிலதுவாய்
ஆக்கிக் கொண்டான்
நாங்காதல் கொள்கின்ற நல்லூர்க் கந்தன்
நமையுந்தான் ஏற்றிடுவான் நலிவு நீக்கி.

வல்லரக்கன் இராவணனை மலையின் கீழே
வைத்தழுத்தி இசைபாட அருளே செய்த
தள்ளரிய புகழ்க்கைலை ரதத்திலேறி
தரணியெலாம் மயக்கிடவே வேலன் வந்தால்
அல்லவரும் நல்லவராய் ஆகி அந்த
அருட்காட்சி தனில் மூழ்கி அழுதே நிற்பார்.
மல்லதனில் செயம் கொண்டு மயிலிலேறும்
மாமுருகன் நமைக்காக்க மண்மேல் வந்தான்.

சந்தமதில் தமிழ் சேர்த்துத் தரணி பொங்க
சாற்றரிய திருப்புகழைத் தந்து ஆண்ட
எந்தைபிரான் அருணகிரி ஏற்றுகின்ற
எழிற்கந்தன் நல்லூரில் கொடியும் ஏற
பந்தமொடு இளையரெலாம் பக்தராகி
பாரதனில் கிடந்தே தம் உடலதாலே
கந்தனையே நினைந்துருகி கண்ணீர் பொங்க
கைகூப்பி உருண்டுவரும் காட்சி என்னே!

மாதரெலாம் அடியளந்து மனத்துள் கந்தன்
மங்காத அருள் நிரப்பி மாங்கல்யத்தை
நாதனவன் காத்திடவே வேண்டி நின்று
நல்லூரான் வீதியிலே உருகி நிற்பார்
ஏதமிலா நல்வாழ்வை எமக்குக் கந்தன்
எப்போதும் தந்திடுவன் என்றே சொல்லி
வேதனையில் உழல்வாரும் வேலன் காலை
விருப்புடனே பற்றி அருள் வேண்டிநிற்பர்.

தாழவரும் பெற்றோரின் கைகள் பற்றி
தனியாத ஆர்வத்தால் ஓடிவந்த
பாலகரும் பந்தலிலே ஊற்றுகின்ற
பல்சுவைசேர் பானங்கள் பருகித் தீர்ப்பார்
தாளமொடு சங்கதிகள் சேர்த்து நல்ல
தரமான இசையோடு பிரசங்கங்கள்
வீழவரு வயதினிலும் முதியோர் எல்லாம்
விரும்பி நிதம் கேட்டிடுவர் வீதி மொய்த்தே.


கோபுரத்து மணியோசை கூடிநிற்கும்
கும்பிடுவோர் எழுப்புகிற குரலினோசை
நூபுரத்து அசைவதனால் பெண்களெல்லாம்
நுட்பமதாய் எழுப்புகிற மணியின் ஓசை
நாபியிலே இருந்தெழுந்து ஓங்குகின்ற
நன்மைதரு நாயனமாம் குழலின் ஓசை
பாபிகளின் அழும் ஓசை பரந்து எங்கும்
பாரெல்லாம் அதிர்ந்திடவே தேரும் சுற்றும்.

ஆட்கடலில் தேரதுவும் மலைபோல் நிற்க
ஆயிரமாய் இளையரெலாம் அன்பு பொங்கி
பாற்கடலைத் தேவர்களும் கடைந்தாற் போல
பாம்பெனவே நீண்ட பெரும் வடத்தைப் பற்றி
நாட்டவரும் வியப்பெய்த நலமே பொங்க
நழுங்காமல் தேரதனை இழுக்கும் காட்சி
கூட்டதனின் பெருமை சொலும் தமிழரெலாம்
கொண்டாடிக் கந்தனையே குறியாய்க் கொள்வர்.

தேரேறி நல்லூரான் வீதி வந்தால்
திரண்டேதான் பக்தரெலாம் ஒன்று கூட
பார் மாறிக் கடல்போல ஆகிநிற்கும்
பல தலைகள் அசைவதுவும் அலைகள் ஒக்கும்
கார் போன்ற கருந்தலைகள் மேலே கந்தன்
கனிந்த ரதம் அசைந்துவரும் காட்சி கண்டார்.
தேர் மீது முருகன் என நினைய மாட்டார்
திரண்ட கடல் மீது வரும் பரிதி என்பார்.

அருணகிரிக்கருள் செய்த ஐயன் எங்கள்
அரும் புலவன் நக்கீரன் பாடும் ஐயன்
பெரும் புகழை யாழ் மண்ணும் பெற்றுக் கொள்ள
பிறந்தவனாம் நாவலனும் ஏற்றும் ஐயன்
அருந்தமிழால் யோகர் அவர் போற்றும் ஐயன்
அற்புதமாம் தமிழ்க் கடவுளான ஐயன்
வெறும்பிறவி நீக்கி எமை ஆண்டுகொள்வான்
வேலிருக்க அஞ்சாதே மடமை நெஞ்சே!

கம்பவாரிதி
இ. ஜெயராஜ்



# நலம் தரும் நல்லையூரான்



தேர்த்திருவிழா சிறப்பிதழ் – 01.09.2024

## `வேலுண்டு வினையில்லை'

# வேலே வேலவனாக வணங்கப்படும் திருத்தலம்





நல்லூர் கந்தசுவாமி திருக்கோயில், இலங்கையிலுள்ள பிரசித்திபெற்ற கோயில்களில் ஒன்று. தமிழர்கள் அதிகம் வசிக்கும் பகுதியான யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் 3 கி.மீ தொலைவில் அமைந்துள்ள கோயிலுக்கு உள்ளூர் பக்தர்கள் மட்டுமல்லாமல், வெளியூர் பக்தர்களும் வந்து வழிபடுகின்றனர்.

கிழக்கு, தெற்கு, வடக்கு ஆகிய மூன்று திசைகளிலும் பெரிய கோபுரங்களுடன் கம்பீரமாகக் காட்சி தருகிறது கோயில். கிழக்கு கோபுரம் ஐந்து நிலைகளுடனும், தெற்கு மற்றும் வடக்கு கோபுரங்கள் ஏழு நிலைகளுடனும் காட்சியளிக்கின்றன. தெற்கு கோபுரத்தின் அருகில் திருக்குளம் அமைந்திருக்கிறது. கிழக்கு கோபுரத்தின் முன்பு, அழகிய வேலைப்பாடுகளைக்கொண்ட தோரண வளைவு ஒன்றும் உள்ளது.

'யாழ்ப்பாண வைபவமாலை', 'கைலாய மாலை' ஆகிய நூல்களில், யாழ்ப்பாணத்தை ஆண்ட கூழங்கைச் சக்கரவர்த்தியின் அமைச்சர்களுள் ஒருவரான புவனேகவாகு என்பவர் இந்தக் கோயிலைக் கட்டியதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், `15ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த, 'கோட்டே' சிங்கள அரசரின் பிரதிநிதியாக இருந்து, பிற்காலத்தில் 'ஸ்ரீசங்கபோதி' என்னும் பட்டம் பெற்ற புவனேகவாகு என்னும் 'செண்பகப் பெருமாள்' என்பவரால் கட்டப்பட்டது' என்றும் சிலர் கூறுகிறார்கள். இதற்குச் சான்றாகக் கோயிலில் சொல்லப்படும் கட்டியத்தைச் சுட்டிக்காட்டுகின்றனர்.



இன்னும் சிலர், `புவனேகவாகு தன்னுடைய காலத்தில் ஏற்கெனவே இருந்த கோயிலைப் புதுப்பித்துக் கட்டியிருக்கலாம்' என்றும் கூறுகின்றனர்.

17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துகீசியர்களின் தளபதியாக இருந்த 'பிலிப்பே டி ஒலிவேரா' (Phillippe de Oliveira) யாழ்ப்பாணத்தைத் தலைநகரமாக மாற்றினார். நல்லூர் கந்தசுவாமி கோயிலை இடித்துத் தரைமட்டமாக்கவும் செய்தார். அங்கே ஒரு தேவாலயமும் கட்டினார். பின்னர் வந்த டச்சுக்காரர்கள் அந்த தேவாலயத்தை தங்கள் மரபுக்கு உரிய முறையில் வழிபடக்கூடிய தேவாலயமாக மாற்றிக்கொண்டனர்.

19ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் மீண்டும் இந்துக் கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டபோது, நல்லூர் கந்தசுவாமி கோயிலும் நிர்மாணிக்கப்பட்டது. பின்னர், தமிழ் இலக்கியத்துக்கும் ஆன்மிகத்துக்கும் பெரும் தொண்டாற்றிய யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் இந்தக் கோயிலின் பூஜை முறைகளை நெறிப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

இந்தக் கோயிலில் வியப்புக்குரிய செய்தி ஒன்றும் உள்ளது. கந்தசுவாமி கோயிலின் கருவறையில் மூலவராக முருகப்பெருமானின் திருவுருவம் இல்லை. ஆம்! கருவறையில் முருகப்பெருமானின் ஆயுதமான வேல்தான் மூலவராக வழிபடப்படுகிறது. தன்னை நாடி வரும் பக்தர்களுக்குப் பாதுகாப்பு அரணாகத் திகழும் வெற்றிவேலைத்தான், இந்தக் கோயிலில் வழிபடு தெய்வமாக எழுந்தருளச் செய்திருக்கிறார் முருகப் பெருமான். திருவிழாக்களின்போது இந்த 'வேல்' வடிவத்தையே அலங்கரித்து, வாகனங்களில் எழுந்தருளச் செய்து வீதி வலம் வருகின்றனர்.

கோயிலின் நீண்ட அழகிய பிராகாரங்களில் மரவேலைப்பாடுகளுடன் கூடிய வண்ணப்பூச்சுகள் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. பிராகாரத்தில் விநாயகர், வள்ளி, தெய்வானை, குழந்தை கிருஷ்ணன், சூரியன், சூலம் ஆகிய சந்நிதிகளும் அமைந்துள்ளன. மூலவர் சந்நிதிக்குப் பின்புறம் உற்சவ மூர்த்திகள் உள்ளனர். ஆறுமுக சுவாமியின் உற்சவ மூர்த்தம் மிகவும் அழகாக அமைந்திருக்கிறது. கோயிலும் மிகத் தூய்மையாகப் பராமரிக்கப்படுகிறது.

வருடம்தோறும் ஆடி, ஆவணி மாதங்களில் 27 நாட்கள் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஆடி மாதம் அமாவாசைக்கு அடுத்த 6ஆம் நாள் கொடியேற்றத்துடன் தொடங்கும் திருவிழா, ஆவணி மாதம் அமாவாசையன்று தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறும். 24ஆம் நாள் தேரோட்டம் மிகவும் விமர்சையாக நடைபெறும். திருவிழாக் காலங்களில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடுவார்கள். மாதம்தோறும் கிருத்திகையன்று வள்ளி, தெய்வானை இருபுறமும் இருக்க, வேலை சிறப்பாக அலங்கரித்து வழிபடுகின்றனர். மேலும் தைப்பூசம், மார்கழி திருவாதிரை, கந்த சஷ்டி ஆகிய விழாக்களும் நடைபெறுகின்றன.

கோயிலின் வழிபாட்டு முறைகளை நெறிப்படுத்திய ஆறுமுக நாவலருக்கு அவருடைய நினைவைப் போற்றும் வகையில் மணிமண்டபம் ஒன்றும் கோயிலுக்கு இடப்புறம் அமைந்துள்ளது. சைவ சமயத்துக்கு அரும் தொண்டாற்றிய ஆறுமுகநாவலர், இலங்கையில் மட்டுமல்லாமல், தமிழகத்திலும் சைவம் தழைக்கச் செய்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

மணிமண்டபத்தின் நுழைவாயிலில் வெளிப்புறம் திரும்பிப் பார்த்தபடி நந்தி சிலை அமைக்கப்பட்டுள்ளது. உள்ளே, அமர்ந்த நிலையில், ஆறுமுக நாவலரின் திருவுருவச் சிலை உயிரோட்டத்துடன், கையில் புத்தகம் வைத்துக் கொண்டு படிப்பதுபோல் அமைந்திருக்கிறது. மண்டபச் சுவர்களில் அறுபத்து மூவர் திருவுருவங்கள் வண்ண ஓவியங்களாக வரையப்பட்டிருக்கின்றன. இந்த மண்டபத்தில் ஆர்வமுள்ள குழந்தைகளுக்கு தேவாரப் பாடல்கள் பண்ணோடு கற்றுக் கொடுக்கின்றனர்.

கோயிலில் தினமும் அதிகாலை 4:30 மணிக்கு நடை திறக்கப்படுகிறது. பின்னர் திருநல்லூர் முருகன் திருப்பள்ளியெழுச்சி பாடப்படுகிறது. தொடர்ந்து பூஜைகள் நடைபெறுகின்றன.

மாலையில் நடைபெறும் பள்ளியறை பூஜை மிகவும் விசேஷமானது. முருகப்பெருமானுக்கு ஊஞ்சல் பாட்டுப் பாடி, சிறிய மஞ்சத்தில் வைத்துத் துயில்கொள்ளச் செய்கின்றனர். பள்ளியறை பூஜையைத் தரிசிக்க பக்தர்கள் திரளாக வருகின்றனர்.

நடை திறந்திருக்கும் நேரம்: காலை 4:30 முதல் 12 வரை; மாலை 4 முதல் 5:45 வரை.

இலங்கை செல்வதற்கு வாய்ப்புள்ளவர்கள், வேலையே வேலவனாக வழிபடும் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று வழிபட்டால், 'வேலுண்டு வினையில்லை' என்பதற்கேற்ப, வினைகள் யாவும் தீர்ந்து, அனைத்து வளங்களுடன் மகிழ்ச்சியாக வாழலாம்.

அமலன்






# நலம் தரும் நல்லையூரான்



தேர்த்திருவிழா சிறப்பிதழ் – 01.09.2024

## தமிழ் மக்களின் முருக வழிபாடும் அதன் பின்னணியும்

*'கற்பனையென்றாலும் கற்சிலை என்றாலும்*
*கந்தனே உனை மறவேன்*
*நீ கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும்*
*கந்தனே உனை மறவேன்*
*அற்புதமாகிய அருப்பெரும் சுடரே அருள்மறை*
*தேடிடும் கருணையென் கடலே'*

இந்த வரிகள்தான் கந்தனை வணங்கும் ஒவ்வொரு தமிழனின் இருதயத்திலிருந்து வரும் பக்தி நாதமாகும்.

சமயச் சடங்குகள் என்பவை குறிப்பிட்ட கடவுளை வணங்கும் தனிப்பட்ட மனிதரின் நம்பிக்கை மட்டுமல்லாது, அவன் வாழும் சமூகத்தினரின் பன்முகத் தன்மையான நம்பிக்கைகளை வெளிப்படுத்துவதாகும். உலகில் பல்லினங்களும் பல்வேறு சடங்குகளைத் தொடர்கிறார்கள். அந்தக் கண்ணோட்டத்தில் தமிழ்க் கடவுள் முருகனது வழிபாட்டுச் சடங்குகளையும் உளவியல் பார்வையில் அணுகுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

எமெய்ல் டேர்க்காய்ம் என்ற பிரான்சிய, யூத சமூகவியலாளர், சடங்கு நடத்தைக்கும் சமூக ஒழுங்கைக் கடைப்பிடிப்பதற்கும் இடையிலான உறவை முன்வைத்தார். புனிதமானவை என்று கருதப்படுகின்ற கூட்டு வணக்கமுறையை சமூக ஒற்றுமைக் கோட்பாட்டில் முன்வைத்தார். இதற்கு தமிழர்கள் முன்னெடுக்கும் அத்தனை சடங்குகளையும் உதாரணங்களாக காட்டினார். உலகெங்கும் பரந்து வாழ்ந்த ஆதிகால மனிதர்கள் இயற்கையை மதித்த, இயற்கைக்குப் பயந்த, இயற்கைக்குப் பணிந்த மக்களாகத்தான் வாழ்ந்திருக்கிறார்கள்.அவர்களின் வழிபாட்டுச் சடங்குகளும் அந்த நம்பிக்கையிற்தான் ஆரம்பித்தது. குன்றுக் கடவுள் முருகனுக்கு ஆதித் தமிழர்கள் ஒன்று சேர்ந்து நடத்திய வழிபாடுகளின் நீட்சியே இன்று நடக்கும் பல சடங்குகள் என்று எடுத்துக் கொள்ளலாம். அதன் பிரதிபலிப்புத்தான் வேல் வழிபாடு, ஆடல்கள், பாடல்கள், காவடி எடுத்தல் போன்ற முருகக் கடவுள் சார்ந்த சடங்குகளாகும்.



தமிழ் கடவுள் முருகவழிபாடு உலகமெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் கலாச்சாரத்துடன் பின்னிப்பிணைந்த ஒரு சமயச் சடங்குகளின் நீட்சியாகும். தமிழ்க் கடவுள் முருகனுக்குச் செய்யப்படும் பூஜை என்பது அதைச் செய்பவர்களின் வாழ்வையுயர்த்தும் தயவை எதிர்பார்த்துச் செய்யப்படுவதாகும். 'முருகன் எங்கள் கடவுள்' என்பதன் குறிக்கோள் வரையறையான சடங்குகள் ஆகும். இந்தச் சடங்குகள் காலம் காலமாகப் பரிந்துரைக்கப்பட்ட முறையான நடத்தைகளாக மக்கள் நம்பும் சக்தியின் மீதான பக்தியைப் பிரதிபலிக்கிறது.

உளவியல் சார்ந்த முருக வழிபாட்டில் தமிழர்கள் முருனை 'ஆறுமுகனாக' வணங்குகிறார்கள். ஆறுமுகம் என்பது தமிழரின் அறிவு, வீரம், ஆளுமை, செல்வம், அன்பு, கௌரவம் போன்ற ஆறு கூறுகளை முருகன் வெளிப்படுத்துகிறான் என்தை உணர்த்துகிறது. இது கி.மு 2ம் நூற்றாண்டு எழுதப்பட்ட திருமுருகாற்றுப்படையில்:

***' அஞ்சு முகம் தோன்றின் ஆறு முகம் தோன்றும்,***
***வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும்,நெஞ்சில்,***
***ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்***
***முருகாவென்றோதுவோர் முன்'***

என்றவாறு சொல்லப்பட்டிருக்கிறது..

தமிழரின் அரிய இலக்கண நூலான தொல்காப்பியத்தில் முருகன் 'சேயோன்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறான். இலங்கையின் முக்கிய ஆய்வாளரான கலாநிதி கைலாசபதி அவர்கள் தொல்காப்பியம் கி.மு 8ம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று சொல்கிறார்.அதாவது முருக வழிபாட்டுச் சடங்குகள் கிட்டத்தட்ட மூவாயிரம் ஆண்டுகள் மேலான பழமைவாய்ந்தது. அது தொல் தமிழர் உளவியலை இன்றும் தொடர்கிறது என்று எடுத்துக் கொள்ளலாம்.

எந்தவிதமான சமயச் சடங்குக்கும் அதை முன்னெடுக்கும் மக்களின் சமய நம்பிக்கை, அவர்களின் இலக்கியம், சமுதாய வரலாறு, வாய்மொழி, தொல்லியல், கல்வெட்டு போன்ற ஏதோ ஒரு இடத்தில் இந்தச் சடங்கின் ஓரளவான விளக்கம் இருக்கும். அத்துடன் வானிலை தொடர்ந்த உளவியற் தொடர்பும் இருந்திருக்கலாம் என்பதை ச.வே.சுப்பிரமணியம், ஜி.இராஜேந்திரன்(1985) என்பவர்களின் கூற்றில் அறியலாம். அவர்கள், 'தொல்காலத்தில், தமிழர்கள் வானிலை ஆய்வில் ஈடுபட்டிருந்தார்கள். அதன் பிரதிபலிப்பே முருகனைச் 'சேயோன்' என்று வழிபடுவதாகும். செவ்வாய்க் கிரகம் சிவப்பானது. செவ்வாய்க்கிழமையை முருகனின் நாளாகத் தமிழர்கள் வழிபடுவதன் மூலம் அவர்களின் வானறிவை மதிக்கும் உளவியல் தெரிகிறது.

தமிழ்நாட்டில் முருக வழிபாடு ஒரு குறிப்பிட்ட காலம் பெரிதாக இருக்கவில்லை என்றும், ஆனால் கி.பி 10ம் நூற்றாண்டின்பின் தமிழரின் பக்தி வழிபாட்டில் தமிழுணர்வு முருகனுடனிணைந்து வளர்ந்ததாகக் கருதுகிறார்கள். அக்காலகட்டம்தான் சோழனின் புலிக்கொடி தமிழ்நாடு கலந்து பல நாடுகளிற் பறந்த காலகட்டமாகும். அப்போதுதான் இலங்கையில் யாழ்ப்பாணத்திலுள்ள முருகன் கோயில் கட்டப்பட்டது. ஆனால் இலங்கையில் முருக வழிபாடு பல்லாயிரம் வருட சரித்திரத்தைக் கொண்டது. சிங்கள மக்கள், தங்களின் வனப் பெண்ணை மணக்க வந்த முருகனைத் தங்களின் மைத்துனராக வணங்கும் வழக்கம் இதை மெய்ப்பிக்கிறது.

2500 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவிலிருந்து விஜயன் இலங்கைக்கு வரும்போது இலங்கையில் முருக வழிபாடு இருந்திருக்கிறது. அக்காலத்தில் கண்டெடுக்கப்பட்ட ஆயதங்களின் கூரான வேல் அமைப்பானது இதனை மெய்ப்பிக்கிறது. இது சிங்களவர், தமிழர்களுக்கிடையில் மிகவும் நெருக்கமான தொடர்பு இருந்ததையும் காட்டுகிறது.

அதேபோலே தென்னாட்டிற்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்பு மிகவும் நீண்டது. ஆதித்த நல்லூரில் கிடைத்த முருக வழிபாட்டுத்தடயங்கள் போன்று இலங்கையில் வடக்கிலுள்ள கோயிலொன்றிலும் ஆண்தெய்வ சிலை வேலுடன் கண்டெடுக்கப்பட்டது. அதே போலவே இலங்கையின் வடமத்திய பிரதேசத்திலுள்ள அனுராதபுரம், தென்னிலங்கையிலுள்ள அக்குறகொட போன்ற இடங்களிலும் கிடைத்திருப்பதாகத் தொல்லியல் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

இந்தியாவில் தமிழ்க் கடவுள் முருகனுக்காக எண்ணற்ற கோயில்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றில் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை. திருத்தணி, பழமுதிர்சோலை போன்ற ஆறு படை வீடுகள் மிகவும் பிரசித்தமானவை.

தமிழர்கள் ஆறு விகிதத்திற்குமேல் வாழும் மலேசியாவில் கோலாம்பூர் நகரில் 42.7 மீட்டர் உயரத்தில் உலகத்திலேயே உயரமான முருகன் சிலை உயர்ந்து நிற்கிறது. இதை விட இலங்கையில் முருக தலங்களில் பெயர்பெற்றவைகளில் ஒன்றானதும், மிகவும் புராதனமுமான கதிர்காமத்தலம் இருக்கிறது. அத்துடன் வடக்கு, கிழக்கு, மேற்கு, மத்திய மலையகம் என்று பல இடங்களில் முருகன் கோயில்கள் உள்ளன. இவற்றுள் நல்லூர் கந்தசாமி கோயில். மாவிட்டபுரம், செல்லச் சன்னிதி, சித்திரவேலாயுத முருகன் கோயில், வெருகல், திருகோணமலை மண்டூர் கந்தசாமி கோயில், திருக்கோயில் என்பன மிகவும் பிரசித்தமானவை.

புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களால் இங்கிலாந்தில் பல இடங்களிலும் ஜேர்மனி, பிரான்ஸ், கனடா, அவுஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து போன்ற பல நாடுகளில் முருகனுக்குச் சிறப்பான கோயில்களை அமைத்துப் பல சடங்குகளை நடத்தி தமிழர்களின் பக்தி அத்துடனிணைந்த கலாச்சாரப் பண்பாடுகளை வெளிப்படுத்தி அவர்கள் வாழும் நாட்டு மக்களை வியப்பில் ஆழ்த்துகிறார்கள்.

இன்று உலகெங்கும் முருகனுக்காக எடுக்கப்படும் சடங்குகள் தமிழர்கள் தங்கள் 'தமிழ்க் கடவுளின்' பன்முகத் தன்மையின் சிறப்பை உலகுக்கு அறிவிக்கும் ஒரு கூட்டு உளவியல் செயற்பாடு என்று எடுத்துக் கொண்டால் அது மிகையாகாது. ஏனென்றால் மிகப் பெரும் காலமாக அவர்களின் கலாச்சாரம், நம்பிக்கைகள் என்பனவற்றைத் திரிவுபடுத்தவும், திருடி எடுக்கவும் பல முயற்சிகள் நடப்பதை அவர்கள் கண்டு கொண்ட வெறுப்பின் ஒரு வெளிப்பாடாக இந்தச் சடங்குகளை நோக்கலாம்.

இந்தத் தத்துவங்களின் பிரதிபலிப்பாக முருக வழிபாட்டின் சடங்குகளும் அமைகின்றன. மிகவும் அழகான சோடனைகளுடன், அன்பான உற்றார் உறவினர் புடைசூழ, கம்பீரமான தோற்றத்துடன், ஆளுமையாகப் பால்காவடி, பன்னீர்க்காவடி, புஷ்பக் காவடி, தொங்கு காவடி, தூக்குக் காவடி போன்றவற்றைத் தோளில் தாங்கி கண்ணைக் கவரும் வண்ணங்களால் அந்தக் காவடியை அலங்கரித்து, மத்தளம் கொட்ட சல்லரி ஒலிக்க, அரோகரா முழங்க முருக சடங்குகள் நடப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

இந்தச் சடங்குகளில் காவடியாடுபவர்கள், வாயில் அலகு, முதுகில் பலதரப்பட்ட இரும்புக் கொழுக்கிகள், போன்றவற்றைத் தங்கள் தோலை ஊடுருவித் துளைத்துப் போட்டிருப்பது முருகனுக்கு அவர்கள் செய்யும் சடங்குகளை எவ்வளவு பக்தியுடன் செய்கிறார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டும். இந்த அலகுகளால் குருதி போவதோடு அளவுக்கு மீறிய வேதனையுடன் பக்தர்கள் அவதிப்படுவதையோ காணமுடியாது. அவர்கள் உளரீதியாகத் தங்களைத் தயார்படுத்தியிருப்பது அவர்களின் செயற்பாட்டில் விளங்கும். முருகனுக்கு காவடி எடுப்பது என்ற சாதாரண வார்த்தைகளுக்குள் எத்தனையோ வேறுபாடுகள் இருப்பதைக் காவடித் திருவிழாவை நுணுக்கமாகப் பார்ப்பவர்களால் புரிந்துகொள்ள முடியும்..

தெய்வ வழிபாட்டில் தனிப்பட்ட சடங்குகளையும், பெண்களும் ஆண்களும் பாற்குடல் காவுதல், வாயில் அலகு போடுதல், அங்கப் பிரதட்சணம் செய்தல், தேங்காய் உடைத்தல் போன்றவற்றையும் செய்வார்கள். ஆனால் அதுவும் குடும்பம் அல்லது அவர்களின் உற்றார் உறவினர் சார்ந்ததாக இருக்கும். கடவுளுக்கு வைத்த நேர்த்திகடன் காரணமாகத் தீ சட்டி எடுத்தல் போன்ற விடயங்களையும் திருவிழாக் காலங்களில் பெண்கள் செய்வார்கள். அந்த நிகழ்வு பக்தியுடன், கோட்பாடுகளை உள்ளடக்கிய, மரபை விட்டகலாத சடங்காக நடந்து முடிவதை அத்தனை பேரும் ஒட்டுமொத்தமாகச் செயற்படுத்துகிறார்கள்.



இலங்கைத் தமிழரின் கதிர்காம யாத்திரை ஒருகாலத்தில் இலங்கையின் வடக்கில் உள்ள செல்வச் சன்னிதி முருகன் திருக்கோயிலிலிருந்து ஆரம்பமாகி தெற்கிலுள்ள கதிர்காமத்தை நடந்து சென்று தரிசிப்பார்கள். இதன் தூரம் 1396 கிலோமீட்டர் என்று சொல்லப்படுகிறது. இந்த யாத்திரை பலவித மக்களை இணைப்பது, பல பிரதேசங்கள், பல வர்க்க, இன வேறுபாடுகள் அத்தனையும் கடந்து முருகனின் பக்தியின் செயற்பாட்டால் இரவு பகலாக அவன் பெயரைப் பாடிக்கொண்டு காடு, மலை, ஆறு, குளங்கள், கிராமங்கள், நகரங்ளைத் தாண்டி கதிர்காமம் செல்வார்கள்.

இந்தச் சடங்குகளில் பெரும்பாலும் பக்திப் பாடல்கள், சல்லரிச் சத்தம் நிறைந்திருக்கும். பெருந்தூரம் ஒன்றிணைந்த இந்த ஒன்றுபட்ட உந்துதல் தரும் உளவியலை வேறு எந்தக் கடவுள் யாத்திரையிலும் இலங்கையிற் காண முடியாது. இந்த பாரம்பரியம் மிக நீண்டகாலமாகவே மக்களால் கடைப்பிடிக்கப்படுகிறது.

தமிழர்களைப் பொறுத்தவரையில் முருகன். கலியுகக் கந்தன், காக்கும் கடவுள். தமிழர்கள் கல்வி நிலையில் உயர உதபவுபவன், அறிவு தருபவன், எத்துயர் வந்தாலும் நின்று பிடிக்கும் வல்லமை தந்த வீரவேலன், அந்நிய நாட்டில் முகங்கொடுக்கும் அத்தனை துன்பத்தையும் நீக்குகிறான் அதனால் அவன் ஒரு மாபெரும் சக்தி,

தமிழரின் காதற்கடவுள், போர்க்கடவுள், திராவிடக் கடவுள், தமிழ் உணர்வுகளுடன் ஒன்றெனக் கலந்தவன் எனும் நம்பிக்கையிலேயே அவனுக்காக உடல் வலி பாராமல் சடங்குகளைச் செய்கிறார்கள்

தமிழரின் உளம் சார்ந்த முருகவழிபாட்டுச் சடங்குகளை விளக்க திருமூலர், 'உள்ளமு பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்'; என்று சொன்னார். இப்படியான உளவியல் காரணிகளால் முருகன் உலகெங்கும் தமிழரின் வாழ்வில் இன்றியமையாத அற்புத சக்தியாக இடம் பிடித்திருக்கிறான்.

தமிழர்களின் முருகன் பற்றிய உளவியலை,

***'உருவாய் அருவாய் உளதாய் இலதாய்***
***மருவாய் மலராய்ப் பணியாய் ஒளியாய்***
***கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்***
***குருவாய் வருவாய் அருள்வாய் குகனே'***

என்ற கந்தரனுபூத வாசகங்கள் அற்புதமாக விளக்குகின்றன. முருகப்பெருமானுக்கான சடங்குகளை, உணர்வு நிலையுடன் தங்கள் உடலை மையமாய் அர்ப்பணித்து மேற்கொள்பவன் இந்த பிரபஞ்ச அமைப்பில் இறைபக்தியில் திளைக்கிறான்.

**இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்**










# செழிப்பான நாடு வளமான வாழ்க்கை



## தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனம்

**உணவுப் பாதுகாப்பு, குறைந்த விலையில்.**

**உற்பத்தியின் தரத்தினை உயர்த்து வதன் மூலம் சுகாதாரதப் பாதுகாப்பு**

**நவீன விவசாயம்**

⇨ நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய உணவுப் பொருட்கள் அனைத்தையும் உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கான அரச அனுசரணை

⇨ புதிய அபிவிருத்தி வங்கியின் மூலம் விவசாயிகளுக்கு பிணையில்லாமல் விவசாய கடன் மற்றும் 50 ஆயிரம் விவசாய தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதற்கான நிதி வசதிகள்.

⇨ யானை, மர அணில், குரங்குகள், மயில் போன்ற காட்டு விலங்குகளினால் விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்புக்களைத் தடுப்பதற்கு விஞ்ஞான ரீதியான தீர்வுகள்.

⇨ ஒவ்வொரு கமத்தொழில் சேவை பகுதியிலும் வாடகை அடிப்படையில் விவசாய இயந்திரங்களை வழங்கும் விவசாய சேவை விநியோக மையங்கள்.

⇨ **விவசாய ஏற்றுமதிக் கிராமங்கள் 1000 உருவாக்கல்.**

⇨ கல்ஓயா, இராஜாங்கனை, மின்னேரிய போன்ற பாரிய நீர்ப்பாசன கட்டமைப்புக்களைப் புனரமைத்தல்.

⇨ சிறந்த விவசாய நடைமுறைகளுக்கு அமைய இரசாயன சேதனப் பசளைகள் உள்ளிட்ட விவசாய உள்ளீடுகளுக்கான மானியங்கள்.

⇨ விஞ்ஞான ரீதியாகத் தயாரிக்கப் பட்ட காணி பயன்பாட்டுத் திட்டம்.

**கடற்றொழில் எழுச்சி**

⇨ உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தின் தலையீட்டின் மூலம் சிறிய அளவிலான மீனவர்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள்.

⇨ பாதிப்படைந்துள்ள மீன்பிடித் தொழிலுக்கு புத்துயிர் அளிக்க எரிபொருள் மானியம்.

⇨ மீன் பெருகுவதைக் கணிக்கவும் அறுவடைக்குப் பின் ஏற்படும் விரயத்தைக் குறைக்கவும் நவீன தொ ழில்நுட்பத்துடன் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல்

⇨ இறால், கடல் அட்டைகள், நண்டுகள், நீர்வாழ் தாவரங்கள் மற்றும் அலங்கார மீன்களின் உற்பத்தியை அதிகரிக்க நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி.

**கால்நடை உற்பத்தி**

⇨ அரச செயற்பாட்டில் உயர்தர தாய் விலங்குகள் மற்றும் குஞ்சுகள்.

⇨ கால்நடை உணவு, மருந்துகள், மற்றும் இதர உள்ளீடுகள் நியாயமான விலையில்

⇨ தயாரிப்பு விற்பனை மற்றும் விநியோகத்திற்கான தனியார் மற்றும் கூட்டுறவு வர்த்தக வலையமைப்பு.

⇨ சிறிய அளவிலான விவசாய அலகுகளை நடுத்தர அளவிலான வணிக அலகுகளாக மாற்றுவதற்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள்.

⇨ பெண்கள் மற்றும் இளைஞர் தொழில்முயற்சியாளர்களின் 20 ஆயிரம் கால்நடை உற்பத்திப் பண்ணைகள்.

**தரமான கல்வி**

⇨ கல்வி அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

⇨ படிப்படியாக கல்விக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6%

⇨ அனைத்து மாணவர்களுக்கும் வீட்டிலிருந்து 3 கிலோமீற்றர் தொலைவில் அனைத்து வசதிகளையும் கொண்ட பாடசாலைகள்.

⇨ தொழிற் கல்வியை 10ஆம் வகுப்பிலிருந்தே தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம்.

⇨ ஆசிரியர் அதிபர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கு துரித நடவடிக்கை.

⇨ ஆசிரியர் தொழில், இலங்கையின் பத்து அதிக சம்பளம் பெறும் தொழில்களுள் ஒன்றாக மாற்றப்படும்.

⇨ மஹபொல மற்றும் மாணவர் உதவித் தொகைகள் வாழ்க்கைச் செலவுகளுக்கு ஏற்ற வகையில்.

⇨ தொழிற் கல்விக்காக பல்கலைக்கழகக் கட்டமைப்பு.

**மாணவர்களுக்கு உயர் பாதுகாப்பு**

⇨ ஆபத்தான நிலையில் உள்ள பிள்ளைகளுக்கான குடும்ப அடிப்படையிலான பராமரிப்பு

⇨ அனைத்து மாணவர்களுக்கும் ஊட்டச்சத்துள்ள உணவு வேளை.

⇨ மாணவர்களின் மன மற்றும் உடல்நலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பாடசாலை மற்றும் சமூகம் சார்ந்த திட்டங்கள்

**நட்புறவுமிக்க அரசாட்சி**

⇨ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கி, மிகக் குறைந்த அலகுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் புதிய அரசியலமைப்பு

⇨ இலங்கை தேசத்தை உருவாக்கும் மற்றும் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் புதிய அரசியலமைப்பு

⇨ பாகுபாட்டிற்கு எதிரான ஆணைக்குழு.

⇨ மெய்நிகர் (ஒன்லைன்) பாதுகாப்பு சட்டத்தில் திருத்தம்.

⇨ விஞ்ஞான ரீதியாக ஒதுக்கப்படும் 25 அமைச்சுகளுக்கு 25 அமைச்சர்கள் மற்றும் தொடர்புடைய பிரதி அமைச்சர்கள். இராஜாங்க மற்றும் திட்ட அமைச்சுக்கள் ஒழிக்கப்படும்.

⇨ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சுங்கத் தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்படாது.

⇨ ஜனாதிபதி மற்றும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் இரத்து.

⇨ அனைத்து குடிமக்களும் தங்கள் சொந்த மொழியில் சேவைகளை அணுகுவதற்கு ஒரு தேசிய மொழிக் கொள்கை

**சட்டத்தை மதிக்கும் சமூகம்**

⇨ அரசியல்வாதிகள் மற்றும் அவர்களது அடியாட்களால் திருடப் பட்ட சொத்துக்களை மீட்க "அரச சொத்து மீட்பு" நிறுவனம்.

⇨ நிதிக் குற்றங்கள், இலஞ்சம் மற்றும் ஊழல் வழக்குகளை விரைவாகத் தீர்ப்பதற்கு நிரந்தர மூவர் கொண்ட உயர் நீதிமன்றம்

⇨ அனைத்து மாவட்டங்களிலும் ஊழல் எதிர்ப்பு விசாரணை அலுவலகங்கள்.

⇨ சட்ட நிர்வாகத்தில் ஏற்படும் காலதாமதத்தைக் குறைப்பதற்கும், குறிப்பிட்ட காலத்திற்குள் அதை முடிக்கவும் சட்ட ஏற்பாடுகள்

⇨ ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை விரைவுபடுத்துதல் மற்றும் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துதல் மற்றும் அடிப்படை மனித உரிமை வழக்குகளின் குற்றவாளிகளுக்கு குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் படி சட்ட நடவடிக்கைகள்.

⇨ நட்பு நீதிமன்ற வலையமைப்புக்கள் ஊடாக வழக்கு விசாரணை தாமதங்கள் களையப்படும்.

⇨ இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணைகள் 6 மாதங்களுக்குள் முடிக்கப்பட்டு வழக்கு தொடரப்படும்.

**மூலோபாய வெளிநாட்டு உறவுகள்**

⇨ இலங்கையின் வெளிநாட்டு தூதரகங்களின் வலையமைப்பு மற்றும் அவற்றின் பணியாளர்களின் எண்ணிக்கை விரிவான மீளாய்வின் பின்னர் மறுசீரமைக்கப்படும்

⇨ தூதரகங்களுக்காக வெளிநாட்டு வர்த்தகத்தை மேம்படுத்தல், சுற்றுலாத்துறை மேம்பாடு, தொழில் வாய்ப்புக்களை விரிவாக்குதல் போன்றன உள்ளடங்கிய செயற்றிறன் குறிகாட்டி.

⇨ பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் இலங்கையின் நிலம், கடல் அல்லது வான்வெளியை பயன்படுத்துவதை அனுமதி வழங்கப்படமாட்டாது.

**அசையாத பொருளாதாரம்**

⇨ மாதாந்த தனி நபர் வரி விலக்கு எல்லை 200,000 ரூபாய் வரை அதிகரிப்பு

⇨ உணவுப் பொருட்கள், சுகாதாரம், பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரணங்களுக்கு வற் வரி விலக்கு.

⇨ உற்பத்திப் பொருளாதாரத்தை விரிவாக்குவதற்காக புதிய அபிவிருத்தி வங்கி.

⇨ மூத்த குடிமக்கள் சேமிப்புக்கான நிலையான வைப்பு வட்டி விகிதத்தை விட 5% அதிக வட்டி

⇨ ஏற்றுமதியை 05 ஆண்டுகளுக்குள் 45 பில்லியன் டொலர் இலக்குடன் பல்வகைப்படுத்தல்.

⇨ நுண்கடன்களை திருப்பிச் செலுத்த முடியாமல் பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்கான சட்ட தலையீடு.

⇨ நுண்கடன், சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்காக பிணையில்லாத கடன்கள் மற்றும் நிலுவையில் உள்ள கடன்களுக்காக சலுகை வங்கி

**தகவல் தொழில்நுட்பத்தில் புதிய அணுகுமுறை**

⇨ தகவல் தொழில்நுட்ப படையின் எண்ணிக்கையை 2030ஆம் ஆண்டாகும் போது 2 இலட்சமாக அதிகரித்தல்.

⇨ மேல், வடக்கு, தென் மற்றும் கிழக்கு மாகாணங்களில் 04 தகவல் தொழில்நுட்ப நிலையங்கள்.

⇨ தகவல் தொழில்நுட்ப பொருளாதாரம் 2030ஆம் ஆண்டளவில் 05 பில்லியன் டொலருக்கான உயர்த்தல்.

**பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு**

⇨ ஆசிரிய சேவைக்கு 20 ஆயிரம் பட்டதாரிகள்.

⇨ விஞ்ஞான தொழில்நுட்பம், பொறியியல், கணித பட்டதாரிகள் 3000 பேர் மற்றும் STEM இல்லாத பட்டதாரிகள் 9000 பேர்.

⇨ தகவல் தொழில்நுட்பத் துறைக்கு 12,000 பட்டதாரிகள்.

⇨ உள்நாட்டு இறைவரி, சுங்கம், வெளிநாட்டு சேவைகள் மற்றும் சுற்றுலாத்துறையில் 3000 வேலை வாய்ப்புக்கள்.

**செயற்திறன்மிக்க போக்குவரத்துச் சேவை**

05 ⇨ வருடத்திற்குள் போக்குவரத்துத் தேவையில் 70 வீதம் பொது போக்குவரத்துச் சேவையிலிருந்து

⇨ உற்பத்தி மூலப்பொருட்கள், எரிபொருள் மற்றும் நுகர்வோர் பொருட்களை கொண்டு செல்வதற்கான புகையிரதச் சேவை.

⇨ நகர மற்றும் கிராமிய வீதிகளில் இரவு வேளைகளில் பொது போக்குவரத்துச் சேவையினை முன்னெடுத்தல்.

⇨ ஐந்து வருடத்தினுள் 50 ஆயிரம் கிலோமீற்றர் கிராமிய வீதிகள் புனரமைப்பு

⇨ போக்குவரத்துச் சேவைகளினுள் பெண்கள் எதிர்கொள்ளும் துன்புறுத்தல்கள் மற்றும் சிரமங்களைக் குறைப்பதற்கும், பாதுகாப்பான போக்குவரத்தினை மேற்கொள்வதற்குமான வசதிகள்

**நிலையான வலுசக்தி**

⇨ தொடர்ச்சியான மின்சார விநியோகத்தை உறுதிப்படுத்தி, பிராந்தியத்தில் குறைந்த மின் கட்டணத்தைக் கொண்ட நாடாக இலங்கையை படிப்படியாக மாற்றுதல்.

⇨ புதுப்பிக்கத்தக்க 2500 மெகாவோட் எரிசக்தியை தேசிய கட்டமைப்பில் இணைப்பதற்கும், அதன் பலன்களை நுகர்வோர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள்.

⇨ இலங்கையின் புவியியல் இருப்பிடத்தைப் பயன்படுத்தி எரிபொருள் மற்றும் எரிசக்தி வர்த்தகத்திற்கான மையமாக இலங்கையை உருவாக்குதல்.

எம். எஸ். முஸப்பிர்

# அனைவருக்கும் வெற்றி



## ஐக்கிய மக்கள் கூட்டணியின் அடிப்படைக் கொள்கை கட்டமைப்பிலிருந்து.....

ஒன்றிணைவோம், அர்ப்பணிப்போம், வெற்றி பெறுவோம் என்ற ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் தேர்தல் விஞ்ஞாபனம் கண்டியில் அண்மையில் வெளியிடப்பட்டது. அந்தக் கொள்கை அறிக்கையின் உள்ளடக்கம் பின்வருமாறு.

**பலமாக பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல்**

"சமூக சந்தை பொருளாதார மாதிரியின் ஊடாக, வளர்ச்சியின் பலன்கள் அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்து கொண்டு, நியாயமான வளர்ச்சியை ஏற்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துவதோடு, பொருளாதாரத்தை வழமை நிலைக்கு மீட்டெடுத்தல் மற்றும் வளமான அபிவிருத்தியை நோக்கிய பாதையில் வெளிப்படைத்தன்மை, நிலைத்தன்மை மற்றும் அனைத்து குடிமக்களுக்கும் பலமாக அமையும் என்பதை உறுதிப்படுத்துவோம்"

**வெளிப்படைத் தன்மையும், பொறுப்புக் கூறலும்**

வலுவான ஊழல் எதிர்ப்பு சட்டங்களை அறிமுகப்படுத்தல், நீதியை நிலைநாட்டுதல், திருடப் பட்ட சொத்துக்களை மீண்டும் பெற்றுக்கொள்ளல், ஊழலை ஒழிப்பதற்காக வலுவான வேலைத்திட்டங்கள், ஊழல்வாதிகளைச் சட்டத்தின் முன் நிறுவத்துவதற்காக சுயாதீன மக்கள் வழக்குரைஞர் அலுவலகம் அரச நிதி முகாமைத்துவத்தில் வெளிப் படைத் தன்மையை ஏற்படுத்தல்.

கடன் நெருக்கடி முகாமைத்துவம் மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவை ஏழை மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கான தற்போதைய திட்டத்தில் திருத்தங்களை முன்வைத்தல்.

**நிதி மற்றும் பரிமாற்ற விகிதக் கொள்கை**

அந்நிய செலாவணி விகிதம் மற்றும் குறைந்த மற்றும் நிலையான வட்டி விகிதங்களுக்கு உத்தரவாதம்.

**வருமான வளர்ச்சியை அடைந்து கொள்ளல்**

வருமானத்தை அதிகரித்துக் கொள்ளல், செலவுகள் மற்றும் ஊழலைக் குறைத்துக் கொள்வதற்காக டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல், நியாயமற்ற வரிக் கட்டமைப்பைத் திருத்தல், வீணான அரச செலவுகள் மற்றும் ஊழலைக் கட்டுப்படுத்தல், பாதிக்கப்பட்ட மக்களுக்காக சமூக பாதுகாப்பு வலையமைப்பை நடைமுறைப் படுத்தல் மற்றும் கல்வி, சுகாதாரத் துறைகளை பலப்படுத்தல்.

**விவசாய சீர்திருத்தங்கள்**

பழைய சட்டங்களை நவீனமயமாக்கல், விவசாய சந்தை வசதிகள் மற்றும் நீர்ப்பாசனம், குளங்களைப் புனரமைத்தல், நிதி மற்றும் காப்புறுதி வசதிகளை வழங்குதல், கிராமப்புற வறுமையை குறைத்தல், உற்பத்தித் திறனை அதிகரித்தல், நிலையான தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை செயற் படுத்துதல்.

**அரச துறை முகாமைத்துவம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல்**

உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் டிஜிட்டல்மயமாக்கல் மூலம் அரச சேவையை புனரமைப்புச் செய்வதற்கான திட்டம், ஊழலை குறைக்கும் அதே வேளையில் முகாமைத்துவம் செய்தல், வெளிப்படைத் தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல்.

**மின்சக்தி மற்றும் பயன்பாட்டு சீர்திருத்தங்கள்**

பிராந்திய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மையமாக மாறுவதை நோக்கமாகக் கொண்டு, 2030ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியை 70 வீதமாக்கும் இலக்கை அடைதல்.

**கமத்தொழில் மற்றும் கால்நடை வள அபிவிருத்தி**

விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்தல், அத்தியாவசிய கடன் வசதிகள், 5000 ரூபாய்க்கு 50 கிலோ உரம், நெல் உற்பத்திக்கு அதிகபட்ச உத்தரவாத விலை, விவசாய விளைபொருட்களுக்கு நியாயமான விலையைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம், விவசாயப் பகுதிகளில் மொபைல் மற்றும் இணையதள வசதிகள் மேம்படுத்தல், விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பினை மேம்படுத்தல், நில பயன்பாட்டு திட்டங்கள்.

**காணி, நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம்**

அரச காணிகளில் வசிக்கும் காணி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு 5 ஆண்டுகளுக்குள் இலவச காணி உரிமைப் பத்திரங்களை வழங்குதல், நீர் மூலங்கள் மற்றும் நீர் பிடிப்புப் பகுதிகளைப் பாதுகாக்கத் தேவையான சட்டக் கட்டமைப்பை வலுப்படுத்துதல்.

**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், கடல் மற்றும் வான்வழி**

களனிவேலி புகையிரதப் பாதை உள்ளிட்ட புகையிரதச் சேவையினை நவீனமயமாக்கல் திட்டங்களை துரிதப்படுத்துதல், பலவழிப்பாதை சுதந்திர போக்குவரத்துக் கட்டமைப்பை அறிமுகப்படுத்துவதன் மூலம் அதிவேக நெடுஞ்சாலைகளின் செயல்திறனை மேம்படுத்துதல்.

**கடற்றொழில் மற்றும் நீர் வளங்கள்**

மீனவ சமூகத்தின் பொருளாதார பலத்தை அதிகரிக்கும் வகையில் அரச மற்றும் தனியார் வங்கிகள் மூலம் தொழில்முயற்சியாளர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கும் திட்டத்தை ஏற்படுத்துதல்.

வெளிநாட்டு சட்டவிரோத மீன்பிடி படகுகளின் மூலம் மேற்கொள்ளப்படும் சட்ட விரோத நடவடிக்கைகளை இராஜதந்திர ரீதியாக தீர்த்தல் மற்றும் அவற்றைக் கண்காணிக்க தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்ப வசதிகளை மேம் படுத்துதல்

**கைத்தொழில் துறை**

மில்லவ, மில்லனிய மற்றும் பிங்கிரிய ஆகிய ஏற்றுமதி செயலாக்க வலயங்களின் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி, அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 25 புதிய கைத்தொழில் வலயங்கள், நாடு முழுவதிலும் பசுமை தொழில்நுட்ப கண்டுபிடிப்பு மையங்களின் வலையமைப்பு, 18+ புதிய நிறுவன திட்டங்கள், புதிய கைத்தொழில்களைப் பதிவு செய்வதற்காக எளிமைப்படுத்தப்பட்ட பல்நோக்கு அலுவலகச் சேவை.

**கல்வி, தொழில் பயிற்சி மற்றும் இளைஞர்கள்**

அனைத்து ஆசிரியர்களுக்கும் இலவச பொது போக்குவரத்து வசதிகள், நீண்டகாலமாக நிலவி வரும் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் சேவைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு முன்னர் கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொண்டு செயற்பாட்டுத் திட்டங்களை உருவாக்குதல், இலங்கையின் அனைத்துப் பாடசாலைகளுக்கும் 100 வீதம் மின்சாரம், நீர் வசதிகள் மற்றும் பௌதீக வளங்களை வழங்குவதன் மூலம் அனைத்துப் பாடசாலைகளையும் வசதிகளைக் கொண்ட பாடசாலைகளாக மாற்றுதல், 6 – 13ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவிகளுக்கு சுகாதாரப் பொருட்களை வாங்குவதற்கான மாதாந்திர உதவித்தொகை, கல்வித் தரம், ஆராய்ச்சி ஒத்துழைப்பு மற்றும் மாணவர் பரிமாற்ற திட்டங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பல்கலைக்கழக இணைப்புத் திட்டங்களுக்கு ஊக்கமளித்தல்.

**பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு வலுவூட்டல்**

மகப்பேறு விடுப்புக்கான செலவை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளல், பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் குறைந்தபட்சம் 25% பெண்களின் பிரதிநிதித்துவம், நுண் கடன் நிறுவனங்களை ஒழுங்குபடுத்துதல், ஊழியர் வருங்கால வைப்பு நிதி, ஊழியர் சேமலாப நியத்தின் மூலம் உறுதிப்படுத்தும் 50% க்கும் அதிகமான பெண்களை வேலைக்கு அமர்த்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் உள்ள நிறுவனங்களுக்கு வரிச் சலுகைகள்

**சுகாதாரம், ஊட்டச்சத்து, சுதேச மருத்துவம் மற்றும் சமூக நலன்**

கர்ப்பிணி தாய்மார்கள், சிறு குழந்தைகளுக்கு திரிபோஷா மற்றும் ஊட்டச்சத்துப் பொதிகளை வழங்குதல், பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு திட்டத்தை செயல் படுத்துதல், 40 வயதுக்கு மேற் பட்ட ஒவ்வொரு குடிமகனுக்கும் 03 ஆண்டுகளுக்கு ஒருமுறை விரிவான மருத்துவ பரிசோதனை, "சுரக்சா சுகாதார காப்புறுதி" திட்டத்தை விரிவாக்குதல்.

**அரச சேவையை மேம்படுத்தல்**

திறமையான மற்றும் பொறுப்புக் கூறும் வகையிலான அரச சேவையை உருவாக்குதல், மனித வள முகாமைத்துவ திட்டத்திற்கு அமைவாக முழு அரச சேவையையும் மறுசீரமைத்தல்.

அரச துறையின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை 17,800 ரூபாவிலிருந்து 25,000 ரூபாயாக அதிகரித்தல், குறைந்த அடிப்படை மாதச் சம்பளத்தை தற்போது தர நிலைகளுக்கான வீதத்தை 24 வீதமாக உயர்த்தி வாழக்கைச் செலவு கொடுப்பனவுடன் அரச சேவையின் குறைந்த சம்பளத்தை 57,500 ரூபாவாக அதிகரித்தல்.

**அரச பாதுகாப்பு**

தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டாலும், அமைச்சர்களின் எண்ணிக்கையில் தற்போதுள்ள வரம்பு பொருந்தும். 06 மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தல், நீதிமன்றங்களினால் ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நபர்களுக்கு நியமனப் பத்திரங்கள் அல்லது அரசாங்கப் பதவி எதுவும் வழங்கப்படாதிருத்தல்

**ஊழல் எதிர்ப்புச் சட்டம்**

அண்மையில் நிறைவேற்றப் பட்ட 2023ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தைத் துரிதமாக நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான வசதிகள் மற்றும் பயிற்சிகளை வழங்குதல்.

எம். எஸ். முஸப்பிர்

# நீ தேடித்தந்த பெருமை

ஸஹீத் நுர்ஜஹான் தம்பதியினரின்
புதல்வன் சஹ்மி
அன்புடன் வரவேற்கின்றோம்
நீ... தேடிய பெருமை
அதுவெல்லாம் எங்களுக்கு
ஓர் நறுமணம்

சரித்திர பிரசித்தி பெற்ற
பேருவளை மண்
ஈன்றெடுத்த தவப்புதல்வன் நீர்
உனது 11 ஆவது வயதில் தகப்பனை
இழந்து பரிதவித்த மகனே
உன் நாமம் 2024இல் மேலோங்கச்
செய்தது இறைவன் அருள்

உன் இதயத்தில் மக்கள் வெள்ளம்
அஸ்ஸலாமு அலைக்கும்
அவர்களுக்கும் சாந்தியும்,
சமாதானமும், சுபீட்சமும்
என்றென்றும் உண்டாகட்டும்
என்ற வார்த்தைகளுடன்
சிரித்த முகம்

உன்திருநாமம் உலகெங்கும்
காட்டுத் தீ போல் பரவ
ஆறு வருட பயிற்சி. அது உன்
வீர நடை உன் விடாமுயற்சி

இன, மத, மொழி பேதமின்றி
நாம் எல்லோரும் இலங்கையர்
உங்கள் அரவணைப்பு
அதுவே என் உறுதியும், குருதியும்
சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை
கவர்ந்த ஆடை

உன் மஞ்சள் நிற டீசர்ட்
அதற்கேற்ற தொப்பி
முதுகில் ஒரு பை
அத்துடன் ஓர் திருநாமம்
அதுவே

இலங்கை ஜனநாயக சோஷலிச
குடியரசின் தேசிய கொடி
இயற்கை எழில் கொஞ்சும்
இடமெல்லாம் புத்துயிர் கொடுத்து
வரவேற்றது அந்தக் கொடி

சஹ்மி நீ ஏழ்மையானவன்தான்
அல்லாஹ்வின் உதவியும், கிருபையும்
அதனை மாற்றி விட்டது
உன் கண்ணீர் துளி
பன்னீர் துளியாக மாறியது

புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே
அல்ஹமதுலில்லாஹ்
கடந்த ஜூலை 13 ஆம் திகதி 2024
பேருவளை சிமி ஹோல்டிங் முன்பாக
ஆரம்பித்தது
1500 அடியா
1500 மீற்றரா
1500 கிலோ மீற்றரா

பல இலட்சக்கணக்கான உன் அடிப்பாதம்
அதுதான் இன, மத, மொழி பேதமின்றி
மக்கள் உள்ளத்தில் நீர்
பேருவளை சிமி ஹோல்டிங் முன்பாக
பயணத்தை ஆரம்பித்து சிமி ஹோல்டிங்
முன்பாக
பயணத்தை முடிவு செய்வது என்றால்
அதற்கு என்ன சொல்வது?









தமிழ்நாடு பழனியில் நடைபெற்ற அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் இலங்கையில் இருந்து சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், மலையக நூல் வெளியீட்டாளரும் சமூக கலை இலக்கிய செயற்பாட்டாளருமான எச்.எச். விக்கிரமசிங்க, யாழ். சிவபூமி அறக்கட்டளை ஸ்தாபகரும் ஆன்மிக அருளுரையாளருமான ஆறு. திருமுருகன் ஆகியோருக்கு, தமிழ்நாடு அறநிலைத்துறை அமைச்சரும் செயல்வீரருமான சேகர் பாபு பிரசாதம், பட்டு வஸ்திரம், வேலும் சேவலும் மயிலும் பொறிக்கப்பட்ட நினைவுப் பரிசு வழங்கி கௌரவிப்பதையும், பேராளர்களும் முருகபத்தரான த. சுகுமாரன், என். கேதீஸ்வரன், எஸ்.எம்.டி. மூர்த்தி தம்பதிகளும், ஆறு. திருமுருகன், எச்.எச். விக்கிரமசிங்க ஆகியோருக்கு அறநிலைதுறை அமைச்சர் டி.கே. சேகர் பாபுவும் நன்றி தெரிவித்து பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

(படம் : கலை ஈரோடு)

# மடிக் கணினி வழங்கல்



ஹாஷிம் உமர் பௌண்டேசனால் வறிய மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்கும் வேலைத்திட்டத்தின் 04ஆம் கட்ட விநியோகம் நேற்று (31) சனிக்கிழமை மாலை மூன்று மணிக்கு கொழும்பிலுள்ள ஹாஷிம் உமர் பௌண்டேசன் தலைமையகத்தில் நடைபெற்றது. பொரலஸகமுவவைச் சேர்ந்த இஸினி உமாயா நவரத்ன, பத்தளத்தைச் சேர்ந்த பாதிமா ஹம்லா, மாளிகாவத்தையைச் சேர்ந்த எம்.அஜ்மல், கல்முனையச் சேர்ந்த எம். எல் றிப்னாஸ், முருத்தலாவ கண்டியைச் சேர்ந்த எம்.ஏ. அஹமட் ஆகியோர் கணினிகளைப் பெற்றுக் கொண்டனர்.

## பொத்துவில் அஸ்மின் பாடல் எழுதும் "காமா"; முதல் பார்வை வெளியீடு

*ARYA AADHI INTERNATIONAL MOVIES தயாரிப்பில் இயக்குனர் மஞ்ஜித் திவாகர் இயக்கும் திரைப் படம் "காமா". இத்திரைப்படத்தின் பூஜை மற்றும் முதல் பார்வை வெளியீட்டு நிகழ்வு அண்மையில் பிரசாத் லேபில் நடைபெற்றது.*


*இத்திரைப்படத்தில் RKசுரேஸ், அஜய் வாண்டையர், ஜனனி, சுவஸ்திகாVJ, அப்புக்குட்டி, KCபிரபாத் மற்றும் பலர் நடிக்கின்றனர். இத்திரைப்படத்தின் பாடல்களை "தப்பெல்லாம் தப்பே இல்லை", "ஐயோசாமி நீ எனக்கு வேணாம்" பாடல் புகழ் கவிஞர் பொத்துவில் அஸ்மின் எழுதுகின்றார்.*



*இலங்கை இசையமைப்பாளர் சனுக்க விக்கிரமசிங்க தமிழ் சினிமாவில் இசையமைப்பாளராக அறிமுகமாகின்றார். சனுக்க இந்திய திரைப்படத்துக்கு இசையமைக்கும் முதல் சகோதர மொழியை சேர்ந்த இலங்கையர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இத்திரைப்படத்தின் முதல் பார்வையை, தயாரிப்பாளரும், பிரபல நடிகருமான Rk சுரேஷ் இத்திரைப்படத்தின் ஊடாக "ஐயோசாமி" பாடல் புகழ் வெளியிட்டு வைத்தார்.*

## சர்வதேச சுப்ரோடோ போட்டிக்கு அப்துல் மாலிக் சூனோ தெரிவு



*இந்திய கால்பந்து கூட்டமைப்பு மற்றும் இந்திய விமானப்படை இணைந்து 62 ஆவது முறையாக நடத்தும் சுப்ரோடோ கோப்பை சர்வதேச போட்டி நாளை செப்டம்பர் 02 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.*

*சுப்ரோடோ கோப்பை சர்வதேச போட்டிக்கு இலங்கை மாணவர்கள் சார்பில் டி.பி. ஜாயா ஸாஹிரா கல்லூரி மாணவன் அப்துல் மாலிக் சூனோ பங்கு கொள்ளவுள்ளார்.*

*தகவல் –கலாபூஷணம் பரீட் இக்பால்*


# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk


### வர்த்தகம்

**207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு**

கொழும்பு -15 664.29 சதுர அடி 3 மாடி கட்டிடத்திற்கு உறுதியான அத்திவாரம் உடைய 2.44 பேர்ச் காணித்துண்டு நீர், மின்சாரத்துடன் துறைமுகத்திற்கு 5.3 கீ.மீ. கிரான்ட்பாஸ் இற்கு 2.2 கி.மீ. ஆமர் வீதிக்கு 3. கி.மீ. பிரதான வீதி 20 அடி. 077 2343339, 077 6170648. 059655

வத்தளை, ஹுணுப்பிட்டிய ஜயந்தி மஹால் சந்தி பிரதான வீதிக்கு முகப்பாக 10 பேர்ச் வர்த்தகக் காணி விற்பனைக்கு. 071 4240384, 071-4240383. 059352

**212 அச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு**

KORD KOR KORS SORDZ சகல சிலின்டர் பெர்பெக்ட் கைன்டர் போரல் கட்டர், புத்தகம் தைக்கும் மெசின், இந்தியன் போல்டி ன் அப்பி யாசப் புத்தகங்களுக்கு 25 x 36 ஹேன்ட் பிளேடிவ் 0777 390394. 059360

**237 கண் மருத்துவர் மற்றும் உபகரணங்கள்**

அதி நவீன சுவிஸ், ஜேர்மன் தயாரிப்பில் உருவான AI தொழில்நுட்பத்துடன் கூடிய நீர் புகா மற்றும் ரீஜார்ஜ் செய்யக் கூடிய காதுகேள் கருவிகள் விக்ரமாரச்சி ஹியரிங் கியாரிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். இலவச செவிப் பரிசோதனை மற்றும் காதுகேள் கருவிகளை அணிந்து பார்க்கும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளலாம். ரூ. 55, 000 முதல் எம்மிடம் காதுகேள் கருவிகள் உண்டு. நாடு முழுவதும் உள்ள எமது கிளைகளில் இச் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தகவல்களுக்கு - 0112 201700. 059797

### வேலைவாய்ப்பு

**309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி**

Accounts அனுபவம் email மற்றும் Computer கையாள்வதில் அனுபவமுள்ள பெண் அலுவலகத்திற்கு தேவை. 075 7663241. 058439

**312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்**

மாலபேக்கு அருகில் மோட்டர் வாகன நிறுவனத்திற்கு அனுபவமுள்ள வாகன பெயின்டர்கள்/ பெல்டர்கள் தேவை. க வர்ச்சிகரமான சம்பளம். அழையுங்கள் - 0777 372160. 059019

**313 வெற்றிடங்கள் அச்சடித்தல்**

HE IDEL BERG GTO - 52 அச்சு இயந்திரத்திற்கு அனுபவமுள்ள மெசின் மைன்டர்கள் மற்றும் அனுபவமுள்ள உதவியாளர்கள் தேவை. குசும்சிரி பிரின்டர்கள், கம்பஹா. 0777 2712 97, 0332228015, 070 527 1297. 059554

**318 வெற்றிடங்கள் டிரைவர்கள்**

கொழும்பு -08 அல்லது புறநகர்ப் பகுதியில் வசிக்கும் அனுபவமுள்ள மற்றும் சிறந்த பழக்க வழக்கமுள்ள 40 வயதிற்கு குறைந்த சாரதி தேவை. தொடர்பு - 071-7969373. மின்னஞ்சல் - c areerke@gmail.com 059175

10 ஓட்டு நர்களுக்கா ன வெ ற்றி ட ங்க ள் . போ க்குவரத்து விதிகள் பற்றிய நல்ல அறி வு, 50 வயதுக்கு கீ ழ்ப்பட்டவர்கள், வாடிக்கையாளர் சேவை திற ன்கள். ஆங்கிலம் பேசும் எழுதும் திறன், மாற்றிக்கொள்ளக் கூடிய பணி நேர ங்கள். கூடுதல் நேரம். உணவு மற்றும் காப்பீட்டு கொடுப்பனவுகளுக்கு உரிமை உண்டு. இந்த விளம்பரம் கிடைத்த 10 நாட்களுக்குள் உங்கள் விண்ணப்பத்தை info@eptt.lk அல்லது தபால் மூலம் அனுப்பவும். HR Department, Executive Premium Transport & Travels (Pvt) Ltd, 6th Floor, Marino Moll Tower, 590, Galle Road, Colombo 03. தொடர்புக்கு - 076 5565504. 059666

**319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்**

பாணந்துறையில் அமைந்துள்ள இரு வீட்டார்கள் மற்றும் விலங்குகள் (நாய் மற்றும் பூனை) 50 இருக்கும் வீட்டில் விலங்குகளுக்கு அன்பு காட்டும் இருவருக்கு வேலை வாய்ப்பு. ஒருவரால் வீட்டார்கள் மற்றும் ஊழியர்கள் இரு வருக்கு உணவு தயாரித்து வீட்டை சுத்தமாக வைத்திருக்கக் கூடியதுடன் அடுத்தவர் விலங்குகளுடன் மற்றும் வீட்டில் முற்றத்தில் வேலை செய்தல் வேண்டும். அன்றாடம் அல்லது ஒன்றாக விடுமுறை எடுக்க முடியாது. உணவு, தங்குமிட வசதிகளுக்கு மேலதிகமா க ஒருவருக்கு மாதத்திற்கு ரூ. 45000/- 0777 449729 அல்லது 076 9681347. 058668

**320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்**

கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள உணவகத்திற்கு கீழ்க்காணும் வெற்றிடங்கள் உண்டு. பகல் இரவு சேவைக்காக. Tea Maker, Dish Washer, Helper. 074 2434127, 077 0745379. 059409

**323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்**

35 வருடம் பழைய அங்கீகரிக்கப்பட்ட போக்குவரத்து நிறுவனத்திற்கு நிரந்தர சேவைக்காக வாகன உதவியாளர்கள் தேவை. தங்குமிட வசதிகள் நிரந்தர சம்பளம், மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் ஊழியர் சேமலாப நிதி வழங்கப்படும். செப்டெம்பர் 05, 06ம் திகதிகளில் மு.ப. 9.00 இற்கும் 12 இற்கும் இடையில வர வும். பெமிலி மூவர்ஸ் தனியார் நிறுவனம். இல. 405பீ, பழைய கொட்டாவ வீதி, நுகேகொடை. தொ. பே. 077-3925594. 059152




### சொந்த விடயம்

**502 தங்க ஆபரணங்கள் மாணிக்கக் கற்கள்**

இரத்தினக்கல் பதித்தல் வேலை வாய்புள் கொழும்பு 5 இலுள்ள தங்க ஆபரணங்கள் உற்பத்தி செய்யும் கம்பனியில் அனுபவமுள்ள இரத்தினக்கல் பதிப்பவர்களுக்கான வெற்றிடங்கள் உண்டு. தங்குமிட வசதிகள் வழங்கப்படும். 0779 955515. 059791

### காணி/தோட்டம்

**616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

தெஹிவளை புதிதாகக் கட்டப்பட்ட வீடு விற்பனைக்கு. 9.5 பேர்ச் 7 படுக்கையறை, 7 குளியலறை, 2 வாகன நிறுத்துமிடங்கள், கராஜ், 2 மாடி வீடி பிரத்தியேக பிரவேச வ ழியுட ன் / நீர்/ மின்சாரம் 89.5 மில்லியன் அழையுங்கள். 071- 36 9 3 9 99 உண்மையான கொள்வனவாளர்கள் மட்டும். தரகர்கள் வேண்டாம். 056026

வெல்லம்பிட்டி, கொட்டிக்கா வத்த - அவிசாவளை வீதிக்கு 150 மீட்டர் 15 பேர்ச் சதுர வடிவ கா ணி நீர், மின்சாரம் உ ண்டு . உடனடியாக வி ற்பனைக்கு - 077 8849001. 058659

**617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு**

வத்தளை கெரவலப்பிட்டிய அதிவேக நெடுஞ்சாலை பிரவேசத்திற்கு அருகில் புதிய வீடு விற்பனைக்கு உண்டு. விலை 380/- இலட்சம். 076 0392204, 076 1377877. 059307

**620 வீடு சொத்து புத்தளம் மாவட்டம் விற்பனைக்கு**

சிலாபம் முகுனு வட்டவன 45 பேர்ச் இல் அமைந்த 4 அறைகள், 2 குளியலறைகளுட ன் முழுமையான வீடு விற்பனைக்கு. 077 -0809441. 058911

**621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு**

34 பேர்ச் காணி - வீடு விற்பனைக்கு. சிங்களத்தில் அழையுங்கள். 0777751132 குண்டசாலை. ஐந்து அறைகள் சமையலறை, மண்டபம். 057857

**624 வீடு சொத்து அநுராதபுரம் மாவட்டம் விற்பனைக்கு**

ரம்பேவ A9 பாதைக்கு முகப்பாக அமைந்துள்ள வியாபாரத்திற்கு பொருத்தமான பெறுமதியான காணி உடனடியாக விற்பனைக்கு. 071-4778899. 058939

**641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு**

மட்டக்குளி முழுமையான இருமாடி வீடு விற்பனைக்கு. நீர் மற்றும் மின்சாரம் வரிக்கட்டணங்கள் வேறு வேறாக செலுத்தலாம். 02 குடும்பத்திற்கும் பொருத்தமானது. 02 வாகனங்களை நிறுத்தி வைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். 075 4437105, 072 4448411. 058804





adz.lk it's what you want
The Trusted Market place for Buying & Selling

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

# வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067


**DEHIWALA / KALUBOWILA**
• Nedimala 25 Perch Land
40 Feet Dead end Road
• Kalubowila 7 PERCH
Facing Hospital Road & Side Road
SALE OR VEHICLE EXCHENGE
0777 880 770 / 077 229 88 99

**POLHENGODA**
COLOMBO 05 ,
6 perch 3 Blocks
SALE OR VEHICLE EXCHENGE
0777 880 770 / 077 229 88 99

**REPAIRS/ SALE**
Grandfather Clocks
D.M.D. Roanos 18 Years of Excellent service.
Service, Repairs, Replacement of "GRANDFATHER" and Wall Clocks undertaken.
WATCH Repair & Service
We Undertake any Condition of your Antique Clocks.
• Original German Grand Father Clock FOR SALE
• Brand New Cases of Grandfather Clocks also available undertaken in Colombo and any outside places.
• Damaged cases of Grandfather Clocks are Newly made by us
0777 658 621/ 0717 371 122/ 0112 754 545
No:620B,Highlevel Road,Wijerama,Nugegoda.

**LUXURY HOUSE FOR SALE IN KANDY**
28.5 Perches, 02 Unit house for sale in Heerassagala, Kandy. 6 bedrooms, 4 bathrooms, Living, Pantry, Maids room, ample Parking with a beautiful Garden
Beautiful Scenic Neighbourhood
QUICK SALE 54.5 Million
Contact: 0772 257 225 / 0777 784 020

**CHINA TOUR**
Business Tour & Goods Import
CBM Rs.75000 - 95000
✓ Visa
✓ Airport Pick up & Drop
✓ Accommodation
✓ Breakfast
✓ Sinhala Speaking Market Guide
✓ Shopping
✓ Night Market Visit
✓ Import Guide
HOTLINE 0720 433 405
JKS HIRO GLOBAL PVT LTD

**VICTORIAN GUEST**
Bandarawela
victorianbungalow.lk
2km Away from Railway Station & Bandarawela Town
බණ්ඩාරවෙල නිවාඩුවක් ගත කරන ඔබට සුන්දර නිවාඩු නිකේතනයක්...
Rs. 22,000/- (Full Bungalow) - A Cook available
077 3 711 196 | 070 2 536 896

**Sun Lanka** 077 306 4444
SEAT COVERS
• Alto • Wagon R • Maruti 800 • Stingray
• Aqua • Rush • Axio • Axia • Premio • Vitz
• Vezel • Fit • Insight • Grace
SUZUKI TOYOTA HONDA

**MORATUWA**
LAKSHAPATHIYA
LAND FOR SALE
approximately 13.77 perches close to Galle road katubedda K-Zone
STRICTLY NO BROKERS CALL AFTER 1.00.PM
0773 376 651

**MORATUWA** LAKSHAPATHIYA
19 PERCH LAND WITH HOUSE FOR SALE
CLOSE TO GALLE ROAD
K-Zone katubedda
0776 845 297
STRICTLY NO BROKERS
Call after 3.00 pm

**KALAPALUWAWA**
A HOUSE TO BE SOLD
LOCATED OFF KALAPALUWAWA, ALONG WALPOLA ROAD, AGGONA. SITUATED ON A SPACIOUS 18.5 PERCH PLOT OF LAND, FACING THE MAIN ROAD
with 04 bedrooms, 02 attached bathrooms, Living and sitting room, Kitchen, Servent toilet, Covered parking space, Garden, 02 water lines, 02 electricity lines, 01 Telecom line (fiber optic)
IT OFFERS AMPLE LIVING SPACE FOR YOUR COMFORT.
KEY DISTANCES: 3KM TO BATTARAMULLA, 4KM AWAY FROM RAJAGIRIYA, 10KM TO TOWNHALL
CONTACT - 0740 682 335 NO BROKERS

**TREADMILL FOR SALE**
Treadmill Make ; Pro-Form model 410i (American)
Sparingly used since 2019.
Width 72 cm,
Length : 170 cm
Adjustable platform incline,
Platform cushions, foot rail, Heart rate monitor,
Foldable for storage
Rs. 250,000/-
T.P. - 0777 445 253

**NUWARAELIYA**
KALUKELE ROAD
BONAVISTA
IN FRONT OF GREGORY LAKE, 15 P
VALUABLE LAND FOR SALE.
Rs. 1,800,000/- Per perch
Contact: 0779 494 305, 0763 162 627

**Advertise Here**
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuo@gmail.com

**HOUSE FOR RENT EKALA**
Rs. 55000.00 PER MONTH 3 months advance.
NEAR MICHELIN TYRE COMPANY
3 bedrooms, Solar Hot-water, Municipal Water, CCTV, Burglar Alarm, All-around parapet walls, Parking Space for 02 cars.
+1201 600 9874 (Whatsapp - Only)

**හර්නියා**
රෝගීන් සඳහා
ශල්‍යකර්මවලින් තොරව ඖෂධීය ප්‍රතිකාර
ප්‍රවීණ වෛද්‍යවරයෙක් මඟින්
සෙත් රෝහල
හෝමාගම
0112 748 808, 0113 031 717
0714 282 721

**BAGATALLE ROAD, COLOMBO 3**
FURNISHED APARTMENT FOR SALE
KEY FEATURES
Sale with Foreign Tenant (optional), Floor area – 1700 sq.ft., 3 Bedrooms, 2 Bathrooms, Gym, Swimming pool, 24 hour security, Exclusive car parking, COC,
Deeds available
Price Rs. 83mn
INSPECTION BY APPOINTMENT ONLY
CONTACT : 0761 843 911

**IMMEDIATE SALE**
EXTENSIVE SELECTION AVAILABLE
ex-stock of Indo-Western ladies Kurtis, 2 pcs Suits, 3 pcs Suits, Skirts and fancy shawls collection of about 300-350pcs
LOOKING FOR BULK BUYER ONLY.
IDEAL FOR RETAILERS
FOR INQUIRIES, PLEASE CALL
0779 401 380

**VACANCY**
FOR MARKETING EXECUTIVE
A VACANCY EXISTS FOR THE POST OF MARKETING EXECUTIVE AT OUR HIGH QUALITY PAPER SACKS MANUFACTURING INSTITUTION AT MORATUWA, KATUBEDDA
RESPONSIBILITIES
• Maintaining cordial relations with the present customers of the institution and retaining them.
• Actively liasing with the customers and the expansion of the customer base of the institution.
• Contribution to the overall sales target by achieving or exceeding the sales target of the institution.
QUALIFICATIONS
• Passed G.C.E. A/L in any stream.
• Age between 21- 35 years
• Minimum 06 months experience in a similar position.
• Possession of a valid driving licence (riding licence)
• Sinhala & English language proficiency ( fluency in Tamil will be an added advantage)
• Working knowledge of Microsoft Word, Excel, Internet and E mail (online marketing ability) will be treated as an additional qualification.
• Self motivated, Target achieving personality.
FROM US
• Competitive, attractive salary.
• Opportunity to be a leader instrumental in success and growth of our institution.
If you have a self motivated target achieving personality and acumen in business development be a member of our team and play a decisive role for our success.
HOW TO APPLY
Please email your Bio Data marked as "Post of Marketing Executive" to
LANKA PACK (HAKIMI PAPER SACKS (PVT) LTD)
info@hakimipaper.com 0777 703 011

**FOR RELIEVING**
JOINT PAINS & DIFFICULTIES IN CLIMBING STAIRCASES UP & DOWN, WALKING AND STANDING UP.
100% Natural
MIRACLE REMEDY FOR CURING JOINT DISORDERS INTERNALLY.
DEEGAYU JOINTHEALER PLUS
COMPLETE CURE AFTER 4 WEEKS USE.
ONLY RS.2490.00 TO BE DELIVERED TO YOUR DOORSTEP.
DEEGAYU HELA OSU COMPANY
KANDY ROAD, KALAGEDIHENA
(IN FRONT OF FILLING STATION.)
0117 673 402
0710 397 399 / 0710 397 644
JOIN AILMENT CLINIC - ON EVERY SUNDAY FROM 9.30 A.M. TO 5.00 P.M.

RELIANCE INTERNATIONAL MIGRATION SERVICES
MEET OUR DIRECTOR & SENIOR MIGRATION AGENT
THILINIKA WIJESINGHE
FOR ALL YOUR VISA REQUIREMENTS TO AUSTRALIA
• Skilled Migration - Direct, State Nomination & Sponsored options
• Student Visas - Student & Guardian visa
• Visitor Visas - Tourist, Sponsored Visas, Business visitor
• Family - Parent visas, Partner visas, Child Visas, Other Relative visas
• Dependent Visa - Student visas, Graduate visas
• Employment Visa - Training, Temporary Work Visas & Permanent Visas
• Resident Return Visas
• Visa Refusals - Tribunal Appeal
• Australian Citizenship
COLOMBO - 2024 From 22nd to 26th OCTOBER 2024
CONSULTATION FEES WILL APPLY
Email us your CV for a free eligibility check. Eligible clients will be contacted with more information to reserve your one on one consultation.
colombo@rimigrations.com
Hotline: +94 76 767 8281 www.rimigrations.com


## வாரமஞ்சரி BUDGET adz போட்டோ குறும் விளம்பரம்



Mitsubishi Fuso Crew Cab 2019 - Full option, manual transmission, full aluminium body with rear hydraulic door, first owner, 3000cc registered as Dual purpose vehicle Rs 14500,000 - 0777840141 kus - 1



Nissan Murano 2012 SUV registered, full option, 2500cc, tiptronic transmission, 18" alloys new tires, very spacious interior, Rs 8850000 0777840141 kus - 2



Tata Ultra 612 2018 model, 3800cc, 16.5 feet thatu AC, P/S first owner, kandy Rs 3950000 0777840141 kus - 3



Hyundai H1 Starex 2015 model registered 2018 wp PJ full option, 2500cc common rail turbo Diesel, 6 speed manual transmission, Dual AC, 7 seater, fridge, brand new 17" alloys & tires, only done 42000km Rs 12 million 0777840141 kus - 4


Looking for Your Life Partner..,
Gather with, SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Pay online and save your precious time
BANK OF CEYLON Acc. No. 000000377 Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343

# ஒப்பந்தங்கள் மீறப்பட்டால் IMF திட்டங்களை இழந்து விடுவோம்

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க



**தமது அரசாங்கத்தின் கீழ் சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட நிபந்தனைகளை மாற்றப்போவதாக எதிர்க்கட்சி வேட்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் ஏற்படப் போகும் தாக்கங்கள் என்ன?**

எதிர்க்கட்சிகளால் வழங்கப்படும் வாக்குறுதிகள் நடைமுறைப்படுத்தப்படுமானால் அந்த நேரமே சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தை இந்நாடு இழக்க நேரிடும். வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது முதன்மைக் கணக்கில் நேர்மறையான நிலையினைப் பேணுவது என்பது எங்களுக்குள்ள முக்கிய இலக்குகளில் ஒன்றாகும். எனினும் ஒவ்வொரு கட்சியும் வழங்கியுள்ள யோசனைகளைப் பார்க்கும் போது, சிலர் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்று கூறுகிறார்கள். எவ்வாறாயினும், ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்தைத் தவிர்த்து எதிர்க்கட்சிகள் வழங்கும் வாக்குறுதிகளுக்கு அமைய செயற்படத் தொடங்கினால் அது நடைமுறைப்படுத்தப்படும் நேரமே இந்நாட்டிற்கு சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம் இல்லாமல் போகும் என்பதை நான் மிகவும் பொறுப்புடன் கூறிக் கொள்கிறேன்.

காரணம், நாம் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.2% ஆகப் பேண வேண்டும். எதிர்க்கட்சிகள் குறிப்பிடும் வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தினால் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மொத்த தேசிய உற்பத்தியில் 11.9 வீதம் வரை விரிவாகும்.

அதேபோன்று முதன்மை கணக்கு இருப்பை நேர்மறை 2.3% இல் பராமரிப்பது எங்கள் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். ஆனால் எதிர்க்கட்சிகள் வாக்குறுதிகளை நிறைவேற்றினால், முதன்மைக் கணக்கின் இருப்பு நேர்மறை 2.3% லிருந்து எதிர்மறை 4.3% ஆகக் குறையும். அதன்பிறகு, சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை செயல்படுத்த முடியாது. இதன்பிரகாரம் இந்த வேலைத்திட்டம் எமக்கு இல்லாமல் போகும். நாம் இந்நாட்டு கடன் வழங்குநர்களுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள இணக்கப்பாடுகளும் இல்லாமல் போகும்.

**வரிச் சலுகைகளை வழங்குவது தொடர்பில் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?**

மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி வருகின்றோம். அதேபோன்று, தனியார் துறை வரி செலுத்துவோருக்கு சலுகைகளை வழங்குவது குறித்தும் ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார். அது தொடர்பாக, செப்டம்பர் 2023 முதல் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன்படி தற்போது ஆண்டுக்கு 12 இலட்சம் என்ற வரி விலக்கு வரம்பை தக்க வைத்துக் கொள்ளவும், 5 இலட்சத்தை 720,000 ஆக உயர்த்தவும் IMF உடன் பேச்சுவார்த்தை நடத்தி இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றோம். இது தொடர்பான இறுதி இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதன் பின்னர் 2025 ஏப்ரல் மாதத்திற்குள் வரி குறைப்பு நடைமுறைப்படுத்தப்படும் என நம்புகிறோம்.

**வரி குறைக்கப்படும்போது இழந்த வருமானத்தை திரும்பப் பெறுவதற்கான திட்டங்கள் உள்ளதா?**

வரிக் குறைப்புகளால் இழக்கப்படும் வருவாயை ஈட்டிக் கொள்வதற்கு IMF உடன் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளோம். இதன்போது தற்போதுள்ள வரிகளில் மேலதிக அழுத்தங்களோ அல்லது புதிய வரி விதிப்புக்களோ இருக்காது. நாம் இந்த வரி சீர்திருத்தத்தை படிப்படியாகவும், மீண்டும் மீண்டும் நெருக்கடிகள் வராத வகையிலும் முன்வைக்கின்றோம்.

அத்துடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் சுமார் 1000 பில்லியன் ரூபா வரி நிலுவையில் உள்ளதாகவும் அவை முறையாக அறவிடப்படுவதில்லை எனவும் சில தரப்பினர் கூறுகின்றனர்.

ஆனால் அதில் 868 பில்லியன் ரூபாவுக்கு வரி மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2023ஆம் ஆண்டளவில் 188 பில்லியன் ரூபா நிலுவைத் தொகையாக இருந்ததுடன், 2024ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 104 பில்லியன் ரூபா அந்த நிலுவைத் தொகையில் இருந்து வசூலிக்கப்பட்டுள்ளது.

**வறிய மக்களுக்கான நிவாரணங்கள் தொடர்ந்து வழங்க வேண்டியுள்ளதல்லவா?**

இந்த நாட்டில் வாழும் வறிய மற்றும் ஆபத்தான நிலையில் வசிக்கும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் அஸ்வெசும என்ற முறையான செயற்பாட்டினை நாம் அறிமுகப்படுத்தினோம்.

இதன்மூலம் மிகவும் ஏழ்மையான குடும்பத்திற்கு மாதாந்தம் 15,000 ரூபாய் வழங்கப்படுகின்றது. இவ்வாறாக அரசாங்கம் இருபத்து நான்கு இலட்சம் குடும்பங்களுக்கு மூன்று பிரிவுகளின் கீழ் 205 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. தற்போது 18 இலட்சம் குடும்பங்கள் எந்தவித அரசியல் தலையீகளும் இன்றி இத்திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெற்று வருகின்றன.

எம். எஸ். முஸப்பிர்

# சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை மாற்றினால் அனைத்தும் தடைப்பட்டுவிடும்

## ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா



**தேசிய மக்கள் சக்தி முன்வைத்துள்ள கொள்கைக்கு அமைய செயற்பட்டால் தற்போது செயற்பாட்டில் உள்ள சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் முழுமையாக தடைப்பட்டு விடும் என நீங்கள் கூறியுள்ளீர்கள். நீங்கள் அவ்வாறு கூறுவதற்கு என்ன காரணம்?**

ஆம், நான் அவ்வாறு கூறக் காரணம், 2020 ஆகஸ்ட் மாதம் IMF இடம் செல்லுமாறு முதலில் கூறியது நான்தான். அப்போது அன்று இந்த தேசிய மக்கள் சக்தியினரும், அரசாங்கத்தில் இருந்தோரும் சிரித்தார்கள். அன்று அவர்கள் IMF இடம் செல்ல வேண்டிய தேவை இல்லை என்றார்கள். அதன் பின்னர் அரசாங்கம் IMF க்குச் செல்ல வேண்டும் என தீர்மானித்த போது நாம் அதனை எதிர்க்கவில்லை. தற்போது இவர்கள் IMF தவிர வேறு மாற்று வழிகள் இல்லை என்கிறார்கள். IMFஇன் ஒப்பந்தத்தில் ஒரு வசனத்தையோ, புள்ளியையோ மாற்ற முடியாது என இப்போது கூறுகின்றார்கள். இந்த சந்தர்ப்பத்தில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு IMF அவசியமாகும். நாம் இதனை ஆரம்பத்திலிருந்தே விளங்கி வைத்திருந்தோம். எனினும் நாம் ஆரம்பத்திலிருந்தே கூறிவந்தோம், IMFஇன் சில நிபந்தனைகள் மக்களை கஷ்டங்களுக்கு உள்ளாக்குவதால் சில விடயங்களை மாற்றுவதற்கு பேச்சுவார்த்தை மேற்கொள்வோம் என. எனினும் எதனையும் மாற்ற முடியாது என அரசாங்கம் கூறியது. IMFஇன் அடிப்படை தொடர்பில் தாம் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக தேசிய மக்கள் சக்தி தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது. அவ்விடத்தில்தான் பிரச்சினை உள்ளது. IMFஇன் அடிப்படையாக இருப்பது கடன் செலுத்துவதை நிலைத்தன்மை பகுப்பாய்வாகும். நாம் கடனைச் செலுத்திக் கொள்ள முடியாமலேயே நாம் வங்குரோத்தடைந்தோம். கடன் செலுத்துவதை நிலைத்தன்மையாக்குவதற்கே நாம் IMF இடம் சென்றோம். அதில் அடிப்படை ஒன்றுள்ளது. அந்த அடிப்படையினை ஒரு போதும் மாற்ற முடியாது.

அந்த அடிப்படையை மாற்றினால் IMFஇன் முழு வேலைத்திட்டமும் வீழ்ந்துவிடும். நாம் அடிப்படையை மாற்றம் செய்யாமல் IMF உள்ளடக்கத்தையே மாற்றுவதற்கு எதிர்பார்க்கின்றோம். இந்த ஒப்பந்தத்தில் ஒரு வசனத்தையோ, புள்ளியையோ மாற்ற முடியாது என அரசாங்கம் கூறினாலும் ஜனாதிபதி இப்போது வரியினை மாற்றுவது தொடர்பில் IMF உடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகக் கூறுகின்றார். அப்படியாயின் அவர்கள் கூறியிருப்பது பொய்தானே.

**மக்களுக்கு பொய் கூறாமல் சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் வெளிப்படையான பேச்சுவார்த்தைக்கு வருமாறு ஜனாதிபதி பகிரங்க அழைப்பு விடுத்துள்ளாரே?**

ஆம். நாம் தயார். நாம் அதனை ஏற்றுக் கொள்கிறோம். நாம் எந்த நேரத்திலும் விவாதத்திற்குத் தயார். உண்மையில் நாம் கூற வேண்டியிருப்பது இந்த அரசாங்கம் வெளிப்படைத்தன்மையின்றியே இவ்வனைத்து விடயங்களையும் செய்துள்ளது. அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் கையொப்பமிட்டு முடிக்கும் வரைக்கும் எமக்கு எதையுமே காண்பிக்கவில்லை. அனைத்தையும் செய்து முடித்துவிட்டு தற்போது விவாதத்திற்கு வருமாறு அழைக்கிறார்கள். நாம் கடன் வழங்குனர்களோடு பேச்சுவார்த்தை செய்யக் கேட்டோம். அதனை வழங்கவுமில்லை. இப்போது நாம் கூறும் விடயங்களை மக்கள் நம்புகிறார்கள் என்பதை அறிந்து கொண்டு விவாதத்திற்கு வருமாறு அழைக்கிறார்கள். நாம் எந்த நேரத்திலும் ஆயத்தமாகவே இருக்கின்றோம்.

**IMF நிபந்தனைகளை மாற்ற முடியாது என அரசாங்கம் கூறுகின்றது. அவ்வாறு மாற்றினால் நாடு மீண்டும் வீழச்சியடைந்து விடும் என ஜனாதிபதி கூறுகின்றாரே....?**

ஏன் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மாற்ற முடியாது? அதனை மாற்ற எம்மால் முடியும். அடிப்படையினை மாற்றம் செய்யாமல் மக்களுக்கு கஷ்டங்களைக் கொடுக்கும் சில விடயங்களை மாற்றுவதற்கு பேச்சுவார்த்தையினை மேற்கொள்ள முடியும். மாற்ற முடியாது எனக் கூறினாலும் தற்போது ஐ.எம். எப்புடன் வரியினை மாற்றுவதற்கு பேச்சுவார்த்தையை மேற்கொள்கின்றார்கள். அப்படியாயின் இப்போது எப்படி முடிந்தது? ஒரு வரியைக் கூட மாற்ற முடியாது என அவர்கள் தானே கூறினார்கள்.

**ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ் IMF உடன் எந்த நிபந்தனைகள் தொடர்பில் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எதிர்பார்க்கின்றீர்கள்?**

நாம் IMF உடன் இரண்டு விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம். IMFஇன் ஒப்பந்தத்திற்கு அமைய எடுத்துக் கொண்டால் பொருளாதாரம் தொடர்பில் தேவையான ஊக்குவிப்புக்கள் அதில் இல்லை.

ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நாட்டை திருப்ப வேண்டிய தேவை எமக்குள்ளது. IMF வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் நிலையில் அதனுள் இருந்து கொண்டே இதனைச் செய்ய வேண்டும். இதில் அடிப்படையினை மாற்ற வேண்டிய தேவை இல்லை.

ஊக்கத்தை எவ்வாறு வழங்குவது மற்றும் முதலீடுகளை எவ்வாறு கொண்டு வருவது என்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்த எதிர்பார்க்கிறோம். இரண்டாவது பிரச்சினை வரி தொடர்பான கொள்கையாகும். இந்த வரி விதிப்பில் அநீதி உள்ளது. அடிப்படையில் உழைக்கும் மக்கள் மீதான வருமான வரி நியாயமற்றது. அதை மாற்ற தேவையான திருத்தங்களை கொண்டு வருவோம்.

**சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மாற்ற முடியாதவாறு அதனை நிலையானதாக்கும் வகையில் ஐந்து சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளனவே...?**

சில சட்டமூலங்களை நாம் எதிர்க்கவில்லை. உதாரணமாக மத்திய வங்கியை சுயாதீனமாக்கும் சட்டமூலம், பொருளாதார முகாமைத்துவ சட்டம், அரச நிதிக் கட்டுப்பாட்டுச் சட்டம், ஊழல் எதிர்ப்புச் சட்டம் போன்ற சட்டங்களை நாம் எதிர்க்கவில்லை. நாம் எதிர்ப்பது பொருளாதார பரிமாற்றச் சட்டத்தின் ஒரு பகுதியையேயாகும்.

எம். எஸ். முஸப்பிர்

# சட்டத்தின் ஆட்சியை செயற்படுத்தும் வேட்பாளர்கள் எவருமில்லை

## தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ



**இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தேர்தலில் தேசிய ஜனநாயக முன்னணி கட்சியில் கார் சின்னத்தில் போட்டியிடுகிறீர்கள். தேர்தல் பிரசார நடவடிக்கைகள் எவ்வாறுள்ளன?**

எமது வேட்பாளர்கள் தற்போது பழமைவாத முறையில் வாக்கு சேகரித்து வருகின்றனர். இன்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இருப்பது ஒரு ஆசனம் மாத்திரமேயாகும். மொட்டு கட்சியில் திரண்டிருந்த குழுவினர் தற்போது கலைந்து சென்று விட்டனர். இந்நாட்களில் கூலிக்கு பணம் செலுத்தி பல்வேறு விடயங்களை வழங்கி மக்களைக் கூட்டியே கூட்டங்களை ஏற்பாடு செய்கின்றார்கள். மக்களைக் கூட்டங்களில் காட்டிய பிறகு வாக்குகள் கிடைக்கும் என அவர்கள் நினைக்கிறார்கள். இலங்கையில் மக்கள் தொகையில் அதிகபட்சமாக 200,000 பேர் மட்டுமே அரசியலுக்கு வருகிறார்கள், கூட்டங்களில் கலந்து கொள்கிறார்கள், ஏற்பாடு செய்கிறார்கள். எனினும் 171 இலட்சம் வாக்காளர்கள் இருக்கின்றார்கள். அடுத்ததாக இம்முறை கட்சியை மக்கள் பார்க்கப் போவதில்லை. இம்முறை வேட்பாளர்களையே மக்கள் பார்க்கின்றார்கள். இப்போது வாக்காளர்கள் முன்னேறிவிட்டார்கள். வெயிலில் காய்ந்து மழையில் நனைந்து கொண்டு கூட்டங்களுக்கு வருமளவுக்கு மக்கள் இன்னு முட்டாள்கள் அல்ல. அவர்கள் இன்னும் முன்னேற வேண்டும். இன்று இந்த கருத்தை உருவாக்குவதற்கு சமூக ஊடகங்கள் அதிக பொறுப்பு வகிக்கின்றன. பிரதான ஊடகங்கள் மற்றொரு 30% வீதமான பொறுப்பை வகிக்கின்றன. நானும் சமூக ஊடகங்கள் மற்றும் பிரதான ஊடகங்களிலும் விளம்பரம் செய்கிறேன். அதேபோன்று, மாவட்ட அளவிலான கூட்டங்களை ஏற்பாடு செய்கின்றேன். அடுத்த பாராளுமன்றத்திற்கு 225 வேட்பாளர்களையும், மாகாண சபைக்கு 450 அபேட்சகர்களையும், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு 8800 அபேட்சகர்களையும் பெறுவதற்காக மாவட்ட மட்டத்திலான ஏற்பாடுகளை நான் செய்து வருகிறேன்.

**இந்த முறை கட்சி அரசியலில் பயனில்லை என்கிறீர்களா? ஆனால் வரலாற்றில் நீங்கள் பல சக்திவாய்ந்த வேட்பாளர்களோடுதான் போட்டியிட்டிருக்கின்றீர்கள். வெற்றியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

இந்த 38 வேட்பாளர்களிலும் இருப்பது ஊழலேயாகும். சில வேட்பாளர்களின் ஆலோசகர்களும் இப்போது வேட்பாளர்கள். அமைச்சரவையிலிருந்து மக்களால் விரட்டப்பட்ட அமைச்சர் ஒருவரும் இப்போது வேட்பாளர். இந்த பிரதான வேட்பாளர்கள் தகுதியற்றவர்கள். அதனால் புள்ளிவிபரங்கள் தேவையில்லை. இந்த முறை வெற்றிக்கு 50 வீதம் என்பது பொருந்தாது. 38 வீதத்தினால், 40 வீதத்தினால், 45 வீதத்தினால் கூட ஜனாதிபதியாக முடியும். சஜித் பிரேமதாசாவுக்கு கடந்த முறை பெற்ற 27 இலட்சம் வாக்குகள் உள்ளன. ஜே. வி. பிக்கு நான்கு இலட்சத்து நாற்பதாயிரம் வாக்குகள் உள்ளன.

இது இன்னும் அதிகரிக்கும் என கற்பனை செய்து 60 இலட்சமாக கணிப்பிட்டால் இந்நாட்டில் 140 இலட்சம் வாக்குகளும் அளிக்கப்பட்டு மீதி 80 இலட்சத்திற்கே இம்முறை போட்டியுள்ளது. இதில் 50 இலட்சம் வாக்குகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்குகள். சந்திரிக்காவின் காலத்தில் இது 40 இலட்சமாக இருந்தது. மஹிந்தவின் காலத்தில் 50 இலட்சமாக அதிகரித்தது.

அதற்கு மேலே செல்வது தமது பிரபலத்தால்தான். 1994ஆம் ஆண்டிலிருந்து இன்று வரைக்கும் இந்நாட்டு மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட அனைவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முதன்மையாகக் கொண்டு வந்தவர்களேயாகும். 2010ஆம் ஆண்டு மஹிந்த யுத்தத்தை வெற்றி கொண்டதால் 50 இலட்சமாக இருந்த வாக்குகளை 60 இலட்சமாக அதிகரித்துக் கொண்டார். கோட்டாபய வழங்கிய வாக்குறுதிகளால் அது 69 இலட்சமாக அதிகரித்தது. எனினும் வாக்கு வங்கியில் 50 இலட்சமாகும். அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்குகளாகும். மைத்திரிபால சிறிசேனா மஹிந்தவை கட்சியிலிருந்து வெளியேற்றிய பின்னர் அவர் பொதுஜன பெரமுன கட்சியை ஆரம்பித்தார். 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அவர் இந்த 50 இலட்சம் வாக்குகளைப் பெற்றார். ஜனாதிபதித் தேர்தலில் அது 69 இலட்சமாக அதிகரித்தது. தேசிய வளங்களைப் பாதுகாக்கும் பயணத்திற்குத் தேவையான முறைகள் என்னிடம் மாத்திரமே உள்ளன. கடந்த காலங்களில் நான் அதனை நிரூபித்துள்ளேன்.

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு உங்களிடம் உள்ள தகுதிகள் என்ன?**

விசேட தகுதி தான் அனுபவம். பாராளுமன்றத்திற்கு பிரதிநிதிகளை அனுப்புவது விதிகளைப் போடுவதற்கு அல்ல. அவர்கள் தேசிய அரசியலைச் செய்ய வேண்டும். நாட்டின் கொள்கைகள், சட்டங்களை உருவாக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க சட்டங்களை வகுத்தார். சட்டங்களை வகுத்த வேறு எந்த அபேட்சகர்கள் இருக்கின்றார்களா? லலித் அத்துலத்முதலிதான் எமது நாட்டில் அதிகமான சட்டங்களை வகுத்து சாதனை படைத்தவர். அதனை விடவும் இரண்டு மடங்குக்கும் அதிகமான சட்டங்களை நான் வகுத்திருக்கின்றேன். அரசியலமைப்பின் செயற்பாடுகளை நான் செய்திருக்கின்றேன். எமது நாட்டை ஆட்சி செய்வதற்கு நாம் கற்றவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.

**முதலில் நீங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கப் போவதாக முன்னாள் ஜனாதிபதி கூறியிருந்தார். பத்து, பதினைந்து இலட்சம் வாக்குகளைக் கொண்ட கட்சியில் போட்டியிடுவதை ஏன் நிராகரித்தீர்கள்?**

1952ஆம் ஆண்டு தேர்தலில் பண்டாரநாயக்க கட்சியில் போட்டியிடவில்லையே. அவர் போட்டியிட்டது சக்கர சின்னத்திலாகும். சந்திரிக்கா போட்டியிட்டது கதிரைச் சின்னத்தில். மஹிந்த போட்டியிட்டது நானும் மங்களவும் உருவாக்கிய வெற்றிலைச் சின்னத்திலாகும். கோட்டாபய போட்டியிட்டது மொட்டு சின்னத்திலாகும். எனவே கட்சியின் சின்னம் முக்கியமானதல்ல. கொள்கையே முக்கியமானதாகும் கட்சியின் ஆதரவாளர்கள் கடந்த காலங்களில் கூட வேறு சின்னங்களில் போட்டியிட்டவர்களுக்கும் வாக்களித்திருக்கின்றார்கள்.

எம். எஸ். முஸப்பிர்

# IMF ஒப்பந்தத்தை மீளாய்வு செய்வோம்

## தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் டாக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ



**மக்களுக்கு பொய் கூறாமல் சர்வதேச நாணய நிதியத்துடன் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு ஜனாதிபதி கூறுகிறாரே?**

ஜனாதிபதி IMF தொடர்பில் பேச்சுவார்த்தை வருமாறு கூறுவது இப்போதுதானே. நாம் வெளிப்படையாக IMF உடன் இரண்டு தடவைகள் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டோம். அவர்களுக்கு நாம் எமது நிலைப்பாட்டைத் தெளிவாகக் கூறியுள்ளோம். நாம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமாக இராஜதந்திர முறையில் IMF உடன் பேச்சுவார்த்தைக்கு தயார். அதேபோன்று இந்த ஒப்பந்தம் தொடர்பில் மீண்டும் மீளாய்வு செய்வதற்கும் எதிர்பார்க்கின்றோம். மக்கள் ஆணையைப் பெறும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கு தாம் தயார் என IMF கூறியிருக்கின்றது. அவர்களது செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சில இணக்கப்பாடுகளுக்கு வர முடியும் என்று அவர்கள் வெளிப்படையாகவே கூறியிருக்கின்றார்கள். நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி என்ற வகையில் இன்னும் சில நாட்களுக்கு அவரது நிலைப்பாட்டிற்கு அமைய ஐ.எம். எப்புடன் செயற்பட அவருக்கு முடியும். அதன் பின்னர் அடுத்த அரசாங்கம் மக்கள் ஆணைக்கு அமைய செயற்படும். அப்போது அது தொடர்பில் மீண்டும் மீளாய்வு செய்வதற்கு, பேச்சுவார்த்தை மேற்கொள்வதற்கு புதிய அரசாங்கத்தினால் முடியும். மக்கள் ஆணையைப் பெற்ற அரசாங்கம் மற்றும் ஜனாதிபதிக்கு அதனைச் செய்ய வாய்ப்புள்ளது.

**சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மாற்ற முடியாது என்று அரசாங்கம் கூறுகிறது. அதேபோன்று சர்வதேச நாணய நிதியத்தை ஸ்திரப்படுத்துவது தொடர்பான ஐந்து சட்டமூலங்கள் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளன. அது உங்களுக்குத் தெரியுமா?**

எமக்குத் தெரியும். அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கு இவை அனைத்து விடயங்களும் அரசாங்கத்தினால் கூறப்படுபவையாகும். அதேபோன்று சர்வதேச நாணய நிதியத்துடன் ஜனாதிபதி தெரிவிக்கும் கருத்துக்கள் மற்றும் அவரது செயற்பாடுகள் அரசியலின் ஒரு அங்கமாகவேயாகும். தான் இல்லாவிட்டால் சர்வதேச நாணய நிதியமும் இல்லை என்பதைப் போன்ற கருத்தை மக்கள் மயப்படுத்துகிறார். அவர் இல்லாவிட்டால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என்ற நிலைப்பாட்டை மக்கள் மயப்படுத்தியே அவர் அதிகாரத்திற்கு வர முனைகிறார். நாடு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் நாட்டை அவர் பொறுப்பேற்றார் என்பதும் பொய்யாகும். அவர் நாட்டைப் பொறுப்பேற்கவில்லை. தமது பாதுகாவலராக அவரைத் தெரிவு செய்தது மொட்டுக் கட்சியினராகும். இவை அனைத்தும் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டவையாகும்.

**தேசிய மக்கள் சக்தி முன்வைத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளதைப் போன்று செயற்பட்டால் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம் கைவிடப்பட்டு விடும் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கூறியுள்ளாரே?**

பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரும் இதே வாதத்தையே முன்வைக்கின்றனர் என்பது இந்த சில கேள்விகளிலிருந்து தெளிவாகிறது. உண்மையில் ஹர்ஷ ஐ.ம.சக்தியிலி இருந்த போதிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துக்களே அவரது வாயிலிருந்து வெளி வருகின்றன. இந்நாட்டின் அரசாங்கங்கள் 17 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றுள்ள நிலையில் 9 தடவைகள் அவர்களிடம் சென்றிருப்பது ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கமாகும். ஐ.எம். எப்பிடம்தான் ஒரே தீர்வு உள்ளது என்பதையும் அவர்களே ஏற்றுக் கொள்வதில்லை. ஹர்ஷ மற்றும் ரணில் ஆகியோர் அமைச்சரவைகளில் இருந்தவர்கள். தமது அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு அமைய மக்களை ஏமாற்றும் வேலைகளைத் தான் இவர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். நாம் இதனை விடவும் மாற்றமான அரசியலையே செய்கின்றோம். நாட்டுக்கு ஒன்றைக் கூறிவிட்டு மற்றொரு இடத்தில் மற்றொன்றைக் கூறுவதில்லை. ஐ.எம். எப்புடன் பயணிக்கக் கூடிய தூரம் தொடர்பில் எமக்குப் புரிந்துணர்வு உள்ளது. ஐ. எம். எப்புடன் எவ்வாறு நாடுகள் முன்னேறின, எப்படி வீழ்ச்சியடைந்தன என்பன பற்றியும் நாமறிவோம். இவை அனைத்தையும் ஆராய்ந்து பார்த்தே நாம் செயற்படுவோம்.

**தேசிய மக்கள் சக்தி சர்வதேச நாணய நிதியத்துடன் எவ்வாறு செயற்பட எதிர்பார்க்கின்றது?**

நாம் IMF உடன் செயற்படப் போவதில்லை என எங்கும் குறிப்பிடவில்லை. IMF, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற அனைத்து நிறுவனங்களுடனும் இணைந்து செயற்பட நாம் தயார். அனைவரும் புரிந்து கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில், எமக்கு கிடைக்கும் மக்கள் ஆணையின் பிரகாரமே அது தீர்மானிக்கப்படும். மக்கள் ஆணை இல்லாதவர்கள் அதைப் பற்றிச் சிந்திக்காமல் இந்த நிறுவனத்துடன் மக்களை கஷ்டத்திற்குள்ளாக்கும் ஒப்பந்தங்களைச் செய்கிறார்கள். மின் கட்டணங்களை மூன்று மடங்கு அதிகரித்ததால் மக்களின் துன்பங்கள் மற்றும் இந்நாட்டின் சிறு தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு அது எவ்வாறு தாக்கத்தைச் செலுத்தியுள்ளது என்பதை இந்த அரசாங்கம் அறியாது.

எம். எஸ். முஸப்பிர்

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

**மும்முனைப் போட்டியாக மாறியிருக்கும் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் களத்தில் பிரதான வேட்பாளர்கள் சிலரின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் முன்வைக்கப்பட்டு அவை தற்பொழுது பேசுபொருளாகியுள்ளன.**



# நாடு மீண்டும் நெருக்கடியில் மூழ்கி விடக்கூடாது என்பதில் பொதுமக்கள் அதிக அக்கறை!

## ஜனாதிபதி வேட்பாளர்களின் திட்டங்களைத் தாங்கியபடி வெளியிடப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனங்கள்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட்19 தொற்றுநோய் சூழல் அதன் பின்னர் பொருளாதாரப் பாதிப்பு எனத் தொடர்ச்சியான பின்னடைவுகளைத் தொடர்ந்து தற்போது முகங்கொடுக்கும் தேர்தல் என்பதால் உள்நாடு மாத்திரமன்றி வெளிநாட்டின் பார்வையும் இலங்கை மீது குவிந்துள்ளது.

பெரும்பாலான அரசியல் கட்சிகளும் அவற்றின் வேட்பாளர்களும் நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் என்னவாக இருக்க வேண்டும் என்பதைத் தமது விஞ்ஞாபனங்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ள போதும், அவற்றின் நடைமுறைச் சாத்தியம் குறித்த கேள்விகள் காணப்படுகின்றன. நாடு எதிர்கொண்டுள்ள சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் அவசியம் என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்துக்கு இடமில்லையென்றாலும், அந்த நிலைமையைப் போக்குவதற்கு அவர்கள் முன்வைக்கும் தீர்வுகளின் சாத்தியக்கூறுகள் தொடர்பில் சந்தேகமே காணப்படுகின்றது.

பிரதான வேட்பாளர்களில் ஒருவரான தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனம் கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்டது. 'வளமான நாடு அழகான வாழ்க்கை' என்ற தொனிப்பொருளில் அவருடைய தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்தல், அமைச்சரவையை 25 ஆக மட்டுப்படுத்தல் உள்ளிட்ட உறுதிமொழிகள் வழங்கப்பட்டிருப்பது



## பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு முற்றாக மீண்டெழாத நிலையில், எதிரணி வேட்பாளர்களின் வாக்குறுதிகள் நிறைவேறுவது சாத்தியமா?



டன், பொருளாதாரத்தில் தனியார் துறையின் பங்களிப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்பதை அக்கட்சி ஏற்றுக் கொண்டுள்ளது.

அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை நிர்வகிப்பதற்கான பிரச்சினையில், ஒவ்வொரு அரச நிறுவனங்களினதும் மூலோபாய ரீதியில் பாதுகாக்க வேண்டிய தேவை மற்றும் அவற்றை மதிப்பிட வேண்டிய தேவை பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களுக்கான பெறுமதி சேர் வரியைக் குறைப்பது மற்றும் வருமான வரியை அதிகரிப்பது உள்ளிட்ட முன்மொழிவுகள் என்பனவற்றை அதில் காணக்கூடியதாகவுள்ளது. இவர்கள் முன்வைத்திருக்கும் இந்த யோசனைகள் குறித்து பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருப்பதால் இதிலுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவது எந்தளவுக்கு சாத்தியமானது என்பது தெளிவாக இல்லை.

### ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமான 05 வருடங்கள்:

சுயாதீன வேட்பாளராகக் களமிறங்கியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனம் 'ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமான 05 வருடங்கள்' என்ற தொனிப்பொருளில் கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டது. 'தேரவாத வர்த்தகப் பொருளாதாரம், 2025 இற்கு அப்பால் செல்லும் செயல்முறை, ஒளிமயமான சமுதாயத்தை நோக்கி, வெற்றிபெறும் தாய்நாடு, ஒன்றிணைந்த இலங்கை ஆகிய ஐந்து பிரதான தலைப்புகளின் கீழ் இந்த விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருந்த காலப்பகுதியில் நாட்டைப் பொறுப்பேற்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதுவரை முன்னெடுத்த செயற்றிட்டங்களின் நீட்சியாகத் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரித்திருப்பது தெளிவாகப் புலனாகின்றது.

மக்கள் அன்றாடம் எதிர்கொண்டுள்ள பிரச்சினையான வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான யோசனைகள், அரசாங்க ஊழியர்களின் வருமானத்தை உயர்த்துவதற்கான யோசனைகள், மறைமுக வரிகளால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கான யோசனைகள், அஸ்வெசும போன்ற நலன்புரித் திட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்தல், இளையோருக்கு மேலும் தொழில்வாய்ப்புக்கள் எனப் பல்வேறு யோசனைகளையும் முன்மொழிவுகளையும் இத்தேர்தல் விஞ்ஞாபனம் கொண்டுள்ளது.

விவசாயிகளை வலுப்படுத்தும் வகையில், உரம் அல்லது இதர தேவைகளைப் பூர்த்தி செய்ய நெல் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் 25,000 ரூபா நேரடியாக வைப்பிலிடப்படுவதோடு, போகத்திற்கு போகம் உத்தரவாத விலை நிர்ணயிக்கப்படும் யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது. சிறிய மீன்பிடி படகுகள் முதல் ஆழ்கடல் மீன்பிடிக் கப்பல்கள் வரை, கப்பல்களை கொள்வனவு செய்வதற்கு சலுகை ரீதியிலான பொறிமுறை ஒன்று அறிமுகப்படுத்தப்படும்,

2025 ஆம் ஆண்டுக்குள் மீன்பிடி நகரங்களைச் சார்ந்து முறையான குடியிருப்பு மற்றும் பிற வசதிகளுடன் கூடிய மீன்பிடி நகரங்கள் உருவாக்கப்படும் என்றும் ஜனாதிபதி தனது விஞ்ஞாபனத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். 2035 ஆம் ஆண்டாகும்போது, தற்போதைய வருடாந்த பால் உற்பத்தியை 380 மில்லியன் லீற்றரிலிருந்து 820 மில்லியன் லீற்றராக அதிகரிப்பதுடன், 2035 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு பால் பண்ணையாளர்களின் தற்போதைய வருமானம் 40 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான தொகையாக அதிகரிப்பதன் மூலம் கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவது நோக்கமாக அமைந்துள்ளது. இதுபோன்று பல்வேறு துறைகள் குறித்தும் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மத்திய வங்கி ஆளுநரின் எச்சரிக்கை:

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று நாட்டை மீட்சிப் பாதைக்கு இட்டுச்செல்லும் திட்டங்களின் விஸ்தரிப்பாக ஜனாதிபதியின் முன்மொழிவுகள் காணப்படுகின்றபோதும், எதிர்க்கட்சிகளின் யோசனைகள் எந்தளவுக்கு நடைமுறைச் சாத்தியம் என்பது பொருளாதார நிபுணர்களால் எழுப்பப்படும் கேள்வியாகவும் உள்ளது.

தற்போதைய பொருளாதார வேலைத் திட்டத்தின் பெறுபேறுகள் தலைகீழாக மாறினால், கடந்த இரண்டு வருடங்களில் நாம் அனுபவித்ததைப் போன்ற பொருளாதார சமூக நெருக்கடி மீண்டும் ஏற்படக்கூடும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க எச்சரித்துள்ளார். பொருளாதாரத்தை அதன் அசைக்க முடியாத ஸ்திரத்தன்மைக்கு மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகள் நடுத்தர மற்றும் நீண்டகால வளர்ச்சிக்கு அவசியமானது. இந்த மறுசீரமைப்புக்கள் குறுகிய காலத்தில் வேதனையளிக்கும் என்றாலும், நீண்ட காலதாமதமான சீர்திருத்தங்களை செயற்படுத்த அனைத்துத் தரப்பினரின் அர்ப்பணிப்பும் பொருளாதாரத்தை நிலையான மற்றும் விரிவான வளர்ச்சியின் பாதையை நோக்கி வழிநடத்த முக்கியமானது.

அத்தகைய முயற்சி எவ்வளவு பயனுள்ளதாக இருந்தாலும், எந்தவொரு அரசியல் அல்லது சமூக நிச்சயமற்ற தன்மை அல்லது கடின முயற்சிகளின் மூலம் பெறப்பட்ட முடிவுகளின் தலைகீழ் மாற்றமானது, மறுசீரமைப்பு செயல்முறைக்கு அதிக அழுத்தத்தை ஏற்படுத்தும் மற்றும் பொருளாதாரத்தின் எதிர்பார்க்கப்படும் போக்கை மாற்றும் மற்றும் பொருளாதாரத்தில் மாற்ற முடியாத தாக்கத்தை ஏற்படுத்தும் என அவர் கூறியிருந்தார்.

மத்திய வங்கியின் ஆளுநரின் இந்த எச்சரிக்கையை நாம் இலகுவில் தட்டிக்கழித்து விட முடியாது. நாடு நெருக்கடியான காலத்துக்கு முகங்கொடுத்திருந்தபோது சவாலைப் பொறுப்பேற்றிருந்த அவர், அரசியல்வாதிகளுக்கு நேருக்கு நேர் பதில் வழங்கக் கூடிய ஒருவராவார். அவ்வாறானதொருவரின் எச்சரிக்கையை இலகுவில் கடந்து சென்றுவிட முடியாது.

மீண்டும் நாடு பொருளாதார நெருக்கடிக்குச் சென்று மீண்டும் வரிசையில் நிற்கும் நாட்களுக்குச் சென்றுவிடக் கூடாது என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது. மக்களின் இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையிலும், அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு நடைமுறைச் சாத்தியமான முறையிலுமான தீர்வுத் திட்டங்களே தற்பொழுது அவசியம்.



**தற்போதைய பொருளாதார வேலைத்திட்டத்தின் பெறுபேறுகள் தலைகீழாக மாறினால், நாட்டில் மீண்டும் நெருக்கடி உருவெடுக்கக் கூடும்; –மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க விடுத்துள்ள எச்சரிக்கை!**

இதனைவிடுத்து, மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கும் அரசியலையோ அல்லது நடைமுறைச்சாத்தியமற்ற வாக்குறுதிகளை அள்ளிவழங்கும் தேர்தல் விஞ்ஞாபனங்களையோ மக்கள் எதிர்பார்க்கவில்லை. ஓரளவுக்கேனும் தலைநிமிர்ந்து நிற்பதற்குக் கிடைத்திருக்கும் இந்தச் சூழல் தொடர்ந்தும் நீடித்து மீண்டும் பழைய நிலைக்குச் செல்வதற்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்பதே வாக்காளர்கள் ஆகிய நாட்டு மக்கள் அனைவரினதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

### எதிர்க்கட்சித் தலைவரின் தேர்தல் விஞ்ஞாபனம்:

ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தேர்தல் விஞ்ஞாபனம் 'சகலருக்கும் வெற்றி' என்ற தொனிப்பொருளில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் பிரதிகள் மகாசங்கத்தினருக்குக் கையளிக்கப்பட்டதுடன், எதிர்வரும் 04ஆம் திகதி உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவுள்ளது.

வலுவான சமூகப் பாதுகாப்பு வலையமைப்பை உருவாக்குதல் நீண்டகால நிலைத்தன்மைக்காக, இலங்கையின் ஓய்வூதிய முறையை முற்றிலும் மறுசீரமைத்தல், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல், அரச துறையை மேம்படுத்தல், வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாத்தல், தேசிய பாதுகாப்பு போன்ற தலைப்புக்களின் கீழ் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்கு இவர்கள் முன்வைத்திருக்கும் தீர்வுகள் எந்தளவுக்கு நடைமுறைச் சாத்தியமானவை என்பது பற்றி ஆய்வாளர்கள் கேள்விகளை முன்வைத்துள்ளனர்.

இவ்வாறான நிலையில், ஒப்பீட்டளவில் நாட்டைப் பொருளாதார ரீதியில் மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கான சாத்தியக் கூறுகளைக் கொண்டவராக ஜனாதிபதியே காணப்படுகின்றார் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதனை நாட்டிலுள்ள மக்கள் உணரத் தொடங்கியிருப்பதுடன், பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பான்மையான உறுப்பினர்களும் உணர்ந்து கொண்டிருப்பதாலேயே ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்துவதற்காக ஒன்றிணைந்துள்ளனர் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.


---

## இலங்கை

# தமிழ்த் திரைப்படத் துறைக்குப் புத்துயிர் அளிக்குமா "இரானி"?

இலங்கையிலும் முழு நீளத் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியும் என்ற நம்பிக்கை மலருக்கு நீர்வார்த்திருக்கிறது ஜெகன் சுப்பிரமணியம் எழுதி, இயக்கித் தயாரித்தளித்திருக்கும் "இரானி" என்கின்ற திரைப்படம்.

முன்னணி நடிகர்களைக்கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்படும் சில படங்களை இலங்கையில் ஒளிப்பதிவு செய்திருக்கிறார்கள். அவற்றில் இலங்கை நடிகர்களும் நடித்திருக்கிறார்கள். நடிகர் திலகம் சிவாஜி கணேசன், சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், சூர்யா முதலான நடிகர்கள் நடித்த படங்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் கொடிகட்டிப் பறந்திருக்கின்றன.



இரானி படத்தில் நடிகர் ராஜ்குமார் கதாநாயகனாக நடித்திருக்கிறார். அதுவும் இலங்கையைக் கதைக்களமாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும் இந்தப் படமும் நிச்சயம் இலங்கையிலும் இந்தியாவிலும் கொடிகட்டிப் பறக்கும் என்று நம்பிக்கையைத் தந்திருக்கிறார் ஜெகன் சுப்பிரமணியம். அவரது இரானி கதைப் பின்னல் அவரின் திறமையை வெளிப்படுத்தியிருக்கிறது.

படத்தின் கதை நகர்வைக் காட்சிக்குக் காட்சி புதிய திருப்பங்களுடன் ஆர்வத்தைத் தூண்டும் விதத்தில் இயக்கியிருக்கிறார் ஜெகன். நடிகர் ராஜ்குமார் தனது ஒட்டுமொத்த திறமையையும் இரானி படத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். எந்தப் பாத்திரத்தையும் தன்னால் திறம்பட நடித்துவிட முடியும் என்ற நம்பிக்கையைத் தந்திருக்கிறார்.

இரானி அவருக்குக் கதாநாயகன் அந்தஸ்தைத் தந்திருக்கும் படம். அடுத்தடுத்து தமிழகத்தில் வெளிவரவிருக்கும் படங்கள் அவருக்குக் கதாநாயகன் வாய்ப்பை வழங்க இரானி கைகொடுக்கும் என்றால் மிகையில்லை.

இலங்கையிலும் இந்தியாவிலும் (கேரளா, சென்னை) படமாக்கப்பட்டிருக்கும் இரானி தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. முதலில் தமிழில் திரைக்கு வந்திருக்கும் இரானி, ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. அதே வரவேற்பு இந்தியாவிலும் கிடைக்கும்.




சிங்களத்திலும் திரைக்கு வரும்போது இரானி அடுத்த கட்டத்திற்குச் சென்றுவிடும்.

தன் கைக் குழந்தையையும் மனைவியையும் விட்டுப் பிரிந்து தன் குடும்பத்தைக் காப்பாற்றி மீண்டும் அடைய போராடும் கணவனின் நியாயமான கோபமே இரானி.

கணவன் இரானி (ராஜ்குமார்) எதிரியின் சதியிலிருந்து உயிர் தப்பி இலங்கையின் கண்டியில் தியாகு (அனில் ஜயசிங்க) என்பரால் அடைக்கலம் வழங்கப்பட்டு அழைத்துச் செல்லப்படுகிறார்.

இரானி அடைக்கலம் பெற்ற தியாகுவின் வீட்டில் அவனின் மகள் ரேவதி (ரெஜினா கிறிஸ்தொபர்) வாழ்ந்து வருகிறாள்.

இரானி எதிரிகள் இருக்குமிடத்தைத் தேடிக் கண்டுபிடிக்கும் போராட்டத்தை மிக அருமையான கதையாகப் பின்னியிருக்கிறார் இயக்குநர் ஜெகன் சுப்பிரமணியம்.

தன் மனைவி சிக்கியிருக்கும் அரசியல் சதிகாரர்களின் வலையைச் சிதைப்பதற்கு இரானி முன்னெடுக்கும் முயற்சியின் போது சிலரைப் பழிவாங்க வேண்டிய நிலை உருவாகிறது.

அப்போது பொதுவான நியதிகளுக்கும் அப்பால் பழிவாங்கும் இரானி குடும்பத்துடன் மீண்டும் வாழ்கிறானா என்பதை திகில் நிறைந்த காட்சிகள் மூலம் தெரிந்து கொள்ள முடியும்.

இரானியின் வெற்றி இலங்கை தமிழ்த் திரைப்படத் துறைக்குப் புத்துயிர் அளிக்கட்டும். ஜெகன் சுப்பிரமணியத்தின் அடுத்த படத்துக்கு உந்துதலாக அமையட்டும்.

இரானி – பழிவாங்கலுக்கு நியதி இல்லை


பார்ப்பவர்களுக்குத் தளர்ச்சி இல்லை

**இதயநிலா சுகன்ஜி**




# முழங்கால் மூட்டு வலியா? அவஸ்தைப்பட வேண்டாம்


## மயக்கமருந்தோ, வலி நிவாரணியோ, சத்திரசிகிச்சையோ இல்லாமல் நிவாரணம்



ஆரோக்கியமான முழங்கால்



நோய்வாய்ப்பட்ட முழங்கால்


குருதி குழாயினுள் catheter செலுத்துதல்

மனிதன் ஆரோக்கிய ரீதியில் பலவிதமான உபாதைகளுக்கும் பாதிப்புக்களுக்கும் உள்ளாகக்கூடியவனாக உள்ளான். அந்த நோய்களையும் உபாதைகளையும் தொற்று நோய்கள் என்றும் தொற்றா நோய்கள் என்றும் வகைப்படுத்தலாம். அவற்றில் பெரும்பாலானவற்றுக்கு வெற்றிகரமான மருத்துவ விஞ்ஞான சிகிச்சைகள் உள்ளன. ஒரு சில உபாதைகளுக்கான சிகிச்சைகளைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சிகளும் இடம்பெற்ற வண்ணமுள்ளன.


அந்த வகையில் அண்மைக் காலமாக மனிதன் முகம் கொடுக்கும் முக்கிய உபாதைகளில் ஒன்றாக முழங்கால் மூட்டு வலி விளங்குகிறது. இந்தியா, இலங்கை போன்ற இந்திய துணைக் கண்ட நாடுகளில் வாழும் மக்கள் மத்தியில் இந்த உபாதை காணப்படுகிறது. 40, 50 வயதானதும் முழங்கால் வலி என்று புலம்புபவர்களையும் அந்த வலியால் மாதக்கணக்கில், வருடக்கணக்கில் அவஸ்தைப்படுபவர்களையும் பரவலாக அவதானிக்க முடிகிறது.

'இந்த உபாதைக்கு சிகிச்சை பெற்றுவருகின்ற பலர் குடல் புண் பாதிப்புக்குக்கூட உள்ளாகியுள்ளனர். ஏனெனில் அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சையில் வலி நிவாரணி மாத்திரை முக்கிய இடத்தைப் பெற்றிருப்பதே அதற்கான காரணம்' என்று இந்தியாவின் சென்னையிலுள்ள மியாட் இன்டர்நெசனல் வைத்தியசாலையின் முகாமைத்துவப் பணிப்பாளர் டொக்டர் பிரித்வி மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.

இந்த உபாதைக்கு முழங்கால் மூட்டு மாற்று சிகிச்சை தீர்வாகக் காணப்படுகின்ற போதிலும் அச்சிகிச்சையை எல்லா வயது மட்டத்தினருக்கும் அளிக்க முடியாத நிலைமை காணப்படுகிறது. அதனால் தான் மயக்கமருந்தோ, வலி நிவாரணி மாத்திரைகளோ, திறந்த சத்திர சிகிச்சையோ மேற்கொள்ளாது முழங்கால் மூட்டு வலிக்கு விரைவாக நிவாரணம் அளிக்கக்கூடிய இச்சிகிச்சை முறை எமது வைத்தியசாலையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்கிறார் மியாட் இன்டர்நெசனல் வைத்தியசாலையின் Vascular & Interventional Radiology பணிப்பாளர் டொக்டர் கார்த்திகேயன் தாமோதரன்.

இச்சிகிச்சை தொடர்பில் இலங்கை மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கொழும்புக்கு வருகை தந்திருந்த டொக்டர் கார்த்திகேயன் தாமோதரன், இந்த உபாதை குறித்தும் அதற்கான காரணம், அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சிகிச்சை குறித்தும் 'தினகரன் வாரமஞ்சரி'க்கென தெளிவாக எடுத்துக்கூறினார்.

ஒஸ்ரியோ ஆர்தரைடிஸ் (Osteoarthritis) என்பது வயதாகும் போது மூட்டில் தேய்மானம் ஏற்படுவதால் மூட்டிலுள்ள குருத்தெழும்பு காட்டிலிஜ் (Cartilage) தேய்வடைவதன் விளைவாக உருவாகக்கூடியதாகும். இதன் விளைவாகவே மூட்டுவலி ஏற்படுகிறது. இந்த உபாதை முழங்கால் மூட்டில் தான் பெரும்பாலும் ஏற்படக்கூடியதாக உள்ளது. பொதுவாக 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்த உபாதைக்கு அதிகளவில் உள்ளாகி இருப்பதைக் காணலாம்.


குருதி பாய்வதை தடைசெய்தல்

ஏனெனில் இன்றைய நவீன யுகத்தில் இந்திய துணை கண்ட மக்களின் வாழ்க்கை முறை, நடத்தை மற்றும் உணவுப் பழக்கவழக்கங்கள் பெரிதும் மாற்றமடைந்துள்ளன.

குறிப்பாக பெரும்பாலானவர்கள் உடலை வளைத்து நிமிர்த்தக் கூடிய செயற்பாடுகளிலும் உடற்பயிற்சிகளிலும் ஈடுபடுவதில்லை. அவற்றின் விளைவாக இப்பிராந்திய நாடுகளது மக்கள் மத்தியில் உடல் பருமன் கொண்டவர்களை அதிகளவில் காண முடிகிறது.

உடலின் நிறை அதிகரிக்கும் போது 40 வயதாகும் போதே முழங்கால் மூட்டில் தேய்மானம் ஏற்பட தொடங்குகிறது. அது சொற்ப காலத்தில் முழங்கால் மூட்டு வலியாக வெளிப்படுகிறது. அத்தோடு காலம் செல்லச் செல்ல நடமாட முடியாத நிலையை ஏற்படுத்தி அசைய முடியாத நிலையைக்கூட ஏற்படுத்தி விடக்கூடியதாக உள்ளது இந்த உபாதை.

இந்நோய்க்கு நிரந்தரத் தீர்வாக மூட்டு மாற்று அறுவை சிகிச்சை காணப்படுகிறது. ஆனால் அதனை எல்லாருக்கும் மேற்கொள்ள முடியாது. குறிப்பாக இளம் வயதினருக்கு இச்சிகிச்சை அளிக்கப்படுவதில்லை. ஏனெனில் இச்சிகிச்சையின் போது மாற்றப்படும் செயற்கை மூட்டும் 10 -15 வருடங்கள் வரை தான் செயற்படும். அதன் பின்னர் அதுவும் கூட தேய்வடைந்துவிடும்.

உதாரணமாக 50 வயதுடைய ஒருவருக்கு மூட்டு மாற்று அறுவை சிகிச்சை அளிக்கும் போது அவருக்கு 65 வயதில் மீண்டும் அதே சிகிச்சையை செய்ய வேண்டும். அது அதிகம் கடினமான சிகிச்சையாக இருக்கும். அதேநேரம் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் முழங்கால் மூட்டு தேய்மான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதால் அவர்களுக்கு மூட்டு மாற்று அறுவை சிகிச்சை சிபாரிசு செய்யப்படுகிறது.

ஆனால் வயதானவர்களில் பெரும்பாலானவர்கள் இதய நோய், சிறுநீரகப் பாதிப்பு, நீரிழிவு போன்றவாறான தொற்றா நோய்களுக்கு உள்ளாகி இருக்கலாம். அவ்வாறானவர்களுக்கு முழு உடலையும் மயக்குவதும் சத்திரசிகிச்சை மேற்கொள்வதும் இலகுவான காரியமல்ல. அது ஆபத்து மிக்க பணியாகும். அதனால் அவ்வாறானவர்களில் பலருக்கு மூட்டு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ள முடியாத நிலையும் காணப்படும். ஏனெனில் அது உயிராபத்து மிக்க சிகிச்சையாகக் கூட அமையலாம்.

இத்தகைய காரணங்களினால் தான் இளம் வயதில் மூட்டுத் தேய்மானம் ஏற்பட்டு மூட்டு வலிக்குள்ளாகி இருப்பவர்களும் தொற்றா நோய்கள் காரணமாக மூட்டு அறுவைசிகிச்சை மேற்கொள்ள முடியாதவர்களும் மூட்டுவலியால் பெரிதும் அவஸ்தைப்படுகிறனர்.

இவ்வாறான சூழலில் தான் மூட்டுவலியினால் அவஸ்தைப்படுபவர்களின் நலன்களை கருத்தில் கொண்டு மூட்டு சத்திர சிகிச்சை இன்றி, மயக்க மருந்து வழங்காமல் பாதுகாப்பாக அளிக்கக்கூடிய ஜெனிகியூலர் ஆர்ட்ரி எம்போலிசெசன் (Genicular Artery Embolization) என்ற சிகிச்சை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

அதாவது தொடை எலும்பும் கால் எலும்பும் சேரக்கூடிய இடம் தான் முழங்கால் மூட்டு. இந்த இரண்டு எலும்புகளும் சேருகின்ற இடத்திலுள்ள குருத்தெலும்பு தேய்வடையும் போது இரண்டு எலும்புகளும் உராய்வுக்குள்ளாகி தேய்வடையும். அதன் போது எலும்புக்குள் அழற்சி ஏற்பட்டு அதனுள்ள உள்ள சைனோவியல் திசு (Synovial membrane ) ரணமாகி தடிப்படையும். அதன் விளைவாக புண் ஏற்பட்டு அதிக வலி ஏற்படும். அதேநேரம் இந்த திசு தடிப்படைவதால் அதில் இரத்த ஓட்டம் அதிகரித்து புதிய புதிய நரம்பு நார்கள் உருவாகும். அவை மூட்டு வலி அதிகரிக்க துணைபுரியும். அதன் விளைவாக நடக்க முடியாத நிலையும் ஏற்படும்.

இப்பாதிப்பில் இருந்து நிவாரணம் பெற்றுக் கொடுக்கக்கூடிய வகையில் தான் ஜெனிகியூலர் ஆர்ட்ரி எம்போலிசெசன் சிகிச்சை மேற்கொளப்படுகிறது. அதாவது இப்பாதிப்புக்குள்ளாகி இருப்பவரின் தொடைப்பகுதியை விறைக்கச் செய்து 2 மி.மீ அளவில் சிறிய துளையை ஏற்படுத்தி கதேட்டர் (Catheter) என்ற சிறிய குழாய்இரத்த நாளத்திற்குள் செலுத்தப்படும். அது எக்ஸ்ரே துணையுடன் முழங்காலைச் சூழவுள்ள குருதி நாளங்களுக்கு கொண்டு செல்லப்படும். அங்கு புதிதாக உருவாகியுள்ள நரம்பு நார்களுக்கு இரத்தத்தை வழங்குவதாக அடையாளம் காணப்படும் இரத்த நாளங்களுக்கு Contrast திரவம் ஊசி மூலம் செலுத்தப்படும். அதன் ஊடாக புதிதாக உருவாகியுள்ள நரம்பு நார்கள் மணல் போன்ற சிறிய துகள்களைக் கொண்டு அடைக்கப்படும். அப்போது சைனோவியல் திசுவில் ஏற்பட்டுள்ள வீக்கம் குறைவடைந்து வலிக்கு நிவாரணம் கிடைக்கப்பெறும். அத்தோடு கதேட்டர் அகற்றப்படும்.

இச்சிகிச்சையை ஒரு மணி நேரத்தில் மேற்கொள்ளலாம். சிகிச்சை முடிவுற்ற பின்னர் சுமார் 6 மணித்தியாலயங்கள் படுக்கையில் ஒய்வில் இருப்பது அவசியம். அதன் பின்னர் எழுந்து நடக்க முடியும். இச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு 2 முதல் 3 நாட்களுக்குள் முழங்கால் வலிக்கு நிவாரணம் கிடைக்கப்பெறும். அதன் ஊடாக இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பலாம். இச்சிகிச்சையைப் பெற்றுக்கொள்பவர்கள் 2 முதல் 3 வருடங்கள் முழங்கால் வலியின்றி சாதாரண வாழ்வை வாழலாம் என்றும் சுட்டிக் காட்டினார் டொக்டர் கார்த்திகேயன் தாமோதரன்.



**மர்லின் மரிக்கார்**

---

# இஸ்ரேல் – மேற்குலக கூட்டின் பலத்தில் கட்டமைக்கப்படும் உலக ஒழுங்கு



**பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்**
**யாழ். பல்கலைக்கழகம்**

இஸ்ரேல் ஹமாஸ் போர் நீடிக்கும் நிலையில் பாரிய அழிவுகளை அரேபிய தரப்பு எதிர்கொள்ள தொடங்கியுள்ளது. போர் படிப்படியாக காசாவின் நிலப்பரப்பை கடந்து லெபலான் பகுதியை நோக்கி விஸ்தரிக்கப்படுகிறது. இத்தகைய பாரிய போர் நகர்வு மேற்காசிய அரசியலில் பதற்றத்தை அதிகரிக்க முனைவதோடு உலக அரசியல் ஒழுங்கில் நீண்ட நிலையான ஒரு வடிவத்தை ஏற்படுத்த திட்டமிடுவதாக தெரிகிறது. இக்கட்டுரையும் இஸ்ரேல் ஹமாஸ் போரின் தொடர்ச்சி உலக அரசியல் ஒழுங்கில் ஏற்படுத்தி வருகின்ற மாற்றத்தை தேடுவதாக உள்ளது.

கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட இஸ்ரேல் ஹமாஸ் யுத்தம் அராபிய மண்ணில் மீண்டும் பாரிய மனித அழிவை ஏற்படுத்தி வருகின்றது. இதுவரையிலும் 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 94 ஆயிரத்துக்கு மேற்பட்ட பலஸ்தீனர்கள் காயப்பட்டுள்ளனர். ஒரு வகையில் ஹமாஸ் அமைப்பினால் தொடங்கப்பட்ட போதும் இஸ்ரேல் காசா பகுதியையும் மேற்கு கரையையும் பெருமளவுக்கு ஆக்கிரமிக்கும் உத்திக்கான அடிப்படையாக அமைந்திருக்கின்றது. இத்தகைய சூழல் பிராந்திய அரசியலில் அதிக மாற்றத்தை உருவாக்கும் என்று எதிர்பார்க்கை மேலெழுந்திருந்து. அதில் ஈரானின் பங்கு முதன்மையானது என்றும் கருதப்பட்டது. ஆனால் நடைமுறையில் ஈரான் மீதான தொடர்ச்சியாக இஸ்ரேலின் இராணுவம் மற்றும் புலனாய்வுத் துறைகளின் அணுகுமுறைகள் இஸ்ரேல், இந்த போரில் தனது வெற்றியை உறுதிப்படுத்தக் கூடிய விதத்திலான போராக அமைந்துள்ளது. ஈரானை இஸ்ரேல் போருக்கு முன்னரே முறியடித்துவிட்டது. ஈரான் ஹமாசோடு இணைந்து இஸ்ரேலுக்கு எதிரான ஒரு போரை நகர்த்திக் காட்டிய முனைப்பை பெருமளவுக்கு இஸ்ரேல் கட்டுப்படுத்தி விட்டதென்றே கூறமுடியும். இத்தகைய நகர்வுகள் பிராந்திய வடிவத்திலும் சர்வதேச அரசியல் ஒழுங்கிலும் கவனத்தில் கொள்ள வேண்டிய அதிக விடயங்களை கொண்டிருக்கிறது. அதனை விரிவாக நோக்குவது அவசியம்.

முதலாவது இஸ்ரேல் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு யுத்தம் பெருமளவுக்கு ஒரு முழுமையினை மேற்குலகத்துக்கு கொடுத்திருக்கின்றன. இஸ்ரேல் தன்னுடைய எல்லைக்குட்பட்ட விதத்தில் யூதர்களை பாதுகாப்பதிலும் பலஸ்தீனர்கள் மற்றும் அராபியர்களை அழிப்பதிலும் அதன் அரசியல் தலைமைகளை இல்லாமல் செய்வதிலும் வெற்றிகரமாக இயங்கி வருகின்றது. மேற்குலக அனுசரணையோடு இத்தகைய போரை இஸ்ரேல் முனைப்போடு செயல்படுத்துகிறது. இதனை இலகுவில் தோற்கடிக்கவும் கட்டுப்படுத்தவும் முடியாது என்பதை இஸ்ரேல் ஹமாஸ் போர் தொடங்கிய பின்னர் வெளிப்படுத்தியுள்ளது. இதுவே உலக அரசியல் பொருளாதார ஒழுங்கு அல்லது இருப்பு மேற்குலகத்திடம் உண்டு என்பதை உறுதிப்படுத்தி இருக்கிறது. அதாவது சர்வதேச சட்டங்களும் மனித உரிமை விதிமுறைகளும் ஜனநாயகம் பற்றிய உரையாடல்களும் எந்தப் பயனையும் உலகத்துக்கு தராது என்பதை இஸ்ரேலின் நடவடிக்கைகள் வெளிப்படுத்தி இருக்கிறது. அதற்கு மேற்குலக நாடுகளாலும் அத்தகைய நடவடிக்கை நிராகரிக்கப்பட முடியும் என்பதை இஸ்ரேலுக்கு வழங்கும் ஒத்துழைப்பு மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது. மேற்கின் தாராண்மைவாத முகங்கள் தோல்வி அடைந்திருக்கின்றன. பெருமளவுக்கு உலக ஒழுங்கு என்பது அமெரிக்க தலைமையிலான மேற்குலக ஒழுங்கு என்பதை இஸ்ரேல் ஹமாஸ் போரின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளது. உலக ஒழுங்கு அனைத்து சட்டங்களையும் நியாயங்களையும் முதன்மைப்படுத்துவதும் தனக்கு ஏற்ற வகையில் அவற்றை மீறுவதும் அரசியல் எனக் கொண்டிருக்கின்றது. இத்தகைய நிலையை மிக நீண்ட வரலாற்றோடு மேற்கு பின்பற்றி வருகின்றது. அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் அல்லது சிதைவுகள் கிழைத்தேச நாடுகளில் பலவீனமான கட்டமைப்புகளாலும் உத்திகளாலும் எதிர்கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டாவது கீழைத்தேச சக்திகள் என்ற அடையாளப்படுத்தப்பட்ட சீனா இந்தியா ரஷ்யா என்பன இப்போது அதிக நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றன. இதில் இந்தியா ஒருபோதும் கீழைத்தேச சக்திகளின் நட்பு வட்டத்துக்குள் செயல்படுகிறதா? அல்லது மேற்குலக சக்திகளின் நட்பு வட்டத்துக்குள் செயல்படுகிறதா? என்று அடையாளம் கண்டு கொள்வது கடினம். அது இருதரப்பையும் திருப்திப்படுத்த முயலும் ஒரு சூழலில் இயங்குகிறது. அதனை ஒரு அரசியல் செய்முறையாக பின்பற்றியும் வருகின்றது. அதனால் இந்தியா அகிம்சை, நடுநிலைமை, அணிசேராமை போன்ற உரையாடல்களுக்கூடாக அது செயல்பட முயல்கின்றது. அன்றி கீழைத்தேசத்தின் அரசியல் சக்திகளுக்கு தலைமை தாங்குகின்ற வலுவை இந்தியா கொண்டிருக்கும் என்று அளவிட முடியாது. மாறாக ரஷ்யாவும் சீனாவும் ஈரானோடும் ஏனைய கீழைத்தேச சக்திகளோடு நெருக்கமான உறவை கொண்டிருந்தாலும் நடைமுறையில் அதிக நெருக்கடிகளை எதிர்கொள்கிறன. சீனா முழுமையாக மென் அதிகாரத்தின் பெயரில் ஒரு வர்த்தக உலகத்தை கட்டமைக்க முயலுகிறது. அதாவது ஈரான் வடகொரியா போன்ற நாடுகளுடன் செயல்படுகின்ற போக்கு ஒன்றை சீனா பின்பற்றுகிறது. சீனாவினது பட்டி மற்றும் பாதை எனும் வர்த்தக பாதையை வெற்றிகரமாக்குவதற்கு முயலுகிறது. அது ஓர் ஆரோக்கியமான சுமூகமான சமாதானபூர்வமான உலகத்தை ஏற்படுத்த முனைகிறது. இதில் மூன்றாவது



பிரதான சக்தியாக ரஷ்யா காணப்படுகிறது. ஏனைய நாடுகளைப் போன்று ஐரோப்பிய ஆசியக் கண்டத்து இயல்புகளை கொண்டுள்ள ரஷ்யா உலக அரசியலை கட்டமைக்கின்ற போது கிழைத்தேச நாடுகளின் அரசியலுக்கு தலைமை தாங்கும் உத்தியோடு காணப்படுகிறது. ஆனாலும் அதன் மீதான உக்ரைனின் நகர்வு ரஷ்யாவை வெற்றிகரமான ஒரு சூழலுக்குள் தலைமை தாங்குகின்ற திறனை மேற்கு தோற்கடித்துள்ளது. ஒருபுறம் ஈரானை தோற்கடிப்பதும் மறுபுறம் ரஷ்யாவை தோற்கடிப்பதும் மேற்குலகத்தின் பிரதான அணுகுமுறையாக நிலவுகிறது. இதிலிருந்து ரஷ்யா கிழைத்தேச அரசுகளுக்கும் பலஸ்தீனர்களுக்கும் ஒரு ஆரோக்கியமான தலைமைத்துவ பொறுப்பை எடுக்குமா என்பதில் அதிக சந்தேகம் நிலவுகிறது. ஏற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் அதற்கான வாய்ப்பை கொடுக்க முடியாத நிலையில் ரஷ்யா விளங்குகிறது. அதற்கு காரணம் ரஷ்யா மீதான உக்கரைன் போரை நேட்டோவும் மேற்கும் திட்டமிட்டே நகர்த்துகிறன. இத்தகைய அணிகளுக்கு இடையே உக்ரைன் முதல் காசா வரையான போர் நெருக்கடி மிக்க சூழலை ரஷ்யாவுக்கு கொடுத்துள்ளது. பொருளாதாரம் ஒரு புறம் இராணுவத்தின் மீது உக்ரைன் கொடுக்கும் நெருக்கடி மேற்படி பாரிய பாதிப்பினை ரஷ்யாவுக்கு ஏற்படுத்துகிறது. இதனால் ரஷ்யா இந்த போரில் பகுதியளவான செல்வாக்கு செலுத்துகின்றது. இதனால் மேற்கு ஆசியாவின் ஒழுங்கு என்பது இஸ்ரேல் மற்றும் மேற்குலகத்திடமே முழுமையாக கட்டமைக்கப்படுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. தவிர்க்க முடியாமல் அத்தகைய ஒழுங்குக்குள் பலஸ்தீனர்களுடைய இனப் பிரச்சனைக்கான தீர்வு நோக்கிய நகர்வொன்றை மேற்குலகம் தயார் செய்கிறதாகவே தெரிகிறது. ஆனால் மேற்குலகத்தின் பிரதான நோக்கம் சீனாவின் பட்டுப்பாதையை அல்லது பட்டி மற்றும் பாதை முயற்சியை முழுமையாக சிதைப்பதேயாகும். இது இந்த போரின் நீண்ட கால நோக்கமாக உள்ளது. குறுகிய காலத்தில் ஏற்படக்கூடிய இலாபங்களை செயல் வடிவமைப்பது அதற்குள் பிராந்திய ஒழுங்கும் உலக ஒழுங்கும் கட்டமைக்கப்படுவதை மேற்கு உறுதிப்படுத்துவது. மேற்காசிய களம் தெளிவற்ற பாதையில் இயங்குவதாக தோன்றினாலும் ஆழமாக அவதானித்தால் மேற்குலகத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள் இஸ்ரேலின் நலனுக்குள் கட்டமைக்கப்படுகின்ற நிலை வலுவடைந்துள்ளது. இத்தகைய சூழலுக்குள்ளாகவே உலகத்தினுடைய ஒழுங்கை உக்ரைன் முதல் காசா வரையான போரை வைத்துக் கொண்டு மேற்குலகம் திட்டமிடுகின்றது. இது கீழைத்தேச சக்திகள் அனைத்திற்கும் நெருக்கடிகளை கொடுக்கின்றனவே அன்றி அவற்றுக்கு மாற்றாக எந்த உபாயத்தையும் திட்டமிடலையும் கொடுக்கவில்லை என்பது தெளிவாகிறது.

எனவே மேற்காசிய அரசியல் களம் மேற்குலக நலன்களுக்குள் தெளிவான உத்திகளை ஏற்படுத்தி வருகின்றன. கீழைத்தேச சக்திகளின் உபாயம் அற்ற அணுகுமுறைகளும் சரியான திட்டமிடல் இன்மையும் அதன் வெற்றிகரமான பாதையை தோற்கடித்துள்ளது. அதில் இஸ்ரேல் மேற்குலகத்தின் அணுகுமுறை வலுவானதாக உள்ளது. இஸ்ரேலின் புலனாய்வு ஏற்படுத்தி இருக்கின்ற மாற்றங்கள் படிப்படியாக மேற்காசியா முழுவதையும் மேற்குலகம் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கான நகர்வுகளை சாத்தியப்படுத்த உதவுகிறது. இத்தகைய நிலைகளுக்குள் மீண்டும் ஒரு புதிய உலக ஒழுங்கு வடிவமைக்கப்படப் போகின்றது. அதனை வடிவமைப்பதில் அமெரிக்கா இஸ்ரேல் கூட்டு, ஒரு வலுவான பங்களிப்பை சாத்தியப்படுத்தியுள்ளன.

# பாடசாலையில் மிகவும் திறமையான மாணவன்; ரணிலை வாழ்த்திய வி.சிவலிங்கம் ஆசிரியர்

## தேர்தலிலும் வெற்றிபெற ஆசிர்வதிக்கிறார் அவர்

**இலங்கையிலுள்ள பாடசாலைகளுக்கு மத்தியில் கொழும்பில் அமைந்துள்ள ரோயல் கல்லூரியானது கல்வியிலும் ஏனைய கல்விசாரா செயற்பாடுகளிலும் முதன் நிலையில் உள்ளது.**

இந்த நாட்டிற்கு இரண்டு ஜனாதிபதிகள் மற்றும் நான்கு பிரதமர்களை உருவாக்கிய றோயல் கல்லூரி, சுதந்திரப் போராட்டத்துக்குத் தோள் கொடுத்த தலைவர்களிலிருந்து அரச தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், சபாநாயகர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களை உருவாக்கிய பாடசாலையாகவும் காணப்படுகின்றது. றோயல் கல்லூரியில் கற்றவர்களில் பலர் இன்று அறிஞர்களாகவும் அனுபவசாலிகளாகவும் இருக்கின்றனர்.

189 வருடம் என்ற நீண்ட வரலாற்றைக் கொண்ட றோயல் கல்லூரியில் பட்டம்பெற்ற எண்ணற்ற புகழ்பெற்ற இராஜதந்திரிகள், அரச ஊழியர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் உள்ளனர். அதுமட்டுமன்றி, மாலைதீவின் முன்னாள் சுல்தான் முஹம்மது ஃபரித் தீதி, முன்னாள் ஜனாதிபதி மஹ்மூத் அப்துல் கயூம் ஆகியோரும் றோயல் கல்லூரியில் கற்றவர்களே.

ரோயல் கல்லூரி உருவாக்கிய இரண்டாவது ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கவுக்கு கற்பித்த ஆசிரியர் ஒருவரை அண்மையில் சந்தித்தபோது ரோயல் கல்லூரி பற்றிய பல விடயங்கள் தெரியவந்தது. ஜனாதிபதி தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்புக்கு விஜயம் செய்திருந்தபோது, இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஐம்பதுகளின் பிற்பகுதியிலிருந்து 70 களின் ஆரம்பம் வரை ரோயல் கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கிலம் மற்றும் அறிவியலைக் கற்பித்து கொடுத்த ஆசிரியரே வி.சிவலிங்கம். இவருக்கு தற்போது 98 வயது.

மட்டக்களப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்கவின் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்ட இவர், மேடையேறி ஜனாதிபதியின் வெற்றிக்கு ஆசிர்வாதம் வழங்கியதுடன், அவருடன் அமர்ந்து ஆசிரியர் மாணவர் உறவின் தனித்துவத்தை விளக்கினார். ஜனாதிபதி மட்டுமல்ல தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தனவும் சிவலிங்கம் ஐயாவின் மாணவர்தான்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், பிரதமர் தினேஷ் குணவர்தனவும் ரோயல் கல்லூரியில் ஒரே வகுப்பில் கல்வி கற்றபோது, அந்த வகுப்புக்கு பொறுப்பாசியராக இருந்தவர் சிவலிங்கம் ஐயா.

பிரதமர் தினேஷ் குணவர்தன, சில வருடங்களுக்கு முன்னர் வெளிவிவகார அமைச்சராக இருந்தபோது, விடுமுறையை களிக்க பாசிக்குடாவிற்கு சென்றிருந்ததாகவும் இதன்போது, தனது ஆசிரியர் சிவலிங்கம் ஐயாவைச் சந்தித்து, இருவரும் கடந்த காலத்தை நினைவு கூர்ந்து உணர்ச்சிவசப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், மட்டக்களப்பு பெரியகல்லாறில் உள்ள தனது வீட்டில் தற்போது ஓய்வெடுத்து வரும் சிவலிங்கம் ஐயாவுடன் தினகரன் வாரமஞ்சரிக்காக உரையாடினோம்.

சிவலிங்கம் ஐயா உடல்நிலை சரியில்லாமல் இருப்பதனால் அவரால் அதிகம் பேச முடியவில்லை. அந்த இடைவெளியை நிரப்ப அவரது இளைய மகன் ரமேஷ் சிவலிங்கம் முன்வந்தார். தற்போது அவுஸ்திரேலியாவின் மெல்போர்னில் வசித்து வரும் ரமேஷ், தனது தந்தை தன்னுடன் பகிர்ந்து கொண்ட ரோயல் கல்லூரியின் நினைவுகளையும், சிவலிங்கம் ஐயா மறந்த சுவாரசியமான பல விடயங்களையும் நினைவு கூர்ந்து 'தினகரனிடம்'' தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமர் மட்டுமன்றி, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் சபாநாயகருமான அனுர பண்டாரநாயக்க, முன்னாள் அமைச்சர் மலிக் சமரவிக்ரம ஆகியோரும் சிவலிங்கம் ஐயாவின் மாணவர்களே. ஜனாதிபதி ரணில், பிரதமர் தினேஷ், முன்னாள் அமைச்சர் மலிக் ஆகியோர் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களுடன் சமவகுப்பு மாணவராக அனுர பண்டாரநாயக்க ஒரே தரத்தில் வேறொரு வகுப்பில் இருந்தார். அதேநேரம் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் முன்னாள் தலைவரான சரித ரத்வத்த சிவலிங்கம் ஐயாவிடம் படித்த மற்றுமொரு மாணவர். அவர் உயர் வகுப்பில் இருந்தார்.

"ரணில் பிரகாசமான மாணவர். அவர் மிகவும் திறமையானவர்" என தனது வகுப்பில் படித்த ஏனைய மாணவர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே சிவலிங்கம் ஐயா எப்போதும் முதலிடத்தில் வைத்தார். அடுத்ததாக முன்னாள் சபாநாயகர் அநுர பண்டாரநாயக்க பற்றி பேசினார். "அனுர மிகவும் குழப்படிக்கார மாணவன்' எதையாவது ஒரு பிரச்சினையை இழுத்துக்கொண்டு வந்து கத்திக்கொண்டு இருப்பான்" அநுரவின் இந்த பிடிவாத குணத்தால் ஓரிரு முறை அவரைத் தான் தண்டித்ததாகவும் சிவலிங்கம் ஐயா கூறினார்.

இ துபோன்றதொரு சம்பவம் வரலாற்றிலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அதாவது, உலகின் முதல் பிரதமர் என்ற பெருமையைப் பெற்ற சிறிமாவோ பண்டாரநாயக்காவின் முதல் ஆட்சிக் காலத்தில் (1960 - 1965) அநுர பண்டாரநாயக்க ரோயல் கல்லூரியில் மாணவராக இருந்தார். சிவலிங்கம் ஐயாவின் கைத்தடி அவ்வப்போது அனுரவைப் பதம் பார்த்த காலம் அது. அநுராவை சிவலிங்கம் ஐயா நன்றாக தண்டித்த மறுநாள், பிரதமர் அலுவலக அதிகாரி ஒருவர் திடீரென ரோயல் கல்லூரிக்கு வந்ததாக ரமேஷ் கூறினார்.

"அனைத்து ஆசிரியர்களும் பயந்தனர். பிரதமரின் மகனுக்கு தண்டனை வழங்கியதைப் பற்றி விசாரிப்பதற்காகத்தான் குறித்த அதிகாரி வந்திருக்கிறார் என அனைவரும் நினைத்தார்கள். ஆனால் வந்த அதிகாரி தனது மகனின் குழப்பங்களை தண்டிக்குமாறு பிரதமர் வழங்கிய செய்தியை கூற வந்ததாக அதிபரிடம் கூறினார்."

சிவலிங்கம் ஐயா மட்டக்களப்பு பெரியக்கல்லாறில் பிறந்திருந்தாலும், யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் கல்வி கற்றுள்ளார்.





'அப்பா குடும்பத்தில் மூத்தவர். என் தந்தையுடன் உடன் பிறந்தவர்கள் எட்டுப் பேர். அவர்களில் 7 பேரும் வட்டுக்கோட்டைப் பாடசாலைக்கே சென்றனர். அப்போது அது அமெரிக்க மிஷனரி பாடசாலை ஆகும். அங்கேயே தங்கி படித்தனர். தந்தையுடன் பிறந்த இளையவர் மட்டும் ரோயல் கல்லூரிக்குச் சென்றுள்ளார்.



அப்பா கலை உட்பட ஆங்கிலம் மொழியில் பட்டம் பெற்றவர். அப்போது வட்டுக்கோட்டை பாடசாலையின் சிறந்த மாணவராக திகழ்ந்தவர். எந்தவொரு ஆங்கில செயற்பாடுகளிலும் அப்பாவுக்கே முதல் முன்னுரிமை. அப்போது அப்பா நல்ல விளையாட்டு வீரர். 400 மீற்றர் மற்றும் 800 மீற்றர் ஓட்டம் இரண்டிலும் சம்பியன். 'யங் ஐடியா' என்ற பாடசாலை இதழில் ஆசிரியராகவும் அவர் பணியாற்றினார்'" என சிவலிங்கம் ஐயாவின் மகன் ரமேஷ் தெரிவித்தார்.

வட்டுக்கோடை இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று, மஹரகம ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகப் பயிற்சி பெற்ற சிவலிங்கம் ஐயாவுக்கு, கொட்டாஞ்சேனை பாடசாலையில் ஆசியராக பணியாற்றுவதற்கு முதல் நியமனம் வழங்கப்பட்டது. அங்கு 3 ஆண்டுகள் பணியாற்றிய அவர் பின்னர் ரோயல் கல்லூரியில் இணைந்து கொண்டார்.

"அப்போது எனது தந்தை இளமையாக இருந்தமையினால், அரச பாடசாலையிலுள்ள அனைத்து மாணவர்களும் எனது தந்தையுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையவர்களாக இருந்தார்கள். 1959ஆம் ஆண்டிலேயே ரோயல் கல்லூரிக்கு இடமாற்றம் கிடைத்தது. அப்பா கண்டிப்பானவர். ஆனால் மிகவும் அன்பானவர். அதுவும் எல்லாரும் அவரிடம் விரும்பிப் பழகுவதற்குக் காரணமாக இருக்கலாம். அந்த பாடசாலையில் சிவலிங்கம் ஐயா மிகவும் பிரபலமானார்."சிவலிங்கம் ஐயாவின் இளமைக்காலத்தில் அவருக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் இடையிலான உறவு ஆசிரியர் மாணவர் உறவை விட சிறந்த நண்பர்களை போன்றதொரு உறவாகும்.

ரோயல் கல்லூரியில் சிவலிங்கம் ஐயாவின் ஆசிரியர் காலத்தின் பல நிகழ்வுகள் அரங்கேறியுள்ளன. அவற்றில் சிலவற்றை மாத்திரமே அவர் நினைவில் வைத்திருக்கிறார். ஏனைய நினைவுகள் அனைத்தும் அவரின் இளைய மகனே எம்மிடம் கூறினார்.

"அக்காலத்தில் ரோயல் கல்லூரி மாணவர்களை சினிமா பார்க்க அழைத்துச் செல்வதாக எனது தந்தை கூறியுள்ளார். அங்கு சென்றதும் கெலரி இருக்கைகளே ஒதுக்கப்பட்டிருந்தன. ஆனால் அங்கு படித்த மாணவர்களோ கொழும்பு 7 இல் வசிக்கும் பணக்கார குடும்பங்களின் பிள்ளைகள் ஆவர். அவர்கள் எப்போதும் தனது கும்பத்துடன் பேல்கனியில் அமர்ந்து படம் பார்த்தவர்கள். கெலரியில் அமர்ந்து திரைப்படங்களை பார்த்ததில்லை. அதனால் பாடசாலை மூலமாக சினிமா பார்க்க செல்வதென்றால் அம் மாணவர்கள் மிகவும் உற்சாகத்துடன் ஆயத்தமாவார்கள். ஏனெனில் அவர்களுக்கு அது புதிய அனுபவம்."

ரோயல் கல்லூரியில் கடமையாற்றிய சிவலிங்கம் ஐயா, பின்னர் இசிபதன கல்லூரியிலும் சில காலம் கடமையாற்றி, 1970 களில் மீண்டும் ரோயல் கல்லூரியில் இணைந்து கொண்டார். அதன்பின்னர், மூன்று வருடங்கள் அரச கல்லூரியில் மாணவர் விடுதியின் பிரதித் தலைவராகவும், முதுநிலை விளையாட்டு ஆசிரியராகவும் கடமையாற்றிய அவர், பதவி உயர்வு பெற்று பொரளை வனத்தமுல்லையில் அமைந்துள்ள கலாநிதி தனிநாயகம் தமிழ் வித்தியாலயத்தில் அதிபராக சேவையில் இணைந்துக் கொண்டார்.

'அது ஒரு சிறிய பாடசாலை. எனது தந்தை அப் பாடசாலையின் அதிபராக செயற்பட்டபோது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கல்வி அமைச்சராக இருந்தார். அப்போது, எனது தந்தையின் அழைப்புக்கமைய, அவரின் நட்பின் காரணம், பாடசாலையில் இடம்பெறும் விழாக்களில் பங்கேற்க சிறப்பு விருந்தினராகப் பலமுறை வந்திருக்கிறார்."

அதன்பின்னர் சிவலிங்கம் ஐயா ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற பின்னரும் மட்டக்களப்பிலுள்ள அவரது வீட்டிற்குச் செல்ல அவர் அவசரப்படவில்லை.

'ஓய்வு பெற்ற பின்னரும் சில காலம் அப்பா கொழும்பிலேயே இருந்தார். அரசியல் கட்சி வேறுபாடின்றி கொழும்பில் அவருக்கு அநேகமான நண்பர்கள் இருந்தனர். அவர் அடிக்கடி ரோயல் கல்லூரியில் நடைபெறும் நிகழ்வுகளில் பங்கேற்பார். அவருடைய பழைய மாணவர்கள் அவ் விழாக்களுக்கு வரும்போது, கடந்தகால நினைவுகளைப் பற்றி பேசுகிறார்கள். அவர்கள் தந்தையை உண்மையிலேயே மதிக்கிறார்கள். மட்டக்களப்பு வீட்டுக்கு வந்தாலும் அப்பா அவ்வப்போது கொழும்புக்கு செல்வதை வழக்கமாக வைத்திருந்தார்.'

சிவலிங்கம் ஐயாவின் அன்பு மனைவி கனகமணி தற்போது உயிருடன் இல்லை. அவர் கடந்தாண்டு இவ்வுலகை விட்டு பிரிந்தார். சிவலிங்கம் ஐயாவிக்கு மூத்தது ஒரு மகள். அடுத்து இரு மகன்கள். சிவலிங்கம் ஐயா தற்போது தனது மூத்த மகள் அனுராவின் நிழலிலேயே ஓய்வெடுக்கிறார். இரண்டாவது மகன் ரவி சவுதி அரேபியாவில் ஜெத்தாவில் உள்ள ஒரு கட்டுமான நிறுவனத்தில் கணக்காளராக பணியாற்றி வருகிறார். அவுஸ்திரேலியாவில் மெல்போர்னில் வசிக்கும் ரமேஷ் இளைய மகன். இவர்கள் ரோயல் கல்லூரியிலேயே படித்தார்கள்.

'அப்பா இப்போதும் அவரது வேலைகளை தனியாகவே செய்து கொள்வார். கடந்த 6 மாத காலமாகவே அவர் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளார். நினைவாற்றல் குறைந்துள்ளது. எப்படியும் அப்பா அதிகாலையில் எழுந்து நடைப் பயிற்சியில் ஈடுபடுவார். பின்னர் கொஞ்சம் உடற்பயிற்சி செய்வார். அப்பாவின் பார்வை இன்றும் நன்றாக உள்ளது. இன்றளவும் கண்ணாடி அணிவதில்லை, பத்திரிகைகள் படிக்கிறார்' என்றார் ரமேஷ்.

*காயத்ரி சுரேஷ்*





# அரச ஊழியர்களின் இதுவரையான சம்பள அதிகரிப்பின் பின்னணி

ஜனாதிபதி வேட்பாளர்களான ரணில், சஜித் மற்றும் அனுர ஆகியோரின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. இவற்றின் உள்ளடக்கத்தை ஆராய்ந்து பார்க்கும் போது காணக் கூடிய முக்கிய பிரதான அம்சமாக இருப்பது, அந்த அனைத்து தேர்தல் விஞ்ஞாபனங்களும் பெரும்பாலும் ஒரே மாதிரியான நோக்கிற்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளதாகும். சில சந்தர்ப்பங்களில், கொள்கை விளக்கம் அல்லது கட்சி கொள்கைகள் அதே வடிவத்தில் உள்ளதைக் காணக்கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளன.

உதாரணமாக அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் ஜனாதிபதி வேட்பாளர்கள் கொண்டிருக்கும் ஒரேமாதிரியான கொள்கையினைக் குறிப்பிட முடியும். ஜனாதிபதித் தேர்தல் நெருங்கியிருக்கும் நிலையில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அரச ஊழியர்களினால் தமது சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரித்துக் கொள்வதற்காக வேலை நிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பில் பதிலளித்தது, அரச துறையில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் குறித்தும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான குழுவொன்றை நியமித்ததாகும். குழுவை நியமித்த ஜனாதிபதி, அந்தக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய, 2025ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் ஊதிய முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கும், சம்பளத்தை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவித்தார்.

ஒரு மாதகாலத்திற்குள் அந்தக் குழு தமது அறிக்கையினைச் சமர்ப்பித்தது. அனைத்து அரச ஊழியர்களுக்கும் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக 25000 ரூபாவினை வழங்குவதற்கும், அரச சேவையின் குறைந்த அடிப்படைச் சம்பளத்தை 33000 ரூபாவாக உயர்த்துவதற்கும் அந்தக் குழு தனது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த அறிக்கையினை அமைச்சரவையில் சமர்ப்பித்து அடுத்த வருட ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதியினைப் பெற்றுக் கொண்டார். அதனடிப்படையில், ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அரச ஊழியர்களின் குறைந்த சம்பளம் 53000 ரூபாவாக அதிகரிப்பதோடு, அனைத்து அரச ஊழியர்களின் சம்பளம் 24 முதல் 35 வீதத்திற்கிடையில் அதிகரிக்கப்பட உள்ளது.

இதேவேளை ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசாவும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் குறிப்பிட்டுள்ளார். அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் தற்போது நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பை அதேபோன்றே நடைமுறைப்படுத்தப் போவதாக தேர்தல் விஞ்ஞாபனத்திலும், பிரசார விளம்பரங்களிலும் பெரும் பிரபலத்தை ஏற்படுத்தி குறிப்பிட்டுள்ளார். அனைவரும் அறிந்த உண்மை என்னவென்றால், 25000 ரூபா வரையில் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை அதிகரித்தல் மற்றும் 33000 ரூபா வரையில் அடிப்படைச் சம்பளத்தை அதிகரித்து அரச சேவையின் ஆரம்ப அடிப்படைச் சம்பளத்தை 55000 ரூபா வரையில் அதிகரிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார் என்பதாகும். அதேவாறான சம்பள அதிகரிப்பை வழங்குவதாக அதற்குச் சமனான தரவுகளை முன்வைத்து சஜித் பிரேமதாசாவும் தெரிவித்துள்ளார்.

அவற்றின் மூலம் மறைமுகமாக குறிப்பிடப்படும் முக்கிய விடயம் என்னவென்றால், நாட்டின் பிரபலமிக்க ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் வாக்குறுதிகளை உருவாக்கியவர் ரணில் விக்கிரமசிங்க என்பதாகும். அதுவும் முற்றிலும் ஒரே மாதிரியானதாக இல்லை. ரணில் விக்கிரமசிங்கவின் வாக்குறுதிகள் பிரதான அரசியல் வேட்பாளர் ஒருவரால் அவர்களது விஞ்ஞாபனத்தில் அதேபோன்றே உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன்படி, நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளின் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளை கையாள்வது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க பாரிய தாக்கங்களை ஏற்படுத்துகிறார் என்பது தெளிவாகின்றது. நான் ஒரே ஒரு உதாரணத்தை மாத்திரமே குறிப்பிட்டேன். அனுரகுமார திஸாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்ட பின்னர், முகநூலில் வைரலாகப் பரவிய ஒரு பதிவு: “ரணில் விக்கிரமசிங்கவின் கல்வி கொள்கை அறிக்கையை நீங்கள் படிக்கவில்லையா? அப்படியானால் அனுரகுமாரவின் விஞ்ஞாபனத்தைப் படியுங்கள்” அனுரகுமாரவின் விஞ்ஞாபனத்தைப் படிக்கும்போது இந்தப் பதிவு எவ்வளவு உண்மையானது என்பது புரியும்.

கல்வி கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கொத்தணி பாடசாலை முறை உள்ளிட்ட குறிப்பிடக் கூடியளவு யோசனைகள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அனுரகுமார நாட்டின் வறிய குடும்பங்களில் சில தரப்பினருக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை வழங்குவதற்கு தனது கொள்கைப் பிரகடனத்தில் வாக்குறுதி வழங்கியுள்ளார். சஜித் அந்த தரப்பினருக்கு 20 ஆயிரம் ரூபாவினை வழங்குவதாக வாக்குறுதி வழங்கியுள்ளார். இதுவரைக்கும் இருந்தது வெசாக் மற்றும் பொசான் அன்னதான நிகழ்வுகளாகும். எனினும் தேர்தலின் பின்னர் அன்னதான நிகழ்வும் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. அந்தளவுக்கு தேர்தல் விஞ்ஞாபனங்களில் ஒவ்வொரு மனிதருக்கும் வழங்கப்படும் நிவாரணங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் வரைக்கும் வேட்பாளர்களால் எந்த ஒரு வாக்குறுதிகளையும் வழங்க முடியும். இலங்கை வாக்காளர்கள் வாக்குறுதிகளுக்கு பெரும்பாலும் ஏமாறுபவர்கள் என்பதை இந்த வேட்பாளர்கள் நன்கு அறிவார்கள். உண்மையிலேயே இவ்வாறான வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியுமா என்பது தொடர்பில் சில வாக்காளர்கள் சிந்திப்பதில்லை.

இலங்கையில் வாக்களிப்பு முறை ஆரம்பித்ததிலிருந்தே, வாக்குறுதி அரசியலால் பொதுமக்கள் எவ்வாறு ஏமாற்றப்பட்டுள்ளார்கள் என்பதற்கு பல உதாரணங்கள் உள்ளன. 1970ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க சந்திரனில் இருந்தாவது அரிசியைக் கொண்டு வந்து அரிசி நிவாரணத்தை மீண்டும் வழங்குவதாக வாக்குறுதி வழங்கினார்.

(36ஆம் பக்கம் பார்க்க)

*மக்கள் நேசன்*

## சிவில் விமான சேவைகள் அமைச்சு

சிவில் விமான சேவை அதிகார சபை

### 1955இன் 196 வான்கலமோட்டல் ஒழுங்குமுறையின் கீழ் சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விடுவிக்கப்படும் அறிவித்தல்

தனியார் செயற்பாட்டு (Private Operations) நடவடிக்கைகள், விமானத்தில் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுகள் (Aerial Work) மற்றும் உள்நாட்டு கூலி விமான போக்குவரத்து (Domestic Charter Operations) செயற்பாட்டு நடவடிக்கைகளான பயணிகள், சர்க்கு மற்றும் அஞ்சல் விமான சேவைகளை முன்னெடுப்பதற்காக 2010ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க குடியியல் வான்செலவுச் சட்டம் மற்றும் அதற்குரிய கோவைகள் உட்பட நிபந்தனைகளுக்கு அமைய விமான செயற்பாட்டுச் சான்றிதழ் மற்றும் விமானக் கம்பனிக்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக கொழும்பு சர்வதேச விமான நிலையம், இரத்மலானை இல் உள்ள வரையறுக்கப்பட்ட அவுரா எயார்லைன்ஸ் (தனியார்) கம்பனியினால் 2024 ஜுலை மாதம் 03ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2024 ஜுலை மாதம் 02ஆம் திகதி கொண்ட விண்ணப்பப்படிவத்தில் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கிறேன். விண்ணப்பப்படிவத்திற்கு அமைய வரையறுக்கப்பட்ட அவுரா எயார்லைன்ஸ் (தனியார்) கம்பனியின் பணிப்பாளர் சபை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைகின்றது.

**திரு. டி.ஏ.சீ.வி. தம்புகல**
**திருமதி எஸ்.எம். சாந்தனி**

இக்கம்பனியின் உத்தேச விமானப் போக்குவரத்து செயற்பாடுகள் தொடர்பாக பிரதான பொறுப்பு முகாமைத்துவத்திற்கு திரு. ஆர்.கே. இசுரு அர்ஜித அவர்கள் வரையறுக்கப்பட்ட அவுரா எயார்லைன்ஸ் (தனியார்) கம்பனியினால் பெயரிடப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரரின் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியை கட்டுநாயக்க மினுவன்கொட வீதி, இலக்கம் 152/1 கொண்ட சிவில் விமான சேவை அதிகார சபையின் கீழ் (அடித்தளம்) மாடியில் அமைந்துள்ள தொழில்நுட்ப நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் எந்தவொரு வேலை நாட்களிலும் அலுவலக நேரத்திற்குள் பொது மக்களுக்கு இதனை பார்வையிட முடியும்.

உத்தேச செயற்பாடுகளுக்காக தேவையான விமான செயற்பாட்டுச் சான்றிதழ் (Air operator Certificate) உட்பட ஏனைய உரிய அதிகாரங்களை வழங்குவதற்கு முன்னர் சிவில் விமான சேவை சட்டம் விமான போக்குவரத்து சேவையைப் போன்று உரிய தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட செயற்பாடுகள் (International Standard and Recommended Practices) மற்றும் இந் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அதனுடன் இணைந்த உள்நாட்டு தேவைகளுக்கு அமைய பாதுகாப்பு மிக்க வினைதிறனுடன் கூடிய விமான போக்குவரத்து சேவைகளை நடாத்துவதற்காக விண்ணப்பதாரர்களின் தகைமைகளை கூட்டிணைக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு அமைய உரியவாறு பரிசோதனைகளை மேற்கொண்டு இவ் விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டம் 2024 ஒக்டோபர் மாதம் 09ஆம் திகதிக்குப் பின்னர் என்னால் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கிறேன்.

1955இன் 196 வான்கலமோட்டல் ஒழுங்குமுறையின் கீழ் மேற் கூறப்பட்ட வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்துக்கு 10 நாட்களுக்கு முன்னர் எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் மேற் கூறப்பட்ட விண்ணப்பப்படிவம் தொடர்பில் எழுத்து மூலம் உரிய காரணங்களை அடிப்படையாக கொண்ட விடயங்களை விமான போக்குவரத்து கோவைக்கு அமைய எனக்கு அறிக்கை சமர்ப்பிக்க முடியும். உள்ளடக்கப்பட்டுள்ள சகல வெளிப்பாடுகளின் உண்மை தன்மையை எழுத்து மூல சாட்சிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறான விஞ்ஞாபனத்தை என்னிடம் சமர்ப்பிக்கும் வேளையில் அவரினால் அதன் பிரதியை விண்ணப்பதாரிக்கு கிடைக்க செய்ய வேண்டியதுடன் அவ்வாறு அனுப்பப்பட்டதாக சான்றிதழை உரிய விஞ்ஞாபனத்துடன் இணைக்க வேண்டும்.

**எயார் வைஸ் மார்ஷல் சாகர கொடகடெனிய (ஓய்வு பெற்ற)**
**இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை,**
**பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்,**

**இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை,**
**இலக்கம் 152/1, மினுவங்கொட வீதி,**
**கட்டுநாயக்க.**
2024 ஆகஸ்ட் 30ஆம் திகதி


# வியட்நாமின் 79 ஆவது சுதந்திரதின நிகழ்வு






(ருஸைக் பாரூக்)

வியட்நாம் சோசலிச குடியரசின் 79 ஆவது சுதந்திர தின நிகழ்வு ஒகஸ்ட் 29 ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் வியட்நாம் தூதுவர் Trinh Thi Tam தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டார். இந்நிகழ்வில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, இலங்கை வியட்நாம் ஒற்றுமை சங்கத்தின் செயலாளர் நாயகம் சுதசிங்க சுகதபால, கொழும்பு பொது நூலகத்தின் பிரதம நூலகர் வருணி கக பதாராச்சி, இராஜதந்திரிகள், மதத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.


## இலங்கை இராணுவம்

**இலங்கை இராணுவத்தினரின் உபயோகத்திற்காக கட்டடங்களை வாடகைமுறை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான விலைமனுக்கோரல்.**

இலங்கை இராணுவத் தலைமையகத்தில் சேவையிலீடுபட்டிருக்கும் இராணுவ நிலை உத்தியோகத்தர்களுக்குத் தங்குமிட வசதிகளுடன் கூடிய ஒரு கட்டத்தை இலங்கை இராணுவ தலைமையத்திற்கு அருகாமையில் வாடகைக்குப் பெற்றுக் கொள்வதற்காக விலைமனுக் கோரப்படுகிறது. அது தொடர்பான கூடுதலான விபரங்களுக்காக பின்வரும் இராணுவ இணையத்தளத்தைப் பார்வையிடவும். **www.army.lk**

## இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்

### துண்டாக்கப்பட்ட விறகு தொகையை விற்பனை செய்வதற்கான விலைமனுக் கோரல்

இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காங்கேசன்துறை தொழிற்சாலை வளாகத்தில் செயற்படும் சுத்திகரிப்பு கேள்வியில் சேருகின்ற மீட்டரின் அளவிற்கு துண்டாக்கப்பட்ட விறகுத் தொகையாக விற்பனை செய்வதற்கு தயார்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
(2024.09.09ம் திகதி பி.ப. 3.00 இற்கு முன்பு)

மேலதிக தகவல்களை கணக்காளர் இலங்கை சீமெந்து கூட்டுத்தாபன தொ.பே. இல. 076 3996601 மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**

**இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்,**
**இல. 27, வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு -02.**

**தொ.பே. இல. 011-2440205**

## சிறுநீரகம் தேவை

**“O” பொசிட்டிவ்**
வகையான
சிறுநீரகமொன்று தேவை.
**அழைக்கவும் :**
**0714240370, 0712240368**






வெள்ளவத்தை Omega Inn விடுதியில் கடந்த சனிக்கிழமை 24ஆம் திகதி இரவு நடைபெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள்.


Uva Wellassa University

## தேசத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்து பெருமை கொள்வோம்

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் பட்டப்படிப்பில் புதிய போக்குகளை முன்னெடுத்துள்ளது. தேசிய வள தளத்திற்கு மேலதிக பெருமை சேர்ப்பதை கருத்தில் கொள்வதன் மூலம் தொடர்ந்து கல்விக்காகவும் பங்களிப்புச் செய்கிறது. பல்கலைக்கழகத்தின் கல்வித்திட்டமானது தமது தொழில்வழங்குநர்களுக்கு பெறுமதியை ஏற்படுத்த திறமையான புதிய தலைமுறை பட்டதாரிகளை உருவாக்குவதற்கு கவனமாக வடிவமைத்துள்ளது. இந்த சிறந்த தேசிய முயற்சியில் நீங்களும் ஒரு பங்குதாரராகலாம்.

## பெறுகை அறிவித்தல்

பின்வருவனவற்றை வழங்குவதற்கு தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் திட்ட பெறுகைக் குழு, தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | விபரம் | கேள்வி இல. | விலைமனு பிணை பெறுமதி ரூபா | மீளளிக்கப் படாத வைப்புகள் ரூபா | விலை மனுவுக்கு முந்திய சந்திப்பு | விலைமனு மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவு - தொழில்நுட்ப கற்கைகள் பீடத்திற்காக மேசைக் கணினிகள், மையப்படுத்தப்பட்ட UPS மற்றும் மையப்படுத்தப்பட்ட Server இன் வழங்கல், விநியோகம் மற்றும் நிறுவுதல் | UWU/G/NCB/C/ 24/01 | 810,000.00 | 13,400.00 | 2024.09.10 மு.ப. 10.00 | 2024.09. 23 பி.ப. 02.00 |
| 02 | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்காக ஆய்வுகூட உபகரணங்களின் வழங்கல், விநியோகம் மற்றும் நிறுவுதல் - (பொதி 1) | UWU/G/NCB/C/ 24/02 | 610,000.00 | 10,260.00 | 2024.09.11 மு.ப. 10.00 | 2024.09. 23 பி.ப. 02.30 |

மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு 3114820 என்ற இலங்கை வங்கி கணக்கு இலக்கத்திற்கு நேரடியாக வைப்புச் செய்வது அல்லது எந்த ஒரு வேலை நாட்களிலும் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 இற்கு இடையே ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்கு ஒவ்வொரு கேள்விமனுவுக்கும் முறையே மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டை வழங்கி பிரதி காசாளருக்கு (களஞ்சியங்கள் மற்றும் வழங்கல்) எழுத்துமூலம் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து 2024.09.23 ஆம் திகதி பி.ப. 2.30 வரை எந்த ஒரு விலைமனுதாரர்கள் மூலமும் விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். http://www.uwu.ac.lk/procurement/ என்ற பல்கலைக்கழக இணையதள முகவரியில் இருந்தும் விலைமனு ஆவணங்களை விலைமனுதாரருக்கு தரவிறக்கம் செய்ய முடியும். பல்கலைக்கழக இணையதளத்தில் இருந்து விலைமனு ஆவணங்களை பெறுபவர்கள் அசல் ரொக்கப்பண பற்றுச்சீட்டு வைப்பு ரசீதுடன் பூர்த்திசெய்யப்பட்ட ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். மேல் குறிப்பிடப்பட்டவாறு 3114820 என்ற கணக்கு இலக்கத்திற்கு ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் இலங்கை வங்கியின் எந்த ஒரு கிளையிலும் கட்டணங்களை செலுத்த முடியும். (விலைமனுதாரர்களுக்கு விலைமனு ஆவணங்களை கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம்.)

விலைமனுக்களை 2024.09.23 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது சேர்ப்பதற்கு வேண்டும் என்பதோடு அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது (அதிகாரம் அளிக்கப்பட்ட கடிதம் ஒன்றுடன்) அவர்தம் அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி பங்கேற்க அனுமதிக்கப்படுவார். கேள்விமனுக்கள் முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறை ஒன்றில் மூடப்பட்டு அந்தக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தொடர்புடைய கேள்விமனு இலக்கத்தை குறிப்பிட வேண்டும் என்பதோடு, தலைவர், பெறுகைக் குழு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பஸ்ஸர வீதி, பதுளை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்பு பெட்டியில் இடுவதற்கு முடியும்.
055-2226475 என்ற தொலைபேசி இலக்கத்தில் பிரதி காசாளரிடம் (களஞ்சியங்கள் மற்றும் வழங்கல்) இருந்து மேலதிக விபரங்களை பெற முடியும்.

**தலைவர்**
**திட்ட பெறுகை குழு (பாரிய அளவானது),**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,**
**பதுளை.**
2024.09.01

## பிரதேச அபிவிருத்தி வங்கி (RDB)

RDB

### கேள்விக்கோரல்களுக்கானஅழைத்தல்

**மூன்று (03) வருடகால எல்லைக்கு பிரதேச அபிவிருத்தி (RDB) வங்கிக்காக அலுவலக இடப்பரப்பை பெற்றுக் கொள்ளல்**

**ஒப்பந்த இல.: AGM/EA/RDB/2024/113**

கீழே விபரிக்கப்பட்டவாறு குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் மூன்று (3) வருடகால எல்லைக்கு பிரதேச அபிவிருத்தி வங்கிக்காக (RDB) அலுவலக இடப்பரப்பை பெற்றுக் கொள்வதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விக் கோரல் வெதமுல் கண்டி வீதி, 933 ஆம் இலக்கத்திலுள்ள பிரதேச அபிவிருத்தி வங்கியின் (RDB என்றும் அழைக்கப்படுவது) சார்பாக உதவி பொது முகாமையாளர் (பொறியியல் மற்றும் நிருவாகம்) அழைக்கின்றார்.

| கேள்விக்கோரல் இல. | விருப்பத்திற்குரிய அமைவிடம் | ஆகக்குறைந்த சதுரஅடி | கேள்விப்பிணை (வங்கி உத்தரவாதம் அல்லது மீளளிக்கப்படும் ரொக்கப்பண வைப்பு) |
|---|---|---|---|
| AGM/EA/ RDB/2024/113 | களனி வெதமுல்லை கண்டி வீதி 933 ஆம் இலக்கத்திலுள்ள பிரதேச அபிவிருத்தி வங்கியின் (RDB) தற்போதுள்ள தலைமை அலுவலகத்தைச் சுற்றிவரவுள்ள பிரதேசம் (தலைமை அலுவலகத்திலிருந்து ஏறக்குறைய 10 கிமீ.) | ஆகக்குறைந்தது 17,500 ச.அடி. ஆகக்கூடியது 35000 ச.அடி | 50,000 ரூபா |

மேலும் தனிநபர்களிடமிருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுவதுடன் பின்வரும் தேவைப்படுத்தல்கள் விரும்பத்தக்கது.

01. இணக்க சான்றிதழ் (COC) இருத்தல் வேண்டும்.
02. பொது போக்குவரத்து வசதிகளுக்கான இலகுவான நுழைவுவழி இருத்தல் வேண்டும்.
03 கட்டிடமானது 03 மாடிகளுக்கு மேற்பட்டதாயின் மின்தூக்கி வசதிகள் (elevator) இருத்தல் வேண்டும்.
04. Three-phase electricity உடன் ஆகக் குறைந்தது capacity of 400 Kva (35000 சதுர அடிகளுக்கு)
05. நாளொன்றிற்கு ஆகக்குறைந்தது 15000 லீற்றர் நீர் தேவைப்பாடு இருத்தல் வேண்டும்.
06. வளிச்சீராக்கல் வசதிகள் இருத்தல் வேண்டும்.
07. போதுமானளவு சுகாதார வசதிகள் இருத்தல் வேண்டும் (ஒவ்வொரு தளத்திற்கும் ஆகக்குறைந்தது இருகழிவறைகள்
08. மின்னல் பாதுகாப்பு மற்றும் surge arrestors இருத்தல் வேண்டும்.
09. கட்டிடத்தில் தீ பாதுகாப்பு முறையொன்று இருத்தல் வேண்டும்.
10. வெள்ளப்பெருக்கு ஏற்பாடத இடத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
11. கட்டிடமானது LED Panel மின்விளக்குகளினால் ஒளிர்தல் வேண்டும்.
12. 25 இற்கு மேற்பட்ட வாகனங்களை நிற்பாட்டுவதற்கான வசதிகளுடனான வாகனதரிப்பிடம்.
13. நிலம் தரஓடுகள் பதிக்கப்பட்டு கூரை சிவிலிங் செய்யப்பட்டு சுவர் பகுதி ஒப்புரவு செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.
14. அங்கவீனர்களுக்கான நுழைவுவழி இருத்தல் வேண்டும்.
15. போதுமானளவு அவசர வெளிச்செல்லல்கள் இருத்தல் வேண்டும்.
16. உரித்தான கட்டிடத்திற்கான தெளிவான உறுதியொன்றை விண்ணப்பதாரிகள்/நிறுவனங்கள் கொண்டிருத்தல் வேண்டும்.
17. மேற்கோள் காட்டப்பட்ட விகிதங்கள் மற்றும் அரசாங்க மதிப்பீடுகளுக்கமைவாக பணக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.
18. வங்கியினால் தேவைப்படுமிடத்து தொழில்நுட்ப பொறியியல் அறிக்கை கேள்விதாரரின் சொந்த செலவிலேயே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கேள்விக்கோரல்கள் 91 நாட்களுக்கு (2024 டிசம்பர் 18 ஆம் திகதியன்றுவரையும் அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட காலத்திற்கும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். கேள்வி பிணைகள் 2025 ஜனவரி 15 ஆம் திகதியன்று வரையும் (91 + 28 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக தகவலை 2024 செப்டம்பர் 02 ஆம் திகதியிலிருந்து 2024 செப்டம்பர் 18 ஆம் திகதியன்று வரையும் அலுவலக நேரங்களில் 011 2035454 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக களனி, வெதமுல்ல கண்டி வீதி, 933 ஆம் இலக்கத்திலுள்ள பிரதேச அபிவிருத்தி வங்கி (RDB) பொறியியல் மற்றும் நிருவாகப்பிரிவு உதவி பொதுமுகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கட்டிடமொன்றின் உரிமையாளரான ஆர்வமும் தகுதியுமுள்ள நபர்கள் 2024 செப்டம்பர் 19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகை, கட்டிட வரைபடங்களின் பிரதியொன்று, நில அளவை வரைபடம், உறுதிச் சான்றிதழ் (Title Report மற்றும் COC ஆகியவற்றுடனான சுயமாக தயாரிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பமானது உதவி பொது முகாமையாளர், (பொறியியல் மற்றும் நிருவாகம்), பிரதேச அபிவிருத்த வங்கி (RDB), இல. 933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியியல் உட்சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான கேள்விக் கோரல்கள் நிராகரிக்கப்படும்.

உறையின் இடதுபக்கமேல் மூலையில் 'OBTAINING OF OFFICE SPACE FOR PRADESHIYA SANWARDHANA BANK (RDB), FOR Three (03) years PERIOD/AGM/EA/RDB/2024/113' என்றசொற்கள் குறித்துரைக்கப்படல் வேண்டும்.

குழுவொன்று 2024 செப்டம்பர் 20 ஆம் திகதியன்றிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் இடப்பரப்பை பரீட்சிக்கும்.

வங்கியானது அதனது செயற்பாடுகளுக்காக ஆகக்குறைந்தது 35,000 ச.அடி இடப்பரப்பை தேடுவதுடன் வங்கியின் தேவைப்பாட்டை பூர்த்திசெய்வதற்காக ஒன்று அல்லது மேற்பட்ட கட்டிடங்களை பெற்றுக் கொள்வதற்கு உத்தேசிக்கின்றது.

கேள்விக்கோரல் மதிப்பீடானது சதுர அடி ஒவ்வொன்றிற்கும் மேற்கோள் காட்டப்பட்ட விகிதாசாரம் மற்றும் மேலேயுள்ள பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏனைய வசதிகளிலும் தங்கியிருக்கும்.

**உதவி பொதுமுகாமையாளர்-(பொறியியல் மற்றும் நிருவாகம்),**
**பிரதேச அபிவிருத்தி வங்கி (RDB) தலைமையலுவலகம்**
**இல.: 933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி.**
**தொலைபேசி: 011 2035454/011 2035455/011 2035456**
**தொலைநகல்: 011 2906883. www.rdb.lk-01.09.2024**

**இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒன்பதாவது ஜனாதிபதியைத் தீர்மானிப்பதற்கு இன்னமும் இருபது நாட்களே எஞ்சியிருக்கும் நிலையில், பிரதான வேட்பாளர்கள் தீவிர தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.**

நாட்டில் பாரியதொரு கட்டமைப்பு மாற்றம் தேவை என நாட்டு மக்கள் பலர் ஒன்றுகூடி வீதியில் இறங்கிப் போராடிய பின்னர் நடத்தப்படும் முதலாவது தேர்தல் இதுவென்பதால் இத்தேர்தல் முக்கியத்துவம் பெற்றுள்ளது. அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரங்கள் ஒன்றுக்கொன்று சளைத்திருக்கவில்லை என்பதை நிரூபிக்கும் வகையில் தேர்தல் களம் அமைந்திருக்கின்றது.




**பொறுப்பற்ற முறையில் செயற்படும் எந்தவொரு இணையத்தளமும் கட்டுப்படுத்தப்படுவது அவசியம்!**

# ஆதாரமற்ற கருத்துக் கணிப்புகளை வெளியிட்டு மக்களைத் திசைதிருப்ப முற்படும் கும்பல்கள்!






இவ்வாறான பின்னணியில் தேர்தல் பிரசாரங்களில் சமூக ஊடகங்களின் பயன்பாடு கடந்த காலங்களைவிட அதிகரித்திருப்பது இதில் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். 'தடி எடுத்தவன் எல்லாம் வேட்டைக்காரன்' என்பது போல சமூக ஊடகத்தில் கணக்கொன்றை வைத்திருப்பவர்கள் எல்லாம் ஊடகவியலாளர் போன்று செயற்படத் தொடங்கியிருக்கும் போக்கும் அதிகரித்துள்ளது.

இதற்கும் அப்பால் தேர்தல் குறித்த கருத்துக் கணிப்புக்கள் என்பதன் பேரில் முன்னெடுக்கப்படும் ஊடகப் பிரசாரங்கள் தற்பொழுது பேசுபொருளாகியுள்ளன. இந்த விடயம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்கும் சென்றுள்ளது.

தேர்தலுக்கு முன்னர் நடத்தப்படும் கருத்துக் கணிப்புக்கள் குறித்து தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்னாயக்க கேள்வியெழுப்பியுள்ளார். தேர்தலில் மக்களின் விருப்பம் சரியாகத் தீர்மானிக்கப்படும் என்பதால், அதற்கு முன்னதாக கருத்துக் கணிப்புகளை மேற்கொள்வது மக்களின் விருப்பத்துக்கு எதிரானது. இதுவரையில் கருத்துக் கணிப்புகள் குறித்த கேள்வி கடந்த காலத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை என்றும், ஊடக வழிகாட்டுதல்களின் கீழ் கூட இந்த விடயம் தீவிரமான சிந்தனைக்கு உட்படுத்தப்பட வேண்டிய நேரம் தற்பொழுது உருவாகியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடக சுதந்திரத்தின் கீழ், பொதுமக்களின் பேச்சுரிமை மற்றும் சிந்தனையை எந்த வகையிலும் கட்டுப்படுத்த முடியாது என்றாலும், தேர்தலுக்கு முன்னதாக ஊடகங்களில் வெளியாகும் கருத்துக் கணிப்புகள் வாக்களிப்புப் போக்கைப் பாதிக்குமா என்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும். கருத்துக் கணிப்புகளை நடத்தும் விதம் குறித்து தற்போதைய ஆணைக்குழு பரிசீலிக்க வேண்டும் என்றும், இதன் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் கருத்துக் கணிப்புக்கள் தேர்தல் நடைமுறைக்கு இடையூறாக அமைந்தால் அதற்கு எதிராக சட்டரீதியாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மக்கள் விருப்பத்தின் முடிவை தீர்மானிக்க தேர்தல் நடத்தப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் குறிப்பிடுவது போன்று மக்களின் தெரிவுக்கான வாய்ப்பாக தேர்தல் அமையும் பட்சத்தில், அதற்கு முன்னரே தேர்தல் குறித்த போக்கை மாற்றுவது அடிப்படையற்ற செயற்பாடாக அமைகின்றது. தேர்தல்களின் போது கருத்துக் கணிப்புக்களை முன்னெடுப்பது என்பது புதியதொரு விடயம் அல்ல. உலகின் ஏனைய நாடுகளிலும் இவ்வாறான நடைமுறை காணப்படுகின்றது.

இருந்தபோதும், ஊடக நெறிமுறை எதனையும் பின்பற்றாது ஒவ்வொருவரும் தனிப்பட்ட தெரிவுகளின் பின்னணியில் இருந்துகொண்டு மக்களின் கருத்துக்களை அறிவதாகக் கூறி அவற்றை கருத்துக் கணிப்புக்கள் என்ற போர்வையில் வெளியிடுவது உண்மையிலேயே கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். குறிப்பாக சமூக ஊடகங்களில் கணக்குகளைக் கொண்டவர்கள் மக்கள் நடமாட்டம் அதிகமான பகுதிகளுக்குச் சென்று ஒலிவாங்கியை பிடித்துக் கொண்டு மக்களிடம் கருத்துக்களைக் கேட்கின்றனர். இதன்போது மக்கள் கூறும் கருத்துக்களை வைத்துக்கொண்டு குறிப்பிட்ட வேட்பாளருக்குத்தான் அதிகமான ஆதரவு உள்ளது என்ற விம்பத்தைத் தோற்றுவிக்க முயல்கின்றனர். இதனை உண்மையில் மக்களின் மனநிலையை மாற்றும் ஒரு தேர்தல் பிரசாரமாகவே பார்க்க முடியும்.

தேர்தல் குறித்த கருத்துக் கணிப்பு என்பது சுயாதீனமானதொரு அமைப்பினால், உரிய வழிமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்படுவதாகவும், கருத்துக் கணிப்பில் பங்கெடுப்பதற்கு அனைத்துத் தரப்பினருக்கும் சம வாய்ப்புக்களை வழங்குவதாகவும் இருக்க வேண்டும். கருத்துக் கணிப்பொன்றை மேற்கொள்வதற்கான அடிப்படைகள் பின்பற்றப்பட வேண்டியது முக்கியமானதாகும்.

பிரதான தேர்தல்களின் போது பல்கலைக் கழகங்கள் சில தாமாக முன்வந்து மக்கள் கருத்துக் கணிப்புக்களை மேற்கொள்வது வழமை. அவ்வாறு மேற்கொள்ளப்படும் கருத்துக் கணிப்புக்கள் கூட ஒரு சில கட்சிகளுக்கு ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருக்கின்றன என்ற குற்றச்சாட்டுக்களும் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் சமூக ஊடகங்கள் மூலம் நடத்தப்படும் கருத்துக் கணிப்புக்கள் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு வழிகாட்டல்களைத் தயாரிப்பது குறித்துக் கவனம் செலுத்த வேண்டும்.

கருத்துக் கணிப்பு என்பது தேர்தலில் உண்மையான முடிவு என அர்த்தப்படாது. இதற்குச் சிறந்த உதாரணம், அண்மையில் நடைபெற்றுமுடிந்த இந்தியாவின் பாராளுமன்றத் தேர்தலில் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையில் வெற்றிபெறும் எனப் பெரும்பாலான கருத்துக் கணிப்புக்கள் கூறியிருந்தன. இருந்தபோதும், இறுதியில் தேர்தல் முடிவுகள் கருத்துக் கணிப்புக்களைப் பொய்யாக்கியிருந்தன.

எனவே, கருத்துக் கணிப்பு முடிவுகளும், தேர்தல் முடிவுகளும் ஒரே மாதிரியானதாக இருக்கும் எனக் கூற முடியாது. இருந்தபோதும், மக்கள் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு இந்தக் கருத்துக் கணிப்புக்கள் பயன்படுத்தப்பட்டுவிடக் கூடாது என்பதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் கரிசனையாக உள்ளது. இதில் நியாயம் இருப்பதால் கருத்துக் கணிப்புக்களை ஒழுங்குமுறைப்படுத்துவது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்துவது காலத்தின் தேவையாகும்.

அதேவேளை, வேட்பாளர்கள் தமது பிரசாரங்களுக்காக மேற்கொள்ளக் கூடிய செலவுகள் குறித்த எல்லையொன்றை தேர்தல்கள் ஆணைக் குழு வழங்கியுள்ளபோதும், பிரசாரங்களுக்கு மேற்கொள்ளப்படும் செலவுகளைப் பார்க்கும்போது அதிகமாகவே தென்படுகின்றது. வேட்பாளர்கள் சார்பில் ஒட்டப்படுகின்ற சுவரொட்டிகள் இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். சுவரொட்டிகளை ஒட்டுவது தேர்தல் சட்டத்துக்கு முரணானது எனத் தெரிந்தும் தொடர்ந்தும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு ஒட்டப்படும் சுவரொட்டிகளை அகற்றுவதற்கு ஒரு வேலையாளுக்கு 47,000 ரூபாவை செலவுசெய்ய வேண்டியுள்ளது எனப் பொலிஸ் திணைக்களம் கூறிய கருத்தை மேற்கோள்காட்டி ஊடகங்கள் அண்மையில் அறிக்கையிட்டிருந்தன. இவ்வாறு தேவையற்ற செலவுகள் குறித்தும் அரசியல் கட்சிகள் சிந்திப்பது அவசியம்.

**பி.ஹர்ஷன்...**

# முஸ்லிம் உலகை கொதிப்படைய வைத்துள்ள இஸ்ரேலிய தேசிய பாதுகாப்பு அமைச்சரின் கூற்று!



**பலஸ்தீனின் காஸா மீது பத்து மாதங்களுக்கும் மேலாக யுத்தத்தை முன்னெடுத்துவரும் இஸ்ரேல் மேற்குக் கரை, கிழக்கு ஜெரூஸலம் பகுதிகளிலும் இராணுவ கெடுபிடிகளைத் தொடர்ந்து வண்ணமுள்ளது. இந்நிலையில் கடந்த திங்களன்று (26ஆம் திகதி) அல் அக்ஸா மசூதி வளாகத்திற்குள் சென்ற இஸ்ரேலின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் இட்டமர் பென் கிவிர், இஸ்ரேலிய இராணுவ வானொலிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ள கருத்தினால் மத்திய கிழக்கு குறிப்பாக முஸ்லிம் உலகு கொதிநிலை அடைந்துள்ளது.**

**முஸ்லிம்களின் முதல் கிப்லா அல் அக்ஸா**

முஸ்லிம்களின் முதலாவது கிப்லாவாகவும், (தொழுகைக்கு முன்னோக்கும் திசை) மூன்றாவது புனித தளமாகவும் விளங்கும் அல் அக்ஸா வளாகத்தில் யூதர்கள் வழிபட இஸ்ரேலிய பொலிஸாரால் தடை விதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பல தடவை சென்று வந்துள்ள அமைச்சர் கிவிர், கடந்த திங்களன்று சென்ற சமயம், 'அல் அக்ஸா மசூதியில் யூதர்களுக்கும் பிரார்த்தனை நடத்த உரிமை உண்டு. அதனால் அல் அக்ஸா வளாகத்திற்குள் யூத வழிபாட்டு ஆலயம் அமைக்க வேண்டும். யூத கொடியை நட வேண்டும்' என்றுள்ளார்.

இதனைத் தொடர்ந்தே முஸ்லிம் உலகில் கொதிநிலை ஏற்பட்டிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபை, இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு (ஒ.ஐ.சி), உலக முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் பலஸ்தீன், ஜோர்தான், சவுதி அரேபியா, ஈரான், கட்டார், துருக்கி, எகிப்து, இந்தோனேசியா, ஆப்கனிஸ்தான் உள்ளிட்ட எல்லா முஸ்லிம் நாடுகளும் அமைச்சர் கிவிரின் இக்கூற்றுக்கு கடும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளதோடு அவரது திட்டத்தையும் முற்றாக நிராகரித்துள்ளன.

இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு, அமைச்சர் பென்கிவிரின் கூற்றைக் கடுமையாகக் கண்டித்துள்ளதோடு, ஜெனீவா உடன்படிக்கைகள் மற்றும் சர்வதேச சட்டத்தின் அப்பட்டமான மீறல் இது என்றும் குறிப்பிட்டுள்ளது.

பலஸ்தீன அதிகார சபையின் பேச்சாளர் நபில் அபு ருடைனே விடுத்துள்ள அறிக்கையில், 'அல்அக்ஸாவுக்கு எந்தத் தீங்கும் ஏற்படுவதை பலஸ்தீன மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இது எந்தச் சூழ்நிலையிலும் கடக்க முடியாத சிவப்புக் கோடு' என்றுள்ளார்.

சவுதி அரேபியா விடுத்துள்ள அறிக்கையில், அமைச்சர் பென்கிவிரின் கூற்று, உலக முஸ்லிம்களின் உணர்வை தூண்டும் செயல் என்றுள்ளதோடு, அல்அக்ஸாவின் வரலாறு மற்றும் சட்டபூர்வமான அந்தஸ்தை மதிக்குமாறு வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பிலான பொறுப்பை நிறைவேற்ற சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, துருக்கி ஆளும் கட்சியின் பேச்சாளர் ஓமர் செலிக், பென்கிவிரின் கருத்துக்கள் அனைத்து முஸ்லிம்களையும் மனிதகுலத்தையும் தாக்கும் ஒரு மோசமானதும் சபிக்கப்பட்டதுமான அறிக்கை என்றுள்ளார்.

ஜோர்தான் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சுஃபியான் ஹுதா, 'அல்அக்ஸா முஸ்லிம்களின் தூய வழிபாட்டுத் தலமாகும். புனிதத் தலங்கள் மீதான தாக்குதல்களைத் தடுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் குறிப்பாக சர்வதேச நீதிமன்றங்களின் ஊடாக நடவடிக்கை எடுக்கத் தேவையான சட்டக் கோப்புகளைத் தயாரித்து வருகிறோம்' எனக் கூறியுள்ளார்.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில், தற்போது நடைமுறையிலுள்ள ஏற்பாடுகளில் எந்த மாற்றமும் இல்லை என்றுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் யோவ் காலண்ட், 'இது தேவையற்றதும் பொறுப்பற்றதுமான செயல். இஸ்ரேலின் தேசிய பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கும் குற்றம் என்று 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டுள்ளார். இஸ்ரேலிய உள்துறை அமைச்சர் உட்பட பல இஸ்ரேலிய அதிகாரிகளும் பென் கிவிரை கண்டித்துள்ளனர்.

அமைச்சர் பென் கிவிர் சமீபத்திய மாதங்களில் அல் அக்ஸா வளாகத்தில் யூதர்களுக்கும் பிரார்த்தனைகள் நடத்த அனுமதிக்குமாறு கோரி வந்த நிலையில், முதல் தடவையாக அல் அக்ஸா வளாகத்திற்குள் யூத வழிபாட்டு ஆலயம் கட்டுவது குறித்து வெளிப்படையாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் இவர் இவ்வமைச்சுப் பதவியை ஏற்ற பின்னர் ஆறு தடவை புனிதப் பகுதிகளுக்குள் சென்றுள்ளார். அந்த வகையில் அமெரிக்க அரசாங்கம் இவ்வருடம் இவரது செயற்பாடுகளை இரு தடவை கண்டித்துள்ளமையும் தெரிந்ததே.

"அல் அக்ஸாவானது ஏக இறைவனை வணங்கி வழிபடுவதற்காக பூமியில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டாவது பள்ளிவாசலாக விளங்குகிறது. முஸ்லிம்கள் புனித யாத்திரை மேற்கொள்ள இஸ்லாம் அங்கீகரித்திருக்கும் மக்காவிலுள்ள கஃபதுல்லாஹ், மதீனாவிலுள்ள மஸ்ஜிதுன் நபவி என்பவற்றுக்கு அடுத்த இடத்தில் இந்த அல் அக்ஸா உள்ளது. மக்காவில் நிறைவேற்றப்படும் தொழுகைக்கு ஒரு இலட்சம் நன்மைகளும் மதீனாவில் நிறைவேற்றப்படும் தொழுகைக்கு ஆயிரம் நன்மைகளும் அல் அக்ஸாவில் நிறைவேற்றப்படும் தொழுகைக்கு ஐநூறு நன்மைகளும் கிடைக்கப்பெறும்.



**அல் அக்ஸாவுக்கு எதிரான செயற்பாடுகளை தடுக்க ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் உடனடியாக செயற்பட வேண்டும் என்கிறது ஜோர்தான்!**

இஸ்லாத்தின் இறுதித் தூதர் முஹம்மது நபி (ஸல்) இறைத்தூது கிடைக்கப்பெற்ற 10 வது வருடத்தில் (கி.பி. 621) மக்காவிலுள்ள கஃபதுல்லாஹ்வில் இருந்து ஜெருஸலத்தில் இருக்கும் அல் அக்ஸாவுக்கு இறைவனின் ஏற்பாட்டுக்கு அமைய ஒரே இரவில் அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு இறைவனின் இறைத்தூதர்களுக்கு தொழுகை நடத்திய அன்னார் அங்கிருந்து இறைவனை சந்திப்பதற்கான விண்ணுலக யாத்திரையை மேற்கொண்டார். அப்பயணத்தின் போது இறைவன் அளித்த ஐந்து நேரத் தொழுகையைப் பெற்றுக்கொண்ட முஹம்மது நபி (ஸல்) அவர்கள், அல் அக்ஸாவுக்கு திரும்பி, அங்கிருந்துதான் மக்காவை சென்றடைந்துள்ளார்".

இவ்வாறு இஸ்லாமியர்கள் உறுதியாக நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இந்த ஏற்பாட்டின் ஊடாக முஹம்மது நபி (ஸல்) அவர்களின் காலத்திலேயே அல் அக்ஸாவும் அது அமைந்துள்ள பூமியும் இறைவனால் இஸ்லாத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது என்று இஸ்லாமியர்கள் நம்புகின்றனர்.

மேலும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மறைந்த பின்னர் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் இரண்டாவது ஆட்சியாளரான உமர் (ரழி) அவர்களை, ஜெரூஸலத்திற்கு வரவழைத்து அல் அக்ஸா வளாகத்தின் சாவியை அருட்தந்தை சொப்ரனியூஸ் உமர் (ரழி) அவர்களின் கரங்களில் ஒப்படைந்தார். பலஸ்தீனமும் ஜெரூஸலமும் பல இறைத் தூதர்கள் வாழ்ந்த பூமியாகும். அல் அக்ஸாவில் அவர்கள் வழிபட்டுள்ளார்கள் என்பதும் அவர்களது நம்பிக்கையாகும்.

ஆனால் குப்துஸ் ஸஹ்ரா அமையப்பெற்றுள்ள இடத்தில் சியோன் மலைக்குன்று இருந்ததாகவும் அங்கு ஹைகல் சுலைமான் என்ற யூத கோவில் இருந்ததாகவும் அதனை பாபிலோனியர்கள் முதலில் அழித்ததாகவும், அதன் பின்னர் கி.பி 70 இல் ரோமானியர்கள் அழித்ததாகவும் யூதர்கள் கூறுகின்றனர். அதனை நிரூபிப்பதற்காக பல தசாப்தங்கள் தொல்லியல் ஆய்வுகளை முன்னெடுத்தனர். அதற்கான சான்றுகள் கிடைக்கப்பெற்றதாக இல்லை.

அதேநேரம், 1920 களுக்கு முன்னர் முழு பலஸ்தீனிலும் ஐந்து சதவீதத்துக்கும் குறைவாக யூதர்கள்தான் காணப்பட்டனர். பலஸ்தீன் பிரித்தானியரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளான பின்னர்தான் யூதர்கள் பலஸ்தீனுக்குள் குடியேறத் தொடங்கினர். இதனால் பலஸ்தீனின் பூர்வீக மக்கள் நிலங்களை இழக்கத் தொடங்கிய போது இஸ்ரேலியருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் முன்னெடுத்தனர். ஆனால் பிரித்தானியா உள்ளிட்ட மேற்கு நாடுகளின் ஆதரவோடு பலஸ்தீன் ஆக்கிரமிக்கப்பட்டதோடு 1948 இல் இஸ்ரேல் என்ற நாடும் உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

1967 இல் இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையில் ஆறு நாட்கள் யுத்தம் இடம்பெறும் வரை அல் அக்ஸா முஸ்லிம்களுக்கு மட்டுமுரிய வழிபாட்டுத்தளமாக இருந்தது. ஜோர்தானிய அவ்காஃப் மற்றும் இஸ்லாமிய விவகார அமைச்சினால் அல் அக்ஸா நிர்வகிக்கப்பட்டது. இதற்கென ஜெருஸலத்தில் இஸ்லாமிய வக்ஃப் நியமிக்கப்பட்டுள்ளது. அல் அக்ஸாவின் நிர்வாகம் ஜோர்தானின் பொறுப்பில் இருந்தாலும் அதற்குள் பிரவேசிப்பதற்கான அனுமதியை வழங்கும் பொறுப்பு இஸ்ரேலிய படையினர் வசமே உள்ளது.

அதனால் 2003 இற்குப் பின்னர் இஸ்லாமிய வக்ஃபின் அனுமதியின்றி வெள்ளி, சனி தவிர்ந்த நாட்களில் அல் அக்ஸா வளாகத்தினுள் யூதர்களும் முஸ்லிம்கள் அல்லாத சட்டவிரோத குடியேற்றக்காரர்களும் இஸ்ரேலிய பொலிஸாரால் அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் அவர்கள் அங்கு பிரார்த்தனை செய்யவோ அல்லது மதச்சின்னங்களைக் காட்டவோ அனுமதிக்கப்படுவதில்லை. இருப்பினும் அல் அக்ஸாவின் மேற்குச் சுவரை அழுகை சுவராகக் கருதி யூதர்கள் அங்கு வழிபாடுகளில் ஈடுபடுவது தெரிந்ததே.

அமைச்சர் பென்கிவிரின் கூற்றினால் முஸ்லிம் உலகம் கொதிநிலையடைந்துள்ள சூழலில், சட்டவிரோத யூத குடியேற்றவாசிகள் அல் அக்ஸாவுக்குள் செல்வதை ஊக்குவிக்கவென 5 இலட்சத்து 40 ஆயிரம் டொலர்களை இஸ்ரேலிய மரபுரிமை அமைச்சு ஒதுக்கியுள்ளதாக இஸ்ரேலிய ஊடகமான 'கன்' குறிப்பிட்டுள்ளது.

இது முஸ்லிம் உலகின் கொதிநிலையை மேலும் அதிகரிக்கவே செய்யும் என மத்திய கிழக்கு ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**மர்லின் மரிக்கார்...**






# வாக்குறுதிகளை வழங்கும் வேட்பாளர்கள் பணத்தை எங்கிருந்து பெறப் போகிறார்கள்?

## பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா கேள்வி

**நாடு பொருளாதார ரீதியில் சரிவடைந்து செல்வதற்கு வாக்குறுதி அரசியலும் ஒரு காரணம். நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்கான ஒரே தெரிவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமேயாவார் என்று பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்தமை உள்ளிட்ட அரசியல் நிலைவரங்கள் குறித்து எமது நிறுவனத்துக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

**கே: 2022 ஆம் ஆண்டு முதல் புதிய கூட்டணியாக அரசியலை ஆரம்பித்து அரசாங்கத்தில் இருந்து சுயாதீனமாக செயற்பட்டு வந்த உறுப்பினர்கள் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானம் எடுத்ததற்குக் காரணம் என்ன?**

பதில்: இன்று நாட்டில் நிலவும் பிரச்சினைக்கு யார் சிறந்த தீர்வை வழங்க முடியும் என்பதன் அடிப்படையிலேயே நாம் அந்த முடிவை எடுத்தோம். அதுதவிர, எந்த ஒரு ஜனாதிபதி வேட்பாளருடனும் எங்களுக்கு தனிப்பட்ட நட்போ, தனிப்பட்ட பகைமையோ கிடையாது. மக்கள் அனைவரும் எங்கள் நண்பர்கள், நாங்கள் இங்கே ஒரு அரசியல் முடிவை எடுத்தோம். தற்போதைய ஜனாதிபதியின் இரண்டு வருட பதவிக் காலத்தை நாம் மிகவும் ஆழமாக அவதானித்தோம். இந்த நாடு எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு யதார்த்தமான தீர்வுகளை வழங்கும் திறன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாத்திரமே உள்ளது. அநுரகுமார திஸாநாயக்க அல்லது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வெளிப்படுத்தும் கருத்துக்கள் மற்றும் கொள்கைகள் முற்றிலும் மோசமானவை அல்லது தவறானவை என்ற வெறுப்பினால் நாங்கள் அவர்களுடன் அரசியல் செய்யவில்லை.

ஆனால் எமக்குக் கிடைத்த அரசியல் பார்வையின் அனுபவத்தின்படி இரண்டு வருடங்களில் இந்த நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினையைக் கட்டுப்படுத்தி நாட்டை ஓரளவு மீட்டெடுக்க ஜனாதிபதியால் முடிந்துள்ளது. எனவே, இந்நிலையை முழுமையாக மீட்டெடுக்கும் திறனும் தொலைநோக்குப் பார்வையும் ஜனாதிபதிக்கு உண்டு. அவர் இப்போது சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பணியாற்றுகிறார். எனவே, இந்தக் கொள்கைகளை மாற்றிக்கொண்டு புதிய பயணத்தை மேற்கொள்வதற்கோ, கொள்கை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கோ இது சரியான தருணம் அல்ல. ஆனால் இன்று தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் இருவர் ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்து மறுபரிசீலனை செய்வோம் என்று கூறி வருகின்றனர். ஆனால் இப்போது அது போன்ற ஒப்பந்தங்களை பரிசீலிக்கவோ மாற்றவோ முடியாது. எமது நாட்டை சீர்குலைக்கக் கூடாது என்பதற்காக ஜனாதிபதியின் கொள்கைகள் சரியானவை என்பதை ஏற்றுக் கொள்கிறோம். மற்றைய விஷயம் என்னவென்றால், அடுத்த சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தவணையை ஒக்டோபர் மாதத்திற்குள் செலுத்த வேண்டும். நமது அரசின் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டால், அதைப் பெறுவது கூட சிக்கலாக இருக்கும்.

**கே: இந்த உண்மைகளைத் தவிர, உங்கள் அரசியல் குழு ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதில் வேறு எந்த நோக்கமும் இல்லையா?**

பதில்: இல்லை, இந்த நேரத்தில் நாட்டைப் பற்றி மட்டுமே சிந்திக்கிறோம். இந்த நேரத்தில், நாட்டின் முக்கிய பிரச்சினை பொருளாதாரம். 2022 இல் இளைஞர்கள் போராட்டத்திற்கு காரணம் அரசியல் என்பதை விட பொருளாதாரமே ஆகும். எரிபொருள், எரிவாயு மற்றும் உணவு இருந்திருந்தால், இந்தப் போராட்டம் பொருளாதார பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டது. இதனால் உருவாகும் பொருளாதாரப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு அன்றி, பொருளாதாரத் தீர்வே தேவை. அரசியல் தீர்வுகளை வழங்குவதை விட, ஜனாதிபதி பொருளாதார நெருக்கடி மற்றும் கொள்கைகளை சரியாக கையாளும் திறன் கொண்டவர். அதனால்தான் இந்த இக்கட்டான நேரத்தில் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கிறோம்.



### இரண்டு வருட பதவிக் காலத்தை நன்கு ஆழமா அவதானித்தே ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தோம்

**கே: ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு செயலாளர் பதவி தொடர்பில் ஏற்கனவே சிக்கலை எதிர்கொண்டுள்ள நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்பட்ட மக்கள் ஐக்கிய முன்னணிக்கு அவ்வாறானதொரு பிரச்சினை ஏற்படவில்லையா?**

பதில்: இல்லை, மக்கள் ஐக்கிய முன்னணியின் தற்போதைய செயலாளர் லசந்த அழகியவன்ன என்பதால், அவருக்கும் ஐக்கிய மக்கள் முன்னணிக்கும் எந்த சட்டத் தடையும் இல்லை. அதனால்தான் எமது புதிய கூட்டணியின் அரசியல் கட்சியாக பொதுஜன ஐக்கிய பெரமுனவும் கதிரைச் சின்னமும் தெரிவு செய்யப்பட்டன.

**கே: அரசியல் விடயங்களைக் கையாளும்போது அரசியல் ரீதியாக வழங்கப்படும் வாக்குறுதிகள் பற்றி அதிகம் பேசப்படுகிறது. வாக்குறுதி அரசியல் நம் நாட்டை எவ்வாறு பாதித்தது?**

பதில்: ஒரு கட்டத்தில் பொருளாதாரத்தை மதிப்பிடாமல் அலட்சியப்படுத்தியதன் மூலம் நமது பொருளாதாரத்தில் இது போன்ற நிலை உருவாகியுள்ளது என அரசியல் தலைவர் ஒரு பொதுமேடையில் குறிப்பிட்டார். அப்படிப்பட்ட விடயங்களால்தான் இன்று நமது நாட்டின் பொருளாதாரம் சரிந்துவிட்டது. தற்போது மீண்டும் இன்று ஜனாதிபதி வேட்பாளர்கள் பல்வேறு வகையான வாக்குறுதிகளை வழங்கி வருகின்றனர். ஆனால் இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற பணம் எங்குள்ளது? மீண்டும் பணத்தை அச்சடித்து பொருளாதாரத்தை மீண்டும் நெருக்கடிக்கு கொண்டு செல்ல வேண்டுமா என்பதை வாக்குறுதிகளை அள்ளி வழங்கும் ஜனாதிபதி வேட்பாளர்களே கூற வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேவையான அளவு நிவாரணம் மற்றும் உதவிகளை வழங்கியுள்ளார். இது தவிர, ஒரு உதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டால், ஜனாதிபதி வேட்பாளர்கள் அதற்கான பணத்தை எங்கிருந்து தேடிக்கொள்வார்கள் என்பதைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

**கே: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறார். இவர் போட்டியிடுவது அரசியல் ரீதியாகத் தாக்கத்தை ஏற்படுத்துமா?**

பதில்: முற்றிலும் இல்லை, தோல்வியை ஏற்றுக்கொள்ளும் நாமல் ராஜபக்ஷவிடமிருந்து தீர்க்கமான செல்வாக்கு இருக்கும் என்று நினைக்க முடியாது. வெற்றி பெற முடியாது என்று நினைத்தவுடன், ஏராளமான வாக்காளர்கள் வெளியேறி விடுகின்றனர். இன்றைய சூழ்நிலையில் நாமல் ராஜபக்ஷ பெறும் வாக்குகளின் எண்ணிக்கை என்னவாக இருக்கும் என்பதை ஓரளவுக்குக் கணிக்க முடியும். ஆனால் நெறிமுறை காரணங்களுக்காக நான் வாக்குகளின் எண்ணிக்கையைக் கூற மாட்டேன். ஆனால் அவர் தோல்வியுற்றவர், வெற்றி பெற அவருக்கு குறைவாக வாய்ப்புக்களே உள்ளன. நாமல் எவ்வித வாக்குகளையும் பெறமாட்டார் எனக் கூறவில்லை, அவர் சில வாக்குகளைப் பெறலாம் ஆனால் அது ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு அருகில் இருக்காது.

### நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்கான ஒரே தெரிவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமேயாவார்!

---

# இந்திய–பாகிஸ்தான் சமாதானப் பேச்சு இனிமேல் கிடையாது!



### 'அமைதியாக இருக்க மாட்டோம்! எதற்கும் தயாராகவே உள்ளோம். பாகிஸ்தானின் ஒவ்வொரு செயலுக்கும் தக்க பதிலடி கொடுப்போம்' –வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் விடுத்த காரசாரமான எச்சரிக்கை!



### சகாப்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தது இந்தியா!

**இந்திய எல்லையில் அமைதியை ஏற்படுத்துவதற்காக பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தையின் சகாப்தம் முடிந்துவிட்டதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் பரபரப்பான கருத்தொன்றை இரு தினங்களுக்கு முன்னர் தெரிவித்துள்ளார்.**

பயங்கரவாதம் மற்றும் வன்முறை தொடர்பாக பாகிஸ்தான் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்காத வரை இந்தியா இனிமேல் பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடாது என்றும் ஜெய்சங்கர் கூறினார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நீண்ட காலமாக எல்லையில் அடிக்கடி மோதல் நிலவி வருகிறது. இந்த மோதலை முடிவுக்குக் கொண்டு வர இந்தியா முயலும் போதெல்லாம், பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவதை பாகிஸ்தான் வாடிக்கையாக வைத்துள்ளது என்று இந்திய தரப்பில் குற்றம் சாட்டப்படுகின்றது.

அமைச்சர் ஜெய்சங்கர் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், “மும்பை தாக்குதல் தொடங்கி பல விஷயங்களை நம்மால் உதாரணமாகச் சொல்ல முடியும்” என்றார்.

டெல்லியில் இரு தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கூறிய இக்கருத்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான உறவு தொடர்பில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தை முடிந்துவிட்டதாகத் தெரிவித்த ஜெய்சங்கர், எல்லையில் என்ன நடந்தாலும் அதைச் சரி செய்ய இந்தியா தயாராகவே உள்ளதாகத் தெரிவித்தார்.

இந்தியா மீதான பயங்கரவாதத் தாக்குதல்களை ஆதரிக்கும் பாகிஸ்தான், கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று ஜெய்சங்கர் எச்சரித்தார். "இங்கே பிரச்சினை என்னவென்றால் பாகிஸ்தானுடன் என்ன வகையான உறவு என்பதிலேயே குழப்பம் இருக்கிறது. தற்போது இருப்பது போலவே இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு இருக்க வேண்டும் என்று இந்தியா நினைக்கிறதா என்று நீங்கள் கேட்டால், அதற்கு ஆம், இல்லை என இரண்டு பதிலும் பொருந்தும்.

அதற்காக இந்தியா என்ன நடந்தாலும் அமைதியாக இருக்கும் என நான் சொல்லவில்லை. பொசிற்றிவ் என்றாலும் நெகற்றிவ் என்றாலும் நாங்கள் எதிர்வினையாற்றுவோம்" என்றார் ஜெய்சங்கர்.

அதாவது என்ன நடந்தாலும் பரவாயில்லை என்று பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்திய சகாப்தம் முடிந்துவிட்டதாகவும், எல்லையில் இருக்கும் சூழலுக்கு ஏற்ப தக்க பதிலடியை இந்தியா தரும் என்பதே ஜெய்சங்கர் பதிலாக இருக்கிறது.

ஜம்மு காஷ்மீர் எல்லை மோதல் காரணமாக இந்தியா பாகிஸ்தான் இடையே விடுதலை பெற்ற போதில் இருந்தே மோதல் நிலவி வருகிறது. அதேநேரம் இந்தியாவுக்குள் பயங்கரவாத செயல்களைப் பாகிஸ்தான் நடத்தியும், பயங்கரவாத செயல்களை ஊக்குவித்தும் வருவதாக இந்தியா தொடர்ந்து குற்றஞ் சாட்டி வருகிறது. கடந்த மார்ச் மாதம் அமைச்சர் ஜெய்சங்கர் அமெரிக்கா சென்ற போது கூட இது குறித்து விரிவாகப் பேசியிருந்தார்.



### பாகிஸ்தானுடனான உறவில் புதிய கொள்கையை வகுக்க வேண்டிய நிலையில் இந்தியா!

இதேவேளை சிங்கப்பூரில் ஒருதடவை உரையாற்றியிருந்த அமைச்சர் ஜெய்சங்கர், "தொழில்துறையினருக்கு எப்படி ஒரு நாடு ஆதரவு அளிக்குமோ, ஏறக்குறைய அதேபோல பயங்கரவாதத்திற்குப் பாகிஸ்தான் ஆதரவு கொடுத்து வருகிறது. பயங்கரவாதத்தை ஆதரிப்போம் என்று வெளிப்படையான நிலைப்பாடு எடுத்துள்ள ஒரு அண்டை நாட்டை எப்படி நாம் எதிர்கொள்ள முடியும்? காலங்காலமாக அவர்கள் இதையேதான் செய்து வருகிறார்கள். இந்தியா பாகிஸ்தான் மோதலை முடிவுக்குக் கொண்டு வர என்னிடம் உடனடி தீர்வு இல்லை. ஆனால் நான் ஒன்றை உறுதியாகச் சொல்கிறேன். இனி இந்தியா இந்தப் பிரச்சினையைத் தவிர்க்காது. சரி நடந்தது நடந்துவிட்டது, பேச்சுவார்த்தையைத் தொடரலாம் எனச் சொல்லப்போவது இல்லை. ஒவ்வொரு விஷயத்திற்கும் தக்க பதில் இருக்கும்" என்று கூறியிருந்தார்.

காஷ்மீரில் இன்னும் சில வாரங்களில் சட்டசபைத் தேர்தல் நடக்கும் நிலையில், இப்போது மீண்டும் அதே கருத்தை ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

“பாகிஸ்தானுடன் நேரடி பேச்சுவார்த்தை நடத்திய காலம் முடிந்துவிட்டது. இனிமேல் அந்நாட்டின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் எதிர்வினை இருக்கும். பயங்கரவாதமும் பேச்சுவார்த்தையும் ஒரு சேர நடக்காது என்பதில் உறுதியாக இருக்கிறோம். காஷ்மீருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்து 370 ஆவது பிரிவு நீக்கப்பட்டு விட்டது. எனவே பாகிஸ்தானுடன் எந்த மாதிரியான உறவு என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும் என்பதே பிரச்சினை.

இந்தியா செயலற்ற நாடு இல்லை. எந்த ஒரு நிகழ்வு நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ இருந்தாலும், அதற்கு நாம் எதிர்வினை ஆற்றுவோம். பாகிஸ்தானில், பயங்கரவாதம் என்பது தொழில்முறையாக மாறிவிட்டது. இந்தியாவை பேச்சுவார்த்தைக்கு கொண்டு வருவதற்கு எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் தனது செயல்திட்டமாக வைத்துள்ளது. ஆனால், இந்த நிபந்தனையை ஏற்க முடியாது என்பதில் நாம் உறுதியாக இருந்து பாகிஸ்தானின் கொள்கையை செயலற்றதாக்கி விட்டோம்” என ஜெய்சங்கர் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். ’ இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை மறுவடிவமைத்தல்' என்ற தூதர் ராஜீவ் சிக்ரியின் புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய போதே இத்தகைய காரசாரமான கருத்துகளை வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ளார்.

“அமைதியாக இருப்பவர்கள் அல்ல நாங்கள். நிகழ்வுகள் நேர்மறையாக இருந்தாலும் எதிர்மறையாக இருந்தாலும் அதற்கு நாங்கள் எதிர்வினையாற்றுவோம்.

ஆப்கானிஸ்தானைப் பொறுத்தவரை, இந்திய ஆப்கானிய மக்களுக்கு இடையேயான உறவு வலுவானதாக இருக்கிறது. ஆப்கான் சமூகத்தின் மீது இந்தியாவுக்கு நல்லெண்ணம் உள்ளது. ஆனால் நாம் ஆப்கானிஸ்தான் எனும்போது, அங்குள்ள அரசாங்கத்தின் அடிப்படைகள் குறித்து மறந்துவிடக் கூடாது என்று நான் நினைக்கிறேன். இன்று நாம் நமது ஆப்கானிய கொள்கையை மறுபரிசீலனை செய்யும்போது, நமது நலன்கள் பற்றி நாங்கள் மிகவும் தெளிவாகக் கவனிக்கிறோம்.

அமெரிக்கப் படைகள் இருக்கும் ஆப்கானிஸ்தான், அமெரிக்கப் படைகள் இல்லாத ஆப்கானிஸ்தானில் இருந்து மிகவும் வித்தியாசமானது. இதற்காக நாம் அந்நாட்டைப் பாராட்ட வேண்டும்.

வங்கதேசத்தைப் பொறுத்தவரை, அந்த நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து, அந்த நாட்டுடனான நமது உறவு மேலும் கீழுமாகவே இருந்துள்ளது. தற்போது அங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. இது பாதிப்பை ஏற்படுத்தலாம். அதேநேரத்தில், பரஸ்பர நலன்களை கண்டறிவதில் நாங்கள் ஆர்வமாக உள்ளோம். இதற்காக தற்போதுள்ள அரசுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தும். மியன்மாருடனான உறவைப் பொறுத்தவரை, ஒரே நேரத்தில் அது நெருக்கமாகவும் தொலைவாகவும் உள்ளது. அங்குள்ள அரசாங்கம் மற்றும் பிற சக்திகளுக்கு இடையே ஒரு சமநிலையைக் கண்டறிய வேண்டும். ஏனெனில் அதுதான் உண்மை" என ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்திய வெளியுறவு அமைச்சரின் இந்த அறிவிப்பு சர்வதேச ரீதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எஸ்.சாரங்கன்...

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 129

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| 06 | | 07 | 08 | | 09 |
| 10 | 11 | 12 | | 13 | |
| 14 | | 15 | 16 | 17 | 18 |
| | 19 | | | 20 | |
| 21 | 22 | | 23 | 24 | 25 |

பெயர் ........................................................

வகுப்பு ........................................................

தொலைபேசி இல ........................................................

பாடசாலை பெயர் ........................................................

வதிவிட முகவரி ........................................................

........................................................

............................... ...............................

மாணவரின் பெயர்

வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு முன்னர், நிலத்தை அகழ்ந்து உறுதியான அடித்தளமாக அமைக்கப்படுவது இது.

(8) குற்றவாளிகளையும், சந்தேகநபர்களையும் தடுத்து வைக்கும் பாதுகாப்பான இடம். (தலைகீழான சொல்)

(11) தமிழ் மாதங்களில் ஒன்று இது. (தலைகீழான சொல்)

(15) நிலவுக்கு இவ்வாறும் ஒரு பெயர் உண்டு. (தலைகீழான சொல்)

(20) கடிதம், திருமுகம் என்பதெல்லாம் இதன் ஒத்தபொருள் சொற்கள்.

(24) பய உணர்வைக் குறிக்கும் சொல்.

**மேலிருந்து கீழ்**

(1) உலகம், புவி, பூமி, அகிலம், ஞாலம், தரணி என்றெல்லாம் பல சொற்களில் இதனைக் கூறலாம்.

(3) முன்னைய காலத்தில் பலம் வாய்ந்த பேரரசர்களுக்கு அயல்நாடுகளில் உள்ள சிற்றரசர்கள்(குறுநில மன்னர்கள்) செலுத்திய கப்பம் இது.

(4) மனிதனைப் பூரணத்துவம் மிகுந்தவனாக மாற்றுகின்ற சிறந்த பழக்கம் இது.

(6) இலக்கியங்களில் அழகுமிக்கதாக வர்ணிக்கப்படுகின்ற வெண்ணிறப் பறவை. நளவெண்பாவிலும் இப்பறவை குறிப்பிடப்படுகின்றது. (தலைகீழான சொல்)

(15) மலரின் பாகங்களில் ஒன்று இது. மலரின் இதழ் என்றும் இதனைக் கூறலாம். (தலைகீழான சொல்)

(17) மக்கள் கூட்டத்தைக் குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)

(19) இந்து, பௌத்த, கிறிஸ்தவ ஆலயங்களில் உயரத்தில் இதனைக் காணலாம். பெரும் ஒலி எழுப்புவது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 128

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. சாரதி 04.வேலி 07. மனை 10. பணம்
15. நிமிடம் 21. கோழை 23. அன்பு

**மேலிருந்து கீழ்**

01. சாம்பல் 03. நிம்மதி 05. எலி
13. ஆடவன் 19. கோடி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 127

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.என்.எம். பாயிக்**
தரம் 04D, முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்,
51B, றவுளா மன்சில், சம்மாந்துறை 03.

**2. எம்.ஏ.எப். அலீனா**
க/பதியுதீன் பெ. பாடசாலை,
இல. 98/A, சுஜாதா லேன், றம்புக்கன வீதி, கலகெதர.

**3. எம்.ஏ. ஆக்கிபா ஸைனப்**
தரம் 08, 'அலிப்' சர்வதேச பாடசாலை,
இல. 41B, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.

**4. எம். இர்பான் ஜெஹான்**
தரம் 05B, கைரியா பெண்கள் கல்லூரி,
இல. 155/32, மொஹிதீன் மஸ்ஜித் வீதி, மருதானை.
கொழும்பு 10.

**5. எம்.ஏ. முஹன்னித்**
தரம் 08, அறபா வித்தியாலயம்,
இல. 170A, ஆர்.டீ.எஸ். வீதி, அட்டாளைச்சேனை 08.

**6. எம். இர்ஷாத் பாத்திமா**
தம் 05, முகரமா சர்வதேச பாடசாலை,
இல. 10 போதிராஜ மாவத்தை, கொழும்பு 10.

**7. எம்.ஆர். அம்ரத் அயானி**
தரம் 03, கமு/ அல்ஹிதாயா மகளிர் கல்லூரி,
இ. 14, பாலமுனை 03.

**8. எஸ். ஜனஹாசினி**
தம் 03C, சைவ மங்கையர் கழகம்,
இல. 36, 1/1, கொட்டாஞ்சேனை, கொழும்பு 13.

**9. அனீஸ் பாத்திமா அப்லா**
தரம் 08, அல் அமான் மு.ம. வித்தியாலயம்,
கல்லொழுவ, மினுவாங்கொடை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 129
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**அருளுடைமை: அருட்செல்வஞ் செல்வத்துள் செல்வம்
பொருட்செல்வம் பூரியார் கண்ணு முள**

**தெளிவுரை :**
பொருள்களாகிய செல்வங்கள் இழிந்தவரிடத்திலும் உள்ளன; (உயர்ந்தவரிடத்தில் மட்டுமே உள்ள) அருளாகிய செல்வமே செல்வங்களில் சிறந்த செல்வமாகும்.

# அனுபவம் எப்போதும் பயன் தரும்

தர்மம் மற்றும் இரக்க குணம் உடையவர் மகாராஜா பிரித்திவிராஜ். பண்டிதர்களுக்கும், புத்திசாலிகளுக்கும் அவரது சபையில் எப்போதும் தனி மரியாதை உண்டு.

ஒரு நாள் பிச்சைக்காரர் ஒருவர் அரசவையை நாடி வந்தார்.

'எங்கே போகிறாய்... நில்...' சிப்பாய்கள் தடுத்தனர்.

'என்னை தடுக்காதீர்... நான் மகாராஜாவின் சகோதரன்...' என்றார் பிச்சைக்காரர்.

'மகாராஜாவிற்கு சகோதரர் யாருமில்லை. கோட்டைக்குள் பிச்சை எடுக்க அனுமதி கிடையாது...'

'பொய் சொல்லவில்லை... மகாராஜாவிடம் நான் வந்திருப்பதாக கூறுங்கள்...'

ஒரு சிப்பாய் ஓடி சென்று, 'மகாராஜா... பிச்சைக்காரர் ஒருவர் தகராறு செய்கிறார். உங்கள் சகோதரர் என்று கூறுகிறார்...' என்று கூறினார்.

இது கேட்டதும், 'சரி... அவரை வரச் சொல்...' என்றார் மகாராஜா.

அதன்படி, முதியவரை அனுமதித்தனர்.

வந்தவரிடம், 'வணக்கம்... சகோதரரே... எப்படி இருக்கிறீர்...' என நலம் விசாரித்தார் மகாராஜா.

'நல்ல செய்தியுடன் வரவில்லை. என்னிடம் பணியாற்றிய, 32 வேலைக்காரர்கள் சென்று விட்டனர். வயதாகி விட்டதால் என் ஐந்து மகாராணியரும் பிரிந்து விட்டனர்...' என்றார் பிச்சைக்காரர்.

'இவருக்கு, 50 பொற்காசுகளை கொடுத்து அனுப்புங்கள்...'

'எனக்கு, 50 தானா... பத்தாது...'

'சகோதரரே... இராஜ்ஜியத்தில் போதுமான செல்வம் இல்லை. வேண்டுமென்றால், இந்த, 50 பொற்காசுகளை எடுத்துச் செல்லுங்கள்...' என்றார் மகாராஜா.

சற்று யோசித்த பிச்சைக்காரர், 'நாட்டில் செல்வம் பெருக வேண்டும் என்றால், நீங்கள் என்னோடு வரலாம். ஏழு கடல் தாண்டினால், தங்க மணல் கொட்டிக் கிடக்கிற பகுதி உள்ளது. அதை உங்கள் சொத்தாக்கிக் கொள்ளலாம்...'

'ஆனால், ஏழு கடல் தாண்டி எப்படி வருவது...'

'என் மாயாஜாலத்தை பாருங்கள்... நான் எங்கே கால் பதித்தாலும், அது கடலாக இருந்தாலும் கூட வற்றிப் போய் விடும்...'

இதை கேட்டதும், மந்திரியை அழைத்தார் மகாராஜா. பிச்சைக்காரருக்கு, 500 பொற்காசுகள் வழங்க உத்தரவிட்டார்.

நிதானமான மந்திரி, 'மகாராஜா... உங்கள் உத்தரவு புரியவில்லை. எதற்காக, 500 பொற்காசுகள் பிச்சைக்காரருக்கு கொடுக்க சொன்னீர்கள்...' என்று கேட்டார்.

புன்னகைத்தபடி, 'இந்த பிச்சைக்காரர் மிகவும் புத்திசாலி. ஆனால், துரதிஷ்டசாலி. பொற்காசுக்கு, இரண்டு பக்கங்கள் உள்ளதை குறிப்பிடுகிறார். மகாராஜாவாக இருப்பவர், ஒருநாள் பிச்சைக்காரராக மாறி விடக் கூடும் என்பதை உணர்த்துகிறார்....' என்றார் மகாராஜா.

'சிந்தித்து தான் முடிவு எடுத்தீர்களா...' கேட்டார் மந்திரி.

'பிச்சைக்காரரின் நிலைமை நன்கு புரிகிறது. அவர் குறிப்பிடும், 32 வேலைக்காரரர்கள் என்பது, அவரது பற்களை குறிப்பிடுகிறது. ஐந்து மனைவியர் என்பது ஐந்து புலன் உணர்வுகள் மறைந்ததை குறிப்பிடுகிறார். அதை புரிந்து தான் செயல்படுகிறேன்.'

மகாராஜாவின் பதிலை கேட்டு ஆச்சரியத்தில் மூழ்கினார் மந்திரி.

பிள்ளைகளே! வாழ்நாளில் அனுபவமாக கற்றுக் கொள்வது எப்போதும் பயன் தரும்.

# இவ்வார மழலை



மோகனேஷ்

கிஷாந்தன் – ஜெயகௌரி

## சிறுவர் சித்திரங்கள்



Mohamed Muadh Mohamed Irshad
Grade 5EE, Zahira Collage - Colombo

# புயல் உருவாவது எப்படி?

புயல் உருவாவதற்குக் காற்றும் வெப்பமும் அவசியம். எங்கும் நிறைந்திருக்கும் காற்றின் மீது சூரிய வெப்பம் படும்போது காற்று மூலக்கூறுகள் அடர்த்தியை இழக்கின்றன. அடர்த்தி இழந்த காற்று மூலக்கூறுகள் மேல் நோக்கி நகர்கின்றன. அப்போது அங்கே குறைந்த காற்றழுத்தம் உருவாகிறது.

அந்தக் குறைந்த காற்றழுத்தத்தை நோக்கி அழுத்தம் அதிகமாக உள்ள காற்றின் மூலக்கூறுகள் தானாக நகர்கின்றன. பூமியின் சுழற்சியால் இந்தக் காற்று சுழல் ஆரம்பிக்கிறது. கடலின் மேல் இருக்கும் வெப்பம் அதிகமாகும்போது, காற்று வெப்பமடைந்து மேலே செல்கிறது.

குறிப்பிட்ட உயரத்தை அடைந்த பிறகு குளிர்ந்து, நீர்த்திவலைகள் உறைந்து மேகங்களாக மாறுகின்றன. இப்படித் தொடர்ந்து நீராவி மேலே செல்லும்போது, அங்கே குறைந்த காற்றழுத்தம் உண்டாகிறது. அந்தக் குறைந்த காற்றழுத்தப் பகுதியை நோக்கி அழுத்தம் அதிகமான காற்று மூலக்கூறுகள் நகர்கின்றன. ஒருகட்டத்தில் காற்றின் வலிமை அதிகரிக்க அதிகரிக்க அது புயலாக உருவாகிவிடுகிறது,



# பூமியின் ஒருநாள்?

பூமியின் ஒருநாள் என்பது எப்போதும் ஒரே மாதிரியாக இருந்தது இல்லை. 140 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமியின் ஒருநாள் என்பது 18 மணி நேரமாகத்தான் இருந்திருக்கிறது. அப்போது பூமிக்கு அருகில் நிலா இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக பூமியைவிட்டு நிலா நகர்ந்துகொண்டே இருக்கிறது.

அதனால் பூமியின் வேகம் குறைந்துகொண்டே இருக்கிறது. ஆண்டுக்கு 3.8 செ.மீ. தொலைவுக்குப் பூமியை விட்டு நிலா விலகிச் சென்றுகொண்டே இருந்தால், 20 கோடி ஆண்டுகளில் பூமியின் ஒருநாள் என்பது 25 மணி நேரமாக மாறியிருக்கும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.



# அழிவின் விளிம்பில் நீர் மான்கள்

உலகில், 56 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வன உயிரினங்கள், அழிவின் விளிம்பில் உள்ளன. இதை ஐ.நா., பன்னாட்டு இயற்கை பாதுகாப்பு சங்கம் உறுதி செய்துள்ளது. அவற்றில் ஒன்று நீர் மான். இது செர்விடே என்ற விலங்கின குடும்பத்தைச் சேர்ந்த மிகச் சிறிய ஆசிய மான்.

உருவத்தில் கஸ்துாரி மான் போல் இருக்கும். கொம்பு கிடையாது.

கிளை மான் என்ற விலங்கினம் ஒன்று உள்ளது. இதில், ஆணுக்கு கொம்பு உண்டு. நீர் மான் இனத்தில், ஆணுக்கு, வாய் பக்கவாட்டில் கூரிய கோரைப் பற்கள் தந்தம் போல் அமைந்து இருக்கும். அது, இரண்டு அங்குலம் நீளத்தில் வளரும். உருவ அமைப்பு தான், நீர் மான் இனத்தை தை பிரத்தியேகமாக காட்டுகிறது. இம் மான் கிழக்காசிய நாடான தென்கொரியாவில் வளமான ஆற்றுப் பகுதியில் வாழ்கிறது.

இது நீரின் அடிப்பகுதியில் வளரும், பசுமையான தாவரங்களை விரும்பி உண்ணும். குறிப்பாக, நார்ச்சத்து உள்ள கரடு முரடான புற்களை அதிகம் விரும்பும்.

ஒரே நேரத்தில் பல குட்டிகளை ஈனும் இந்த அழகிய மான் இனம் தற்போது, அழிவின் விளிம்பில் உள்ளது.



### உலகின் முக்கிய பாலைவனங்களும் அதன் பரப்பளவும்

| பெயர் | நாடு | பரப்பு (ச.கி.மீ) |
|---|---|---|
| சஹாரா | வட ஆபிரிக்கா | 84,17,500 |
| கிரேட் அவுஸ்திரேலியன் | அவுஸ்திரேலியா | 25,30,000 |
| கிரேட் அரேபியன் | அரேபியா | 23,31,000 |
| கோபி | மத்திய ஆசியா | 12,95,000 |
| தாக்ளா மகான் | சீனா | 3,23,750 |
| நபீப் | தெ.மே. ஆபிரிக்கா | 3,10,800 |
| காராகும் | யு.எஸ்.எஸ்.ஆர் | 3,00440 |
| கிசில்கும் | யு.எஸ்.எஸ்.ஆர் | 2,97,850 |

சாரணா கையூம்...

# மனித மூளை போல் தோற்றமளிக்கும் 'மூளை மஷ்ரூம்'

வட அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் காணப்படும் Gyromitra esculenta என்ற காளானின் மற்றொரு பெயர் Brain Mushroom. பார்ப்பதற்கு மனித மூளை மாதிரி இருப்பதாலேயே இந்தக் காரணப்பெயர். ஆனால், இதை சாப்பிட முடியாது. காரணம் இது ஒரு விஷக்காளான்.



# குரலும், பேச்சும் எப்படி உருவாகிறது?

நுரையீரலில் இருந்து இரு வழி காற்று போக்குவரத்தால் குரல் உருவாகிறது. காற்று தொண்டை குழியைத் தாண்டும் போது, அதிர்வடைகிறது. நாக்கு, உதடு ஒத்துழைப்புடன் பேச்சு உருவாகிறது. தொண்டை, மூக்கு, வாய் ஒன்று சேர்ந்து, ஒரு குரலை தனித்துவம் ஆக்குகின்றன.

அந்த குரல் அர்த்தபூர்வமான பேச்சாக மாறுவது, மூளையின், 'நியூரான்' செல்களால் ஏற்படுகிறது. ஆண்களின் குரலை டெஸ்டோஸ்டிரோனும், பெண்களின் குரலை ஈஸ்ட்ரோஜனும் ஊக்குவிக்கின்றன.

ஒரு குரலின் தன்மையை மரபணுக்கள், பாலினம், ஹோர்மோன் சுரப்பு, எடை, உயரம், உதடு பிளவு போன்றவையே தீர்மானிக்கின்றன.

### குரல்களின் வகைகள்

**பெண்கள் குரலை மூன்று வகையாக பிரிக்கலாம். அவை...**

- ★ சோப்ரானோ - சிறுவர், சிறுமியின் உச்சபட்ச குரல்
- ★ மெஸ்ஸோ சோப்ரானோ - சோப்ரானோவில் பாதி குரல்
- ★ கன்ட்ரோல்டோ - ஆண்மை ததும்பும் பலவீனமான குரல்.

**ஆண்கள் குரலையும் வகைப்படுத்தலாம்.**

- ★ கவுன்ட்டர் டெனோர் - உச்சக்குரல்
- ★ டெனோர் - நடுத்தரமான குரல்
- ★ பேஸ் - அடித்தொண்டைக்குரல்.

ஒரு மனிதன் சாதாரணமாக பேசும் போது, ஒலியளவு, 60 டெசிபல் இருக்கும். கின்னஸ் சாதனை புரிந்த, ஜில் டிராக் என்பவரின் குரல், 129 டெசிபல் இருந்தது. ரொக்கெட் பறக்கும் போது சத்தம், 204 டெசிபல் வரை இருக்கும்.

உலகில் வாழும், 801 கோடி மக்களின் குரல்களும், அவர்களின் கைரேகைகள் போல் தனித்துவம் மிக்கவை.

உலகில் கவர்ச்சிகரமான ஆண் குரலுக்கு சொந்தக்காரராக சிலர் உள்ளனர். அதில், பாடகர்கள் எல்விஸ் பிரஸ்லி, மைக்கேல் ஜாக்சன், ஜஸ்டின் டிம்பர் லேக், ஸ்பானிஷ் பொப் படகர் ரிக்கி மார்ட்டின், பிரபல நடிகர் அமிதாப்பச்சன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கவர்ச்சிகரமான பெண் குரல் உடையோர்; இதில், பாடகி பியோன்ஸ், மரியாகரே, ஜெனட் ஜாக்சன், லதா மங்கேஷ்கர், பி.சுசீலா, ஹிலாரி டப் போன்றோர் சிறப்பிடம் பெற்றுள்ளனர்.

# மஞ்சரி விளையாட்டு

# உச்சத்தைத் தொட்டார் ஜெய் ஷா



சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் தலைவராக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை செயலாளர் ஜெய் ஷா நியமிக்கப்பட்டது வழக்கத்தை விடவும் கிரிக்கெட் உலகில் உன்னிப்பாக அவதானிக்கப்படும் விடயம். இதற்கு முன்னரும் ஐ.சி.சி. தலைவராக எத்தனையோ பேர் வந்து போயிருக்கிறார்கள். தற்போது பதவியில் இருக்கும் நியூசிலாந்தின் கிரேக் பார்க்லேவை பற்றி கூட யாரும் அலட்டிக்கொள்வதில்லை. ஆனால், ஜெய் ஷாவை அப்படி பார்க்க முடியாது.

2019 ஆம் ஆண்டு தொடக்கம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் செயலாளராக ஜெய் ஷாவின் பதவிக் காலத்திலேயே முன்னரை விடவும் இந்திய கிரிக்கெட் உலகக் கிரிக்கெட்டில் அதிகம் செல்வாக்குச் செலுத்தியது. ஆட்டங்களை நடத்துவது, விதிகளை மாற்றுவது என்று எல்லாவற்றுக்கு அது பொருந்தும்.

இந்தப் பின்னணியில் அவர் ஐ.சி.சி. தலைவராக பதவி ஏற்கப்போவது எந்த வகையான தாக்கத்தை செலுத்தும் என்பது தான் இப்போதைக்கு இருக்கும் பெருத்த கேள்வி.

ஜெய் ஷாவுக்கு இப்போது தான் 35 வயதாகிறது. அதாவது ஐ.சி.சி. தலைமை பொறுப்பை ஏற்கும் மிக இளம் வயதானவர் என இடம்பெறப்போகிறார். தலைமை பதவிக்கு போட்டி இன்றி தெரிவான அவர் எதிர்வரும் டிசம்பர் 01 ஆம் திகதி அந்தப் பொறுப்பை ஏற்கப்போகிறார். அவரது மூன்று ஆண்டு பதவிக் காலம் என்பது 2027 ஆம் ஆண்டு வரை நீடிக்கும்.

அவர் இப்போது இந்திய சபை செயலாளர் மாத்திரமன்றி ஆசிய கிரிக்கெட் கவுன்ஸில் தலைவராகவும் இருக்கிறார். ஐ.சி.சி. தலைமை பொறுப்பை ஏற்பதற்கு இந்தப் பதவிகளை கைவிடப்போகிறார்.

ஐ.சி.சி. தலைமை பொறுப்புக்கு பார்க்லே மீண்டும் போட்டியிடுவதில்லை என்று அறிவித்ததை அடுத்தே ஜெய் ஷாவின் வருகை உறுதியானது. நியூசிலாந்து முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சரும் அந்நாட்டு கிரிக்கெட் சபை தலைவருமான பார்க்லே ஐ.சி.சி. தலைவராவதற்கு இந்தியாவின் செல்வாக்கு அதிகமாக இருந்தது.

2020 ஆம் ஆண்டு அவர் ஐ.சி.சி. தலைவராக போட்டியிட்டபோது யாரை தலைவராக தெரிவு செய்வது என்பது பற்றி உறுப்பு நாடுகளிடையே கடும் பிளவு ஏற்பட்ட நிலையில் இந்தியாவின் முடிவுதான் கடைசியில் பார்க்லேவை தலைவராக்கியது. பின்னணியில் ஜெய் ஷாவின் இராஜதந்திரத்தை தனியே கூறவேண்டும்.

அப்போது பார்க்லேயுடன் ஐ.சி.சி. இடைக்கால தலைவராக செயற்பட்ட சிங்கப்பூரைச் சேர்ந்த இம்ரான் கவாஜா போட்டியிட்டார். தலைமைப் பதவிக்கு மூன்றில் இரண்டு வாக்குகளை பெற வேண்டும் என்ற நிலையில் முதல் சுற்றில் 16 வாக்குகளில் பார்க்லேவால் 9 வாக்குகளையே பெற முடிந்தது.

இரகசிய வாக்கு என்றபோதும் பாகிஸ்தான், இலங்கை, சிம்பாப்வே கவாஜாவுக்கு ஆதரவு வழங்கி வந்ததோடு தென்னாபிரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளின் ஆதரவும் கவாஜா பக்கமே இருந்தது. ஆனால் அப்போது தென்னாபிரிக்க அணி இந்திய சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாட வேண்டி இருந்தது. இந்தியாவுடன் ஆடுவதென்பது பொருளாதார ரீதியில் முக்கியமானது. அதனை வைத்து இந்தியா அழுத்தம் கொடுத்திருக்கலாம் என்று பெரிதாக ஊகிக்கப்பட்டது.

எதிர்பார்த்தபடி இரண்டாவது சுற்று வாக்கெடுப்பில் பார்க்லே 11–5 என்ற வாக்கு வித்தியாசத்தில் வெற்றியீட்டினார். சர்வதேச போட்டி அட்டவணையை நிர்ணயிப்பது தொடக்கம் நிர்வாக முடிவுகள் வரை ஐ.சி.சி. முடிவுகள் சர்வதேச கிரிக்கெட்டில் முக்கியமானது. எனவே, அதன் தலைமை பொறுப்புக்கு தாம் கை நீட்டுபவரே வர வேண்டும் என்ற இந்தியாவின் முடிவு பார்க்லேவின் அப்போதைய நியமனம் காட்டியது.

இப்போது ஜெய் ஷா போட்டியின்றி தேர்வானதன் பின்னணியும் இப்படித் தான். கிரிக்கெட்டின் மூன்று மிகப்பெரிய சக்திகளான இந்தியாவுடன் அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து ஜெய் ஷாவுக்கே கை அசைத்திருக்கின்றன.

என இந்தியாவின் பலரும் ஐ.சி.சி. தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். ஆனால் இளம் ஜெய் ஷா அந்தப் பதவிக்கு வந்தது தனக்கே உரிய பாணியிலானும். இந்தியாவின் பலம்மிக்க உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் மகன் என்றால் அவரை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது.

அஹமதாபாத் கிரிக்கெட் மத்திய சபையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினராக 2009 ஆம் ஆண்டு தனது கிரிக்கெட் நிர்வாகப் பயணத்தை ஆரம்பித்த ஜெய் ஷா குறுகிய காலத்திற்குள்ளேயே ஐ.சி.சியின் உச்ச பதவியை தொட்டிருப்பதென்பது சாதாரணப்பட்டதல்ல. தந்தையின் அரசியல் பின்னணி ஒரு பக்க இருக்க பிரத்தியே ஆளுமையுடன் அவரது செயற்பாடுகள் இருந்தன.

இந்திய பிரீமியர் லீக் கிரிக்கெட்டை கிரிக்கெட் உலகில் தவிர்க்க முடியாத லீக் கிரிக்கெட்டாக மாற்றிய அவர் இந்திய அணி உலக அரங்கி ஆதிக்கம் செலுத்துவதற்கும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை உலகக் கிரிக்கெட்டில் செல்வாக்கு செலுத்துவதற்கும் பின்னணியில் இருந்தார்.




என்றாலும் முழுமையாக அவருக்கு ஆதரவு கிடைத்தது என்று குறிப்பிட முடியாது. வாக்குரிமை பெற்ற 16 உறுப்பினர்களில் 15 உறுப்பினர்களது ஆதரவுடனேயே அவர் தலைவராகி இருக்கிறார். பாகிஸ்தான் ஜெய் ஷாவை ஆதரிக்கவும் முடியாமல் எதிர்க்கவும் முடியாமல் நடுநிலை வகித்ததாக தெரிகிறது.

உண்மையில் ஜெய் ஷாவின் நியமனம் என்பது முதலில் பாகிஸ்தானுக்கே அதிகம் பாதிப்புச் செலுத்தும் ஒன்றாக இருக்கும். ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணம் 2025 இல் பாகிஸ்தானில் நடத்தவே ஏற்பாடாகி இருக்கிறது. என்றாலும் இந்தத் தொடரில் இந்திய அணி பாகிஸ்தான் செல்வதை திட்டவட்டமாக நிராகரிக்கிறது.

இந்த நிலையில் போட்டியை எங்கு நடத்துவது என்பதில் தொடர்ந்து இழுபறி நீடிக்கிறது. இந்த சூழலில் ஜெய் ஷா தலைமையிலான ஐ.சி.சி. என்ன முடிவு எடுக்கும் என்பது தான் பாகிஸ்தானுக்கு இருக்கும் பெரிய கவலை.

இப்படித் தான் கடந்த ஆண்டு ஆசிய கிண்ணமும் பாகிஸ்தானில் நடத்த ஏற்பாடாகி இருந்தது. ஆனால் இந்தியா அங்கு செல்ல மறுத்த நிலையில் போட்டி இலங்கையிலும் நடத்தும் வகையில் மாற்றம் செய்யப்பட்டது. அப்போது ஆசிய கிரிக்கெட் கௌன்சிலின் தலைவராக ஜெய் ஷா செயற்பட்டார்.

இதற்கு முன்னர் ஜக்மோஹன் தால்மிய, ஷரத் பவார், என். ஸ்ரீனிவாசன் மற்றும் ஷஷாங்க் மனோஹர்

என்றாலும் ஐ.சி.சி. தலைமை பொறுப்பு என்பது இந்திய கிரிக்கெட்டுக்கு அப்பாற்பட்டது. நடுநிலையோடு செயற்பட வேண்டியது. அதற்கே உரிய சவால்கள் பல உள்ளன. குறிப்பாக 2028 லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கின்போது 128 ஆண்டுகளின் பின்னர் கிரிக்கெட் ஒலிம்பிக்கில் இடம்பெறப்போகிறது.

அதற்கான வழித்தடத்தை வகுப்பது ஷெய் ஷாவின் பிரதான சவால்களில் ஒன்றாக இருக்கும். 'உலகம் முழுவதும் எங்கள் விளையாட்டின் தரத்தை உயர்த்த என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன்' என்று தலைவராக தெரிவான பின் அவர் குறிப்பிட்டிருந்தார்.

டி20 கிரிக்கெட் மற்றும் இந்திய பிரீமியர் லீக் உட்பட சர்வதேச அளவில் முளைத்து வரும் லீக் கிரிக்கெட்டுகள் சம்பிரதாய டெஸ்ட் கிரிக்கெட்டை விழுங்கும் அளவுக்கு வளர்ந்து வரும் சூழலில் டெஸ்ட் கிரிக்கெட்டை காப்பதும் ஜெய் ஷாவுக்கு இருக்கும் மற்றொரு பெரிய சவால். அதற்கு நிர்வாகத் துறையில் அவரது ஆளுமை காலத்தின் தேவையாகக் கூட இருக்கலாம்.

**எஸ்.பிர்தௌஸ்...**




# பிராட்மெனுக்கு மாத்திரம் இரண்டாவதான கமிந்து



ஓல்ட் டிரபர்ட்டில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் ஏழாவது வரிசையில் வந்த கமிந்து மெண்டிஸ் 113 ஓட்டங்களை பெற்றார். அவரது ஆட்டம் இலங்கைக்கான வெற்றி வாய்ப்பை ஏற்படுத்தியபோதும், இடையே இங்கிலாந்து பந்தை மாற்றிய சர்ச்சைக்கு மத்தியில் தோல்வியை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

என்றாலும் கமிந்து பெற்ற சதத்தின் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் அவரது ஓட்ட சராசரி 92.16 என உச்சத்தை தொட்டிருக்கிறது. அதாவது டெஸ்ட் போட்டிகளில் 500க்கும் அதிகமான ஓட்டங்களை பெற்ற வீரர்களில் அதிக ஓட்ட சராசரியை பெற்ற இரண்டாவது வீரராக கமிந்து இருக்கிறார். அவர் கிரிக்கெட் ஜாம்பவான் டொன் பிராட்மென்னுக்கு (99.94) மாத்திரம்தான் இரண்டாவதாகிறார்.

தனது ஆட்டத்தின் ரகசியம் பற்றி அவரிடம் கேட்டபோது, 'அடிப்படையான ஆட்டத்தை வெளிப்படுத்தி அமைதியாக இருக்க முயற்சிக்க வேண்டும்' என்கிறார். அதாவது அநாவசியமான ஆட்டத்தை வெளிப்படுத்தாமல் இருந்தாலே சாதிக்க முடியும் என்பதே அவரது கோட்பாடு.

கமிந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஆவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலேயே டெஸ்ட் அறிமுகத்தைப் பெற்றார். தனஞ்சய டி சில்வாவுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதை அடுத்தே கமிந்துவுக்கு அந்த வாய்ப்பு கிடைத்தது. அந்தப் போட்டியில் அவர் முதல் இன்னிங்ஸில் 61 ஓட்டங்களை பெற்றதோடு இலங்கை அணியால் இன்னிங்ஸால் வெற்றியீட்ட முடிந்தது.

என்றாலும் அவருக்கு மீண்டும் டெஸ்ட் போட்டியில் வாய்ப்புக் கிட்டுவதற்கு கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் காத்திருக்க வேண்டி இருந்தது. இந்த ஆண்டு ஆரம்பத்தில் இலங்கை அணியின் பங்களாதேஷ் சுற்றுப் பயணத்திலேயே அவர் அணிக்கு அழைக்கப்பட்டார். சில்ஹெட்டில் நடந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் இரண்டு இன்னிங்ஸ்களிலும் சதம் பெற்றார். அதுதான் அவரின் டெஸ்ட் வாழ்வின் திருப்பம். அந்த இன்னிங்ஸ் அவருக்கு டெஸ்ட் அணியில் நிரந்தர இடத்தைப் பெற்றுக்கொடுத்தது.

'துடுப்பாட்ட வரிசை நிரம்பி இருப்பது எனக்குத் தெரியும், ஆனால் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி சிறந்த முறையில் செயற்பட நான் முயன்றேன்' என்று கிரிக்கின்போ இணையதளத்திற்கு அண்மையில் பேட்டி அளித்த கமிந்து கூறுகிறார். 'அணியில் இருந்து நான் நீக்கப்பட்டேன். ஆனால் அதனை ஒரு தவறாக நான் பார்க்கவில்லை. அணியை சமநிலைப்படுத்துவதற்கு பல்வேறு முடிவுகளை எடுக்க வேண்டி இருக்கும். தனஞ்சயவுக்கு கொவிட் தொற்று ஏற்பட்டதை அடுத்தே நான் அணிக்கு வந்தேன். அவர் அணிக்குத் திரும்பிய பின், நான் வெளியேற வேண்டி ஏற்பட்டது. அது தான் நியாயம்' என்றார்.

அவர் அணியில் இருந்து விடுபட்ட காலத்தில் கூட பதினொரு வீரர்களில் இடம்பெறாதபோதும் பெரும்பாலும் இலங்கைக் குழாத்தில் தம்மை தக்கவைத்துக்கொள்ள அவரால் முடிந்தது. அது தமக்கு பெரும் அனுபவத்தை தந்ததாகக் குறிப்பிடுகிறார். 'என்னால் விளையாட முடியாதபோதும் கூட, கிட்டத்தட்ட அனைத்து தொடர்களிலும் நான் குழாத்தில் இருந்து அணியுடன் பயணித்தேன்' என்று கூறுகிறார் கமிந்து. 'அனுபவம் கொண்ட வீரர்களுடன் பல சுற்றுப்பயணங்களில் செல்வது எனது முதல் சில இன்னிங்ஸ்களில் சிறப்பாக ஆட உதவி இருக்கிறது' என்றார்.

ஓல்ட் டிரபர்ட் டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் கமிந்து 12 ஓட்டங்களை பெற்றிருந்தபோது கிறிஸ் வொக்ஸ் வீசிய பந்து துடுப்பின் விளிம்பில் பட விக்கெட் காப்பாளர் ஜெம்மி ஸ்மித் பிடியெடுத்தார். ஆனால் இரண்டாவது இன்னிங்ஸில் 113 ஓட்டங்களை பெற்றதொடு அந்த இன்னிங்ஸில் அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் தினேஷ் சந்திமாலுடன் சேர்ந்து முறையே 78 மற்றும் 117 ஓட்ட இணைப்பாட்டங்களை பகிர்ந்துகொண்டார்.

'முதல் இன்னிங்ஸில் என்னால் ஓட்டங்களை பெற முடியாமல் போனது. ஆடுகளம் சவாலாக இருந்தது. எதிர்பார்த்ததை விடவும் குளிராக இருந்தது. ஓர் அணியாக எம்மால் முடிந்தவரை சிறப்பாக செயற்பட்டோம்' என்றார்.

'நான் துடுப்பெடுத்தாட சென்றபோது அஞ்சலோ மற்றும் சந்திமால் பெரும் உதவியாக இருந்தனர். சந்திமாலை குறிப்பாகக் கூற வேண்டும், ஏனென்றால் விரலில் காயத்துடனேயே அவர் ஆடினார். அணிக்கு முக்கியமான ஓட்டங்களை பெற்றுத்தந்தார். 100 ஓட்டங்களை பெறுவதற்கு அவர் எனக்கு பெரும் உதவியாக இருந்ததோடு அவரது அனுபவம் உண்மையில் எனக்கு உதவியது. ஆடுகளத்தில் செயற்பட வேண்டியது பற்றி அவர்களுக்கு தெரிந்ததை என்னுடன் பகிர்ந்துகொண்டார்கள்' என்றும் கமிந்து குறிப்பிட்டார்.

தாம் துடுப்பெடுத்தாடும்போது பின்பற்றும் எளிமையான போக்கை பற்றி அவர் குறிப்பிட்டிருந்தார். 'அடிப்படையான ஆட்டத்தை வெளிப்படுத்தி மைதானத்திற்கு நடுவே அமைதியாக இருக்க முயற்சிக்க வேண்டும்' என்றார். அவரது ஓட்ட சராசரி பற்றிய கேள்விக்கு, 'அணிக்கு என்ன தேவையோ அதனைத் தான் நான் செய்ய முயற்சிப்பேன். அது தான் எனது ஒரே இலக்கு. துடுப்பாட்டமாக இருந்தாலும், பந்து வீச்சாக இருந்தாலும், களத்தடுப்பாக இருந்தாலும் அணிக்கு என்ன தேவையோ அதனை என்னால் முயன்றவரை கொடுப்பதற்கு முயற்சிப்பேன்' என்றார்.



கமிந்து இந்த சுற்றுப்பயணத்திற்கு முன்னர் இங்கிலாந்தில் இதற்கு முன்னர் ஆடியதில்லை. அந்தக் கனவு நிறைவேறியதாக கூறுகிறார். 'சின்ன வயதில் இருந்து லோட்ஸ் மைதானத்தில் டெஸ்ட் போட்டி ஒன்றில் ஆடுவது தான் எனது கனவாக இருந்தது. அது எனது கனவு மாத்திரம் அல்ல, ஒவ்வொரு வீரரதும் இலக்காக அது உள்ளது. என்னால் அந்த இடத்தை அடைய முடிந்தது' என்றார்.

லண்டன் லோட்சில் கடந்த ஓகஸ்ட் 29 ஆம் திகதி ஆரம்பமான இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் கமிந்துவும் இடம்பெற்றார். ஆனால் இது அவரது டெஸ்ட் வாழ்வின் ஆரம்பப் புள்ளியாகவே இருக்கப்போகிறது. அவர் பயணிக்க வேண்டிய தூரம் நெடியது.

# இலங்கையில் மூத்தோர் கிரிக்கெட்

எதிர்வரும் 50 வயதுக்கு மேற்பட்டோருக்கான கிரிக்கெட் உலகக் கிண்ணத்தையொட்டி இலங்கை மூத்தோர்கள் கிரிக்கெட் சங்கத்தினால் முதல் முறையாக மூத்தோர்கள் கிரிக்கெட் தொடர் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாஸ்டர்ஸ் கிரிக்கெட் சங்கத்தின் நிர்வாகப் பிரிவாக செயற்படும் இலங்கை மூத்தோர்கள் கிரிக்கெட் சங்கம் இலங்கையில் உள்ள 40 வயதுக்கு மேற்கட்ட கிரிக்கெட் வீரர்களுக்கு உதவும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் தற்போது முத்தோர்கள் கிரிக்கெட் விளையாடும் 10க்கும் மேற்பட்ட கழகங்கள் மற்றும் 10க்கும் மேற்பட்ட பழைய மாணவர்கள் சங்கங்கள் உள்ளன.




படம்: நிஸ்ஸங்க விஜேரத்ன

இந்நிலையில் 50 வயதுக்கு மேற்பட்டோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு பெப்ரவரியில் இலங்கையில் நடத்த ஏற்பாடாகியுள்ளது. இதனையொட்டில் இலங்கை அணிக்கான வீரர்களை தேர்வு செய்யும் பொருட்டு 50 வயதுக்கு மேற்பட்டோருக்கான 40 ஓவர் கொண்ட கிரிக்கெட் தொடர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கொழும்பு மாஸ்டர் அணி உட்பட மொத்தம் மூன்று அணிகள் பங்கேற்கும் இந்த கிரிக்கெட் தொடர் நேற்று (ஓகஸ்ட் 31) ஆரம்பமானது. லீக் முறையில் நடைபெறும் இந்தத் தொடர் எதிர்வரும் செப்டெம்பர் 17 ஆம் திகதி வரை இடம்பெறும்.

இதில் அரச சேவை கிரிக்கெட் அணி, வர்த்தக சேவை அணியும் பங்கேற்கின்றன. இரத்மலானை–தேசிய சேவை மைதானம், கொழும்பு–புளூம்பீல்ட் மைதானம், பீ. சரா ஓவல் மைதானம் மற்றும் மத்தேகொட, இராணுவ மைதானங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இது தொடர்பில் விளக்கும் ஊடக சந்திப்பு ஒன்று அண்மையில் கொழும்பில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# தாய் மனசு தங்கம்



மாலை நேரம் ஆகிவிட்டதால் சுவாமி படத்திற்கு விளக்கேற்ற வேண்டும் என்று எண்ணிய தேவகி சுவாமிக்கு விளக்கேற்றி வணங்கிவிட்டு. கணவர் வரும் நேரம் என்பதால் தேநீர் தயாரிக்க நீரை கொதிக்க வைத்துவிட்டு, வாசலுக்கு வந்து கணவரின் வரவை எதிர்பார்த்து வெளியில் எட்டிப் பார்த்த போது, மாலை நேர வகுப்பு முடிந்து பாடசாலை மாணவர்கள் கதைத்து சிரித்துப் பேசிக் கொண்டு வீதியில் போய்க்கொண்டிருந்தார்கள். பக்கத்து வீட்டு முற்றத்தில் சிறு பிள்ளைகள் ஓடியாடி மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருந்தார்கள். இதையெல்லாம் ஏக்கத்துடன் பர்த்துக் கொண்டிருந்து தேவகிக்கு மனதில் கவலையும் தாழ்வுச் சிக்கலும் தொற்றிக் கொண்டது. தான் திருமணம் முடித்து இத்தனை வருடங்கள் ஆகியும் தனக்கு ஒரு குழந்தை பிறக்கவில்லையே என்று எண்ணி பெருமூச்சு விட்டாள்.

அந்த குழந்தைகளை பார்த்து தன்னையே மறந்து நின்றவள், கணவன் ராஜாராம் அருகில் வந்து அழைத்த பின்னே சுயநினைவுக்கு வந்தாள். தன் மனைவியை திசை திருப்ப எண்ணி கையில் இருந்த பொதியை அவள் கையில் கொடுத்து 'எனது நண்பர் ஒருவர் என்னை சந்திக்க வருவதாக கூறினார். அவர் வந்தாரா?, என்று சும்மா கேட்க தன்னை சுதாகரித்துக் கொண்ட தேவகியும் இல்லையே, அப்படி யாரும் இங்க வரவில்லை. என்று கூறி, பொதியுடன் சமையலறைக்குள் புகுந்தாள். தேநீர் தயாரித்து தேநீரை கணவனிடம் நீட்டினாள். அதை கையில் வாங்கிக் கொண்டே கணபதி தன் மனைவியைப் பார்த்து' தேவகி இப்படி உட்கார். உன்னிடம் ஒரு விஷயம் கதைக்க வேண்டும்.' என்று கூறவும் தேவகியும் கணவர் என்ன சொல்லப்போகிறார் என்ற ஆர்வத்தில் அவர் அருகில் அமர்ந்தாள். 'தேவகி எனது பழைய நண்பர் ஒருவர், இன்று எனது கடைக்கு வந்திருந்தார். அவரிடம் நமக்கு இன்னும் குழந்தைகள் இல்லை என விடயத்தை கூறினேன். அதைக் கேட்டு வருத்தப்பட்ட அவர், தனது வீட்டிற்கு அருகில் ஒரு சிங்கள நண்பர் இருப்பதாகவும், அவருக்கு அடுத்தடுத்து நான்கு பெண் குழந்தைகள் பிறந்ததாகவும் கூறினார். அவரால் குடும்ப சுமையை சுமக்க கஷ்டமாகவுள்ளதாம். அவர் தனது கடைசியாக பிறந்த பெண் குழந்தையை யாருக்காவது குழந்தை இல்லாதவர்களுக்கு தத்து கொடுக்க விரும்புகின்றாராம். எனது நண்பர் என்னைக் கேட்டார், அப்படி தத்து எடுக்கும் எண்ணம் ஏதும் உண்டா என்று, நான் உன்னிடம் கேட்டு விட்டு சொல்கிறேன் என்று கூறினேன். நீ என்ன சொல்ற உனக்கு விருப்பமா? இப்படியொரு விடயத்தை சற்றும் எதிர்பாராத தேவகி சற்று நேரம் ஒன்றும் கதைக்க முடியாமல் குழம்பி போனாள். ஆனாலும் தன் கணவன் தனது பதிலையே எதிர்பார்த்து தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை பார்த்த தேவகி சுதாகரித்துக் கொண்டு 'அது இல்லங்க நமக்குனு ஒரு குழந்தை பிறந்தாதானே நல்லா இருக்கும். இது என்ன இருந்தாலும் வேறு யாரோடோ குழந்தை தானே", என்று கூறிய மனைவியின் மனநிலையை உணர்ந்து கொண்ட ராஜாராம் அவளை மேலும் வற்றுபுறுத்தாது, சரி சரி அவசரமில்லை, நீ நல்லா யோசித்து சொல் என்று கூறி எழுந்து சென்று விட்டார்.

ஆனால் தேவகியோ மிகவும் குழம்பிப் போனாள், சரியானதொரு முடிவு எடுக்க முடியாமல் தத்தளித்தாள். குழந்தையில்லாத அவளுக்கு குழந்தையை தத்தெடுத்து வளர்க்கவும் ஆசையாக இருந்தது, சரி தனக்கு ஒரு குழந்தை பிறக்கும் வரை பொறுத்திருப்போம் எனவும் யோசித்தாள். ஆனால் ஒரு குழந்தையை தத்தெடுத்து வளர்த்தால், சொந்தமாக ஒரு குழந்தை பிறக்கும் என்று அவளிடம் பலர் சொல்ல கேட்டிருக்கிறாள். எனவே அன்று இரவு முழுவதும் நன்றாக யோசித்தாள் அந்த குழந்தையை தந்தெடுப்போம் என முடிவு செய்து, மறுநாள் காலையிலே கணவனிடம் குழந்தையை தத்தெடுப்பதற்கு சம்மதம் கூறினாள். அவரும் சந்தோஷமாக ஏற்று, அந்த சிங்கள பெற்றோரிடம் சென்று தங்களின் விருப்பத்தை கூறவும் அவர்களும் தங்களின் பிள்ளைக்கு ரொஷலின் நோனா என பெயர் வைத்துள்ளதாகவும் நீங்கள் உங்களுக்கு விருப்பமான தமிழ் பெயர் வைத்துக் கொள்ளுங்கள் என்றும் கூறி சட்டப்படி எல்லா ஆவணங்களையும் பூர்த்தி செய்து தம் குழந்தையை ராஜாராம், தேவகி தம்பதிகளிடம் ஒப்படைத்தனர். இவர்கள் குழந்தையை பெற்றுக் கொண்டு வந்து வசந்தி என பெயரிட்டனர். ஆனால் என்ன ஆச்சரியம் வசந்திக்கு இரண்டு வயது ஆரம்பிக்கும் முன்பே தேவகி கர்ப்பம் தரித்து ஒரு பெண் குழந்தையை பெற்றெடுத்தாள். தனக்கு ஒரு குழந்தை இல்லையே என்ற குறையில்லாமல் இரு பெண் குழந்தைகளையும் வளர்த்தாள் தேவகி சந்தோஷமாக. ராஜாராமும் தனக்கென ஒரு பிள்ளை பிறந்ததை எண்ணி மிகவும் சந்தோஷப்பட்டார். இவ்வாறு சந்தோஷமாக வாழ்கையில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார சிக்கலால், வியாபாரம் நஷ்டத்தில் ஓடத்தொடங்கியது. எவ்வளவு முயற்சி செய்தும் பழைய நிலைக்கு, வியாபாரத்தை கொண்டு வர முடியாமல் போனது. கடைக்கும் வாடகை செலுத்த முடியாமல் கடையை மூடும் நிலைக்கு வந்துவிட கடையை கொடுத்துவிட்டு. விட்டு வீட்டிருந்தே, கடலை, வடை, முறுக்கு என்று தயாரித்து கடைகளுக்கு போட்டு வந்தார். இருந்தும், திடீரென வியாபாரத்தில் ஏற்பட்ட நஷடம், இரண்டு பெண் பிள்ளைகள் வளர்க்கும் பொறுப்பு என்று யோசித்து கவலையுடன், பலவீனம் காரணமாக உடல் தளர்த்து அவர் நிரந்தர நோயாளியாகிவிடவே தேவகியே அந்த தொழிலை செய்ய தொடங்கினாள்.

இப்படி நாட்கள் செல்ல ராஜாராம் காலமாகிவிட தேவகியும், பிள்ளைகளும் தனித்த நின்றனர். ஆனாலும் தேவகி மனதை திடப்படுத்திக் கொண்டு மகள்மாரின் உதவியுடன் தொழிலை நடத்தினாள். அவர்கள் இருவரும் வளர்ந்து இப்போது, திருமண வயதை எட்டி நின்றனர். அதிலும் எடுத்து வளர்த்த மூத்த மகள் வசந்தி படிப்பில் அக்கறை கொள்ளாமல் தன்னை அலங்கரிப்பது, சினிமா படம், நாடகம் பார்ப்பது என்று ஆர்வம் காட்டினாள். வஸந்தி தன் நண்பிகளுடன் சேர்ந்து ஊரில் இருக்கும் சினிமா தியேட்டருக்கு படம் பார்க்க செல்வாள். இசை நிகழ்ச்சிகள் நடந்தாலும் சென்று விடுவாள். தாய் போக வேண்டாம் என்றாலும் கேட்க மாட்டாள். இப்படி தொடர்ந்தபோது, தியேட்டரில் டிக்கட் விநியோகிக்கும் ஒருவரோடு நட்பு ஏற்பட்டு பின் அதே காதலாகி, அவரையே முடிக்க வேண்டும் என ஒற்றைக்காலில் நின்று திருமணம் முடித்தாள். தேவகியும் தங்கள் குடும்பச் சூழலை நினைத்து சரி அவள் விருப்பப்படி திருமணம் முடித்து போகட்டும் என்று அதிகம் கண்டிக்காமல் எளிய முறையில் திருமணம் முடித்து வைத்தாள்.

காலம் யாருக்காகவும் காத்திராமல் விரைந்தோட, இரண்டாவது மகளும் திருமணம் முடித்து விட்டாள். மகள்மார்களுடன் இருந்த வேளையில் வசந்தியும் தன் கணவனுடன் வாடகை தனிக்குடித்தனம் போய் இரண்டு ஆண் பிள்ளைகளுடன் சந்தோஷமாக வாழ்க்கையை நடத்தி' கொண்டிருந்தாள். வாழ்க்கை சுமுகமாக போய்க் கொண்டிருந்த வேளையில், வஸந்தியின் கணவன் சிறிது சிறிதாக மதுவுக்கு அடிமையாகத் தொடங்கினான். படிப்படியாக அவன் மதுவுக்கு அடிமையானதும் குடும்ப செலவை சமாளிக்க வஸந்தி முன்பு தான் தன் வீட்டில் செய்த சிற்றுண்டிகளை தயாரித்து கொடுக்கும் தொழிலையும் செய்து மகன்களை பாடசாலைக்கும் அனுப்பி படிக்க வைக்க அனுப்பினாள். திடீரென ஒருநாள் வஸந்தியின் கணவனுக்கு மாரடைப்பு ஏற்பட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதை சற்றும் எதிர்பாராத வசந்தி கலங்கி நின்றாள். தவித்து நின்ற வசந்தியையும் அவளது இரண்டு ஆண் பிள்ளைகளையும்தங்களுடன் வந்து தங்கும் படி அவளது தங்கை அழைத்தாள். ஆனால் அவளது தங்கையின் கணவருக்கு இவர்கள் தன் வீட்டில் தங்கியிருப்பது பெரும் சுமையாகப்பட்டது. அவர்களை அனுப்பி விடும்படி தன் மனைவியிடம் அவர் சண்டை பிடிக்க, ஒன்றும் செய்ய முடியாத நிலையில் வசந்தி தன் இரண்டு பிள்ளைகளுடன் வெளியேறி ஒரு சிறிய வாடகை வீட்டில் தங்கி பலகாரங்கள் செய்தும் வீடுகளில் வேலை செய்தும் வாழ்க்கையை நடத்தி வந்தாள். வறுமை வீட்டு சூழல் சரியாக அமையாததால் மகன்மார் இருவரும் படிப்பில் பின்தங்கியே இருந்தனர். எனவே இருவரும் படிப்பை இடை நடுவில் விட்டவிட்டு தொழிலுக்கு செல்லத் தொடங்கினர்.

வசந்தியும் இனி தனக்கு குடும்ப பாரம் கொஞ்சம் குறையும் என்று எண்ணி வீடுகளில் வேலை செய்து தன் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டாள். ஆனால் அவள் நினைத்தப்படி வாழ்க்கை சுலபமாக அமைவில்லை. இரண்டு மகன்மார்களும் தொழிலுக்கு ஒழுங்காக செல்லாமல் மீண்டும் தாயிடமே தங்கள் தேவைகளுக்காகப் பணம் கேட்டுக் கஷ்டப்படுத்தினார்கள். எனவே மிகவும் கஷ்டப்பட்டு, வீடுகளில் வேலை செய்து உழைத்த பணத்தை அவர்களிடமே கொடுக்க வேண்டிய நிலை உருவானது. வீடுகளில் கஷ்டப்பட்டு பகல் முழுக்க வேலை செய்து அவர்கள் தரும் உணவை உண்டு ஊழியமாக கிடைக்கும் பணத்தை பாச மிகுதியினால் பிள்ளைகள் இருவரும் கேட்கும் போதெல்லாம் எடுத்துக் கொடுத்தாள். அவளுக்கென்று ஒன்றுமே சேமித்து வைக்காமல், மகன்மார்கள் தன்னை கவனிப்பார்கள் என்று எண்ணி அவள் பணம் எல்லாவற்றையும் கொடுத்தாள்.

வஸந்திக்கு வயது போகப்போக வேலைப்பளு காரணமாக ஒழுங்கான ஊண் உறக்கமின்றி, வேலை செய்யவும் மிகவும் சிரமம்பட்டாள். ஆனால் மகன்கள் இருவரும் அதைப்பற்றி யோசிக்காமல் நினைத்த நேரம் வேலைக்கு போவது இல்லா விட்டால் நண்பர்களுடன் சுற்றுவது என்று கவலை இன்றி காலத்தை கழித்ததோடு அவர்கள் இருவரும் தாங்கள் விரும்பிய பெண்களை திருமணம் முடித்து, தனிக்குடித்தனம் நடத்தத் தொடங்கினார்.

அதுமட்டுமல்லாமல், அவர்களின் திருமணச் செலவுக்கு, வஸந்தி தனது காதில் போட்டிருந்த தங்கத்தோடு, அவள் சேமிப்பில், இருந்த கொஞ்சப் பணம் என எல்லாவற்றையும் கேட்டு வாங்கினார்கள், பிறகு தருகிறோம் என்று கூறி, வசந்திக்கு வயதும் போய் உடல் நலிவுற்றதால், அவளை யாரும் வேலைக்கு அழைக்கவும் தயங்கினர். எனவே, அவள் மகன்மார்கள் வீட்டில் தங்கலாம் என்று போனால், மகன்கள் இருவரும் அம்மாவை நீ பார் நான் பார் என்று பிரச்சினைப்பட்டனர். அத்தோடு, இரண்டு மகன்மாரும் அவளைத் தங்களுடன் வைத்திருக்க மறுத்தனர். அவள் எங்கு போவது என்று தெரியாமல் தனது உடைகளை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு சொந்தக்காரர் வீடாகத் தங்கினாள். அதுவும் நீடிக்காத நிலையில் அவள் உடுப்பு பையுடன் வீதிக்கு இறங்கும் நிலை உருவானது.

வயது போன காலத்தில் வஸந்தி இப்படி அல்லல் படுவதை கண்ட ஊர் மக்கள் இவள் அவளை வயோதிபர் இல்லத்தில் கொண்டு போய் விடுமாறு மகன்மாருக்கு ஆலோசனை கூறினர். அவர்களும் மிகவும் தொலைவில் ஒரு அநாதை இல்லத்தில் கொண்டு போய்விட்டு விட்டனர். அதன் பின் அவளை அவர்கள் கண்டு கொள்ளவே இல்லை.

சிங்கள பெற்றோருக்கு மகளாகப் பிறந்து ரொஷலின் நோனா என்று பெயர் சூட்டப்பட்டு தமிழ் பெற்றோர்களால் தத்தெடுக்கப்பட்டு விரும்பியவரை திருமணம் முடித்து வாழ்ந்த வசந்தி கல்நெஞ்சம் கொண்ட மகன்மார்களால் இறுதியில் அநாதை இல்லத்தில் விடப்பட்டு, வயது முதிர்ச்சி, மகன்மார்களின் உதாசீனம் நோய் காரணமாக இறுதியில் ஒரு அநாதையாகவே இறந்து போனாள்.

**பலாங்கொடை வேணி**

# அந்த காதல் தொலைந்த புத்தகம்


காற்றில் கலந்த
காதல் மறை
சுவாசம் தந்தவள்
அவன் உயிரில்
கலந்தவள்
கவிஞன் எழுதும்
கவிதை இன்பம்
ஏட்டில் தந்தவள்
எழில் தூரிகை எடுத்து
புதிய உலகை
வரைந்து சென்றவள்
விரல் தொட்ட
குழந்தையுடன்
விதவை ஆகினாள்
வெள்ளை ஆடை
நிலவு போல்
வீதியை கடந்து
போகின்றாள்
ஐயோ இளமையில்
கொடிது
இள மங்கை துன்பம்
இரத்தக் கண்ணீரில்
என் இதயம்
நனையும்
ஏதும் அறியாமல்
என் மகள்
என்னருகில்

**கலாபூஷணம் கவிஞர் நித்தியஜோதி**



உங்கள் சிறுகதைகளை 1300 சொற்களுக்கு மேற்படா வண்ணம் எழுதி, sirukathaithinakaran@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள். மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையிலும் அதிகமான சொற்களைக் கொண்ட சிறுகதைகள் பிரசுரிக்கப்பட மாட்டாது. அதேபோல நூல் விமர்சனங்களை 600 சொற்களுக்கு மேற்படாமலும் எழுதி அனுப்பி வையுங்கள். _ஆர்_

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல:136



திரு/திருமதி.செல்வி ..............................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..............................
..............................
..............................
.................. ..................
திகதி கையொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
போட்டி இல. 136
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 136

### இடமிருந்துவலம்

1. இம்மாதம் இந்த பதவிக்குரிய தெரிவு இடம்பெறும்
5. ஓர் உறுப்பு
7. நீர் நிலை (குழம்பியுள்ளது)
8. பேசுவதற்கும் சாப்பிடுவதற்கும் தேவையானது. (திரும்பியுள்ளது)
9. கடல்வழிப் பயணத்திற்கு உரியது (குழம்பியுள்ளது)
11, போற்றுதற்குரிய தன்மை அல்லது தூய்மை
13. பாம்புக்கு எதிரி(திரும்பியுள்ளது)
16. சோகம் (திரும்பியுள்ளது)
18. குளிர்ச்சி, செழிப்பு
20. வயலில் பாய்ச்சும் நீரை தேக்கி வைப்பதற்காக அமைக்கப்படுவது
21. மழைக்காலம்
22. உறக்கம் குழம்பிவிட்டது.
23. பயிரிடப்படாமல் கிடக்கும் வெற்று நிலம் (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. பொறுப்பாளி
2. சந்திரன்
3. சூரியனின் ஆதிக்க நேரம்
4. ஒரு நிலைமையை உடனடியாகப் புரிந்துகொண்டு செயற்படமுடியாத தன்மை
5. கனியாவதற்கு முந்திய நிலை
6. துளை
10. மாரி காலத்தில் இரவில் இதன் குளிரை உணரலாம்
12. பொருட்களை நிறுக்கப் பயன்படும் சாதனம்
14. புகழ்
15. இதுவும் போதை தரும்
17. இயற்கையான செயற்பாட்டு முறை அல்லது ஒழுங்குவிதி (குழம்பியுள்ளது)
18. வெற்றிக்கு அல்லது பாராட்டுக்கு வழங்கப்படுவது
19. துணையாக யாரும் இல்லாத நிலை (தலைகீழ்)
20. ஒருவகை மீன்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 135

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. செல்வாக்கு
5. நரி
7. சதுரம்
9. குக்கல்
11. பாகவதர்
13. வைகாசி
15. சுமை
16. அநிதி
18. துளி
20. அபாரம்
21. அருவம்
22. வம்பு

**மேலிருந்து கீழ்**

1. செவ்வி
2. வாசல்
3. துவக்கு
4.குரக்கன்
6. நடுவர்
8. பாகம்
10. மகா
12. தந்திரம்
13. வையகம்
14. சிசு
16. அம்பு
17. அவதி
19. வளி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :135

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **எச்.எம்.எம். லெப்பே**<br>இல 11/26, ஏ<br>ரத்வத்தை மாவத்தை<br>பதுளை | **என்.எஸ். ரஜீவ்.**<br>பிரதேச செயலகம்,<br>மன்னார் | **ரஜினி சிவஞானம்**<br>இல 43/1 புகையிரத நிலைய வீதி<br>மட்டக்களப்பு |

### பாராட்டு பெறுவோர்

1. **பி. குணசேகரன்** களுதாவளை
2. **எஸ. சஞ்சனா** வந்தாறுமூலை
3. **எஸ். கனகரட்ணம்** திருகோணமலை
4. **எஸ். யாதீசன்** தலவாக்கலை
5. **எம். ஏ. நஜிமுத்தீன்** அக்கறைப்பற்று
6. **எம்.எச்.எம். பாஸி** ரஜவெல்ல
7. **எம்.எம். கலீல்** மருதமுனை
8. **ஆர். ஐனா செய்னப்** கிண்ணியா
9. **நா. அட்சாயினி** திருகோணமலை
10. **எம்.எம்.எம். நிஸாம்** காலி




## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடைபெறும். நண்பர்கள் அனுகூலமாக இருப்பார்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். செல்வாக்கு அதிகரிக்கும். திருத்தல பயணமும் தெய்வ தரிசனமும் உண்டு. குடும்பத்தில் உறவினர்களிடையே இருந்த கருத்து வேறுபாடு நீங்கி சுமுகமான உறவு ஏற்படும். சிலருக்கு புதிய வீடு வாகனம் வாங்கும் வாய்ப்பும் உண்டாகும். கடன்கள் அடைபடும், காரியத் தடைகள் விலகி தொழில் வளம் அதிகரிக்கும். வெளிநாட்டில் பணிபுரிபவர்களுக்கு நல்ல வாய்ப்புண்டு. குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு சில தேவையற்ற செலவுகள், குறிப்பாக மருத்துவ செலவுகள் ஏற்படலாம். பிள்ளைகள் வழியில் எச்சரிக்கையுடன் இருக்கவும். முயற்சிகளில் தடைகளும் தாமதமும் ஏற்படும். சகோதர உறவுகளை சற்று ஜாக்கிரதையுடன் கையாளவும். உணவு விஷயத்தில் கவனம் தேவை. கடுமையான உழைப்பும் அதனால் சோர்வும் ஏற்படும். தகுந்த ஓய்வும் ஆரோக்கியத்தில் கவனமும் தேவை.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

சந்தோஷங்கள் அதிகரிக்கும். முயற்சிகள் பலனளிக்கும் புதிய ஆடை ஆபரணங்கள் சேரும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பழைய வாகனத்தை மாற்றிவிட்டு புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. கணவன் மனைவி உறவுகள் நல்லபடியாகவே இருக்கும். வீட்டில் விசேஷங்கள் நடைபெற வாய்ப்புண்டு. பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். அது உங்களுக்கு அனுகூலமாக இருக்கும். தொழில் ஸ்தானத்தில் சனி வக்கிரகதியில் இருப்பதால், சில இடையூறுகள் தொழிலிலும் வணிகத்திலும் ஏற்படலாம். உத்தியோகத்தில் உள்ளவர்கள் குழப்பமான மனநிலையில் இருப்பார்கள். மேலதிகாரிகளை அனுசரிக்காவிட்டால் சிரமப்பட வேண்டி இருக்கும். பணிச்சுமை அதிகரிக்கும். ஒருவரையொருவர் புரிந்து கொள்வதில் உள்ள இடைவெளி மன ரீதியான சிக்கல்களைத் தரும். எதிர்பார்த்த சலுகைகள் இப்பொழுது கிடைப்பதற்கு வழி இல்லை.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

வருமானம் தேவையான அளவிற்கு வரும். கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்புகள் ஏற்படும். வெளிநாட்டு வேலை சிலருக்கு கிடைக்கும். குடும்பத்துக்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு. மற்றவர்கள் வீட்டு விசேஷங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு. தொழில் வளம் அதிகரிக்கும். புதிய வேலைவாய்ப்பு உருவாகும். சுப காரியத் தடைகள் இருக்கும். உடல் ஆரோக்கியத்தில் சற்று சிரமங்கள் ஏற்படலாம். எதிர்பாராத செலவுகள் எட்டிப் பார்க்கும். புதிய கடன்கள் ஏற்பட வாய்ப்புண்டு. தொழில் மாற்றம், வீடு மாற்றம் போன்றவை நிகழலாம். ஆரோக்கிய குறைவு ஏற்படும். தந்தை, மகன் உறவுகளில் தவிர்க்க முடியாத கருத்து வேறுபாடுகள் ஏற்படும். கவனமும் விழிப்புணர்வும் தேவை.

## கடகம்

**( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

காரியத் தடைகள் விலகும். எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். புதிய வீடு, வாகன யோகம் அமையும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி உண்டு. வழிபாட்டு தலங்களுக்கு சென்று வருவீர்கள். புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பு ஏற்படும். பணவரவு தேவையான அளவிற்கு வந்துவிடும். வெளிநாட்டில் பணிபுரிபவர்களுக்கு நல்ல யோகம் உண்டு. வேலைச்சுமை, பொறுப்பு அதிகரிக்கும். சற்று கவனக்குறைவாக இருந்தால் மேலதிகாரிகள் கோபத்திற்கு ஆளாக நேரிடும். என்னதான் உழைத்தாலும் இப்போதைய கிரக சூழ்நிலையில் அவர்களை திருப்தி செய்ய இயலாது என்பதால் பொறுமை காக்கவும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பெரியவர்களின் ஆலோசனை கை கொடுக்கும். செவ்வாயும் பலம் பெற்று இருப்பதால், எடுத்த காரியங்களில் நல்ல வெற்றி கிடைக்கும். சகோதர வழியில் நன்மைகள் எதிர்பார்க்கலாம். தன வரவு நன்றாக இருக்கும். கலைஞர்கள் ஆதரவு பெறுவார்கள், எழுத்தாளர்கள் ஏற்றம் பெறுவார்கள். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இயன்றளவு வாகனங்களை இயக்கும்போது ஜாக்கிரதையாக இயக்கவும். இரவுப் பயணத்தை தவிர்க்கவும். மேலதிகாரிகளைச் சமாளிப்பது சிரமமாக இருக்கும். தேவையற்ற பகை உணர்வுகளைத் தரும்.

## கன்னி

**(உத்தரம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**

எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். பண வரவு நன்றாக இருக்கும். புதிய வாகன யோகம். புதிய வீடு கட்டும் அமைப்பு உண்டு. உழைப்பு பலனளிக்கும். சுபகாரியங்கள் தடையின்றி நடைபெறும். திருமணமான பெண்களுக்கு குழந்தை பாக்கியம் உண்டு. பதவி உயர்வு, இடமாற்றம் முதலியவை உங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்ப கிடைக்க வாய்ப்புண்டு. எத்தனை தடைகள் வந்தாலும் அவைகளை முறியடித்து விடுவீர்கள். முன்கோபத்தை குறைத்துக் கொள்ள வேண்டும். கணவன் அல்லது மனைவியின் உடல் நலத்தில் சற்று பாதிப்பு ஏற்படலாம். பிறரை தவறாக புரிந்து கொள்ளும் சூழல்கள் ஏற்படும். எனவே, நிதானத்தைக் கடைப்பிடித்து ஒரு விஷயத்தை முழுமையாக தெரிந்து கொண்டு, உங்கள் அபிப்பிராயத்தை கூறுங்கள். இல்லாவிட்டால், உங்கள் பேச்சால் சில பாதிப்புகளை எதிர் கொள்ள வேண்டி இருக்கும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

சிந்தனையில் தெளிவும் உடலில் ஆரோக்கியமும் இருக்கும். அரசாங்க காரியங்கள் சாதகமாக இருக்கும். நினைத்த காரியங்களை நிறைவேற்றும் ஆற்றலைத் தருவார். வளர்ச்சிப் பாதையில் முன்னேறுவீர்கள். சேமிப்பு உயரும். புது முயற்சிகள் வெற்றி பெறும். இடம் வாங்குவதற்காக யோசித்துக் கொண்டிருப்பீர்கள் அது நிறைவேறும் அதற்கான முயற்சியை செய்யுங்கள். வெளிநாட்டில் வேலை செய்பவர்கள் அல்லது வெளிநாட்டு வேலைக்கு முயற்சிப்பவர்களுக்கு சாதகமாக இருக்கும். வேற்று மொழிக்காரரர்கள் உதவுவார்கள். பிள்ளைகள் பற்றிய கவலை மனதை அரிக்கும். அவர்கள் செய்யும் காரியங்களை கவனித்துக் கொண்டிருங்கள். சற்று மாறுபாடாக இருந்தால், இப்பொழுதே அதற்கான நடவடிக்கையை எடுங்கள். அவர்கள் எதிர்காலம் குறித்து உறுதியான திட்டத்தை மேற்கொள்ளுங்கள். மருத்துவ செலவுகள் நீங்கள் நினைப்பதற்கு மேலாக போய்க் கொண்டிருக்கும் ஆரோக்கியத்தை பேணுங்கள்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

அரசாங்க காரியங்கள் சாதகமாக முடியும். ஐ.டி, பத்திரிகை தொழில், சோசியல் மீடியா முதலியவற்றில் பணிபுரிப்பவர்களுக்கு நல்ல முன்னேற்றம் இருக்கும். எதிர்பார்த்த அனுகூலம் கிடைக்கும். புதிய செய்திகளை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு நற்செய்திகள் வரும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறுவார்கள். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். சுய தொழில் தொடங்கும் முயற்சி பலிக்கும். அதற்கேற்ற பாகஸ்தர்கள் சேருவார்கள். சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். வங்கி கடன் முதலியவை எளிதில் கிடைக்கும். உடல் ஆரோக்கியத்திலும் தாயாரின் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்துங்கள். வீடு வாசல் முதலியவைகள் விற்பதிலும் வாங்குவதிலும் ஏமாற்றங்கள், தாமதங்கள் நிகழலாம். பூர்வ புண்ணிய பாவம் சற்று குறைகிறது.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

எல்லா விஷயத்திலும் நிதானம் தேவை. அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க வேண்டாம். பிரச்சினைகள் முடிவுக்கு வரும் சூழலில் நீங்களே புது பிரச்சினைகளை கிளப்ப வேண்டாம். உங்கள் நீண்ட நாள் ஆசைகள் தீரும். நண்பர்கள் உதவி புரிவார்கள். தொழிலில் இருந்த தேக்க நிலை மாறும் தாயாரின் உடல்நிலையில் கவனம் செலுத்துங்கள். வண்டி வாகனம் ஓட்டும்போது எச்சரிக்கையாக இருங்கள். அவ்வப்பொழுது பழுது நீக்கி சரி பார்த்துக் கொள்ளுங்கள்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

குடும்பத்தில் சின்ன சின்ன குழப்பங்களும் பிரச்சினைகளும் இருக்கவே செய்யும். இப்போதைக்கு அது குறித்த கவலையோ வேதனையோ அடைய வேண்டாம். நீங்களாக துருவித் துருவி பிரச்சினையைப் பெரிதாக்க வேண்டாம். அமைதியாக விட்டு விடுங்கள் அது தானாகவே சரியாகும். வியாபாரம் உத்தியோகம் சிறப்பாகவே இருக்கும். சுபகாரியங்கள் தடையின்றி நடக்கும். சகோதர உதவிகள் தாராளமாகக் கிடைக்கும். புதனும் சுக்கிரனும் ஏதோ ஒரு விதத்தில் உங்களுக்கு உதவி புரிவார்கள். தாய்வழி சொந்தங்களும் மனைவி சொந்தங்களும் உங்களுக்கு ஆறுதலாக இருக்கும். இப்போதைக்கு பெரிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம்.

## கும்பம்

**( அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேன்மை கிடைக்கும். துணிச்சலான முடிவினை எடுப்பீர்கள். நண்பர்கள் ஆதரவு தருவார்கள். லாபம் அதிகரிக்கும். ஏழரைச் சனி வக்கிரகதியில் இருப்பதால், எதிர்பாராத சில நன்மைகளை அடையலாம். அவ்வப்பொழுது கருத்து வேற்றுமைகள் வர வாய்ப்புண்டு. அதற்கு உறுதுணையாக சூரியனும் சனியும் ஒருவரை ஒருவர் சம சப்தம பார்வையில் பார்த்துக் கொள்கிறார்கள். எனவே கவனம் நிதானம் தேவை.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

பெரிய தொந்தரவுகள் தற்காலிகமாக இருக்காது. அரசாங்க உதவிகள் உண்டு. வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும். போட்டித் தேர்வுகளில் வெற்றி கிடைக்கும். சுபகாரியங்கள் நடக்கும் வாய்ப்புண்டு. எதிர்காலம் கருதி எடுத்த முயற்சிகள் இப்போதைக்கு சற்று தாமதம் ஆனாலும் வெற்றி கிடைக்கும். தன வரவுகள் சற்று குறையும் நிலையில் இருப்பதால், செலவுகளை கவனமாகச் செய்ய வேண்டும் சகோதரர்களிடம் கருத்து வேறுபாடு வேண்டாம். துணிச்சலோடு காரியங்களைச் செய்வீர்கள்.




### ஈழத் தமிழர் நாடகக் கலை

# விரிவாகவும் ஆராய்ச்சி நெறியுடனும் முதன்முதலில் எழுதிய சொக்கன்



சொக்கன் என எழுத்துலகில் பிரபலம் பெற்ற க.சொக்கலிங்கத்தின் ஈழத்து நாடக வளர்ச்சி நூலின் அணிந்துரையில் பேராசிரியர் கலாநிதி சு.வித்தியானந்தன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"ஈழத்து தமிழர் கலைகளுள் ஒன்றாகிய நாடகக்கலை பற்றி விரிவாகவும் ஆராய்ச்சி நெறியுடனும் இதுவரை எவரும் நூலாக எழுதவில்லை. அக்குறையை நீக்குமுகமாகத் திரு. க. சொக்கலிங்கம் அவர்களின் இந்நூல் வெளிவருகிறது. அந்த வகையிலே இந்நூலுக்கு ஒரு சிறப்புண்டு. இலங்கைப் பல்கலைக்கழகத்தில் முது கலைமாணிப்பட்டத்திற்காக தாய்மொழிமூலம் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரையில் இதுவே முதன் முறையாக நூல்வடிவம் பெறுகிறது.

சொக்கலிங்கம் முறையான ஆய்வு நெறியிலே நின்று இந்நூலைப் படைத்துள்ளார் என்பதனை இவ் வாய்வுக்கட்டுரையினை அவர் எழுதிக் கொண்டிருக்கும் காலத்திலேயே நான் உணர்ந்துள்ளேன. நாடகம் பற்றிப் பொதுவாகவும் ஈழத்துத் தமிழ்நாடகம் பற்றிச் சிறப்பாகவும் தொடர்பான பல நூல்களை அவர் படித்தது மட்டுமன்றி, அவற்றுடன் தொடர்புள்ள விற்பன்னர்களை நேரடியாகச் சந்தித்தும் தம் கருத்துக்களை வளர்த்துள்ளார். அவர் ஒவ்வொரு இயலின் முடிவிலும் கொடுக்கும் அடிக்குறிப்புகளைக் கூர்ந்து நோக்குமிடத்து இவ்வுண்மை புலனாகும்"

சொக்கன்; ஆவரங்காலில் 02.06.1930 அன்று பிறந்தவர். இவரது தந்தை பெயர் கந்தசாமிச்செட்டி. தாயார் பெயர் மீனாட்சி. சொக்கனுக்கு ஒரு வயதானபோது தந்தையை இழந்த நிலையில் கல்வி பயிலுவதற்காக தாயாரால் யாழ்ப்பாணம் நீராவியடிக்கு அழைத்து வரப்பட்டார்.

யாழ். இந்துக்கல்லூரி ஆரம்பப் பாடசாலை, நாவலர் பாடசாலை, ஸ்ரான்லிக் கல்லூரி, பலாலி ஆசிரிய கலாசாலை, பேராதனை இலங்கைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவை சொக்கனைக் கல்வியாளராக உருவாக்குவதில் பெரும் பங்குகொண்டன. பண்டிதர், வித்துவான், பட்டதாரி, முதுகலைமாணி, கலாநிதி என அவர் தனது கல்விப் புலமையை விரிவாக்கிக் கொண்டார்.

நவீன தமிழிலக்கியத்தில் சொக்கனின் பேனை தடம்பதிக்காத துறைகள் எதுவுமே இல்லை. சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, கட்டுரை, விமர்சனம், சமயம், வானொலிச் சித்திரங்கள், பாடநூல்கள், பாடநூல் வழிகாட்டிகள், மொழி பெயர்ப்புகள் எனப் பல்துறைகளிலும் அவர் ஆழமாகவும் அகலமாகவும் தடம்பதித்தார்.

இவர் 14ஆவது வயதில் எழுதிய முதற் சிறுகதை 'தியாகம்" 1944இல் வீரகேசரியில் பிரசுரமானது. அதனைத் தொடர்ந்து இவர் எழுதிய 'வேதாந்தி" என்ற விவரணச் சித்திரம் ஈழகேசரியில் பிரசுரமாகியது.

அடுத்து மறுமலர்ச்சி சஞ்சிகையில் குப்பையிலே மாணிக்கம், பொன் பூச்சு ஆகிய சிறுகதைகள் வெளியாகின.

இக்காலகட்டத்தில் நாடகம் எழுதும் முயற்சியிலும் சொக்கன் ஈடுபட்டார். முதலில் ஷேக்ஸ்பியர் எழுதிய வெனிஸ் வர்த்தகன் என்ற கதையைத் தழுவி நாடகமாக்கினார். அந்த நாடகத்தின் மூலம் சொக்கன் நாடகாசிரியரானார்.

சொக்கன் தனது வாழ்நாளில் 200 சிறுகதைகள்வரை எழுதியுள்ளார். அவரது முதலாவது சிறுகதைத் தொகுதியான கடல் 1972ஆம் ஆண்டிற்கான இலங்கை சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது. 1998 – 2004 காலப்பகுதியில் ஆக்கப்பட்ட 10 சிறுகதைகள் அடங்கிய தொகுதி கிழவரும் கிழவியும் என்பதாகும்.

1987இல் நடைபெற்ற இந்திய அமைதிப்படையின் இராணுவத் தாக்குதல்களை பின்னணியாகக் கொண்டு முதன்முதலில் சிறுகதை புனைந்தவர் சொக்கனே. (ஆலயமணி ஆனி 1988 இதழில், அழைப்பு என்ற மகுடத்தில் இக்கதை பிரசுரமானது.)

சொக்கனின் கவிதைகள் மரபுவழிக் கவித்துவ ஆற்றலும் ஓசைச்சிறப்பும் கற்பனையும் நிறைந்தவை. வீரத்தாய், நசிகேதன், முன்னீச்சர வடிவாம்பிகை அந்தாதி, நல்லூர் நான்மணிமாலை, அப்பரின் அன்புள்ளம் நெடுப்பா3, நல்லூர் கந்தன் திருப்புகழ், சைவப் பெரியாரின் சால்பை உரைத்திடுவோம் என்பன இவரது கவிதை நூல்களாகும். தமிழும் சைவமும் சொக்கனின் கவிதைகளின் உள்ளடங்கல்களாக அமைந்தன.

சொக்கனின் நாடக நூல்களாக, சிலப்பு பிறந்தது, சிங்க கிரிக் காவலன், தெய்வப்பாவை மாருதப்புரவிகவல்லி, மானத் தமிழ்மறவன் ஆகியவை வெளிவந்துள்ளன. இந்த நாடகங்கள் நடிப்பதற்கும் படிப்பதற்கும் ஏற்றவை.

20க்கும் மேற்பட்ட நாடகங்களை சொக்கன் எழுதியுள்ளார். இவருடைய நாடகங்களில் பல இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டன.

1960இல் சிலம்பு பிறந்தது என்ற நாடகப் பிரதியும் 1961இல் சிங்ககிரிக் காவலன் என்ற நாடகப் பிரதியும் இலங்கை கலைக்கழகத் தமிழ் நாடகக் குழுவின் பரிசினைப் பெற்றன.

ஈழத்து நவீன நாவல் இலக்கிய வரலாற்றில் சுதந்திரத்திற்குப் பின் சாதியத்தினைக் கருவாகக் கொண்டு முதன் முதலாக நாவல் படைத்த பெருமை சொக்கனுக்கு உரியது. அவர் எழுதிய சீதா அத்தகைய சிறப்பினைப் பெற்ற நாவலாகும். இவர் எழுதிய முதலாவது நாவல் மலர்ப்பலி 1949இல் ஈழகேசரியில் தொடராக வெளிவந்தது. செல்லும்வழி இருட்டு, ஞானக்கவிஞன், சலதி என்பன சொக்கன் படைத்தளித்த ஏனைய நாவல்களாகும். 'சலதி" இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசினை 1987இல் பெற்றுக்கொண்டது.

வங்க நாவலான சத்தியஜித்ரேயின் பத்திக்சந்த் சொக்கனால் தமிழாக்கப்பட்டது. 'சொக்கனது மொழிபெயர்ப்பு முயற்சியாக அமையும் பத்திக்சந்த் ஈழத்துச் சிறுவர் இலக்கியத்துக்கு அவர் செய்த முக்கிய பங்களிப்பாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார் கலாநிதி நா. சுப்பிரமணியன்.

சொக்கன் எழுதிய கட்டுரைகள் ஏராளமானவை. அவரது கட்டுரைத் தொகுப்புக்களாகப் பத்துத் தொகுதிகள் வரையில் வெளிவந்துள்ளன. அவை, பொதுவிடயங்கள், ஆய்வுகள், பாடநூல் வழிகாட்டிகள், சமயக் கட்டுரைகள், வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் எனப் பல வகைப்பட்டன.






ஈழத்து எழுத்தாளர்களில் அதிக நூல்களை எழுதியவர்களுள் ஒருவராக சொக்கன் கணிக்கப்படுகிறார். இவர் எழுதிய இலக்கணத் தெளிவு மாணவர்கள் தமிழ் இலக்கண விதிகளை இலகுவான முறையிலே கற்பதற்கு உதவக்கூடியநூல் எனப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

சொக்கன் தொழில் முறையில் ஆசிரியராக (1952 –1972) அதிபராக (1973–1982) இலங்கை கல்வி நிர்வாக சேவையாளராக, கொத்தணி அதிபராக (1982–1990) விளங்கியுள்ளார். அரசினர் பாடநூல் வெளியீட்டு ஆலோசனைக்குழு உறுப்பினராகக் கடமையாற்றி தமிழ், சைவநெறி ஆகிய துறைகளுக்கு அளப்பரிய பங்காற்றியவர். சைவநெறி பத்தாம் பதினோராம் பாடநூல்களின் எழுத்தாளராகவும் இருந்துள்ளார்.

இடையாற்று விரிவுரையாளராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை (1976–1979) பலாலி ஆசிரிய கலாசாலை (1982–1983) என்பவற்றிலும் இடைவரவு விரிவுரையாளராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் (1992 –1993) பணிபுரிந்துள்ளார்.

பொதுச் சேவைகளில் 1959ஆம் ஆண்டு காலகட்டத்தில் யாழ்.தமிழ் எழுத்தாளர் சங்கம் என்னும் இலக்கிய நிறுவனத்துடனும், 1964ஆம் ஆண்டில் இலங்கை கம்பன் கழகத்துடனும், 1965–1974 காலப்பகுதியில் அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்துடனும், நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்துடனும், அகில இலங்கைத் திருக்குறள் மன்றத்துடனும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையுடனும், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடனும், நாயன்மார் கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்துடனும், முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்துடனும் அகில இலங்கைத் திருமுறை மன்றத்துடனும் இதுபோன்ற பல நிறுவனங்களுடனும் தொடர்புகொண்டு சொக்கன் பணியாற்றியுள்ளார்.

'சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்த சொக்கன் இலங்கையில் பல்வேறு பாகங்களிலும் இடம்பெறும் சமய இலக்கிய விழாக்களில் கலந்துகொண்டு தமது கருத்துக்களை வெளியிடுவார்.

காலையில் முற்போக்கு இலக்கியக் கூட்டத்தில் பேசும் சொக்கன் மாலையில் சமயச் சொற்பொழிவாற்றுவார்" எனக்குறிப்பிட்டுள்ளார் முதுபெரும் எழுத்தாளரான முல்லைமணி.

சொக்கன் மாதம் ஒரு நூல் அல்லது வாரம் ஒரு நூல் எழுதும் ஆற்றலும் அமைதியும் வாய்க்கப்பெற்றவர். அவர் இரவிலே வானத்தைப்பார்த்து சமயக்கட்டுரைகள் எழுதிவிட்டு காலையில் பூமியைப்பார்த்து முற்போக்குக்கதைகள் எழுதுபவர்" எனக்குறிபிட்டுள்ளார் பேராசிரியர் நந்தி. (மல்லிகை மார்ச் 1980 அட்டைப் படக்கட்டுரை)

சொக்கன், ஆராவமுதன், அடியவன், வேனிலான், தேனீ, சுடலையூர் சுந்தரன், பொய்யாமொழியார், சோனா, திரிபுராந்தகன், கன்றுக்குட்டி, ஈழத்துப் பேய்ச்சாத்தன், குறளன், ஞானம், ஜனனி, சாம்பவன், சட்டம்பியார், எதார்த்தன், பாலன் ஆகிய புனைப்பெயர்களில் எழுதியுள்ளார்.

சொக்கனது இலக்கியப் பணிகளை பல்வேறு நிறுவனங்கள் விருதுவழங்கிக் கௌரவித்துள்ளன. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை 'தமிழ்மாமணி' என்ற பட்டத்தையும் இந்து கலாசார அமைச்சு, இலக்கியச் செம்மல்' என்ற பட்டத்தினையும் நல்லூர் தமிழிசைச் சபை 'குகஸ்ரீ' என்ற பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 'இலக்கியகலாநிதி' என்ற பட்டத்தையும் இலங்கை அரசு சாஹித்தியரத்னா' விருதையும் வழங்கிக் கௌரவித்தன.

மரபும் நவீனமும் இணைந்த இலக்கிய ஆளுமை மிக்க சொக்கன் 02.10.2004 அன்று அமரரானார்.

# மக்கள் வங்கி

## கேள்விமனு சமர்ப்பிப்பதற்கான அழைப்பு

**இலக்கம் 67, சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 இடத்தில் அமைந்துள்ள, மக்கள் வங்கி கட்டிடத்தின் உள்ளக மற்றும் வெளிப்புற நிர்மாணப் பணிகள்**

**கேள்விமனு இலக்கம்: 027/2024**

தலைவர் - கட்டிட பொறியியல் சேவை, மக்கள் வங்கி, தலைமை அலுவலகம், பொறியியல் சேவை திணைக்களம், 6ஆவது மாடி, 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 இனால் கீழ் விபரிக்கப்பட்டவாறு "இலக்கம் 67, சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 இடத்தில் அமைந்துள்ள, மக்கள் வங்கி கட்டிடத்தின் உள்ளக மற்றும் வெளிப்புற நிர்மாணப் பணிகளுக்காக" முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனுக்கள் கோரப்படுகின்றன. அதற்காக மதிப்பிடப்பட்ட தொகை 55.0 மில்லியன் ரூபா. (பெறுமதி சேர் வரியுடன்).

இந்த உள்ளக மற்றும் வெளிப்புற நிர்மாணப் பணிகளின் கீழ் முன்மொழியப்பட்ட மக்கள் வங்கி கட்டிடத்தின் கொங்கிறீட் வேலை, தச்சு வேலை, கொத்து வேலை, டைல் வேலை, அலுமினியம் பிரித்தல் வேலை, அலுமினியம் கதவுகள், ஜன்னல், சுவர் மீது வர்ணம் பூசுதல், உட்கூரை, மின் விளக்குகள் பொருத்துதல் மற்றும் மற்ற வேலைகளைக் கொண்டிருக்கும்.

1. நிர்மாணக் காலம் 120 நாட்கள்.
2. கேள்விமனு கோரல் தேசிய போட்டிரீதியான கேள்விமனு நடைமுறைக்கு அமைய மேற்கொள்ளப்படும்.
3. ஒப்பந்தங்களை வழங்குவதற்கு கருத்தில் கொள்ளும் நோக்கில் தகுதி பெறுகின்ற கேள்விமனுதாரர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும், அதன் C4 தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் கட்டிட நிர்மாணத்திற்காக செல்லுபடியான பதிவை கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தம் வழங்குவதற்கு தகுதி பெறுவதற்கான தேவை பின்வருமாறு.
   - ❖ கடந்த 5 ஆண்டுகளுக்குள் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களின் சாதாரண வருடாந்த பெறுமதி குறைந்தபட்சம் 165 மில்லியன் ரூபா (ரூபா 165,000,000.00) இருத்தல் வேண்டும்.
   - ❖ கடந்த 5 ஆண்டு காலத்திற்குள் பிரதான ஒப்பந்ததாரராக 55 மில்லியன் ரூபா பெறுமதி கொண்ட இதற்கு இணையான மற்றும் சிக்கற்பாடுடைய கட்டிடம் ஒன்றை 04 மாத காலத்திற்குள் வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் அல்லது 55 மில்லியனுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய கட்டிடம் ஒன்றை அதற்கு சமமான காலத்திற்குள் பூர்த்தி செய்திருத்தல்.
   - ❖ இந்த ஒப்பந்தத்தின் கீழ் கிடைக்க முடியுமான திரவ சொத்துக்களின் குறைந்தபட்ச தொகை மற்றும்/ அல்லது அங்கீகரிக்கப்பட்ட கடன் வசதிகள் மற்ற ஏனைய ஒப்பந்தக் கடப்பாடுகள் மற்றும் முற்கொடுப்பனவு தவிர்த்து மொத்த இருப்பு 14.0 மில்லியன் ரூபாவுக்கு குறையாதிருத்தல் வேண்டும்.
5. ஆர்வம் காட்டுகின்ற ஒப்பந்ததாரர்களுக்கு கொழும்பு 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, மக்கள் வங்கி தலைமை அலுவலகக் கட்டிடத்தின் 06 ஆவது மாடியில் பொறியியல் சேவை பிரிவின் தலைவர் - கட்டிட பொறியியல் சேவையிடம் இருந்து மேலதிக விபரங்களை (தொலைபேசி இலக்கம் 0112-481373/ தொலைநகல் இலக்கம் 011-2341591) பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு, 2024.09.04 ஆம் திகதி தொடக்கம் 2024.09.25 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை கடமை நாட்களில் கேள்விமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
6. ஆர்வம் காட்டுகின்ற கேள்விமனுதாரர்கள் மேலுள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து மற்றும் பன்னிரண்டாயிரம் (12,000/=) மீளளிக்கப்படாத கட்டணம் ஒன்றை பணமாக செலுத்தி 2024.09.04 ஆம் திகதி தொடக்கம் 2024.09.25 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை கடமை நாட்களில் முழுமையான கேள்விமனு ஆவண தொகுதி ஒன்றை கொள்வனவு செய்ய முடியும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விமனு நகல் பிரதி ஒன்றுடன் இடது பக்க மேல் மூலையில் "இலக்கம் 67, சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 இடத்தில் அமைந்துள்ள, மக்கள் வங்கி கட்டிடத்தின் உள்ளக மற்றும் வெளிப்புற நிர்மாணப் பணி" என்று குறிப்பிட்டு வெவ்வேறு உறைகளில் இட்டு முத்திரை இட்டு மேலுள்ள முகவரியின் தலைவர் - கட்டிட பொறியியல் சேவை, பொறியியல் சேவை பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு அல்லது பதிவுத் தபாலில் 2024.09.26 ஆம் திகதி பி.ப. 3.00க்கு முன்னர் தலைவர் - கட்டிட பொறியியல் சேவை, மக்கள் வங்கி, தலைமை அலுவலகம், 06ஆவது மாடி, இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு வகைசெய்தல் வேண்டும். தாமதித்து கிடைக்கின்ற கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும். கேள்விமனுக்கள் மூடப்பட்ட உடன் திறக்கப்படும்.
8. கேள்விமனுக்கள் மூடப்பட்ட திகதியில் இருந்து 2024.12.26 ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
9. அனைத்து கேள்விமனுக்களும் ரூபா ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கான (550,000/=) விலைமனு பிணை ஒன்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனு பிணை மக்கள் வங்கி தவிர்த்து இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு வர்த்தப வங்கி ஒன்றினால் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதோடு, கேள்விமனுக்கள் மூடப்பட்ட திகதியில் இருந்து 2024.01.23 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
10. கேள்விமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024.09.11 ஆம் திகதி மு.ப. 10.00 க்கு பொறியியல் சேவை பிரிவு, மக்கள் வங்கி, 06ஆவது மாடி, 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02இல் இடம்பெறும்.

**தலைவர் - கட்டிட பொறியியல் சேவை**
**மக்கள் வங்கி,**
**பொறியியல் சேவை பிரிவு,**
**தலைமை அலுவலகம், 06ஆவது மாடி,**
**75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு 02.**

1961 PEOPLE'S BANK
Pride of the Nation

---

சுத்திகரிப்புப் பிரிவு (Cleaning Crew) இற்கு அனுபவமுள்ள ஆண்/ பெண் ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். வயது 25 - 40 இற்கு இடைப்பட்ட நபர்கள் விண்ணப்பியுங்கள்.

**ஆர்.ஐ.எல். புரொபர்டி பி.எல்.சீ**
**இல. 33, முதலாம் மாடி, பார்க்லன்ட், பார்க் வீதி, கொழும்பு - 02**

**தொலைபேசி இலக்கம் : 0776653447**

**மின்னஞ்சல் முகவரி : careers@rilproperty.lk**


---

# போர்ட் சிட்டி பிபிஓ

## வேலை வாய்ப்பு : ஹிந்தி பேசும் டெலிமார்கெட்டிங் அசோசியேட்

மைக்ரோசா∴ப்ட் ஆபிஸில் சிறந்த தகவல் தொடர்பு திறன் மற்றும் தேர்ச்சியுடன் ஹிந்தி பேசும் டெலிமார்க்கெட்டிங் அசோசியேட்களை நாங்கள் தேடுகிறோம். பதவி USD இல் வழங்கப்படும் சம்பளத்தை வழங்குகிறது. ஆரம்ப சம்பளம் 250 USD. கால் சென்டர் அல்லது வாடிக்கையாளர் சேவையில் முந்தைய அனுபவம் பயனுள்ளதாக இருக்கும்.

**விண்ணப்பிக்க, careers@portcitybpo.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் CVஐ அனுப்பவும்**




---

# வ/ப தபால் மற்றும் டெலிகொம் ஊழியர் கூட்டுறவு வங்கிச் சங்கம்

## மகா சபை பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் வாக்கெடுப்பு - 2024

## வாக்களிப்பதற்கு தகைமையுள்ள அங்கத்தவர் பெயர் பட்டியலை காட்சிப்படுத்தல்

இக் கூட்டுறவுச் சங்கத்தில் எதிர்வரும் மூன்று வருடங்களுக்காக (2024 - 2027) மகா சபை பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் பிரதேச வாக்கெடுப்பிற்காக கீழ்க்காணும் வாக்கெடுப்பு நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

மேற்படி நிலையங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள வாக்களிப்பதற்கு தகைமையுள்ள அங்கத்தவர்களின் பெயர் பட்டியல், கீழ்க்காணும் நிலையங்களில் 2024.09.01 முதல் நிலையத்தில் வாக்கெடுப்பு நடைபெறும் வரை காட்சிப்படுத்தப்படும் அவ் ஆவணங்களில் குறிப்பிட்டப் பெயர்கள் சம்பந்தமாக ஏதேனும் மேன்முறையீடுகள் அல்லது எதிர்ப்புக்கள் இருப்பின் 2024.09.30 அல்லது அத்தினத்திற்கு முன்பு செயலாளர், வ/ப தபால் மற்றும் டெலிகொம் ஊழியர் கூட்டுறவுச் சங்கம், த.பெ. 569, லோட்டஸ் வீதி, கொழும்பு -01 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

வாக்கெடுப்பு நடைபெறும் திகதி மற்றும் நேரம் விரைவில் அறிவிக்கப்படும்.

| நிலைய இல. | வாக்கெடுப்பு நிலையம் | நிலைய இல. | வாக்கெடுப்பு நிலையம் |
|---|---|---|---|
| 1 | கண்டி தபாலகம் | 29 | களனி தபாலகம் |
| 2 | பேராதனை தபாலகம் | 30 | மீரிகம தபாலகம் |
| 3 | கம்பளை தபாலகம் | 31 | நீர்கொழும்பு தபாலகம் |
| 4 | நாவலப்பிட்டிய தபாலகம் | 32 | வேயங்கொட தபாலகம் |
| 5 | நுவரெலியா தபாலகம் | 33 | வவுனியா தபாலகம் |
| 6 | மாத்தளை தபாலகம் | 34 | பதுளை தபாலகம் |
| 7 | ஹட்டன் தபாலகம் | 35 | மஹியங்கனை தபாலகம் |
| 8 | அநுராதபுரம் தபாலகம் | 36 | வெலிமட தபாலகம் |
| 9 | பொலன்னறுவ தபாலகம் | 37 | பண்டாரவளை தபாலகம் |
| 10 | கேகாலை தபாலகம் | 38 | மொனராகலை தபாலகம் |
| 11 | மாத்தறை தபாலகம் | 39 | காலி தபாலகம் |
| 12 | தங்கல்ல தபாலகம் | 40 | பத்தேகம தபாலகம் |
| 13 | அக்குரஸ்ஸ தபாலகம் | 41 | அம்பலாங்கொட தபாலகம் |
| 14 | திஸ்ஸமஹாராம தபாலகம் | 42 | ஹோமாகம தபாலகம் |
| 15 | மட்டக்களப்பு தபாலகம் | 43 | கல்கிசை தபாலகம் |
| 16 | அம்பாறை தபாலகம் | 44 | பொரளை தபாலகம் |
| 17 | திருகோணமலை தபாலகம் | 45 | ஶ்ரீ ஜயவர்தனபுர தபாலகம் |
| 18 | களுத்துறை தபாலகம் | 46 | அவிசாவளை தபாலகம் |
| 19 | மத்துகம தபாலகம் | 47 | தபால் தலைமையகம் |
| 20 | ஹொரண தபாலகம் | 48 | மத்திய தபால் பரிவர்த்தனை |
| 21 | குருநாகல் தபாலகம் | 49 | டெலிகொம் தலைமையகம் (தபால் மற்றும் டெலிகொம் சங்க அலுவலகம்) |
| 22 | கல்குடுவ தபாலகம் | 50 | டெலிகொம் நாராஹேன்பிட்ட (OPMC) |
| 23 | சிலாபம் தபாலகம் | 51 | டெலிகொம் பாணந்துறை (OPMC) |
| 24 | புத்தளம் தபாலகம் | 52 | டெலிகொம் கம்பஹா |
| 25 | இரத்தினபுரி தபாலகம் | 53 | கிளிநொச்சி தபாலகம் |
| 26 | பலாங்கொடை தபாலகம் | 54 | பாணந்துறை தபாலகம் |
| 27 | எம்பிலிப்பிட்டிய தபாலகம் | 55 | சிரேஷ்ட பரிசீலனைப் பிரிவு |
| 28 | கம்பஹா தபாலகம் | | |

**ஏ.சி.பீ. ஜயங்கா**
**பிரதம வாக்கெடுப்பு அதிகாரி,**
**கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்,**
**இல. 330, யூனியன் பிளேஸ்,**
**கொழும்பு -02.**

---

UCSC

# கொழும்பு பல்கலைக்கழக கணனி நிலையம்

## மாணவர் விடுதிக்காக (ஆண்கள்) கட்டிடமொன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் – 2024/2026

**(Tender No. UCSC/NCB/APB/2024/004)**

01. கொழும்பு பல்கலைக்கழக கணனி நிலைய திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவரினால், மாணவர் (ஆண்கள்) தங்கும் விடுதியொன்றாக உபயோகிப்பதற்கு பொருத்தமான கட்டிடமொன்றை வாடகைக்கு/குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்காக கட்டிட உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. இது தொடர்பாக ஆர்வம் காட்டும் கட்டிட உரிமையாளர்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள சிக்கலற்ற உரிமைத்துவத்தைக் கொண்டுள்ள கட்டிடம் தொடர்பாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். குத்தகைக் காலம் 02 வருடங்களாகும்.

    i. கொழும்பு பல்கலைக்கழக கல்வி நிலையத்திலுள்ள குறைந்தபட்சம் 35 மாணவர்கள் (ஆண்கள்) தங்க முடியுமான கட்டிடமொன்றாக இருத்தல் வேண்டும். மாணவர்களின் அறைகளுக்கு புறம்பாக விடுதிப் பொறுப்பாளர்களுக்காக இரண்டு அறைகளும் சமையலறையொன்றும் அமைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் நாளாந்த கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இடவசதிகள் இருத்தல் வேண்டும்.
    ii. கொழும்பு பல்கலைக்கழ க கணனி நிலையத்திலிருந்து 15 கி. மீற்றருக்கு மேற்படாத தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
    iii. கொழும்பு பல்கலைக்கழக கல்வி நிலையத்திற்கு நேரடியாக பிரவேசிக்கும் முகமாக பஸ் வீதி வசதியைக் கொண்டுள்ள கட்டிடத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.
    iv. போதியளவு நீர், மின்சாரம், சுகாதார வசதிகளைக் கொண்டமைந்ததாக இருத்தல் வேண்டும்.
    v. கட்டிடத்தை சுற்றி மதில் மற்றும் கேட் இருக்க வேண்டியதுடன், பாதுகாப்பான சூழலில் அமைந்திருத்தல் வேண்டும்.
    vi. விடுதி இடப்பரப்பிற்கான தெளிவான மற்றும் சிக்கலற்ற நுழைவுப் பாதையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    vii. கழிவு நீரகற்றும் முறைமை சரியாக தொழிற்படும் மட்டத்திலும், போதுமான கொள்ளளவு வசதியையும் கொண்டிருத்தல் வேண்டும்.
    viii. கட்டிடமானது, சுத்தமான மற்றும் முறையாக அமைக்கப்பட்ட வீட்டுத்தோட்டமொன்றில் அமைந்திருத்தல் வேண்டும்.
    ix. நாளாந்த குப்பைக் கூழங்களை அப்புறப்படுத்துவதற்கு சரியான வழிமுறையொன்று இருத்தல் வேண்டும்.

03. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் கீழாக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
இது தொடர்பாக ஆர்வங்காட்டும் கட்டிட உரிமையாளர்கள் மீளளிக்கப்படாத 1,000.00 ரூபா வைப்பை மக்கள் வங்கி, திம்பிரிகஸ்யாய கிளையில் பேணப்படும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி நிறுவனத்திற்குரித்தான 086-1001-2-1190316 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் விலைமனுக்கோரும் குறித்த ஆவணங்களை, கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி நிறுவன கல்வி மற்றும் வெளியீட்டுப் பிரிவிலிருந்து 2024-09-02ஆம் திகதி முதல் 2024-09-19ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இரண்டு பிரதிகளாக 2024-09-19ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்வி மற்றும் வெளியீட்டுப்பிரிவு, கொழும்பு பல்கலைக்கழக கணனி நிலையம், இல. 35, ரீட் மாவத்தை, கொழும்பு - 07 என்ற முகவரிக்கு நேரில் கொண்டுவந்து, அந்த பிரிவிலுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில், "மாணவர் விடுதியொன்றுக்காக கட்டிடமொன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் - 2024/2026" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

04. இந்த விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்களுக்குச் செல்லுபடியாகும்.

05. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-09-19ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு சிரேஷ்ட உதவிப் பதிவாளரினால் கல்வி மற்றும் வெளியீட்டுப் பிரிவில் திறக்கப்படும் என்பதுடன், இந்நிகழ்வில் விலைமனுக்களைச் சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம். தாமதமாகிக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பின்வரும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொள்வதன் மூலம், மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

    தொ.பே. 0112589123, 0112581245 (நீடிப்பு: 8995)

    பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்/பெறுகைக்குழு**
**கொழும்பு பல்கலைக்கழக கணனி நிலையம்,**
**இலக்கம் 35, ரீட் மாவத்தை, கொழும்பு -07.**
2024-09-01.

---

# விலைக்கோரல்களுக்கான அழைப்பு

## கல்வி அமைச்சு

## அடிப்படை கற்கைநெறிகளுக்கான தேசிய நிறுவகம்

2024 செப்டம்பர் 1 ஆம் திகதியிலிருந்து 2024 செப்டம்பர் 24 ஆம் திகதியன்று வரையும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றுள்ள தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பின்வரும் ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்காக கண்டி, ஹந்தான வீதி, அடிப்படை கற்கைநெறிகளுக்கான தேசிய நிறுவக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விக்கோரல்கள் அழைக்கப்படுகின்றன.கேள்விக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான கேள்விக்கோரல் நடைமுறையின் கீழ் நடத்தப்படுவதுடன் கேள்விக்கோரல்களை மதிப்பீடு செய்யும் போது ஒப்பந்தக்காரர்களின் பிராந்திய முன்னுரிமை பரிசீலிக்கப்படும். (2016/iii என்ற அரச நிதி சுற்றறிக்கைக்கு இசைவானது)

| ஒப்பந்தத்தின் பெயர் | ஒப்பந்த இலக்கம் | பெசேவ மற்றும் இடைநிகழ்வுகள் நீங்கலாக பொறியியலாளரின் மதிப்பீட்டின் பெறுமதி (மில்.ரூ.) | தேவைப்படும் CIDA தரம் மற்றும் துறை(கட்டிட வேலைகள்) | நிர்மாணக் காலம் (நாட்களில்) | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | கேள்விக் கோரல் கட்டணம் (மீளளிக்கப் படாதது) ரூபா |
|---|---|---|---|---|---|---|
| நிருவாக கட்டிட (கூரை வேலைகள்) | NIFS/ CONS/2024-01 | 42.0 | சி-4/சி-5 | 240 | 630,000.00 | 10,000.00 |
| பழைய கட்டிடம் (ஆய்வுகூட மின்னியல் வேலைகள்) | NIFS/ CONS/2024-02 | 68.0 | ஈஎம்1 | 270 | 1,020,000.00 | 15,000.00 |
| பழைய கட்டிடம் (ஆய்வுகூட சிவில் வேலைகள்) | NIFS/ CONS/2024-03 | 23.0 | சி5/சி6 | 210 | 345,000.00 | 7,500.00 |

1. எதிர்பார்க்கப்படும் கேள்விதாரரில் CIDA உடனான ஆகக்குறைந்த பதிவையும் பதவி நீக்கம் செய்யப்படாதவர்கள் மேலேயுள்ள கேள்விக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.
2. கெள்விதாரர் 5 மில்லியனுக்கு மெற்பட்ட சிவில் ஒப்பந்தங்களுக்காக 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் (இல. 400, டி.ஆர் விஜயவர்தன மாவத்தை, கொழும்பு-10) பதிவுச் சான்றிதழானது கேள்விக்கோரலுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
3. கடந்த ஐந்து வருடங்களில் ஒப்பந்தக்காரர் இதற்கு இயைபுள்ள பெறுமதியிலும் சிக்கற்தன்மையிலும் ஆகக்குறைந்தது இரு ஒப்பந்தங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
4. 2024 செப்டம்பர் 01 ஆம் திகதியிலிருந்து 2024 செப்டம்பர் 24 ஆம் திகதி வரையும் அலுவலக நேரங்களான மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் **NIFS** இன் கணக்காளரிடம் ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், நிருவாக பிரிவிலிருந்து கேள்விக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். 2024 செப்டம்பர் 01 ஆம் திகதியிலிருந்து 2024 செப்டம்பர் 24 ஆம் திகதி வரையும் அலுவலக நேரங்களில் கேள்விக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
5. முறையாக பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விக்கோரல் ஆவணங்கள் 2024 செப்டம்பர் 25 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, அடிப்படை கற்கைநெறிகளுக்கான நிறுவகம், ஹந்தான வீதி, கண்டி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது NIFS இன் பணிப்பாளரின் குழு அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும்.
6. கேள்விதாரர் கேள்வியின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை இரு தனியான உறைகளில் சேர்க்கப்பட்டு அவைகளில் 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதியென' அடையாளமிடப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை அடக்கியுள்ள இவ்விரண்டு உறைகளும் தனியொரு உறையில் உட்சேர்க்கப்பட்டு இயைபுள்ள ஒப்பந்தத்தின் பெயர் அதன் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும். 081-2232002 என்ற இலக்கத்தினூடாக மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.
7. கேள்விகளின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது கேள்விக்கோரல்களை திறக்கும் திகதியிலிருந்து 91 நாட்கள் என்பதுடன் கேள்விப்பிணையின் செல்லுபடியாகும் காலமானது 2025 ஜனவரி 12 ஆம் திகதிவரையும் இருத்தல் வேண்டும்.
8. கேள்விக்கோரல்களின் முன்னோடிக் கூட்டமானது 2024 செப்டம்பர் 12 ஆம் திகதியன்று NIFS இன் பணிப்பாளரின் குழு அறையில் நடைபெறும்.
   **NIFS/CONS/2024 – 01 - at 10.00 a.m.**
   **NIFS/CONS/2024 – 02 – at 10.30 a.m.**
   **NIFS/CONS/2024 – 03 – at 11.00 a.m.**
9. 2024 செப்டம்பர் 25 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு பணிப்பாளரின் குழு அறையில் கேள்விக்கோரல்கள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவரின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் இந்நிகழ்வில் பங்குபற்றலாம்.
10. இந்த கேள்விக்கோரலை அழைத்தல், ஒப்பந்தத்தை வழங்கல் அதனது பகுதியொன்றை வழங்சல் அல்லது அதனை இரத்துச் செய்தல் ஆகியவற்றிற்கான இறுதி தீர்மானத்தை எடுப்பதற்கான உரிமையை அடிப்படை கற்கைநெறிகளுக்கான தேசிய நிறுவகத்தின் பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அடிப்படை கற்கைநெறிகளுக்கான தேசிய நிறுவகம்,**
**ஹந்தான வீதி, கண்டி.**
**தொலைபேசி இல.: 081-2232002**





# மதுவால் பறிபோன தலைநகர்

மொரீசியஸ் சிறிய தீவானாலும் வெவ்வெறு திசைகளில் இருக்கிற புகழ்பெற்ற இடங்களுக்குப் போக பேருந்து வசதி உசிதமாக இருக்கவில்லை. சில இடங்களுக்கு நேரடியாகப் போக முடியாது. பல பேருந்துகள் மாற வேண்டியிருந்தது. பலருக்கும் ஆங்கிலம் தெரியாததால், தமிழர்களுக்குத் தமிழ் உரையாடத் தெரியாததால் வீரனின் காரையே வாடகைக்குப் பேசிக் கொண்டோம். வீரன் பேசிய ஆங்கிலம் எங்களுக்கு உதவியாக இருந்தது. அவரும் வாடகைக் காரோட்டும் டிரைவராக இல்லாமல் ஒரு நண்பராக கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் பதில் கொடுத்தார்.

தலைநகர் போர்ட்லூயிவைச் (PORT LOUIS) சுற்றிப் பார்க்கக் காரில் புறப்பட்டோம். தலைநகருக்குள் கார் நுழைந்ததுமே உயரமான கட்டடங்கள் கண்ணில் பட்டதுமே கவலையோடு வீரன் ஒரு தகவலைச் சொன்னார்.

"இன்று பெருநகரமாய் இருக்கிற போர்ட்லூயிஸ் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கிராமமாய் சிறு நகரமாய் இருந்தது. அக்காலத்தில் இந்த போர்ட் லூயிஸின் நிலப்பகுதிகள் தமிழர்களுக்கே சொந்தமாக இருந்தன. பெருவாரியான தமிழர்கள் குடியிருந்தார்கள். ஆனால் மதுவுக்கு அடிமையான அவர்கள் கரும்புத் தொழில் நலிவடைந்த போது தொடர்ந்து மது குடிப்பதற்காக போர்ட்லூயிஸ் நிலங்களை விற்றுவிட்டு உட்பகுதிக்கு குடியேறினார்கள். நிலத்தை விற்காமல் இருந்திருந்தால் போர்ட் லூயிஸ் தமிழர்களின் நகரமாக இருந்திருக்கும்...".

அவர் சொன்னது எனக்குள் கவலையைக் கொடுத்தது. நான் உடனே, "மது மனிதனின் மதியைக் கெடுக்கும் என்பார்கள். ஆனால் மொரீசியஸில் ஒரு நகரமே மதுவால் கைமாறி போய்விட்டதே" என்று சொன்னேன். மறு விநாடி மனதுக்குள் தமிழ்நாட்டின் 'டாஸ்மார்க்' காட்சிகள் விரிந்தன. 'தேடு கல்வி இல்லா ஊரை தீக்கிரையாக்குவோம்' என்ற பாரதியின் வாக்கைப் பொய்ப்பிப்பது போல் சமீபத்தில் கர்நாடக அரசு 3000க்கும் மேல் மக்கள் குடியிருக்கும் கிராமங்களிலும் மதுக்கடைகளைத் திறக்கப் போகிறதாம். இலவச வாக்குறுதியை நிறைவேற்ற, அந்தச் செலவை சமப்படுத்த மது அரக்கனோடு கைகுலுக்கப் போகிறது அரசு...தமிழகத்தில் கள்ளச் சாராயம் குடித்து அறுபதுக்கும்



மேற்பட்டவர்கள் இறந்தது அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது..


மதியழகன் உடனே," மலேசியா, சிங்கப்பூரிலும் மதுவுக்கு அடிமையானவர்கள் இருக்கிறார்கள். மலேசியாவில் சீனரின் கடைகளில் மாலை நேரங்களில் மேஜையில் வட்டம் போட்டு குடிக்கும் தமிழர்களைப் பார்க்கலாம். சீனர்களும் குடிக்கிறார்கள். ஆனால் மலாய்காரர்கள் அங்கு குடிப்பதைப் பார்க்க முடியாது. மதுவினால் ஐம்பதுக்குள் செத்தவர்கள் நிறைய பேர் இருக்கலாம்" என்றார்.

"மது தமிழர்களை மட்டுமின்றி உலகத்தையே ஆட்டுவிக்கும் அரக்கன். அவுஸ்திரேலியாவில் கிறிஸ்மஸ் அன்று மதுக்கடைகள் மூடப்படுவதால் அதற்கு முன்பே பெட்டி பெட்டியாய் வாங்கிப் போகிற காட்சியைக் காணலாம். மது விற்பனை பணம் கொட்டும் மரம் அரசுக்கு. அதற்கு அடுத்தது போதை மருந்து கடத்தல்காரர்களுக்கு" என்றேன் நான்.

"இதை மாற்ற முடியுமா?" என்று கேட்டார் புருசோத்தமன்.

"மாற்ற முடியாது என நினைக்கிறேன். எல்லாக் காலமும் மது இருக்கிறது. எனவே நம்மை நாமே தற்காத்துக்கொள்வதே சரியான பாதுகாப்பு..."

வீரனின் வண்டி மொரீசியஸின் பழம்பெரும் பள்ளிவாசல் வழியே போய் ஒரு இடத்தில் நின்றது. ஜும்மா மஸ்ஜித் என அழைக்கப்படும் அந்தப் பள்ளிவாசல் 1852லிருந்து இருக்கிறது. முதன் முதல் இத்தீவில் கால் வைத்த அரேபியக் கடலோடிகளின் நினைவாக 'அரேபிய பள்ளிவாசல்' (MOSQUE OF THE ARABS) என அழைக்கப்படுகிறது. அப்போதைய இரு இஸ்லாமிய வர்த்தகர்கள், இரு மனைகளை 6800 ரூபாவுக்கு வாங்கி 1853இல் சிறிய பள்ளிவாசலைக் கட்டினார்கள். பள்ளிவாசல் வளாகத்துக்குள்ளே இந்தியாவிலிருந்து வந்த இஸ்லாமிய மதகுரு ஜமால் ஷா (JAMAL SHAW) வின் சமாதி இருக்கிறது. இன்று பெரிய பள்ளிவாசலாக இருக்கும் இந்தத் தலம் மொரீசியஸில் இருக்கும்




83 பள்ளிவாசல்களின் பழமையானதாகவும் மொரீசியஸ் மக்கள் தொகையில் பதினேழு விகிதமாய் இருக்கும் இஸ்லாமியர்களின் அடையாளமாகவும் திகழ்கிறது.

பள்ளிவாசலைப் படமெடுத்துக் கொண்டு அடுத்ததாக செயின்ட் லூயிஸ் கதீட்ரலுக்குப் போனோம். மிகப் பிரபலமான பத்து தேவாலயங்களில் மிகப் பழமையானது இது. 1756இல் கட்டப்பட்ட இத்தேவாலயம் பிரான்ஸ் மன்னர் ஒன்பதாவது லூயிஸ் (1715 - 1774) நினைவாக செயின்ட் லூயிஸ் எனப் பெயர் சூட்டப்பட்டது. புயல் தாக்குதலினால் 1814இல் இத்தேவாலயம் மீளக்கட்டப்பட்டது. கத்தோலிக்கத் துறவிகளின் சிலைகளை உள்ளடக்கிய இத்தேவாலயத்தில் ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி ஆண்டு தோறும் விருந்துடன் கூடிய விழா நடக்கும். தீவை பிரான்ஸ் ஆண்டபோது வேகமாக நடந்த மதமாற்றங்கள் தற்போது குறைந்துள்ள போதும் தீவு முழுவதும் 324,811 கிறிஸ்தவர்கள் 2011 மக்கள் கணக்கெடுப்பில் இருப்பதாகத் தெரிகிறது.

செயின்ட் லூயிஸ் தேவாலயத்தைப் படமெடுத்துக் கொண்டு அடுத்து போய் இறங்கிய இடம் சீனக்கோயில். சுற்றிவர பசுமையான தோட்டத்தில் சீனக்கட்டட வடிவில் அமைந்துள்ளது. க்வான் டீ பகோடா (KWAN TEE PAGODA). உலகின் பல நாடுகளில் அமைந்துள்ளதைப் போல் போர்ட் லூயிஸிலும் சீனப் பூங்கா அல்லது சீனத் தோட்டம் (CHINESH GARDEN) இங்கும் உள்ளது. தீவின் பல்துறைக்கும் பங்களிப்பு செய்தவர்கள் சீனர்கள் 1745லேயே கொல்லர், தச்சர், தையல்காரர் எனப் பலர் இங்கு கொண்டு வரப்பட்டுள்ளனர். 1829இல் பிரிட்டிஷ் ஆட்சியின் போதும் சீனர்கள் வந்திறங்கியுள்ளனர். இன்றைய மொரீசியஸ் மக்கள் தொகையில் சீனர்கள் இரண்டு வீதமான போதும் வர்த்தகத்தில் வலுவானவர்களாக இருக்கிறார்கள்.

காலமும் நேரமும் உள்ளவர்கள் போர்ட்லூயிஸில் பார்க்க வேண்டிய இடங்கள் பல இருக்கின்றன. அவற்றில் PLACE D ARMES, BLUE PEWNY MUSEUM, MAURITIUS PHOTO GRAPHY MUSEUM, NATIONAL BOTANICA GARDEN, LE CAUDAN WATERFRONT CASINO, PORT LOUIS WATER FRONT, CITADEL FORT என்பன முக்கியமானதாகும். இன்னொரு முக்கியமான இடம் மொரீசியஸ் நாடாளுமன்றம். சட்டப்பேரவை (THE LEGISLATIVE ASSEMBLY) என அழைக்கப்பட்ட நாட்டை ஆளும் அரசமைப்பு 1992இல் குடியரசானதும் நாடாளுமன்றம் என அழைக்கப்பட்டது. 70 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 62 பேர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். 8 பேர் இன ரீதியாகவும் மத ரீதியாகவும் பிரதிநிதிப்படுத்த தெரிவு செய்யப்படுவார்கள். இவர்கள் தேர்தலில் வெல்ல முடியாதவர்கள் எனச் சொல்லப்படுகிறது. மொரீசியஸ் மக்கள் தொகையில் 48.4 வீதமானவர்கள் இந்துக்கள் என்பதால் அரசியலில் அவர்களே ஆதிக்கம் செலுத்துகிறார்கள். குறிப்பாக இந்தி பேசுபவர்களே அரசில் முக்கிய பொறுப்பில் இருக்கிறார்கள். பிரான்சும், பிரிட்டனும் தீவை ஆண்டபோது கிறிஸ்தவ சமயமும் பிரெஞ்சு மொழியும், ஆங்கிலமும் மேலோங்கி இருந்தது. தற்போது இந்து சமயத்திற்கு மறைமுகமாய் முக்கியத்துவம் கொடுப்பதாகவும், இந்தி மொழி பரவலாக்கப்படுவதாகவும் ஒரு குற்றச்சாட்டு உள்ளது. இந்திய அரசு உட்கட்டமைப்புக்கு கோடிக்கணக்கான ரூபாய்களை கொடுத்து வருகிறது.

எதிர்காலத்தில் மொரீசியஸ் இந்து நாடாக இந்தி பேசும் நாடாக மாற வாய்ப்பு இருப்பதாக ஒரு ஆய்வுக்கட்டுரையில் படித்தேன். பிரான்ஸ் தற்போது, தீவை விட்டுக் கொடுத்ததற்காக வருந்துவதாகவும் சொல்லப்படுகிறது. இதன் காரணமாக மொரீசியசுக்குப் பக்கத்தில் இருக்கும் ரியூனியன், சீசெல்ஸ் தீவுகளுக்கு இன்னமும் சுதந்திரம் வழங்கப்படவில்லை. ரியூனியனின் மக்கள் தொகை 850,000 பேரில் தமிழர்களின் தொகை 300,000 ஆகும்.

இதுபற்றி வீரனிடம் கருத்துக் கேட்க முனைந்தேன்.... "மொரீசியஸ் இந்து நாடாக மாற வாய்ப்பு உண்டா?"

வண்டியை ஓட்டிக் கொண்டே வீரன் பதில் சொன்னார்.... "தமிழ்நாட்டிலிருந்து வந்த தமிழர்களையும், வடநாட்டு இந்தியர்களையும் பிரான்ஸ் மதரீதியாக அச்சுறுத்தியது உண்மை. அவர்களின் ஆட்சியில் எல்லோரும் கிறிஸ்தவப் பெயர்களை வைக்க அழுத்தம் கொடுத்ததில் எனக்குக் கூட கிறிஸ்தவப் பெயர் உண்டு. ஆனால் சுதந்திரத்திற்குப் பிறகு அதுபோல் பெயர் வைப்பது இல்லாமல் போய் விட்டது. மக்கள் தொகையில் பாதியளவு இந்துக்கள் இருப்பதால் இந்து நாடாக மாறும் என்று சொல்கிறார்கள். அதேபோல் தான் இந்தி மொழியும். ஆனால் இங்கு கிரியோல் மொழி தான் பேச்சு மொழியாக இருக்கிறது. பக்கத்து தீவுகளான ரியூனியனிலும் சீசெல்லிலும் கிரியோல் தான் பேச்சு மொழியாக இருக்கிறது. இந்தியை, தமிழை வீட்டில் பேசலாம். நாட்டின் மொழிகளாக வர வாய்ப்பில்லை."

வீரனின் கருத்து பல கேள்விகளுக்குப் பதிலாக அமைந்தது. அப்போது "புருசோத்தமன் அடுத்து எங்கே போகிறோம்?" என்று கேட்டார்.

"மிக முக்கியமான இடம். அங்கு ஒரு முக்கியமான சிலையைப் பார்க்கப் போகலாம்..."

வீரனின் பதில் எனக்குள் யாருடைய சிலை என்ற கேள்வியை மனம் எழுப் பவே "வீரனிடம் யாருடைய சிலை?" என்று கேட்டேன்.

அவர் உடனே," கரும்புத் தோட்டத் தொழிலாளர்களுக்காகப் போராடிய ஒருவரின் சிலை" என்றார்.

மொரீசியஸில் 1638 - 1710 இல் கரும்பை அறிமுகப்படுத்தியவர்கள் டச்சுக்காரர்கள். 1743இல் முதல் முதலாக கரும்பு தோட்டத்தைத் திறந்தவர் பிரெஞ்சு கவர்னர் மாஹே டி லபோர்டோன்னைஸ் (Mahe de Labouorndonnais ) ,

கரும்புத் தோட்டத்திற்கு முதலில் ஆபிரிக்கக் கறுப்பர்களையும் பின்னர் இந்தியாவிலிருந்து தமிழர்கள், வட இந்தியர்களையும் கொண்டு வந்தார்கள். பிரெஞ்சுக்காரர்களும் பிரிட்டிஷாரும் இங்கு வருவதற்கு முன்னர் பல பொய்க்கதைகளைப் பரப்பினார்கள். மொரீசியஸ் எங்கிருக்கிறது எவ்வளவு தூரம் என்று சொல்லாமல் நிலத்தில் கற்களை அகற்றினால் தங்கம் அதன் அடியில் கிடைக்கும் என்ற கதையே பெரிதாகப் பரப்பப்பட்டுள்ளது. அதை நம்பி வந்தவர்களுக்கு பாம்புகள் குடியிருக்கும் கரும்புத் தோட்டங்களில் வேலை கிடைத்தது. அந்த வேலை சுலபமானதா என்ன? அக்கால நிர்வாகம் பல்வேறு கெடுபிடிகளைப் போட்டு சிறைவைத்தது போல் தொழிலாளர்களை சித்திரவதைக்குள்ளாக்கியது. அதனை அக்காலத்திலேயே எதிர்த்துப் போராடி தொடக்கக்கால தமிழரின் தலைவராக அடையாளம் காணப்பட்டவர் ராஜரத்தினம் முதலியார்.

1871இல் ரோயல் கல்லூரியில் பேராசிரியராக இருந்த ராஜரத்தினம் முதலியார் தமிழர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தவர். கரும்புத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக, தொழிலாளர்களின் கையெழுத்தை திரட்டி கவர்னருக்கு



பிரெஞ்சு மொழியில் கடிதம் எழுதினார். அநீதிகளை உறுதிபடுத்தும் சாட்சியங்களையும் திரட்டினார். அப்போதைய கவர்னர் ஹமில்டன் கோர்டன் (HAKILTON GORDON) முதலியாரின் கடிதங்களைப் பரிசீலனை செய்து ஒரு விசாரணைக் கமிஷனை ஏற்பாடு செய்தார்.

இவரைப் போல் இன்னொரு தமிழரின் நலனுக்காகப் பாடுபட்டவர் வெங்கடேச சின்னத்தம்பி, மொரீஷியசில் அப்போது ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் போய்வர அனுமதிச்சீட்டு (PASS) இருக்க வேண்டும். அனுமதிச் சீட்டு இல்லையென்றால் தண்டிக்கப்படுவார்கள். அவர் கட்டிய கோயிலுக்கு வந்த தமிழ்த் தொழிலாளர்கள் அனுமதிச் சீட்டு இல்லாததால் கைது செய்யப்பட்டார்கள். அவ்வாறு ஓராண்டில் கைது செய்யப்பட்டவர்கள் தொகை 30,000. அவர் கவர்னருக்குக் கடிதம் எழுதியதில் தொழிலாளர்கள் கைது செய்யப்படுவது நிறுத்தப்பட்டது. ஆனாலும் காலத்திற்கு காலம் கரும்பு தோட்டத்து தொழிலார்களின் துன்பம் வெவ்வேறு வடிவில் தொடர துன்பத்தின் எல்லைக்கே போன அவர்களின் போராட்டத்தின் அடையாளமே வீரன் சொன்ன சிலை. அச்சிலையைப் பார்த்ததுமே சிலப்பதிகாரம் காட்டிய கண்ணகியின் நினைவு வந்தது. கண்ணகி கணவனுக்காகப் போராடியவள். வீரன் சொன்ன சிலையில் இருக்கும் பெண்ணோ, கரும்புத் தோட்டத் தொழிலாளர்களுக்காகப் போராடியவள்...

(தொடரும்)




# இந்தியப் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அரசியலாக்கப்படுகிறதா?

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மன்னிக்க முடியாத பாவம். இக்குற்றத்தில் ஈடுபடும் குற்றவாளிகள் ஒருவர் கூட தப்பக்கூடாது, என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி கூறி வருகிறார் ஆனால், நாட்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கிறன. குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதில்லை தண்டனைகள் கடுமையாக இருந்தால் குற்றங்கள் குறையாலாம் என்றல்லவா சொல்லப்படுகிறது ஆனால், குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவது பற்றியும் குற்றத்தைத் தடுப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் ஆலோசிக்காமல் இது மன்னிக்க முடியாத குற்றம், பாவம் என்று வசனம்பேசுவது என்ன நியாயம் என்ற கேள்வியும் மக்களிடத்தில் எழுகிறது.

மேற்குவங்காள மாநிலம் கொல்கத்தாவில் உள்ள ஆர்.ஜி. கர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பயிற்சி பெற்ற பெண் மருத்துவர் ஒருவர் ஒகஸ்ட் 9ஆம் திகதி பாலியல் வன்கொடுமைசெய்யப்பட்டுகொலைசெய்யப்பட்டுள்ளார். இந்த கொலைக்கான காரணத்தையும் உண்மைக் குற்றவாளிகளையும் கண்டறிந்து தண்டனை வழங்க வேண்டும என்று நாடு முழுவதும் இன்று வரையில் மருத்துவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், அரசாங்கம் மருத்துவர்களின் போராட்டத்தை ஒடுக்கப் பார்க்கிறதே தவிர உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடித்து தண்டனை வழங்க முயற்சி செய்யவில்லை.

மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி பதவி விலக வேண்டுமென கொல்கத்தா தலைமைச்செயலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை மாணவர்கள் அறிவித்தனர். அதன்படி போராட்டக்காரர்கள் பேரணியாக சென்றபோது காவல் துறையினர் அவர்களை தடுத்து நிறுத்தினர். மாணவர்களுக்கும் காவலர்களுக்கும் மோதல் ஏற்பட்டு தடியடியும் புகைக் குண்டுகளும் வீசப்பட்டதால் கொல்கத்தா நகரமே போர்க் களம் போல காட்சியளித்திருக்கிறது.

மாணவர்கள் மீதான தடியடி மற்றும் கண்ணீர் புகைக்குண்டுகள் வீசப்பட்டதை கண்டித்து, மாணவர்களுக்கு ஆதரவாக பா.ஜ.க 12 மணி நேரம் கடையடைப்புக்கு அழைப்பு விடுத்தது. இங்கு தான் பா.ஜ.க. வின் உண்மை முகம் வெளிச்சத்திற்கு வந்தது. மருத்துவர்களில் போராட்டத்திற்கு வாய்திறக்காமல் மாணவர்களின் போராட்டத்தை முன்னவைத்து மேற்கு வங்காள அரசை பழிவாங்க முயற்சிக்கிறதா என்ற கேள்வியும் எழுகிறது. மேற்குவங்காளத்தில் கால் ஊன்ற முடியாத கோபத்தை இப்படித் தீர்த்துக்கொள்ள பார்க்கிறதா? என்ற சந்தேகமும் எழுகிறது.



மேற்குவங்காளத்தில் மாணவ அமைப்புகளுடன் எதிர்க்கட்சிகளும் சேர்ந்து போராட்டம் நடத்தினால் பங்களாதேஷில் நடந்தது போல இங்கேயும் வன்முறை வெடித்துவிடுமோ என்ற அச்சமும்கொல்கத்தாவில் நிலவுகிறது. பா.ஜ.வுக்கு ஆதரவு இல்லாத மாநிலங்களில் இப்படி ஏதாவது ஒரு வகையில் பிரச்சினைகளை உண்டாக்க முயற்சி செய்வது அவர்களுக்கு வாடிக்கையானது தான்.

கொல்கத்தாவில் பெண் மருத்துவர் கொல்லப்பட்ட நிகழ்வு, நாடு முழுவதிலும் விவாதிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்தியப் பிரதமர் மகாராஷ்ரா மாநிலத்தில் ஒரு கூட்டத்தில் பேசும்போது, நாட்டில் உள்ள தாய்மார்கள், சகோதரிகள் மற்றும் மகள்களின் பாதுகாப்பை உறுதி செய்வதே முன்னுரிமை என்று சுதந்திர தின உரையில் இதைப் பற்றி பல முறை வலியுறுத்தி உள்ளேன். நாட்டின் எந்த மாநிலமானாலும் அங்குள்ள பெண்களின் வலியையும், கோபத்தையும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மன்னிக்க முடியாத பாவம். ஒவ்வொரு அரசியல் கட்சி மற்றும் மாநில அரசுகளிடமும் கூறுகிறேன். குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தப்பிக்கக் கூடாது. பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு துணைபோகும், நபர்களும் தண்டிக்கப்பட வேண்டும் அது மருத்துவமனையோ, அரசாங்கமோ காவல் நிலையமோ, எங்கு நடந்தாலும் சரி அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். நாட்டில் அரசாங்கம் மாறும் ஆனால், மக்களையும் பெண்களையும் பாதுகாப்பது நம் அனைவரின் மிகப்பெரிய பொறுப்பாகும், என்று நாட்டு மக்களின் மீது மிகுந்த அக்கறையுடன் கருத்துரைத்துள்ளார்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக பா.ஜ.க கூட்டணி அரசு அவர்களுக்கு துணை நிற்பது வருத்தமளிக்கிறது. என மும்பையில் சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே கூறியுள்ளதையும் நாம் அவதானிக்க வேண்டியுள்ளது. மும்பை அருகே பத்லாபூரில் பள்ளியில் படித்த 4 வயது சிறுமிகள் இரண்டு பேர் அப்பள்ளியில் துப்புரவு தொழிலாளி ஒருவரால் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகித்த சம்பவம் மகாராஷ்டிரா மாநிலம் முழுவதும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இந்த நிகழ்வை கண்டித்து மாநிலம் முழுவதும் எதிர்க்கட்சிகள் போராட்டத்தை நடத்தின. இந்த போராட்டத்தில் கலந்து கொண்டு உத்தவ் தாக்கரே மேலும் கூறும்போது மகாராஷ்டிராவில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசை அகற்ற வேண்டியது அவசியம். குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக அவர்களுடன் அரசு துணை நிற்பது வேதனையளிக்கிறது. சகோதரிகள் பாதுகாப்பாக இருந்தால் தான் வீடு பாதுகாப்பாக இருக்கும். அதற்கான நடவடிக்கையை ஆளும் அரசு எடுக்க வேணடும் என்று வலியுறுத்தியுள்ளார்.

நாடு முழுவதுமே, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பெருகிக் கொண்டேஇருப்பதுபெண்களுக்கான பாதுகாப்பில் அரசு இன்னும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதையே உணர்த்துகிறது. மேற்கு வங்காளத்தில் பயிற்சி மருத்துவரின் வன்கொடுமைக்கான தீர்வை நோக்கிப் பயணிக்காமல், அரசியல் கட்சிகள் இதை வைத்து அரசியல் செய்வதிலேயே முனைப்புக்காட்டி வருகின்றன.

இந்த வன்முறையைக் கண்டித்து, மேற்கு வங்காள ஆளும் கட்சியான மம்தா பானர்ஜியின் அரசும், நீதி வேண்டி பாத யாத்திரை நடத்தியுள்ளது. வேடிக்கையாக உள்ளது. வன்முறை நிகழ்ந்த மருத்துவக் கல்லூரியின் முதல்வரைக் காப்பாற்றி விட்டு நிதிகேட்டு போராடுவது நகைப்புக்குரியதாக இருக்கிறது. எதிர்க்கட்சிகளின் போராட்டத்தால் தனது வாக்குவங்கி சரிந்து விடுமோ என்ற அச்சமும் மம்தாவுக்கு ஏற்பட்டுள்ளது.

தன்னுடைய செல்வாக்கை நிலை நிறுத்திக் கொள்ளவே ஆளும் கட்சியாக இருந்தும் பாதயாத்திரை நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. பாத யாத்திரைக்குப் பிறகு மம்தா பானர்ஜி ஒரு கூட்டத்தில் உரையாற்றும்போது. ஹத்ரஸ் உன்னாவ், மற்றும் மணிப்பூர் ஆகிய இடங்களில் பெண்கள் வன்கொடுமை செய்யப்பட்ட போது மத்தியில் ஆளும் பா.ஜ.க அரசு எந்த ஒரு விசாரணைக் குழுவையும் அனுப்பவில்லை. ஆனால் மேற்கு வங்காளத்தில் ஒருவரை எலி கடித்தால் கூட 55 விசாரணைக் குழுக்கள் இங்கே வந்து விடுகின்றன என்று பா.ஜ.கவை விமர்சித்துள்ளார்.

பெண்கள் மீதான வன்கொடுமைகளை தடுப்பதற்கான தீர்வுகளை எடுப்பதற்கு எந்த அரசியல் கட்சியும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதை வைத்து அரசியல் செய்யவே முயற்சி செய்கின்றன. பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுபவர்கள் தப்பித்துவிடக் கூடாது. தண்டனை வழங்கியே தீர வேண்டும் என்று பிரதமர் நரேந்திரமோடி மேடைகளில் முழக்கம் மட்டுமே செய்கிறார். நடவடிக்கை எதுவும் எடுப்பதாய் தெரியவில்லை என்பதே தற்போதைய நிலை, பெண்களை வைத்து அரசியல் நடத்தப்படுவது காலங்காலமாக நடந்து வருவதுதான். என்றாலும் மாற்றம் எப்போது வரும் என்பது தான் மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

# புதிய மைல்கல்லை எய்தியுள்ள SSG செயற்திட்டம்



நிலைபேறான வளர்ச்சிக்கான திறன்கள் (SSG) செயற்திட்டம், ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் ஆறு புதிய பயிலல் நிலையங்களை ஆரம்பித்து மற்றுமொரு முக்கியமான மைல்கல்லை எய்தியுள்ளது. இந்த நிலையங்கள், களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்கள, கம்பஹா மாவட்டத்தின் கட்டுநாயக்க, கொழும்பு மாவட்டத்தின் ராஜகிரிய, மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச் சேனை, திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி மற்றும் அம்பாறை மாவட்டத்தின் அம்பாறை ஆகிய பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன. ஏற்கனவே நான்கு நிலையங்கள், கண்டி மாவட்டத்தின் செங்கடகல, மாத்தளை மாவட்டத்தின் நாவுல, நுவரெலியா மாவட்டத்தின் மீபிலிமான மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் வீரவில பகுதிகளில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த விரிவாக்கத்துடன், இலங்கையில் 10 மாவட்டங்களுக்கு SSG தனது இளைஞர் விருத்தி செயற்பாடுகளை விஸ்தரித்துள்ளது. அதனூடாக, நாட்டில் காணப்படும் மாபெரும் விருந்தோம்பல் கற்கைகள் நிலையங்களில் ஒன்றாக திகழ்கின்றது. குறைந்த வசதிகள் படைத்த இளைஞர்களுக்கு இன, மத, பாலின பாகுபாடின்றி சமமான வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கின்றது. அண்மைய புள்ளிவிவரங்களின் பிரகாரம், 600 க்கும் அதிகமான மாணவர்கள் தம்மை பதிவு செய்து கொண்டுள்ளதுடன், தற்போது பயிற்சிகளைப் பெறுகின்றனர். 2024 ஆம் ஆண்டின் இறுதியில் மேலும் 970 மாணவர்களை உள்வாங்கி பயிற்சியளிப்பதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில், புதிய நிலையங்களை ஆரம்பிப்பதற்கான திட்டங்களும் அடங்கியுள்ளன. 2025 ஆம் ஆண்டுக்கான இலக்கானது, சகல 10 நிலையங்களிலும் 1830 மாணவர்களை பதிவு செய்வதாகும்.

# இலங்கை தெங்கு கைத்தொழில் சம்மேளனம் அங்குரார்ப்பணம்



இலங்கையின் தென்னை தொழில்துறையில் ஒரு வரலாற்று மைல்கல்லைக் குறிக்கும் வகையில், இலங்கை தென்னை கைத்தொழில் சம்மேளனத்தின் (The Ceylon Chamber of Coconut Industries CCCI) அங்குரார்ப்பண நிகழ்வு தென்னை தொழில்துறையின் முக்கிய பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் 2024 ஆகஸ்ட் 29ஆம் திகதி கொழும்பில் உள்ள இலங்கை வர்த்தக சம்மேளனம் இடம்பெற்றது.

நிலைபேறாண்மை வளர்ச்சி, புத்தாக்கம் மற்றும் உலகளாவிய சந்தையை அடைவதற்கான முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையிலும், தென்னை தொழிற்துறையில் பரந்த வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலும் முதல் தடவையாக இந்த ஒருங்கிணைந்த அமைப்பானது இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும். இலங்கையின் தென்னை தொழிற்துறையின் முன்னேற்றத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட முதல் நிறுவனமான இலங்கை தென்னை கைத்தொழில் சம்மேளனம், இத்தொழிற்துறையின் திறன்களை அதிகமாகப் பயன்படுத்திக் கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

நாட்டின் கைத்தொழில்துறை பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் தென்னை தொழில்துறை, ஆண்டுக்கு 800 மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருவாயை ஈட்டுகிறது. இதை மேலும் வளர்ந்து, 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருமானத்தை இலக்காகக் கொண்டு இலங்கையின் தென்னை உற்பத்திகளின் தரம் மற்றும் உலகளாவிய போட்டித்தன்மையை மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

# தங்க விருதினை வென்ற சுப்ளெக்ஸ் ஆசியா ப்ரைவேட் லிமிடெட்



சுப்ளெக்ஸ் ஆசியா ப்ரைவேட் லிமிடெட் நிறுவனமானது 2024ஆம் ஆண்டின் ஏன்ட்ரோப்ரினர் பிஸ் வணிக விருதுகளில் நெட்வொர்க் மார்கெட்டிங் பிரிவில் தங்க விருதைப் பெற்று தன்னிகரற்ற சாதனையை அடைந்துள்ளது. கொழும்பில் அமைந்துள்ள கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்ற இந்த விருது விழாவானது, நெட்வொர்க் மார்கெட்டிங் துறையில் நிறுவனத்தின் அவதானத்துடனான செயல்திறனையும் புதிய சிந்தனையையும் அங்கீகரித்துள்ளது.

இந்த விருது நிறுவனத்தின் இயக்குனர்களான, நவநீதராஜா மற்றும் அனஸூக்கும் நிர்வாக இயக்குனரான, செல்லையா சரிதாவுக்கும் வழங்கப்பட்டது.

அவர்கள் வழங்கிய தலைமையும், மூலோபாய சிந்தனைகள், இந்த வெற்றியைப் பெறுவதில் முக்கிய பங்கு வகித்தன.

இந்தத் துறையில் மிகச் சிறந்த மற்றும் வெற்றியடைந்த நிறுவனமாக இருக்கவும், மக்களுக்கு சிறந்த தயாரிப்புகளை வழங்கி, பொருளாதார பலமிக்க சந்ததியை உருவாக்கும் நிறுவனத்தின் நோக்கத்திற்கும் இந்த விருதானது மிக முக்கியமானதாக உள்ளது.

# முழங்கால் மூட்டுவலிக்கு நிவாரணமளிக்கும் புதிய சிகிச்சை

## சென்னை மியாட் வைத்தியசாலையில் அறிமுகம்

இலங்கை, இந்தியா உட்பட இந்திய துணை கண்ட நாடுகளில் அதிகளவிலானோர் உள்ளாகியுள்ள கடுமையான முழங்கால் வலி நோய்க்கு மயக்கமருந்து, அறுவை சிகிச்சை மற்றும் தழும்புகள் எதுவுமற்ற முறையில் மேற்கொள்ளக்கூடிய வலி நிவாரண சிகிச்சையொன்று சென்னை மியாட் இன்டர்நஷனல் வைத்தியசாலையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஜெனிகுலர் ஆர்டரி எம்போலைசேஷன் (Genicular Artery Embolization) என்ற பெயர் கொண்ட இச்சிகிச்சை குறித்து இலங்கை மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான செய்தியாளர் மாநாடொன்று கொழும்பு மரினோ பீச் ஹோட்டலில் அண்மையில் நடாத்தப்பட்டது. இச்செய்தியாளர் மாநாட்டில் வைத்தியசாலையின் முகாமைத்துவப் பணிப்பாளர் டொக்டர் பிரித்வி மோகன்தாஸ், பணிப்பாளர் டொக்டர் கார்த்திகேயன் தாமோதரன், டொக்டர் அஸசயான் சபீக் ஆகியோர் இச்சிகிச்சை தொடர்பில் விளக்கமளித்தனர். இச்சமயம் உரையாற்றிய டொக்டர் பிரித்வி மோகன்தாஸ், சென்னையிலுள்ள மியாட் வைத்தியசாலையில் தான் இவ்வகை சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு பிரத்தியேகமான நோய்களுக்கும் இங்கு சிகிச்சை அளிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. 1999 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட இவ்வைத்தியசாலை 63 விஷேட பிரிவுகளுடன் ஆயிரம் படுக்கைகளைக் கொண்டுள்ளது. 250 முழு நேர மருத்துவர்கள் இங்கு பணியாற்றுகின்றனர்.



எமது வைத்தியசாலை உலகிலுள்ள 130 நாடுகளைச் சேர்ந்த பிரஜைகள் பயன்பெறக்கூடியளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளது.

மூட்டு வலி காரணமாக பெருமளவிலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு உடற்பயிற்சி இன்மை, தவறான உணவுப்பழக்கம் என்பன பெரிதும் பங்களிக்கின்றன. என்றாலும் தற்போதைய சூழலில் இந்த முழங்கால் மூட்டு வலி உபாதைக்கு மூட்டு மாற்று அறுசை சிகிச்சை தீர்வாக முன்வைக்கப்பட்டாலும் அந்த சிகிச்சையை எல்லோருக்கும் மேற்கொள்ள முடியாது.

இவ்வாறான சூழலில் தான் மயக்கமருந்து, அறுவை சிகிச்சை மற்றும் தழும்புகள் எதுவுமற்ற முறையில் மேற்கொள்ளக்கூடிய வலி நிவாரண சிகிச்சையாக ஜெனிகுலர் ஆர்டரி எம்போலைசேஷன் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இச்சிகிச்சை பெற்றுக் கொள்பவர்கள் நாட்கணக்கில் வைத்தியசாலையில் தங்கியிருக்க வேண்டியதில்லை. அதனால் இச்சிகிச்சை தொடர்பில் இலங்கைப் பிரஜைகள் மேலதிக விபரங்களை கொழும்பு 3, கொள்ளுப்பிட்டி, குயின்ஸ் வீதியிலுள்ள இலக்கம் 30 என்ற முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# வலுவான வரிக்கு பின்னரான இலாபத்தை பதிவு செய்த செலான் வங்கி

செலான் வங்கி ஜூன் 30, 2024இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கு (H1) ரூ. 4,558 மில்லியன் வரிக்குப் பின்னரான இலாபத்துடன் (PAT) வலுவான செயற்திறனைப் பதிவுசெய்தது.

இது 2023ஆம் ஆண்டில் இதே காலகட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 2,575 மில்லியனிலிருந்து குறிப்பிடத்தக்க 77% வளர்ச்சியை பிரதிபலிக்கிறது.

சவாலான சந்தை நிலவரங்கள் இருந்தபோதிலும் வரிக்கு முன்னரான இலாபம் (PBT) முன்னைய ஆண்டை விட 76% அதிகரிப்பைக் காட்டி ரூ. 7,331 மில்லியனை எட்டியது. வங்கியின் நிகர வட்டி வருமானம் ரூ. 20,468 மில்லியனிலிருந்து ரூ. 18,590 மில்லியனாக 9.18%ஆல் குறைவடைந்ததுடன் நிகர வட்டி மிகை 5.76% இலிருந்து 5.17% ஆகக் குறைந்துள்ளது.



நிகர கட்டண அடிப்படையிலான வருமானம் 6.29%ஆல் அதிகரித்தது. இது முதன்மையாக அட்டைகள் தொடர்பான வருமானம், பணம் அனுப்புதல் மற்றும் பிற கடன் சேவைகள் ஆகியவற்றினூடான வருமான அதிகரிப்பின் பிரதிபலிப்பு ஆகும்.

மொத்த தொழிற்பாட்டு வருமானம் ரூ. 23,279 மில்லியனாக இருந்தது. இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 5.41% குறைவை காட்டுவதுடன் பெரும்பாலும் நிகர வட்டி மிகையின் குறைவே காரணம் ஆகும்.

விற்பனைக்கான தேறிய இலாபம் மற்றும் நிதிச் சொத்துக்களின் அங்கீகார நீக்கத்திலிருந்தான நிகர இலாபம் ஆகியவற்றை உள்ளடக்கிய பிற வருமானம் 52%ஆல் உயர்ந்துள்ளது.

வங்கியின் செயற்பாட்டுச் செலவுகள் ரூ. 9,128 மில்லியனிலிருந்து ரூ, 10,388 மில்லியனாக 13.80%ஆல் அதிகரித்துள்ளது.

# மூலோபாய கூட்டாண்மை மூலம் கடன் அறிக்கை அணுகலை விரிவுபடுத்துகிறது CRIB

நாட்டின் முதன்மை கடன் தகவல் ஆணையகமான, இலங்கை கடன் தகவல் பணியகம் (CRIB), வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுடனான மூலோபாய ஒத்துழைப்பு மூலம் கடன் மதிப்பெண்கள் மற்றும் அறிக்கைகளின் டிஜிட்டல் அணுகலை விரிவுபடுத்துகிறது. ஆரோக்கியமான கடன் சுயவிவரத்தை பராமரிப்பதில் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கான அதன் தொடர்ச்சியான உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, CRIB இப்போது தனிநபர்கள் தங்கள் கடன் அறிக்கைகளை CRIB இணையதளம் அல்லது அவர்களின் சொந்த வங்கி பயன்பாடுகள் மூலம் எளிதாகப் பெற அனுமதிக்கிறது.

குறிப்பிடத்தக்க சமீபத்திய வளர்ச்சியில், CRIB ஆனது வாடிக்கையாளர்களின் வசதியை மேம்படுத்த மக்கள் வங்கியுடன் கூட்டு சேர்ந்துள்ளது. இந்த ஒத்துழைப்பின் மூலம், மக்கள் வங்கி வாடிக்கையாளர்கள் தங்கள் CRIB அறிக்கை (MyReport) மற்றும் கடன் மதிப்பெண்களை வங்கியின் ‘People’s Pay’ டிஜிட்டல் பணப்பை மூலம் நேரடியாக அணுக முடியும். ஒரு எளிமையான பதிவு மற்றும் கோரிக்கை மூலம் செயல்முறையை நெறிப்படுத்த முடியும். மேலதிக சரிபார்ப்புகளோ ஆவணங்களோ தேவையில்லை.




இந்த விரிவாக்கப்பட்ட அணுகல்தன்மை, கடன் வழங்குபவர்களுக்கும் கடன் வாங்குபவர்களுக்கும் இடையே உள்ள தகவல் இடைவெளியை (தகவல் சமச்சீரற்ற தன்மை) குறைக்க CRIB இன் தொடர்ச்சியான முயற்சிகளின் விளைவாகும், இதன் மூலம் மேம்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கடன் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

# இலங்கையின் எதிர்காலத்தை மாற்றும் COMPLAST & RUBEXPO 2024

முழுமையான பிளாஸ்டிக் பொருட்கள் கண்காட்சி மற்றும் இறப்பர் எக்ஸ்போ (COMPLAST & RUBEXPO 2024) நிகழ்வானது ஒகஸ்ட் 30 முதல் செப்டம்பர் 1 ஆம் திகதி வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகின்றது.

SMART Expos & Fairs India Pvt Ltd மற்றும் இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (PRISL) ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வுக்கு Industrial Development Board (IDB) ஆதரவு வழங்கியது. Shibaura Machine India, SDD Polymers, Lanka IOC, FMJ Plastics, Acteil Innovative மற்றும் NCS Holdings ஆகியன இந்நிகழ்வின் பிரதான அனுசரணையாளர்களாகும்.

மூன்று நாட்கள் இடம்பெறும் இக் கண்காட்சியில், பிளாஸ்டிக், இறப்பர் மற்றும் பொதியிடல் உள்ளிட்ட துறைகளில் இருந்து 200க்கும் மேற்பட்ட தொழில் வல்லுநர்கள் மற்றும் 200க்கும் மேற்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த இரட்டைக் கண்காட்சிக்கு வருகை தந்திருந்தோர், பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் தொழிற்துறைகளின் நவீன தயாரிப்புகள், தொழில்நுட்பங்கள் மற்றும் புத்தாக்கங்கள் ஆகியவற்றை பார்வையிட்டதுடன், அதிநவீன தீர்வுகளின் பல்வேறு நேரடி விளக்கங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வுகள் நாட்டின் நீண்ட கால இலக்குகளான வட்டப் பொருளாதாரங்கள் மற்றும் பேண்தகு அபிவிருத்தி ஆகியவற்றுடன் பெரிதும் ஒத்திசையும் மீள்சுழற்சியில் கவனம் செலுத்துகின்றன.

சூழல் மீதான தாக்கத்தைக் கட்டுப்படுத்துதல், கழிவு முகாமைத்துவத்தை மேம்படுத்தல், வளங்களைப் பாதுகாத்தல், வேலைவாய்ப்பை உருவாக்குதல் மற்றும் சூழலுக்கு ஏற்ற தொழில்கள் மூலம் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல் உட்பட பல இலங்கைக்கான நன்மைகளை வட்டப் பொருளாதாரம் கொண்டுள்ளது.




# ஓய்வூதியர்களை மேம்படுத்தும் NDB மற்றும் ஹேலிஸ் சோலார்



இந்த நாட்டிற்கு அயராது சேவை செய்த தேசத்தின் ஓய்வூதியர்களின் நல்வாழ்வை ஆதரிப்பதனையும் சூழல்நேய சக்தி தீர்வுகளை ஊக்குவிப்பதனையும் நோக்கிய முக்கிய முன்னெடுப்பாக, NDB வங்கியானது ஹேலிஸ் சோலார் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) ஒன்றில் ஆகஸ்ட் 22 ஆம் திகதி கைச்சாத்திட்டது. "ஆச்சாரா ஓய்வூதியம் பெறுவோர் கடன் திட்டத்தின் கீழ் சோலார் வசதிகள்", திட்ட அங்குரார்ப்பணத்தின் போது NDB வங்கியானது இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்ட நிலையில் இது சிரேஷ்ட பிரஜைகளிற்கு நிதித் தீர்வுகளை வழங்குவதிலான வங்கியின் அர்ப்பணிப்பை மாத்திரமின்றி நிலைபேண் வாழ்முறைக்காக ஒலிக்கும் அதன் முயற்சியையும் வெளிப்படுத்துவதாகவுள்ளது.

வங்கிக்கும் ஹேலிஸ்க்கும் இடையிலான உத்தியோகபூர்வ பங்காளித்துவத்தைக் குறிக்கும் வகையில் அமைந்த இக்கைச்சாத்திடும் நிகழ்வு ஓய்வூதியப்பணிப்பாளர் உட்பட NDB மற்றும் Hayleys ஆகிய இரு நிறுவனங்களினதும் முக்கிய பிரதிநிதிகள் முன்னிலையில் இடம்பெற்றமை சிறப்பம்சமாகும்.

நாட்டிற்காக பல வருடங்கள் அர்ப்பணிப்பான சேவை ஆற்றிய ஓய்வூதியம் பெறுவோர் இலங்கையின் சமூக கட்டமைப்பில் முக்கிய பங்கை வகிக்கின்றனர்.

அவர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் NDB வங்கியானது, அவர்கள் சௌகரியமானதும் சுற்றுச்சூழல் உணர்வுடையதுமான ஓய்வில் வாழ்வதனை உறுதிப்படுத்தும் வகையில் இந்த தனித்துவமான கடன் வசதியை வழங்குகிறது. இதன் மூலம் சூரிய சக்திக்கான தங்கள் மாற்றத்தை தடையின்றியும் மற்றும் நியாயமான விலையிலும் ஏற்படுத்தவென வடிவமைக்கப்பட்ட பன்முக பயன்களிலிருந்தும் நன்மைகளைப் பெற, இலங்கையில் ஓய்வூதியத் திணைக்களத்தின் கீழ் உள்ள அனைத்து ஓய்வூதியர்களும் தற்போது இந்த சூரிய சக்தி [சோலார்] கடன்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

# சுற்றுச்சூழலுக்கான உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்தும் சன்ஷைன் ஹோல்டிங்ஸ்

இலங்கையில் பன்முகப்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனமான சன்ஷைன் ஹோல்டிங்ஸ், அதன் சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு (Environmental, Health and Safety EHS) ஆகிய கொள்கைகளை மேலும் வலுப்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. சன்ஷைன் ஹோல்டிங்ஸின் செயல்பாடுகளில் ஆழமாகப் பதிந்துள்ள பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்தும் வகையில், அண்மையில் Sunshine Safety Forumஇல் இந்த அறிவிப்பு செய்யப்பட்டது. தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தின் (National Institute of Occupational Safety and Health NIOSH) பணிப்பாளர் நாயகம் டொக்டர் சம்பிகா அமரசிங்க இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், இந்த நிகழ்விற்கு சன்ஷைன் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷியாம் சதாசிவம், சன்ஷைன் ஹோல்டிங்ஸின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# படித்ததும் பகர்வதும் 206





சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### தேர்தல் கால சுவரொட்டிகள்

தேர்தல் காலங்களில் எதிர் நோக்குகின்ற பலதரப்பட்ட பிரச்சினைகளில் ஒன்றுதான் சுவரொட்டிகள் ஒட்டப்படுவது. பார்க்குமிடமெல்லாம் பல்வேறு கட்சிகளின், வெவ்வேறு வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்கும் வகையிலான சுவரொட்டிகள் ஏராளமாக, தாராளமாக காணப்படுவது வழமையாகியுள்ளது.




இவ்வருட ஜனாதிபதி தேர்தலின் போதும், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தொடர்பாக கட்சிகள் சார்பிலும், பல்வேறு இயக்கங்கள், சங்கங்கள் சார்பிலும், தனிப்பட்டவர்கள் சார்பிலும் வேறுபட்ட வகையில் விளம்பரப்படுத்தி சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன. தமது எண்ணத்தை, கருத்தை, நோக்கினை பிறர் அறியும் வகையில் விளம்பரப்படுத்தும் நோக்கில் இத்தகைய சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்ற போதிலும், இத்தகைய சுவரொட்டிகள் முறையற்ற விதத்தில் ஒட்டப்படுவதனால் சூழல் பெருமளவில் மாசடைகிறது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

எத்தகைய சுவரொட்டிகளாயினும் அவை அவற்றுக்கென ஒதுக்கப்பட்ட தனியான இடங்களில், முறையாக ஒட்டப்படுமாயின் இத்தகைய பாதிப்புகளோ பிரச்சினைகளோ எழுவதற்கான வாய்ப்புகள் குறைவு. ஆயினும் கண்ட கண்ட இடங்களில், தான்தோன்றித்தனமாக, தாம் விரும்பிய விதத்தில், முறையற்று சுவரொட்டிகள் ஒட்டப்படுவதனாலேயே பிரச்சினைகள் எழுகின்றன.

“இங்கே சுவரொட்டிகள் ஒட்டக்கூடாது” என்று தமிழிலும், சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் என மக்கள் விளங்கக்கூடிய மொழிகளில் எழுதப்பட்டிருந்தாலும், அவற்றை சிறிதும் கவனத்தில் எடுக்காது, அவ்வசனங்களின் மேலேயே சுவரொட்டிகளை ஒட்டிச் செல்வதை பரவலாகக் காண முடிகிறது. இத்தகைய இழி செயல்களை நிறுத்துவதற்கும், தடுப்பதற்கும் சகலரும் முயற்சிகளை எடுப்பது அவசியம். இவற்றிலிருந்து சூழல் மாசடைவதை தடுப்பதற்கு, ஒவ்வொருவரும் தம்மீதுள்ள பொறுப்புகளை உணர்ந்து செயற்பட வேண்டும்.

இந்த விடயத்தில் கட்சிகளின் தலைமை பீடங்கள் தமது ஆதரவாளர்களுக்கு, குறிப்பாக சுவரொட்டிகள் ஒட்டும் விடயத்தைக் கையாளுபவர்களுக்கு உரிய வழிமுறைகளைப் பற்றி எடுத்துரைத்து, அவர்களை சரியான முறையில் வழி நடத்த அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இத்தகைய சுவரொட்டிகளை ஒட்டுபவர்கள் பெரும்பாலும் சாதாரண அன்றாட கூலித்தொழில் செய்யும் தொழிலாளர்களாகவே இருக்கின்றனர்.

இவர்கள் எத்தகைய ஆழமான சிந்தனைக்களுமின்றி, தம்மிடம் எங்கே சுவரொட்டிகளை ஒட்டுமாறு கூறப்படுகின்றதோ, அங்கு சுவரொட்டிகளை ஒட்டிச் செல்கின்றனர். எனவே இத்தகையவர்களை வழி நடத்துபவர்களே அவர்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட உரிய முறையில் அறிவுறுத்த வேண்டும்.

ஜனாதிபதி தேர்தல் உட்பட பொதுத் தேர்தல்களின்போது பல்வேறு வகையான சுவரொட்டிகளை ஒட்டுவது சட்ட ரீதியாகவே தடுக்கப்பட்டுள்ளது.

அத்தகைய சுவரொட்டிகளை ஒட்டும் நபர்களை கைது செய்து சட்ட நடவடிக்கைகள் எடுக்கும் அதிகாரம் பொலிசாருக்கு உள்ளது. சில இடங்களில் அவர்கள் இதனை அமுல் செய்வதையும் காண முடிகிறது. எனினும் பரந்த அளவில் இடம் பெறும் இத்தகைய பிழையான செயற்பாடுகளை பொலிசாரால் மட்டுமே முழுமையாக நிறுத்திவிட முடியாது என்பதை எவரும் ஏற்றுக் கொள்ளவே செய்வர்.

‘சூழல் சுத்தமாக இருக்க வேண்டும்’ என்று விரும்புகின்ற அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படுவதன் மூலம் மட்டுமே இத்தகைய சுவரொட்டிகள் மூலம் ஏற்படும் சூழல் மாசடைவதை தடுக்க முடியும். இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவோர் சுய கட்டுப்பாட்டோடு செயல்படுவதன் மூலமும் இவற்றை பெருமளவில் தவிர்க்க இயலும்.

எனவே இந்த நாட்டின் பிரஜை ஒவ்வொருவரும் நாட்டு நலனில் அக்கறை கொண்டு, தமது ஆற்றலுக்கும் அதிகாரத்துக்கும் ஏற்ப செயற்பட்டு, சுவரொட்டிகளினால் ஏற்படும் சூழல் மாசடைவதை விட்டும் தவிர்த்துக் கொள்ள முன்வர வேண்டும்.

## சட்டமும் நாமும்

### ஊனமுற்றோருக்கு வாக்களிக்க வசதிகள்!




உடல் ஊனமுற்றோர், பாரிய உடல் நலக்குறைவு உள்ளவர்கள் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க போக்குவரத்து வசதிகளைக் கோரி விண்ணப்பிக்க முடியும். இதற்கான சட்ட ஏற்பாடுகள் உள்ளன. இதற்காக விண்ணப்பிக்கும் நடைமுறை தொடர்பாக தேர்தல் ஆணையகமும் வாக்காளர்களுக்கு அறிவித்துள்ளது.

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல் சட்டத்தின் 82 (4) (d) இன் படி, உடல் நலக்குறைவு காரணமாக, ஒருவரால் நடந்தோ அல்லது வேறு பொதுப் போக்குவரத்திலோ வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிக்க முடியாவிட்டால், வாக்குச் சாவடிக்குச் செல்வதற்கு ஏதேனும் வாகனம் மூலம் போக்குவரத்து வசதியைப் பெறுவதற்காக, அவரது வாக்குச் சாவடியின் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் நேரில் விண்ணப்பிக்க முடியும். இதற்கான விண்ணப்பத்தை வாக்குச் சாவடி முகவர், அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஊடாகவும் சமர்ப்பிக்கலாம்.

இந்த வசதிகளுக்கான விண்ணப்பங்களை மாவட்ட தேர்தல் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அதிகாரி அலுவலகம் என்பவற்றில் பெற்றுக்கொள்ள முடியும் www.elections.gov.lk இணையத்தளத்தில் இதனை பெறவும் வசதிகள் உள்ளன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் (மாவட்டச் செயலாளர்/ ஆளுநர்) அல்லது மாவட்டத்தின் துணை அல்லது உதவி தேர்தல் ஆணையரிடம் (மாவட்டத் தேர்தல் அலுவலகம்) வாக்குப்பதிவு திகதிக்கு ஏழு நாட்களுக்கு முன்னர், இம்முறை தேர்தல் 2024 செப்டம்பர் 21ல் நடைபெறுவதால், செப்டம்பர் 14 ம் திகதியன்று அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்.

இதற்கென பொது வாகனத்தில் வாக்குச் சாவடிக்குச் செல்ல இயலாது என்பதை உறுதிப்படுத்த பதிவு செய்யப்பட்ட மருத்துவரிடமிருந்து பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழுடன் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதற்கான மருத்துவச் சான்றிதழை அரசு மருத்துவப் பயிற்சியாளர், பதிவு செய்யப்பட்ட அல்லது இணை மருத்துவப் பயிற்சியாளர் அல்லது ஆயுர்வேத மருத்துவரிடமிருந்து பெறலாம். தனியார் மருத்துவர்களிடமிருந்து பெறுவதாயின் அந்த மருத்துவரின் பெயர் மற்றும் பதிவு எண்ணைக் குறிப்பிட வேண்டும்.

உடல் ஊனமுற்றோர் மற்றும் பார்வையற்றோருக்காக தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட 10 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் தற்காலிக அடையாள அட்டை வைத்திருப்பவர்கள் தனியாக மருத்துவச் சான்றிதழைப் பெறத் தேவையில்லை.

## சிந்தனை செய் மனமே

### ஆற்றங்கரை ஆலமரம்!



வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் சிறந்த படிப்பினையைத் தரும் ஒரு சிறந்த உருவகக் கதையிது.

ஒரு ஆற்றங்கரையில் சில ஆலமரங்கள் இருந்தன. வெகு தூரத்தில் இருந்து பறந்து வந்த குருவி ஒன்று ஒரு ஆலமரத்திடம் வந்து “ரெண்டு மாசம் மட்டும் உன் கிளையில தங்கி முட்டையிட்டு குஞ்சு பொரிக்க இடம் தருவாயா?” என கெஞ்சிக் கேட்டது.

ஆனால் அந்த மரம் “அதெல்லாம் முடியாது” என மறுத்து விட்டது.

சரின்னு அதனை ஏற்றுக்கொண்ட அந்தக் குருவி அடுத்த இரண்டாவது மரத்துக்கிட்டே போய் அந்தக் குருவி, “ரெண்டு மாசம் மட்டும் உன் கிளையில தங்கி முட்டையிட்டு குஞ்சு பொரிக்க இடம் தருவாயா?” என்ற அதே கேள்வியைக் கேட்டது.

“அதற்கென்ன தாராளமா இருந்துக்கோ” என்று அந்த இரண்டாவது மரம் பெரிய மனசு பண்ணி இடமளித்தது.

ஒரே மாதம்தான் கடந்திருக்கும். ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓட ஆரம்பித்தது.

அந்த வெள்ளத்தின் தாக்கத்தை தாங்க முடியாமல் அந்த முதல் ஆலமரம் வேரோடு பிடுங்கப்பட்டு, வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போக ஆரம்பித்தது. ஆனால் குருவிக்கு இடம் கொடுத்த இரண்டாவது ஆலமரம் நிலையாக, உறுதியாக நிலைத்து நின்றது.

வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படுகின்ற முதல் ஆலமரத்தைப் பார்த்த குருவி, ‘அடுத்தவங்களுக்கு உதவி செய்யாதவனை ஆண்டவனே தண்டிச்சுட்டார்’ என்று எல்லா மனிதர்களும் நினைக்கிற மாதிரி நினைத்தது.

ஆனால் வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகையிலே அந்த முதல் ஆலமரம் என்ன நினைச்சது தெரியுமா?

‘என் வேரோட பலம் ஒரு மழைக்குக் கூட தாங்காதுன்னு எனக்குத் தெரியும். அதனால குருவியும் என்னோட சேர்ந்து சாக வேண்டாம்னுதான் நான் இடம் தர மறுத்துட்டேன். ஏய் குருவியே நீ எங்க இருந்தாலும் நீ உன் குடும்பத்தோட சந்தோஷமா நல்லா இருக்கணும்.’

இப்படி தான் உண்மையான நிலையை பலரும் புரிந்து கொள்வதில்லை. உண்மையானவர்கள் தங்களை வெளி உலகத்துக்குக் காட்டிக் கொள்வதுமில்லை.

சில சமயங்களில் சிலர் சில விடயங்களில் நம்மைக் கைவிடுவது போலத் தோன்றினாலும் அது நம் நன்மைக்காகவே இருக்கும். அது கண்டிப்பாகத் தீமைக்காக இருக்காது என நேர் மறையாக நினைப்பதே நன்மை பயக்கும்.

## சிந்தனை செய் மனமே

### 97 வயதில் முதுகலைப் பட்டம்




இலங்கையைச் சேர்ந்த வயோதிபப் பெண் ஒருவர் தனது 97ஆவது வயதில் முதுகலைப் பட்டம் (Master's Degree) பெற்று சாதனை படைத்துள்ளார். கடந்த ஆகஸ்ட் 21ஆம் திகதி (2024.08.21) இலங்கை களனிப் பல்கலைக்கழகத்தின் 143ஆவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் 97வயதான மூதாட்டி லீலாவதி தர்மரத்ன என்பவரே இவ்வாறு, பௌத்த கல்வியில் முதுமாணி பட்டம் பெற்று, இன்றைய தலைமுறையினருக்கு மிகச் சிறந்த முன்னுதாரணமாக மாறியுள்ளார்.

முன்னாள் ஆசிரியையான லீலாவதி தர்மரத்ன பிரசித்த நொத்தாரிசாகவும் செயலாற்றியுள்ளார். பட்டம் பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த லீலாவதி தர்மரத்ன,,"கல்விக்கு வயது ஒரு தடையல்ல” என்பதை மிக அழுத்தமாக பதிவு செய்துள்ளார்.

## நலமே வாழ்வோம்

### எச்சரிக்கும் குரங்கம்மை



இந்த ஆண்டில் 13 நாடுகளில் குரங்கம்மை நோய் கண்டறியப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. குழந்தைகளும், முதியவர்களுமே இதனால் அதிகம் பாதிப்புகளுக்கு ஆளாகியுள்ளனர்.

ஆபிரிக்காவின் நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் சமீபத்தில் வெளியிட்ட அறிவிப்பில், குரங்கம்மை காய்ச்சல் பொது சுகாதார அவசரகால நிலையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

குரங்கம்மை நோயினால் 500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதனால், இதனை தடுத்து நிறுத்த சர்வதேச உதவி வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளது. இவற்றில் கொங்கோ நாட்டில் 96 சதவீத பாதிப்புகளும் மற்றும் மரணங்களும் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது, கொங்கோவில் பாதிப்புகள் 160 சதவீதமும், மரணங்கள் 19 சதவீதமும் உயர்ந்து உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதுவரை 524 பேர் பலியாகி உள்ளதுடன் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காங்கோவில் இருந்து புரூண்டி, கென்யா, ருவாண்டா மற்றும் உகாண்டா உள்ளிட்ட அண்டை நாடுகளுக்கும் பரவியுள்ளது. எனினும், ஆபிரிக்காவில் குறைந்தளவு தடுப்பூசிகளே கையிருப்பில் இருப்பதாக கூறப்படுகின்றது. இந்த வைரசானது ஆப்பிரிக்காவை கடந்து பரவக் கூடிய ஆற்றல் படைத்துள்ளது என்று தெரிவித்துள்ள உலக சுகாதார அமைப்பு, குரங்கம்மையை சர்வதேச சுகாதார அவசரகால நிலையாக அறிவித்துள்ளது.

உலகளவில் குரங்கம்மை நோய் பரவி வருவதைக் கருத்திற் கொண்டு இலங்கையில், கட்டுநாயக்க விமான நிலையம் உட்பட நாடு முழுவதும் தொற்றுத் தடுப்பு செயல்முறைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. தொற்று நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டால், குறித்த நோயாளர்களுக்காகக் கொழும்பு தொற்று நோய் நிறுவகத்தில் தனிமைப்படுத்தல் மற்றும் சிகிச்சை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும், கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் குரங்கம்மை நோயாளிகளைக் கண்டறிவதற்கான ஆய்வக வசதிகளை மேற்கொண்டுள்ளதுடன் நோய்க்கான சிகிச்சையளிப்பு தொடர்பாக தேவையான வழிகாட்டுதல்கள் அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கையும் அனைத்து சுகாதார நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

எனவே, குரங்கம்மை நோய் பற்றி எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது ஒவ்வொருவர் மீதுமுள்ள பொறுப்பாகும்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207




39

ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணன்

# கிடைக்குமா இனியாவது துர்காவிற்கு விடுதலை! யாருக்கும் வேண்டாமே அதுபற்றி கவலை!

சிறிது நேரம் வரையில் அமைதியாக இருந்த துர்கா,

மெல்ல பேச ஆரம்பித்தாள்.

“அப்பப்பா அந்த சம்பவத்தை இப்போது நினைத்தாலும் பயமாக இருக்கிறது. மேனியெல்லாம் நடுங்குகிறது” என்று ஆரம்பித்த துர்கா,

தான் கடிதம் எழுதி அதை அனுப்ப முடியாமல் தவித்து முதல் அந்த எலும்புக் கூட்டை பார்த்ததுவரை எல்லாமே விபரமாகச் சொன்னாள்.

எல்லோருமே திகிலுடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள்!

“ஓ அப்படியானால் ஸ்டோரூமில்தான் அது இருந்திருக்கிறது. ஆனால் தோட்டத்தில் எங்காவது புதைத்திருப்பார்கள் என்றுதான் நான் நினைத்தேன்!” என்றார் சிரஞ்சீவி.

“என்னது…! நீங்கள் எலும்புக் கூட்டை எதிர்பார்த்தீர்களா?” வியப்புடன் கேட்டான் சிந்துஜன்.

“ஆமாம் ஒரு எலும்புக் கூடொன்றை நான் எதிர்பார்த்தேன் சிந்துஜன்! நாம் இப்போது போய் அதைப் பார்த்துவிட்டு வருவோம். ம்… துர்கா… நீங்கள் இந்த இருவரோடும் இங்கே இருங்கள்!” என்ற சொல்லிவிட்டு,

சிந்துஜனையும் அழைத்துக் கொண்டு ஸ்டோரூமை நோக்கி நடந்தார்.

அந்த அறை,

இருளில் மூழ்கியிருந்தது!

டோர்ச் லைட் வெளிச்சத்தை அடித்தபடியே,

இருவரும் அந்த ஓட்டை வழியாக உள்ளே எட்டிப் பார்த்தார்கள்.

அந்த மண்டை ஓடுதான் தெரிந்தது.

தடி ஒன்றை எடுத்து,

அதைத் தட்டி தனது கையால் எடுத்தார்.

“ம்… இதுதான் நான் சொன்ன அந்த மண்டை ஓடு. இதே இந்த இடத்தில் தான் துப்பாக்கித் தோட்டா பாய்ந்திருக்கிறது. உச்சந் தலை வழியாகத்தான் அது வெளிவந்திருக்கிறது!” சொல்லியபடியே அந்த மண்டை ஓட்டின் மீது படிந்திருந்த தூசியைத் துடைத்துவிட்டார்.

டோர்ச் லைட்டை அதன்மீது அடித்து,

அதை ஆராய்ந்து பார்த்தார்.

திடீரென்ற தலையைத் தூக்கிய சிரஞ்சீவி,

டோர்ச் லைட்டை அணைத்துவிட்டு,

சிந்துஜனின் கையைப் பிடித்துக் கொண்டு,

படாரென்ற பின்னால் பாய்ந்தார்.

அதேநேரம்,

காதின் சவ்வு கிழியும் அளவுக்கு பயங்கர ஓசையுடன்,

துப்பாக்கி ஒன்று வெடித்தது!

டுமீல்! டுமீல்!

இரண்டு தோட்டாக்கள் அவர்களின் காதருகால் பறந்து சென்றதை இருவரும் உணர்ந்தார்கள்!

அடுத்து,

சிந்துஜனின் கையைப் பிடித்துக் கொண்டு,

தரையில் படுத்துக் கொண்ட சிரஞ்சீவி,

அருகில் இருந்த ஒரு தூணை நோக்கி நகன்றார்.

அப்போது,

டுமீல்…!

பாய்ந்தது மீண்டும் ஒரு தோட்டா!

தூணின் பின்னால் மறைந்து கொண்ட சிரஞ்சீவி,

தனது ரிவால்வரை எடுத்து,

துப்பாக்கிச் சூடு வந்த வாசல் கதவின் மூலையை நோக்கி,

இரண்டு தடவைகள் சுட்டார்!

அதேநேரம்,

யாரோ உறுமும் சத்தத்துடன்,

நடந்து செல்லும் அடிச்சத்தமும் கேட்டது!

இப்போது,

துப்பாக்கி சூட்டினால் வெளிவந்த புகை மண்டலம்,

அந்த அறையை முகாமிட்டிருந்தது!

அதேநேரம்,

“என்ன அது… அங்கே என்ன துப்பாக்கிச் சத்தம்?” வெளியில் இருந்து, துர்காவின் குரல் கேட்டது.

“ஏய்… துர்கா… அங்கே இருக்காதீங்க… விரைந்து ஓடி உங்கள் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொள்ளுங்கள்!” அலறினார் சிரஞ்சீவி!



அதேநேரம்,

டுமீல்!

மீண்டும் ஒரு துப்பாக்கித் தோட்டா,

சிரஞ்சீவி மறைந்திருந்த தூணில் பட்டுத் தெறித்தது!

அதைத் தொடர்ந்து,

சொலமன் அந்த அறையின் வாசல் கதவை நோக்கி ஓடும் ஓசையும் கேட்டது.

இப்போது,

அந்த அறைக்குள் இருந்து யாரும் வெளியே போகவும் முடியாது,

வெளியே இருந்து யாரும் உள்ளே வரமுடியாத விதத்தில்,

வாசலில் காவல் இருக்கிறார் சொலமன் என்பதை சிரஞ்சீவி புரிந்து கொண்டார்.

ஆனாலும்,

அவர் எந்த இடத்தில் நிற்கிறார் என்பதை சரியாக அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை!

இதனால்,

அவர் தந்திரமாக ஒரு காரியம் செய்தார்!

அதாவது,

தனது சர்ட்டைக் கழற்றி எடுத்து,

அருகில் இருந்த ஒரு கம்பித் துண்டை எடுத்து அதில் மாட்டி,

வாசல் பக்கத்தை நோக்கி மெதுவாக நீட்டினார்.

அடுத்து,

டுமீல்! டுமீல்!

சொலமனின் துப்பாக்கி மீண்டும் இரண்டு தடவைகள் வெடித்தது!

சிரஞ்சீவியின் சர்ட்டில் இரண்டு ஓட்டைகள் விழுந்தன.

அதைத் தொடர்ந்து,

வீட்டில் வாசல் கதவு,

பயங்கர சத்தத்துடன் திறந்து கொள்ளும் ஓசை கேட்டது!

கதவைத் திறந்து கொண்டு வந்தவர்,

தோமஸாகத்தான் இருக்க வேண்டுமென்ற சிரஞ்சீவி யூகித்துக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து,

துப்பாக்கியால் சுட்டபடியே,

சொலமன் ஓடுவது தெரிந்தது!

அவர் மாடிப்படிகளில் ஏறி ஓடுவதைப் பார்த்ததும்,

சிந்துஜனையும் இழுத்துக் கொண்டு,

அந்த அறையை விட்டு வெளியே ஓடி வந்தார் சிரஞ்சீவி!

இப்போது,

திடீர் திடீரென்று வெடிக்கும் துப்பாக்கியின் சத்தத்தைத் தவிர,

வேறு எந்த சத்தமும் அங்கே கேட்கவில்லை!

எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்று தெரியாமல்,

அங்கே இருந்தவர்கள் எல்லோருமே அச்சத்தினால் ஆடிப்போயிருந்தார்கள்!

தனது ரிவோல்வரில் இன்னும் ஒரே ஒரு தோட்டா மாத்திரமே இருக்கிறதென்பது சிரஞ்சீவிக்குத் தெரியும்!

ஆனால்,

சொலமன் தனது ரிவால்வருக்குள் புதிதாக தோட்டாக்களை நிரப்பிக் கொண்டிருக்க வேண்டுமென்பதையும் அவர் உணர்ந்து கொண்டார்!

அதுமட்டுமில்லாமல்,

முன்னாள் இன்ஸ்பெக்டரிடமிருந்து எடுத்த ரிவோல்வரும் அவரிடம் தான் இருக்கிறது என்பது சிரஞ்சீவிக்குத் தெரியும்!

இப்போது,

சொலமன் மாடிப்படிகளில் ஏறி,

துர்கா இருந்த அறைக்கு ஓடுகிறார் என்பதை,

சிரஞ்சீவி புரிந்து கொண்டார்.

இதனால்,

விரைந்து முன்னால் ஓடிவந்த சிரஞ்சீவி,

ரிவோல்வரை எடுத்து,

மாடிப்படிகளில் ஓடிக் கொண்டிருக்கும் சொலமனை குறிபார்த்துச் சுட்டார்.

டுமீல்!

அடுத்து,

பாய்ந்து வந்த அந்த தோட்டா,

விரைந்து ஓடிக் கொண்டிருந்த சொலமனின் மார்பில் பாய்ந்து,

அவர் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு,

கீழே விழவில்லை!

சிரஞ்சீவியின் குறி தவறி,

சுவற்றில் பாய்ந்தது அந்த தோட்டா!

அதைத் தொடர்ந்து,

சொலமனின் ரிவோல்வர் வெடித்தது.

அது,

மறைத்திருந்த சிந்துஜனை பதம் பார்த்துச் சென்றது!

மாடிப் படிகளில் விரைந்து ஓடிவந்த சொலமன்,

துர்காவின் அறை வாசலில் வந்து,

“ஏய்… துர்கா, இப்போ நீ வெளியே வரப் போறியா இல்லையா?” என்று கேட்ட படியே,

கதவைத் தட்டியபடியே கத்தினார்.

ஆனால்,

துர்காவின் அறைக்கதவு மட்டும் திறக்கவே இல்லை!

இருந்தாலும்,

மற்ற எல்லா அறைக்கதவுகளும் திறந்து கொண்டன.

பதறிய படியே வெளியே வந்தாள் பேபி நோனா.

“ஐயோ… ஐயோ… நீங்க போற எடத்துக்கு போங்க… உங்களுக்கு கோடி புண்ணியம் கெடைக்கும்… இதுவரைக்கும நடந்த எல்லாமே போதும்…!” என்று அவர் கத்தியது,

எல்லோருக்குமே கேட்டது.

அதே சமயம்,

டுமீல்,

மீண்டும் துப்பாக்கி வெடித்தது.

‘தடால்’ என்று யாரோ விழும் சத்தமும் கேட்டது.

ஆமாம்!

சொலமனின் ரிவோல்வர் வெடித்து,

பேபி நோனா கீழே விழுந்த சத்தம்தான் அது என்பது,

எல்லோருக்கும் புரிந்தது.

அதன் பிறகு,

மீண்டும் துர்காவின் அறைவாசலுக்கு வந்த சொலமன்,

சாத்தியிருந்த கதவில் எட்டி உதைத்தார்.

இப்போது,

‘தடார்’ என்ற சத்தத்துடன்,

கதவு திறந்த கொண்டது…

(தொடரும்..)

தமிழ் ஆராய்ச்சி மாநாடு
2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் 48

# இந்திய விடுதலைக்கு மலேசியாவில் இருந்து போராடிய பெருமகன்

மாநாட்டில் ஆரம்ப நிகழ்வு, பிரதமர் பங்கேற்ற மாநாட்டு உத்தியோகப் பூர்வ தொடக்க நிகழ்வு, மாநாட்டு நிறைவு நிகழ்வு ஆகியவற்றில் பங்கேற்பாளர்கள் அனைவரும் ஒரே தளத்தில் சங்கமித்தார்கள். ஆய்வரங்குகள் வெவ்வேறு தளங்களில் அமைக்கப்பட்டிருந்தன.

தனிநாயகம் அடிகளார், பேராசிரியர் சிங்காரவேலு, குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாரதியார், பாரதிதாசன், திருவள்ளுவர், தொல்காப்பியர், கோ.சாரங்கபாணி, ஔவையார், வரதராசன் ஆகிய அறிஞர்களின் பெயர்களில் அமைக்கப்பட்ட பதின்மூன்று அறைகளில் தொன்னூற்றொரு ஆய்வுரைகளின் களங்கள் அமையப்பெற்றன. ஒவ்வொரு களங்களிலும் தலா நான்கு தலைப்புகளில் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. அவ்வாறு வாசிக்கப்பெற்ற கட்டுரைகள் தமிழர்களின் வரலாறு, வாழ்வியல், கலை இலக்கியம், கல்வி, மருத்துவம், அறிவியல், அரசியல் போன்ற விடயப் பரப்புகளை மீட்டிப் பார்ப்பதாக அமையப்பெற்றன. சிறுவர் இலக்கியம், சித்த மருத்துவம் தொடர்பிலான அவதானமும் முனைப்பாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

“இணையக் காலக்கட்டத்தில் தமிழ் மொழி” எனும் தொனிப்பொருளில் அமையப்பெற்ற இம் மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளின் தலைப்புகளும் அதனை எழுதியவர்களின் பெயர்களும் அடங்கிய “நிகழ்வு கொத்து” வெளியிடப்பட்டிருந்தமை கவனிக்கத்தக்கது. அத் தொகுப்பில் இலங்கையின் ஆய்வாளர்களின் பெயர்கள் இணைக்கப் பட்டிருக்கவில்லை. என்பது கவலைக்குரியதாகும். அவ் விடயத்திற்கு ஏற்பாட்டுக் குழுவினால் வருத்தம் வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மாநாட்டின் சிறப்பிற்காக பல அறிஞர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய சிறப்புரைகள் மாநாட்டின் நோக்கத்தினை அடைவதில் பெரிதும் செல்வாக்கு செலுத்தின.

அவர்களில் பலரின் அறிமுகம் தொடர்ந்த நிலையில், அவர்களுடனான தொலைபேசி தொடர்பும் தொடர்கிறது. அத் தொடர்புகளின் மூலம் ஏற்பட்ட அனுபவங்களும் கடந்த பதிவுகளில் உள்வாங்கப்பட்டுள்ளன.

அவ்வாறு சிறப்புரையாற்றிய சில ஆளுமைகளுடன் தொடர்பு சாத்தியமாகாத காரணத்தினால் அவர்களுடனான அனுபவத்தை பதிவதற்கு வாய்ப்பில்லாமல் போனமை கவலைக்குரிய விடயமாகும். வேறுபட்ட களங்கள், ஆகையால் அவர்களின் உரைகளை கேட்க முடியாமல் போனது. அவ்வாறான சிறப்புரைகளில்

இலங்கையின் ஆளுமைகள் இருவரினதும் உரைகள் மிக முக்கியத்துவம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதன் வரிசையில் செந்திலதிபன், வைகைச்செல்வன், ஸ்ரீகாநத், இன்பத்தமிழன் உட்பட்ட ஆதினங்களைச் சேர்ந்த ஞானபிரகாச தேசிகர், திருச்சிற்றம்பலம் தம்பிரான், சிவப்பிரகாச தேசிகர், மகாதேவ தேசிகர், மருதாசல அடிகள் ஆகியோரின் உரைகளை கேட்க முடியாமலும் அவர்களின் தொடர்புகள் கிடைக்காமையும் துரதிர்ஷ்டமாகும்.

அவ்வாறே சிறுவர் இலக்கியம் பற்றி உமாநாத், ஊடகம் குறித்து விஸ்வா, திரைப்படப் பாடல் குறித்த நெல்லை ஜெயநந்தா, சிற்பக் கலை தொடர்பில் பாஸ்கரன், திருசுடர் நம்பியின் தமிழர் வழிபாடு, குகை ஓவியங்கள் எனும் தலைப்பில் காந்திராஜன், நெசவு குறித்து நிர்மலா, நாடகம் தொடர்பில் இராமானுஜம், பெரியண்ணனின் நாட்டுப்புறவியல், மனோன்மணியின் நவீன இலக்கியம் தொடர்பிலான உரைகளை செவிமடுக்க வாய்ப்புக் கிடைக்காமை கவலைக்குரிய விடயமாகும். அவ்வாறே வேல்ராஜ், அபிதா சபாபதி, ராமசுப்ரமணியம் போன்றோரின் உரைகளையும் உள்வாங்க முடியாமல் போனது.

பட்டிமன்ற பேச்சாளராக ஏலவே அறிமுகமாகியிருந்த மதுகூர் இராமலிங்கத்தை சுற்றுலா களங்களில் சந்தித்து புகைப்படம் எடுத்துக் கொண்ட போதிலும் அவரை பலமுறை தொடர்பு கொண்ட போதும் அவரிடமிருந்து எதுவித பதிலும் கிடைக்கவில்லை. பட்டிமன்ற பேச்சாளர் லியோனியின் அணியில் இடம் பிடித்திருந்தவர்.

நாவலப்பிட்டிக்கு ஒரு சமயம் இவர்களது அணியினர் வருகை தந்து பட்டிமன்றம் நிகழ்த்திய போது நிகழ்வின் இறுதியில் கலந்துரையாடி குழுவாக புகைப்படம் எடுத்துக் கொண்ட ஞாபகத்தையும் அவருடன் பகிர்ந்து கொண்டேன்.

நிகழ்வின் ஏற்பாட்டில் மலாயா பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறையின் தலைவர் கோவி.சிவபாலன் உள்ளிட்ட பேராசிரியர்கள், மாணவர்களின் ஒருங்கிணைந்த செயற்பாடுகள் நிகழ்வின் வெற்றியில் முக்கியத் தடங்களாகின.

அவ்வாறே மாநாட்டின் இணைத் தலைவர் பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன், முனைவர் கிருஷ்ணன் மணியம், மலர்க்குழு தலைவர் க.முருகன் ஆகியோரின் பங்கேற்பு மிகுந்த கவனத்தை பெற்றதாக விளங்குகிறது.

இம் மாநாட்டின் வெற்றியில் இவர்களின் உழைப்பும் மிக முக்கியத்துவம் பெற்றதாகவே அமையப்பெறுகின்றன. ஓம்ஸ் அறவாரியத்துடன் இணைந்த வகையில் சமூக அமைப்புகள் என்ற வகையில் இந்திய சமூக அமைப்புகளின் பங்கேற்பு குறித்த அவதானங்களும் கவனத்தை பெறுகின்றன. அவ் வகையில் 'மலேசிய சமூகநல மறுமலர்ச்சி



இயக்கம்' 'மலேசிய தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்' 'மலேசிய மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி ஆன்மிக அறப்பணி இயக்கம்' ஆகிய அமைப்புகளின் பங்கேற்பும் அவதானிக்கத்தக்கதாகும்.

மாநாட்டில் வெளியிடப்பட்ட மலர் குறித்த அவதானம் கவனத்திற்குரியதாகும். அம் மலரில் வெளியிடப்பட்ட ஓவியம் அனைவரின் கவனத்தையும் வென்றதாக அமைந்தது. அவ் ஓவியத்தை வரைந்த ஓவியர், மலேசியாவின் பிரபல ஓவியராக திகழும் ஓவியர் லேனா ஆகும். ஓவியர் லேனாவைச் சந்தித்தமை மிகுந்த சுவராஸ்யமான ஒரு சம்பவமாகும்.

ஒருவரின் உருவத்தை ஒத்ததன்மை பொருந்திய வகையில் அபூர்வமாக இன்னுமொருவர் அமைவதும் அவ்வப்போது ஆங்காங்கே நிகழ்வதுண்டு. உலகில் ஒருவரைப் போல ஏழு பேர் உள்ளார்கள் என்பது மனிதர்களிடத்தே காணப்படும் வழக்காற்றியல் நம்பிக்கையாகும்.

ஒரே பெயரில் பலர் அடையாளப்படுத்தப்படுவது சாதாரணமானதே! அவ்வாறு அமைந்த பெயர்களில் தந்தையின் பெயரும் ஒன்றாக அமைவது அபூர்வமானதொரு விடயமாகும். எனது தந்தையின் பெயரையும் ஒத்த வகையிலேயே எனது பெயரையும் ஒத்த வகையில் திகழ்பவரை சந்தித்தமையும் இம் மாநாட்டு நிகழ்வில் மறக்கமுடியாத தருணமாக அமைகிறது. மாநாட்டு வளாகத்தில் நடந்து வரும் போது எதிரில் வந்து கொண்டிருந்த அன்பர் “லெட்சுமணன் அருணாசலம்” என அவர் அணிந்திருந்த பெயர் அட்டையில் குறிப்பிட்டிருந்தார்.

பார்த்ததும் ஆச்சரியப்பட்டேன் உடனே அவரைப் பார்த்து ஐயா உங்கள் பெயர் என்ன? என்று கேட்டேன். லெட்சுமணன் என்றார். நமது பெயரில், ஒருவர் சந்தோசமாக இருந்தது. அப்பாவின் பெயர் அருணாசலம், என்றேன். ஆம் ஐயா, எப்படி தெரியும்? என்றார். எனது அப்பா பெயரும் அருணாசலம் என்றேன். மகிழ்வான தருணம். இருவரும் எம்மைப்பற்றிய அறிமுகத்தை பரிமாறிக் கொண்டோம். இலங்கையில் நாம் தந்தையின் பெயரை முதலில் பிரயோகித்து நமது பெயரை அடுத்து எழுதும் வழக்கமே காணப்படுகிறது. மாறாக மலேசியாவில் நபரின் பெயரை குறிப்பிட்டு அதன் தொடர்ச்சியாகவே தந்தையின் பெயரை பயன்படுத்தும் நடைமுறையே பின்பற்றப்படுகிறது.

ஓவியர் லேனா என அறியப்பட்ட 'லெட்சுமணன் அருணாசலம் மலேசியாவின் முன்னணி ஓவியராக திகழ்கிறார். அவரே பதினோராவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் மலருக்கு அட்டைப்பட ஓவியத்தை வரைந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்துறையில் பல்வேறு தடங்களை பதித்த ஆளுமையாக இவர் திகழ்கிறார். கிள்ளான், சிலாங்கூரில் வதியும் எழுபத்தாறு வயதான ஓவியர் லேனா உடல் நிலையிலும், உள ரீதியிலும் மிகுந்த ஆரோக்கியம் பொருந்திய ஒருவராகவே அடையாளம் காணமுடிகிறது.

சிறுவயது முதல் இயல்பாகவே ஓவியத்தில் நாட்டம் கொண்ட ஓவியர் லேனா 1975ஆம் ஆண்டு தனது ஓவியத் திறமையை வளர்த்துக் கொள்ளும் வகையில் மலேசியா ஆர்ட் இன்ஸ்டியூட்டில் தன்னை இணைத்துக்கொள்கிறார். மலேசிய இந்தியன் காங்கிரஸ் பிரமுகர் சாமிவேலுவின் தூண்டுதலில் 1990ஆம் ஆண்டு சென்னை மூர்த்தி ஆர்ட்ஸ் அகாடமியில் இணைந்து, இத்துறையில் மேலும் தன்னை வளர்த்துக்கொள்கிறார். மலேசியாவின் தலைசிறந்த கார்ட்டூனிஸ்ட்டுகளில் ஒருவராகவும் தன்னை நிலைநிறுத்திக்கொள்கிறார்.

பல விருதுகளுக்கு சொந்தக்காரரான ஓவியர் லேனா, 1989இல் ஆசியா அறக்கட்டளை நடத்திய எடிட்டோரியல் கார்ட்டூன் போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட முதல் ஏழு பேரில் ஒருவராக தேர்வானது தனது வாழ்வில் முக்கிய மைல்கல் எனக் குறிப்பிடுகிறார். ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக ஓவியத்துறையில் தடம் பதித்து வரும் அன்னார் மலேசியாவில் வெளியாகிய, வெளியாகும் பல இதழ்களில் காட்டூனிஸ்டாக பணியாற்றியுள்ளார். தற்போது “கூட்டுறவு” எனும் இதழில் கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பத்திரிகைகளில் காட்சி கதை சொல்லலின் தாக்கத்தில் இவரது உருவப்படங்கள், விளக்கப் படங்கள், எண்ணெய் ஓவியங்கள் போன்றன மிகுந்த செல்வாக்கு நிலையைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலேசியாவில் வாழும் இந்தியர்களின் குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களின் நலனிற்கு துன் சம்பந்தன் அடித்தளமிட்டமை குறிப்பிடத்தக்கது. அதன் வழியில் இக் கூட்டுறவு அமைப்பை தொடர்ந்து முன்னெடுத்த ஆளுமையான டான் ஸ்ரீ டத்தோ கே.ஆர்.சோமசுந்தரம் பற்றிய குறிப்பையும் அவர் பற்றிய முக்கியத்துவத்தையும் ஓவியர் லேனா வலியுறுத்துகிறார்.

கே.ஆர். சோமசுந்தரம் துன் சம்பந்தனைத் தொடர்ந்து மலேசிய தேசிய நிலநிதிக் கூட்டுறவு சங்கத்தின் தலைவராக பொறுப்பேற்றிருக்கிறார். இவரது காலத்திலேயே தற்போது கோலாலம்பூர் நகரில் உயரமாக அமைந்திருக்கும் கட்டடம் கட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அன்னார் இந்திய விடுதலைக்கு மலேசியாவில் இருந்து போராடிய பெருமகனாக விளங்குகிறார்.

நேதாஜி சுபாஸ் சந்திரபோசின் இந்திய தேசிய இராணுவத்தில் தலைமை அதிகாரிகளில் ஒருவராக விளங்கியமையும் கவனிக்கத்தக்கது. இவர் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்க போசகராகவும் விளங்கியுள்ளார். மலேசிய நாட்டின் மேலவை உறுப்பினர், ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி என்ற பதவி நிலைகளில் அவரது பங்கேற்பு முக்கியத்துவம் பெறுகிறது.

ஐ.நா சபையில் மலேசியாவை பிரதிநிதித்துவப்படுத்திய முதலாவது தமிழர் என்பதோடு, மலேசிய நாட்டின் சுதந்திர பிரகடனத்தை வாசித்தவர் எனும் சிறப்பையும் பெறுகிறார்.

பயணம் தொடரும்...

# வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளராக வைத்திய கலாநிதி சர்வானந்தன்



வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளராக வைத்திய கலாநிதி. தில்லையம்பலம் சர்வானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர் ஓய்வுபெற்றுச் சென்ற நிலையில், ஏற்பட்ட வெற்றிடத்திற்கு, பிரதி மாகாண ஆணையாளராக கடமையாற்றி வந்த வைத்திய கலாநிதி. தில்லையம்பலம் சர்வானந்தன் 03.08.2024 முதல் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான நியமனக் கடிதம் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி. எஸ். எம். சாள்ஸினால் 13.08.2024 ம் திகதி வழங்கப்பட்டது.

## காரைக்கவியின்
# 'சீத்துவக்கேடு' நூல் வெளியீட்டு விழா



காரைக்கவியின் 'சீத்துவக்கேடு, துலைஞ்சு போன எங்கட வாழ்க்கை' எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் செப்டெம்பர் 15ஆம் திகதி மாலை 4.31க்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரன் தலைமை தாங்கி வரவேற்புரை நிகழ்த்தவுள்ளார். வாழ்த்துரையை பேராசிரியர் தை.தனராஜும், முகப்புரையை பேராசிரியர் வ.மகேஸ்வரனும், நயவுரையை வைத்தியர் செல்வரஞ்சனி சுப்ரமணியமும், ஆய்வுரையை பேராசிரியர் வ.சிவலோகதாசனும், நோக்குரையை கலாநிதி க.ரகுபரனும், மகிழுரையை சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திராவும், ஏற்பு நன்றியுரையை நூலாசிரியரும் நிகழ்த்தவுள்ளனர். இந்நிகழ்வில் விருந்தினர்களாக தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், சாகித்தியரத்தினா தி.ஞானசேகரன், தமிழன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் இ.சிவராஜா, புற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் ந.ஜெயகுமாரன், காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி முன்னாள் ஆசிரியர் க.குகப்பிரியன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# கிராமிய மொழி கவிப் பனுவல் 'கொத்து வேலி'

ஈழத்தின் நவீன தமிழ்க்கவிதை முன்னோடிகளில ஒருவராகப் பெயர்பெற்றிருந்த நீலாவணன் பிறந்த பெரிய நீலாவணை மண்ணிலிருந்து அண்மையில் மலர்ந்திருக்கிறது 'கொத்து வேலி' என்ற நூல்.

கச்சிதமான அச்சமைப்பில் தடித்த அட்டையோடு156 பக்கங்களில் நூல் அமைந்திருக்கின்றது. நூலின் ஆசிரியர் நீலையூர் சுதா என்ற புனைப்பெயரில் எழுதிவருகின்ற பெரிய நீலாவணை மண்ணின் புதியபடைப்பாளி சி.சுதாகரன். யாப்பிலக்கணப் பயிற்சிப் பரீட்சையில் சித்திபெற்று 'பைந்தமிழ்ச்சுடர்' பட்டம் பெற்ற அவரின் கவிதைக் தொகுதி இது.

திருகோணமலையில் கிழக்குமாகாண மீன்பிடிப் பணிப்பாளராகக் கடமையாற்றும் சுதாகரன், தொழில்துறைசார்ந்த மூன்று நூல்களையும், பக்தி கீதங்களையும் 'கிடுகு வீடு' என்ற கவிதை நூலையும் ஏற்கனவே வெளியிட்டுள்ளார்.

"கொத்துவேலி" 83 கவிதைகளை உள்ளடக்கிய அவரின் 2ஆவது கவிதைத் தொகுதி. புதுக் கவிதை என்று வகைப்படுத்தப்பட்டு இந்நூல் வெளியிடப்பட்டுள்ள போதிலும் பெரும்பாலான புதுக்கவிதை நூல்களைப் போல உரைநடையில் அமைந்த, வசன முறிவுகளைக் கொண்ட கவிதைகளை உள்ளடக்கியதாக இந்நூல் அமையப் பெறவில்லை யென்பது அதன் சிறப்பு. ஒரே அளவான சொற்கள் ஒரு ஒழுங்கமைப்பில் வைக்கப்பட்டு ஒத்திசைப்பு பெற்ற கவிதைகளாக இந்நூலிலுள்ள கவிதைகள் மிளிர்வதை ஒவ்வொரு கவிதையை வாசிக்கும் போதும் உணர முடிகிறது.

கவிஞர் தான் வாழ்ந்த, வளர்ந்த கிராமத்தின் வாழ்வியல், பாரம்பரியம், கலாசாரம்,உணவு, வழக்காறு என்பவற்றை மிக நுட்பமாக கவிதைகளுக்குள் இழையோட விட்டிருக்கிறார் . நகரமயமாக்கலுக்கு முந்திய நமது இளமைக் கால வாழ்வை நினைவுக்கு கொண்டுவருகின்றன கவிதைகள். கிராமிய வாழ்க்கை அனுபவத்தில் தோய்ந்ததாக அமைந்த சொல்லாடல்கள் கவிதைகளை மேலும் அழகு படுத்துகின்றன.

'புகுந்து போக கடப்பு
பூ மரங்கள் தடுப்பு
கிணத்தடியில் குளிப்பு அதற்கு
கிடுகு வேலி மறைப்பு.

வரிச்சுக் கம்பு வாங்கி /நெருக்கிக் குறுக்காய்க் கட்டி /

வளைத்து மறைத்து வரியும் / வழக்கம் எனக்கும் தெரியும் /

இறுக்கி வேலி இருக்கும்/ இடையில் வெட்டை தெரியும் / அது

கதைக்க விட்ட கடப்பாய்/ காலமெல்லாம் கிடக்கும்/

மண்ணிலெங்கும் அப்போ/ மரங்கள் உண்டு வளவில்/

மழையும் பெய்ய அங்கு/ மரங்கள் குடித்து மகிழும்/

வீட்டு வாசலோரம்/ காட்டுமுந்தன் வாழை /

மாட்டுக் காலையோரம்/ மஞ்சவணாய்ச் சோலை/ போட்டி போட்டு வந்து /பொம்பளைங்க சேர்ந்து பொழுது போகும் வரைக்கும்/ தலையில் பேன் பொறுக்குவதே வேலை /


அந்தக் கால நினைவை /யாரும் மறக்க மாட்டார். ஆண்டுக் கொருபிள்ளை / இப்போ யாரும் பெற மாட்டார்./

"எவரை நம்பி வாழ' என்ற தலைப்பில் அமைந்த முதல் கவிதையில் வருகின்ற வரிகள்அவை.

ஒரு கிராமத்தின் அழகை அங்கு பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த அனுபவத்தில் அழகாகச் சொல்கிறார் கவிஞர். நெஞ்சில் இனிக்கும் நினைவுகளை மீளத்தருகின்றன கவி வரிகள் .

கடப்பு, வரிச்சுக் கம்பு, மாட்டுக் காலை, மஞ்சவணாஞ் சோலை என்று வரும் சொற்கள் எதிர்காலச் சந்ததி தெரிந்து கொள்ளும் வகையில் விளக்கம் தரப்பட்டிருக்க வேண்டிய சொற்கள்.

'காளமாடு' என்ற கவிதை, பயிர்ச்செய்கை அனுபவங்களை சொல்கிறது. சொற்கள் இயல்பாகவே வந்து விழுகின்றன. கவிதை எழுத வேண்டுமென்று குந்தியிருந்து எழுதுபவராக கவிஞரைக் கணிப்பிட்டுவிட முடியாதவாறு மண்வாசனை பேச்சு வழக்குச் சொற்கள் அவருக்கு கை கொடுக்கின்றன.




மூக்கணம் போட்ட மாடு /முதுகில் ஒரு காயம் அதுக்கு / பார்க்கிற நேரமெல்லாம் /என்ர படலையடியில தான் / போக்கணம் கெட்ட யாரோ /பொழுதுபடத் திறந்து விட்டு /மேய்க்கிற கீய்க்கிறல்ல /மெதுவாக விரசி விடுறான் / காய்க்கிற பயித்த நிக்கு/ கத்தரி பூத்து நிக்கு/ நாத்துக் குட்ட வெண்டி நிக்கு/ நக்கித் தெண்டால் ஒண்டு மில்லை/

வழக்கிழந்து வருகிற செயற்பாடுகள், சொற்கள் என்பன 'கொத்து வேலி'க்குள் புத்துயிர் பெற்று இன்பத் திளைப்பைத் தருகின்றன.

பொன்னர்ர பொடியனுக்கு/ புதன்கிழமை பொட்டிகொண்டு/ பின்னேரம் வாறதென்று/ பின்வேலி கட்டுறாங்க /நாளுக்கு கல்லு வச்சு நாலுமாசமும் ஆகல்ல /கோளுக்கு மாபிள் போட்டு இப்ப /குடி போக ரெடியாமே!"

என்று வரும் கவிதையில் மாப்பிள்ளை கேட்டு பெட்டி கொண்டு போவதும், அதற்காக இருக்கும் இடத்தினை அழகுபடுத்தும் சம்பிரதாயமும், நாள் பார்த்து நட்சத்திரம் பார்த்து வீடு கட்டத் தொடங்கும் சம்பிரதாயங்களும், சடங்குகளும் சிறப்பாக விபரிக்கப்பட்டுள்ளன.

களி வீடு, பனையோலைப் பெட்டி போன்ற கவிதைகள் கடந்த கால வாழ்வை மீள நினைத்துப் பார்க்க வைக்கின்றன.

உரித்தெடுத்த கட்டை நாட்டி/ உள்ளாலே வரிச்சு வைத்து/ குழைத்து எடுத்த களியினையே/ குறுக்காக வரிச்சுள் வைப்போம் /சுவரெழும்பும் களிவீட்டில் /

சமைக்க குடில் / சாமிக்கு ஒரு பந்தல்/ சட்டி பானை வைக்க அட்டுவம்/ குளிக்க கிணறு / குப்பை போட மடு /தழைக்கும் வேலியில்/ தாவிப்பாயும் மரம் என்று களிவீட்டை ஒவ்வொன்றாக இரசித்து இலயிக்கிறது மனம்.

"காய்பறிக்கவெனக் காய்போட்ட பெட்டி
பூப்பறிக்க வெனப் பூப்போட்ட பெட்டி
கால்மாறிப் போவதற்கு கலியாணப் பெட்டி
களவெட்டி வேலைக்கு தனியான கைப்பெட்டி
" பனையோலைப்பெட்டி என்ற கவிதையில் அதன் உருவாக்கத்தையும் பெட்டியின் வகைகளையும், பாவனையையும் நமது பிற்சந்ததியினரும் அறிந்து கொள்ளும் வகையில் அழகாகத் தருகிறார் கவிஞர்.

கிராமத்தின் உணவுப் பாரம்பரியம் பல கவிதைகளில் எடுத்தச் சொல்லப்பட்டுள்ளன. சுண்டல், சொதி, கீரிப் பொரியல், பழஞ்சோறு, நண்டுக் குழம்பு என்ற தலைப்புகளில் வரும் கவிதைகள் வாயூற வைப்பவை.

'மஞ்சள்ப் பொட்டுச் சள்ளல்/ மாங்காய் போட்டாக்க
மத்தியானக் கறிக்கு/ மச்சான் கொண்டு தந்தான்'

இவை தவிர, பயங்கர வாதக் கெடுபிடி, கொரோனா போன்றவற்றை சொல்கிற கவிதைகளும் நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்நூலுக்கு, அணிந்துரை வழங்கி இருக்கிறார் கிழக்குப் பல்கலைக்கழக கட்புலத் தொழில்நுட்பக் கலைத்துறை தலைவர் கலாநிதி சு.சிவரத்தினம். "கவிதைகள் விளங்காத மொழி விளையாட்டாக இருப்பது என்பது தற்காலத்திய போக்காக உணர்ந்து கொள்ளப்படுகிறது. இது தொடர்பான பலத்த கேள்விகள், வாதங்கள் முன்வைக்கப்படாமலே இருக்கின்றன. அவ்வாறு ஒரு சிலர் முன் வைத்தாலும்' இவர்களுக்கு இது விளங்காது, பழசுகள்' என முத்திரை குத்தப்படுவதும் நடந்தேறுகிறது. இதேநேரம் விளங்குவது போல் கவிதை எழுதுபவன் நவீன போக்கு பற்றி அறியாதவனாக கிண்டல் செய்யப்படுவதும் நடைபெறுகிறது. இந்த சிக்கலான எதார்த்த இலக்கியச் சூழலில் இருந்தே இந்த விமர்சனங்கள்,கிண்டல்கள் என்பவற்றை பொருட்படுத்தாது தனது வாழ்வனுபவத்தை தனக்குரிய பாணியில் கவிதைகளாகத் தந்திருக்கின்றார் சுதாகரன்.

சுதாகரன் நவீனத்துவம், பின் நவீனத்துவம் போன்ற இலக்கிய கோட்பாடுகளெல்லாம் படித்துவிட்டு கவிதை எழுத வந்தவரல்ல. இன்றைய தமிழ் சமூகத்தின் ஒருவகை மாதிரியாகத் தான் அவரை நான் பார்க்கிறேன். அந்த வகை மாதிரிக்கு கவிதை பொருள் உள்ளதாக சுவை உள்ளதாக இருக்க வேண்டும். இதுதான் அவருடைய கவிதைக் கோட்பாடாக மாறுகின்றது. இலக்கிய உலகில் இது முக்கியமான இலக்கிய கோட்பாடுமாகும். சுதாகரனுடைய கவிதைகள் எல்லாம் இந்த இலக்கிய கோட்பாட்டுக்குள் பொருந்துபவையாக இருக்கின்றன. அதாவது பொருளும் சுவையும் உள்ளதாக அவருடைய கவிதைகள் இருக்கின்றன." என்று அணிந்துரையில் அவர் குறிப்பிடுவதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

மரபுக் கவிதையில் இருந்து நெகிழ்ச்சியடைந்ததான ஒரு ஓசையமைப்பில், சுவைமிகுந்ததாக கிராமத்து அழகு, வாழ்வியல் பாரம்பரியம் பண்பாடு என்பவற்றைச் சொன்ன ஒரு கவிதைத் தொகுதியாகவும், அருங்காட்சியகமாகவும் கீர்த்தி பெறுகிறது "கொத்துவேலி". பைந்தமிழ்ச்சுடர் நீலையூர் சுதாவுக்கு நமது பாராட்டுக்கள்.

இன்னும் பல நூல்கள் தந்து இலக்கிய உலகில் பிரகாசித்திட வாழ்த்துகள்.

நூல் : கொத்து வேலி
ஆசிரியர் : நீலையூர் சுதா
0779003528
வெளியீடு : பத்மஹேசன் பதிப்பகம்.
நூலாசிரியர் முகவரி : 62 A, புளோரி வீதி, மணற்சேனை, கல்முனை.

பாவேந்தல்
பாலமுனை பாறூக்

## மௌனத்தின் காடு...

அவளே அன்பின்
சொர்க்கமும் நரகமும்

அவளே வாழ்க்கையின்
தாகமும் தண்ணீரும்

அவளே ஏகாந்தம்
அவளே கொண்டாட்டம்

அவளொரு தேவதை
அவளொரு பிசாசு

மேகமாகவும் கவிவாள்
புயலெனவும் உருவெடுப்பாள்

மழையாகவும் பொழிவாள்
புயலாகவும் சுழல்வாள்

இரகசியங்களை
இறுக்கிக்கொண்டு
இதழ் வழி புன்னகை விரிப்பாள்

இருகண்களில்
இருளும் ஒளியும் குடியிருக்கும்

மெழுகும் அவளே
இரும்பும் அவளே

கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்ட
கண்ணீர்ப்பூ அவள்

மௌனத்தின் காடு அவள்
சப்தங்களின் கூடும் அவள்

கூரிய ஆயுதங்கள்
தோற்றுத் தலைகுனியும்
அவள் பொறுமையில்

எத்தனை முறைகளென்று
அவளே அறியாள்
மரணித்து மறுஜனித்து
உயிர்த்து விடுவது
அவள் பொழுதுபோக்கு

அவளொரு பெருந்தீ
அவளொரு பெருந்தீவிரவாதி
நேசத்தைத்
தருவதிலும்
பெறுவதிலும்!

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

எல்லா மனிதரும் மனிதரேயென்ற
எழிலான எண்ணம் எமக்குள்
எழுந்தால்
பொல்லாத சிந்தனைகள்
யாவுமிங்கு
பொசுங்கித்தான் போயிடுமே
உண்மையென நம்பு

உலக மாந்தர் யாவருக்கும்
உதிரத்தின் நிறம் சிவப்புதான்
உணர்ந்தே நாமும் செயற்பட்டால்
உண்மையாய் நமக்கு சிறப்புதான்

நிந்தனையில்லா சிந்தனைகளை
நிசமாய் நாமும் துலக்கிடுவோம்
வந்தனம் கூறும் வாழ்க்கையிலே
வாகையைப் பெற்று
மகிழ்ந்திடுவோம்




## எழிலான எண்ணங்கள்

அழுக்கான
சிந்தனைகள் யாவையும்
அகற்றியே நாமும் நடந்திடுவோம்
புழுக்கமான சூழல் தோன்றிடினும்
புன்னகையால் வாழ்வைக்
கடந்திடுவோம்

சாதி மத வேற்றுமையை
சாகடித்தே நாமும்
வாழ்ந்திடுவோம்
ஜோதி நிலை நமக்குள்ளே
ஜோராய் ஜொலித்திட
வழி எடுப்போம்

மனிதநேயம் மனதுக்குள்ளே
மானசீகமாய் நுழைந்திடட்டும்
புனிதமான செயல்கள் பல
புத்தாக்கம் பெற்றிடட்டும்

திறந்த மனதைக்
கொண்டோராய் இத்
தரணியில் நாமும் நடந்திடுவோம்
சிறந்த மானிடர் நாமென்ற
சீரான பட்டம் பெற்றிடுவோம்

கைகளைக் கோர்த்தே நாமும்
காசினியில் களிப்பாய்
நடந்திடுவோம் அக
வைகளில் அன்பை
நிறைத்தே நாளும்
அகமகிழ்வில் அணியாய்
நிலைத்திடுவோம்.

உசனார் எம்.பஷீர்
ஏறாவூர்

## காதல்

காதல் என்னும்
தீயை விதைத்து
கண்ணீர் துளிகளால்
நனைத்து
பிரிவு என்னும்
கிளையை வளர்த்து
யாரோ ஒருவரோடு
இலையுதிர்ந்து
செல்கின்றாள்!
மௌனமாக!
நான் என்ன செய்வேன்
சொல் அன்பே !

என்.பாரத்
மானிப்பாய்





## உண்மையின் ஓர் பக்கம்

அல்லாஹ் பார்த்துக்
கொண்டிருக்கின்றான்...
நாம் பொறுமையோடு
இருக்கின்றோம்....
பொறுமையும் ஒரு
சோதனை தான்...
அக்கிரமக்காரர்களின் அழிவு
வெகு தூரத்தில் இல்லை...
சாந்தியும் சமாதானமும்
கருணையும் இரக்கமும்
அவர்கள் உள்ளத்தில்
செத்துப் போய்விட்டது....

பாலைவனத்திலும்
புல் முளைக்கும்...
இருண்டு போன உள்ளங்களில்
வறண்டு போனது ஈவிரக்கம்...
சிதறி கிடக்கும் உடல்களையும்
கை கால்களையும்
நான் கண்களால் கண்டேன்..
என் கண்கள் கூட ஒளி இழந்தன...
சிதறிய உடல் துண்டுகள்
நாளை மறுமையில் ஒளிக்கீற்றுகளாக...
கஸ்தூரி வாடை வீசும்
சுவர்க்கவாசிகளாக....

நான் ஒரு கனவு கண்டேன்..
கனவில் தெரிந்தது புதிய உதயம்...
உதயத்தின் வெளிச்சத்தில்
பலஸ்தீன மண்ணிலே
பூத்துக் குலுங்கும்
சமாதான வெள்ளை மலர்கள்....
பலஸ்தீன் மறுபடியும்
பீனிக்ஸ் பறவை போல
எழுந்து நிற்கும்...
எமக்கு இது பிரார்த்தனை காலங்கள்...
எம் பிரார்த்தனைகள் யாவும்
வெற்றியின் கோலங்கள்...

அல்லாஹ் எம்மை
கைவிடமாட்டான்...
அல்லாஹ் எம்மை
கைவிடமாட்டான்...
துணிந்து நிற்போம்!!

கவிதாயினி மாஜிதா தவ்பீக்
மருதமுனை

## பெற்ற கடன்

மக்காள்,
என் கண்களிலிருந்து வடிவது
கண்ணீர் அல்ல,
இதயத்தின் வலி!

நீங்கள் தலைநிமிர்ந்து வாழ
மண்ணில்,
உடல் வளைத்து உழைத்தேன்
இன்று,
தலை நிமிர்ந்திருக்கும் நீங்கள்,
எனைத் தலை முழுகிவிட்டீர்கள்!

பஞ்சடைந்த கண்கள்,
பழுதுபட்ட இதயம்
நோய்களின் உறைவிட
மாய்
தேகம்!

செவிப்புலனும் செயலிழந்து விட்டது!

முதியோர் இல்லம் எனக்கு
முதுசனமான பிறகு
மூப்பு எனக்கு முடி சூட்டியது.
மூச்சுக்காற்றும் இன்று
முரண்பட்டு நிற்கிறது.

உங்கள் சிறகுகளுக்கு வலிமையையும்
விழிகளுக்கு வழியும் காட்டிய நான்,
உழைப்பில் கரைந்தேன்.
உங்களுக்காக,
உள்ளத்தனையுமிழந்தேன்
இன்று – வெறும் கூடாகி,

சூன்யமானதென் வாழ்வு!

நீங்கள்,
பஞ்சணையில் துயில
நெஞ்சார உழைத்த எனக்கு,
இன்று

பரற்கற்களே பஞ்சு மெத்தை!
கோடி பதிகள் உங்களுக்கு,
மாளிகை வாசம்,
தெருக்கோடி ஆலமரமே
நான் தேர்ந்தெடுத்த மாளிகை!
பிள்ளைக் கவி தீர்த்த செல்வங்களே,
என் பெற்ற கடன் தீர்வதெப்போது?

"கலாபூஷணம்
அக்கரைப்பற்று நஜ்முல்"

## மௌனித்துப் போன மௌமிதா...!

பைத்தியங்களை பிரித்தறிந்து
வைத்தியம்
செய்யும் முறையினை
கற்றாலும் காம பைத்தியத்
தினை
இனங்காண முடியாது
போனதற்கான சான்று இது...

மனிதர்களோடு
மனிதர்களாய் இருந்து
மனதில் மறைந்திருக்கும் இச்சையால்
இளம் மலர்களை
கசக்கி வீசிடும் காமுகர்களே!
மங்கையர் பெருமதியே
தாங்கள் உணர எந்த பாடநெறியாலும்
பயன் கிடைப்பதற்கில்லை...

ஆயுளின் அற்புதங்களை எந்த
ஆன்மிகத்தாலும் உங்களுக்குள்
விதைக்க முடியாது
சட்டங்களில் தண்டனைகள்
இருப்பது தெரிந்தும் அஞ்சாமல்
அவர் அனுமதியின்றி
அவரை அணுகிக்கொஞ்சும்
நீங்கள் திருந்துவது என்பது
தவறுகளை தவறுகளாய் நீங்களே

உணர்ந்து உங்கள் மனம்
செம்மை படுவதன் மூலமே
என்பதுவே சத்தியம்...

பிற பொருள்களின் பாவனையாலோ
வேறு காம உணர்வுகளைத் தூண்டும்
உத்திகளாலோ உள்ளத்தை அதற்கு
அடிமையாக்கி அதன்படி
செயற்படுவது விடுத்து
மனித உணர்வுகளுக்கு மதிப்பளித்து
மற்றவர் உயிர்களையும்
உயிராய் மதித்து
அவருக்கும் வலிக்கும் என அறிந்து
அவர் வாழும் உரிமையை அழிக்கும் வழிக்கு
செல்வதை விட்டு விடுங்கள்...

மயக்கத்தை வரவழைக்கவும்
வந்த மயக்கத்தை மீள
தெளிவு நிலைக்கு கொண்டு வரும்
அளவுக்கு மருத்துவம்
முன்னோக்கி வந்து விட்டாலும்
காமத்தின் மயக்கத்தை சுகப்படுத்துவது
சுய கட்டுப்பாடென்ற ஒன்றே... !

சி. எம். சங்கர்
பண்டாரவளை

## என் செய்ய... எது செய்ய...

என் செய்ய .. எது செய்ய ..
இனியோர்க்கு யாம் செய்ய ..

புன் செய்யும் நோக்கிருக்கா.. ?
புறமோதும் போக்கிருக்கா ..?

வன்மத்தின் நிழலிருக்கா ..?
வசைபாடும் தழலிருக்கா ..?

என்னதை இவர்கட்கு
எடுத்தோதச் சொல்லுகிறீர் ..?

வண்ணத்தை நீரறிந்தால்,
வகையிட்டு வழங்கிடுவீர் !

காவியக் கவியரசு
எம்.எஸ்.அப்துல் ஹை

## இதயமே.... இனி இனித்திரு...!

உச்சாணிக் கொம்பிலுள்ள
தலைக்கனத்தைக் கொஞ்சம்
இறக்கி வைத்தலில்

வரமாட்டேன் என கதவடைத்துச் சென்ற
பூங்காற்று வருகை தரலாம்..
உள்நெஞ்சப் பொறாமைக் கங்குகளைச்
சிறிது அணைத்து விடுவதில்

மீளாது எனக்
கணிப்பிடப்பட்ட ஐக்கியம்
மீளலாம்.

வேறுபடுத்தலைக் கொஞ்சம்
நிறுத்தி வைத்தலில்
பூக்க மறுத்ததென்ற
பூவனமொன்று பூக்கலாம்.

காலம் காலமாய் வழிமொழியும்
நானென்ற கர்வச் சட்டையை
கழற்றியெறிதலில்
ஒவ்வாமையென்றிருந்த
வாசனைத் திரவியமொன்று

ஒத்துப் போகலாம்

தொடர் பகையொன்றை
மன்னித்து விடுதலில்
பாழ்பட்டுப் போனதென்ற
ஆழ்கிணற்றில்
புதுச்சுனையொன்றின்
பிரவாகம் தோன்றலாம்..

நீயா நானா என்பதை
முடிவுக்குக் கொண்டு வருதலில்
முடிவுறா இணக்கப்பாடொன்றிற்கான
பிரகடனம் எழுதப்படலாம்..

மொத்தத்தில்...
இன்றைய பழிதீர்த்தல்களை
நிறுத்திக் கொள்வதில்

நாளைய தலைமுறைக்குச்
சீரான வழிகாட்டலொன்று
முன்மொழியப்படலாம்...
பின்தொடரப்படலாம்.........!

மக்கொனையூராள்

## வெளிநாட்டு வாழ்க்கை

புது மணமாய் காற்று
புது மனையாய் ஏற்று
புதுவிதமான சனமம் தான்

கடல் தாண்டி திடல் மாறி
மடலுக்குள் அனைத்தும்
அடக்கும் அவர்களுக்கு...

இருந்தும்
நிரப்புமா அவை என்றிட
ஆம் என்பதில் துளியும்
நிஜமில்லையே...

விடியலோடு விழிகள் விழிக்க
வியர்வைக்கோ
விடுமுறை இல்லை...

அத்தனைக்கும்
தொலைவில் இருக்கும் உற்
றாரின்
தொலைபேசி அழைப்பே
உற்ற துணை...

பிணி பீடித்த மேனியாயி
னும்

மாதக்கடைசிப் பணமதற்காய்
பணி தவறாது புரிந்திடல்
விதிக்கப்பட்ட நியதி அவர்களுக்கு...

பணியறைக்குள் முக்கால்வாசி
படுக்கையறைக்குள் கால்வாசி
பசியாற்றிட அதற்குள்
அத்தனை பரபரப்பு தான்...



தனிமையின் தோட்டாக்கள்
தினந்தோறும்
துளைத்திடினும்
தாங்கி வந்த சுமையதற்காய்
திண்டாடும் வாழ்க்கை அவர்க
ளது...

சோர்வினில் சாய்ந்து கொள்ள
துவளுகையில் தாங்கிக் கொள்ள
அசதியினில் அணைத்துக் கொள்ள
யாதுமாய் தலையணை
ஒன்று தான்...

தூர தேசம் என்றாலே
சொகுசு மிகை என்பதாய் கனா...
பாசம் நேசம் துறந்து
எதுவரை இந்தப் போராட்டம்
என்பதே விடையிலா வினா...

பாத்திமா சில்மியா
மாவனல்லை

## சுமை தாக்கி



சுமைதூக்க
எண்ணிலா இயந்திரங்கள்
என்றாலும்
தந்தை போல்
சுமைதாங்க வராது
உலக முடியும் வரை
மனைவியின் வலியில்
ஆரம்பிக்கும் அலறல்
பம்பரமாய் சுற்றி
தலைகால் விளங்காது
வைத்தியசாலை சேர்த்து
குழந்தையின் அழுகைக்காய்
கண் மூடாமல்
தந்தை நாமத்திற்காய்
காத்திருக்கும்
காந்தி மகான் தந்தை
முதல் பாரமாய்

பெற்ற குழந்தையை
கையிலேந்தியது
பாரமில்லை என்றாலும்
ஆவி போல் நெஞ்சில்
உள்நுழைந்தது
பாரம் என்று
ஓர் மூலையில்
உட்கார்ந்திருந்தது
தாயும் சேயும்
வீடுவர சொகுசு வாகனம்
தேடும் துன்பம், இன்பம்
அந்நேரத்தில்
காற்றுப்படா வாகனமும்
கண் திருஷ்டிக்கு
பொருட்களுடன்
வீடு வந்த
பேரின்பக்காரன்

தந்தை
தாயின் வாந்தியால்
உடம்பில் ஆகாரமின்றி
குழந்தையின்
பால் பசி போக்க
மனைவிற்கு
பாலில்லை என்று
குளத்து மீனும்
தேடும்
தந்தை அவன்
ஒப்பற்ற நடமாடும்
சுமைதூக்கி

முகம்மது முகைதீன் நௌபீக்
தோப்பூர்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# ரணிலை சந்திக்கச்சென்ற அந்த ராஜபக்ஷ யார்?

(2 ஆம் பக்க தொடர்...)

**நாமல் வெள்ளி விகாரைக்கு**

தொடங்கஸ்லந்தவிற்கு வந்த நாமல் கூட்டத்திற்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுடன் வெள்ளி விகாரைக்குச் சென்றார். வெள்ளி விகாரையின் விகாராதிபதியைச் சந்தித்த நாமல் அங்கிருந்த நேராக தொடங்கஸ்லந்தவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றார். நாமலுக்கு இங்கு பெரும் வரவேற்பளிக்கப்பட்டது. அதன் பின்னர், நிக்கவெரட்டிய தொகுதியில் ஜொனி ஏற்பாடு செய்திருந்த கூட்டத்திற்கு அனைவரும் சென்றனர். நாமலைச் சுற்றியிருந்தவர்கள் நாமலின் கையைப் பிடித்து செல்ஃபி எடுக்க முயன்றதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. நாமல் மிகச் சிரமத்துடன் வாகனத்தில் ஏறிக் கொண்டதோடு. தாய் ஒருவரைப் பார்த்து நாமல் தனது வாகனத்தில் கண்ணாடியை இறக்கினார்.

"மகனே, நான் உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்" என அந்த தாய் நாமலிடம் கூறிய போது, "கூறுங்கள் அம்மா?" என நாமல் கேட்டார். "மகனே, இந்த முறை நீதான் ஜனாதிபதியாவாய். ஏனெனில் மௌன வாக்குகள் உனக்கே கிடைக்கும்" என்றார் அந்தத் தாய்.

**மீண்டும் மஹிந்த சிந்தனை வேலைத்திட்டம்**

நாமல் ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதி ரத்னதீப ஹோட்டலில் வெளியிடப்படவுள்ளது. இது தொடர்பான ஆரம்ப கட்ட கலந்துரையாடல் நாமல் ராஜபக்ஷ தலைமையில் கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் விருந்தினர்கள் கலந்து கொண்டனர். "இம்முறை நாங்கள் ஒரு ஒருங்கிணைந்த அபிவிருத்தி வேலைத்திட்டத்தை முன்வைக்கிறோம்," என்று நாமல் கூறினார். "அடுத்த ஐந்து முதல் பத்து வருடங்களுக்கு மட்டுமல்ல, அடுத்த ஐம்பது நூறு வருடங்களுக்குப் பொருந்தும் வகையில் அபிவிருத்தி செய்யும் தொலைநோக்கு மற்றும் வேலைத்திட்டத்தையே நாங்கள் முன்வைக்கிறோம்" என நாமல் மேலும் கூறினார்.

"அப்படியானால் மஹிந்த சிந்தனை இதற்கு அடிப்படையாகாதா?" என பாராளுமன்ற உறுப்பினர் வீரசிங்க நாமலிடம் வினவினார். "இந்த அனைத்து விடயங்களுக்கும் அடிப்படையானது மஹிந்த சிந்தனையே" என அதற்கு பதிலளித்தார் நாமல்.

**பத்து பஸ் சங்கங்களுடன் பஸ் கெமுனுவின் ஆதரவு ரணிலுக்கு**

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் உள்ளிட்ட 10 பிரதான போக்குவரத்து சங்கங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இடம்பெற்ற விசேட கூட்டம் கடந்த செவ்வாய்கிழமை கொழும்பு மகாவலி மத்திய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் பிரதம அதிதியாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன அழைக்கப்பட்டிருந்தார். கெமுனு விஜேரத்ன தலைமையிலான இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் உட்பட 10 முக்கிய போக்குவரத்து சங்கங்களின் ஒத்துழைப்பை இதன் போது ஜனாதிபதிக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது வஜிர அபேவர்தனவுடன் அவர் சிநேகபூர்வமாக கலந்துரையாடியதுடன், ரணில் விக்கிரமசிங்க நிச்சயமாக இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் எனவும் தெரிவித்தார்.




## நீர்ப்பாசன அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

IWWRMP

### ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம் (IWWRMP)

**Project No: P166865 Credit No: IDA-6621-LK**

1. ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தின் (IWWRMP) செலவை நோக்கி சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடம் (உலக வங்கி) இருந்து நிதிக்காக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் விண்ணப்பித்திருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தத்தின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தின் திட்ட பெறுகைக் குழு, தலைவரின் சார்பில் அட்டவணை 01இல் தரப்பட்டுள்ளவாறு வட மாகாண சபை நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் பின்வரும் மறுசீரமைப்பு வேலைகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து IWWRM திட்டத்தின் திட்டப் பணிப்பாளரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை 01**

| இல. | ஒப்பந்த இல. | பணி விபரம் | அனுபவம்/ CIDA பதிவு | விலைமனு பிணை மற்றும் செல்லுபடிக் காலம் | மீளளிக்கப்படாத விலைமனு ஆவண கட்டணம் (ரூபா) | நிர்மாண வேலைகளின் சராசரி ஆண்டு பெறுமதி மற்றும் திரவச் சொத்து மற்றும்/ அல்லது கடன் வசதிகளின் குறைந்தபட்ச தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 1 | LK-MoMDE-424648-CW-RFB | தெல்லிப்பளை வைத்தியசாலையில் வழுக்கையாற்றின் மேம்பாடு (ஒப்பந்தக் காலம்: 180 நாட்கள்) | தரம்: C6 அல்லது அதற்கு மேல் சிறப்பு: நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் கால்வாய்கள் | விலைமனு பிணை பெறுமதி: ரூபா 215,000.00 செல்லுபடி: 2025.01.14 வரை (105 நாட்கள்) | 4,500,00 | 21.439 மில். மற்றும் 7.14 மில். |

3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனு ஆவணத்தில் உள்ள தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் வெற்றிகரமான விலைமனுதாரர் நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் கால்வாய்கள் சிறப்புத்தன்மையின் கீழ் மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) செல்லுபடியான பதிவு தரத்தை பெற்றிருத்தல் வேண்டும்.
4. பரீட்சிப்பதற்காக விலைமனு ஆவணங்கள் https://www.iwwrmp.lk/web/procurement/section/procurement-notices என்ற இணையதளத்தில் குறிப்புக்காக கிடைக்கப்பெறும்.
5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் கொழும்பு 07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, இல. 96, மகாவலி மத்திய கட்டிடம், 2ஆவது மாடி, IWWRM திட்ட, சிரேஷ்ட திட்ட நிபுணரிடம் (பெறுகை மற்றும் ஒப்பந்தங்கள்) இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு முன் அறிவித்தல் மூலம் 2024.09.02 ஆம் திகதி தொடக்கம் 2024.09.30 ஆம் திகதி வரை (வேலை நாட்களில்) மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை மேல் தரப்பட்டுள்ள அதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும். (தொடர்பு இல.: 0112691163).
6. விலைமனு ஆவணங்களின் தொகுதி ஒன்றுக்காக மேல் தரப்பட்டவாறு (தொகைக்காக அட்டவணை 01 ஐ பார்க்கவும்) மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் ஒன்றை ரொக்கப்பணத்தில் செலுத்தி அல்லது இலங்கை வங்கி, ஹைட் பார்க் கிளையில் 7042633 என்ற ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தின் வங்கிக் கணக்கு இலக்கத்திற்கு மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தைச் செலுத்தியதன் பின் வங்கிக் கொடுப்பனவு ரசீதின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியுடன் iwwrmp@slnet.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பி முன் அறிவித்தல் மூலம் (தொடர்பு இல.: 011-2691163) வேலை நாட்களில் மாத்திரம் 9.30 மணி தொடக்கம் 15.00 மணி வரை 2024.09.02 ஆம் திகதி தொடக்கம் 2024.09.30 ஆம் திகதி வரை கொழும்பு 07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, இல. 96, மகாவலி மத்திய கட்டிடம், 2ஆவது மாடி, IWWRM திட்டத்தின் திட்டப் பணிப்பாளருக்கு நிறுவனம்/ அமைப்பின் முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்களால் விலைமனு ஆவணங்களை பெற முடியும்.
7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மற்றும் தளப் பயணம் அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டவாறு நடத்தப்படும். குறித்த அதிகாரியின் உதவியுடன் தளங்களை பரீட்சிப்பதற்கு விலைமனுதாரர்கள் கோரப்படுகின்றனர்.

**அட்டவணை 02**

| இல. | ஒப்பந்த இல. | பணி விபரம் | தள பயணம் | விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு | விலைமனுக்களை மூடல் மற்றும் திறத்தல் (திகதி மற்றும் நேரம்) |
|---|---|---|---|---|---|
| 1 | LK-MoMDE-424648-CW-RFB | தெல்லிப்பளை வைத்தியசாலையில் வழுக்கையாற்றின் மேம்பாடு (ஒப்பந்தக் காலம்: 180 நாட்கள்) | திகதி: 2024 செப்டெம்பர் 17 அன்று நேரம்: மு.ப. 11.00 இடம்: நீர்ப்பாசன பொறியியலாளர், நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், யாழ்ப்பாண பிரிவு, மாகாண நீர்ப்பாசன திணைக்களம், பண்ணை வீதி, யாழ்ப்பாணம். | திகதி: 2024 செப்டெம்பர் 18 அன்று நேரம்: பி.ப. 2.00 மாநாட்டு அறை, IWWRMP 2ஆவது மாடி, மகாவலி மத்திய கட்டிடம், இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07. | திகதி: 2024 ஒக்டோபர் 01 அன்று நேரம்: பி.ப. 2.00 |

8. விலைமனு ஆவணங்களின் அனைத்துப் பக்கங்களிலும் விலைமனுதாரர் கையெழுத்திட்டு தமது முத்திரையை இடுதல் வேண்டும்.
9. இரு பிரதிகளுடனான முழுமையான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுவைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கத்தை தெளிவாகக் குறிப்பிட்டு அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டவாறு திட்டப் பணிப்பாளர், IWWRM திட்டம், 2ஆவது மாடி, மகாவலி மத்திய கட்டிடம், இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் சேர்த்தல் அல்லது விரைதூதர் மூலம் அனுப்புதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இரண்டுக்கு (02) மேற்படாத எண்ணிக்கையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.

**திட்டப் பணிப்பாளர்,**
**ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம்**
**2ஆவது மாடி, மகாவலி மத்திய கட்டிடம்,**
**இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு 07.**
2024.08.29

## நீர்ப்பாசன அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

IWWRMP

### ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம் (IWWRMP)

**Project No: P166865 credit No: IDA-6621-LK**

1. ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தின் (IWWRMP) செலவை நோக்கி சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடம் (உலக வங்கி) இருந்து நிதிக்காக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் விண்ணப்பித்திருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தத்தின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தின் திட்ட பெறுகைக் குழு, தலைவரின் சார்பில் அட்டவணை 01இல் தரப்பட்டுள்ளவாறு வட மாகாண சபை நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் பின்வரும் மறுசீரமைப்பு வேலைகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து IWWRM திட்டத்தின் திட்டப் பணிப்பாளரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை 01**

| இல. | ஒப்பந்த இல. | பணி விபரம் | அனுபவம்/ CIDA பதிவு | விலைமனு பிணை மற்றும் செல்லுபடிக் காலம் | மீளளிக்கப்படாத விலைமனு ஆவண கட்டணம் (ரூபா) | நிர்மாண வேலைகளின் சராசரி ஆண்டு பெறுமதி மற்றும் திரவச் சொத்து மற்றும்/ அல்லது கடன் வசதிகளின் குறைந்தபட்ச தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 1 | LK-MoMDE-424574-CW-RFB | பொன்னலை SWE அணையின் மேம்பாடு (ஒப்பந்தக் காலம்: 180 நாட்கள்) | தரம்: C6 அல்லது அதற்கு மேல் சிறப்பு: நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் கால்வாய்கள் | விலைமனு பிணை பெறுமதி: ரூபா 258,000.00 செல்லுபடி: 2025.01.14 வரை (105 நாட்கள்) | 5,100.00 | 25.79 மில். மற்றும் 8.60 மில். |

3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனு ஆவணத்தில் உள்ள தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் வெற்றிகரமான விலைமனுதாரர் நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் கால்வாய்கள் சிறப்புத்தன்மையின் கீழ் மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) செல்லுபடியான பதிவு தரத்தை பெற்றிருத்தல் வேண்டும்.
4. பரீட்சிப்பதற்காக விலைமனு ஆவணங்கள் https://www.iwwrmp.lk/web/procurement/section/procurement-notices என்ற இணையதளத்தில் குறிப்புக்காக கிடைக்கப்பெறும்.
5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் கொழும்பு 07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, இல. 96, மகாவலி மத்திய கட்டிடம், 2ஆவது மாடி, IWWRM திட்ட, சிரேஷ்ட திட்ட நிபுணரிடம் (பெறுகை மற்றும் ஒப்பந்தங்கள்) இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு முன் அறிவித்தல் மூலம் 2024.09.02 ஆம் திகதி தொடக்கம் 2024.09.30 ஆம் திகதி வரை (வேலை நாட்களில்) மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை மேல் தரப்பட்டுள்ள அதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும். (தொடர்பு இல.: 0112691163).
6. விலைமனு ஆவணங்களின் தொகுதி ஒன்றுக்காக மேல் தரப்பட்டவாறு (தொகைக்காக அட்டவணை 01 ஐ பார்க்கவும்) மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் ஒன்றை ரொக்கப்பணத்தில் செலுத்தி அல்லது இலங்கை வங்கி, ஹைட் பார்க் கிளையில் 7042633 என்ற ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தின் வங்கிக் கணக்கு இலக்கத்திற்கு மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தைச் செலுத்தியதன் பின் வங்கிக் கொடுப்பனவு ரசீதின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியுடன் iwwrmp@sltnet.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பி முன் அறிவித்தல் மூலம் (தொடர்பு இல.: 011-2691163) வேலை நாட்களில் மாத்திரம் 9.30 மணி தொடக்கம் 15.00 மணி வரை 2024.09.02 ஆம் திகதி தொடக்கம் 2024.09.30 ஆம் திகதி வரை கொழும்பு 07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, இல. 96, மகாவலி மத்திய கட்டிடம், 2ஆவது மாடி, IWWRM திட்டத்தின் திட்டப் பணிப்பாளருக்கு நிறுவனம்/ அமைப்பின் முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்களால் விலைமனு ஆவணங்களை பெற முடியும்.
7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மற்றும் தளப் பயணம் அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டவாறு நடத்தப்படும். குறித்த அதிகாரியின் உதவியுடன் தளங்களை பரீட்சிப்பதற்கு விலைமனுதாரர்கள் கோரப்படுகின்றனர்.

**அட்டவணை 02**

| இல. | ஒப்பந்த இல. | பணி விபரம் | தள பயணம் | விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு | விலைமனுக்களை மூடல் மற்றும் திறத்தல் (திகதி மற்றும் நேரம்) |
|---|---|---|---|---|---|
| 1 | LK-MoMDE-424574-CW-RFB | பொன்னலை SWE அணையின் மேம்பாடு (ஒப்பந்தக் காலம்: 180 நாட்கள்) | திகதி: 2024 செப்டெம்பர் 17 அன்று **நேரம்**: பி.ப. 10.00 **இடம்:** நீர்ப்பாசன பொறியியலாளர், நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், யாழ்ப்பாண பிரிவு, மாகாண நீர்ப்பாசன திணைக்களம், பண்ணை வீதி, யாழ்ப்பாணம். | திகதி: 2024 செப்டெம்பர் 18 அன்று நேரம்: பி.ப. 2.00 மாநாட்டு அறை, IWWRMP 2ஆவது மாடி, மகாவலி மத்திய கட்டிடம், இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07. | திகதி: 2024 ஒக்டோபர் 01 அன்று நேரம்: பி.ப. 2.00 |

8. விலைமனு ஆவணங்களின் அனைத்துப் பக்கங்களிலும் விலைமனுதாரர் கையெழுத்திட்டு தமது முத்திரையை இடுதல் வேண்டும்.
9. இரு பிரதிகளுடனான முழுமையான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுவைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கத்தை தெளிவாகக் குறிப்பிட்டு அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டவாறு திட்டப் பணிப்பாளர், IWWRM திட்டம், 2ஆவது மாடி, மகாவலி மத்திய கட்டிடம், இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் சேர்த்தல் அல்லது விரைதூதர் மூலம் அனுப்புதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இரண்டுக்கு (02) மேற்படாத எண்ணிக்கையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.

**திட்டப் பணிப்பாளர்,**
**ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம்**
**2ஆவது மாடி, மகாவலி மத்திய கட்டிடம்,**
**இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு 07.**
2024.08.29

# இலங்கை – இந்தியாவுக்கு பாலமாக திகழ்ந்தவர்; ஏ.எஸ் மணவைத்தம்பி

**இன்று அன்னாரது 17ஆவது ஆண்டு நினைவுநாள் ஆகும்.**

மணவைத்தம்பி தமிழகத்தின் தென்கோடியான கடற்கரை மீனவ கிராமமான மணப்பாடு ஊரில் பிறந்தவர். தனது 12 வயதில் மாமன் முறையான ஒருவரால் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டார். கொழும்பு மிராண்டாஸ் நிறுவனத்தில் அலுவலகப் பையனாக தனது பணியை ஆரம்பித்தார். பின்னர் கண்டி கிங்ஸ் ஹோட்டலில் வேலை பார்த்தார். அதனைத் தொடர்ந்து கொழும்பு எல்பின்ஸ்டன் தியட்டரில் கான்டீன் ஊழியராக சேவையாற்றினார்.

இலங்கைதிராவிட முன்னேற்றகழகத்தில் தன்னை இணைத்து முழுத் தொண்டனாகவும், சிறந்த பேச்சாளனாகவும் விளங்கினார். அத்துடன் இலங்கையின் மாற்றுத் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களோடு நல்லுறவையும், நல்ல நட்பையும் பேணிவந்தார்.







தனது பெயரைக் கூட திராவிட பாரம்பரியத்துக்கேற்ப மணவைத்தம்பி என மாற்றிக்கொண்டார். இலங்கை திராவிட முன்னேற்ற கழகத்தின் பொது செயலாளராகவும் திகழ்ந்தார்.

அப்போதைய இலங்கைப் பிரதமராகதிருமதி.ஶ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆட்சிசெய்த காலத்தில் அரசோடு இவருக்கு ஏற்பட்ட முரண்பாடு காரணமாக மனைவி மற்றும் பிள்ளைகளோடு இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு நாடு கடத்தப்பட்டார்.

மணவைத் தம்பியை ஆசிரியராகக் கொண்டு கொழும்பில் வெளிவந்த திரைக் கலை எனும் சஞ்சிகை புத்தகக் கடைகளில் மட்டுமல்லாது அனைத்து தியேட்டர்களிலுமுள்ள கன்டீன்களிலும் விற்பனைக்கு வந்தது.

தமிழகம் வந்துசேர்ந்த மணவைத் தம்பி தி.மு.க அரசியலில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு செயலாற்றினார். தி.மு.க கழகத்தின் பொதுக்குழு உறுப்பினராக அவரை கலைஞர் கருணாநிதி நியமனம் செய்து பெருமைப்படுத்தினார்.



இலங்கையில் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நிவாரணம் தேடி தந்தை எஸ்.ஜே.வி செல்வநாயகம், அமிர்தலிங்கம் ஆகியோர் தமிழகம் சென்றபோது அவர்களை அழைத்துக் கொண்டுதந்தைஈ.வெ.ரா. பெரியார், கலைஞர் கருணாநிதி மற்றும் பல அரசியல் தலைவர்களையும் மற்றும் பத்திரிகையாளர்களையும் சந்திக்க ஏற்பாடு செய்தார். மணவைத்தம்பி உலகைவிட்டு மறைந்தபோதிலும் அவரது நினைவுகள் என்றென்றும் எமது நெஞ்சில் நிறைந்து நிற்கும்.

அவரது மூத்த புதல்வன் மணவை அசோகனும் தந்தை போன்றே இலங்கை – தமிழக நல்லுறவுக்கு ஒரு பாலமாக செயற்படுகின்றமை பாராட்டுக்குரியது.

**அ. கனகசூரியர்**


## நீர்ப்பாசன அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

IWWRMP

### ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம் (IWWRMP)

**Project No: P166865 Loan No: IDA-6621-LK**

1. ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தின் (IWWRMP) செலவை நோக்கி சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடம் (உலக வங்கி) இருந்து நிதிக்கான இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் விண்ணப்பித்திருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தத்தின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தின் திட்ட பெறுகைக் குழு, தலைவரின் சார்பில் அட்டவணை 01 தரப்பட்டுள்ளவாறு வட மாகாண சபை நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் பின்வரும் மறுசீரமைப்பு வேலைகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து IWWRM திட்டத்தின் திட்டப் பணிப்பாளரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை 01**

| இல. | ஒப்பந்த இல. | பணி விபரம் | அனுபவம்/ CIDA பதிவு | விலைமனு பிணை மற்றும் செல்லுபடிக் காலம் | மீளளிக்கப்படாத விலைமனு ஆவண கட்டணம் (ரூபா) | நிர்மாண வேலைகளின் சராசரி ஆண்டு பெறுமதி மற்றும் திரவச் சொத்து மற்றும்/ அல்லது கடன் வசதிகளின் குறைந்தபட்ச தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 1 | LK-MOMDE-225762-CW-RFB | மருதகுளத்தில் குளக்கட்டு வேலைகளின் மறுசீரமைப்பு (ஒப்பந்தக் காலம்: 365 நாட்கள்) | தரம்: C3 அல்லது அதற்கு மேல் சிறப்பு: நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் கால்வாய்கள் | விலைமனு பிணை பெறுமதி ரூபா 3,000,000.00 செல்லுபடி: 2025.01.29 வரை (119 நாட்கள்) | 35,000,00 | 300.00 மில். மற்றும் 55.0 மில். |

3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனு ஆவணத்தில் உள்ள தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் வெற்றிகரமான விலைமனுதாரர் கட்டிட நிர்மாணத்தின் சிறப்புத்தன்மையின் கீழ் மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) செல்லுபடியான பதிவு தரத்தை பெற்றிருத்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பொதிகளுக்கான விலைக்கேட்புக்கு விலைமனுதாரர்களுக்கு சுதந்திரம் இருந்தபோதும், CIDA பதிவில் உள்ள திறன் வரம்புகளுக்கு அமையவே தேர்வு மேற்கொள்ளப்படும்.

4. பரீட்சிப்பதற்காக விலைமனு ஆவணங்கள் https://www.iwwrmp.lk/web/procurement/section/procurement-notices என்ற இணையதளத்தில் குறிப்புக்காக கிடைக்கப்பெறும்.

5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் கொழும்பு - 07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, இல. 96, மகாவலி மத்திய கட்டிடம், 2ஆவது மாடி, IWWRM திட்ட, சிரேஷ்ட திட்ட நிபுணரிடம் (பெறுகை மற்றும் ஒப்பந்தங்கள்) இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு முன் அறிவித்தல் மூலம் 2024.09.02 ஆம் திகதி தொடக்கம் 2024.10.01 ஆம் திகதி வரை (வேலை நாட்களில்) மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை மேல் தரப்பட்டுள்ள அதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும். (தொடர்பு இல.: 0112691163).

6. விலைமனு ஆவணங்களின் தொகுதி ஒன்றுக்காக மேல் தரப்பட்டவாறு (தொகைக்காக அட்டவணை 01 ஐ பார்க்கவும்) மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் ஒன்றை ரொக்கப்பணத்தில் செலுத்தி அல்லது இலங்கை வங்கி, ஹைட் பார்க் கிளையில் 7042633 என்ற ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தின் வங்கிக் கணக்கு இலக்கத்திற்கு மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தைச் செலுத்தியதன் வங்கிக் கொடுப்பனவு ரசீதின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியுடன் iwwrmp@sltnet.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பி முன் அறிவித்தல் மூலம் (தொடர்பு இல.: 011-2691163) வேலை நாட்களில் மாத்திரம் 9.30 மணி தொடக்கம் 15.00 மணி வரை 2024.09.02 ஆம் திகதி தொடக்கம் 2024.10.01 ஆம் திகதி வரை கொழும்பு 01, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, இல. 96, மகாவலி மத்திய கட்டிடம், 2ஆவது மாடி, IWWRM திட்டத்தின் திட்டப் பணிப்பாளருக்கு நிறுவனம்/ அமைப்பின் முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்களால் விலைமனு ஆவணங்களை பெற முடியும்.

7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மற்றும் தளப் பயணம் அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டவாறு நடத்தப்படும். குறித்த அதிகாரியின் உதவியுடன் தளங்களை பரீட்சிப்பதற்கு விலைமனுதாரர்கள் கோரப்படுகின்றனர்.

**அட்டவணை 02**

| இல. | ஒப்பந்த இல. | பணி விபரம் | தள பயணம் | விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு | விலைமனுக்களை மூடல் மற்றும் திறத்தல் (திகதி மற்றும் நேரம்) |
|---|---|---|---|---|---|
| 1 | LK-MOMDE-225762-CW-RFB | மருதகுளத்தில் குளக்கட்டு வேலைகளின் மறுசீரமைப்பு (ஒப்பந்தக் காலம்: 365 நாட்கள்) | திகதி: 2024 செப்டெம்பர் 16 அன்று நேரம்: மு.ப. 10.00 இடம்: நீர்ப்பாசன பொறியியலாளர், நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், வவுனிக்குளம் பிரிவு, முல்லைத்தீவு | திகதி: 2024 செப்டெம்பர் 18 அன்று நேரம்: மு.ப. 10.00 மாநாட்டு அறை, IWWRMP/PMU 2ஆவது மாடி, மகாவலி மத்திய கட்டிடம், இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07. | திகதி: 2024 ஒக்டோபர் 02 அன்று நேரம்: பி.ப. 2.00 |

8. விலைமனு ஆவணங்களின் அனைத்துப் பக்கங்களிலும் விலைமனுதாரர் கையெழுத்திட்டு தமது முத்திரையை இடுதல் வேண்டும்.

9. இரு பிரதிகளுடனான முழுமையான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுவைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கத்தை தெளிவாகக் குறிப்பிட்டு அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டவாறு திட்டப் பணிப்பாளர், IWWRM திட்டம், 2ஆவது மாடி, மகாவலி மத்திய கட்டிடம், இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் சேர்த்தல் அல்லது விரைதூதர் மூலம் அனுப்புதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இரண்டுக்கு (02) மேற்படாத எண்ணிக்கையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.

**திட்டப் பணிப்பாளர்,**
**ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம்**
**2ஆவது மாடி, மகாவலி மத்திய கட்டிடம்,**
**இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு 07.**
**2024.08.29**



## நீர்ப்பாசன அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

IWWRMP

### ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம் (IWWRMP)

**Project No: P166865 Loan No: IDA-6621-LK**

1. ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தின் (IWWRMP) செலவை நோக்கி சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடம் (உலக வங்கி) இருந்து நிதிக்காக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் விண்ணப்பித்திருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தத்தின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தின் திட்ட பெறுகைக் குழு, தலைவரின் சார்பில் அட்டவணை 01 தரப்பட்டுள்ளவாறு வட மாகாண சபை நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் பின்வரும் மறுசீரமைப்பு வேலைகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து IWWRM திட்டத்தின் திட்டப் பணிப்பாளரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை 01**

| இல. | ஒப்பந்த இல. | பணி விபரம் | அனுபவம்/ CIDA பதிவு | விலைமனு பிணை மற்றும் செல்லுபடிக் காலம் | மீளளிக்கப்படாத விலைமனு ஆவண கட்டணம் (ரூபா) | நிர்மாண வேலைகளின் சராசரி ஆண்டு பெறுமதி மற்றும் திரவச் சொத்து மற்றும்/ அல்லது கடன் வசதிகளின் குறைந்தபட்ச தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 1 | LK-MOMDE-163064-CW-RFB | நித்தகைக்குளத்தில் குளக்கட்டு வேலைகளின் மறுசீரமைப்பு (ஒப்பந்தக் காலம்: 365 நாட்கள்) | தரம்: C3 அல்லது அதற்கு மேல் சிறப்பு: நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் கால்வாய்கள் | விலைமனு பிணை பெறுமதி ரூபா 3,380,000.00 செல்லுபடி: 2025.01.29 வரை (119 நாட்கள்) | 37,000.00 | 337.00 மில். மற்றும் 56.00 மில். |

3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனு ஆவணத்தில் உள்ள தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் வெற்றிகரமான விலைமனுதாரர் கட்டிட நிர்மாணத்தின் சிறப்புத்தன்மையின் கீழ் மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) செல்லுபடியான பதிவு தரத்தை பெற்றிருத்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பொதிகளுக்கான விலைக்கேட்புக்கு விலைமனுதாரர்களுக்கு சுதந்திரம் இருந்தபோதும், CIDA பதிவில் உள்ள திறன் வரம்புகளுக்கு அமையவே தேர்வு மேற்கொள்ளப்படும்.

4. பரீட்சிப்பதற்காக விலைமனு ஆவணங்கள் https://www.iwwrmp.lk/web/procurement/section/procurement-notices என்ற இணையதளத்தில் குறிப்புக்காக கிடைக்கப்பெறும்.

5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் கொழும்பு 07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, இல. 96, மகாவலி மத்திய கட்டிடம், 2ஆவது மாடி, IWWRM திட்ட, சிரேஷ்ட திட்ட நிபுணரிடம் (பெறுகை மற்றும் ஒப்பந்தங்கள்) இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு முன் அறிவித்தல் மூலம் 2024.09.02 ஆம் திகதி தொடக்கம் 2024.10.01 ஆம் திகதி வரை (வேலை நாட்களில்) மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை மேல் தரப்பட்டுள்ள அதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும். (தொடர்பு இல.: 0112691163).

6. விலைமனு ஆவணங்களின் தொகுதி ஒன்றுக்காக மேல் தரப்பட்டவாறு (தொகைக்காக அட்டவணை 01 ஐ பார்க்கவும்) மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் ஒன்றை ரொக்கப்பணத்தில் செலுத்தி அல்லது இலங்கை வங்கி, ஹைட் பார்க் கிளையில் 7042633 என்ற ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தின் வங்கிக் கணக்கு இலக்கத்திற்கு மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தைச் செலுத்தியதன்பின் வங்கிக் கொடுப்பனவு ரசீதின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியுடன் iwwrmp@sltnet.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பி முன் அறிவித்தல் மூலம் (தொடர்பு இல.: 011-2691163) வேலை நாட்களில் மாத்திரம் 9.30 மணி தொடக்கம் 15.00 மணி வரை 2024.09.02 ஆம் திகதி தொடக்கம் 2024.10.01 ஆம் திகதி வரை கொழும்பு 07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, இல. 96, மகாவலி மத்திய கட்டிடம், 2ஆவது மாடி, IWWRM திட்டத்தின் திட்டப் பணிப்பாளருக்கு நிறுவனம்/ அமைப்பின் முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்களால் விலைமனு ஆவணங்களை பெற முடியும்.

7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மற்றும் தளப் பயணம் அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டவாறு நடத்தப்படும். குறித்த அதிகாரியின் உதவியுடன் தளங்களை பரீட்சிப்பதற்கு விலைமனுதாரர்கள் கோரப்படுகின்றனர்.

**அட்டவணை 02**

| இல. | ஒப்பந்த இல. | பணி விபரம் | தள பயணம் | விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு | விலைமனுக்களை மூடல் மற்றும் திறத்தல் (திகதி மற்றும் நேரம்) |
|---|---|---|---|---|---|
| 1 | LK-MOMDE-163064-CW-RFB | நித்தகைக்குளத்தில் குளக்கட்டு வேலைகளின் மறுசீரமைப்பு (ஒப்பந்தக் காலம்: 365 நாட்கள்) | திகதி: 2024 செப்டெம்பர் 16 அன்று நேரம்: பி.ப. 2.00 இடம்: நீர்ப்பாசன பொறியியலாளர், நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், முத்தையன்காடு பிரிவு | திகதி: 2024 செப்டெம்பர் 18 அன்று நேரம்: மு.ப. 10.00 மாநாட்டு அறை, IWWRMP/PMU 2ஆவது மாடி, மகாவலி மத்திய கட்டிடம், இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07. | திகதி: 2024 ஒக்டோபர் 2 அன்று நேரம்: பி.ப. 2.00 |

8. விலைமனு ஆவணங்களின் அனைத்துப் பக்கங்களிலும் விலைமனுதாரர் கையெழுத்திட்டு தமது முத்திரையை இடுதல் வேண்டும்.

9. இரு பிரதிகளுடனான முழுமையான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுவைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கத்தை தெளிவாகக் குறிப்பிட்டு அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டவாறு திட்டப் பணிப்பாளர், IWWRM திட்டம், 2ஆவது மாடி, மகாவலி மத்திய கட்டிடம், இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் சேர்த்தல் அல்லது விரைதூதர் மூலம் அனுப்புதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இரண்டுக்கு (02) மேற்படாத எண்ணிக்கையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.

**திட்டப் பணிப்பாளர்,**
**ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம்**
**2ஆவது மாடி, மகாவலி மத்திய கட்டிடம்,**
**இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு 07.**
**2024.08.29**

**நீர்ப்பாசன அமைச்சு**

# விலைமனுக்கோரல்

## ஒருங்கிணைந்த நீரேந்தும் பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)

**செயற்றிட்ட இல.: பி166865** **கடனிலக்கம்: IDA-6621 – LK**

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (உலக வங்கி) **IWWRMP** இன் ஆகுசெலவிற்கான நிதியிடலுக்கு விண்ணப்பித்திருப்பதுடன் இக் கடன் பெறுகைளின் பாகமொன்றை கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் செயற்றிட்ட பெறுகைக் குழுத்தலைவரின் சார்பாக 01 ஆம் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளவாறு நீர் வளங்கள் சபையின் கீழுள்ள வேலைகள் ஒப்பந்தங்களுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை IWWRM செயற்றிட்ட, செயற்றிட்ட பணிப்பாளர் அழைக்கின்றார்.

**01 ஆம் அட்டவணை**

| இல. | ஒப்பந்த பெயர் (ஒப்பந்த இல) | பொதி இல. | வேலையின் விளக்கம் | அனுபவம் / CIDA பதிவு | சேள்விப்பிணை மற்றும் செல்லுபடியாகும் கால எல்லை | மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணம் (ரூபாவில்) | நிருமாண வேலையின் வருடாந்த சராசரி பெறுமதி மற்றும் திரவச் சொத்துக்கள் மற்றும்/ அல்லது கடன் வசதிகளின் ஆகக் குறைந்த தொகை (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | நீர் வளங்கள் சபைக்காக மாகாண தரை நீர் முகாமைத்துவ அலகுகளை தாபிப்பதற்கு பிராந்திய அலுவலகங்களை விஸ்தரித்தல் (GWMU) (LK-MoMDE-404449-CW-RFB) | 01 | அநுராதபுரத்தில் GWMU ஐ விஸ்தரித்தல் ஒப்பந்தக் கால எல்லை: 180 நாட்கள் | தரம்: சி-6 அல்லது மேற்பட்டது. விஷேடத்துவம்: கட்டிட நிர்மாணம் | விலைமனுப்பிணையின் பெறுமதி: 150,000.00ரூபா செல்லுபடியாகும் கால எல்லை: 2025.01.13 ஆம் திகதியன்று வரையும் (105 நாட்கள்) | 3,500.00 | 22.5 மில்லியன் மற்றும் 3.75 மில்லியன் |
| | | 02 | புத்தளத்தில் GWMU ஐ விஸ்தரித்தல் ஒப்பந்தக் கால எல்லை: 180 நாட்கள் | தரம்: சி-6 அல்லது மேற்பட்டது. விஷேடத்துவம்: கட்டிட நிர்மாணம் | விலைமனுப்பிணையின் பெறுமதி: 150,000.00ரூபா செல்லுபடியாகும் கால எல்லை: 2025.01.13 ஆம் திகதியன்று வரையும் (105 நாட்கள்) | | 22.5 மில்லியன் மற்றும் 3.75 மில்லியன் |
| | | 03 | வவுனியாவில் GWMU ஐ விஸ்தரித்தல் ஒப்பந்தக் கால எல்லை: 180 நாட்கள் | தரம்: சி-6 அல்லது மேற்பட்டது. விஷேடத்துவம்: கட்டிட நிர்மாணம் | விலைமனுப்பிணையின் பெறுமதி: 150,000.00ரூபா செல்லுபடியாகும் கால எல்லை: 2025.01.13 ஆம் திகதியன்று வரையும் (105 நாட்கள்) | | 22.5 மில்லியன் மற்றும் 3.75 மில்லியன் |

3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணங்களிலுள்ள தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும். மேலும், வெற்றிகரமான விலைமனுதாரர் கட்டிட நிர்மாண விஷேடத்துவத்தின் கீழ் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நிருமாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கேள்விதாரர் ஒன்றிற்கு மேலான பொதிகளை சமர்ப்பிப்பதற்கான மனச்சுயாதீனத்தைக் கொண்டிருந்தாலும் CIDA பதிவின் ஆற்றலின் எல்லைகளுக்குட்பட்டதாகவே தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
4. விலைமனுக்கோரல் ஆவணங்கள் **https://www.rmp.lk/web/procurement/section/procurement-notices** என்ற இணையதளத்தில் பரீட்சித்தலுக்கும் பார்வையிடவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை 96 ஆம் இலக்க மஹாவலி நிலைய கட்டிடத்தின் 2 ஆம் மாடியின் **IWWRM** செயற்றிட்டம் பெறுகை மற்றும் ஒப்பந்தங்களின் செயற்றிட்ட சிரேஷ்ட விஷேடத்துனரிடமிருந்து பெற்று, மேலே வழங்கப்பட்டுள்ள அதே முகவரியில் 2024.09.02 ஆம் திகதியிலிருந்து 2024.09.27 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் முன்னறிவித்தல் மூலம் (தொடர்பு இலக்கம்: 0112691163) கேள்விக்கோரல் ஆவணங்களை பரீசிக்கலாம்.
6. எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர் ஹையிட் பார்க் கிளையின் இலங்கை வங்கி கிளையின் 7042633 என்ற கணக்கிலக்கத்திற்கு ஒருங்கிணைந்த நீரேந்தும் பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் என்ற பெயரில் விலைமனுக்கோரல் ஆவணங்களின் மீளளிக்கப்படாத ஆவணங்களின் கட்டணத்திற்காக ரொக்கப் பணத்தில் அல்லது (தயவு செய்து 01 ஆம் அட்டவணையை தொகைக்காக பார்வையிடவும்) வங்கியில் பணம் செலுத்தப்பட்ட துண்டின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியை கம்பனி/ நிறுவன தலைப்புக் கடிதமொன்றுடன் 2024.09.02 ஆம் திகதியிலிருந்து 2024.09.30 ஆம் திகதி வரையும் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் வேலை நாட்களில் மாத்திரம் முன்னறிவித்தலூடாக செயற்றிட்டப் பணிப்பாளர், IWWRM செயற்றிட்டம், 2 ஆம் மாடி, மஹாவலி நிலைய கட்டிடம், இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரிக்கு **iwwrmp@sltnet.lk** என்ற மின்னஞ்சலூடாக அனுப்புதல் வேண்டும்.
7. 02 ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு விலைமனு முன்னோடிக் கூட்டமும் தள விஜயமும் நடத்தப்படும். விலைமனுதாரர் வேலைத்தளங்களை உரித்தான அலுவலகரின் உதவியுடன் பரீட்சிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**02 ஆம் அட்டவணை:**

| இல. | ஒப்பந்தப் பெயர் (ஒப்பந்த இல.) | பொதி இல. | வேலையின் விளக்கம் | தள விஜயம் | கேள்விக்கோரல் முன்கூட்டம் | கேள்விமனு மூடல் மற்றும் திறத்தல் (திகதி மற்றும் நேரம்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | நீர் வளங்கள் சபைக்காக மாகாண தரை நீர் முகாமைத்துவ அலகுகளை தாபிப்பதற்கு பிராந்திய அலுவலகங்களை விஸ்தரித்தல் (GWMU) (LK-MoMDE-404449-CW-RFB) | 01 | அனுராதபுரத்தில் GWMU ஐ விஸ்தரித்தல் ஒப்பந்தக் கால எல்லை: 180 நாட்கள் | **திகதி:** 2024 செப்டம்பர் 12 நேரம்: மு.ப. 10 மணிக்கு **அமைவிடம்:** நீர் வள சபை, பிராந்திய அலுவலகம், கொரகஹவெவ ,பண்டுலகம, அநுராதபுரம். (8.318229N,80.344408E) | **திகதி:** 2024 செப்டம்பர் 13. நேரம்: மு.ப. 10 மணிக்கு **அமைவிடம்:** மாநாட்டு அறை, IWWRMP/PMU 2ஆம் மாடி மஹாவலி நிலைய கட்டிடம் இல. 96 ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு-7 | **திகதி:** 2024 செப்டம்பர் 30 நேரம்: பி.ப. 2 மணிக்கு **அமைவிடம்:** மாநாட்டு அறை, IWWRMP/PMU 2ஆம் மாடி மஹாவலி நிலைய கட்டிடம் இல. 96 ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு-7 |
| | | 02 | புத்தளத்தில் GWMU ஐ விஸ்தரித்தல் ஒப்பந்தக் கால எல்லை: 180 நாட்கள் | **திகதி:** 2024 செப்டம்பர் 12 நேரம்: மு.ப. 10 மணிக்கு **அமைவிடம்:** நீர் வள சபை பிராந்திய அலுவலகம் புனித மரியாள் மாவத்தை சேனைக்குடியிருப்பு புத்தளம்(8.02730N, 79.84769797E) | | |
| | | 03 | வவுனியாவில் GWMU ஐ விஸ்தரித்தல் ஒப்பதந்க் கால எல்லை: 180 நாட்கள் | **திகதி:** 2024 செப்டம்பர் 12 நேரம்: பி.ப. 2 மணிக்கு **அமைவிடம்** பிராந்திய அலுவலகம் தேக்கவத்த வவுனியா(8.740430N, 80.3444408E) | | |

8. விலைமனுக்கோரல் ஆவணங்களின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் கையொப்பமிட்டு அவரது இலட்சினை பதிக்கப்படல் வேண்டும்.
9. பூர்த்தி செய்யப்பட்டு, முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் ஒப்பந்தப் பெயர் தெளிவாக குறிக்கப்பட்டு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படலாம் அல்லது தூதஞ்சல் மூலமாக செயற்றிட்டப் பணிப்பாளர், IWWRM செயற்றிட்டம், 2 ஆம் மாடி, மஹாவலி நிலைய கட்டிடம், இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரிக்கு அனுப்பப்படலாமென்பதுடன் 02 ஆம் இலக்க அட்டவணையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு. இருத்தல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள், எண்ணிக்கையில் இருவருக்கு (02) மேற்படாமல் விலைமனுக்களை திறத்தலின் போது சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**ஒருங்கிணைந்த நீரேந்தும் பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள்**
**முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**2 ஆம் மாடி, மஹாவலி நிலைய கட்டிடம்,**
**இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு-07.**
**29.08.2024**




# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

| கடன் இலக்கம் மற்றும் தலைப்பு | 3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மனித வள மேம்பாட்டுத் திட்டம் |
|---|---|
| **ஒப்பந்த இல.** | **தலைப்பு** |
| MOE/STHRD/SB/E73: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக - தொழில்நுட்ப பீடத்திற்காக மரப் பட்டறை மற்றும் Auto Mobile பட்டறை உபகரணங்களின் பெறுகை (பொருட்கள்) |
| MOE/STHRD/SB/E67: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக - தொழில்நுட்ப பீடத்திற்காக Robotics உபகரணங்களின் பெறுகை (பொருட்கள்) |
| MOE/STHRD/SB/E82: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக - தொழில்நுட்ப பீடத்திற்காக ஆய்வுகூட இலத்திரன் நுண்காட்டி, Electrical Insulation Testers, Analyzers மற்றும் தொடர்புடைய உபகரணங்களின் பெறுகை (பொருட்கள்) |
| MOE/STHRD/SB/E08: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக - தொழில்நுட்ப பீடத்திற்காக பட்டறை உபகரணங்கள் மற்றும் கருவிகளின் பெறுகை (பொருட்கள்) |
| விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி | 2024 ஒக்டோபர் 03 அன்று 10.00 மணி (உள்ளூர் நேரம்) |

1. கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மனித வள மேம்பாட்டுத் திட்டத்தை (STHRD திட்டம்) செயற்படுத்தும் செலவை நோக்கி 145 மில்லியன் அமெரிக்க டொலருக்கு இணையாக ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் (ADB) இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு நிதி கிடைக்கப்பெற்றிருப்பதோடு மேல் பெயரிடப்பட்ட ஒப்பந்தங்களின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்த நிதியின் பகுதியை செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. ADB இன் தகுதியுடைய மூல நாடுகளைச் சேர்ந்த விலைமனுதாரர்களுக்கு விலைக்கேட்பு திறந்திருக்கும்.
2. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக, தொழில்நுட்ப பீடத்திற்காக மேல் குறிப்பிடப்பட்ட பெறுகைகளுக்கு (பொருட்கள்) தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மனித வள மேம்பாட்டுத் திட்ட, பிரதித் திட்டப் பணிப்பாளரின் சார்பில் பல்கலைக்கழக பெறுகைக் குழு, தலைவரினால் (கொள்வனவாளர்) முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. பூர்த்தி செய்வதற்கான காலம் ஒப்பந்தம் வழங்கப்படும் திகதியில் இருந்து 90 நாட்களாகும்.
3. இந்த விலைக்கேட்பில் பங்கேற்பதற்கு பின்வரும் முக்கிய தகைமைகளை விலைமனுதாரர் பெற்றிருத்தல் வேண்டும்:

| பெறுகை செயற்பாட்டு இலக்கங்கள் மற்றும் விபரம் | பிரிவு 6 இல் விபரிக்கப்பட்ட வழங்கலின் நோக்கிற்கு ஒத்த பண்பு மற்றும் சிக்கற்பாட்டுடன் பின்வருமாறு குறிப்பிடப்பட்ட ஒவ்வொன்றும் பெறுமதியுடையதாக கடந்த 3 ஆண்டுகளுக்குள் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை பிரதான வழங்குநராக வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல் வேண்டும். இ. ரூபா | கடந்த 3 ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நிறைவேற்றப்படும் ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெறப்பட்ட மொத்த கொடுப்பனவாக மதிப்பிடப்பட்ட பின்வரும் குறைந்தபட்ச சராசரி ஆண்டுப் புரள்வு. இ. ரூபா |
|---|---|---|
| **MOE/STHRD/SB/E73:** | | |
| கூறு 01 - காற்றுச் சுரங்கம் | 4,827,680.00 | 12,069,200.00 |
| கூறு 02 - NDT உபகரணங்கள் | 3,910,420.80 | 9,776,052.00 |
| கூறு 03 - உற்பத்தி பட்டறை உபகரணங்கள் 03 | 4,827,680.00 | 12,069,200.00 |
| கூறு 04 - Auto Mobile பட்டறைக்காக R&D உபகரணம் | 2,172,456.00 | 5,431,140.00 |
| கூறு 05 - Injection Molding Machine | 2,413,840.00 | 6,034,600.00 |
| கூறு 06 - மர வேலை தூசி சேகரிப்பு அமைப்பு | 4,344,912.00 | 10,862,280.00 |
| கூறு 07 - காற்றமுக்கி மற்றும் துணைப்பொருட்கள் | 1,448,304.00 | 3,620,760.00 |
| **MOE/STHRD/SB/E67:** | | |
| கூறு 01 - மின்னணு திட்ட கருவிகள் | 4,200,081.60 | 10,500,204.00 |
| கூறு 02 - கணினிகள் | 2,727,639.20 | 6,819,098.00 |
| கூறு 03 - Process Trainer | 6,034,600.00 | 15,086,500.00 |
| கூறு 04 - Microcontroller development kits | 5,938,046.40 | 14,845,116.00 |
| கூறு 05 - 3D printer | 1,448,304.00 | 3,620,760.00 |
| கூறு 06 - GNSS Project உருப்படிகள் | 7,144,966.40 | 17,862,416.00 |
| **MOE/STHRD/SB/E82:** | | |
| கூறு 01 - Laboratory Scanning Electron Microscope | 48,276,800.00 | 120,692,000.00 |
| கூறு 02 - Electrical insulation tester | 2,051,764.00 | 5,129,410.00 |
| கூறு 03 – Portable Flue Gas Emissions Analyzer | 1,327,612.00 | 3,319,030.00 |
| **MOE/STHRD/SB/E08:** | | |
| கூறு 01 - இயந்திர பட்டறை உபகரணங்கள் 01 | 6,638,060.00 | 16,595,150.00 |
| கூறு 02 - உற்பத்தி பட்டறை உபகரணங்கள் 01 | 6,758,752.00 | 16,896,880.00 |
| கூறு 03 - உற்பத்தி பட்டறை உபகரணங்கள் 02 | 2,655,224.00 | 6,638,060.00 |
| கூறு 04 - மரப் பட்டறை உபகரணங்கள் 01 | 3,620,760.00 | 9,051,900.00 |
| கூறு 05 - மரப் பட்டறை உபகரணங்கள் 02 | 3,620,760.00 | 9,051,900.00 |

4. ADB இன் பொருட்கள் ஒற்றை கட்ட ஒற்றை கடித உறை நடைமுறை பெறுகைக்கு அமைய திறந்த போட்டிரீதியான விலைக்கேட்பு நடத்தப்படும் என்பதோடு விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுடைய நாடுகளைச் சேர்ந்த அனைத்து விலைமனுதாரர்களுக்கும் திறந்திருக்கும்.
5. மேலதிக விபரங்களை பெறுவதற்கு மற்றும் விலைமனு ஆவணங்களை பரீட்சிப்பதற்கு விலைமனுதாரர்கள் பின்வருமாறு தொடர்புகொள்ளல் வேண்டும்:

**சிரேஷ்ட பெறுகை அலுவலகம்**
**பெறுகை செயற்படுத்தல் பிரிவு**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மனித வள மேம்பாட்டுத் திட்டம்**
**தொழில்நுட்ப பீடம்**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்**
**பெலிஹுலோய, இலங்கை**
**ZIP Code: 70140**
**தொலைபேசி: 045-2280081**
**மின்னஞ்சல்: pasb-sthrd@mohe.gov.lk**

6. தகுதியுடைய விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் விலைமனு ஆவணங்களை வாங்குவதற்கு, பெலிஹுலோய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கு இலக்கத்திற்கு இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக, STHRD திட்ட கணக்கிற்கு ஒவ்வொரு ஆவணத்திற்காகவும் மீளளிக்கப்படாத இ. ரூபா 5,000 இனை (இ. ரூபா ஐயாயிரம் மாத்திரம்) வைப்புச் செய்து மேல் குறிப்பிடப்பட்ட பெறுகை இலக்கங்களை குறிப்பிட்டு விலைமனு ஆவணங்களை கோரி எழுத்துமூல கடிதம் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும் (அனைத்துக் கூறுகளுக்கும் ஒரு ஆவணம்). 2024.09.01 ஆம் திகதி தொடக்கம் மின்னஞ்சல் வழியாக வங்கி வைப்பு ரசீதை சமர்ப்பித்தால் மாத்திரமே ஆவணம்/கள் அனுப்பப்படும். காணாமல்போதல் அல்லது தாமதமாக விநியோகிக்கப்படுவதற்கு எந்த பொறுப்பும் ஏற்கப்படமாட்டாது.
7. விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு விலைமனு பிணையின் அசலுடன் சேர்த்து 2024.10.03 ஆம் திகதி 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு உங்களது விலைமனுவை சமர்ப்பித்தல் வேண்டும்.

**பிரதித் திட்டப் பணிப்பாளர்,**
**திட்ட செயற்படுத்தல் பிரிவு**
**ஸுவுர்சுனு திட்டம்,**
**தொழில்நுட்ப பீடம்,**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுலோய, இலங்கை**

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ஒவ்வொரு பெறுகைக்காகவும் அசல் மற்றும் நகல் என இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். அசல் மற்றும் நகல் வெவ்வேறாக மூடப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறைகளில் முறையே ‘அசல்’ மற்றும் ‘நகல்’ என குறிப்பிடுதல் வேண்டும். பின்னர் இரு கடித உறைகளையும் முத்திரை பொறிக்கப்பட்ட ஒரு கடித உறையில் மீண்டும் மூடி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு குறிப்பிடுதல் வேண்டும்.

| ஒப்பந்த இல. | தலைப்பு |
|---|---|
| MOE/STHRD/SB/E73: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக - தொழில்நுட்ப பீடத்திற்காக மரப் பட்டறை மற்றும் Auto Mobile பட்டறை உபகரணங்களின் பெறுகை (பொருட்கள்) |
| MOE/STHRD/SB/E67: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக - தொழில்நுட்ப பீடத்திற்காக Robotics உபகரணங்களின் பெறுகை (பொருட்கள்) |
| MOE/STHRD/SB/E82: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக - தொழில்நுட்ப பீடத்திற்காக ஆய்வுகூட இலத்திரன் நுண்காட்டி, Electrical Insulation Testers, Analyzers மற்றும் தொடர்புடைய உபகரணங்களின் பெறுகை (பொருட்கள்) |
| MOE/STHRD/SB/E08: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக - தொழில்நுட்ப பீடத்திற்காக பட்டறை உபகரணங்கள் மற்றும் கருவிகளின் பெறுகை (பொருட்கள்) |

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு ஒன்லைன் வழியாக இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட, சபை அறையில் இடம்பெறும்.

8. பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்**
**பெலிஹுலோய, இலங்கை**
**ZIP Code: 70140**
திகதி: 2024.08.31

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

| கடன் இலக்கம் மற்றும் தலைப்பு | 3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மனித வள மேம்பாட்டுத் திட்டம் |
|---|---|
| **ஒப்பந்த இல.** | **தலைப்பு** |
| MOE/STHRD/SB/E61: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக - தொழில்நுட்ப பீடத்திற்காக திரைபெருக்கிகள், அச்சுப்பொறிகள் மற்றும் நிழல்பிரதி இயந்திரங்களின் பெறுகை (பொருட்கள்) |
| MOE/STHRD/SB/E11C/R: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக - தொழில்நுட்ப பீட உயிரியல் ஆய்வுகூடங்களுக்கான ஆய்வுகூட உபகரணங்களின் வழங்கல் (பொருட்கள்) |
| MOE/STHRD/SB/F25: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக - தொழில்நுட்ப பீடத்திற்கு சாதன ஆய்வுகூடத்திற்காக தளபாடம் மற்றும் உபகரணங்களின் வழங்கல் (பொருட்கள்) |
| MOE/STHRD/SB/E72: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக - தொழில்நுட்ப பீடத்திற்காக பொதுவான உபகரணங்களின் வழங்கல் (பொருட்கள்) |
| விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி | 2024 ஒக்டோபர் 03 அன்று 10.00 மணி (உள்ளூர் நேரம்) |

1. கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மனித வள மேம்பாட்டுத் திட்டத்தை (STHRD திட்டம்) செயற்படுத்தும் செலவை நோக்கி 145 மில்லியன் அமெரிக்க டொலருக்கு இணையாக ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் (ADB) இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு நிதி கிடைக்கப்பெற்றிருப்பதோடு மேல் பெயரிடப்பட்ட ஒப்பந்தங்களின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்த நிதியின் பகுதியை செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. யுனூடீ இன் தகுதியுடைய மூல நாடுகளைச் சேர்ந்த விலைமனுதாரர்களுக்கு விலைக்கேட்பு திறந்திருக்கும்.
2. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக, தொழில்நுட்ப பீடத்திற்காக மேல் குறிப்பிடப்பட்ட பெறுகைகளுக்கு (பொருட்கள்) தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மனித வள மேம்பாட்டுத் திட்ட, பிரதித் திட்டப் பணிப்பாளரின் சார்பில் பல்கலைக்கழக பெறுகைக் குழு, தலைவரினால் (கொள்வனவாளர்) முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. பூர்த்தி செய்வதற்கான காலம் ஒப்பந்தம் வழங்கப்படும் திகதியில் இருந்து 90 நாட்களாகும்.
3. இந்த விலைக்கேட்பில் பங்கேற்பதற்கு பின்வரும் முக்கிய தகைமைகளை விலைமனுதாரர் பெற்றிருத்தல் வேண்டும்:

| பெறுகை செயற்பாட்டு இலக்கங்கள் மற்றும் விபரம் | பிரிவு 6 இல் விபரிக்கப்பட்ட வழங்கலின் நோக்கிற்கு ஒத்த பண்பு மற்றும் சிக்கற்பாட்டுடன் பின்வருமாறு குறிப்பிடப்பட்ட ஒவ்வொன்றும் பெறுமதியுடையதாக கடந்த 3 ஆண்டுகளுக்குள் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை பிரதான வழங்குநராக வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல் வேண்டும். இ. ரூபா | கடந்த 3 ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நிறைவேற்றப்படும் ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெறப்பட்ட மொத்த கொடுப்பனவாக மதிப்பிடப்பட்ட பின்வரும் குறைந்தபட்ச சராசரி ஆண்டுப் புரள்வு. இ. ரூபா |
|---|---|---|
| MOE/STHRD/SB/E61: | | |
| கூறு 01 - அச்சுப்பொறி அறை உருப்படி பட்டியல் | 8,000,000.00 | 20,000,000.00 |
| கூறு 02 - விரிவுரை அறை உபகணரங்கள் | 4,800,000.00 | 12,000,000.00 |
| கூறு 03 - ஒலி காட்சி உபகரணங்கள் | 8,000,000.00 | 20,000,000.00 |
| கூறு 04 - விரிவுரை மற்றும் நடைமுறை பதிவு உபகரணங்கள் | 8,000,000.00 | 20,000,000.00 |
| MOE/STHRD/SB/E11C/R: | | |
| வளிச்சீராக்கி இயந்திரம் | 26,400,000.00 | 66,000,000.00 |
| MOE/STHRD/SB/F25: | | |
| கூறு 01 - ஆய்வுகூட உபகரணங்கள் 1 | 7,000,136.00 | 17,500,340.00 |
| கூறு 02 - தரை விரிப்பிடல் | 3,862,144.00 | 9,655,360.00 |
| கூறு 03 - ஆய்வுகூட அலுமாரி, இறாக்கைகள் மற்றும் மற்ற தளபாடங்கள் | 3,982,836.00 | 9,957,090.00 |
| கூறு 04 - கணினி மற்றும் ஸ்மார்ட் சாதனம் | 2,655,224.00 | 6,638,060.00 |
| கூறு 05 - ஆய்வுகூட உபகரணங்கள் 11 | 1,762,103.20 | 4,405,258.00 |
| கூறு 06 - ஆய்வுகூட வளிச்சீராக்கி அலகுகள் மற்றும் ஸ்மார்ட் கதவு பூட்டு அமைப்பு | 4,103,528.00 | 10,258,820.00 |
| MOE/STHRD/SB/E72: | | |
| கூறு 01 - துணை உருப்படி | 2,872,469.60 | 7,181,174.00 |
| கூறு 02 - பென்ட்ரி உருப்படி | 1,206,920.00 | 3,017,300.00 |
| கூறு 03 - மேலதிக உருப்படிகள் | 13,903,718.40 | 34,759,296.00 |
| கூறு 04 - சுய சேவை உருப்படிகள் | 1,351,750.40 | 3,379,376.00 |
| கூறு 05 - இசைக் கருவிகள் | 4,006,974.40 | 10,017,436.00 |
| கூறு 06 - Online Ups | 1,206,920.00 | 3,017,300.00 |

4. ADB இன் பொருட்கள் ஒற்றை கட்ட ஒற்றை கடித உறை நடைமுறை பெறுகைக்கு அமைய திறந்த போட்டிரீதியான விலைக்கேட்பு நடத்தப்படும் என்பதோடு விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுடைய நாடுகளைச் சேர்ந்த அனைத்து விலைமனுதாரர்களுக்கும் திறந்திருக்கும்.
5. மேலதிக விபரங்களை பெறுவதற்கு மற்றும் விலைமனு ஆவணங்களை பரீட்சிப்பதற்கு விலைமனுதாரர்கள் பின்வருமாறு தொடர்புகொள்ளல் வேண்டும்:

**சிரேஷ்ட பெறுகை அலுவலகம்
பெறுகை செயற்படுத்தல் பிரிவு
விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மனித வள மேம்பாட்டுத் திட்டம்
தொழில்நுட்ப பீடம்
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்
பெலிஹுலோய, இலங்கை
ZIP Code: 70140
தொலைபேசி: 045-2280081
மின்னஞ்சல்: pasb-sthrd@mohe.gov.lk**

6. தகுதியுடைய விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் விலைமனு ஆவணங்களை வாங்குவதற்கு, பெலிஹுலோய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கு இலக்கத்திற்கு இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக, STHRD திட்ட கணக்கிற்கு ஒவ்வொரு ஆவணத்திற்காகவும் மீளளிக்கப்படாத இ. ரூபா 5,000 இனை (இ. ரூபா ஐயாயிரம் மாத்திரம்) வைப்புச் செய்து மேல் குறிப்பிடப்பட்ட பெறுகை இலக்கங்களை குறிப்பிட்டு விலைமனு ஆவணங்களை கோரி எழுத்துமூல கடிதம் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும் (அனைத்துக் கூறுகளுக்கும் ஒரு ஆவணம்). 2024.09.01 ஆம் திகதி தொடக்கம் மின்னஞ்சல் வழியாக வங்கி வைப்பு ரசீதை சமர்ப்பித்தால் மாத்திரமே ஆவணம்/கள் அனுப்பப்படும். காணாமல்போதல் அல்லது தாமதமாக விநியோகிக்கப்படுவதற்கு எந்த பொறுப்பும் ஏற்கப்படமாட்டாது.
7. விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு விலைமனு பிணையின் அசலுடன் சேர்த்து 2024.10.03 ஆம் திகதி 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு உங்களது விலைமனுவை சமர்ப்பித்தல் வேண்டும்.

**பிரதித் திட்டப் பணிப்பாளர்,
திட்ட செயற்படுத்தல் பிரிவு
STHRD திட்டம்,
தொழில்நுட்ப பீடம்,
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிஹுலோய, இலங்கை**

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ஒவ்வொரு பெறுகைக்காகவும் அசல் மற்றும் நகல் என இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். அசல் மற்றும் நகல் வெவ்வேறாக மூடப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறைகளில் முறையே 'அசல்' மற்றும் 'நகல்' என குறிப்பிடுதல் வேண்டும். பின்னர் இரு கடித உறைகளையும் முத்திரை பொறிக்கப்பட்ட ஒரு கடித உறையில் மீண்டும் மூடி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு குறிப்பிடுதல் வேண்டும்.

| ஒப்பந்த இல. | தலைப்பு |
|---|---|
| MOE/STHRD/SB/E61: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக - தொழில்நுட்ப பீடத்திற்காக திரைபெருக்கிகள், அச்சுப்பொறிகள் மற்றும் நிழற்பிரதி இயந்திரங்களின் பெறுகை (பொருட்கள்) |
| MOE/STHRD/SB/E11C/R: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக - தொழில்நுட்ப பீட உயிரியல் ஆய்வுகூடங்களுக்கான ஆய்வுகூட உபகரணங்களின் வழங்கல் (பொருட்கள்) |
| MOE/STHRD/SB/F25: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக - தொழில்நுட்ப பீடத்திற்கு சாதன ஆய்வுகூடத்திற்காக தளபாடம் மற்றும் உபகரணங்களின் வழங்கல் (பொருட்கள்) |
| MOE/STHRD/SB/E72: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக - தொழில்நுட்ப பீடத்திற்காக பொதுவான உபகரணங்களின் வழங்கல் (பொருட்கள்) |

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு ஒன்லைன் வழியாக இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட, சபை அறையில் இடம்பெறும்.

8. பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்
திணைக்கள பெறுகைக் குழு
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்
பெலிஹுலோய, இலங்கை
ZIP Code: 70140**

திகதி: 2024.09.01

## பாரிய பொருளாதார மாற்றத்தை... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

2023ஆம் ஆண்டாகும் போது மற்றும் அதன் பின்னரும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்காக அரச கடன்கள் வழங்கும் வீதத்தை 95ஐ விட குறைந்த மட்டத்தில் பேணிக் கொள்வதற்கும், மொத்த உள்நாட்டு உற்பத்திக்காக மத்திய அரசாங்கத்தினால் வருடாந்தம் வழங்கும் மொத்த நிதி வழங்கும் தேவையின் வீதத்தை 2032 ஆண்டும் அதன் பின்னரும் 13 வீதமாக அல்லது அதற்கு குறைந்த மட்டத்தில் பேணிக் கொள்வதும் அரசாங்கத்தின் இலக்காகும்.

மொத்த தேசிய உற்பத்திக்கு மத்திய அரசின் வருடாந்த கடன் சேவை வீதத்தை 2027ஆம் ஆண்டும் அதன் பின்னரும் 4.5 வீதத்தை விட குறைந்த மட்டத்திற்குக் கொண்டு வருவதும் இதன் மூலம் முக்கியமாக எதிர்பார்க்கப்படுகின்றது. அதேநேரம், 2050ஆம் ஆண்டுக்குள் நாட்டின் சுற்றுச்சூழல் பிரச்சினையான காபன் வெளியேற்றத்தை பூஜ்ஜிய நிலைக்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகப் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை உருவாக்கிக் கொள்வதற்கும், நிலையான பொருளாதார சமநிலை மற்றும் நிலையான கடன் இலக்குகளை அடைந்து கொள்வதற்கும், விவசாயிகளின் உற்பத்தித்திறன், வருமானம் மற்றும் விவசாய ஏற்றுமதியினை உயர்த்திக் கொள்வதற்கும், மெதுவான பொருளாதாரத்தின் வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கும் இந்த நிறுவனங்களை நிறுவுவதன் ஊடாக எதிர்பார்க்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பொருளாதார போட்டித் தன்மையை மேம்படுத்தல், ஏற்றுமதியினை மேம்படுத்தல், டிஜிட்டல் பொருளாதாரமாக எமது பொருளாதாரத்தை மாற்றுதல் போன்ற பல நோக்கங்களை இந்தச் சட்டத்தில் காணக்கூடியதாக உள்ளது.

செலுத்தும் இருப்பின் கணக்குப் பற்றாக்குறை வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1% ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது.

நாட்டில் இயங்கி வந்த பொருளாதார ஆணைக்குழுவிற்கு பதிலாக இலங்கை பொருளாதார ஆணைக்குழு என மாற்றப்பட்டு, அதற்குரிய அதிகாரங்கள், உறுப்பினர்களை நியமித்தல், நிதி நிருவாகம் இடம்பெறும் முறைகள், ஆணைக்குழுவின் நோக்கங்கள் என்ன, எவ்வாறு கணக்காய்வை மேற்கொள்வது? போன்ற அனைத்து விடயங்களும் விபரிக்கப்பட்டுள்ளன.

முதலீட்டு வலயங்களை உருவாக்குதல், சர்வதேச வர்த்தகத்திற்கான அலுவலகத்தை உருவாக்குதல், தேசிய உற்பத்தி திறன் ஆணைக்குழு, இலங்கை பொருளாதாரம் மற்றும் சர்வதேச வர்த்தக நிறுவனம் போன்ற ஒவ்வொரு நிறுவனங்களின் அமைப்பு, நோக்கங்கள் மற்றும் அதிகாரங்கள் எவ்வாறானவை? எவ்வாறு நியமிப்பது, நீக்குவது எவ்வாறு? அதற்கான நிதி கிடைப்பது எவ்வாறு என்ற விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

## அரச ஊழியர்களின் இதுவரையான.... (19 ஆம் பக்க தொடர்ச்சி)

எனினும் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் மீதமுள்ள அரிசியிலும் ஒரு பகுதியைக் குறைத்துக் கொண்டார்.

1977ஆம் ஆண்டு தேர்தலின் போது ஜே. ஆர். ஜயவர்தன நீதியான அரசாங்கத்தை அமைத்து 8 இறாத்தல் தானியங்களை வழங்குவதாக அறிவித்தார். ஆனால் அந்த வாக்குறுதிகள் ஒரு நாளும் நிறைவேற்றப்படவில்லை. சந்திரிகா பண்டாரநாயக்கா நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாக பகிரங்க உறுதிமொழியை வழங்கினார். அந்த வாக்குறுதியை சந்திரிக்கா நிறைவேற்றுவார் என்ற உடன்பாட்டின் அடிப்படையில் அந்த தேர்தலில் போட்டியிட்ட மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர் நந்தன குணதிலக்க தனது வேட்புமனுவை வாபஸ் பெற்றார். எனினும் அவ்வாறான ஒன்று நடக்கவில்லை. இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் வழங்கப்பட்ட பல பிரபலமான வாக்குறுதிகள் சிலதைப் பற்றிய அறிக்கையையே நான் முன்வைத்தேன்.

அரச ஊழியர்கள் கடந்த காலங்களினுள் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் கடும் சிரமங்களை அனுபவித்தமை இரகசியமான விடயமல்ல.

பொருட்களின் விலைகள், போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரித்ததன் காரணமாக அவர்களை விட பொருளாதார நெருக்கடிக்குள்ளானவர்கள் வேறு எவரும் இருக்கமாட்டார்கள். எனவே, இந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், அவர்களது வாழ்க்கை இருப்பு தொடர்பில் நம்பிக்கையான எதிர்பார்ப்பு நிலை ஏற்படுமானால் அது அவர்களுக்கு மகிழ்ச்சிக்கு காரணமாக அமையும். இருந்தபோதிலும் வரலாறு நெடுகிலும் அரச உத்தியோகத்தர்கள் மாத்திரமன்றி பொதுமக்களும் வாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்டுள்ளனர். அவ்வாறு மீண்டும் ஒருமுறை ஏமாறாதவாறு தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும்.

2015ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது ரணில் விக்கிரமசிங்க அரச ஊழியர்களின் சம்பளத்தை 10000 ரூபாவினால் அதிகரிப்பதாகக் கூறியிருந்தார். அதனை அனேகமானோர் நினைத்தது அது மற்றொரு தேர்தல் வாக்குறுதி மாத்திரமே என்றாகும். அப்படியிருந்தும் அரச ஊழியர்கள் மீது ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வைத்திருந்தார். ஜனாதிபதித் தேர்லுக்கு முன்னர் மஹிந்த ராஜபக்ச அரச ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்கினார். சம்பளத்தோடு இடைக்கால கொடுப்பனவு ஒன்றினையும் சேர்த்தார். 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு புதிய நியமனங்கள் வழங்கப்பட்டன. அவ்வாறிருந்தும் அந்தச் சந்தர்ப்பத்தில் அரச ஊழியர்கள் நம்பிக்கை வைத்திருந்தது ரணில் விக்கிரமசிங்க தொடர்பிலாகும். காரணம், அவர் வழங்கும் வாக்குறுதிகளை மீறாதவர் என்பதனாலாகும்.

# துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரல்

## றுஹுண பல்கலைக்கழகம்

1978 இன் 16ஆம் இலக்கம் கொண்ட பல்கலைக்கழக சட்டத்தின் 34(1) ஆவது பிரிவின் பிரகாரம் மற்றும் பின்னர் திருத்தப்பட்ட மற்றும் 03/2023 ஆம் இலக்கம் கொண்ட 2023.04.10 ஆம் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய 2025 மார்ச் 9 ஆம் திகதி தொடக்கம் மூன்று ஆண்டுகளுக்காக றுஹுண பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1978 இன் 16 ஆம் இலக்கம் கொண்ட பல்கலைக்கழக சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், துணைவேந்தர் முழு நேர அதிகாரி என்பதோடு, அவர் பல்கலைக்கழக தலைமை நிர்வாக அதிகாரி, தலைமை ஆய்வு அதிகாரி மற்றும் கணக்கு அதிகாரியுமாவார். அவர் பல்கலைக்கழக நிர்வாக சபையின் மற்றும் செனட் சபை ஆகிய இரண்டினதும் உத்தியோகபூர்வ உறுப்பினர் மற்றும் தலைவரும் ஆவார்.

துணைவேந்தர் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பிரகாரம் அவர் முன்னர் பதவியில் இருந்து விலகி இருந்தால்/ பதவியில் இருந்து நீக்கப்படாத பட்சத்தில் மூன்று ஆண்டு காலம் அல்லது அவர் அவரது அறுபத்து ஐந்தாவது வயதை பூர்த்தி செய்யும் வரை ஆகிய இரண்டில் முதலில் நிகழும் சந்தர்ப்பம் வரை பதவி வகிப்பார்.

ஆய்வு செயற்பாடுகளை வழிநடத்தல், நிறுவனத்தின் முகாமைத்துவ கொள்கைகளை செயற்படுத்தல் மற்றும் அறிமுகப்படுத்தல், நிர்வாக சபையின் கொள்கைகள் மற்றும் முடிவுகளை செயற்படுத்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் சாதாரண நிர்வாக செயற்பாடுகளை வழிநடத்துவது துணைவேந்தரின் அடிப்படை பொறுப்பாகும். அவர் கல்விசார் சிறப்புத்தன்மை, வெளிப்படைத்தன்மை, பொறுப்பு, பங்கேற்பு முகாமைத்துவம், பயன்மிக்க மற்றும் பக்கச்சார்பற்ற தலைமைத்துவம் ஆகிய கோட்பாடுகளை பாதுகாப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறார்.

வெற்றிகரமான விண்ணப்பதாரர் வலுவான கல்விசார் பின்புலத்தைக் கொண்டதாக நிறுவனத்தின் எதிர்கால இலக்கு மற்றும் அவற்றை எட்டுவது தொடர்பில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு தலைமைத்துவ பண்புகளைக் கொண்ட மூலோபாய பார்வை இருத்தல் வேண்டும். உள்ளக மற்றும் வெளிவாரி உட்பட தரப்புகளுடன் சிறந்து செயற்படுவதற்கு அவர் வலுவான ஆளிடை திறன், கொள்கை கட்டமைப்பு தொடர்பில் தெளிவான புரிதல் மற்றும் முடிவுகளை பயன்மிக்க வகையில் செயற்படுத்துவதற்கு அர்ப்பணிப்பு இருத்தல் வேண்டும். மேலும், பல்கலைக்கழக பிரசைகளுக்கு மற்றும் சமூகத்திற்கு நிறுவன ரீதியில் மற்றும் விரிவான பொருளுடன் அர்ப்பணிப்பை காண்பித்து பல்கலைக்கழகத்தின் ஒழுக்க நெறிமுறை மற்றும் பணிகள் தொடர்பில் ஆழமான புரிதலுடன் செயற்படுதல் வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு எதிர்பார்ப்புடைய விண்ணப்பதாரர்களுக்கு பல்கலைக்கழக இணையதளத்திற்கு பிரவேசிக்க அழைப்பு விடுக்கப்படுகிறது: https://ruh.ac.lk)

துணைவேந்தர் பதவி, பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் சம்பள அளவில் கல்விசார் சம்பளத்திற்கு உரித்தாவதோடு அடிப்படை சம்பளத்தில் 15% உபசரிப்புப் படி, தொடர்பாடல் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவை பெறுவதற்கு துணைவேந்தர் உரித்தாவார். இது தவிர துணைவேந்தருக்கு உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் வசதிகளும் ஓட்டுநருடன் உத்தியோகபூர்வ வாகனமும் உரித்தாகும்.

விண்ணப்பதாரரினால் முறையான விண்ணப்பங்களுடன் கீழுள்ள ஆவணங்களை வழங்குதல் வேண்டும்:

i) விண்ணப்பதாரரின் பிறந்த திகதியுடன் முழுமையான சுயவிபரக்கோவை (விண்ணப்பதாரர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் என்பதோடு விண்ணப்பங்களை கோரும் திகதிக்கு 63 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்).

ii) பல்கலைக்கழக மேம்பாடு குறித்த எதிர்கால நோக்கு தொடர்பில் அறிக்கை ஒன்று மற்றும் துணைவேந்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் விண்ணப்பதாரரினால் நிறைவேற்ற எதிர்பார்க்கும் இலக்கு தொடர்பில் விபரம்.

iii) அரச சேவை, கூட்டுத்தாபனம், சட்டரீதியான நிறுவனம் அல்லது வேறு உயர் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரர்/ வெளிவாரி விண்ணப்பதாரர்கள் தொடர்பில் அவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டால் விண்ணப்பதாரரை விடுவிக்க முடியுமா என்பதை குறிப்பிட்டு தமது தொழில் வழங்குநரிடம் இருந்து கடிதம்.

சுய விண்ணப்பப் படிவம் மற்றும் ஆதார ஆவணங்களை, பதிவாளர்/ நிர்வாகக் குழு செயலாளர், றுஹுண பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை, இலங்கை என்ற முகவரிக்கு 2024.09.27 ஆம் திகதி பி.ப. 3.30க்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலின் கீழ் அனுப்புதல் வேண்டும். இல்லையேல் அலுவலகத்தின் வேலை நாள் ஒன்றில், குறித்த நாள் மற்றும் நேரத்திற்கு முன்னர் கைகளில் கொண்டு ஒப்படைப்பதற்கு முடியும். விண்ணப்பப் படிவத்தைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "துணைவேந்தர் பதவி" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்குப் பின்னர் இரு மாதங்களுக்குள் அலுவலகத்தின் வேலை நாள் ஒன்றில் விசேட நிர்வாக சபை கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்படுவதோடு, மதிப்பீடு மற்றும் நேர்முகப்பரீட்சைக்கு அந்த விசேட நிர்வாக சபை கூட்டத்திற்கு தனிப்பட்ட முறையில் தோன்றும்படி விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் குறைந்தது பத்து (10) நிமிட காலத்திற்கு மற்றும் பதினைந்து (15) நிமிடங்கள் விஞ்சாத வகையில் சுருக்கமான முன்னிலைப்படுத்துகை (Presentation) ஒன்றை நிர்வாக சபை முன் வழங்கும்படி கோரப்படும். பிரத்தியேக நிலைமை ஒன்றில், ஒரு விண்ணப்பதாரர் அந்த விசேட நிர்வாகக் குழு கூட்டத்திற்கு முன் அன்றைய தினம் தோன்றுவதற்கு முடியாவிடின், அவர் அது தொடர்பில் நிர்வாக சபையின் செயலாளருக்கு முன் அறிவித்தல் ஒன்றை செய்திருந்தால் மின்னணு தொழில்நுட்பத்தின் மூலம் அதற்காக தோன்றுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

03/2023 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏற்பாடுகளின்படி, இந்தப் பதவிக்காக தேர்வு செய்தல் தொடர்பில் பரிந்துரை நிர்வாக சபை மூலம் மேற்கொள்ளப்படும். துணைவேந்தர் பதவி சார்ந்த நியமன நடைமுறை தொடர்பில் மேலதிக விபரங்களுக்கு தயவுடன் மேலுள்ள ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்தை பார்க்கவும்.

https://www.ugc.ac.lk/attachments/2442_Commission%20Circular%20No.%2003-2023.pdf விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி மற்றும் நேரத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

**பீ.எஸ். கலுகம
பதிவாளர் மற்றும் நிர்வாகக் குழு செயலாளர்
றுஹுண பல்கலைக்கழகம்
வெல்லமடம
மாத்தறை
2024.09.01**

## ஆனந்த விருந்தும் அவலப்பட்ட நண்பனும்

சகபாடிகள் சந்திக்கும்
சந்தோச ஒன்று கூடல்...!
உல்லாச விடுதி மாடி...
வகைவகையாய் வருகின்ற
உணவுகளோ தாராளம்..!
வேடிக்கைப் பேச்சுகளால்
மாடியே அதிரும் வேளை..!

வாஞ்சையுடன் வந்த நண்பன்..
சிட்டாகத் திரிந்தவன்தான்..!
விதி எனும் சக்கரத்தில்
விடுபட்ட கால்களினால்..
மாடி ஏறல் கனவாகி
வாயிலோரம் தனிமையில்..!

இரா.ஜெயக்குமார்

## தண்ணீரின் மொழி

வெப்பக் காற்று வீசும்
சுப வேளை
வறட்சித் தாய் கருவுற்றாள்
பாலைவன சிசுவை
பிரசவிக்க

நிலம் பிளந்து
தீ உமிழும் காலம்
நீரற்ற வேர்கள்
முட்கள் பூக்கும் நேரம்

நீரற்ற ஆறு
மணற்தாதை
தத்தெடுக்கும்

சோலைகள் சுவர்க்கம்
சென்றன
கானல் நீர்
கனவை விதைக்கிறது

கட்டட குடை நிழலில்
வயிற்றில் எழும்புக் கூட்டை
சுமந்து பசுக்கன்று
மரித்துக் கிடக்கிறது.

தாய்ப் பசு முகத்தில்
இரு வழி பாதையாய்
கண்ணீர் கோடுகள்
கண்ணீரில் கூட
தண்ணீர் இல்லை

காற்றும் நீரும்
வானும் மண்ணும்
கலந்துரையாடின
சூழல் மாசு பற்றி
இறுதியில்

இயற்கையை அழித்து
ஏப்ப மிட்டயிவருக்கு
இதுவும் வேண்டும்
இன்னமும் வேண்டுமென்று
கூட்டறிக்கை விட்டன

கேகாலை
எஸ். கிருஷ்ணன்

# செந்தூரம்

2024 செப்டெம்பர் 1 ஞாயிற்றுக்கிழமை



# டென்மார்க்குடன் கனடாவுக்கு நிலைத் தொடர்பா!





உலக வரைபடத்தில் கனடா இருப்பது வட அமெரிக்கா வின் முனையில். அதன் பெரும்பா லான பகுதி கடலால் சூழ்ந்திருக்கி றது. அதாவது உலகில் மிகப்பெரிய கடற்கரை எல்லையைக் கொண்ட நாடாக அது இருக்கிறது.

என்றாலும் கனடா அமெரிக்கா வுடன் மீக நீளமான எல்லையை பகிர்ந்து கொள்கிறது. உலக வரை படத்தை பார்த்தால் புரிந்துவிடும். கனடாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான நில எல்லை 8,893 கிலோமீற்றர் நீளமானது. மற்ற படி கனடாவுக்கு நிலத் தொடர்பு கொண்ட வேறு எந்த நாடும் இருப் பதாகத் தெரியவில்லை.

ஆனால், இந்தக் கூற்று 2022 ஆம் ஆண்டு வரை தான் பெருந்தும். இப்போது கனடா வுக்கு அமெரிக்கா தவிர்த்து மற்றொரு நில எல்லை இருக்க றது அதுவும் எங்கேயோ இருக் கிற டென்மார்க்குடன் தான் அது எல்லையை பகிர்ந்து கொள்கிறது.

டென்மார்க் இருப்பதோ ஐரோப் பிய கண்டத்தில், அது எப்படி வட அமெரிக்காவுடன் நிலத்தொ டர்பை வைத்திருக்கிறது? என்று தானே பார்க்கிறீர்கள். அதற்குக் காரணம் கிரீன்லாந்து. ஏனென்றால் கிரீன்லாந்து என்பது டென்மார்க் கிற்கு சொந்தமான சுயாட்சிப் பிர தேசம். இது வட அமெரிக்காவில் இருக்கிறது. கிரீன்லாந்து கனடா வுக்கு மிக நெருக்கமாக இருந்தா லும் உண்மையில் கனடாவுடன் நிலத்தொடர்பை வைத்திருக்க வில்லை.

என்றாலும் கனடா மற்றும் கிரீலாந் துக்கு இடையி லான கடல் எல்லையை பிரிக்கும்போது இடையே இருக்கும் ஒரு குட்டித் தீவு குறுக்கே வந்தது. அது தான் கென்னடி கால்வாயில் உள்ள ஹான்ஸ் தீவு. மனிதர்கள் வாழ முடியாத இந்தக் குட்டித் தீவு வெறுமனே 320 ஏக்கர் நிலப்பகுதி தான்.

ஆனால் இந்தத் தீவு யாருக்கு சொந்தம் என்பதில் கனடாவுக் கும் டென்மார்க்கிற்கும் இடையே நீண்ட காலம் கருத்து மோதல் இருந்து வந்தது. முழு தீவும் எனக் குத் தான் சொந்தம் என்று இரு நாடு களும் உரிமை கொண்டாடியதால் 50 ஆண்டுகளால் மோதல் நீடித் தது.

அதனை எல்லோரும் விஸ்கி போர் என்று கூறுவார்கள். இரு நாடுகளும் நாகரிகமாகவும் நகைச் சுவையாகவும் ஹான்ஸ் தீவுக்காக 50 ஆண்டுகள் சண்டை பிடித்தன. குறிப்பாக 1984 இல் கனடா படை யினர் தீவுக்குச் சென்று கனடா கொடியை நட்டு, கனேடிய விஸ்கி போத்தல் ஒன்றை புதைத்துவிட்டு வந்தார்கள். அந்த ஆண்டிலேயே கிரீன்லாந்து விவகாரத்திற்கான டென்மார்க் அமைச்சர் தீவுக்குச் சென்று டென்மார்க் கொடியை நட்டு அந்த நாட்டின் ஷனப்ஸ் மதுபான போத்தல் ஒன்றை புதைத் துவிட்டு வந்தார். இப்படி இரு நாடுகளும் பதிலுக்கு பதில் செய்ய ஆரம்பித்தன.



கடைசியில் 2022 ஜூன் 14 ஆம் திகதியே இந்த தீவு பிரச்சினைக்கு முடிவுகட்ட இரு நாடுகளும் ஒப் பந்தம் செய்தன. அது ஓர் இலகு வான தீர்வாக இருந்தது. அதாவது ஹான்ஸ் தீவை சரியாக இரண்டாக பிரித்து இரு நாடுகளும் பகிர்ந்து கொள்வதாக முடிவான. அன்று தொடக்கம் ஐரோப்பாவில் இருக் கும் டென்மார்க்குடன் வட அமெ ரிக்காவில் இருக்கும் கனடா நில எல்லையை பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தது.

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# 'மரண வலயம்'

எவரெஸ்ட் மலையை தொடுவதென்பது சாதாரணப்பட்டதல்ல. இன்றும் கூட அது உயிராபத்து மிக்கது. நேபாளத்தில் எவரெஸ் மலையில் 'மரண வலயம்' என்ற புள்ளி இருக்கி றது. அதாவது 8,000 மீற்றர்களுக்கு மேல் (மொத்த 8,848 மீ. உயரம்) ஒட்சிசன் மெல்லியதாக இருக்கும். எனவே அங்கே ஒட்சிசன் இன்றி மூச்சுவிட முடியாமல் இருக்கும். இந்தப் புள்ளியில் போதிய ஒட்சிசன் இருக்காது என் பதோடு அதிக சோர்வு, கடும் குளிர் மற்றும் மலையேறும்போதும் ஏற்படும் பல அபாயங்களை சந்திக்க வேண்டி ஏற்படும். இதனால் எவரெஸ்ட் மலை காவு கொண்ட 200க்கும் அதிகமான உயிர்களில் பெரும்பாலானவை இந்த மரண வலயத்திலேயே நிகழ்ந்திருக்கின்றன.

இங்கிருந்து மலையின் கீழ் இருக்கும் முகாமுக்கு பாதிக்கப்பட்டவர் கள் மற்றும் காயமடைந்தவர்களை மீட்டு அழைத்டு வருவது சாத்தியமில் லாதது. அவ்வாறான நிலை ஏற்பட்டால் அவர்களை கைவிடுவதைத் தவிர வேறு வழியில்லை. இதுவரை சுமார் 150 உடல்கள் இங்கிருந்து மீட்கப்பட்டி ருக்கின்றன. இந்தப் புள்ளியில் மலையேறும் பாதையில் உறைந்த நிலையில் சடலங்கள் இருப்பது ஒன்றும் ஆச்சரியமான செய்தியல்ல.



# மந்திரவாதியிடம் ஏமாந்த முட்டாள் திருடன்



ஈரான் தலைநகர் டெஹ்ரானில் ஒரு முட்டாள் திருடன் வங்கிக்குள் நுழைந்து அங்கிருப்பவர்களின் பணத்தை தெரியத் தெரிய திருட முயன்று பொலிஸாரிடம் வசமாக மாட்டிக்கொண்டான். ஆனால் அவனது செயல் எல்லோருக்குமே விசித்திரமாக இருந்தது. யாராவது காணக்காண திருடுவார்களா! என்பது தான் எல்லோருக்குமே அச்சரியமாக இருந்தது.

இந்த சம்பவம் பற்றி ஈரானின் 'ஜம் இ ஜம்' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. ஆனால் அந்தத் திருடன் பற்றிய விபரத்தை வெளியிடவில்லை.

அவன் செய்த முட்டாள் செயலுக்கான காரணம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது தெரியவந்தது. அந்தத் திருடனோ தான் போலி மந்திர வாதி ஒருவரால் ஏமாற்றப்பட்டுவிட்டதாக நீதிமன்றத்தில் அழுதபடி குறிப்பிட்டார்.

'அண்மையில் நான் ஒரு மந்திரவாதியை சந்தித்தேன். எப்படி விரைவாக செல்வந்தராவது என்று கேட்பதற்கே அவரைப் போய் பார்த்தேன். அப்போது அவர் என்னை யாருக்கும் காணாமல் போகும் படி ஆக்கும் தாயத்து ஒன்றை ஐந்து மில்லியன் ரியாலுக்கு விற்றார்' என்று அவர் குறிப்பிட்டதாக அந்தப் பத்திரிகை கூறியது.

அந்த முட்டாள் திருடனோ போலி மந்திரவாதி தந்த தாயத்தை கட்டியதும் தாம் வேறு யாரின் கண்ணுக்கும் தெரியாமல் போயிருப்பதாக நினைத்துக்கொண்டே வங்கியில் திருடச் சென்றிருக்கிறான்.

டெஹ்ரான் நகரில் இப்படி நடப்பது முதல்முறையாக இருக்கவில்லை. இதேபோன்று மூவர் விமான நிலையத்திற்குச் சென்று தாம் யாரின் கண்ணுக்கும் தெரியவில்லை என்று நினைத்து ஐரோப்பிய நாடு ஒன்றை நோக்கிச் செல்லும் விமானத்தில் டிக்கெட், கடவுச்சீட்டு எதுவும் இன்றி ஏற முயன்று பிடிபட்டனர். எனவே, அந்தப் போலி மத்திரவாதியை தேடும் முயற்சியில் பொலிஸார் தீவிரம் காட்டினார்கள்.



பெண்ணின் அப்பா தப்பா எடுத்துக்காதீங்க... ஏ பொண்ணு கொஞ்சம் ஜேவியல் டய்ப்.
மாப்பிளையின் அப்பா அதுக்காக கல்யாணத்துக்கு "ஊ சொல்றீயா மாமா னு" எனக்கிட்டயேவா கேக்குறது



அப்பா: ஒரு ஊருல ஒரு வயசான பாட்டி இருந்தாங்களாம்....
மகன்: பொய் சொல்லாதீங்க அப்பா... எந்த ஊருலையும் ஒரு வயசுல பாட்டி இருக்கமாட்டாங்க..!

டொக்டர் : சிஸ்டர், பேஷன்ட்டுக்கு மயக்க மருந்து கொடுத்தாச்சா?
சிஸ்டர் : டொக்டர், நீங்க பண்ணப்போறது போஸ்ட்மார்ட்டம்



நோயாளி : எதுக்கு டொக்டர் ஒபரேஷனுக்கு முன்னாடி என்னை போட்டோ எடுக்குறீங்க?
டொக்டர் : பேஷன்ட்டோட லாஸ்ட் லுக் ரிலீஸ் பண்ணுறது இந்த ஹொஸ்பிடலோட வழக்கம்.



**கணவன் : "உங்க அப்பா பெரிய ஒலிம்பிக் இரசிகரா இருக்கலாம். அதுக்காக தங்க நகைக்கு பதிலா வெங்கல நகை செஞ்சு போட்டா என்ன அர்த்தம்?"**
**மனைவி : "நீங்க எனக்கு மூணாவதா வந்த புருஷன்னு அர்த்தம்."**




மாமியார்: தொவச்ச துணிய ஏன் காயப்போடமா வெச்சிருக்க?
மருமகள்: மழை பெய்யுது அத்த..!
மாமியார்: அதனால என்ன குடை பிடிச்சிட்டுப் போய் காயப்போட வேண்டியதுதானே..!



**மனைவி : ஏங்க... புண்ணியம் செய்தவர்களை இங்கிலீஷ்ல எப்படி சொல்லுவாங்க?**
**கணவன் : Unmarriedனு சொல்லுவாங்க...**
**மனைவி : யோவ் ஓடாத நில்லுய்யா..!**



வட்டிக்காரர் : உனக்கு மாட்டு லோன் குடுத்தா ஒழுங்கா கட்டுவியா?
கடன்காரர் : நீங்க சந்தேகப்படுவீங்கனு தெரியுங்கய்யா... அதான் கையோட கையிறையும் கொண்டு வந்திருக்கேன் பாருங்க...



**கீதா : என் காதலர் ரொம்ப அப்பாவியா இருக்கார் டீ**
**சிவேதா : எதை வச்சி அப்டி சொல்லுற**
**கீதா ஓடிப் போய்டலாமா? ன்னு அவர் கிட்ட கேட்டதுக்கு ரெண்டு பேர் வீட்டிலேயும் பர்மிஷன் வாங்கிட்டு ஓடிப்போய்டலாம்னு அப்பாவியா பதில் சொல்லுறாரே**





மனைவி : டிவி ல ஜல்லிக் கட்டு பாக்குறிங்களே... அவ்ளோ ஆர்வம்னா நேரில போய் மாட்ட அடக்க வேண்டியதுதானே...
கணவன் : கட்டுன மாட்டையே அடக்க முடியல... இதுல கட்டாம இருக்குற மாட்டை எப்படி அடக்குறது

# ஸ்ரீ சிவாக்கர தேசிக சுவாமிகளால் மகேந்திரன் கௌரவிப்பு



திருக்கயிலாய பரம்பரை கந்தப் பரம்பரை சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீகார்யம் அருட்குருநாதர் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள், மலையக அபிவிருத்தி அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும் நமக்காக நாம் அமைப்பின் செயலாளரும் ஆதி சிவபாதவிங்கேஷ்வரர் சிவாலய தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான எஸ்.மகேந்திரன் ஆற்றிவரும் ஆன்மீகப் பணியை கௌரவித்து விருது வழங்கி கௌரவித்தார். பிரணவ அறக்கட்டளையின் ஓராண்டு நிறைவு விழா ஹட்டன் மாணிக்கப்பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட இவர் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# இலக்கிய முதுசம் பீ.ரீ. அஸீஸின் பொன் விழா நிகழ்வு





அஸீஸின் இலக்கியத் துறைப் பயணத்தின் 50 ஆண்டு கால (1974 2024) நிறைவினையொட்டி அண்மையில் கிண்ணியா பொது நூலக கேட்போர் கூடத்தில் பொன் விழா நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் 'பொன்னொளி மலர்' வெளியீடு, கிழக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வெளியீடு செய்யப்பட்டது. நூலாசிரியரின் 50 நூல்களின் திறன்நோக்குகளைக் கொண்ட 'முதுமையில் விளைந்த புதுமைகள்' நூல் வெளியீடு மற்றும் விருது வழங்கல் நிகழ்வு ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்கு ஆய்வாளர் எம்.எஸ்.எம். நியாஸ் தலைமை வகித்தார். இந்நிகழ்வில் முன்னாள் இலங்கைத் தூதுவர் ஏ.எல்.எம். லாபிர், குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம்.எம். அஜித், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ரீ. கபீபுள்ளா, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.சீ.எம். முஸ்இல் ஆகியோர் உட்பட இலக்கிய வாதிகள், ஆர்வல்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் பன்னூலாசிரியர் பீ.ரீ. அஸீஸ் இதுவரை செய்த இலக்கியப் பங்களிப்புகளைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. விழா ஏற்பாட்டினை முன்னோடிகள் கலை இலக்கிய வட்டம் ஏற்பாடு செய்திருந்தது.

நிகழ்வில் பிடித்த படங்கள் சில வற்றையும் கலந்துகொண்ட பார்வையாளர்கள் சிலரையும் இங்கு படங்களில் காணலாம்.

படமும் தகவலும்
வெலிகம ரிம்ஸா முஹம்மத்

# இலக்கிய முதுசம் பீ.ரீ. அஸீஸின் பொன் விழா நிகழ்வு





சிறப்பு விருந்தினர்களுக்கான சிறப்பு காட்சி கடந்த வெள்ளிக்கிழமை மாலை (08 08 2024) ONE GALLE FACE pvr திரையரங்கில் "இனி ஒரு விதி செய்வோம்" திரைப்படம் திரையிடப்பட்டது. இத்திரைப்படம் ஏற்கனவே சகோதர மொழியில் "அப்பே பிரின்சிபல்" என்ற பெயரில் 150 நாட்களை கடந்து திரையங்குகளில் வெற்றி கண்டதுடன் பல சகோதர மொழிப் பாடசாலைகளிலும் திரையிட்டுக் காண்பிக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது.

இனி ஒரு விதி செய்வோம் திரைப்படத்தின் வெளியீட்டு ஆரம்ப நிகழ்வில் புரவலர் ஹாசிம் உமர், முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஜோசப் பெர்ணான்டோ, மாபோல, வத்தளை நகர சபை முன்னாள் உறுப்பினர் சசிக்குமார், ஐக்கிய சுயத்தொழில் வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் பிரதீப் சார்ல்ஸ், வகவ தலைவர் நஜ்முல் உசேன், புரட்சி கவிஞர் ரவுப் ஹசிர் இன்னும் பல பிரபலங்களும், கலைஞர்களும் கலந்து கொண்டிருந்தனர். இத்திரைப்படத்தின் தயாரிப்பாளர் மற்றும் இயக்குனர் கிரிஷ் அன்டனி "கண்ணகி கலாலயம்" கலைஞர்கள் சங்கத்தின் பங்களிப்பை கேட்டுக்கொண்டதற்கிணங்க.. அவர்களும் சமூக விழிப்புணர்வு மிக்க திரைப்படம் என்பதால் ஒத்தாசைப் புரிந்திருந்தனர். திரையிட்டப்பின் ஊடக சந்திப்பில் பலர் கண் கலங்கிய வண்ணம் நாம் அன்றாடம் தற்பொழுது செய்திகளிலும் பத்திரிகைகளிலும் காணக்கூடிய உண்மை சம்பவத்தை நிதர்சனமாக வடித்துள்ள இயக்குனரையும் அக்குழுவையும் பாராட்டியதுடன். அனைவரும் குடும்பத்துடன் வந்து பார்க்க வேண்டிய திரைப்படம் என்றனர். அத்தோடு பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு திரையிட்டு காட்ட வேண்டிய திரைப்படம் என்றனர். விரைவில் நாட்டில் உள்ள பல பாடசாலைகளில் இத்திரைப்படத்தை திரையிட இத்திரைப்படக்குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

# பெண் ஆளுமைகளுக்கு விருது வழங்கும் விழா




சைத்தூன் நஹாரின் அனுசரணையில் சைத்தூன் மோட்டிவேஷன் வட்ஸ்அப் குழுமம் வழியாக நடாத்திய தலைமைத்துவ பயிற்சியின் வழிகாட்டலின் சான்றிதழ் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பெண் ஆளுமைகளுக்கான விருது வழங்கும் விழா அண்மையில் (03) நிந்தவூர் பிரதேச சபை மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தென்கிழக்கு பல்கலையின் முன்னாள் வர்த்தக, முகாமைத்துவ பீடாதிபதி கலாநிதி சித்தி சபீனா உட்பட அதிதிகள் பலரும் கலந்து நிகழ்வை சிறப்பித்தனர்.

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் சமூகத்தில் தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட அடையாளப்படுத்திக் கொள்ளாத நவீன யுகத்தில் வெளிவராத பெண்களை வீட்டில் இருந்தவாறு வட்ஸ்அப் குழுமம் வழியாக நிகழ்நிலை கலந்துரையாடலில் இணைத்து, தன்னுடைய வழிகாட்டுதலில் தலைமைத்துவ பண்புகள், பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள், பெண்கள் சமூகத்தில் எவ்வாறு இருக்கவேண்டும்?, அவர்களின் கடமைகள் என்ன?

போன்ற தலைப்புகளில் கருத்துக்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தச் செய்ததோடு, சூம் செயலி ஊடாக சமூக செயற்பாட்டாளர்களை பங்குபெற வைத்து கலந்துரையாடல் நிகழ்வுகளையும் நடாத்தி நிகழ்நிலை கருத்துப்பரிமாறல் பயிற்சியினையும் புது வித அனுபவத்தையும் பெண்களுக்கு வழங்கி ஊக்கப்படுத்திவரும் சைத்தூன், கடந்த வருடத்தில் ஆரம்பித்த இப்பயிற்சிப் பட்டறையை எதிர்வரும் காலங்களிலும் தொடர்ந்தும் நடாத்த திட்டமிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தகவல் : மஜினா உமறு
லெவ்வை

# கலாரசனாவின் முதலாவது சங்கம நிகழ்வு





கனவு மெய்ப்படவேண்டும். அற்புதமான ஒரு கலை அரங்கு. போர்க்கால அனர்த்தங்களின் பின்னராக பரிணமிக்கும் கலைகளில் முகிழ்க்கும் இளைய தலைமுறை. தம் அடையாளப் பேணலில் தமது பாரம்பரிய இசை நடன ஆளுமையில் சிறக்கும் புலம்பெயர்ந்த புதிய தலைமுறை. இம் முப்பரிமாண இணைப்பில் தோற்றிய ஒரு கனவு, ‘கலா ரசனா’.நம்முடைய கலைப் பொக்கிஷங்களாக நாம் பேணும் இசை, நடனம் இப்போது இந்தியா, இலங்கைக்கு வெளியே, புலம்பெயர் நாடுகளிலும் வளர் கலைகளாகின்றன. ஐரோப்பிய நாடுகளிலே, ஸ்கன்டினேவிய நாடுகளிலே, கனடாவிலே, அவுஸ்திரேலியாவிலே கர்நாடக இசையிலும் பதரநாட்டியத்திலும் திறன்மிக்க கலைஞர்கள் பலர், இக் கலைகளில் மெச்சத்தக்க ஆற்றலுடன் அரங்கேற்றங்கள் வாயிலும், வேறு மேடை நிகழ்வுகளிலும் பலரை வெளிப்படுத்துவதை பரவலாக காண்கிறோம். அந்நியப்பட்ட வாழ்விலும் ஒரு பிணைப்பாக இழையோடும் இக் கலைகளில் இப் புதிய தலைமுறையினரிடையேயும் ஓர் அந்நியோன்ய இணைப்பை அவாவி, இக் கலைகள் வழி அவர்களை சங்கமிக்கவைத்து, அச் சங்கமத்தில் திளைக்கும் ‘சங்கமம்’ என்ற நிகழ்வு, ‘கலா ரசனா’வின் கனவாகியது; அது நனவில், அழகுடன் அரும்பியிருக்கிறது. கடந்த 19ஆம் திகதி கலாரசனாவின் முதலாவது சங்கமம் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் ஒரு முத்திரையைப் பதித்திருக்கிறது.

யாழ்ப்பாணத்துக்கு இந்திய அரசு வழங்கிய கலாசார மண்டபத்தின் நவீனத்துவ வசதிகளும், அது நிறைக்கும் ரம்மியமும் இத் தலைமுறைகளின் சங்கம கனவை இக் கலாசார மண்டபத்துடனும் இணைத்தது. இசையும் நடனமுமாக வருடத்தில் இரு தடவைகள் நல்லூர் உற்சவ காலத்தில் இரு தினங்களும், மார்கழியில் சென்னை இசைவிழாக் காலத்தில் இருதினங்களுமாக திட்டமிடப்பட்டுள்ள சங்கமம் முதல் நிகழ்வு, இலங்கைக் கலைஞர்



களுடன் ஒருநாள் நிகழ்வாக நடைபெற்றது. ‘ராகசுதா’ என்ற வயலின் இசையும், ‘நூபுர லாவண்யம்’ என்ற நடன நிகழ்ச்சியும் இதில் இடம்பெற்றன. வயலின் வாத்தியத்தில் ஒலியின் தரத்துக்காக அதன் அமைப்பில் சிறு மாற்றங்களைச் சிலர் செய்வதுண்டு. ஆனால், இவ்வொலித் தரத்துக்காக இரட்டை வயலினும் கண்டுபிடிப்பாகியது. வயலின் வித்வான் எல். சுப்பிரமணியத்தின் சகோதரரான எல். சங்கர் இதனை அறிமுகம்செய்தார்.

# மலையகம் 200 பண்பாட்டு கருத்தரங்கு




காந்திகிராம கிராமிய நிகர் நிலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை சார்பில் நடத்தப்படும் மலையகம் 200 கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது. பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் என். பஞ்சநதம் தலைமை தாங்கினார்.

தமிழ்த்துறைத் தலைவர், கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் பா. ஆனந்தகுமார் வரவேற்றுப் பேசும்போது "மலையக மக்கள் தாயகம் விட்டு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களாகப் புலம்பெயர்ந்து சென்று 200 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் அம்மக்களின் வலிகள் குறித்தும் , அவர்களது உழைப்பு குறித்தும் தமிழக மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் இத்தகைய கருத்தரங்கங்கள் நிகழ்த்தப்படுகின்றன. அந்த வகையில் கல்விப்புலத்தில் மலையகம் 200 குறித்து நிகழ்த்தப்படும் முதல் கருத்தரங்கமாக இந்நிகழ்வு அமைகிறது" என்றார். துணைவேந்தர் என். பஞ்சநதம் தனது தலைமையுரையில் மலையக மக்கள் குறித்த கருத்தரங்கு முன்னெடுப்பினைப் பாராட்டிப் பேசியதோடு " மலையக மக்களின் வாழ்வியல் குறித்தும் பண்பாடு குறித்தும் மாணவர்கள் நேரடியாக அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் இலங்கைப் பல்கலைகள் மற்றும் பாடசாலைகளோடு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இடப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

மலையக எழுத்தாளர் மாத்தளை சோமு இணைய வழியில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். அவர் தனது வாழ்த்துரையில் "தமிழ் புனைகதைகளில் மலையக மக்களின் துயரம் குறித்த பதிவுகள் புதுமைப்பித்தனின் துன்பக்கேணி சிறுகதையிலிருந்தே தொடங்கி விட்டது. தொடக்கத்தில் மலையக மக்கள் தோட்டக்காட்டான் என்று அழைக்கப்பட்டார்கள்.

இன்று அந்த நிலை மாற்றம் பெற்றுள்ளது. ஒரு இனத்தின் வரலாறு அவ்வின மக்களின் இலக்கியத்தில் பதிவாகி இருக்கும். காலனிய ஆட்சியில் தொடங்கிய மலையக மக்களின் 200 ஆண்டுக் காலதுயர வரலாறு மலையக இலக்கியத்தில் பதிவு பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டார்.

மலையக தாயகம் திரும்பிய தமிழர்க்கான நல் வாழ்வு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் மு.சி.கந்தையா தனது தொடக்க உரையில் இந்திய வம்சாவளி தமிழரான மலையகத் தமிழர்கள் இலங்கையில் தனித் தேசிய இனமாக வாழ்ந்து வருகின்றனர். காலனிய ஆட்சியில் உழைக்கும் தமிழ் மக்கள் 21 நாடுகளுக்குக் கூலிகளாக அழைத்துச் செல்லப்பட்டனர். இலங்கையின் பொருளாதாரம் மலையக மக்களால் மேம்படுத்தப்பட்டது. ஆனால் அச் சமூகத்தினருக்கு வாழ்வுரிமைகள் முறையாக வழங்கப்படவில்லை.

அவர்கள் தொடர்ந்து அலைக்கழிப்பு செய்யப்படுகிறார்கள். சிறிமாவோ சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் தமிழகத்திற்குப் புலம்பெயர்ந்து நீலகிரி மாவட்டத்தில் வாழும் தமிழர்களின் வீட்டுமனை மற்றும் நிலங்கள் மீதான உரிமைகள் முழுமையாக கிடைக்கப் பெறவில்லை என்று குறிப்பிட்டார். தொடர்ந்து நடைபெற்ற முதலாம் கருத்தரங்க அமர்வில் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் து. கௌரீஸ்வரன் தலைமையில் மலையக ஆய்வறிஞர்கள் அருணாசலம் லெட்சுமணன், வேலாயுதம் இராமர் ஆகியோர் மலையகப் பண்பாடு பற்றிய கட்டுரைகளை வழங்கினர்.

பிற்பகல் அமர்வில் கவிஞர் பேனா மனோகரன், பேராசிரியர்கள் மு.கிறிஸ்டோபர், ஆ.பாண்டி ஆகியோர் மலையக இலக்கியம் குறித்துக் கட்டுரைகள் வழங்கினர். ஆவணப்பட இயக்குனர் தவமுதல்வனின் பச்சை ரத்தம் எனும் மலையகம் பற்றிய ஆவணப்படம் திரையிடப்பட்டது. நிகழ்வின் இறுதியில் நுண் கலைத் துறைப் பேராசிரியர் கேசவ ராஜராஜன் நன்றி கூறினார்.

# எழுத்தாளர் "குரு அரவிந்தன்"

**தங்களைப் பற்றிய முழுமையான அறிமுகத்தை எதிர்பார்க்கின்றேன்.**

என்னைப் பற்றிச் சொல்வதானால், எனது பெயர் குரு அரவிந்தன். நான் ஆசிரியராக, கணக்காளராக, எழுத்தாளராக, சமூகத்தொண்டராக இருக்கின்றேன். எனது தாயார் லக்சுமி சண்டிலிப்பாயைச் சேர்ந்தவர். தந்தையார் மாவிட்டபுரம், காங்கேசந்துறை குருவீதியைச் சேர்ந்தவர். இவர் நடேஸ்வராக்கல்லூரி கனிஸ்ட பாடசாலை அதிபராகவும், உள்ளூராட்சி மன்ற பட்டினசபை தலைவராகவும் இருந்தவர். மகாஜனக்கல்லூரி முன்னாள் அதிபர் பொ.கனகசபாபதி எனது மூத்த சகோதரி கௌரியின் கணவர். இலங்கை வங்கி முன்னாள் அதியுயர் முகாமையாளர் கு. சிவகணநாதன் எனது மூத்த சகோதரர். எனது மனைவியின் பெயர் மாலினி, சுண்டுக்குளி பாடசாலையில் கல்வி கற்றவர். எனக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள்.

**பிறப்பிடம் வாழ்விடம் பற்றித் தங்களின் இன்றைய உணர்வுகளை தாருங்கள்.**

ஆரம்பக் கல்வியை நடேஸ்வராக் கல்லூரியிலும், உயர் கல்வியை மகாஜனக் கல்லூரியிலும் தொடர்ந்து பட்டயக்கணக்காளர் கல்வியை கொழும்பிலும் தொடர்ந்தேன். அதன் பின் மகாராஜா நிறுவனத்தின் ஐந்து நிறுவனங்களுக்குப் பொறுப்பாக, கணக்காளராப் பணியாற்றினேன். 1983 ஆண்டு இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டதால் கனடா நாட்டுக்குப் புலம் பெயர்ந்தேன். கனடாவிலும் கணக்காளராகவும், ரொறன்ரோ கல்விச்சபையில் பகுதிநேர ஆசிரியராகவும் இருக்கின்றேன். கனடா தமிழ் எழுத்தாளர் இணையம், கனடா பீல் பிரதேச குடும்ப மன்றம், ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் முன்னாள் தலைவராகவும், தற்போது காப்பாளராகவும் இருக்கின்றேன். மனைவியின் பெயர் மாலினி, அவரும் கணக்காளராகவும், பீல் கல்விச்சபையில் ஆசிரியராகவும் இருக்கின்றார். புலம்பெயர்ந்து வந்த நாங்கள் வாழ்வதற்கு தங்கள் நிலத்தைப் பகிர்ந்து கொண்ட கனடா பழங்குடி மக்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

**இலக்கிய பணியின் இனிமையான நுழைவு எப்பொழுது, எப்படியானது?**

முதன் முதலாக மாணவப் பருவத்தில் பத்திரிகையில் 'அணையாத தீபம்' என்ற எனது சிறுகதை ஒன்று வெளிவந்தது. தொடர்ந்து யாழ் மாணவர் இலக்கிய வட்டம் நடத்திய சிறுகதைப் போட்டியில் எனக்குப் பரிசு கிடைத்தது. அதுதான் எனது இலக்கியத் துறையின் ஆரம்பம்.



உயர்படிப்பு, பணி காரணமாக சிறிதுகாலம் இலக்கியத்தில் ஈடுபடவில்லை. கனடாவில் உதயன் பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் தங்கப் பதக்கம் கிடைத்தது. தொடர்ந்து ஆனந்த விகடன் பவள விழா குறுநாவல் போட்டியில் 'நீர்மூழ்கி நீரில் மூழ்கி'என்ற குறுநாவலுக்கு முதற்பரிசு கிடைத்தது. அடுத்து கலைமகள் ராமரத்தினம் குறுநாவல் போட்டியில் 'தாயுமானவர்'என்ற கதைக்குப் பரிசு கிடைத்தது. அடுத்து யுகமாயினி நடத்திய எழுத்தாளர் நகுலன் குறுநாவல் போட்டியில் 'அம்மாவின் பிள்ளைகள்'என்ற கதைக்குப் பரிசு கிடைத்தது. அதைத்தொடர்ந்து' குமுதினி,' 'அந்தப் 18 நாட்கள்' போன்ற குறுநாவல்களுக்கும் பரிசுகள் கிடைத்தன.

**இதுவரை வெளியிட்டுள்ள நூல்கள் ....?**

சிறுகதைத் தொகுப்புக்களாக 'இதுதான் பாசம் என்பதா, என்காதலி ஒரு கண்ணகி, நின்னையே நிழல் என்று, தங்கையின் அழகிய சினேகிதி, சதிவிரதன், குரு அரவிந்தன் சிறுகதைகள், யாதுமாகி நின்றவள், சாக்லட் பெண்ணும் பண்ணை வீடும் ஆகியன வெளிவந்திருக்கின்றன. இதில் சாக்லட் பெண்ணும் பண்ணை வீடும் என்ற தொகுப்பில் நான் பல்வேறு நாடுகளுக்குச் சென்றபோது, தமிழில் எழுதிய வெளிநாட்டுக் கதைகள் மொழிபெயர்ப்பு இல்லாமல் தமிழிலேயே இடம் பெற்றிருக்கின்றன.



நாவல்களாக உறங்குமோ காதல் நெஞ்சம், உன்னருகே நானிருந்தால், எங்கே அந்த வெண்ணிலா, நீர் மூழ்கி நீரில் மூழ்கி, என்ன சொல்லப் போகிறாய், சொல்லடி உன் மனம் கல்லோடி, அம்மாவின் பிள்ளைகள் போன்றவை வெளிவந்திருக்கின்றன. இதில் 'என்ன சொல்லப் போகிறாய்?' என்ற நாவல் 'கியூபிக் கோட்பாட்டில்' எழுந்த ஈழத்தமிழரால் எழுதப்பட்ட முதல் நாவலாக இடம் பெற்றிருக்கின்றது. மாருதப்புரவீகவல்லி என்ற வரலாற்று நாவலும் விரைவில் வெளிவர இருக்கின்றது.

மலரே காதல் மலரே..., நதியே காதல் நதியே.., இங்கேயும் ஒரு வெண்ணிலா ஆகிய 3 ஒலிப் புத்தகங்களையும் வெளியிட்டிருக்கின்றேன்.

இதைவிட சிறுவர்களுக்கான தமிழாரம் பாடநூல்கள் ஐந்தும், ஆறாம் நிலத்திணை, கனடா தமிழர் வரலாறு என்ற கட்டுரைகள் அடங்கிய நூல்களையும் வெளியிட்டிருக்கின்றேன். கனடா தமிழ் எழுத்தாளர் இணையம், ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கம், மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், சொப்கா பீல் குடும்ப மன்றம் போன்றவற்றின் ஆண்டு மலர்களையும் தொகுத்து வெளியிட்டிருக்கின்றேன்.

இதைவிட எனது சிறுகதைப் பயிற்சிப்பட்டறையில் பங்கு பற்றிய பெண்கள் எழுதிய கதைகளைத் தொகுத்து 'நீங்காத நினைவுகள்'என்ற தலைப்பில் சொப்கா மன்றத்தினர் வெளியிட்டார்கள். கனடாவில் வெளிவந்த தமிழ் பெண்களின் முதலாவது சிறுகதைத்தொகுப்பு இதுதான்.

கனடாவில் இருந்து வெளிவரும் 'தமிழாரம்' என்ற சிறுவர் மலர், மற்றும் 'வதனம்' என்ற இளையோருக்கும் பெண்களுக்குமான மலர் போன்றவற்றின் பிரதம ஆசிரியராகவும் இருக்கின்றேன்.

வாசகர்களுக்கு அதிகம் பிடித்தது என்று பார்த்தால் கல்கியில் வெளிவந்த 'ஒரு அப்பா, ஒரு மகள், ஒரு கடிதம்'என்ற கதை. இதுவரை ஆங்கிலம், கன்னடம், மலையாளம், தெலுங்கு, சிங்களம், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது. இந்தக் கதையை ஒலி வடிவத்திலும் பலர் வெளியிட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் கலைஞர் தொலைக்காட்சியினர் 'உறவும் உணர்வும்'என்ற தலைப்பில் குறும்படமாக்கியிருக்கிறார்கள்.



தமிழகத்தின் பிரபல பத்திரிகைகள் எல்லாவற்றிலும் எனது ஆக்கங்கள் வெளிவந்திருக்கின்றன, அது மட்டுமல்ல பிரபல ஓவியர்கள் எல்லோரும் எனது கதைகளுக்கு ஓவியம் வரைந்திருப்பதும் பெருமைக்குரியதே!

**நவீன படைப்பாளிகளின் பயணம்....தங்களின் கருத்து?**

புதுமையை வரவேற்கின்றேன். எழுத்து காலத்தைக் குறித்து நின்றால் அது வரலாற்றுக்கு உதவும். அறிவியல் சார்ந்து நின்றால் அது சமூக வளர்ச்சிக்கு உதவும். வாசகர்களுக்காகத்தானே எழுதுகின்றோம், எழுதியவர்களுக்கே அது புரியவில்லை என்றால் அந்த எழுத்து யாருக்காக? அதனால் சமூகத்திற்கு என்ன பயன்?



காலத்திற்குக் காலம் கருப்பொருள் மாறினாலும், காலத்தால் நின்றுபிடித்தால்தான் அது சிறந்த படைப்பாக முடியும். எந்த எழுத்துக்கள் உங்கள் மனதைத் தொட்டிருக்கின்றன என்று பாருங்கள், அப்போது புரியும்.


**தங்களுடைய எழுத்துறையில் தங்களுடைய குடும்பம் எந்தவிதத்தில் உதவுகின்றது?**

எல்லாவிதமான ஊக்கங்களும் எனது குடும்பம் தந்ததே, எனது தந்தையார் வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்திவிட்டார். எனது அத்தான் பொ. கனகசபாபதி தொடர்ந்து வழிகாட்டியாக இருந்தார். எனது மனைவியும் பிள்ளைகளும் எழுதுவதற்கு நேரம் ஒதுக்கித் தந்தார்கள். எனது மனைவி புரிந்துணர்வுள்ள ஒரு எழுத்தாளர், 'பறவைகள்'என்றசிறுகதைத் தொகுப்பைக் கனடாவில் வெளியிட்டிருக்கின்றார். வெளிநாடுகளுக்குப் பணி நிமித்தம் போகும் போதெல்லாம் அங்கே அவதானித்த விடயங்களைச் 'சாக்லட் பெண்ணும் பண்ணைவீடும்' என்றதொகுப்பில்கதைகளாக்கி இருக்கின்றேன். ஆர்வம் காரணமாக ஒரு முறைஆபிரிக்காவின் இருண்டகாடுகளில் வசிக்கும் மாசிமாறா பழங்குடியினரைக் கூட, மாறா நதிக்கரைக்குச் சென்று சந்தித்திருக்கின்றேன். அவர்கள் உயிரோடு இருக்கும் மாட்டின் கழுத்தில் அம்பால் எய்து பச்சை இரத்தம் குடிப்பவர்கள், சிங்கத்தையே தனியே நின்று ஈட்டியால் கொல்லக்கூடியவர்கள். கற்களை உராசித்தான் நெருப்பை ஏற்படுத்துகின்றார்கள். ஆனால் மிகவும் மரியாதையோடு பழகினார்கள்.

**நீங்கள் பெற்ற விருதுகள் பற்றி கூறுங்கள்.**

முதலாவது தங்கப் பதக்க விருது: 'ஓரடி கணவர்காக' உதயன் சிறுகதைப்போட்டி–கனடா, சிறந்த சிறுகதை விருது: 'பெண் ஒன்று கண்டேன்'வீரகேசரிமிலேனியம் இதழ் (2000), ஆனந்தவிகடன் பவழவிழா 'நீர்மூழ்கி' குறுநாவல்போட்டிபரிசு–2001, சிறுகதைப் போட்டி முதற்பரிசு: 'சுமை'கனேடியதமிழ் வானொலி 2007, சிறுகதை சிறப்புப் பரிசு: கந்தர்வன் நினைவுப் போட்டி2008 (தமிழ்நாடு), நகுலன் குறுநாவல் போட்டி: 'அம்மாவின் பிள்ளைகள்' யுகமாயினி2009 (தமிழ்நாடு) ஒன்ராறியோ முதல்வர் விருது : 10 வருட தன்னார்வத் தொண்டர் விருது 2010 (கனடா), குறுநாவல் போட்டி கலைமகள் விருது (தமிழ்நாடு) 'தாயுமானவர்'

(தொடர் 07ஆம் பக்கம்)



திருமதி பவானி சச்சிதானந்தன்

# நாகூர்கனி எழுதிய "மாநபி பேசாத மெளன மொழி தமிழ்" நூல் வெளியீட்டு விழா






சத்திய எழுத்தாளர், கலாபூஷணம் எஸ்.ஐ.நாகூர்கனி எழுதிய "மாநபி பேசாத மெளன மொழி தமிழ்" நூல் வெளியீட்டு விழா கொழும்பு 7, ஜே.ஆர். ஜயவர்தன நிலையத்தில் சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம்.அமீன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

சிறப்புப் பேச்சாளராக கலந்து கொண்டு பேராதனைப் பல்கலைக்கழக மெய்யியல் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் சிறப்புரையாற்றினார். அம்ஜா டிரவல்ஸ் உரிமையாளர் எச்.எம். அம்ஜதீன் நூலின் சிறப்பு பிரதியை பெற்றுக் கொண்டார்.

நூலின் சமர்ப்பண பிரதி நூலாசிரியரின் துணைவியார் சம்சுநிஹாருக்கு வழங்கப்பட்டது.

வரவேற்புரையை டீ.எஸ். சேனநாயக்க கல்லூரி ஆசிரியர் இர்ஷாத் ஹுசைன் நிகழ்த்தினார். வாழ்த்துக் கவிதைகளை சந்தக்கவிமணி கிண்ணியா அமீர் அலியும், கவிஞர் வாழைத்தோட்டம் வஸீரும் பாடினர். வலம்புரி கவிதா வட்டத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் வாழ்த்துரை வழங்கினார். வலம்புரி கவிதா வட்டம் நூலாசிரியர் நாகூர்கனியை பொன்னாடைப் போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கி, சந்தன மாலை சூடி, கௌரவித்தது.

கவிஞர் ரவூப் ஹஸீர் பொன்னாடைப் போர்த்த, செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் சந்தன மாலை அணிவிக்க, தலைவர் நஜ்முல் ஹுசைன் நினைவுச் சின்னம் வழங்கி வைத்தார். இந் நிகழ்வில் வகவக் கவிஞர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

சிரேஷ்ட ஊடகவியலாளர்களான என்.எம்.அமீன், எம். ஏ.எம். நிலாம், சாதிக் சிஹான், மனித நேயன் இர்ஷாத் ஏ. காதர் ஆகியோர் நூலாசிரியரை பொன்னாடைப் போர்த்தி கௌரவித்தனர். சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ், கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் ஆகியோர் குடும்பம் சார்பில் அவரை கௌரவித்தனர்.

கவிஞர் யாழ் அஸீமும் நூலாசிரியரை கௌரவித்தார். வகவச் செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் நிகழ்வினைத் தொகுத்தளித்தார்.

நூலாசிரியர் நாகூர்கனி ஏற்புரை வழங்கினார். இந் நூல் வெளிவர பெரும் உறுதுணையாக நின்று பாடுபட்ட சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர்கனியின் இளைய மகள் டொக்டர் ருஸைக்கா நாகூர்கனி நன்றியுரை வழங்கினார்.

படங்கள் முஹம்மத் நசார்




ராமரத்தினம் நினைவுப்பரிசு2011, 'புனைகதை வித்தகன்': சிறப்புக் கௌரவம் கனடா சொப்காபீல் தமிழர் அமைப்பு2011, பாரிஸ் கல்வி நிலைய வெள்ளி விழா சிறுகதைப் போட்டி 'கனகலிங்கம் சுருட்டு' (சிறப்புப்பரிசு) 2012, தமிழர் தகவல் கனடிய இலக்கிய விருது – 2012 கனடா., ஞானம் சிறுகதைப் போட்டி சிறப்புப் பரிசு (பரியாரிமாமி) 2013, ஒன்ராறியோ முதல்வர் 15 வருட தன்னார்வத் தொண்டர் விருது – 2013, கனடா தமிழ் மிரர் இலக்கிய விருது 2014, கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் 25 வருட இலக்கிய சேவை விருது 2015, ஒன்ராறியோ முதல்வர் தன்னார்வத் தொண்டர் விருது – 2016, சிறந்த ஊடகவியலாளருக்கானஒன்ராரியோ கவணர் விருது – 2017, 20 வருடகால றொறன்ரோ கல்விச்சபை ஆசிரியர் சேவை விருது2018, கனடா இலக்கிய விருது – தூறல் இதழ் 2018, உதயன் இலக்கிய மேன்மை விருது – 2019, சிறந்த மகாஜனா பழைய மாணவர் சாதனை விருது – 2019, சிறந்த நாவல் இலக்கிய விருது, 'என்ன சொல்லப் போகிறாய்?' – உலகத் தமிழ் பல்கலைக் கழகம், அமெரிக்கா – 2020, சிறந்த நாவல் இலக்கிய விருது, 'சொல்லடி உன் மனம் கல்லோடீ?' கோவை தமிழ் மன்றம் 2021, சிறந்த நாவல் இலக்கிய விருது, 'அம்மாவின் பிள்ளைகள்' ஞானம் இலக்கியவட்டம் 2022, சிறந்த கட்டுரைக்கான விருது 'ஆறாம் நிலத்திணை'– சேலம் தமிழ் இலக்கிய வட்டம். – 2022. குவிகம் சிவசங்கரி சிறந்த சிறுகதைத் தேர்வு 'தாயகக் கனவுடன்'–2023, வடஅமெரிக்க தமிழ்சங்கம் அருவி இதழ் குறுங்கதைப் போட்டி 2024 முதற்பரிசு 'காலம் செய்த கோலம்.'

மாபெரும் சபைகளையும், பரிசுகள், விருதுகளையும்விட நீங்கள் கல்விகற்ற பாடசாலையும், நீங்கள் வாழ்ந்த ஊரும் உங்களுக்கு மதிப்பளித்து உங்களைக் கௌரவித்தால் தான் அது எல்லாவற்றையும்விட மாபெரும் விருதாகும்.

**தங்களுடைய ஆக்கப்பூர்வமான ஆக்கங்களுக்கான வாசகர் விமர்சனங்கள் எவ்வாறானவைகளாக இருக்கின்றன?**

முதன் முதலாக 'நீர்மூழ்கி' குறுநாவல் விகடனில்வந்த போது ஒரு போட்டியில் அதை எழுதியது யார் என்று கேட்டிருந்தார்கள். அப்பொழுது மின்னஞ்சல் வசதிகள் இருக்கவில்லை.

சுமார் 45,200 வாசகர்கள் 'குரு அரவிந்தன்'என்று சரியான பதிலைத் தபாலில்அனுப்பிஇருந்தார்கள். அதில் குலுக்கல் முறையில் 7 வாசகர்களுக்கு விகடன் முத்திரை பதித்த தங்கப் பதக்கம் பரிசாகக் கொடுத்தார்கள்.

அந்தக் கடிதங்களை ஒரு பையிலே போட்டு விகடன் ஆசிரியர் என்னிடம் தந்தபோது அதுவே எனது எழுத்துலகில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

தொடர்ந்து காதலர்தின மலரில் 'அவளுக்கு ஒரு கடிதம்' கதை வெளிவந்தபோது இளையதலைமுறையினர் பலர் கடிதம் அனுப்பியிருந்தனர்.

வாசகர்களின் மனநிலையைப் புரிந்து கொள்ள அது பெரிதும் துணையாக இருந்தது.

ஒரு பிரபல சினிமா நடிகரின் ரசிகர் போல எங்களுக்கும் வாசகர்கள் கோடிக்கணக்கில் இருப்பதை அப்போதுதான் புரிந்து கொண்டேன்.

எனது வாசகர் வட்டத்தினர் எனது கதைகளுக்கான திறனாய்வுப் போட்டிகளை நடத்திப் பரிசுகள் கொடுத்தபோது, 22 நாடுகளில் இருந்து போட்டியில் பங்கு பற்றி இருந்தார்கள்.

எழுத்தாளர் ராமகிருஸ்ணன், அ.முத்துலிங்கம், சேவற்கொடியோன், தேவிபாலா, அநுராதாரமணன், டாக்டர் லட்சுமி, சிவசங்கரி, பிரபஞ்சன், வியெஸ்வி போன்ற மூத்த எழுத்தாளர்கள் எனது எழுத்தைப் பாராட்டி இருக்கின்றார்கள்.

சமீபத்தில் இளையதலைமுறை எழுத்தாளர்கள் சிலர் எனது நூல்களுக்கு எழுதிய திறனாய்வுகளை தமிழகக் கவிஞர் மு. முருகேஸ் அவர்கள் தொகுத்து 'மனதைத் தொட்ட பக்கங்கள்'என்று வெளியிட்டிருந்தார்.

இதில் எனது ஆக்கங்கள் பற்றிய 22 திறனாய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றிருந்தன. எதிர்மறையாக இதுவரை ஒருவர் மொன்றியலில் இருந்து 'கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி' என்று விமர்சனம் எழுதியிருந்தார்.

இன்னுமொரு பெண்மணி 'இதுதான் விகடனில் இவரது முதலும் கடைசிக்கதையும் என்று நினைக்கிறேன்'என்று ஒரு இலக்கியக் கலந்துரையாடலில் சொல்லி விட்டுப் போனார். தள்ளி விழுத்தினாலும் நாங்கள் எழுந்து நிற்போம் என்பதை இவர்களை போன்றவர்களுக்கு அமைதியான முறையில் செய்கையில்தான் காட்ட முடியும்.

**புதிதாக ஏதும் எழுத்துலகில் செயற்படுத்த திட்டமிட்டுள்ளீர்களா?**

'சிறுகதை எழுதுவதை விட்டு விட்டு இப்போது ஏன் கட்டுரைகள் எழுதுகிறீர்கள்?' என்று நண்பர் கேட்டார்.

சிறுகதைகள் நிறையவே எழுதிப் பாராட்டுகளும் பரிசுகளும் பெற்று விட்டேன். மிகப் பெரிய வாசகவட்டத்தையே அது உருவாக்கித் தந்தது.

ஈழத்தமிழ் எழுத்தாளர்களில் அதிக வாகர்களைக் கொண்ட எழுத்தாளர்களில், சர்வதேசம் அறிந்த ஒருவராக என்னை உருவாக்கியிருக்கிறது. ஆனால் சிறுகதை, நாவல் போன்றவை வெறும் பொழுது போக்குவதற்கானது.

அதனால் எமது சமூகத்திற்கு அறிவியல் சார்ந்து ஏதாவது கொடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தால் அறிவியல் மற்றும் பயணக்கட்டுரைகளைத் தாய்வீடு இதழில் எழுதி வருகின்றேன்.

இங்கே தகவல்கள் நிறையவே கிடைப்பதால் அறிவியல் சார்ந்த கட்டுரைகளை எழுத முடிகின்றது. ஏனைய இனங்களுடன் பார்க்கும் போது நாங்கள் பின்தங்கியே நிற்கின்றோம்.

# வதந்திக்கு முற்றுப்புள்ளி வைத்த பாவனா



நடிகை பாவனா தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னட மொழி படங்களில் நடித்து ஏராளமான ரசிகர்களை கவர்ந்தவர். தமிழில் மிஷ்கின் இயக்கத்தில் வெளியான சித்திரம் பேசுதடி படம் மூலம் தமிழில் என்ட்ரி கொடுத்த பாவனா, தொடர்ந்து ஜெயம் கொண்டான், வாழ்த்துக்கள், கூடல் நகர், ராமேஸ்வரம் உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார்.

திருமணமான நிலையிலும் அடுத்தடுத்த படங்களில் நடித்து வருகிறார் பாவனா. தற்போது ஹண்ட் என்ற மலையாள படம் இவரது நடிப்பில் ரிலீசாகியுள்ளது. இதனிடையே, தன்னுடைய கணவரை பாவனா பிரிந்துவிட்டதாக தொடர்ந்து சில தினங்களாக சமூக வலைதளங்களில் தகவல்கள் வெளியாகி வருகின்றது. இந்நிலையில் இதுகுறித்து தற்போது பாவனா விளக்கம் அளித்துள்ளார்.

இதன் உண்மையை அறிய முடியாமல் அவரது ரசிகர்கள் தொடர்ந்து கவலை தெரிவித்த நிலையில் பாவனா இதற்கு பதில் அளித்துள்ளார். தான் எப்போதுமே தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை குறித்து சமூக வலைதளங்களில் பகிர்ந்துக் கொண்டதில்லை என்று பாவனா கூறியுள்ளார். தன்னுடைய கணவருடன் தான் இருக்கும் படியான புகைப்படங்களையும் பகிர்ந்ததில்லை என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதனால்தான் தன்னுடைய கணவரை பிரிந்து தனிமையில் வாழ்ந்து வருவதாக தொடர்ந்து தவல்கள் பரப்பப்பட்டு வருவதாகவும் தன்னுடைய வருத்தத்தை பகிர்ந்துள்ளார்.

இத்தகைய கருத்துக்கள் தவறு என்பதை தொடர்ந்து நிரூபித்துக் கொண்டிருக்க முடியாது என்றும் இப்படி வதந்திகள் பரப்பப்படுவதால் மட்டுமே கணவருடன் இணைந்திருக்கும்படியான புகைப்படங்களை சமூக வலைதளங்களில் பகிர்ந்து கொண்டிருக்க முடியாது என்றும் பாவனா தெரிவித்துள்ளார். இதன் மூலம் பாவனா தன்னுடைய கணவரை பிரிந்து விட்டார் என்ற வதந்திக்கு அவர் முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

# முன்னணி நடிகரை பாராட்டிய நடிகை ஸ்ரீதேவி விஜய்குமார்

குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி பிறகு தமிழ், கன்னடம்,தெலுங்கு சினிமாவில் நடித்து பிரபலமானவர் ஸ்ரீதேவி விஜய்குமார். இவர் தமிழில் தேவதையை கண்டேன், பிரியமான தோழி போன்ற பல வெற்றி படங்களில் நடித்து தனக்கென ஒரு இடத்தை சினிமாவில் பிடித்தார்.

சினிமாவை விட்டு சிறிது காலம் விலகி இருந்த ஸ்ரீதேவி தற்போது மீண்டும் தெலுங்கு படத்தில் நடிகர் பிரபாசுடன் நடிக்கவிருக்கிறார். பிரபாஸின் முதல் படமான ஈஸ்வர் படத்தில் அவருக்கு ஜோடியாக ஸ்ரீதேவி நடித்திருப்பார். தற்போது, அதை தொடர்ந்து மீண்டும் இவர்கள் இருவரும் வெங்கடேஷ் நிம்மலபுடி இயக்கத்தில் சுந்தரகாண்டா என்ற படத்தில் நடிக்கின்றனர். இந்த நிலையில், பிரபாசுடன் இணைந்து நடித்த ஸ்ரீதேவி அவரை பாராட்டி பேசியுள்ளார்.

ஸ்ரீதேவி விஜய்குமார் பேச்சு

அதில், பிரபாஸ் எப்போதுமே ஒரே குணத்துடன் இருக்கிறார். முன்பு, அவர் எவ்வாறு எளிமையாக இருந்தாரோ அதே போல் இப்போதும் இருக்கிறார்.

தற்போது இவ்வளவு பெயர் மற்றும் புகழுக்கு சொந்தக்காரராக இருந்தாலும் அவருடைய குணத்தில் எந்த விதமான மாற்றமும் தெரியவில்லை என்று ஸ்ரீதேவி பாராட்டி உள்ளார். மேலும், அவருடன் நடிப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சி எனவும் கூறினார். அந்த விஷயத்தில் எந்த மாற்றமும் தெரியவில்லை..



# நடிகர் எட் வெஸ்ட்விக்கை திருமணம் செய்த ஏமி ஜாக்சன்



நடிகை ஏமி ஜாக்சனுக்கும், அவரின் காதலரான நடிகர் எட் வெஸ்ட்விக்கிற்கும் இத்தாலியில் திருமணம் நடந்தது. திருமணத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளார் ஏமி.

ஏ.எல். விஜய் இயக்கிய மதராசபட்டினம் படம் மூலம் கோலிவுட் வந்தவர் இங்கிலாந்தை சேர்ந்த ஏமி ஜாக்சன். தொடர்ந்து இந்தியாவில் தங்கி படங்களில் நடித்து வந்தார். இதையடுத்து மீண்டும் தன் சொந்த நாட்டிற்கே சென்றுவிட்டார் ஏமி. அவருக்கும், இங்கிலாந்தை சேர்ந்த நடிகர் எட் வெஸ்ட்விக்கிற்கும் இடையே காதல் ஏற்பட்டது. தன் காதலருடன் சேர்ந்து எடுக்கும் புகைப்படங்களை இன்ஸ்டாகிராமில் வெளியிட்டு வந்தார் ஏமி. இந்நிலையில் நாம் திருமணம் செய்து கொள்ளலாம் எட் என போஸ்ட் போட்டார். இதையடுத்து ஏமி ஜாக்சன், எட் வெஸ்ட்விக்கின் திருமணம் இத்தாலியில் நல்லபடியாக நடந்தது.திருமணத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை இன்ஸ்டாகிராமில் வெளியிட்டு புது பயணம் துவங்கியதை தெரிவித்துள்ளார். ஏமியின் இன்ஸ்டா போஸ்ட்டை பார்த்த திரையுலக பிரபலங்களும், ரசிகர்களும் அவருக்கு வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள்.

ஏமி ஜாக்சனுக்கு 5 வயதில் மகன் இருக்கிறார். முன்னதாக அவர் இங்கிலாந்தை சேர்ந்த தொழில் அதிபர் ஜார்ஜ் பனயூட்டுவை காதலித்து வந்தார். 2019ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி ஜாம்பியாவில் அவர்களுக்கு நிச்சயதார்த்தம் நடந்தது. இதையடுத்து கர்ப்பமானார் ஏமி ஜாக்சன். குழந்தை பிறந்த பிறகு திருமணத்தை பிரமாண்டமாக நடத்த திட்டமிட்டார்கள். ஆனால் திட்டமிட்டபடி திருமணம் நடக்கவில்லை.

கடந்த 2021ம் ஆண்டு ஏமி ஜாக்சனும், ஜார்ஜும் பிரிந்துவிட்டார்கள். இதையடுத்து கடந்த 2022ம் ஆண்டு ஏமிக்கும், எட் வெட்விக்கிற்கும் இடையே பழக்கம் ஏற்பட்டு காதலாக மாறியது. ஏமி ஜாக்சனின் மகனை தன் பிள்ளை போன்று பார்த்துக் கொள்கிறார் எட் வெஸ்ட்விக். இது ஏமிக்கு மிகவும் பிடித்திருக்கிறது. தாங்கள் மூன்று பேரும் குடும்பமாக இருக்கும் புகைப்படங்களை அடிக்கடி வெளியிட்டு வருகிறார் ஏமி.

# மேகா ஆகாஷ்



நடிகை மேகா ஆகாஷ் அடுத்தடுத்து தமிழ் மற்றும் தெலுங்கு படங்களில் நடித்து வருகிறார். தமிழில் ரஜினியின் பேட்ட படத்தின் மூலம் என்ட்ரி கொடுத்த மேகா ஆகாஷ் அடுத்தடுத்து சிம்பு, தனுஷ் உள்ளிட்ட முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடித்துள்ளார். இந்நிலையில் சமீபத்தில் விஜய் ஆண்டனி ஜோடியாக மழை பிடிக்காத மனிதன் படத்திலும் மேகா ஆகாஷ் நடித்திருந்தார்.

இந்நிலையில் மேகா ஆகாஷ் நடிகர் சாய் விஷ்ணுவை திருமணம் செய்ய உள்ளதாக அறிவித்துள்ளார். தன்னுடைய நிச்சயதார்த்த புகைப்படங்களையும் அவர் இன்ஸ்டாகிராமில் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். செப்டம்பர் மாதம் 15ம் தேதி இவரது திருமணம் நடக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நடிகர் சாய் விஷ்ணுவை மணக்கிறார்: நியூயார்க்கில் ஃபிலிம் மேக்கிங் படித்துள்ளார் சாய் விஷ்ணு. பா ரஞ்சித்தின் காலா, கபாலி படங்களில் உதவி இயக்குனராக பணியாற்றியுள்ளார் சாய் விஷ்ணு. அவருக்கு எப்போதுமே சினிமா மீதுதான் ஆர்வம் அதிகம் என்ற போதிலும் தற்போது பிசினசை கவனித்து வருவதாகவும் மேகா ஆகாஷ் கூறியுள்ளார். நிச்சயதார்த்தம், திருமணம் உள்ளிட்ட அனைத்தையுமே தான் முன்னதாக சரியான திட்டமிடலுடன் எதிர்கொண்டதாக கூறியுள்ளார்.

தற்போதே தனது திருமணத்திற்கான ஆடைகள், ஆபரணங்கள் ஆகியவற்றை தேர்வு செய்து வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தொடர்ந்து நடிப்பேன்: திருமணத்திற்கு பிறகும் தொடர்ந்து தான் சினிமாவில் தேர்ந்தெடுத்த திரைப்படங்களில் நடிப்பேன் என்றும் மேகா ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

திருமணம் ஆகிவிட்டால் சினிமாவில் நடிக்கும் வாய்ப்பு நடிகைக்கு கிடைப்பதில்லை என்பதெல்லாம் தற்போது கிடையாது என்றும் திருமணம் ஆகியும் பல நடிகைகள் சினிமாவில் தொடர்ந்து நடித்து வருவதாகவும் மேகா கூறியுள்ளார். மேகா ஆகாஷின் திருமணம் வரும் செப்டம்பர் 15ம் தேதி நடக்க உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நமிதா கவலை



மதுரை மீனாட்சி அம்மன் கோவில் நிர்வாகம் நீங்கள் இந்துவா, என்ன வகுப்பு, சான்றிதழ் எங்கே என கேட்டு என்னை மனதளவில் காயப்படுத்தி விட்டதாக நடிகை நமிதா தெரிவித்துள்ளார். அமைச்சர் சேகர் பாபு குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என நடிகை நமிதா கோரிக்கை வைத்துள்ளார்.

விஜய்காந்த் நடித்த எங்கள் அண்ணா படம் மூலம் தமிழில் அறிமுகமானவர் நடிகை நமிதா, தொடர்ந்து பல்வேறு படங்களில் நடித்தார். இவர் தமிழ் மட்டுமில்லாமல் தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி, என பல மொழி படங்களில் நடித்து இருக்கிறார். இவர் சினிமாவில் அறிமுகமான கொஞ்ச நாட்களிலேயே இளைஞர்களின் மனதில் ஒரு இடத்தை பிடித்து விட்டார்.

நடிகை நமிதா: விஜய், அஜித், சரத் குமார், சத்தியராஜ், விஜயகாந்த் போன்ற பல முன்னணி நடிகர்களின் படத்தில் நடித்த நமிதா, உடல் எடை அதிகரித்ததைத் தொடர்ந்து சின்னத்திரையில் டான்ஸ் நிகழ்ச்சியில் நடுவராக இருந்தார். இதைத்தொடர்ந்து, 2017 ஆம் ஆண்டு தனது காதலர் வீரேந்திர சௌத்ரி என்பவரை திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தத்தைத் தொடர்ந்து வெளியில் தலைகாட்டாமல் இருந்தார். இதைத்தொடர்ந்து, தற்போது மீண்டும் சின்னத்திரை நிகழ்ச்சிகளில் இவரை பார்க்க முடிகிறது. இதுமட்டுமில்லாமல், அரசியலில் ஆர்வம் கொண்ட நமிதா, பா.ஜ.க. சார்பில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். என்ன மதம்: இந்நிலையில் நடிகை நமீதா தனது இன்ஸ்டாகிராமில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.அதில் கிருஷ்ண ஜெயந்திக்காக நான் அனைத்து கிருஷ்ணர் கோவிலுக்கு சென்று தரிசனம் செய்து இருக்கிறேன்.அது போல இன்று நான் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு சென்றேன். அங்கிருந்த அதிகாரி ஒருவர் என்னிடம் நீங்கள் இந்துவா, என்ன சாதி என்று கேட்டார். அதற்கான சான்றிதழ் இருக்கா என்று கேட்டு என்னையும் என் கணவரையும் தர்ம சங்கடத்தில் ஆழ்த்தினார்.

நமிதா வேதனை: நான் ஒரு இந்து என்பது அனைவருக்கும் தெரியும், என் திருமணம் திருப்பதியில் நடந்தது. என் குழந்தைக்கு கிருஷ்ணா ஆதித்யா மற்றும் கியான் ராஜ், என கிருஷ்ணனின் பெயர் தான் வைத்துள்ளேன். கோவில்களில் இதுபோன்ற நடவடிக்கைகள் நடப்பது என்பது வருத்தமாக உள்ளது. நான் பல கோவில்களுக்கு சென்று இருக்கிறேன், இந்தியாவில் எந்த கோவிலிலும் இது போன்று தன்னிடம் இந்த கேள்வியை கேட்டது இல்லை.

# வேண்டாதவைகளையும் வேண்டுதல் முறையோ!



குறள் 751: பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்லது இல்லை பொருள். தகுதி அற்றவரையும்கூடத் தகுதி உடையவராக ஆக்கிவிடும் தகுதி உடையது, பணமே அன்றி வேறொன்றும் இல்லை.

நாகரீகம் நிரம்பி வழியும் இக்காலத்தில் நாளும் பொழுதும் புதுப் புது பொருட்களும், புதிய புதிய தேவைகளும் தினமும் எம்மைச் சுற்றி நடமாடிக் கொண்டேயிருக்கிறது.

நாம் அதனைக் கடந்து செல்ல முடியாத அளவுக்கு வசீகரம் கொள்கிறோம்.அடுத்தவர்கள் யாரும் வாங்கியிருந்தால் நாம் வாங்கவில்லையே என்கிற ஏக்கம் நம்முடன் ஒட்டிக் கொள்கிறது. அத்துடன் எங்களிடமும் எல்லாம் இருக்கிறது என்பதை காட்டுவதற்க்காகவே பலவற்றை நாம் வாங்கிச் சேர்ப்பது நம் வாழ்க்கையின் நாகரீகமாய் மாறிவிட்டது எனலாம். இக்காலங்களில் சேமிப்பு என்பதை தாண்டி பொருட்கள் சேகரிப்பு என்பதே வீடுகளில் பெருகி விட்டது.

சில வீடுகளில் முழுக்குடும்பமும் இச்செயற்பாட்டுக்கு தலையசைக்கிறது. சில வீடுகளில் கணவன் அல்லது மனைவி இருவரில் ஒருவர் மட்டுமே புதிய பொருட்களை வாங்கி குவிப்பதில் ஆர்வம் கொள்கின்றனர். குடும்பமே சேர்த்து வாங்கும் வீடுகளில் அனேகமாக பிரச்சனைகள் எழுவதில்லை. வீட்டில் ஒருவர் பொருட்களை வாங்கி குவிக்கும் பழக்கம் உள்ளவர் என்றால் சொல்லவும் வேண்டுமா! நாளுக்கு நாள் வேலைகளை இலகுபடுத்துதல் என்கிறப் பெயரில் பலவித பொருட்கள் எம் மனதையும் கண்களையும் கொள்ளைக் கொள்ளும் விதத்தில் வருவது மகிழ்ச்சிதான். அநேகமாக அவை மிகவும் குறுகிய அளவு நாட்களே பயன்படுத்தும் விதமான தயாரிப்புகளாக இருக்கின்றது.

கொள்வனவு செய்வதற்கும் பாரியளவு பணம் செலவழிக்க வேண்டிய அவசியமும் இல்லை.எங்கும் எடுத்து செல்லும் வசதிக் கொண்டது. மிக முக்கியமாக இடம் ஆக்கிரமிப்பு பிரச்சனையும் இல்லா நிலை இருப்பதால் அவற்றை வைக்க குறுகிய இடமே தேவைப்படுகிறது. கவர்ச்சியானத் தோற்றம் மகிழ்ச்சியாய் தேவைகளை பூர்த்திசெய்ய என்று இன்றைய புதிய சந்தைப் பொருட்களில் பலவித அனுகூலமான விடயங்கள் உள்ளது. இருப்பினும் இவை அனைத்தையும் கொள்வனவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் நாம் இல்லை.

ஆனாலும் நாம் அவற்றின் விளம்பரங்களில் எம் மனதை பறி கொடுத்து தேவை இல்லாவிட்டாலும் வாங்கிப் பார்த்து விட வேண்டிய எண்ணத்தால் வாங்கிக் குவிக்கிறோம்.

இந்த செயற்பாடுகள் மூலமாக நம் பணம் விரயமாக்குவது நமக்கு புரிவதில்லை. 'சிறு துளியே பெரும் வெள்ளம்' என்பது போல நாம் கண்டதையும் வாங்கி சேமிக்கும் பழக்கம் இந்த பழமொழிக்கு சேரும். நாம் கூர்ந்து சிந்தித்தால் சந்தையில் வரும் அனைத்துமே நம் தேவையாக இருக்காது. இருப்பினும் நமக்கு தேவை, அவசியம் என்பதை மனம் உடனே உணர்ந்து வாங்கச் சொல்கிறது.

புதியன எல்லாமே எங்களுக்கு வாழ்வில் தேவையே என்கிற ஒருவித மயக்கத்தில் எம்மை வீழ்த்தியுள்ளது என்பதை நாம் மறுக்க முடியாது.

நாம் வேண்டிய, வேண்டாத என்கிற வரைமுறை தாண்டி அனைத்தையும் வீடுகளில் வாங்கிக் வைப்பது ஒருவித கௌரவமாக கருதிக்கொள்வதே அதற்கு காரணமாகும். அத்தோடு கணவன் மனைவி என இருவரும் உழைப்பதால் எதையும் வாங்குவது என்பது சிரமம் இல்லா இலகுவானச் செயலாகத்தான் இருக்கிறது. ஆனால் வாங்கியவுடன் பயன்படுத்தும் ஆர்வம் அதே வேகத்தில் குறைந்து அடுத்த பொருளை தேடி ஓடவைக்கிறது. நாம் நமக்காக வாழ்கிறோம் என்பதை மறந்து யாரோ ஒருவரின் பேசும் பொருளாக வாழவே விருப்பம் கொள்கிறோம்.

இதுவே பிரதான காரணங்களில் ஒன்றாகவும் இருக்கிறது. நாம் புதிய உற்பத்திகளை வாங்கிக் குவிப்பது சரியா பிழையா என்பதையும் தாண்டி முடிந்தளவு பணத்தை வீணடிக்கும் பொருட்களை வாங்கி குவிக்கும் முன் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து வாங்குதல் எம்மையும் அறியாமல் பல தேவையற்ற பண விரயத்தை தடுக்கும் என்பதில் ஐயமில்லை. சிந்திப்போம் செயற்படுவோம் பண விரயம் தடுப்போம்.



கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...

# தந்தையும் மகளும்

மகன்களிடம் காண்பிக்கும் அதே கோபத்தை, அப்பாக்கள் தங்களது மகள்களிடம் காண்பிப்பது இல்லை.

வீடுகளில் சகோதரன் வாங்கும் அடியை, கண்டிப்பை எந்த மகளும் எப்போதும் வாங்கியிருக்கு முடியாது. புன்னகை, அழுகை, சிணுங்கல் ஊடாக தந்தையின் மனம் அளக்கும் வித்தையை பெண் குழந்தைகள் செய்து விடுவார்கள்.

அதேப் போலவே கேட்கும் பொருட்கள் "இல்லை" என்றோ "முடியாது.." என்றோ வார்த்தைகளை தந்தை பிரயோகம் செய்வதில்லை.காரணம் தன்னால் முடிந்த வரை மகள்களை மகிழ்ச்சியுடன் வளர்ப்பவர்கள் அப்பாக்கள்.

**மகளின் காவலன்**

வெளியிடங்களுக்கு சென்று தாமதமானால், அது எந்நேரமாக இருந்தாலும், கால்கடுக்க காத்திருந்து அழைத்துவரும் அப்பாக்கள் மிகச்சிறந்த காவலர்களே.

**மகள்களின் நண்பன்**

பெண் பிள்ளைக்கு நல்ல தகப்பன் கிடைத்து விட்டால் ஆயிரம் நண்பனுக்கு சமமே.

நல்ல தந்தையிடம் மகளால் தான் எதிர்கொள்ளும் ஆண் நபர்கள் தொடர்பான பிரச்சனையை இலக்குவாகப் பேசி தீர்வு எடுத்துக்கொள்ள முடிகிறது.இதனால் வழித்தவறி செல்லும் பயணங்கள் தவிர்க்கப் படுகிறது.

**பெண்களின் முதல் ஹீரோ அப்பா**

தங்களுக்கு என்ன மோசமான சூழ்நிலை வந்தாலும், ஏற்பட்டாலும் அதிலிருந்து மீட்டு வரும் சூப்பர் ஹீரோ அப்பா தான். அம்மா அன்பை ஊட்டி பாலூட்டி, சீராட்ட பெண்களுக்குள் தைரியத்தை ஊட்டி தன்னம்பிக்கையை கற்றுக் கொடுப்பது அப்பாக்கள் தான்.

**அப்பாக்கள் எப்பொழுதும் மாறாதவர்கள்**

மாற்றம் இல்லாத ஆண் மகன் பெண்ணின் வாழ்வில் இருக்கிறார் என்றால் அவர் அப்பாதான்.

அனைவரும் ஒவ்வொரு சூழ்நிலை வரும் போதும், மாறிவிடுவார்கள். அப்பாவுக்குள் அந்த மாற்றத்தை காண முடியாது.கடைசி வரை தான் இருக்கும் வரை எந்த மாற்றமும் இல்லாமல், மகளை ஏமாற்றம் அடையவிடாமல் காக்கும் ஆண் உறவு அப்பா. அப்பாதான் ஒவ்வொரு மகளும் கடைசி வரை தன்னுடன் இருக்க விரும்பும் உன்னத உறவு அப்பா.

**ஓர் நல்ல அப்பா**

ஓர் மகளின் வாழ்க்கையில் அப்பா என்பவர் ஓர் உறவு அல்ல, தோழன், ஹீரோ, காவலன், விஸ்வாசி என எண்ணற்ற பாத்திரங்களை தாங்கிக் கொண்டிருப்பவர் தான் அப்பா. ஆதலால் தான் பெண்கள் தங்களது #தந்தையைஅதிகமாகநேசிக்கிறார்கள்.

(இக் கட்டுரை குடும்ப பொறுப்புள்ள பெண் குழந்தைகள் மீதான அக்கறை கொண்ட தந்தையருக்கு மட்டும் சமர்ப்பணம்)

*ந. தாமரைச் செல்வி*
*கொழும்பு*

# உடல் உஷ்ணத்தை தணிக்கும் மருதாணி



மருதாணி இலைச் சாறு, நல்லெண்ணெய், பசும்பால், மூன்றையும் ஒன்றாகக் கலந்து காய்ச்சி தலைக்குத் தேய்த்து குளித்து வந்தால் இளநரை நீங்கும்.

மருதாணி இலையை தயிருடன் சேர்த்து அரைத்து இரவு படுப்பதற்கு முன் காலில் உள்ள பித்த வெடிப்புகளில் தடவி வந்தால் பித்த வெடிப்பு சரியாகும். பெண்கள் அடிக்கடி தங்களின் கைகளில் மருதாணி இலைகளை அரைத்து இட்டுக்கொள்வதால் கைகளில் இருக்கும் முரட்டு தன்மை நீங்கி கைகள் மிருதுவாகும்.மருதாணியை விரல்களின் நகங்களின் மீது இட்டுக்கொள்வதால் நகசுத்து பாதிப்பு ஏற்படாமல் தடுக்கும்.

மருதாணி இலைகளை அரைத்த பின்பு அந்த இலைகளை பிழிந்து வடிகட்டி எடுக்கப்படும் மருதாணி இலை சாற்றை தீராத வயிற்று போக்கு சீதபேதி பாதிப்பு கொண்டவர்கள் அருந்தி வந்தால் வயிற்றுப்போக்கு நிற்கும்.

சொறி சிரங்கு போன்ற தோலில் ஏற்படும் பாதிப்புகளுக்கும் சிறந்த நிவாரணமாக மருதாணி இலை சாறு மற்றும் எண்ணெய் இருக்கிறது.மருதாணி இலையில் இருந்து பெறப்பட்ட மருதாணி எண்ணையை தலைக்கு அடிக்கடி தேய்த்து வந்தால் உடல் உஷ்ணத்தை தணித்து, நரம்புகளை குளிர்ச்சியாக்கி தூக்கமின்மை பிரச்சனை நீங்குகிறது. மருதாணி இலைகள் ஊறவைக்கப்பட்ட தண்ணீரை அருந்தி வருபவர்களுக்கு ரத்த அழுத்தம் சமசீரான அளவில் இருக்க செய்கிறது.

# முன்னோடிகள் இலக்கிய வட்டத்தின் 'இலக்கிய மாலை'







முன்னோடிகள் இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் 'இலக்கிய மாலை' நிகழ்வு, சிறுவர் இலக்கியச் சிந்தனை அரங்காக யாழ்ப்பாணம் 'எங்கட புத்தகங்கள்' இல்லத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பத்மா இளங்கோவனின், சிறுவர் இலக்கிய நுட்பங்கள், சிறுவர் தமிழ் அமுதம்,கொரோனாவின் தடங்களில்.. ஆகிய மூன்று நூல்களின் அறிமுகங்கள் இடம்பெற்றன. முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வெளியீட்டுரையை வி.ரி. இளங்கோவன் நிகழ்த்தினார். சிறுவர் இலக்கியச் சிந்தனை உரைகளை, முனைவர் தே. தேவானந்த், இயல்வாணன், எம். மயூரன் ஆகியோர் நிகழ்த்தினர். பேராசிரியர் அ. சண்முகதாஸ் கருத்துரை வழங்கினார். சபா தனுஜன் நிகழ்வைத் தொகுத்து வழங்கினார்.




krishanthan & jeyagowry Family


Jaffna University Students



Tharushi, Kaileshvari, Priyadharshani, Nethmi, Anusha

# கலக்கல் இசை நிகழ்ச்சி கொள்ளுப்பிட்டியில் இன்று

இலங்கை கலைஞர்களின் ஒன்று கூடலில் அக்ஷரா இசைக் கலைஞர்கள் வழங்கும் "கலக்கல் இசை நிகழ்ச்சி (புதிய, பழைய, இடைக்கால பாடல்கள்) இன்று 01ஆம் திகதி ஞாயிறன்று மாலை 7.00 மணிக்கு கொழும்பு 03. கொள்ளுப்பிட்டி சசகவா ஹோட்டலில் நடைபெறுகிறது. இந்த சிறப்பான நிகழ்ச்சிக்கு சிரேஷ்ட பத்திரிகையாளரும், தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான கலைக்காவலர் தே.செந்தில்வேலவர் தலைமை தாங்குகின்றார்.





பிரதம அதிதியாக இலங்கை பொன்மனச் செம்மல், கலைத் தங்கம், கலாபூஷணம் எம். எஸ் தாஜ்மஹான் கலந்து சிறப்பிக்கிறார். கவிஞர் திலகம் பிரேம்ராஜ் முன்னிலை வகிக்கும் இந்நிகழ்வில் சிறப்பதியாக மக்கள் நலன்விரும்பி சம்மேளனத்தின் தவிசாளரும் சமூக சேவையாளுமான அஸீஸ் லக்கான கலந்து சிறப்பிக்கின்றார்.

இந்நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், பிரபலங்கள் மற்றும் தொழிலதிபர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கும இசை நிகழ்ச்சி இரவு இராப்போசனத்துடன் நடைபெறவிருக்கிறது.

மேலதிக விபரங்களுக்கு பிரைட் வின்சன் 077 256 1210, கவிக்கமல் 0775745172, தவசீலன் 77 569 0112, பாலன் 077 442 3427, பாசில் 076 187 4878 தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.



# யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களின் மனவெழுச்சி வெளிப்பாட்டுத் தளமாக சமூக ஊடகங்கள்

புதிய தொழிநுட்பங்கள் வளர்ச்சியடைவதனால் மக்களின் சமூகத் தொடர்புகளின் விதமும் மாற்றமடைந்து செல்கின்றன. நேரடியாக கொண்டிருந்த இடைத்தொடர்பு நிலைமைகள் மாற்றமடைந்து தமது அன்றாடத் தேவைகள், விருப்பங்கள், உணர்வு வெளிப்பாடுகளினை சமூக ஊடகங்கள் வாயிலாக பகிர்ந்து கொள்ளுவதற்குத் தற்காலத்தில் மக்கள் முனைகின்றனர்.

சமூக ஊடகங்கள் பொதுவில் அனைத்து வயதுப் பிரிவினராலும் பலதரப்பட்டட நோக்கங்களிற்காக நுகரப்பட்டாலும் இளையோர்களிடத்தே அதன் பயன்பாடும், அவர்கள் சமூக ஊடகங்களினைப் பயன்படுத்துவதற்கான நோக்கங்களும் பெரும்பாலும் ஏனையோருடன் ஒப்பிடுகையில் மாறுபட்டதாகவே காணப்படுகின்றது.

'சமூக ஊடகம்' என்பது புதிய ஊடகங்களின் வகைகளில் பிரபல்யமானவையாகும். வலைத்தளங்கள் வழியாக தகவல், கருத்துக்கள், தொழில்சார் நலன்கள், மற்றும் தகவல் வெளிப்பாட்டின் பிற வடிவங்களை உருவாக்கவும், பகிர்வதற்கும் உதவும் ஊடகங்கள் பொதுவில் சமூக ஊடகங்களாக குறிப்பிடப்படுகின்றன. இங்கு உள்ளடக்கங்கள் ஒவ்வொன்றினையும் பெறுநர்களேகட்டமைத்துக் கொள்கின்றனர். ஒவ்வொருவரும் தத்தமது கருத்தாக்கங்களை உருவாக்கி அதனை படிக்க விரும்புகின்ற எவருக்கும் அவற்றினை அனுப்பக்கூடிய வாய்ப்பினை சமூக ஊடகங்கள் ஏற்படுத்திக்கொடுத்துள்ளன.

ஏனைய ஊடக வகைகளினைப்போலல்லாமல் சமூக ஊடகங்களிற்கேயுரிய தனிச்சிறப்பாக கொள்ளப்படுவது அவற்றின் பின்னூட்ட (Feedback) பொறிமுறையாகும். ஏனைய ஊடகங்கள் ஒருவழிப் பொறிமுறையில் (Oneway) தகவல்களை பரிமாற்றிக்கொள்வதாக அமையும் போது. புதிய ஊடகங்கள் குறிப்பாக சமூக ஊடகங்கள் சம நேரத்தில் பின்னூட்டத்தினை வழங்குவதற்கு வாய்ப்பளிக்கின்றன. இதனால் இவை இருவழித் தொடர்பாடலினை ஊக்குவிக்கக்கூடிய ஊடகங்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன.

2023ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பு அறிக்கையின் அடிப்படையில் முகப்புத்தகம் (Facebook), வலையொளி (YouTube), புலனம் (WhatsApp), படவரி (Instagram), வீசற் (WeChat), டிக்டொக் (TikTok) ஆகிய சமூக ஊடகங்கள் உலகளாவிய தளத்தில் அதிகமானோர் பயன்படுத்தும் சமூக ஊடகங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறான நன்மைகளினை சமூக ஊடகங்கள் தன்னகத்தே கொண்டுள்ளமையினால் பாவனையாளர்களது, குறிப்பாக இளைஞர்களது மனவெழுச்சி வெளிப்பாட்டுத் தளமாகவும் தமது வகிபங்கினை ஏற்பவையாக சமூக ஊடகங்கள் உருமாற்றம் பெற்றுள்ளன.

'மனவெழுச்சி' எனும் சொல்லானது 1579 ஆம் ஆண்டிற்கு முற்பட்டதாகும். Umouvoir எனும் பிரெஞ்சு சொல்லிலிருந்து இச் சொல்லானது தோற்றம் பெற்றதாகும். இது ஆவலைத் தூண்டு, வெளிப்படுத்து என பொருள்படுகின்றது. ஆரம்பகால முன்னோடிகள் விருப்பு, உணர்ச்சிவயக் கருத்துக்கள், உணர்ச்சித் தாக்குதல் போன்ற அர்த்தப்பாடுகளை வெளிப்படுத்த இவ்வார்த்தையினைப் பயன்படுத்தினர். இருப்பினும் நவீன காலத்தில் “உணர்வு” எனும் நேரடிப் பொருளில் இவ்வார்த்தையானது பிரயோகிக்கப்படுகின்றது. மகிழ்ச்சி, கோபம், வெட்கம், வெறுப்பு, விரக்தி, பயம், அன்பு, கவலை, தற்கொலை உணர்வு, வெற்றி உணர்வு, பக்தியுணர்வு போன்றவை மனவெழுச்சிகளுக்கான சில எடுத்துக்காட்டுகளாகும்.



மனிதனுடைய மனவெழுச்சிகளைத் தீர்மானிப்பதில் பரம்பரை, நாளமில்லா சுரப்பிகள், தன்னாட்சி நரம்புத்தொகுதி, மூளை, ஓமோன்கள், நரம்புக் கடத்திகள் போன்ற காரணிகள் அதிகம் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவற்றின் செல்வாக்கினால் தோன்றும் மனவெழுச்சிகள் மூலமாக மனிதனுடைய செயல்களை ஊக்குவிக்கவும், திசைமுகப்படுத்தலும் உதவுதல், மனித வாழ்க்கையை சுவையூட்டும் ஓர் உந்துசக்தியாக திகழ்தல், இலக்கிய திறனையும் நுண்கலைகளையும் இரசிக்க துணைசெய்தல், தீவிர செயலாற்றக்கூடிய அதிகப்படியான வலிமையினை திரட்டித் தருதல், சமூக நல்வாழ்வுக்கான வழிகாட்டுதல்களை மேற்கொள்ளுதல் போன்ற பாரிய நன்மைகள் ஏற்படுகின்றன.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடமானது கல்வி, கலையம்சங்கள், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை உட்புகுத்தி அவற்றின் மூலமாக மாணவர்களின் தொடர்பாடல் திறனினை மேம்படுத்தும் பொறுப்புமிக்க பீடமாக காணப்படுகின்றது. குறித்த பீடத்தில் கல்விகற்கும் மாணவர்களில் பெரும்பாலான மாணவர்கள் தமது தனியாள் மற்றும் இதர தேவைகளுக்காக சமூக ஊடகங்களினைப் பயன்படுத்தி தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் போக்கானது 2024ஆம் ஆண்டில் கலைப்பீடத்தில் கல்விகற்கும் மொத்த மாணவர்களில் 10% மாணவர்களை ஆய்வுக்குட்படுத்தியதன் மூலமாக கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக பொழுதுபோக்குதல், நண்பர்களுடன் தமது உணர்வுகளைப் பரிமாற்றுதல், பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளல், காணொளிகள், புகைப்படங்கள் மூலமாக தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல், தமது நட்பு வட்டாரங்களைப் பெருக்கி அவற்றை தக்கவைத்துக் கொள்ளுதல், தமது வெற்றிகளைப் பரிமாற்றி மகிழ்வடைதல், கல்வி நடவடிக்கைகள் போன்றவற்றவற்றின் மனவெழுச்சிகளை வெளிப்படுத்த சமூக ஊடகங்களை மாணவர்கள் அதிகம் பயன்படுத்துகின்றனர்.

நுகருவதற்கு மிகவும் இலகுவாக இருப்பதனாலும், தாம் நினைத்த நேரத்திலே தாம் நினைத்ததைப் பகிர்வதற்கு உகந்த தளமாக இருப்பதாலும், ஏனையோருடன் நேரடியாக உணர்வுகளைப் பகிர்வதைவிட அவற்றினைச் சமூக ஊடகங்கள் மூலம் பகிர்வது நல்லதெனக் கருதுவதாலும், சமூக ஊடகங்களில் உணர்வுகளை வெளிப்படுத்துவதால் நிம்மதி உணர்வினை அடைவதாக மாணவர்கள் கருதுவதாலும் தமது மனவெழுச்சிகளை வெளிப்படுத்தும் தளமாக சமூக ஊடகங்களை நுகர்வதில் மாணவர்களுக்கு அதிக ஆர்வம் காணப்படுகின்றது.

இவ்வாறான காரணங்களுக்காக சமூக ஊடகங்களினை நுகரும் மாணவர்களில் 63% மாணவர்கள் 6 மணித்தியாலங்களுக்கு குறைவாகவும், மிகுதி 37% மாணவர்கள் 6 மணித்தியாலங்களுக்கு அதிகமாகவும் சமூக ஊடகங்களை நுகர்கின்றனர். அவர்களுள் 45% மாணவர்கள் தமது மனவெழுச்சிகள் சார்ந்த பதிவுகளைப் பார்வையிடுவதற்காக தமக்கு நேரடியாக அறிமுகமானவர்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கியுள்ளதோடு மிகுதி 55% மாணவர்கள் தமக்கு அறிமுகமில்லாத நபர்களும் சமூக ஊடகங்கள் மூலமாக தமது மனவெழுச்சிசார்ந்த பதிவுகளையும் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கியுள்ளனர். இவ்வாறு தமக்கு அறிமுகமற்ற நபர்களையும் தமது மனவெழுச்சிகள் சார்ந்த பதிவுகளை பார்வையிட அனுமதியளித்துள்ளமையினால் சில மாணவர்கள் இணையம் மூலமான வன்முறையினையினையும் எதிர்கொண்டுள்ளனர்.

இவ்வாறாக மாணவர்கள் தமது மனவெழுச்சிகளை வெளிப்படுத்துவதோடு மாத்திரமல்லாமல் தம்மைப் போன்று ஏனைய மாணவர்களின் மனவெழுச்சி வெளிப்பாடுகளையும் ஆர்வத்துடன் உற்றுநோக்குகின்றனர். அதேவேளை தாம் எவ்வாறான மனநிலையில் இருக்கிறார்களோ அதையொத்த பதிவுகளை மற்றையவர்களின் தளங்களில் பார்வையிடும்போது அவற்றையும் தம்முடன் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு அவற்றின் ஊடாக மகிழ்வடைந்துகொள்கின்றனர்.

அதேசமயம் கலைப்பீட மாணவர்கள் சமூக ஊடகங்கள் வாயிலாக தமது மனவெழுச்சிகளை வெளிப்படுத்துவதற்கு முனைவதற்கு முன்னர், ஒவ்வொரு உள்ளடக்கங்களிலும் அவர்களது பால்நிலையானது அதீத செல்வாக்குச் செலுத்துகின்றது. குறிப்பாக தான் ஒரு ஆண், பெண் அல்லது மாற்றுப்பாலினத்தவர் எனவே இதனைப் பதிவிடலாமா இல்லையா?, இதனால் பாதிப்புக்கள் அல்லது பின்விளைவுகள் ஏற்படக்கூடுமா என்ற எண்ணமே மாணவர்கள் ஒவ்வொருவரினதும் மனவெழுச்சிப் பதிவுகளைத் தீர்மானிக்கின்றது.

இவ்வாறாக சமூக ஊடகங்களில் மனவெழுச்சிகளை வெளிப்படுத்துவதனால் யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர்களில் 69% மாணவர்களின் கல்வியானது பாதிப்படைவதை ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றபோதிலும் இன்றுவரையில் தமது மனவெழுச்சிகளை வெளிப்படுத்தும் தளமாக சமூக ஊடகங்களையே பயன்படுத்த மாணவர்கள் தலைப்படுகின்றனர் என்பது இளைஞர்களது உணர்வுகளில் பின்னிப்பிணைந்தவையாக சமூக ஊடகங்கள் காணப்படுகின்றன என்பதனை தெளிவாக மெய்ப்பிப்பதோடு,சமூக ஊடகங்களின் எதிர்கால பரிணாமங்கள் எவ்வாறு அமையப்போகின்றன என்பதையும் வெளிப்படுத்திநிற்கின்றமையும்; குறிப்பிடத்தக்கது.




கிரிஜா அருள்பிரகாசம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# கிழக்கின் மகள் (Daughter of the east) சட்டத்தரணி மர்யம் மன்சூர் நளீமூதீன்



இயற்கை எழில்மிகு இலங்கையின் கிழக்கு கரையோரத்தில் வீற்றிருக்கும் கிழக்கு மாகாணத்தின் நாமத்தினை தேசியம் மற்றும் சர்வதேசம் என வெளிக்கொணர்ந்து, எமக்கெல்லாம் அடையாளம் தந்த கிழக்கின் விடிவெள்ளிகள் என்று போற்றப்படும் கேட் முதலியார் எம். எஸ். காரியப்பர்(பாட்டனார்) மற்றும் முன்னாள் அமைச்சர் ஏ. ஆர் மன்சூர் (தந்தை) ஆகியோரின் வழித்தோன்றலில் செதுக்கப்பட்ட "கிழக்கின் புதல்வி " சட்டத்தரணி மர்யம் மன்சூர் நளீமூதீன்.

வரலாற்றில் பெண்களுக்குப் போராடாமல் விடிந்ததில்லை. தங்களுக்கு மறுக்கப்படும் உரிமைகளுக்காகவும் பொது நலனுக்காகவும் காலந்தோறும் பெண்கள் போராடியபடி இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இவரும் விதிவிலக்கு இல்லை. பல தடைகள் கடந்து தான்..., "பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும், பாரினில் பெண்கள் நடத்த வந்தோம். எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை காண் "என்ற மகாகவி பாரதியின் வரிகளுக்கு ஏற்ப இன்று சர்வதேச ரீதியிலும் தடம் பதித்து பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார் எம் கிழக்கின் மகள்.



இவர் ஆரம்பக் கல்வியை கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியிலும் உயர் நிலைக் கல்வியை கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியிலும் கற்றார். இக்கல்லூரி காலத்தில் மர்யம் மன்சூர் அவர்கள் தனது தந்தையைப் போன்றே கவிதை படிப்பதிலும் நாடகங்களில் பாத்திரங்கள் ஏற்று நடிப்பதிலும் ஆர்வம் காட்டினார். வருடந்தோறும் பாடசாலை மட்டங்களில் நடைபெறும் ஆங்கிலக் கவிதை போட்டி நிகழ்ச்சியில் தவறாது பங்கெடுத்து, தமது திறமையை நிரூபித்து காட்டிக் கொண்டே வந்திருக்கிறார்.

அதேபோன்றுதான் மார்க்க கல்வியிலும் மிகவும் ஈடுபாடுடைய மர்யம் மன்சூர் அவர்கள் குர்ஆன் மனன மற்றும் ஓதும் போட்டிகளிலும் பங்கேற்று இருப்பதுடன் இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனத்தினால் ஒளிபரப்பப்படும் விசேட முஸ்லிம் நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று இருக்கின்றார். அதேசமயம் இக்காலகட்டத்தில் இருந்தே சமூக சேவைகளிலும் தன்னை அர்ப்பணித்து பல நிலையான இலக்குகளை வகுத்து எமது சமூக விடிவுக்காக விதைக்கத் தொடங்கினார்.

பின்னர், சட்ட கல்லூரியில் முதலாம் வருட சட்டக் கல்வி பயிலும் மாணவியாக இருக்கும் போது விவாத குழுவின் உப தலைவராகவும் 3ஆம் வருட மாணவியாக இருக்கும்போது அக்குழுக்கே தலைமை தாங்க தகுதியானார்.

பின்னர், சட்ட கல்லூரியில் நடைபெறும் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் ஞாபகார்த்த கிண்ண போட்டியில் வருடத்தின் சிறந்த பேச்சாளருக்கான முதல் நிலை மாணவியாக தேர்வு செய்யப்பட்ட, முதலாவது கிழக்கு மாகாணத்தின் பெண் ஆளுமை எனும் நாமத்தை சட்டக் கல்லூரியின் வரலாற்று ஏட்டில் செதுக்கி எமது பெண்களின் ஆளுமைகளை தேசிய ரீதியில் பிரகாசிக்க செய்தார். இவரது தெளிவான குரலும் கம்பீரமாக பேசும் அழகும் சகலோரையும் ஈர்ப்புக்குள்ளாக்கியது. இக் கல்லூரி காலத்தில் சட்டக் கல்லூரி தமிழ் மன்ற பொதுச் செயலாளராகவும், முஸ்லிம் மஜ்லிஸ் உப தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். இதன் மூலம் இவரது தலைமைத்துவப் பண்பு வெளிப்பட்டது. இக்கால கட்டம் தான் இவரின் வாழ்வில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது எனலாம்.

தனது தந்தையின் மீது தீராத அன்பும் மரியாதையும் கொண்ட இவர் தனது தந்தையை ஒவ்வொரு செயற்பாடுகளிலும் தனக்கு முன்மாதிரியாகக் கொண்டு காலடி எடுத்து வைக்க தொடங்கினார். இதுபோலவே பல சர்வதேச மாநாடுகளிலும் கூட்டத் தொடர்களிலும் வெளிவிவகார சந்திப்புகளிலும் தனது தந்தையுடன் பங்கு கொண்டு தந்தையின் பக்க பலமாக இருந்தது மட்டுமல்ல, அமைச்சர் தங்களின் வியூகங்கள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் சம்பந்தமான கலந்தாலோசிக்க கூடிய அளவுக்கு தனது தந்தையின் நம்பிக்கைக்குரிய முக்கிய பாத்திரமாக ஒளிர்ந்தார்.

பின்னர் குவைத் நாட்டின் இலங்கைக்கான தூதரகத்தில் பணியாளர் பிரிவுக்கு தலைமை சட்டத்தரணியாக பணியாற்றி 1000க்கும் மேற்பட்ட பணியாளர்களின் உரிமை மீறல்கள் சம்பந்தமான வழக்குகளை தொடர்ந்து இருக்கின்றார். இதற்கு அப்போது இருந்த எமது நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ன் பாராட்டையும் பெற்றிருக்கிறார். அத்துடன் குவைத் பெண்கள் சங்கத்தின் "சிறந்த பெண் தலைமைத்துவம்" எனும் பிரிவில் அவ்வுயரிய விருதை அலங்கரித்தார். இவ்வாறு பல இடங்களிலும் சிறந்து விளங்கிய இவர் எதிர்கால சமூகத்தின் முன்மாதிரியான மனிதராக பிரகாசிக்கத் தொடங்கினார்.இவையனைத்தும் உயர்ச்சிக்கும் உந்து சக்தியாக விளங்கியது இவர் தனது தொழிலின் மீது கொண்டிருந்த அளவில்லா பிரியமே ஆகும்.



பின்னர், இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம், ஐக்கிய நாடுகள் அமையம்(UN) மற்றும் பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு(ILO) ஆகியவற்றில் கடமையாற்றி தொழிலாளர் நலத்திலும் பிரச்சினைகளிலும் கவனம் செலுத்தி பல சேவைகளை செய்துள்ளார். சிறந்த முன்மாதிரியாக இருந்த அன்பு தந்தையின் இறை அழைப்பானது மர்யம் நளிமூதீனின் வாழ்வில் மற்றொரு திருப்புமுனையாக அமைந்தது. அது இன்று வரைக்கும் வார்த்தைகளால் சொல்ல முடியாத துயர். அதை எண்ணி கண் கலங்காத நாளில்லை. ஆனால் அத்துயரானது மரினா மன்சூருக்கு மட்டுமல்ல, முழு நாட்டிற்கும் பாரியதொரு பேரிழப்பாகும்.

தனது தந்தையின் மீது தீரா அன்பும் மரியாதையும் கொண்ட அமைச்சரின் கனிஷ்ட புதல்வி யான மர்யம் மன்சூர் நளிமூதீன் தன் தந்தையின் பின்னர் காணப்பட்ட அரசியல் கலாசாரம் மற்றும் அரசியல்வாதிகளின் மீது ஏற்பட்ட அதிருப்தி என்பவற்றினால்" விட்ட இடத்திலிருந்து தொடங்குவோம்" எனும் நோக்குடன் எமது சமுதாய முதல் நிலைக்காக வழிகாட்டி, ஒளி ஊட்டும்.




தூய எண்ணத்தில் தனது தந்தையின் மறைவுக்குப் பின்னர் A.R . MANSOOR FOUNDATION யினை பல அர்ப்பணிப்புகளுக்கு மத்தியில் ஸ்தாபித்து, சர்வதேச ரீதியிலும் இவ் உன்னத சேவைகளை, பல சவால்களையும் பல கசப்பான அனுபவங்களையும் கடந்து இறைவனின் உதவியால் தலைமை தாங்கி பல சமூக முன்னேற்ற திட்டங்களை தீட்டி பல சேவைகளை செய்து வருகின்றார்.

நிலையில்லா வறுமையைக் காரணங்காட்டி நிலையான கல்வியை யாரும் விட்டு விடக்கூடாது எனும் பிரதான நோக்கில் பெண்கள் உரிமை, சமூக விழிப்புணர்வு, வாழ்வாதார வசதிகள், மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், ரமழான் மாத விசேட உதவி, அசாதாரண கால உலர் உணவு வசதிகள், குடிநீர் வசதிகள் மற்றும் வழிகாட்டல் கருத்தரங்கு என ஏ. ஆர். மன்சூர் பௌன்டேசனின் சேவைகளின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

மர்யம் நளிமூதீன் அவுஸ்திரேலியா நாட்டில் முழுநேர சட்டத்தரணியாகவும் அவுஸ்திரேலிய முஸ்லிம் பெண்கள் கவுன்சிலின் தலைவராகவும், அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் உயர்பீட உறுப்பினர், காலத்தை வென்றவன் காவியமானவன் எனும் கவி புத்தகத்தை தொகுத்தவர் என கலை, கலாசாரம் மற்றும் பல பெண்கள் உரிமை சார்ந்த பல தொண்டு நிறுவனங்களில் அங்கத்தவராக இருந்து கொண்டு தனது சமூகப் பணியை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றார். "புலிக்குப் பிறந்தது பூனையாகுமா" என்பதைப்போல அவர் "சரித்திர நாயகன், கறைபடியா கரத்தினை பூண்ட மர்ஹூம் அல்ஹாஜ் ஏ.ஆர்.மன்சூர் அவர்களின் வழித்தோன்றல்" என்பதே உண்மையாகும்.

**இலங்கையில் முதலாவது பெண்**

அவுஸ்திரேலியா முஸ்லிம் பெண்கள் கவுன்சில் முன்னாள் செயலாளராகவும் இந்நாள் தலைவராகவும் கடமையாற்ற மர்யம் மன்சூர் நளிமூதீனுக்கு கிடைக்க பெற்ற அங்கீகாரமானது இலங்கையர்கள் அனைவரும் பெருமைப்பட வேண்டிய ஒன்றாகும். இதன் மூலம் சர்வதேச ரீதியில் எமது பெண்களின் ஆளுமையை இன்னும் பிரகாசிக்க செய்துள்ளார். தான் தலைமை தாங்கும் இவ்வமைப்பை வரலாற்றில் இல்லாதவாறு அவுஸ்ரேலியாவிலும் பிரதமர் மற்றும் அமைச்சர்களின் பார்வைக்கு கொண்டு சேர்த்து பல திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகின்றார். விசேடமாக ஆப்கானிஸ்தானில் இருந்து புலம்பெயர்ந்து கொண்டிருக்கும் அகதிகளுக்கான பல சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



ஏ.எல்.எம்.ஷினாஸ்
பெரியநீலாவணை விசேட நிருபர்

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shamsfahim@gmail.com
Whatsap: 0714901181

# திக்குவல்லை ஸூம்ரி: கதைகளின் இடைவெளியை நிரப்புபவன்

கதை பரந்த உலகில், புனைவுக் கதை வெளி தமிழில் பரந்தது தான்.

அந்தக் கதை வெளியின் இடைவெளி நிரப்புபவராக திக்குவல்லை ஸூம்ரி திகழ்கிறார்.

கடந்த வாரம் ஸூம்ரியின் நட்பு கதைகளின் பனுவல் வெளியீடு கொழும்பில் நிகழ்வுற்றது.கலை நிகழ்வுகளோடு வடிவமைந்த நிகழ்வில் நட்பு பிரதிகள் அவையோரை மேடைக்கு அழைத்து வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.ஏற்புரையின் போது"தயவு செய்து இந்தக்கதை க்ளிப் ஒன்றையாவது வாசித்துப் பாருங்கள்"என் ஸூம்ரி கேட்டுக் கொண்டதிலிருந்து நமது சூழலில் புத்தக வெளியீட்டுக்கும், புத்தக வாசிப்புக்குமிடையிலான இடைவெளி வெகுதூரத்திலிருப்பது நிதர்சமனானது என்பதை உணர்த்திற்று.

ஸூம்ரி பன்முக ஆளுமை கவிதை, கதை, ஓவியம், பாடல்,அறிவிப்பு, நாடகம்,நடிப்பு,பிரதியாக்கம் என கலை இலக்கியத்தில் சுழல்பவர்.

வானொலி சார்ந்து தன் ஆளுமையை அகலித்தவர்.அந்த அகலிப்பின்

வீச்சத்தை நட்பு கதைகளிலும் நிரப்புவார் திக்குவல்லை ஸூம்ரி.

முற்றத்து மல்லிகை முதல் நட்பு வரையான முப்பது கதைகளின் பனுவலிது.விடிவெள்ளியில் வெளிவந்து (29 கதைகள்) வாசகப் பரப்பைத் தொட்ட கதைகள் இவை.

'நடப்பியல் நகர்வுகளைப் பேசும் கதைகள்'இவையென மூத்த கதைஞர்




திக்குவல்லைக் கமால் அணிந்துரைக்கிறார்.

படிக்கும் காலத்தில் பேனா பிடிக்கும் ஆர்வங்கொண்ட ஸூம்ரி

,திக்குவல்லையின் கதைசொல்லிகளின் அணியில் இணைகிறார். இவரது கதைகளில் யதார்த்த மொழியும், ஆயல்பான கதை சொல் முறையும் மிளிர்கின்றன.எளிமையான சொற்களை குறுங்குறும் வாக்காயங்களில் அவர் பெய்வது வாசிப்பின் தூவானத்தை வாசகர் மனசுள் பதிகிறது.

'எண்பதுகளில் இலக்கியப் பிரவேசம் செய்த திக்குவல்லை ஸூம்ரியின் சிறுகதை ஆக்கக்காலம் இறுதி இருபது வருடங்களை உள்ளடக்கியதே"என்ற அணிந்துரைக் குறிப்பு ஸூம்ரியின் கதைக்காலத்தை நிறுவுகிறது.

இவரது கதைக்களமும் கருவும் கதையின் இயல்போட்டத்தை.வாசக அனுபவங்களோடு வாசிக்கக் கவருகிறது.'அரசியல்வாதிகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம், வெளிநாடுகளில் வேலைப்பார்க்கும் குடும்பமாக வாழும் பிள்ளைகள், நவீன தொடர்புசாதனங்களின். எதிர் விளைவுகள்,கல்யாணக்கோலங்கள், கழிவு முகாமைத்துவச் சீர்கேடுகள், நாகரீகமான மோசடிகள், குடும்ப உறவுகளுக்கிடையிலான மோதல்கள், சமூக சம்பிரதாயங்களின் வீழ்ச்சி, குறுக்கு வழியில் காரியம் சாதித்தல், உரிரவர்களுக்கு உதவி ஒத்தாசை வழங்காமை' முதலிய விடயப்பரப்புகளில் கதைகள் களம் கொள்கின்றன.

இக்கதைகளில் எழுத்தாளர் வாழ்வியல் அனுபவங்கள் துயர் மண்டுவதையும் வாசிக்கலாம். திக்குவல்லை ஸூம்ரி நட்புவழி கதைப்புலத்தில் தன்னை நிரப்புகிறார்.

அவர் கதைகள் மேலும் நவீனத்துவ உருவம், இறுகிய சொல்லின் விளம்பரம், குறியீட்டுத்திறன், கதைகளையுடைத்துக் கதையாதல்களால் மேலும் நிரம்பி வழியட்டும்.வாழ்த்துக்கள் நட்புக்கதைஞர் ஸூம்ரிக்கு.

# துயர் பகிர்வு: குணசேன விதான



இலங்கை கலை இலக்கிய வெளியில் தவிர்க்க முடியா ஆளுமை, செயற்பாட்டாளர், குணசேன விதான காலமானார்.

ஆயினும் இவரது தடம் செதுக்கப்பட்ட வரலாறு.

சிங்களச் சிறுகதையில் புத்தாக்க எழுத்தாளராக மிளிர்ந்தவர். தமிழ் உட்பட உலக மொழிகளில் இவரது கதைகள் வாசிக்கப்பட்டன.

பாலம் குறிப்பிடத்தக்க தமிழ் மொழிபெயர்ப்பில் வெளிவந்து அதிர்வை ஏற்படுத்தியது.

தமிழ்சிங்கள ஒருமைப்பாட்டின்பால் ஈர்ப்புக்காட்டியவர்; இன் நல்லுறவின் இலக்கிய மனக்காரர்; சிங்கள தமிழ் மக்களிடையே புரிந்துணர்வும், ஒருமைப்பாடும் ஏற்பட அவாக்கொண்டவர்; அதன்பால் எழுத்தில் இயங்கியவர்.

தமிழ் முற்போக்கு எழுத்துப் பண்ணையோடு நெருங்கிச் செயற்பட்டவர்.

குணசேன விதானவுக்கு ஆழிரங்கல்.




# மாற்று மொழிக் கவிதை

மாற்றுமொழி வழிக் கவிதைகள் தமிழ்க் கவிதைப் புலத்தை நிரப்பம் செய்தே வருகின்றன. உலக மொழிகள் பலவற்றின் வழியே தமிழுக்குள் வந்துசேரும் இத்தகைய கவிதைகள் ஒப்பீட்டு வாசிப்புக்கும் ஆய்வுக்குமுரியனவும்தான். க்ரோயேஷிய மொழியின் கவிதைத் தேடல் இந்த 'தேடல்'. உலகக்கவி யஷ்னா குகிச் எழுதியது. அவரே ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தது. இதனைத் தமிழுக்குத் தருகிறார் சிறீ வத்சலா.

க்ரோயேஷியஆங்கில வழி மொழிபெயர்ப்பாகத் தமிழில் வாசிக்கலாம்.

**தேடல்**

வாழ்க்கையின் இசைக்குப் பின்னால் இருப்பதை நான் தேடவிரும்புகிறேன்.
இதயத்தின் முழுப்பக்கத்தையும் வேண்டுகிறேன்.
ஏனென்றால் வாழ்க்கை ஒரு பாடலுடன் உயிர்த்திருக்கிறது.
குதூகலம் நிரம்பிய இதயம் அதோடு தேடலின் மையத்தில் ஒரு அவா காலையின் கண்ணீர் கீழே சிந்தும்போது வேட்டைக்காரனின் ஒவ்வொரு நிழலும் நீலம் பூசப்பட்ட நீலத்தைக் கொல்கிறது.
ஆனால் நான் இந்த வானத்தின் இசைக்குப் பின்னால் இந்தப் புவிப் பூக்களுக்கு இடையே இருப்பதைத் தேட விரும்புகிறேன் ஒரு நிரந்தரமான பாடலைத் தேடி முடிவின்றி வாழ்க்கையைப் பாடுவதற்கு



# ரூமியின் வைரங்கள்




(ஊ)
அழுகை பிறகு சிரிப்பு

இப்படியும்
இருக்கக்கூடும்
இனியவனே!
கிளைகளில்
தேடிக்கொண்டிருக்கிறாய்
வேர்களில் மட்டுமே
வெளிப்படும் ஒன்றை
காதலின் வெள்ளம் ஒன்று
உன்னை நோக்கிப் பாய்கிறது
ஒவ்வொரு கணமும்
நெருங்கிய படி
நிம்மதி பெறு
அதுவே நம் முடிவு
தெரியுமா?
மகிழ்ச்சியில் மரணம்
மதம் கொண்ட இணைவு
மரித்திருந்தேன்
பின்பு உயிர்த்தெழுந்தேன்
அழுகை பிறகு சிரிப்பு
காதலின் சக்தி என்னுள் வந்தது
அரிமா அன்ன வீரம் தந்தது
பின்பு மென்மை ஆனேன்
மாலை வானின்
விண்மீன் போல
இந்தக்காதல்தான்
இணைத்துள்ளது ஒன்றாய்
அனைத்தையும்
அதுவேதான்
அனைத்தும்கூட
சுவர் மீது விழுந்தது
சூரிய ஒளி
சுவர் அடைந்தது
இரவல் பிரகாசம்
அப்பாவியே!
மண்ணாங்கட்டியிடம் ஏன்
மனதைப் பறிகொடுக்கிறாய்?
நித்திய மாய் ஒளிவீசும்
மூலத்தைத் தேடு
கற்பனையில் எட்டாது
கற்பனைக்கு ஒருபோதும்
என்ன தருகிறாய்
எனக்கு நீ என்பது
சிறுபிள்ளைபோல்
சாணுங்குவதை நிறுத்து

வைரங்கள் சுடரும்

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா



அவர்களை திருப்திப்படுத்துவது நம் நோக்கமுமல்ல” என்று மனதில் நினைத்துக் கொண்டான்.

நாட்கள் ஒன்றையொன்று விரட்ட மாதங்கள் சில உருண்டோடின. அரசியல் உலகில் காலடி வைத்த மண்டேலா வழமையை விட உற்சாகமாகக் காணப்பட்டான். ஒருநாள் காலை வேளையில் சிசுலு தன் கையில் ஒரு பத்திரிகையை எடுத்துக் கொண்டு மண்டேலாவின் இருப்பிடம் நோக்கி பதற்றத்துடன் ஓடோடி வந்தான். சிசுலுவின் பதற்ற நிலையை கண்ட மண்டேலா “சிசுலு என்ன விடயம்? ஏன் இப்படி பதறி அடித்துக் கொண்டு ஓடி வருகிறாய்?” என்று கேட்டவாறே சிசுலுவின் கையில் இருந்த பத்திரிகையை நோட்டமிட்டான். வியர்க்க விறுவிறுக்க சிசுலு “நான் கூறப்போகும் செய்தி அதிர்ச்சியாக இருக்கும். மனதை திடப்படுத்திக்கொள்” என்று கூறிக்கொண்டு பத்திரிகையில் தான் பார்த்த செய்தியை காட்டியவாறே மண்டேலாவின் தோளை ஆதரவாக பற்றிக் கொண்டான்,

சிசுலு கொண்டு வந்த செய்தி மண்டேலாவை பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. அவன் கண்களில் இருந்து கண்ணீர் தாரை தாரையாக பெருக்கெடுத்தோட “அப்பா....அப்பா..” என்று அவன் உதடுகள் அவனை அறியாமலே உச்சரிக்க வாய் விட்டுக் கதறியழத் தொடங்கினான். ஆம்! மண்டேலாவின் தந்தை ஜோங்கிந்தாபா இறந்துவிட்டதாக அவரின் மரணச் செய்தியை அப் பத்திரிகை சுமந்து வந்திருந்தது. விடயத்தை சிசுலு மூலமாக அறிந்த கோரும் மண்டேலாவின் இருப்பிடம் தேடி ஓடோடி வந்து மண்டேலாவுக்கு ஆறுதல் கூறினான். தொலைபேசி ஊடாக இச் செய்தி ஜஸ்டிஸ{க்கும் பரிமாற்றப்பட்டது. அவனும் பதறியடித்துக் கொண்டு ஓடோடி வந்து மண்டேலாவையும் அழைத்துக் கொண்டு ஊருக்கு சென்றான்.


இவர்கள் இருவரும் எவ்வளவு தான் விரைவாகச் சென்றும் எவ்வித பலனும் இல்லை. அங்கு ஜோங்கிந்தாபாவின் இறுதிச் சடங்குகள் யாவும் ஏற்கனவே நடந்து முடிந்துவிட்டன. ஜஸ்டிஸ் தன்னுடன் ஊருக்கு வராத கோபத்தினால் ஜோங்கிந்தாபா தன் மரணச் செய்தியை கூட அவர்களுக்கு அறிவிக்க வேண்டாமென்று உறுதியாகச் சொல்லிவிட ஊரிலுள்ளவர்களும் அரசரின் சொற்படியே பிள்ளைகளுக்கு அவ் விடயத்தை அறிவிக்காமல் இருந்துவிட்டனர்.

தந்தையின் முகத்தை இறுதியாக ஒருமுறை கூட பார்க்க கிடைக்கவில்லையே என்ற கவலையில் மண்டேலாவும் ஜஸ்டிஸும் அனலில் விழுந்த புழுவாகத் துடித்தனர். மண்டேலாவின் கோபமெல்லாம் ஜஸ்டிஸின் பக்கமே திரும்பியது. ஜஸ்டிஸ் தான் செய்த தவறை எண்ணி மனம் வேதனைப்பட்டான். இருவரும் அரண்மனையில் தங்கினார்கள். உறவினர்கள், ஊரார்கள் என அனைவரும் வந்து அவர்களை ஆறுதல் கூறி தேற்றினார்கள்.

அரண்மனையில் ஒரு வாரத்தைக் கழித்த மண்டேலா திரும்பவும் ஜொஹன்னர்ஸ்பெக் செல்ல ஆயத்தமானான். ஆனால் ஜஸ்டிஸ் ஜொஹன்னர்ஸ்பெக் திரும்பிச் செல்ல மறுத்துவிட்டான். தந்தையின் பிரிவைத் தாங்க முடியாத அவன் ஊரிலேயே இருந்து தந்தையின் இறுதி ஆசைப்படி அவரின் பொறுப்புக்கள் அனைத்தையும் தானே பொறுப்பேற்றுக் கொள்வதாக முடிவு செய்திருந்தான். மண்டேலா அவனது முடிவுக்கு மறுப்பேதும் தெரிவிக்கவில்லை. “ஜஸ்டிஸ் உன் முடிவு நல்லதுதான் ஆனால் நீ காலம் கடந்த பின் முடிவெடுத்திருக்கிறாய். அப்பா உயிரோடிருக்கும் போதே இந்த முடிவுக்கு நீ சம்மதித்திருந்தால் , அப்பா எவ்வளவோ சந்தோஷப்பட்டிருப்பார். அத்துடன் இவ்வளவு சீக்கிரத்தில் நம்மை விட்டு போயிருக்கவும் மாட்டார்” என்று மண்டேலா கூறி கண்ணீர் சிந்தினான். குற்ற உணர்வு ததும்பியவனாக ஜஸ்டிஸ் “நீ சொல்வது சரிதான். காதல் என் கண்களை மறைத்துவிட்டது” என்று கூறி தேம்பி தேம்பி அழுதான். மண்டேலா ஒருவாறு அவனை சமாதானப்படுத்திவிட்டு கவலை தோய்ந்த முகத்துடன் ஜொஹன்னர்ஸ்பெக் திரும்பினான். தன்னை வளர்த்து ஆளாக்கிய தந்தையின் முகத்தை கடைசியாக ஒரு முறையாவது பார்க்க முடியவில்லை என்ற கவலை அவன் மனதில் அழியாத வடுவாகிவிட்டது.

காலம் எனும் கூண்டிலிருந்து மாதமெனும் ஒரு சில பறவைகள் பறந்தோடிப் போயின. காலம் எனும் மருந்து மண்டேலாவின் மனதை சற்றேனும் குணப்படுத்த அவன் தன் அரசியல் வாழ்க்கையில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தான்.

(தொடரும்)



கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# பத்மினி 'நாட்டியப் பேரொளி' பட்டம் பெறக் காரணமாக இருந்தவர் NSK

## பாலையாவின் நடிப்பைப் பாராட்டி, தனது விலை உயர்ந்த காரை பரிசாக வழங்கியவர் கலைவாணர்



*உங்க அப்பா எப்படி ரிலீஸ் ஆனார்னு தெரியுமா? கொலை நடந்து அன்று கோவையில் காருக்கு பெட்ரோல் போட்டதுக்கான ரசீது அவரிடம் இருந்தது. அதை வைத்துத்தான் அவர் விடுதலை ஆனார்!' – கலைவாணர் குடும்பத்தினரைப் பார்க்கும்போது எல்லாம் நீதிபதி கற்பகவிநாயகம் இப்படி சொல்லிச் சிரிப்பார்!*

*சிறையில் இருந்து விடுதலையான என்.எஸ்.கேவுக்கு நடந்த பாராட்டு விழாவில் தான் அவருக்கு 'கலைவாணர்' என்று பட்டம் சூட்டப்பட்டது. பட்டம் சூட்டியவர் பம்மல் கே. சம்பந்தம் முதலியார்!*

*சிறையில் இருந்து வெளி வந்த பிறகு தியாகராஜ பாகவதர் நடித்த 'ராஜமுக்தி' படத்தில் என்.எஸ்.கே. தம்பதியரின் நகைச்சுவை இல்லை. 'என்.எஸ்.கேபாகவதர் ஜோடி பிரிந்துவிட்டதாக' பரபரப்பாக எழுதினார்கள். அப்போது நடைபெற்ற மதுரத்தின் தம்பி திருமணத்துக்கு வந்த பாகவதர், 'எங்களை யாரும் பிரிக்க முடியாது. எம்.என்றால் மதுரம், கே.என்றால் கிருஷ்ணன், டி.என்றால் தியாகராஜ பாகவதர். இதுதான் எம்.கே.டி.!' என்று சொல்லி உணர்ச்சிவசப் பட்டார்!*

*''என்னைச் சிலர் தமிழ்நாட்டு சார்லி சாப்ளினை ஆயிரம் துண்டுகள் ஆக்கினால் கிடைக்கும் ஒரு துண்டுக்குக்கூட நான் ஈடாக மாட்டேன்!'' என்பார் என்.எஸ்.கே. தன்டைக்கமாக!*

*கலைவாணர் தீராத வயிற்று வலியால் மருந்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். எம்.ஜி.ஆர். வெளியூரில் இருந்ததால் அவரால் உடனே வந்து பார்க்க முடியவில்லை. என்.எஸ்.கேவே எம்.ஜி.ஆருக்கு இப்படித் தகவல் அனுப்பினார், 'நீ என்னைக் காண வராவிட்டால், பத்திரிகைகள் உன்னைப்பற்றித் தவறாக எழுதும். நீ எனக்கு செய்த உதவியை நான் அறிவேன்.*

*ஒரு கட்டத்தில் கொடுத்துக் கொடுத்தே இல்லாமல் ஆகிப் போனார். அப்போது அவரிடம் வேலை செய்த ஒருவர், 'எனக்குத் திருமணம்' என்று வந்து நிற்கிறார். சுற்றும்முற்றும் பார்த்தபோது கண்ணில்பட்டது. ஒரு வெள்ளி கூஜா. அதை எடுத்துக் கொடுத்து, 'இதை விற்றுத் திருமணச் செலவுக்கு வைத்துக்கொள்' என்றார்!*

*'தம்பி எவரேனும் என்னிடம் உதவி கேட்டு, நான் இல்லை என்றும் கூறும் நிலை வந்தால், நான் இல்லாமல் இருக்க வேண்டும்!' என்று அடிக்கடி கூறுவார். யார் எவர் என்று கணக்குப் பார்க்காமல் வாரி வழங்கிய வள்ளல்!*

*தினமும் ஒரு பிச்சைக்காரன் கலைவாணர் வீட்டு வாசலில் வந்து நிற்பாராம். இவரும் பணம் கொடுப்பார். 'அவன் உங்களை ஏமாற்றுக்கிறான்' என்று வீட்டில் உள்ளவர்கள் சொல்லவே, 'அவன் ஏமாத்தி என்ன மாடி வீடா கட்டப்போறான். வயித்துக் குத்தானே சாப்பிடப்போறான். ஏமாத்திட்டுப் போகட்டுமே' என்பாராம்!*

*கலைவாணர், காந்தி பக்தர் நாகர்கோவிலில் காந்திக்குத் தன் சொந்தப் பணத்தில் தூண் எழுப்பினார்.*

*சென்னையில் 'சந்திரோதயம்' நாடகம் பெரியார் தலைமையில் நடந்தது. 'நாடகம். சினிமாவால் தான் மக்கள்*



**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை

# சங்கநாத இணைய வானொலியின் மூன்றாவது அகவை தின நிகழ்வு




தமிழ்நாடு, சென்னை நகரில் இயங்கும், சங்கநாத இணைய வானொலியின் மூன்றாவது அகவை தின நிகழ்வு, அண்மையில், சென்னையில் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில், கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தபோது.....

# வடக்கின் செல்லக் குரலுக்கான அரையிறுதிப் போட்டி இன்று




C J Pramoters & Dhedjassam Event Solutions அமைப்பு சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடனும் தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் வடமாகாணத்தில் நடத்தி வரும் ஜுனியர் சுப்பர் சிங்கர் போட்டியின் வடக்கின் செல்லக்குரலுக்கான தேடலின் குரல் தேர்வின் அரையிறுதிப் போட்டி இன்று யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தில் நடைபெறும். இதன் இறுதிப் போட்டி எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய கலாசார நிலையத்தில் நடத்தப்படும். இந்த இறுதிப் போட்டியில், புகழ்பெற்ற கர்நாடக இசைப் பாடகி. டி. கே. பட்டம்மாளின் பேத்தியான நித்யஸ்ரீ மகாதேவன், தமிழ் திரைப்பட பாடகரும் விஜய் தொலைக்காட்சியில் நடைபெற்ற சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பட்டத்தை வென்றவருமான திவாகர், சுப்பர் சிங்கர் புகழ் தென்னிந்திய பின்னணிப் பாடகர் சத்தியபிரகாஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.